முன்னுரை

பரிசுத்த வேதாகமத்தில் ஏற்கெனவே எழுதப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்கள், நாளாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாய் எழுதப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே எழுதப்பட்டிருப்பது, மறுபடியும் எழுதப்பட்டிருப்பதினால், நாளாகமம் புஸ்தகத்திலுள்ள வார்த்தைகளை தேவையற்ற வார்த்தைகள் என்று ஒதுக்கி தள்ளிவிட முடியாது.

பரிசுத்த வேதாகமத்தில், மற்ற புஸ்தகங்களில் எழுதப்பட்டிராத விசேஷித்த சம்பவங்கள், நாளாகமம் புஸ்தகத்தில் பிரத்தியேகமாக எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய தெய்வீக மகத்துவங்களையும், அவருடைய சத்தியங்களையும், அவருடைய பிரமாணங்களையும் புரிந்துகொள்வதற்கு, நாளாகமம் புஸ்தகம் மிகவும் பிரயோஜனமாயிருக்கிறது.

"இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே காரியம் நிலைவரப்பட வேண்டும்" (உபா 19:15). நாளாகமம் புஸ்தகத்தில் மறுபடியுமாக எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள், சத்தியத்தை உறுதிபண்ணுவதற்கு உதவியாயிருக்கிறது.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் எஸ்றா "இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின தேவபாரகனாயிருந்தான்" (எஸ்றா 7:6).

நாளாகமம் புஸ்தகம் எபிரெய பாஷையிலே "அன்றாட நடபடிகள்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் புஸ்தகத்தில், தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமாக, சரித்திர சம்பவங்கள், அதிகாரப்பூர்வமாக தொகுத்து எழுதப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் சிறையிருப்புக்கு பின்பு தொகுத்து எழுதப்பட்டவையாகும்.

செப்துவஜிந்த் பதிப்பில், நாளாகமம் புஸ்தகம், "கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாத புஸ்தகம்" என்று பொருள்படுமாறு அழைக்கப்படுகிறது. வரலாற்று ஆசிரியர்கள் நாளாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிற சரித்திர சம்பவங்களை, கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல், அதை ஒதுக்கி தள்ளிவைத்துவிட்டார்கள்.

நாளாகத்தின் முதலாம் புஸ்தகத்தில் ஆதாம் முதல் தாவீது வரையிலுமுள்ளவர்களின் வம்சவரலாறுகள் வரிசையாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த வம்சவரலாறு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் முடிவு பெறுகிறது (1நாளா 1-9 ஆகிய அதிகாரங்கள்). பரிசுத்த வேதாகமத்தின் மற்ற புஸ்தகங்களில் எழுதப்பட்டிராத சரித்திர சம்பவங்கள் சில, நாளாகமத்தின் முதலாம் புஸ்தகத்தில் அங்கங்கே கோர்க்கப்பட்டிருக்கிறது.

சவுலின் ராஜ்யபாரம் தாவீதின் கையில் மாறும் சரித்திர சம்பவம் இந்தப் புஸ்தகத்தில் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்துடன் தாவீதினுடைய ராஜ்யபாரத்தின் மேன்மைகளும், ஜெயங்களும் இந்தப் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது (1நாளா 10-21 ஆகிய அதிகாரங்கள்).

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான ஆயத்த வேலைகளைச் செய்கிறார். தாவீது கர்த்தருடைய ஆராதனையை செய்வதற்கு, ஆசாரிய வகுப்புகளையும், லேவியரின் வகுப்புகளையும் முறைப்படுத்துகிறார். (1நாளா 22-29 ஆகிய அதிகாரங்கள்).

1 அதிகாரம்

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். இந்த சிறையிருப்பினால் யூதர்கள் மத்தியிலே மிகப்பெரிய குழப்பங்கள் உண்டாயிற்று. யூதர்கள் யூதாதேசத்திலிருந்து சிதறிப்போனதினால், அவர்களுடைய பூர்வோத்திரங்களை, அவர்களால் சொல்ல முடியவில்லை. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுக்கு, தாங்கள் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும், எந்தக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுடைய கைகளில், நாளாகமம் புஸ்தகம் கிடைத்திருக்கிறது. இது கர்த்தர் அவர்களுக்கு காண்பித்திருக்கிற மிகப்பெரிய கிருபை. இதன் மூலமாக, யூதர்கள் தங்களுடைய பூர்வோத்திரங்களை ஆராய்ந்து பார்த்து, தங்களுடைய வம்சவரலாற்றை அறிந்துகொள்கிறார்கள்.

நாளாகமம் புஸ்தகத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் இந்தப் பூமியிலே பிறப்பதற்கு முன்பாகவே, அவரைப்பற்றிய வம்சவரலாறு, தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவானவர் தாவீதின் குமாரனாகவும், யூதாவின் குமாரனாகவும், ஆபிரகாமின் குமாரனாகவும், ஆதாமின் குமாரனாகவும் இருக்கிறார்.

1நாளாகமம் முதலாம் அதிகாரத்தில், ஆதியாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற வம்சவரலாறுகள், யாக்கோபு வரையிலும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஆதாமின் சந்ததியிலிருந்து நோவாவின் சந்ததி வரையிலும் வந்தவர்களும், அவர்களுடைய குமாரர்களின் விவரங்களும் (ஆதி 5-ஆவது அதிகாரம்) - (1நாளா 1:1-4).

நோவாவின் சந்ததியில் வந்தவர்கள். பூமியானது நோவாவின் சந்ததியாரால் மறுபடியும் பலுகிப் பெருகுகிறது. (ஆதி 10-ஆவது அதிகாரம்) - (1நாளா 1:5-23).

சேமின் சந்தியார் முதல் ஆபிரகாமின் சந்ததி வரையிலும் (ஆதி 11-ஆவது அதிகாரம்) - (1நாளா 1:24-28).

இஸ்மவேலின் சந்ததியாரும், ஆபிரகாமுக்கு கேத்தூராள் மூலமாக பிறந்த குமாரர்களும் (ஆதி 25-ஆவது அதிகாரம்) - (1நாளா 1:29-35).

ஏசாவின் சந்ததியார் (ஆதி 36 -ஆவது அதிகாரம்) - (1நாளா 1:36-43).

ஆதாம் - நோவா
1நாளா 1:1-4

1நாளா 1:1. ஆதாம், சேத், ஏனோஸ்,

1நாளா 1:2. கேனான், மகலாலெயேல், யாரேத்,

1நாளா 1:3. ஏனோக்கு, மெத்தூசலா, லாமேக்கு,

1நாளா 1:4. நோவா, சேம், காம், யாப்பேத்,

1நாளா 1:1-27 ஆகிய வசனங்களில் ஆதாமின் வம்சவரலாற்றிலிருந்து, ஆபிரகாமின் வம்ச வரலாறு வரையிலும் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. முதலாம் வசனத்தின் முதல் வார்த்தை "ஆதாம்" என்று ஆரம்பமாகிறது. 27-ஆவது வசனத்தின் கடைசி வார்த்தை "ஆபிரகாம்" என்று முடிவு பெறுகிறது.

நம்முடைய மாம்சத்திற்கு ஆதாமே பொதுவான பிதாவாக இருக்கிறார். ஆதாமை நம்முடைய மாம்சப்பிரகாரமான முற்பிதா என்று அழைக்கலாம். ஆபிரகாம் விசுவாசமுள்ள யாவருக்கும் பொதுவான பிதாவாக இருக்கிறார். ஆபிரகாமை ஆவிக்குரிய முற்பிதா என்று அழைக்கலாம்.

ஆதாம் கர்த்தருடைய வார்த்தையை மீறி பாவம் செய்தார். இதனால் மனுக்குலத்திற்கு துன்பமும் வேதனையும் உண்டாயிற்று. கர்த்தர் ஆபிரகாமோடு கிருபையின் உடன்படிக்கையை பண்ணினார். இதன் மூலமாக ஆபிரகாமின் சந்ததியில் வந்திருக்கிற நமக்கு சந்தோஷமும் சமாதானமும் உண்டாயிருக்கிறது.

நாம் சுபாவத்தின் பிரகாரமாக ஆதாமின் சந்ததியில் வந்தவர்கள். காட்டு ஒலிவமரத்தின் கிளைகளாக இருக்கிறவர்கள். நம்முடைய விசுவாசத்தினால், நாம் ஆபிரகாமின் சந்ததியாராயிருக்கிறோம். காட்டு ஒலிவமரத்தின் கிளைகளாகயிருந்த நாம், நல்ல ஒலிவமரத்தோடு ஒட்ட வைக்கப்பட்டிருக்கிறோம். இதனால் நாம் நல்ல ஒலிவமரத்தின் சுபாவங்களுக்கு பங்காளிகளாயிருக்கிறோம்.

"மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதனமில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும்படிக்கும், (ரோம 4:11)

விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தைப் பெற்றான்" (ரோம 4:12).

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் இஸ்ரவேல் புத்திரரின் வரலாற்றை ஆதாமிலிருந்து ஆரம்பிக்கிறார். இந்தப் புஸ்தகத்தை வாசிக்கிறவர்களுக்கு ஆதியாகமத்தின் வரலாறு நன்றாகத் தெரிந்திருக்கும் என்று நினைத்து ஆசிரியர் இவ்வாறு எழுதியிருக்க வேண்டும். (ஆதி 1:26-31; ஆதி 2:7).

ஆதாமிலிருந்து நோவா வரையிலும் அதாவது ஜலப்பிரளயம் வரையிலும் பத்துச் சந்ததிகள் ஆவார்கள் (ஆதி 5).

பல குமாரர்களின் பெயர்கள் இந்த இடைப்பட்ட காலத்தில் வந்திருந்தாலும் அவர்களில் முக்கியமானவர்களின் பெயரே இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது. யாப்பேத், காம் ஆகியோரின் பெயருக்கு முன்பாக சேமின் பெயர் வந்திருக்கிறது. சேமின் வம்சத்தில் மேசியா வருவதினால் இவருடைய பெயர் இங்கு முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 1:5-23).

1நாளா 1:1-4 ஆகிய வசனங்களும், 1நாளா 1:1-24-27 ஆகிய வசனங்களும் சேமினால் இணைக்கப்பட்டிருக்கிறது. 1நாளா 1:1-27 ஆகிய வசனப்பகுதியில் இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு, ஆதாமிலிருந்து ஆபிரகாம் வரையிலும் வருவதைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.

"யாக்கோபு ஈசாக்கின் குமாரன்; ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்; ஆபிரகாம் தேராவின் குமாரன்; தேரா நாகோரின் குமாரன். நாகோர் சேரூக்கின் குமாரன்; சேரூக் ரெகூவின் குமாரன்; ரெகூ பேலேக்கின் குமாரன்; பேலேக் ஏபேரின் குமாரன்; ஏபேர் சாலாவின் குமாரன் (லூக் 3:34,35)

சாலா காயினானின் குமாரன்; காயினான் அர்ப்பகசாத்தின் குமாரன்; அர்ப்பகசாத் சேமின் குமாரன்; சேம் நோவாவின் குமாரன்; நோவா லாமேக்கின் குமாரன். லாமேக்கு மெத்தூசலாவின் குமாரன்; மெத்தூசலா ஏனோக்கின் குமாரன்; ஏனோக்கு யாரேதின் குமாரன்; யாரேத் மகலாலெயேலின் குமாரன்; மகலாலெயேல் கேனானின் குமாரன்; கேனான் ஏனோசின் குமாரன். ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டானவன்" (லூக் 3:36-38).

லூக்கா எழுதின சுவிசேஷத்தில், ஆதாமின் பெயர் கடைசியாக வருகிறது. 1நாளாகமம் புஸ்தகத்திலோ ஆதாமின் பெயர் முதலாவதாக வருகிறது.

யாப்பேத்தின் குமாரர் 1நாளா 1:5-7

1நாளா 1:5. யாப்பேத்தின் குமாரர், கோமர், மாகோகு, மாதாய், யாவான், தூபால், மேசேக்கு, தீராஸ் என்பவர்கள்.

1நாளா 1:6. கோமரின் குமாரர், அஸ்கினாஸ், ரீப்பாத்து, தொகர்மா என்பவர்கள்.

1நாளா 1:7. யாவானின் குமாரர், எலீசா, தர்ஷீஸ், கீத்தீம், தொதானீம் என்பவர்கள்.

இந்த வசனப்பகுதியில் நோவாவின் சந்ததியாரைப்பற்றி விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜலப்பிரளத்திற்கு பின்பு, நோவாவின் குமாரர், இந்தப் பூமியிலிலே பலுகிப்பெருகுகிறார்கள். சரித்திர ஆசிரியர்கள் முதலாவதாக யாப்பேத்தின் குமாரரைப்பற்றிச் சொல்லுகிறார்கள்.

யாப்பேத்தின் குமாரர் என்று இந்த வசனத்தில் ஆறு பேருடைய பெயர்கள் கூறப்பட்டிருக்கிறது. யாப்பேத்தின் ஏழு குமாரரும், ஏழு பௌத்திரரும் ஆதி 10:2-5 ஆகிய வசனங்களில் கூறப்பட்டுள்ளனர். இவற்றில் மாற்றம் எதுவுமில்லை.

யாப்பேத்தின் குமாரர் புறஜாதி தீவுகளிலே குடியேறினார்கள். இது இந்தப் பிரபஞ்சத்தின் மேற்கத்திய தேசம் என்று அழைக்கப்படுகிறது. இவர்கள் இக்காலத்து ஐரோப்பிய நாடுகளில் குடியேறினார்கள்.

காமின் குமாரர் 1நாளா 1:8-16

1நாளா 1:8. காமின் குமாரர், கூஷ், மிஸ்ராயிம், பூத், கானான் என்பவர்கள்.

1நாளா 1:9. கூஷின் குமாரர், சேபா, ஆவிலா, சப்தா, ராமா, சப்திகா என்பவர்கள்; ராமாவின் குமாரர், சேபா, தீதான் என்பவர்கள்.

1நாளா 1:10. கூஷ் நிம்ரோதைப் பெற்றான்; இவன் பூமியிலே பராக்கிரமசாலியானான்.

1நாளா 1:11. மிஸ்ராயீம் லூதீமியரையும், ஆனாமியரையும், லெகாபியரையும், நப்தூகியரையும்,

1நாளா 1:12. பத்ருசியரையும், பெலிஸ்தரைப் பெற்ற கஸ்லூகியரையும், கப்தோரியரையும் பெற்றான்.

1நாளா 1:13. கானான் தன் மூத்தமகனாகிய சீதோனையும், கேத்தையும்,

1நாளா 1:14. எபூசியரையும், எமோரியரையும், கிர்காசியரையும்,

1நாளா 1:15. ஏவியரையும், அர்கீயரையும், சீனியரையும்,

1நாளா 1:16. அர்வாதியரையும், செமாரியரையும், காமாத்தியரையும் பெற்றான்.

நாளாகமம் புஸ்தகத்தில், யாப்பேத்தின் குமாரருக்குப் பின்பு காமின் குமாரரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

காமின் நான்கு குமாரரும், 26 சந்ததியாரும் ஆதி 10:6-21 ஆகிய வசனங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறார்கள்.

காமின் குமாரர் தெற்கு திசையில் பிரயாணம் செய்து ஆப்பிரிக்கா கண்டத்திலும், ஆசியா கண்டத்திலும் குடியேறினார்கள்.

சேமின் குமாரர் 1நாளா 1:17-23

1நாளா 1:17. சேமின் குமாரர், ஏலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம், ஊத்ஸ், கூல், கேத்தெர், மேசக் என்பவர்கள்.

1நாளா 1:18. அர்பக்சாத் சாலாவைப் பெற்றான்; சாலா ஏபேரைப் பெற்றான்.

1நாளா 1:19. ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள்; ஒருவன் பேர் பேலேகு, ஏனெனில் அவன் நாட்களில் பூமி பகுக்கப்பட்டது; அவன் சகோதரன் பேர் யொக்தான்.

1நாளா 1:20. யொக்தான் அல்மோதாதையும், சாலேப்பையும், ஆசர்மாவேத்தையும், யேராகையும்,

1நாளா 1:21. அதோராமையும், ஊசாலையும், திக்லாவையும்,

1நாளா 1:22. ஏபாலையும், அபிமாவேலையும், சேபாவையும்,

1நாளா 1:23. ஓப்பீரையும், ஆவிலாவையும், யோபாபையும் பெற்றான்; இவர்கள் எல்லாரும் யொக்தானின் குமாரர்.

சேமின் சந்ததியார் ஆசியாவிலே குடியேறினார்கள். அதன் பின்பு அவர்கள் கிழக்கு திசையிலே பிரயாணப்பட்டார்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். அசிரியர் சீரியர், கல்தேயர், பெர்சியர், அரபியர் ஆகியோர் சேமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள்.

சேமின் 9 குமாரரும், 16 சந்ததியாரும் இந்த வசனப்பகுதியில் கூறப்பட்டிருக்கிறார்கள். (ஆதி 10:22-32) ஆனால் சேமுக்கு 6 குமாரர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஊத்ஸ், கூல், கேத்தெர், மேசக் ஆகியோர் சேமின் பௌத்திரர்கள் ஆவார்கள். யூதருடைய வம்ச வரலாற்றில் பௌத்திரரும் குமாரராகக் கூறப்படுவது வழக்கம். லாபான் (ஆதி 29:5), மேவிபோசேத் (2சாமு 19:24), யூதா (1நாளா 4:1-4). நாளாகமம் புஸ்தகத்தில் வம்சவரலாறு ஓரளவு கூறப்பட்டாலும், இதன் முழுமையான விவரம் ஆதியாகமம் புஸ்தகத்திலேயே காணப்படுகிறது.

சேமின் சந்ததியார் கிழக்கு திசையில் பிரயாணப்பட்டு அங்கே குடியேறியபோது, அவர்கள் எல்லோரும் ஒரே தேசத்தாராய், ஒன்றாய்க் கூடியிருந்தார்கள். அவர்களுடைய ஜனத்தின் எண்ணிக்கை அதிகரித்தபோது, அவர்கள் வெவ்வேறு குடியிருப்புக்களாக பிரிந்துபோனார்கள்.

இவர்களுடைய காலத்தில் சேமின் சந்ததியாரில் அநேகர் அந்நிய தேசத்துக்கு சிறைப்பட்டுப்போனார்கள். தேசங்கள் மத்தியிலே வியாபாரங்கள் நடைபெற்றது. வெளிநாட்டு வியாபாரங்கள் நிமித்தமாகவும் ஜனங்கள் பிரிந்தார்கள்.

ஒரு காலத்தில் இந்தப் பூமி கண்டங்களாகப் பிரிக்கப்படாமல் ஒன்று சேர்ந்திருந்தது. 4,000 வருஷங்களுக்கு முன்பு இந்தப் பூமி இருந்த விதத்தைப் பற்றி வேதாகமம் கூறுகிறது. பேலேகுவின் நாட்களில் பூமி பகுக்கப்பட்டது. ஜனங்கள் பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள். கர்த்தர் அவர்களுடைய பாஷைகளைத் தாறுமாறாக்கினார். இதனால் அவர்கள் பூமி எங்கிலும் சிதறி ஓடினார்கள். இதன் பின்பு பூமி பகுக்கப்பட்டது. (ஆதி 10:25; ஆதி 11:7-9).

சேம் - ஆபிரகாம் 1நாளா 1:24-27

1நாளா 1:24. சேம், அர்பக்சாத், சாலா,

1நாளா 1:25. ஏபேர், பேலேகு, ரெகூ,

1நாளா 1:26. செரூகு, நாகோர், தேராகு,

1நாளா 1:27. ஆபிராமாகிய ஆபிரகாம்.

இந்த வசனப்பகுதியில் சேம் முதல் ஆபிரகாம் வரையிலும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றை சேர்ந்தவர்கள். இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாறு ஆதாமிலிருந்து சேத் வரையிலும், அதன் பின்பு சேத்திலிருந்து சேம் வரையிலும், அதன் பின்பு சேமிலிருந்து ஏபேர் வரையிலும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

அதன் பின்பு ஏபேரிலிருந்து ஆபிரகாம் வரையிலும் இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்றை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் சந்ததியார் எபிரெய தேசமாக பலுகிப் பெருகுகிறார்கள். கர்த்தர் எல்லா தேசங்கள் மத்தியிலே, எபிரெய தேசத்தை, தமக்கு விசேஷித்த தேசமாகத் தெரிந்தெடுக்கிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான பொக்கிஷங்களை, ஆபிரகாமின் சந்ததியாரிடத்தில் நம்பி ஒப்புக்கொடுக்கிறார். ஆபிரகாமின் சந்ததியில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரவேண்டும் என்பது, தேவனுடைய தெய்வீக திட்டமாயிருக்கிறது.

நாளாகமம் முதல் பகுதியில் ஆதாம் முதல் நோவா வரையிலுமுள்ள பத்து சந்ததியாரைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 1:1-4). இரண்டாம் பகுதியில் சேம் முதல் ஆபிரகாம் வரையிலுமுள்ள 10 சந்ததியாரைப் பற்றி 1நாளா 1:24-27 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஆதாம் முதல் ஆபிரகாம் வரையிலும் இடையிலுள்ள காலம் 2,083 வருஷங்களாகும். ஆபிரகாமின் 75 ஆவது வயதில் இந்த வருஷம் கணக்கிடப்படுகிறது. (ஆதி 12:4). முதலாவது பத்து சந்ததியார் ஆதாம் முதல் நோவோவின் 600 ஆவது வருஷம் வரையிலும் கணக்கிடப்பட்டிருக்கிறார்கள். (ஆதி 7:11).

ஆபிரகாமின் குமாரர்கள் 1நாளா 1:28

1நாளா 1:28. ஆபிரகாமின் குமாரர், ஈசாக்கு, இஸ்மவேல் என்பவர்கள்.

ஆபிரகாமின் சந்ததியாரைத் தவிர, மற்ற சந்ததியாரெல்லாம், இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்றிலிருந்து நீக்கப்படுகிறார்கள். கர்த்தருடைய ஜனமே அவருடைய பங்கும் சுதந்தரமுமாயிருக்கிறார்கள். இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான ஜாதியார் இருந்தாலும், ஆபிரகாமின் சந்ததியாரே கர்த்தருக்கு விசேஷித்த சந்ததியாராயிருக்கிறார்கள்.

கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணி, அவருடைய சந்ததியாரை, தம்முடைய சொந்த ஜனமாக அங்கீகரித்திருக்கிறார். கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். இஸ்ரவேல் தேசம் கர்த்தருக்கு விசேஷித்த தேசம்.

ஆபிரகாமின் குமாரர் ஈசாக்கு, இஸ்மவேல் என்பவர்கள். இஸ்மவேலைவிட ஈசாக்கு இளையவனாக இருந்தாலும் இளையவனின் பெயரே இந்த வசனத்தில் முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபிரகாமின் மனைவி சாராள். ஈசாக்கு சாராளின் குமாரன். ஆகையினால் ஈசாக்கின் பெயர் முதலில் வருகிறது. ஆனால் வம்சவரலாற்றில் இஸ்மவேலின் குமாரரும், ஆபிரகாமின் இரண்டாவது மனைவியும் முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். மேசியாவின் வம்ச வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 1:29-33).

இஸ்மவேலின் குமாரர் 1நாளா 1:29-31

1நாளா 1:29. இவர்களுடைய சந்ததிகளாவன: இஸ்மவேலின் மூத்த குமாரனாகிய நெபாயோத், கேதார், அத்பியேல், மிப்சாம்,

1நாளா 1:30. மிஷ்மா, தூமா, மாசா, ஆதாத், தேமா,

1நாளா 1:31. யெத்தூர், நாபீஸ், கேத்மா என்பவர்கள்; இவர்கள் இஸ்மவேலின் குமாரர்.

பரிசுத்த வேதாகமத்தில் இஸ்மவேலின் சந்ததியாரைப்பற்றி மிகவும் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் அடிமைப்பெண்ணாகிய ஆகாரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளல்ல. ஆனாலும் இஸ்மவேலின் பன்னிரண்டு குமாரர்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன்; அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி 17:20).

யாக்கோபைப்போல இஸ்மவேலுக்கும் 12 குமாரர்கள் இருக்கிறார்கள். ஆபிரகாமின் இரண்டு குமாரர் மூலமாக 24 கோத்திரங்கள் உண்டாகின்றன. இவர்கள் தவிர, ஆபிரகாமின் இரண்டாவது மனைவியாகிய கெத்தூராள் மூலமாக மேலும் 6 குமாரர்கள் பிறக்கிறார்கள். இவர்கள் ஆபிரகாமிற்கு 100 வயது ஆனபின்பு பிறந்தார்கள். (1நாளா 1:32-33).

கெத்தூராளின் குமாரர்கள் மூலமாக எத்தனை சந்ததியார் உண்டானார்கள் என்று தெரியவில்லை. இஸ்மவேலின் 12 சந்ததியாரும் அரபு தேசத்தில் குடியேறினார்கள். கர்த்தர் இஸ்மவேலுக்குக் கூறிய வாக்குத்தத்தத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள் (ஆதி 17:20; ஆதி 25:12-18).

மீதியானின் குமாரர்
1நாளா 1:32,33

1நாளா 1:32. ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய கேத்தூராள் பெற்ற குமாரர், சிம்ரான், யக்ஷான், மேதான், மீதியான், இஸ்பாக், சூவா என்பவர்கள்; யக்ஷானின் குமாரர் சேபா, தேதான் என்பவர்கள்.

1நாளா 1:33. மீதியானின் குமாரர், ஏப்பா, ஏப்பேர், ஆனோக்கு, அபீதா, எல்தாகா என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் கேத்தூராளின் குமாரர்.

மீதியானியரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய கேத்தூராள் பெற்ற குமாரர். இவர்கள் கிழக்கத்திப்புத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் சந்தியாரிடமிருந்து, மீதியானின் குமாரர் வேறுபிரிக்கப்படுகிறார்கள். இதனால் மீதியானியருக்கும் கர்த்தருடைய உடன்படிக்கைக்கும் பங்கு இல்லை.

"ஆபிரகாமுக்கு இருந்த மறுமனையாட்டிகளின் பிள்ளைகளுக்கோ ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து, தான் உயிரோடிருக்கும்போதே அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கேபோகக் கீழ்தேசத்துக்கு அனுப்பிவிட்டான்" (ஆதி 25:6).

ஆபிரகாமின் பல மறுமனையாட்டிகளில் கேத்தூராளும் ஒருவள். (ஆதி 25:1). மற்ற மறுமனையாட்டிகள் மூலமாக ஆபிரகாமிற்கு எத்தனை குமாரர்கள் பிறந்தார்கள் என்று தெரியவில்லை. ஆபிரகாம் அவர்களைக் கிழக்கு தேசத்திற்கு அனுப்பினார் என்று மட்டுமே வேதாகமம் கூறுகிறது. (ஆதி 25:6). இவர்கள் கேத்தூராளின் குமாரரும், பௌத்திரரும் ஆவார்கள்.

ஈசாக்கு
1நாளா 1:34

1நாளா 1:34. ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; ஈசாக்கின் குமாரர், ஏசா, இஸ்ரவேல் என்பவர்கள்.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் மறுபடியுமாக ஈசாக்கையும், அவருடைய சந்ததியாகிய ஏசாவையும், யாக்கோபையும் விவரித்துக் கூறுகிறார். ஏசாவின் சந்ததியைப் பற்றி சுருக்கமாகக் கூறிய பின்பு, இந்த நூலாசிரியர் யாக்கோபின் சந்ததியாரை விரிவாகக் கூறுகிறார். (1நாளா 1:35-54). இதன் பின்பு, நூலாசிரியர் யாக்கோபினுடைய குமாரரின் சந்ததியைச் சவுல், தாவீது ஆகியோரின் காலம் வரைக்கும் பத்து அதிகாரங்களில் விவரிக்கிறார். (1நாளா 2:1-12:40).

ஏசாவின் குமாரர்
1நாளா 1:35-42

1நாளா 1:35. ஏசாவின் குமாரர், எலீப்பாஸ், ரெகுவேல், எயூஷ், யாலாம், கோராகு என்பவர்கள்.

1நாளா 1:36. எலீப்பாசின் குமாரர், தேமான், ஓமார், செப்பி, கத்தாம், கேனாஸ், திம்னா, அமலேக்கு என்பவர்கள்.

1நாளா 1:37. ரெகுவேலின் குமாரர், நகாத், சேராகு, சம்மா, மீசா என்பவர்கள்.

1நாளா 1:38. சேயீரின் குமாரர், லோத்தான், சோபால், சிபியோன், ஆனா, தீசோன், எத்சேர், தீசான் என்பவர்கள்.

1நாளா 1:39. லோத்தானின் குமாரர், ஓரி, ஓமாம் என்பவர்கள்; லோத்தானின் சகோதரி திம்னாள் என்பவள்.

1நாளா 1:40. சேபாலின் குமாரர், அல்வான், மானகாத், ஏபால், செப்பி, ஓனாம் என்பவர்கள்; சிபியோனின் குமாரர், அயா, ஆனாகு என்பவர்கள்.

1நாளா 1:41. ஆனாகியன் குமாரரில் ஒருவன் திஷோன் என்பவன்; திஷோனின் குமாரர், அம்ராம், எஸ்பான், இத்தரான், கெரான் என்பவர்கள்.

1நாளா 1:42. ஏத்சேரின் குமாரர், பில்கான், சகவான், யாக்கான் என்பவர்கள்; திஷானின் குமாரர், ஊத்ஸ், அரான் என்பவர்கள்.

ஏதோமியரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் அதிகமாக சொல்லப்படவில்லை. இவர்கள் பூர்வகாலம் முதலே தேவனுடைய இஸ்ரவேலருக்கு சத்துருக்களாயிருந்தவர்கள்.

ஏதோமியர்கள், ஈசாக்கின் குமாரனாகிய ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இதன் நிமித்தமாக இந்த வசனப்பகுதியில், ஏசாவின் குமாரரில் பிரபல்யமானவர்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

எலீப்பாஸ் என்பவன் யோபுவின் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் தேமானியன் (1நாளா 1:35-36; ஆதி 36:4-16; யோபு 2:11; யோபு 4:1; யோபு 15:1; யோபு 22:1; யோபு 42:7,9).

அமலேக்கியர்கள் இஸ்ரவேலின் விரோதிகளாக வேதாகமத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து வெளியேறிய போது அமலேக்கியரே இவர்கள்மீது முதலாவதாக யுத்தம் பண்ணினார்கள். (யாத் 17:8-16). இதனால் அவர்களுடைய சந்ததியில் யுத்தம் உண்டாகும் என்றும், இறுதியில் அமலேக்கியர் அழிக்கப்படுவார்கள் என்றும் கர்த்தர் ஆணையிட்டார்.

அமலேக்கியரில் அவர்களில் அநேகரைச் சவுல் அழித்துப்போட்டார். ஆனாலும் அவர் அமலேக்கியரை முழுவதுமாக அழிக்கவில்லை. சவுல் அமலேக்கியரை முழுவதுமாக அழிக்காமல் அவர்களைத் தப்பவைத்ததற்காக சவுலின் ராஜ்யபாரம் அவரை விட்டு நீங்கிற்று. (1சாமு 15, எண் 24:20; உபா 25:17-19; நியா 3:13; நியா 5:14; சங் 83:7)

சேயீரின் குமாரர் ஒரியர் ஆவர்கள். ஏதோமில் ஏசாவுக்கு முன்பாக இவர்கள் குடியிருந்தார்கள். (ஆதி 36:20). இவர்கள் இங்கு ஏசாவின் சந்ததியாராக கூறப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குள் கலப்பு விவாகம் நடைபெற்ற படியினால் இங்கு சேயீரின் குமாரர் என்று ஒரே ஜாதியாக இவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

ஏதோமின் ராஜாக்கள்
1நாளா 1:43-50

1நாளா 1:43. இஸ்ரவேல் புத்திரரை ஒரு ராஜா ஆளாததற்குமுன்னே, ஏதோம் தேசத்தில் அரசாண்ட ராஜாக்களானவர்கள்: பேயோரின் குமாரன் பேலா என்பவன்; இவன் பட்டணத்தின் பேர் தின்காபா.

1நாளா 1:44. பேலா மரித்தபின் போஸ்ரா ஊரானாகிய சேராகின் குமாரன் யோபாப் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 1:45. யோபாப் மரித்தபின், தேமானியரின் தேசத்தானாகிய ஊசாம் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 1:46. ஊசாம் மரித்தபின், பேதாதின் குமாரன் ஆதாத் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான், இவன் மீதியானியரை மோவாபின் நாட்டிலே முறிய அடித்தவன்; இவன் பட்டணத்தின்பேர் ஆவீத்.

1நாளா 1:47. ஆதாத் மரித்தபின், மஸ்ரேக்கா ஊரானாகிய சம்லா அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 1:48. சம்லா மரித்தபின், நதியோரமான ரேகொபோத்தானாகிய சவுல் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 1:49. சவுல் மரித்தபின், அக்போரின் குமாரன் பாகால்னானான் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 1:50. பாகால்னானான் மரித்தபின், ஆதாத் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்; இவன் பட்டணத்தின்பேர் பாகி; மேசகாபின் குமாரத்தியாகிய மாத்திரேத்தின் மகளான அவன் மனைவியின் பேர் மெகேதபேல்.

இஸ்ரவேல் புத்திரரை ஒரு ராஜா ஆளாததற்கு முன்னே, ஏதோம் தேசத்திலே ஒரு சில ராஜாக்கள் அரசாண்டார்கள்.

நாளாகமம் புஸ்தகம் இஸ்ரவேலின் ராஜாக்கள் காலத்திற்குப் பின்பே எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் கோத்திரத்தாரின் வரலாற்றை எழுதும்போது நூலாசிரியர் ஏதோமின் ராஜாக்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். (ஆதி 36:31)

அவர்களில் எட்டு ராஜாக்களின் பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. பேலா - பேயோரின் குமாரன் (நாளா 1:43)
2. யோபாப் - சேராகின் குமாரன் (நாளா 1:44)
3. ஊசாம் - தேமானியன் (நாளா 1:45)
4. ஆதாத் - ஆவீர் ஊரானாகிய பேதாதின் குமாரன் (நாளா 1:46)
5. சம்லா - மஸ்ரேக்கா ஊரான் (நாளா 1:47)
6. சவுல் - ரேகோபோத்தான் (நாளா 1:48)
7. பாகாலானான் - அக்போரின் குமாரன் (நாளா 1:49)
8. பாகி ஊரானாகிய ஆதாத். (நாளா 1:50)

இந்த எட்டு ராஜாக்களும் இஸ்ரவேல் புத்திரருடைய வனாந்தர யாத்திரையின் முடிவிலும், அவர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசித்தபோதும் ஏதோமின்மீது ஆட்சி புரிந்தவர்கள்.

பேயோர் என்பவன் பிலேயாமின் தகப்பன். இவன் ஏதோமின் முதலாவது ராஜாவும், தீர்க்கதரிசியுமாவான் (ஆதி 36:32; எண் 22:5; எண் 24:3,15; எண் 31:8; உபா 23:4; யோசு 13:22; யோசு 24:9; மீகா 6:5).

ஏதோமின் பிரபுக்கள் 1நாளா 1:51-54

1நாளா 1:51. ஆதாத் மரித்தபின், ஏதோமில் ஏற்பட்ட பிரபுக்களானவர்கள்; திம்னா பிரபு, அல்யா பிரபு, எதேத் பிரபு,

1நாளா 1:52. அகோலிபாமா பிரபு, ஏலா பிரபு, பினோன் பிரபு,

1நாளா 1:53. கேனாஸ் பிரபு, தேமான் பிரபு, மிப்சார் பிரபு,

1நாளா 1:54. மக்தியேல் பிரபு, ஈராம் பிரபு, இவர்களே ஏதோமின் பிரபுக்கள்.

இந்த வசனப்பகுதியில் ஏதோமின் பதினொரு பிரபுக்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு:

1. திம்னா பிரபு
2. அல்யா பிரபு
3. எதேத் பிரபு
4. அகோலிபாமா பிரபு
5. ஏலா பிரபு
6. பினோன் பிரபு
7. கேனாஸ் பிரபு
8. தேமான் பிரபு
9. மிப்சார் பிரபு
10. மக்தியேல் பிரபு
11. ஈராம் பிரபு

இந்த வசனத்தில் பிரபுக்கள் என்பது கோத்திரத்தலைவர்களைக் குறிக்கும். இவர்கள் ராஜாக்கள் அல்ல. ஏதோமின் ராஜாவைவிட பிரபுக்கள் உயர்ந்தவர்கள் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனால் ஒரே நேரத்தில் பல பிரபுக்கள் இருக்கிறார்கள். ராஜா ஒருவரே. (யாத் 15:15; யோசு 13:21). இந்த வசனத்தில் 11 பிரபுக்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 1:51- 54, ஆதி 36:15-43).

2 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் இஸ்ரவேலின் பன்னிரண்டு குமாரரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தருடைய ஜனம் புறஜாதி ஜனத்தாரோடு கலக்காமல், அவர்களிடமிருந்து வேறு பிரிந்து தனியாக வாசம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேலின் புத்திரருடைய பெயர்கள் (1நாளா 2:1,2). யூதாவின் சந்ததியார்கள். தாவீதும், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் யூதாவின் சந்ததியிலிருந்து வந்திருக்கிறவர்கள். "நம்முடைய கர்த்தர் யூதாகோத்திரத்தில் தோன்றினாரென்பது பிரசித்தமாயிருக்கிறது" (எபி 7:14).

யூதாவின் சந்ததியார்கள் - ஈசாய் வரையிலும் (1நாளா 2:3-12). ஈசாயின் குமாரர்கள் (1நாளா 2:13-17). எஸ்ரோனின் சந்ததியார் - காலேபின் சந்ததியார் (1நாளா 2:18-20). செகூப் (1நாளா 2:21-24). யெர்மேயேல் (1நாளா 2:25-33,41). காலேபின் மற்ற சந்ததியார் (1நாளா 2:42-55).

இஸ்ரவேலின் குமாரர் 1நாளா 2:1,2

1நாளா 2:1. இஸ்ரவேலின் குமாரர், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன்,

1நாளா 2:2. தாண், யோசேப்பு, பென்யமீன், நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்.

யாக்கோபு இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார். இஸ்ரவேலின் பன்னிரண்டு குமாரருடைய பெயர்கள் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் இஸ்ரவேலின் கோத்திரத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள். பரிசுத்த வேதாகமம் முழுவதிலும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

பன்னிரண்டு கோத்திரத்தாருக்கும், பன்னிரண்டு முற்பிதாக்கள் இருக்கிறார்கள். இவர்களுடைய தனிப்பட்ட சுபாவங்கள் கர்த்தருக்கு பிரியமானதாயில்லை. இவர்கள் எல்லோருமே கர்த்தருடைய பார்வையில் நீதிமான்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இது கர்த்தருடைய கிருபையின் உடன்படிக்கை. கர்த்தருடைய உடன்படிக்கையில் இஸ்ரவேல் சந்ததியார் எல்லோருமே பங்குபெறுகிறார்கள்.

கர்த்தர் யாக்கோபை சிநேகிக்கிறார். யாக்கோபின் கிரியைகளினிமித்தமாக கர்த்தர் அவரை நேசிக்கவில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே யாக்கோபை நேசிக்கிறார். ஆகையினால் எந்த ஒரு மனுஷனும் தன்னுடைய கிரியைகளைக் குறித்து கர்த்தருக்கு முன்பாக பெருமை பாராட்ட முடியாது.

இஸ்ரவேலின் பன்னிரண்டு குமாரரின் நாமங்களாவன:

1. ரூபன் (1நாளா 2:1; ஆதி 29:32)
2. சிமியோன் (1நாளா 2:1; ஆதி 29:33)
3. லேவி (1நாளா 2:1; ஆதி 29:34)
4. யூதா (1நாளா 2:1; ஆதி 29:35)
5. இசக்கார் (1நாளா 2:1; ஆதி 30:18)
6. செபுலோன் (1நாளா 2:1; ஆதி 30:20)
7. தாண் (1நாளா 2:2; ஆதி 30:6)
8. யோசேப்பு (1நாளா 2:2; ஆதி 30:24)
9. பென்யமீன் (1நாளா 2:2; ஆதி 35:16-20)
10. நப்தலி (1நாளா 2:2; ஆதி 30:8)
11. காத் (1நாளா 2:2; ஆதி 30:11)
12. ஆசேர் (1நாளா 2:2; ஆதி 30:13)

இஸ்ரவேலின் குமாரர் பிறப்பின் வரிசையில் இங்கு அட்டவணைப்படுத்தப்படவில்லை. லேயாளின் ஆறு குமாரர் முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறார்கள். அதன் பின்பு ராகேலின் நான்கு குமாரரும் கூறப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு பிறப்பின் வரிசை மாறிக் கூறப்பட்டிருப்பதற்கான காரணம் தெரியவில்லை.

யூதாவின் குமாரர் 1நாளா 2:3-12

1நாளா 2:3. யூதாவின் குமாரர், ஏர், ஓனான், சேலா என்பவர்கள்; இந்த மூன்று குமாரர் சூவாவின் மகளான கானான் ஸ்திரீயினிடத்தில் அவனுக்குப் பிறந்தவர்கள்; ஏர் என்னும் யூதாவின் மூத்த குமாரன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனானபடியால் அவர் அவனைக் கொன்றுபோட்டார்.

1நாளா 2:4. அவன் மருமகளாகிய தாமார் அவனுக்குப் பாரேசையும் சேராவையும் பெற்றாள்; யூதாவின் குமாரர் எல்லாரும் ஐந்து பேர்.

1நாளா 2:5. பாரேசின் குமாரர், எஸ்ரோன், ஆமூல் என்பவர்கள்.

1நாளா 2:6. சேராவின் குமாரர் எல்லாரும், சிம்ரி, ஏத்தான், ஏமான், கல்கோல், தாரா என்னும் ஐந்துபேர்.

1நாளா 2:7. சாபத்தீடான விஷயத்திலே துரோகம்பண்ணி இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணின ஆகார் என்பவன், கர்மீ புத்திரரில் ஒருவன்.

1நாளா 2:8. ஏத்தானின் குமாரர் அசரியா முதலானவர்கள்.

1நாளா 2:9. எஸ்ரோனுக்குப் பிறந்த குமாரர், யெர்மெயேல், ராம், கெலுபா என்பவர்கள்.

1நாளா 2:10. ராம் அம்மினதாபைப் பெற்றான்; அம்மினதாப் யூதா புத்திரரின் பிரபுவாகிய நகசோனைப் பெற்றான்.

1நாளா 2:11. நகசோன் சல்மாவைப் பெற்றான்; சல்மா போவாசைப் பெற்றான்.

1நாளா 2:12. போவாஸ் ஓபேதைப் பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்.

"யூதா" என்னும் பெயருக்கு "துதி" என்று பொருள். யாக்கோபு என்னும் இஸ்ரவேலின் 12 குமாரரையும் அட்டவணைப்படுத்திய பின்பு, நாளாகமத்தின் ஆசிரியர் யூதாவின் குமாரரையும், அவருடைய சந்ததியாரையும் பற்றி குறிப்பிடுகிறார். யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த நான்காவது குமாரன் யூதா ஆவான். *(1நாளா 2:3-4:23).*

யூதா கோத்திரம் பன்னிரண்டு கோத்திரங்களில் ஆட்சி புரியும் கோத்திரமாகும். மேசியா யூதா கோத்திரத்திலிருந்து வந்திருக்கிறார். ஆகையினால் யூதா கோத்திரம் இங்கு முதலாவதாகக் கூறப்பட்டிருக்கிறது. *(ஆதி 49:8-12; லூக்கா 3:23-38; எபி 7:14; வெளி 5:5).*

யூதாவின் குமாரருடைய நாமங்களாவன:

1. ஏர் *(1நாளா 2:3; ஆதி 38:3)*
2. ஓனான் *(1நாளா 2:3; ஆதி 38:4)*
3. சேலா *(1நாளா 2:3; ஆதி 38:5)*
4. பாரேஸ் *(1நாளா 2:4; ஆதி 38:29)*
5. சேரா *(1நாளா 2:4; ஆதி 38:30)*

யூதாவின் சந்ததியைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் யூதா கோத்திரத்தை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைவிட, யூதாகோத்திரத்தார் எண்ணிக்கையில் அதிகமாக பலுகிப்பெருகியிருக்கிறார்கள். ஆகையினால் யூதாகோத்திரத்தாரின் வம்ச அட்டவணை முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற கோத்திரத்தாரின் வம்சவரலாற்றை விட, யூதாகோத்திரத்தாரின் வம்சவரலாறு மிகவும் பெரியதாகும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்துவானவரே யூதாகோத்திரத்தாரில் பிரதானமானவர். ஆனாலும் யூதாகோத்திரத்தாரில் சிலர் மிகவும் மோசமானவர்களாகயிருக்கிறார்கள். ஏர் என்னும் யூதாவின் மூத்த குமாரன் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான். ஆகையினால் கர்த்தர் அவனைக் கொன்றுபோடுகிறார்.

ஏர் என்னும் யூதாவின் மூத்த குமாரன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனாயிருக்கிறான். ஏர் செய்த பொல்லாப்பு என்ன என்று வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. ஒருவேளை இவனும் ஓனானைப்போல "தன் தமையனுக்குச் சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்தை தரையிலே விழவிட்டு" கெடுத்திருக்க வேண்டும். (ஆதி 38:8-10). வேதாகமத்தில் இந்தப் பாவத்தைப் பற்றி இந்த வசனத்தில் முதன் முறையாகக் கூறப்பட்டிருக்கிறது.

யூதாவின் சந்ததியில் வந்த ஓனானும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான். இந்தப் பாவத்தைச் செய்த ஓனானைக் கர்த்தர் கொன்று போட்டார். மனுஷர் பூமியில் பலுகிப் பெருகவேண்டுமென்பது கர்த்தருடைய கட்டளை. கர்த்தருடைய சாயலாகவும், கர்த்தருடைய ரூபத்தின் பிரகாரமாகவும் இருக்கும் மனுஷ சந்ததியாரை உலகத்தில் வரவிடாமல் தடுக்கக்கூடாது.

யூதா தன் மருமகளாகிய தாமாரோடு வேசித்தனம்பண்ணினான். யூதாவின் கோத்திரத்தில் வந்த ஆகார் என்பவன், சாபத்தீடான விஷயத்திலே துரோகம்பண்ணி இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணினான். ஆகாரின் மறுபெயர் ஆகான் (யோசு 7:25).

யூதாகோத்திரத்தாரில் கர்த்தருக்கு பிரியமானவர்களும் இருக்கிறார்கள். ஏமான், ஏத்தான், கல்கோல், தாரா ஆகியோர் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், ஞானமுள்ளவர்களாயும் இருந்தார்கள்.

"ஏத்தான்" என்னும் பெயருக்கு "உறுதி", "நிலைத்திருப்பது" என்று பொருள். "ஏமான்" என்னும் பெயருக்கு "உண்மையுள்ளவன்" என்று பொருள். "கல்கோல்" என்னும் பெயருக்கு "நிலைத்திருப்பது" என்று பொருள். "தாரா" என்னும் பெயருக்கு "தாங்குகிறவன்" என்று பொருள் (1நாளா 2:6).

ஏமான், ஏத்தான், கல்கோல், தாரா ஆகியோர் சேராவின் குமாரர்களல்ல என்றும், இவர்கள் சேராவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஆனாலும் இவர்களுடைய பெயர்களும் இந்த வம்சஅட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தங்கள் பிதாவின் வீட்டாருக்கு கீர்த்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

"அவன் எஸ்ராகியனாகிய ஏத்தானிலும், ஏமான், கல்கோல், தர்தா என்னும் மாகோலின் குமாரரிலும், மற்ற எல்லா மனுஷரிலும் ஞானவானாயிருந்தான்; சுற்றிலும் இருந்த சகல ஜாதிகளிலும் அவன் கீர்த்தி பிரபலமாயிருந்தது" (1இராஜா 4:31).

இந்த வசனப்பகுதியில் நகசோனைப்பற்றியும், சல்மாவைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. எகிப்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் வெளியேறி வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணிய போது நகசோன் யூதா கோத்திரத்தாரை வழிநடத்திச் சென்றான். (எண் 2:3,9). "சல்மா" என்பவனின் மறுபெயர் சல்மோன். இவன் எரிகோவிலிருந்த ராகாபை விவாகம் பண்ணியவன். (ரூத் 4:21; மத் 1:5; லூக்கா 3:32).

மேசியாவின் வம்ச வரலாறு பாரேசின் மூலமாக வருகிறது. (1நாளா 2:5,9-12; ரூத் 4:18; லூக்கா 3:23-38). ராஜவம்சமும் பாரேசின் மூலமாகவே வருகிறது (மத் 1:1-17).

மேசியாவின் வம்ச வரலாறு எஸ்ரோன் மூலமாக வருகிறது. (1நாளா 2:5,9-12; ரூத் 4:18; லூக்கா 3:23-38). ராஜவம்சமும் எஸ்ரோனின் மூலமாகவே வருகிறது (மத் 1:1-17).

சேராவின் குமாரருடைய நாமங்களாவன:

1. சிம்ரி
2. ஏத்தான்
3. ஏமான்
4. கல்கோல்
5. தாரா

"சிம்ரி" என்னும் பெயருக்கு "இசை" "பாதுகாப்பு" என்று பொருள். இந்தப் பெயருக்கு "மலையாடு" என்றும் பொருள் கூறுகிறார்கள். "ராம்" என்பவன் எஸ்ரோனின் பௌத்திரன் *(1நாளா 2:9,25)*.

"கர்மீ" என்னும் பெயருக்கு "கிளைகழிக்கிறவன்" என்று பொருள். கர்மீ யாருடைய குமாரன் என்று கூறப்படவில்லை. இவன் சேராவின் குமாரரோடு கூறப்பட்டிருக்கிறான். அவனுடைய குமாரனாகிய ஆகாரைப் பற்றி மட்டுமே இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. யோசு 7:16-18 ஆகிய வசனங்களில் பிரகாரம் இவன் சேராகியரின் வம்சத்தில் வருகிறான். இந்தப் பெயர் 1நாளா 2:6 ஆவது வசனத்திலுள்ள சேராவோடு தொடர்புடையது.

ஈசாயின் குமாரர் 1நாளா 2:13-17

1நாளா 2:13. ஈசாய் தன் மூத்தகுமாரன் எலியாபையும், அபினதாப் என்னும் இரண்டாம் குமாரனையும், சிம்மா என்னும் மூன்றாம் குமாரனையும்,

1நாளா 2:14. நெதனெயேல் என்னும் நாலாம் குமாரனையும், ரதாயி என்னும் ஐந்தாம் குமாரனையும்,

1நாளா 2:15. ஓத்சேம் என்னும் ஆறாம் குமாரனையும், தாவீது என்னும் ஏழாம் குமாரனையும் பெற்றான்.

1நாளா 2:16. அவர்கள் சகோதரிகள் செருயாள், அபிகாயில் என்பவர்கள்; செருயாளின் குமாரர், அபிசாய், யோவாப், ஆசகேல் என்னும் மூன்றுபேர்.

1நாளா 2:17. அபிகாயில் அமாசாவைப் பெற்றாள்; அமாசாவின் தகப்பன் இஸ்மவேலியனாகிய யெத்தேர் என்பவன்.

இஸ்ரவேல் கோத்திரத்தாரின் வம்ச அட்டவணையில் ஈசாயின் குடும்பத்தாரைப்பற்றியும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதின் நிமித்தமாகவும், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தமாகவும், ஈசாயின் பெயர் இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது.

"ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்" *(ஏசா 11:1)*.

ஈசாய்க்கு 8 குமாரர்கள் இருந்தார்கள். *(1சாமு 16:6-11; 1சாமு 17:12-14)* ஆனால் ஏழு குமாரரின் பெயர்களே இங்கு கூறப்பட்டிருக்கிறது. தாவீது இளையவன். *(1சாமு 16:11)* ஈசாயின் எட்டாவது குமாரன் இளமையிலேயே மரித்துப் போயிருக்க வேண்டும். அல்லது அவனுக்குப் புத்திரர்கள் பிறந்திருக்காமல் போயிருக்க வேண்டும்.

தாவீதுக்கு இரண்டு சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய பெயர் செருயாள், அபிகாயில் என்பனவாகும். *(2சாமு 17:25)*

அபிசாய், யோவாப், ஆசகேல் ஆகிய இம்மூவரும் தாவீதின் உறவினர்கள். தாவீதின் ராஜ்யபாரத்தில் இவர்கள் முக்கிய பங்கு வகித்தார்கள். தாவீது மரிக்கும் காலம் வரையிலும் யோவாப் தாவீதின் படைத்தளபதியாக இருந்தான். யெத்தேரின் மறுபெயர் எத்திரா *(2சாமு 17:25)*.

காலேபின் குமாரர் 1நாளா 2:18-20

1நாளா 2:18. எஸ்ரோனின் குமாரன் காலேப் எரீயோத் என்னப்பட்ட தன் பெண்ஜாதியாகிய அசுபாளாலே பெற்ற குமாரர், ஏசேர், சோபாப், அர்தோன் என்பவர்கள்.

1நாளா 2:19. அசுபாள் செத்துப்போன பின் காலேப் எப்ராத்தை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு ஊரைப் பெற்றாள்.

1நாளா 2:20. ஊர் ஊரியைப் பெற்றான்; ஊரி பெசலெயேலைப் பெற்றான்.

எப்புன்னேயின் குமாரனாகிய காலேபின் முன்னோர். இவன் எஸ்ரோனின் குமாரன். (எண் 13:6,30; எண் 14:6,24; எண் 32:12; எண் 34:19; யோசு 14:9,14) 1நாளா 4:15 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காலேபும், இவனும் வெவ்வேறு நபர்கள்.

காலேபுக்கு எரீயோத் மூலமாகவும், அசுபாளால் மூலமாகவும் பிள்ளைகள் பிறக்கிறார்கள். அசுபாளின் பிள்ளைகளுடைய பெயர்கள் மட்டுமே இங்கு கூறப்பட்டிருக்கிறது. எரீயோத் ஒருவேளை காலேபின் மறுமனையாட்டியாக இருக்கலாம். மறுமனையாட்டியின் குமாரருடைய பெயர் வம்ச வரலாற்று அட்டவணையில் குறிப்பிடப்படுவதில்லை.

எப்ராத்தின் மறுபெயர் எப்ராத்தா என்பதாகும் (1நாளா 2:50, 1நாளா 4:4).

பெசலெயேல் என்பவன் ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு விசேஷித்த ஞானமுடையவன். (யாத் 31:2; யாத் 35:30; யாத் 36:1-2; யாத் 37:1). 1நாளா 2:18 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் காலேபும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும் ஒரே நபரல்ல, வெவ்வேறு நபர்கள்.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நான் யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரைவெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதற்கும், மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும் அவனுக்கு உண்டாக, அவனை தேவ ஆவியினால் நிரப்பினேன்" (யாத் 31:1-5) என்றார்.

எஸ்ரோனின் குமாரர் 1நாளா 2:21-24

1நாளா 2:21. பிற்பாடு, எஸ்ரோன் அறுபது வயதானபோது கிலெயாத்தின் தகப்பனாகிய மாகீரின் குமாரத்தியை விவாகம்பண்ணி, அவளிடத்தில் பிரவேசித்தான்; இவள் அவனுக்குச் செகூபைப் பெற்றாள்.

1நாளா 2:22. செகூப் யாவீரைப் பெற்றான்; இவனுக்குக் கீலேயாத் தேசத்தில் இருபத்து மூன்று ஊர்கள் இருந்தது.

1நாளா 2:23. கேசூரையும் ஆராமையும் யாவீரின் கிராமங்களையும், கேனாத்திலுள்ள கிராமங்களாகிய அறுபது ஊர்களையும் அவர்கள் கையிலே வாங்கினார்கள்; இவர்கள் எல்லாரும் கிலெயாத்தின் தகப்பனாகிய மாகீரின் குமாரர்.

1நாளா 2:24. காலேபின் ஊரான எப்ராத்தாவில் எஸ்ரோன் இறந்துபோனபின், எஸ்ரோனின் பெண்ஜாதியாகிய அபியாள் அவனுக்குத் தெக்கோவாவின் தகப்பனாகிய அசூரைப் பெற்றாள்.

யாக்கோபு எகிப்து தேசத்திற்குப் போனபோது அவரோடு கூடப்போன எழுபது பேரில் எஸ்ரோனும் ஒருவர்.

"யூதாவினுடைய குமாரர் ஏர், ஓனான், சேலா, பாரேஸ், சேரா என்பவர்கள்; அவர்களில் ஏரும் ஓனானும் கானான்தேசத்தில் இறந்துபோனார்கள்; பாரேசுடைய குமாரர் எஸ்ரோன், ஆமூல் என்பவர்கள்" (ஆதி 46:12).

எஸ்ரோனின் மனைவியாகிய அசுபாள் மரித்துப் போனாள். அதன் பின்பு, எஸ்ரோன் மாகீரின் குமாரத்தியை விவாகம் பண்ணினான். அப்போது எஸ்ரோனுக்கு 60 வயதாயிற்று. இவள் செகூபைப் பெற்றாள். செகூப் யாவீரைப் பெற்றான்; (1நாளா 2:21-22).

கீலேயாத் தேசத்தில் இருபத்து மூன்று ஊர்கள் என்று கூறப்பட்டிருப்பது பின்பு 30 ஊர்களாயிற்று. (நியா 10:4). இவன் கெசூரையும், ஆராமையும், கேனாத்திலுள்ள கிராமங்களாகிய அறுபது ஊர்களையும் கெசூரியர் கையிலும், சீரியர் கையிலும் வாங்கினான்.

மனாசே கோத்திரத்தாரிடமிருந்து கெசூரியரும், சீரியரும் இந்த ஊர்களைப் பெற்றிருக்க வேண்டும். இதன் பின்பு, செகூப் இந்த ஊர்களை இஸ்ரவேலுக்காகத் திரும்பப் பெற்றுக் கொண்டான் (நாளா 2:23).

யெர்மெயேலின் குமாரர் 1நாளா 2:25-33

1நாளா 2:25. எஸ்ரோனுக்கு முதற்பிறந்த யெர்மெயேலின் குமாரர், ராம் என்னும் மூத்தவனும், பூனா, ஓரேன், ஓத்சேம், அகியா என்பவர்களுமே.

1நாளா 2:26. அத்தாராள் என்னும் பேருள்ள வேறொரு மனைவியும் யெர்மெயேலுக்கு இருந்தாள்; இவள் ஓனாமின் தாய்.

1நாளா 2:27. யெர்மெயேலுக்கு முதற்பிறந்த ராமின் குமாரர், மாஸ், யாமின், எக்கேர் என்பவர்கள்.

1நாளா 2:28. ஓனாமின் குமாரர், சம்மாய், யாதா என்பவர்கள்; சம்மாயின் குமாரர், நாதாப், அபிசூர் என்பவர்கள்.

1நாளா 2:29. அபிசூருடைய மனைவியின் பேர் அபியாயேல்; அவள் அவனுக்கு அக்பானையும் மோளிதையும் பெற்றாள்.

1நாளா 2:30. நாதாபின் குமாரர், சேலேத், அப்பாயீம் என்பவர்கள்; சேலேத் புத்திரரில்லாமல் மரித்தான்.

1நாளா 2:31. அப்பாயிமின் குமாரர் இஷி முதலானவர்கள்; இஷியின் குமாரர் சேசான் முதலானவர்கள்; சேசானின் குமாரத்தி அக்லாய்.

1நாளா 2:32. சம்மாயின் சகோதரனாகிய யாதாவின் குமாரர், யெத்தெர், யோனத்தான் என்பவர்கள்; யெத்தெர் குமாரரில்லாமல் மரித்தான்.

1நாளா 2:33. யோனத்தானின் குமாரர், பேலேத், சாசா என்பவர்கள்; இவர்கள் யெர்மெயேலின் புத்திரர்.

யெர்மெயேலின் குமாரர் ஆறு பேர். இவர்களுடைய நாமங்களாவன:

1. ராம்
2. பூனா
3. ஓரேன்
4. ஓத்சேம்
5. அகியா
6. ஓனாம் - இவன் யெர்மெயேலுக்கும், அத்தாராளுக்கும் பிறந்தவன். (நாளா 2:26)

இந்த ஆறு குமாரர் மூலமாக 1நாளா 2:27-33 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் 18 சந்ததியார் வருகிறார்கள். இவர்கள் யெர்மெயேலின் புத்திரர் என்று அழைக்கப்படுகிறார்கள். புத்திரர் என்னும் வார்த்தை சந்ததியாரைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

சேசானின் சந்ததியார் 1நாளா 2:34-41

1நாளா 2:34. சேசானுக்குக் குமாரத்திகளேயன்றி குமாரர்கள் இல்லை; சேசானுக்கு யர்கா என்னும் பேருள்ள எகிப்திய வேலைக்காரன் ஒருவன் இருந்தான்.

1நாளா 2:35. சேசான் தன் குமாரத்தியைத் தன் வேலைக்காரனாகிய யாகாவுக்குக் கொடுத்தான்; அவள் அவனுக்கு அத்தாயியைப் பெற்றாள்.

1நாளா 2:36. அத்தாயி நாதானைப் பெற்றான். நாதான் சாபாதைப் பெற்றான்.

1நாளா 2:37. சாபாத் எப்லாலைப் பெற்றான்; எப்லால் ஓபேதைப் பெற்றான்.

1நாளா 2:38. ஓபேத் ஏகூவைப் பெற்றான்; ஏகூ அசரியாவைப் பெற்றான்.

1நாளா 2:39. அசரியா ஏலேத்சைப் பெற்றான்; ஏலேத்ஸ் எலெயாசாவைப் பெற்றான்.

1நாளா 2:40. எலெயாசா சிஸ்மாயைப் பெற்றான்; சிஸ்மாய் சல்லூமைப் பெற்றான்.

1நாளா 2:41. சல்லூம் எக்கமியாவைப் பெற்றான்; எக்கமியா எலிசாமாவைப் பெற்றான்.

சேசானுக்கு யர்கா என்னும் பேருள்ள எகிப்திய வேலைக்காரன் ஒருவன் இருந்தான். இந்த எகிப்தியன் சேசானின் குமாரத்தியை விவாகம் பண்ணினான். இவனுக்கு அத்தாயி என்னும் குமாரன் பிறந்தான். குமாரத்திகள் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் விவாகம் பண்ணினால் அவர்கள் சுதந்தரத்தில் நிலைத்திருப்பார்கள். (எண் 36:6). இதன் பிரகாரம் இந்த எகிப்தியன் யூதா கோத்திரத்திற்குச் சுவிகாரப் புத்திரனாகிறான். (1நாளா 2:34-41).

காலேபின் குமாரர்

1நாளா 2:42-49

1நாளா 2:42. யெர்மெயேலின் சகோதரனாகிய காலேபின் குமாரர், சீப்பின் தகப்பனாகிய மேசா என்னும் முதற்பிறந்தவனும், எப்ரோனின் தகப்பனாகிய மெரேசாவின் குமாரருமே.

1நாளா 2:43. எப்ரோனின் குமாரர், கோராகு, தப்புவா, ரெக்கேம், செமா என்பவர்கள்.

1நாளா 2:44. செமா யோர்க்கேயாமின் தகப்பனாகிய ரெக்கேமைப் பெற்றான்; ரெக்கேம் சம்மாயைப் பெற்றான்.

1நாளா 2:45. சம்மாயின் குமாரன் மாகோன்; மாகோன் பெத்சூரின் தகப்பன்.

1நாளா 2:46. காலேபின் மறுமனையாட்டியாகிய எப்பாள் ஆரானையும், மோசாவையும், காசேசையும் பெற்றாள்; ஆரான் காசேசைப் பெற்றான்.

1நாளா 2:47. யாதாயின் குமாரர், ரேகேம், யோதாம், கேசாம், பேலேத், எப்பா, சாகாப் என்பவர்கள்.

1நாளா 2:48. காலேபின் மறுமனையாட்டியாகிய மாகாள் சேபேரையும் திர்கானாவையும் பெற்றாள்.

1நாளா 2:49. அவள் மத்மன்னாவின் தகப்பனாகிய சாகாபையும், மக்பேனாவுக்கும் கிபேயாவுக்கும் தகப்பனாகிய சேவாவையும் பெற்றாள்; காலேபின் குமாரத்தி அக்சாள் என்பவள்.

காலேபு எஸ்ரோனின் குமாரன் (1நாளா 2:18,42). இவன் யெர்மெயேலின் சகோதரன். (1நாளா 2:25-33)

எப்ரோன், மெரேசா, தப்புவா, ரெக்கேம் ஆகியவற்றின் பெயரில் பட்டணங்களும் உள்ளன. (ஆதி 13:18; ஆதி 23:2,19; யோசு 15:34,44) எப்ரோனும், மெரேசாவும் காலேபுக்குக் கொடுக்கப்பட்டது. இவன் கானான் தேசத்திற்குள் வேவுபார்க்கப் போனவர்களில் ஒருவன். (யோசு 14:13). தப்புவா யூதாவிலும் (யோசு 15:34), ரெக்கேம் பென்யமீனிலும் உள்ளது. (யோசு 18:27).

"மாகோன்" என்னும் பெயரில் யூதாவில் ஒரு பட்டணமும் உள்ளது. (யோசு 15:55; 1சாமு 23:24).

காலேபுக்கு மாகாள் என்னும் பெயரில் ஒரு மறுமனையாட்டியும் இருக்கிறாள். மறுமனையாட்டிகளுடைய குமாரரின் பெயர்கள் ஒருசில இடங்களில் கூறப் பட்டிருந்தாலும் எல்லா இடங்களிலும் மறுமனையாட்டிகளின் குமாரர்களுடைய பெயர்கள் குறிப்பிடப்படுவதில்லை. (1நாளா 2:46). இதற்கான காரணமும் தெளிவாக இல்லை.

எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்கும், அக்சாள் என்னும் பெயரில் ஒரு குமாரத்தி இருக்கிறாள். (யோசு 15:16-17; நியா 1:12-15) இதனால் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபையும், எஸ்ரோனின் குமாரனாகிய காலேபையும் சரித்திர ஆசிரியர்கள் ஒரே நபராகக் குறிப்பிடுகிறார்கள்.

காலேபின் சந்ததியார் 1நாளா 2:50-55

1நாளா 2:50. எப்ராத்தாவிடத்தில் முதற்பிறந்த ஊருடைய குமாரனாகிய காலேபின் குமாரர், கீரியாத்யாரீமின் மூப்பனான சோபாலும்,

1நாளா 2:51. பெத்லெகேமின் மூப்பனான சல்மாவும், பெத்காதேரின் மூப்பனான ஆரேப்புமே.

1நாளா 2:52. கீரியாத்யாரீமின் மூப்பனான சோபாலின் குமாரர், ஆரோவே, ஆசியம் மெனுகோத் என்பவர்கள்.

1நாளா 2:53. கீரியாத்யாரீமிலிருந்த வம்சங்கள், எத்திரியரும் பூகியரும் சுமாத்தியரும் மிஸ்ராவியருமே; இவர்களிடத்தில் சோராத்தியரும், எஸ்தவோலியரும் பிறந்தார்கள்.

1நாளா 2:54. சல்மாவின் சந்ததிகள், பெத்லெகேமியரும், நேத்தோப்பாத்தியரும், பெத் யோவாப் என்னும் அதரோத் ஊராரும், மனாத்தியரிலும் சோரியரிலும் பாதி ஜனங்களுமே.

1நாளா 2:55. யாபேசில் குடியிருந்த கணக்கரின் வம்சங்கள், திராத்தியரும் சிமாத்தியரும் சுக்காத்தியருமே; ரேகாப் வீட்டாரின் தகப்பனாகிய அம்மாத்தின் சந்ததியாரான கேனியர் இவர்களே.

"ஊருடைய குமாரனாகிய காலேப்" என்பவன் எப்புன்னேயின் குமாரனாக இருக்கலாம். (எண் 13:6) எப்புன்னே என்பது ஊருடைய பட்டப் பெயராகும். (யாத் 17:10; யாத் 24:14; யாத் 31:2; யாத் 35:30)

எப்ராத்தாள் என்பவள் 1நாளா 2:18-20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காலேபின் மனைவி.

கீரியாத்யாரீம் என்பது கிபியோனியரின் பழங்காலத்து பட்டணம். (யோசு 9:17; யோசு 15:60) இங்கு கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி நீண்டகாலமாக இருந்தது. தாவீது இந்தப் பெட்டியை இங்கிருந்து சீயோனுக்கு எடுத்து வந்தார். (1சாமு 6:21; 1சாமு 7:2; 2சாமு 6:2; 1நாளா 13:5-6).

கீரியாத்யாரீம், பெத்லகேம் ஆகிய பட்டணங்கள் பிற்காலத்தில் தாவீதின் பட்டணங்களாயிற்று.

சல்மா என்பவன் பெத்லெகேமின் மூப்பன். சல்மா என்னும் பெயருக்கு "வலிமை" என்று பொருள். இவன் "பெத்லகேமின் தகப்பன்" (1நாளா 2:51,54). இந்த சல்மா தவிர, வேறொரு சல்மாவும் இருக்கிறான். இவன் போவாசின் தகப்பன். (1நாளா 2:11; ரூத் 4:20-21; மத் 1:4-5; லூக்கா 3:32).

"ஆசியம் மெனுகோத்" என்னும் பெயரிலுள்ள "ஆசியம்" என்பதற்கு "பாதி" என்று பொருள். மெனுகோத்தின் மற்றொரு பாதியைப் பற்றி 1நாளா 2:54 ஆவது வசனத்தில்கூறப்பட்டிருக்கிறது.

யாபேசில் குடியிருந்த கணக்கரின் வம்சங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யாபேஸ் இதை ஸ்தாபித்திருக்க வேண்டும். (1நாளா 4:9-10)

கேனியர் என்பவர்கள் அம்மாத்தின் சந்ததியார். இந்தக் கேனியர் மோசேயின் மாமனாகிய எத்திரோவின் சந்ததியார் ஆவர். (நியா 1:16; நியா 4:11-17; நியா 5:24; 1சாமு 15:6; 1சாமு 27:10; 1சாமு 30:29). இவர்கள் தங்களுடைய சுதந்தர வீதத்தில் யூதா கோத்திரத்தாரோடு சேர்ந்திருக்கிறார்கள். பல நூறு வருஷங்களாக இந்தச் சந்ததியாரும், யூதா கோத்திரத்தாரும் கலந்திருக்கிறார்கள்.

3 அதிகாரம்

இஸ்ரவேலின் குடும்பத்தாரில், தாவீதின் குடும்பத்தாரே மிகவும் பிரசித்திப் பெற்றவர்களாயிருக்கிறார்கள். தாவீதின் குடும்பத்தைப்பற்றி 1நாளா 2:15-ஆவது வசனத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் தாவீதின் குடும்பத்தைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதின் குமாரர் (1நாளா 3:1-9). தாவீதின் குடும்பத்தில் வந்த ராஜவம்சத்தார் (1நாளா 3:10-16). சிறையிருப்பின்போதும், சிறையிருப்புக்குப் பின்பும், தாவீதின் குடும்பத்தில் மீதியாயிருந்தவர்கள் (1நாளா 3:17-24).

தாவீதின் குமாரர் 1நாளா 3:1-9

1நாளா 3:1. தாவீதுக்கு எப்ரோனிலே பிறந்த குமாரர்: யெஸ்ரேயேல் ஊராளான அகிநோவாமிடத்தில் பிறந்த அம்னோன் முதற்பேறானவன்; கர்மேலின் ஊராளான அபிகாயேலிடத்தில் பிறந்த தானியேல் இரண்டாம் குமாரன்.

1நாளா 3:2. கேசூரின் ராஜாவாகிய தல்மாயின் குமாரத்தி மாக்காள் பெற்ற அப்சலோம் மூன்றாம் குமாரன்; ஆகீத் பெற்ற அதோனியா நாலாம் குமாரன்.

1நாளா 3:3. அபித்தாள் பெற்ற செப்பத்தியா ஐந்தாம் குமாரன்; அவன் பெண்ஜாதியாகிய எக்லாள் பெற்ற இத்ரேயாம் ஆறாம் குமாரன்.

1நாளா 3:4. இந்த ஆறு குமாரர் அவனுக்கு எப்ரோனிலே பிறந்தார்கள்; அங்கே ஏழுவருஷமும் ஆறுமாதமும் அரசாண்டான்; எருசலேமிலோ முப்பத்துமூன்று வருஷம் அரசாண்டான்.

1நாளா 3:5. எருசலேமில் அவனுக்குப் பிறந்தவர்கள்; அம்மியேலின் குமாரத்தியாகிய பத்சுவாளிடத்தில் சிமீயா, சோபாப், நாத்தான், சாலொமோன் என்னும் நாலு பேரும்,

1நாளா 3:6. இப்கார், எலிசாமா, எலிப்பெலேத்,

1நாளா 3:7. நோகா, நேபேக், யப்பியா,

1நாளா 3:8. எலிசாமா, எலியாதா, எலிபேலேத் என்னும் ஒன்பதுபேருமே.

1நாளா 3:9. மறுமனையாட்டிகளின் குமாரரையும் இவர்கள் சகோதரியாகிய தாமாரையும் தவிர, இவர்களெல்லாரும் தாவீதின் குமாரர்.

தாவீதின் குமாரரைப்பற்றி 2சாமு 3-ஆவது அதிகாரத்தில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்த குமாரர்: யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமிடத்தில் பிறந்த அம்னோன் அவனுக்கு முதல் பிறந்தவன். நாபாலின் மனையியாயிருந்த கர்மேல் ஊராளான அபிகாயிலிடத்திலே பிறந்த கீலேயாப் அவனுடைய இரண்டாம் குமாரன்; மூன்றாம் குமாரன் கேசூரின் ராஜாவான தல்மாய் குமாரத்தியாகிய மாக்காள் பெற்ற அப்சலோம் என்பவன்.

நாலாம் குமாரன் ஆகீத் பெற்ற அதொனியா என்பவன்; ஐந்தாம் குமாரன் அபித்தால் பெற்ற செப்பத்தியா என்பவன். ஆறாம் குமாரன் தாவீதின் மனைவியாகிய எக்லாளிடத்தில் பிறந்த இத்ரேயாம் என்பவன்; இவர்கள் எப்ரோனிலே தாவீதுக்குப் பிறந்தவர்கள் (2சாமு 3:2-5).

"அவன் எப்ரோனிலிருந்து வந்த பின்பு, எருசலேமில் இன்னும் அதிகமான மறுமனையாட்டிகளையும் ஸ்திரீகளையும் கொண்டான்; இன்னும் அதிக குமாரரும் குமாரத்திகளும் தாவீதுக்குப் பிறந்தார்கள். எருசலேமில் அவனுக்குச் சம்முவா, சோபாப், நாத்தான், சாலொமோன், இப்பார், எலிசூவா, நெப்பேக், யப்பியா, எலிஷாமா, எலியாதா, எலிப்பேலேத் என்னும் பேர்களையுடைய குமாரர் பிறந்தார்கள்" (2சாமு 5:13-16).

தாவீதின் குமாரர்களில் சிலர் அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்காமல், துக்கத்தையும் கஷ்டத்தையும் கொடுத்தார்கள். அம்னோன், அதோனியா, அப்சலோம் ஆகியோர் தாவீதை துக்கப்படுத்தினார்கள்.

தாவீது கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்தார். தாவீதின் குமாரனாகிய சாலொமோனைத் தவிர, அவருடைய மற்ற குமாரர்களிடத்தில், தெய்வபக்தி குறைவாகவே காணப்பட்டது.

தாவீது பத்சேபாளிடத்தில் விபசாரம் பண்ணினார். தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதின் பாவத்தைக் கடிந்துகொண்டார். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பினார். தாவீது ஜீவனோடிருந்த நாளெல்லாம், நாத்தானை சிநேகித்தார். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நமக்கும் நாத்தானைப்போல நல்ல சிநேகிதர்கள் இருக்கவேண்டும்.

தாவீதின் வம்சத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிறக்கிறார். "எலியாக்கீம் மெலெயாவின் குமாரன்; மெலெயா மயினானின் குமாரன்; மயினான் மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தானின் குமாரன்; நாத்தான் தாவீதின் குமாரன்" (லூக் 3:31).

தாவீதுக்கு பிறந்த குமாரரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் பல வசனங்களில் அட்டவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. தாவீதுக்கு எப்ரோனிலே பிறந்த குமாரர் (2சாமு 3:2-5)

    (1) அம்னோன்

    (2) கீலேயாப்

    (3) அப்சலோம்

    (4) அதோனியா

    (5) செப்பத்தியா

    (6) இத்ரேயாம்

2. தாவீதுக்கு எப்ரோனிலே பிறந்த குமாரர் (1நாளா 3:1-4)

    (1) அம்னோன்

    (2) தானியேல்

    (3) அப்சலோம்

    (4) அதோனியா

    (5) செப்பத்தியா

    (6) இத்ரேயாம்

3. தாவீதுக்கு எருசலேமிலே பிறந்த குமாரர் (2சாமு 5:14- 16)

    (1) சம்முவா

    (2) சோபாப்

    (3) நாத்தான்

    (4) சாலொமோன்

    (5) இப்பார்

    (6) எலிசூவா

    (7) நெப்பேக்

    (8) யப்பியா

    (9) எலிஷாமா

    (10) எலியாதா

    (11) எலிப்பேலேத்

4. தாவீதுக்கு எருசலேமிலே பிறந்த குமாரர் (1நாளா 3:1-8):

    (1) சிமீயா

    (2) சோபாப்

    (3) நாத்தான்

    (4) சாலொமோன்

    (5) இப்கார்

    (6) எலிசாமா

(7) எலிப்பெலேத்

(8) நோகா

(9) நேபேக்

(10) யப்பியா

(11) எலிசாமா

(12)எலியாதா

(13) எலிபேலேத்

5. தாவீதுக்கு எருசலேமிலே பிறந்த குமாரர் (1நாளா 14:4- 7)

(1) சம்முவா

(2) சோபாப்

(3) நாத்தான்

(4) சாலொமோன்

(5) இப்கார்

(6) எலிசூவா

(7) எலிப்பெலேத்

(8) நோகா

(9) நெப்பேக்

(10) யப்பியா

(11) எலிஷாமா

(12) பெலியதா

(13) எலிப்பேலேத்

அம்னோன் என்பவன் தன் சகோதரியாகிய தாமாரோடு பாவம் செய்தான். தாமாரின் சகோதரன் அப்சலோம் அம்னோனைக் கொன்று போட்டான். (2சாமு 13).

தானியேல் என்னும் பெயருக்கு "தேவன் என் நியாயாதிபதியாயிருக்கிறார்" என்று பொருள்.

அப்சலோம் என்பவன் அம்னோனைக் கொன்றவன். (2சாமு 13) தாவீதுக்கு விரோதமாகக் கலகம் பண்ணியவன். (2இராஜா 15- 18).

தாவீதின் பெண்ஜாதியாக இங்கு எக்லாள் என்பவளுடைய பெயர் மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. இவள் ஒரு வேளை தாவீதின் மூத்த பெண்ஜாதியாக இருக்கலாம்.

மரியாளுடைய வம்சவழி நாத்தான் மூலமாக வருகிறது. (லூக்கா 3:23-38). யோசேப்பு சாலொமோனின் வம்சத்தில் பிறந்தவர். (மத் 1:1-17).

பத்சுவாளின் மறுபெயர் பத்சேபாள் (2சாமு 11-12). அம்மியேலின் மறுபெயர் எலியாம் (2சாமு 11:3).

தாவீதுக்கு எருசலேமில் பிறந்தவர்கள் ஒன்பதுபேர் (1நாளா 3:8) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 2சாமு 5:14-16 ஆகிய வசனங்களில் பதினொரு பேராகக் கூறப்பட்டிருக்கிறது. ஒருவேளை அவர்களில் இருவர் இளவயதில் மரித்துப்போயிருக்க வேண்டும்.

தாவீதுக்கு பத்தொன்பது குமாரர் இருக்கிறார்கள். தாவீதின் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அநேகர் இருந்தாலும், அவர்களில் சிலரைப்பற்றி சரித்திரத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. தாவீதின் ராஜகுடும்பத்தாரில், சாலொமோனுடைய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர் மாத்திரமே இங்கு சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தாவீதின் வம்ச அட்டவணை, தாவீதின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனத்தார் சிறையிருப்புக்குப்போகும் காலம் வரையிலும் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சாலொமோனின் ராஜவம்சத்தார் 1நாளா 3:10-16

1நாளா 3:10. சாலொமோனின் குமாரன் ரெகொபெயாம்; இவனுடைய குமாரன் அபியா; இவனுடைய குமாரன் ஆசா; இவனுடைய குமாரன் யோசபாத்.

1நாளா 3:11. இவனுடைய குமாரன் யோராம்; இவனுடைய குமாரன் அகசியா; இவனுடைய குமாரன் யோவாஸ்.

1நாளா 3:12. இவனுடைய குமாரன் அமத்சியா; இவனுடைய குமாரன் அசரியா; இவனுடைய குமாரன் யோதாம்.

1நாளா 3:13. இவனுடைய குமாரன் ஆகாஸ்; இவனுடைய குமாரன் எசேக்கியா; இவனுடைய குமாரன் மனாசே.

1நாளா 3:14. இவனுடைய குமாரன் ஆமோன்; இவனுடைய குமாரன் யோசியா.

1நாளா 3:15. யோசியாவின் குமாரர், முதல் பிறந்த யோகனானும், யோயாக்கீம் என்னும் இரண்டாம் குமாரனும், சிதேக்கியா என்னும் மூன்றாம் குமாரனும், சல்லூம் என்னும் நாலாம் குமாரனுமே.

1நாளா 3:16. யோயாக்கீமின் குமாரர் எகோனியா முதலானவர்கள்; இவனுக்கு மகனானவன் சிதேக்கியா.

சாலொமோனின் ராஜவம்சத்தாரைப்பற்றிய அட்டவணை, ரெகொபெயாம் முதல் சிதேக்கியா வரையிலும், இந்த வசனப்பகுதியில் விரிவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பெயர்களின் விவரம் வருமாறு:

1. ரெகொபெயாம் (1நாளா 3:10; 1இராஜா 14:21)
2. அபியா (அபியாம்) (1நாளா 3:10; 1இராஜா 15:2)
3. ஆசா (1நாளா 3:10; 1இராஜா 15:10)
4. யோசபாத் (1நாளா 3:10; 1இராஜா 22:41-42)
5. யோராம் (1நாளா 3:11; 2இராஜா 8:16-17)
6. அகசியா (1நாளா 3:11; 2இராஜா 8:25-26)
7. யோவாஸ் (1நாளா 3:11; 2இராஜா 12:1)
8. அமத்சியா (1நாளா 3:12; 2இராஜா 14:1-2)
9. அசரியா (உசியா) (1நாளா 3:12; 2இராஜா 15:1-2)
10. யோதாம் (1நாளா 3:13; 2இராஜா 15:32)
11. ஆகாஸ் (1நாளா 3:13; 2இராஜா 16:1-2)
12. எசேக்கியா (1நாளா 3:13; 2இராஜா 18:1-2)
13. மனாசே (1நாளா 3:13; 2இராஜா 21:1)
14. ஆமோன் (1நாளா 3:14; 2இராஜா 21:19)
15. யோசியா (1நாளா 3:14; 2இராஜா 22:1)
16. யோகனான் (1நாளா 3:15)
17. யோவாகாஸ் (சல்லூம்) (1நாளா 3:15; 2இராஜா 23:31-33)
18. சிதேக்கியா (1நாளா 3:15)
19. யோயாக்கீம் (1நாளா 3:15; 2இராஜா 23:36)
20. எகோனியா (1நாளா 3:16; 2இராஜா 24:6-16)
21. சிதேக்கியா (1நாளா 3:15-16; 2இராஜா 24:18)

யூதாவை ஆறு வருஷம் துன்மார்க்கமாய் ஆட்சி புரிந்த அத்தாலியாளின் பெயர் இந்த அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. இவள் அகசியாவின் காலத்திற்கும், யோவாசின் காலத்திற்கும் இடையில் ஆட்சி புரிந்தாள். யோகனான் ஒருபோதும் ராஜாவாக இல்லை. ஆகையினால் அவனைப் பற்றிய விவரம் அதிகமாகத் தெரியவில்லை.

யோகனான் என்பவன் யோசியாவின் முதலாவது குமாரன். யோவாகாசும், யோயாக்கீமும் யூதாவின் ராஜாக்களாக ஆக்கப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு முன்பாக யோகனான் மரித்துப்போயிருக்க வேண்டும். (2இராஜா 23:31-37).

யோயாக்கீமின் மறுபெயர் எலியாக்கீம் என்பதாகும் (2இராஜா 23:34). சல்லூமின் மறுபெயர் யோவாகாஸ் என்பதாகும் (2இராஜா 23:31-33). எகோனியாவின் மறுபெயர்கள் யோயாக்கீன், (2இராஜா 24:6), கோனியா, என்பவனவாகும் (எரே 22:24-28).

சிதேக்கியா என்பவன் யூதாவின் கடைசி ராஜா. இந்த வசனத்தில் "மகன்" என்னும் வார்த்தைக்கு "சந்ததியில் வந்தவன்" என்று பொருள் கூறவேண்டும். சிதேக்கியாவின் மறுபெயர் மத்தனியா. இவன் யோயாக்கீமின் சகோதரன். (2இராஜா 24:17-18).

எகோனியாவின் குமாரர் 1நாளா 3:17-24

1நாளா 3:17. கட்டுண்ட எகோனியாவின் குமாரர் சலாத்தியேல்.

1நாளா 3:18. மல்கீராம், பெதாயா, சேனாசார், யெகமியா, ஓசாமா, நெதபியா என்பவர்கள்.

1நாளா 3:19. பெதாயாவின் குமாரர், செருபாபேல், சிமேயி என்பவர்கள்; செருபாபேலின் குமாரர், மெசுல்லாம், அனனியா என்பவர்கள்; இவர்கள் சகோதரி செலோமீத் என்பவள்.

1நாளா 3:20. அசூபா, ஒகேல், பெரகியா, அசதியா, ஊசாபேசேத் என்னும் ஐந்து பேருமே.

1நாளா 3:21. அனனியாவின் குமாரர், பெலத்தியா, எசாயா என்பவர்கள்; இவனுடைய குமாரன் ரெபாயா; இவனுடைய குமாரன் அர்னான்; இவனுடைய குமாரன் ஒபதியா; இவனுடைய குமாரன் செக்கனியா.

1நாளா 3:22. செக்கனியாவின் குமாரர், செமாயா முதலானவர்கள்; செமாயாவின் குமாரர், அத்தூஸ், எகெயால், பாரியா, நெயாரியா, செப்பாத் என்னும் ஆறுபேர்.

1நாளா 3:23. நெயாரியாவின் குமாரர், எலியோனாய், எசேக்கியா, அஸ்ரீக்காம் என்னும் மூன்றுபேர்.

1நாளா 3:24. எலியோனாயின் குமாரர், ஓதாயா, எலியாசிப், பெலாயா, அக்கூப், யோகனான், தெலாயா, ஆனானி என்னும் ஏழுபேர்.

எகோனியாவிற்கு எட்டு குமாரர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களில் ஒருவரும் அல்லது அவர்களுடைய சந்ததியில் வந்த எவரும் தாவீதின் சிங்காசனத்தில் அமரவில்லை. கர்த்தர் எகோனியாவையும், அவனுடைய சந்ததியாரையும் நித்திய காலத்திற்கும் சபித்துவிட்டார் (எரே 22:24-30).

எகோனியாவிற்குப் பின்பு, சிதேக்கியா யூதாவின் ராஜாவானான். இயேசு கிறிஸ்து எகோனியாவின் வம்சத்தில் வரவில்லை. மரியாளின் மூலமாகத் தாவீதின் உடன்படிக்கை நிறைவேறிற்று. தாவீதின் குமாரனாகிய நாத்தானின் சந்ததியில் மரியாளும் (லூக்கா 3:23-38), சாலொமோனின் சந்ததியில் யோசேப்பும் வருகிறார்கள். (மத் 1:1-17).

யோசேப்பு, மரியாள் ஆகியோரின் முதற்பேறானவராக இயேசு கிறிஸ்து கூறப்பட்டிருக்கிறார். ஆகையினால் தாவீதின் சிம்மாசனத்தில் ராஜ்யபாரம் பண்ணுவதற்கு இயேசு கிறிஸ்து பூரண உரிமை பெற்றிருக்கிறார்.

1நாளா 3:17-ஆவது வசனத்தில் "கட்டுண்ட எக்கோனியா" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "கட்டுண்ட" என்பதற்கான எபிரெய வார்த்தை "ஆசீர்" என்பதாகும். இதற்கு "கட்டுண்டவன் அல்லது சிறையிருப்புக்கு உட்பட்டவன்" என்று பொருள்.

இவன் உண்மையான நபர் அல்ல என்றும், கட்டுண்டவன் என்பது ஒரு பண்புப் பெயர் என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் கூறுகிறார்கள். இவன் சந்ததியில்லாமல் மரித்திருக்க வேண்டும். அல்லது பாபிலோனில் இவன் அரவாணியாக பணிபுரிந்திருக்க வேண்டும். மேசியாவின் வம்சத்தில் அடுத்தபடியாக சலாத்தியேலைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 3:17; மத் 1:12).

சலாத்தியேல் என்பவன் யோயாக்கீனின் குமாரன். (மத் 1:12). இவன் நேரின் குமாரன் என்று லூக்கா 3:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவன் நேரின் மருமகனாகவும் இருக்கலாம். (லூக்கா 3:27)

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில், தாவீதின் குடும்பத்தாரில் செருபாபேல் மாத்திரமே முக்கியமானவராக இருக்கிறார். 1நாளா 3:17-ஆவது வசனத்தில் சலாத்தியேல் என்பவன் எகோனியாவின் குமாரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சலாத்தியேல் எகோனியாவின் வளர்ப்பு மகன் என்றும் சரித்திர ஆசிரியர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். எகோனியாவுக்கு குமாரர் இல்லை என்பது சரித்திர ஆசிரியரின் விளக்கம்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றி எறிந்துபோடுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:24).

எகோனியாவின் ஸ்தானத்தில், செருபாபேல் ராஜாவாக நியமிக்கப்பட்டார் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (ஆகா 2:23).

செருபாபேலின் பின்சந்ததியாருடைய பெயர்கள், நாளாகமம் புஸ்தகத்திலும், மத்தேயு, லூக்கா ஆகிய சுவிசேஷங்களிலும் ஒன்றுபோல் இல்லை.

1நாளா 3:19-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் "செருபாபேல்" என்பவனும், மத் 1:12 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் சலாத்தியேலின் குமாரனும் வெவ்வேறு நபர்களாக இருக்கலாம். இவ்வாறு பொருள் கூறினால், இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் காணப்படும் வியாக்கியான குழப்பங்களைத் தவிர்க்க முடியும். ஒரே பெயரில் இரண்டு குடும்பத்தார்கள் இருப்பதினால் இந்தக் குழப்பம் உண்டாயிற்று.

4 அதிகாரம்

யூதாகோத்திரத்தாரின் வம்சவரலாறு இந்த அதிகாரத்திலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைவிட, யூதாகோத்திரத்தார் எண்ணிக்கையில் அதிகமானவர்கள். அவர்கள் மிகவும் விசேஷித்தவர்கள்.

ஊரின் குமாரனாகிய சோபாலின் சந்ததியார் (1நாளா 4:1-4). அசூரின் குடும்பமும், யாபேசைப்பற்றிய விவரமும் (1நாளா 4:5-10). அசூரைப்பற்றி 1நாளா 2:24-ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

"காலேபின் ஊரான எப்ராத்தாவில் எஸ்ரோன் இறந்துபோனபின், எஸ்ரோனின் பெண்ஜாதியாகிய அபியாள் அவனுக்குத் தெக்கோவாவின் தகப்பனாகிய அசூரைப் பெற்றாள்" (1நாளா 2:24).

கேலூப் ஆகியோரின் வம்சத்தார் (1நாளா 4:11-20). சேலாகின் புத்திரர் (1நாளா 4:21-23).

சிமியோனின் குடிகள். சிமியோனின் புத்திரர் சேயீர் மலையிலே அமலேக்கியரை முறியடித்த சம்பவம் (1நாளா 4:24-43).

யூதாவின் குமாரர்
1நாளா 4:1-4

1நாளா 4:1. யூதாவின் குமாரர், பாரேஸ் எஸ்ரோன், கர்மீ, ஊர், சோபால் என்பவர்கள்.

1நாளா 4:2. சோபாலின் குமாரன் ராயா யாகாத்தைப் பெற்றான்; யாகாத் அகுமாயியையும், லாகாதையும் பெற்றான்; சோராத்தியரின் வம்சங்கள் இவைகளே.

1நாளா 4:3. ஏதாம் என்னும் மூப்பனின் சந்ததியார், யெஸ்ரெயேல், இஷ்மா, இத்பாஸ் என்பவர்கள்; இவர்களுடைய சகோதரியின் பேர் அத்செலெல்போனி;

1நாளா 4:4. கேதோருக்கு மூப்பனான பெனுவேல், உஷாவுக்கு மூப்பனான எசேர் என்பவர்கள்; இவர்கள் பெத்லெகேமுக்கு மூப்பனான எப்ராத்தாவுக்கு முதற்பிறந்த ஊரின் குமாரர்.

1நாளா 2-3 ஆகிய அதிகாரங்களில் யூதாவின் சந்ததியாரைப் பற்றி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. யூதாவில் ஆரம்பமாகி, எகோனியா வரையிலும் இந்தச் சந்ததியார் அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தாவீதின் வம்சத்தில் எகோனியா யூதாவின் கடைசி ராஜாவாக இருக்கிறான்.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் மறுபடியுமாக யூதாவின் சந்ததியாரைப் பற்றி எழுதுகிறார். ஊர், சோபால், ஆசூர், கேலப், கேனாஸ், காலேப், சேலா ஆகியோர் மூலமாக யூதாவின் வம்ச வரலாற்றை விரிவாக விளக்குகிறார். (1நாளா 4:1-23) இதன் பின்பு, நூலாசிரியர் சிமியோனின் வம்சவரலாற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். (1நாளா 4:24-43).

அசூர்
1நாளா 4:5-8

1நாளா 4:5. தெக்கோவாவுக்கு மூப்பனான அசூருக்கு ஏலாள், நாராள் என்னும் இரண்டு பெண்ஜாதிகள் இருந்தார்கள்.

1நாளா 4:6. நாராள் அவனுக்கு அகுசாமையும், எப்பேரையும், தெமனியையும், ஆகாஸ்தாரியையும் பெற்றாள்; நாராளின் குமாரர்கள் இவர்களே.

1நாளா 4:7. ஏலாளின் குமாரர், சேரேத், எத்சோகார், எத்னான் என்பவர்கள்.

1நாளா 4:8. கோஸ் என்பவன் அனூபையும், சோபேபாகையும், ஆருமின் குமாரனாகிய அகர்கேலின் வம்சங்களையும் பெற்றான்.

அசூர் எஸ்ரோனின் குமாரன் (1நாளா 2:24). அசூருக்கு ஏலாள், நாராள் என்னும் இரண்டு பெண்ஜாதிகள் இருந்தார்கள். யூதருடைய வம்ச வரலாற்றில் பெண்ஜாதிகளின் பெயர்கள் பொதுவாகக் கூறப்படுவதில்லை. ஏதாவது விசேஷித்த காரணங்களுக்காக இவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கலாம். அல்லது இந்தப் பெயர் எப்ராத்தாவைப் போல முக்கியமான ஸ்தலத்தின் பெயராக இருக்கலாம் (1நாளா 4:4; 1நாளா 2:50).

யூதருடைய குடும்பத் தலைவருக்குப் பொதுவாக ஒரு மனைவியும், பல மறுமனையாட்டிகளும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. இரண்டு ஸ்திரீகளுக்கு மனைவிகளின் சமஅந்தஸ்து கொடுக்கப் பட்டிருந்தால், அது விசேஷமாக வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும்.

யாபேஸ்
1நாளா 4:9,10

1நாளா 4:9. யாபேஸ் தன் சகோதரரைப் பார்க்கிலும் கனம்பெற்றவனாயிருந்தான். அவன் தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள்.

1நாளா 4:10. யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.

யாபேஸ் என்னும் பெயருக்கு "துக்கம்" என்று பொருள். இவன் யூதாவின் மனுஷன். ஆனாலும் எந்தவிதமான குடும்பத்தொடர்பும் இல்லாமல் இவன் இங்கு அறிமுகமாகிறான். யாபேஸ் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தர் அவனுக்குச் செவி கொடுத்தார். (1நாளா 4:9-10).

யூதாவின் கோத்திரத்தாரின் பெயர்கள் வரிசையாகக் கூறப்பட்டிருக்கும்போது யாபேசின் பெயரும் இங்கு கூறப்பட்டிருக்கிறது. யூதாவிலுள்ள யாபேஸ் என்னும் பட்டணத்திற்கு இவனுடைய பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். (1நாளா 2:55).

யாபேஸ் கர்த்தரிடத்தில் நான்கு காரியங்களை விண்ணப்பம்பண்ணுகிறான். அவையாவன:

1. தேவரீர் என்னை ஆசீர்வதியும்.
2. என் எல்லையைப் பெரிதாக்கும்.
3. உமது கரம் என்னோடிருப்பதாக.
4. தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும்.

யாபேசின் விண்ணப்பம் பொதுவானது. ஆனாலும் அவன் வேண்டிக்கொண்டதைத் தேவன் அருளினார். இருதயத்திலிருந்து நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் நமக்குப் பதிலளிப்பார். கர்த்தர் பாரபட்சமில்லாதவர். (ரோமர் 2:11).

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியராகிய எஸ்றா, யூதாகோத்திரத்தாரின் வம்சவரலாற்றைப்பற்றி இங்கே விசேஷமாக எழுதுகிறார். யூதா தேசத்திலே சிமியோன், பென்யமீன், லேவி ஆகிய கோத்திரத்தார் சேர்ந்திருக்கிறார்கள்.

எஸ்றா நாளாகமம் புஸ்தகத்தை எழுதியபோது, பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்கள், தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். அசீரிய தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்களில் அநேகர் அந்த தேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள். அவர்களில் அநேகருடைய பூர்வோத்திரங்கள் காணாமல் போயிற்று. அவர்களுடைய வம்சவரலாற்றைப்பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை.

எஸ்றா இந்த வசனப்பகுதியிலே யாபேசைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லுகிறார். யாபேஸ் அகர்கேலின் வம்சத்தை ஸ்தாபித்தவர் (1நாளா 4:8).

யாபேசின் தாய், அவரை துக்கத்தோடே பெற்றாள். இதனால் அவள் தான் பெற்ற பிள்ளைக்கு யாபேசு என்று பேரிட்டாள். யாபேஸ் என்னும் பெயருக்கு "துக்கம்" என்று பொருள். ஒரு தாய் தன்னுடைய பிள்ளையை பெற்றெடுக்கும்போது, அது அவளுக்கு வேதனை நிரம்பிய அனுபவமாயிருக்கும். ஆனாலும் பிள்ளையைப் பெற்ற பின்போ அவள் தன் துக்கத்தை மறந்துவிடுவாள். தாய் தன் பிள்ளையைப் பார்க்கும்போது, அவளுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

ஆனால் யாபேசின் தாயோ, தன்னுடைய மகனுக்கு துக்கம் என்று பொருள்படும் "யாபேஸ்" என்று பேரிடுகிறாள். யாபேஸ் பிறந்த பின்பும் அவளுடைய துக்கம் மாறவில்லை. யாபேசுக்கு விருத்தசேதனம் பண்ணும்போதும், பிள்ளையின் தாய் துக்கத்தோடிருக்கிறாள்.

யூதர்கள் தங்கள் ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் பண்ணி, கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். விருத்தசேதனம் உடன்படிக்கைக்கு அடையாளம். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கர்த்தரிடத்தில் பயபக்தியாய் வளர்க்கவேண்டும். அந்தப் பிள்ளை உயிரோடிருக்கும் ஜீவியகாலமெல்லாம், உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவனாயிருக்கவேண்டும்.

யாபேசின் தாயாருக்கு பிள்ளையை கர்த்தருக்கு பிரியமான வழியில் வளர்க்கும் பொறுப்பு இருக்கிறது. யாபேஸ் கர்த்தரிடத்தில் பயபக்தியாய் வளர்க்கப்படவேண்டுமென்று அவருடைய தாயார் அக்கரையோடிருக்கிறாள். இதன் நிமித்தமாக அவளுக்கு பிள்ளையைக் குறித்த துக்கமுண்டாயிற்று.

கர்த்தர் யாபேசின் தாயாருக்கு, யாபேசை ஈவாகக் கொடுத்திருக்கிறார். தான் பெற்ற பிள்ளைக்காக யாபேசின் தாயார் கர்த்தருக்கு நன்றியுள்ளவளாயிருக்கிறாள். அவள் யாபேசுக்கு விருத்தசேதனம்பண்ணி, கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறாள். அவள் அந்த உடன்படிக்கையை மறக்கவில்லை. பிள்ளையை கர்த்தருக்கு பிரியமான வழியில் வளர்க்கவேண்டுமே என்னும் அக்கரை அவளிடத்தில் காணப்படுகிறது. இந்த அக்கரையே அவளுக்கு பாரமாகவும் துக்கமாகவும் இருக்கிறது.

யாபேஸ் பிறந்த பொழுது, யூதர்கள் மத்தியிலே ஆவிக்குரிய நிலமை சீரழிந்துபோயிற்று. யூதர்கள் மத்தியிலே கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவர்களுக்கு கர்த்தரிடத்தில் பக்தியுமில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் பாவமும், அக்கிரமமும், துன்மார்க்கமும் நிரம்பியிருக்கிறது. பொல்லாத உலகத்தார் மத்தியிலே, தன்னுடைய குமாரனை கர்த்தருக்கு பிரியமுள்ளவனாகவும், பிரயோஜனமுள்ளவனாகவும் வளர்க்க வேண்டுமே என்னும் பாரம் யாபேசின் தாயாருக்கு உண்டாயிற்று.

யாபேஸ் வளரும்போது, அவர் துன்மார்க்கர் மத்தியிலே வளரவேண்டும். ஆனாலும் அவர் துன்மார்க்கருடைய பாவங்களிலே பங்காளியாகிவிடக்கூடாது. அவர் கர்த்தருக்கு பரிசுத்தமானவராய் வளரவேண்டும். யாபேசுக்கு போராட்டங்களும், உபத்திரவங்களும் வரலாம். அவர் கண்ணீர் பள்ளத்தாக்கின் வழியாக கடந்துபோகவேண்டியதும் வரலாம். இதையெல்லாம் நினைத்துப் பார்த்து அவள் தன் குமாரனுக்கு "யாபேஸ்" என்று பேரிடுகிறாள்.

யாபேஸ் தன் தாயாரை நேசிக்கவேண்டும். அவளை கனம்பண்ணவேண்டும். யாபேசின் தாயார் மிகுந்த வருத்தத்தோடும் பாரத்தோடும் தன்னுடைய பிள்ளையை வளர்த்து ஆளாக்கியிருக்கிறாள். தன்னுடைய தாயார் தனக்கு செய்த நன்மைகளையும், உதவிகளையும், தியாகங்களையும் யாபேஸ் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. யாபேஸ் தன்னுடைய ஒவ்வொரு வார்த்தையிலும், கிரியையிலும் தன்னுடைய தாயாருக்கு நன்றியுள்ளவராயிருக்க வேண்டும். யாபேஸ் தன் தாயாருக்கு ஆறுதலாயிருக்கவேண்டும்.

யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம்பெற்றவராயிருக்கிறார். அவர் வேதப்பிரமாணங்களைக் கற்று அறிந்திருக்கிறார். கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருக்கிறார். மனுஷர் மத்தியிலே நீதிமானாய் ஜீவிக்கிறார்.

"யாபேசில் குடியிருந்த கணக்கரின் வம்சங்கள்" (நாளா 2:55) என்று யாபேசின் பட்டணத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணம் யாபேசின் பெயரால் பெயரிடப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டணத்தில் கல்வியறிவு மிகுந்த கணக்கர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தையும் கற்று தேர்ச்சி பெற்றவர்கள்.

யாபேஸ் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருக்கிறார். அவர் தேவனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார். யாபேசுக்கு பல பிரச்சனைகளும், பல தேவைகளும் இருந்தாலும், அதை அவர் மனுஷரிடத்தில் சொல்லாமல் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

யாபேசு தன்னுடைய வழிகளிலெல்லாம் கர்த்தரை நினைவுகூருகிறார். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலுக்கும், அவருடைய பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும், யாபேஸ் தன்னை ஒப்புக்கொடுக்கிறார். தேவனுடைய தெய்வீக ஆசீர்வாதம் யாபேசின்மீது தங்கியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையினால் யாபேஸ் செழித்திருக்கிறார்.

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி வேண்டிக்கொள்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். யாக்கோபு கர்த்தரோடு போராடி ஜெபித்து ஜெயம் பெற்றார். அதன்பின்பு யாக்கோபு இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டார்.

யாபேசின் ஜெபம் மிகவும் சுருக்கமானது. யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி, "தேவரீர் என்னை ஆசீர்வதியும்" என்று வேண்டிக்கொள்கிறார்.

யாபேஸ் சொல்லுகிற ஜெபவார்த்தைகள், ஒரு பொருத்தனையின் வார்த்தைகளாகும். யாபேஸ் தேவனை நோக்கி, "தேவரீர் என்னை ஆசீர்வதித்தால்" என்று நிபந்தனையோடு ஜெபம்பண்ணுகிறார். "தேவரீர் என்னை ஆசீர்வதித்தால், அப்போது நீர் என் தேவனாயிருப்பீர்" என்று பொருள்படுமாறு யாபேஸ் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

கர்த்தர் யாபேசின் தேவனாயிருக்கும்போது, அவர் தமக்கு சித்தமானதை யாபேசுக்கு செய்வார். தேவனுடைய சித்தமும், திட்டமும் யாபேசின் ஜீவியத்தில் நிறைவேறும். கர்த்தர் தமக்கு பிரியமானதை யாபேசுக்கு செய்வார்.

யாபேஸ் தேவனை நோக்கி, "தேவரீர் என்னை ஆசீர்வதியும்" என்று வேண்டிக்கொள்ளும்போது, "தேவரீர் நீர் என்னை ஆசீர்வதித்தால், நீர் என்னைப் பாதுகாத்துக்கொண்டால், உமக்கு சித்தமானதையும், பிரியமானதையும் எனக்குச் செய்யும். நான் உம்முடைய கட்டளைக்கு எப்போதும் கீழ்ப்படிந்திருப்பேன்" என்று பொருள்படுமாறு வேண்டிக்கொள்கிறார்.

யாபேஸ் தேவனை நோக்கி "தேவரீர் என்னை ஆசீர்வதியும்" என்று வேண்டிக்கொள்ளும்போது, யாபேசுக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள நெருக்கமும், ஐக்கியமும், நேசமும் வெளிப்படுகிறது. யாபேஸ் தன்னுடைய வாஞ்சையையும், இருதயத்தின் விருப்பத்தையும் தேவனிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

யாபேஸ் கர்த்தரிடத்தில் நான்கு காரியங்களை வேண்டிக்கொள்கிறார். அவையாவன: 1. "தேவரீர் என்னை ஆசீர்வதியும்". இந்த வாக்கியத்திற்கு, "தேவரீர் என்னை உம்முடைய ஆசீர்வாதங்களினால் நிரப்பும்" என்றும், "என்னைப் பலமடங்கு ஆசீர்வதியும்" என்றும், "உம்முடைய திரளான ஆசீர்வாதங்களினால் என்னை நிரப்பும்" என்றும் பொருள் சொல்லலாம்.

யாபேஸ் தேவனை நோக்கி, "என் எல்லையை பெரிதாக்கும்" என்று வேண்டிக்கொள்கிறார். யாபேசின் பெயருக்கு சீட்டுப்போடப்பட்டு அவருக்கு சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே யாபேசின் சுதந்தரவீதம். அதற்கு எல்லைகளும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

யாபேஸ் தன்னுடைய சுதந்தரவீதத்தின் எல்லையை பெரிதாக்குமாறு தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறார். கடினமான உழைப்பின் மூலமாகவோ அல்லது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம் செய்தோ, தன்னுடைய சுதந்தரத்தின் எல்லை பெரிதாகவேண்டுமென்று யாபேஸ் விரும்புகிறார். கர்த்தர் தன்னுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கவேண்டும் என்பது யாபேசின் விருப்பம்.

யாபேஸ் தேவனை நோக்கி, "உமது கரம் என்னோடிருப்பதாக" என்று வேண்டிக்கொள்கிறார். கர்த்தருடைய கரம் நம்மோடு கூடயிருக்கும்போது, அவருடைய கரம் நம்மை வழிநடத்தும், நம்மைப் பாதுகாக்கும், நம்மைப் பலப்படுத்தும். கர்த்தருடைய கரம் நமக்காகவும், நமக்குள்ளும் எல்லா கிரியைகளையும் செய்யும். கர்த்தருடைய கரம் நமக்குப் போதுமானதாயிருக்கும்.

யாபேஸ் தேவனை நோக்கி, "தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கி காத்தருளும்" என்று வேண்டிக்கொள்கிறார். தீங்கு என்பது பாவத்தின் தீங்கு, சத்துருக்கள் மூலமாக வரும் தீங்கு, சத்துருக்களின் சதிஆலோசனைகள் மூலமாகவும், சதித்திட்டங்கள் மூலமாகவும் வரும் தீங்கு என்று பொருள் சொல்லலாம். இந்தத் தீங்குகள் எல்லாம் யாபேசை சேதப்படுத்தும், அவரைத் துக்கப்படுத்தும். ஆகையினால் தீங்கு தன்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு, தேவன் தாமே அந்தத் தீங்குகளுக்கு தன்னை விலக்கிக் காத்தருள வேண்டுமென்று, யாபேஸ் தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டதை, தேவன் அவருக்கு அருளுகிறார். தேவன் யாபேசை ஆசீர்வதிக்கிறார். அவருடைய எல்லையைப் பெரிதாக்குகிறார். யாபேஸ் அதிகமாக செழித்திருக்கிறார். யாபேசின் பிரயாசங்களில் எல்லாம் அவருக்கு ஜெயமுண்டாயிற்று. ஆவிக்குரிய காரியங்களிலும், உலகப்பிரகாரமான காரியங்களிலும் யாபேஸ் செழித்திருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தைகளைப்பற்றிய அறிவு யாபேசிடத்தில் அதிகமாய்க் காணப்படுகிறது. யாபேஸ் கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். இந்த யுத்தத்திலே தேவன் யாபேசுக்கு ஜெயத்தைக் கட்டளையிட்டார். யாபேஸ் கானானியரை முறியடித்தார்.

காலேப்
1நாளா 4:11-20

1நாளா 4:11. சூகாவின் சகோதரனாகிய கேலூப் மேகீரைப் பெற்றான்; இவன் எஸ்தோனின் தகப்பன்.

1நாளா 4:12. எஸ்தோன் பெத்ராபாவையும், பசேயாகையும், இர்நாகாஷின் தகப்பனாகிய தெகினாகையும் பெற்றான்; இவர்கள் ரேகாவூர் மனுஷர்.

1நாளா 4:13. கேனாசின் குமாரர், ஒத்னியேல், செராயா என்பவர்கள்; ஒத்னியேலின் குமாரரில் ஒருவன் ஆத்தாத்.

1நாளா 4:14. மெயோனத்தாய் ஒபிராவைப் பெற்றான்; செராயா கராஷீமன் பள்ளத்தாக்குக்கு மூப்பனாகிய யோவாபைப் பெற்றான்; அவர்கள் தொழிலாளிகளாயிருந்தார்கள்.

1நாளா 4:15. எப்புன்னேயின் குமாரனாகிய காலேபின் குமாரர், ஈரு, ஏலா, நாகாம்; ஏலாவின் குமாரரில் ஒருவன் கேனாஸ்.

1நாளா 4:16. எகலெலேலின் குமாரர், சீப், சீப்பா, திரியா, அசாரெயேல்.

1நாளா 4:17. எஸ்றாவின் குமாரர், யெத்தேர், மேரேத், ஏப்பேர், யாலோன்; மேரேத்தின் பெண்ஜாதி மிரியாமையும், சம்மாயியையும், எஸ்தெமோவா ஊருக்கு மூப்பனான இஸ்பாவையும் பெற்றான்.

1நாளா 4:18. அவன் பெண்ஜாதியாகிய எகுதியாள், கேதோரின் தகப்பனாகிய யாரேதையும், சோக்கோவின் தகப்பனாகிய ஏபேரையும், சனோவாவின் தகப்பனாகிய எக்குத்தியேலையும் பெற்றாள்; மேரேத் விவாகம் பண்ணின பார்வோனின் குமாரத்தியாகிய பித்தியாவின் குமாரர் இவர்களே.

1நாளா 4:19. நாகாமின் சகோதரியாகிய ஒதியாவினுடைய பெண்ஜாதியின் குமாரர், கர்மியனாகிய ஆபிகேயிலாவும், மாகாத்தியனாகிய எஸ்தெமோவாவுமே.

1நாளா 4:20. ஷீமோனின் குமாரர், அம்னோன், ரின்னா, பென்கானான், தீலோன் என்பவர்கள், இஷியின் குமாரர், சோகேதும் பென்சோகேதுமே.

காலேப் எப்புன்னேயின் குமாரன். கானான் தேசத்திற்குள் வேவுகாரராகப் போன பன்னிரண்டு பேரில் காலேபும் ஒருவர். காலேபினுடைய வம்சத்தில் 37 சந்ததியாரைப் பற்றி இங்கு கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 4:15-20).

"எகுதியாள்" என்பவள் வம்ச வரலாற்றில் கூறப்பட்டிருக்கும் மற்றொரு ஸ்திரீ. இவளுடைய மறுபெயர் பித்தியாள். இவள் பார்வோனின் குமாரத்தி. யூதமார்க்கத்திற்கு இவள் மாறினாள். பித்தியாள் என்னும் பெயருக்கு "கர்த்தருடைய குமாரத்தி" என்று பொருள். எகுதியாள் என்னும் பெயருக்கு "யூதஸ்திரீ" என்று பொருள். எகிப்து தேசத்தில் பிறந்தவள் கர்த்தரை ஆராதிக்கிறாள்.

மேரேத் என்பவன் பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணியதினால் அக்காலத்தில் இவனும் பிரபல்யமானவனாக இருந்திருக்க வேண்டும்.

காலேபின் சந்ததியார் எல்லோரும் தொழிலாளிகளாயிருக்கிறார்கள். மற்ற தேசங்களில் தொழிலாளர்கள் இருந்தாலும், காலேபின் சந்தியில் வந்திருக்கிறவர்கள், எல்லா தொழில்களிலும் மிகுந்த திறமையுள்ளவர்களாகவும், நிபுணர்களாகவும் இருக்கிறார்கள். கேனாஸ் என்னும் பெயருக்கு "வேட்டையாடுதல்" என்று பொருள். கேனாசின் குமாரர் எல்லோருமே தொழிலாளிகள். இவர்கள் தொழிலாளிகளின் பள்ளத்தாக்கில் குடியிருந்தார்கள்.

சேலாகு
1நாளா 4:21-23

1நாளா 4:21. யூதாவின் குமாரனாகிய சேலாகின் புத்திரர்: லேக்காவூர் மூப்பனான ஏரும், மரேசாவூர் மூப்பனான லாதாகும், மெல்லிய புடவை நெய்த அஸ்பெயா வீட்டு வம்சங்களும்,

1நாளா 4:22. யோக்கீமும், கோசேபாவின் மனுஷரும், மோவாபியரை ஆண்ட யோவாஸ், சாராப் என்பவர்களும், யசுபிலெகேமுமே; இவைகள் பூர்வகாலத்தின் செய்திகள்.

1நாளா 4:23. இவர்கள் குயவராயிருந்து, நெத்தாயிமிலும் கெதேராவிலும் குடியிருந்தார்கள்; ராஜாவின் வேலையை விசாரிக்கிறதற்கு அங்கே வாசம்பண்ணினார்கள்.

சேலாகின் புத்திரர் மெல்லிய புடவையை நெய்யக்கூடிய திறமையுள்ளவர்கள். யூதாதேசத்திலே அஸ்பெயா வீட்டு வம்சத்தைச் சேர்ந்தவர்களே மெல்லிய புடவையை நெய்யக்கூடிய திறமைசாலிகளாயிருந்தார்கள். இவர்கள் இந்தத் தொழில் திறமையை தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தார்கள். அஸ்பெயாவின் வீட்டு வம்சத்தார், சந்ததி பரம்பரையாக மெல்லிய புடவையை நெய்யும் தொழிலை செய்து வருகிறவர்கள்.

அஸ்பெயா வீட்டு வம்சத்தார் மரேசா ஊரிலே வாசம்பண்ணினார்கள். இவர்கள் ராஜாக்களுக்கும், ஆசாரியர்களுக்கும் தேவையான மெல்லிய வஸ்திரங்களை நெய்து கொடுத்தார்கள்.

சேலாகின் சந்ததியைச் சேர்ந்தவர்களில் சிலர் குயவராயிருந்து, ஜனங்களுக்குத் தேவையான மண்பாண்டங்களை செய்து கொடுத்தார்கள். இவர்களெல்லோரும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள்.

தாவீதின் காலத்திலே இவர்கள் மோவாபியரை அடக்கி அவர்களை ஆளுகை செய்தார்கள். சேலாகின் சந்ததியார் மோவாபியரை துரத்திவிட்டு, அந்த ஸ்தலங்களிலே குடியேறினார்கள். ஆனால் சேலாகின் சந்ததியார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே இருக்கிறார்கள். பாபிலோன் தேசத்தில் இவர்கள் குயவர்களாகவும், தோட்ட வேலை செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் பாபிலோன் தேசத்து ராஜாவின் வேலையை விசாரிக்கிறதற்கு அங்கே வாசம்பண்ணுகிறார்கள்.

சேலாகின் வம்சத்தார் பாபிலோன் தேசத்திலே அடிமைகளாகயிருந்தாலும், அவர்கள் அங்கே வசதியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்து ராஜாவின் வேலையை விசாரிப்பதினால், அந்தத் தேசத்திலே அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாயிருக்கிறது. அவர்களுக்கு முக்கியத்துவமும் இருக்கிறது. ஆகையினால் சேலாகின் சந்ததியார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வரவில்லை. அவர்கள் பாபிலோன் தேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள்.

சிமியோனின் குமாரர்
1நாளா 4:24-33

1நாளா 4:24. சிமியோனின் குமாரர், நெமுவேல், யாமின், யாரீப், சேரா, சவுல் என்பவர்கள்.

1நாளா 4:25. இவன் குமாரன் சல்லூம்; இவன் குமாரன் மிப்சாம்; இவன் குமாரன் மிஸ்மா.

1நாளா 4:26. மிஸ்மாவின் குமாரரில் ஒருவன் அம்முவேல்; இவன் குமாரன் சக்கூர்; இவன் குமாரன் சீமேயி.

1நாளா 4:27. சீமேயிக்குப் பதினாறு குமாரரும் ஆறு குமாரத்திகளும் இருந்தார்கள்; அவன் சகோதரருக்கு அநேகம் பிள்ளைகள் இருந்ததில்லை; அவர்கள் வம்சமெல்லாம் யூதாவின் புத்திரரைப்போலப் பெருகினதுமில்லை.

1நாளா 4:28. அவர்கள் பெயெர்செபாவிலும், மொலாதாவிலும், ஆத்சார்சூவாவிலும்,

1நாளா 4:29. பில்லாவிலும், ஏத்சாமிலும், தோலாதிலும்,

1நாளா 4:30. பெத்தூவேலிலும், ஓர்மாவிலும், சிக்லாகிலும்,

1நாளா 4:31. பெத்மர்காபோத்திலும் ஆத்சார் சூசிமிலும், பெத்பிரீயிலும், சாராயிமிலும் குடியிருந்தார்கள்; தாவீது ராஜாவாகு மட்டும் இவைகள் அவர்கள் பட்டணங்களாயிருந்தது.

1நாளா 4:32. அவர்களுடைய பேட்டைகள், ஏத்தாம், ஆயின், ரிம்மோன், தோகேன், ஆசான் என்னும் ஐந்து பட்டணங்கள்.

1நாளா 4:33. அந்தப் பட்டணங்களைச் சுற்றிலும், பாகால்மட்டுமுள்ள அவர்களுடைய எல்லாப் பேட்டைகளும், அவர்கள் வாசஸ்தலங்களும், அவர்களுடைய வம்ச அட்டவணையும் இவைகளே.

சிமியோன் என்னும் பெயருக்கு "கேட்பது" என்று பொருள். இவன் யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த இரண்டாவது குமாரன்.

யூதாவின் தென்பகுதியில் சிமியோன் தன் சுதந்தர வீதத்தைப் பெற்றுக் கொண்டான். சிமியோனின் குமாரரைப் பற்றி 20 வசனங்களில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 4:24-43) ஆனால் யூதாவின் குமாரரைப் பற்றியோ 100 வசனங்களில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. (1நாளா 2:3- 4:23).

சீமேயிக்குப் பதினாறு குமாரரும் ஆறு குமாரத்திகளும் இருந்தார்கள். சீமேயிக்கு மொத்தம் 22 பிள்ளைகள். இவனுடைய மற்ற சகோதரரைவிட இவனுக்கு அதிகம் பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள். ஆனாலும் சிமியோன் புத்திரர் யூதாவின் புத்திரரைப் போல அதிகமாகப் பலுகிப்பெருகவில்லை.

"தாவீது ராஜாவாகுமட்டும்" என்று 1நாளா 4:31-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தில் மட்டுமே 1நாளா 4:24-33 ஆகிய வசனங்களின் காலஅளவு குறிப்பிடப் பட்டிருக்கிறது. இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்களெல்லாம் தாவீதின் காலத்துக்கு முந்தினோரும் அல்லது தாவீதின் காலத்தவரும் ஆவார்கள்.

சிமியோன் வம்சத்தார் பலுகிப்பெருகினார்கள். ஆனாலும் அவர்கள் யூதாவின் புத்திரரைப்போல பலுகிப்பெருகவில்லை. சிமியோன் புத்திரருக்கு பங்குவீதமாகக் கொடுக்கப்பட்ட பட்டணங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

"இரண்டாம் சீட்டு சிமியோனுக்கு விழுந்தது; சிமியோன் புத்திரரின் கோத்திரத்திற்கு அவர்கள் வம்சங்களின்படி கிடைத்த சுதந்தரம், யூதா புத்திரருடைய சுதந்தரத்தின் நடுவே இருக்கிறது" (யோசு 19:1).

தாவீது சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் ராஜாவாயிருந்த காலம் வரையிலும், சிமியோன் புத்திரர் இந்தப் பட்டணங்களில் குடியிருந்தார்கள். பத்துக்கோத்திரத்தார் தாவீதின் வீட்டாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி பிரிந்து சென்றபோது, சிமியோன் புத்திரர் தங்கள் பட்டணங்களை விட்டு வெளியேறி விட்டார்கள். இந்தப் பட்டணங்களெல்லாம் தெற்கு யூதாதேசத்தின் எல்லைக்குட்பட்ட நிலத்திலிருக்கிறது.

சிமியோனின் பிரபுக்கள் 1நாளா 4:34-43

1நாளா 4:34. மெசோபாபும், யம்லேகும், அமத்சியாவின் குமாரன் யோஷாவும்,

1நாளா 4:35. யோவேலும், ஆசியேலின் மகன் செராயாவுக்குப் பிறந்த யோசிபியாவின் குமாரன் ஏகூவும்,

1நாளா 4:36. எலியோனாயும், யாக்கோபாவும், யெசொகாயாவும், அசாயாவும், ஆதியேலும், யெசிமியேலும், பெனாயாவும்,

1நாளா 4:37. செமாயா பெற்ற சிம்ரியின் மகன் யெதாயாவுக்குப் பிறந்த அல்லோனின் புத்திரனாகிய சீப்பியின் குமாரன் சீசாவும் என்று,

1நாளா 4:38. பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் தங்கள் வம்சங்களில் பிரபுக்களாயிருந்தார்கள்; இவர்கள் பிதாக்களின் வீட்டார் ஏராளமாய்ப் பரம்பினார்கள்.

1நாளா 4:39. தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சலைத் தேடும்படிக்கு தேதோரின் எல்லையாகிய பள்ளத்தாக்கின் கீழ்ப்புறமட்டும் போய்,

1நாளா 4:40. நல்ல செழிப்பான மேய்ச்சலையும், அமரிக்கையும், சுகமுமுள்ள விஸ்தாரமான தேசத்தையும் கண்டுபிடித்தார்கள்; பூர்வத்திலே காமின் சந்ததியார் அங்கே குடியிருந்தார்கள்.

1நாளா 4:41. பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களிலே அங்கே போய், அங்கே கண்டுபிடித்தவர்களின் கூடாரங்களையும் தாபரங்களையும் அழித்து, இந்நாளிலே இருக்கிறதுபோல, அவர்களைச் சங்காரம்பண்ணி, அங்கே தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சல் இருந்தபடியினால், அவர்கள் அந்த ஸ்தலத்திலே குடியேறினார்கள்.

1நாளா 4:42. சிமியோனின் புத்திரராகிய இவர்களில் ஐந்நூறு மனுஷரும், அவர்கள் தலைமைக்காரராகிய இஷியின் குமாரரான பெலத்தியாவும், நெகரியாவும், ரெப்பாயாவும், ஊசியேலும், சேயீர் மலைத்தேசத்திற்குப் போய்,

1நாளா 4:43. அமலேக்கியரில் தப்பி மீதியாயிருந்தவர்களை மடங்கடித்து, இந்நாள் வரைக்கும் இருக்கிறபடி அங்கே குடியேறினார்கள்.

சிமியோனின் வம்சத்தில் வந்த இருபத்திரண்டு பிரபுக்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களிலே செழிப்படைந்தார்கள்.

1நாளா 4:34-43 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறவர்கள் தாவீதிற்குப் பின்பு வந்த சந்ததியாராவர். (1நாளா 4:31,41)

பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் தங்கள் வம்சங்களில் பிரபுக்களாயிருந்தார்கள்; இவர்களுடைய பிதாக்களின் வீட்டார் ஏராளமாய்ப் பரம்பினார்கள். தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சலைத் தேடும்படிக்கு தேதோரின் எல்லையாகிய பள்ளத்தாக்கின் கீழ்ப்புறமட்டும் போய், நல்ல செழிப்பான மேய்ச்சலையும், அமரிக்கையும், சுகமுமுள்ள விஸ்தாரமான தேசத்தையும் கண்டுபிடித்தார்கள்; பூர்வத்திலே காமின் சந்ததியார் அங்கே குடியிருந்தார்கள் (1நாளா 4:38-40).

எசேக்கியா ராஜாவின் காலத்திலே, சிமியோன் புத்திரர் மறுபடியும் பலப்பட்டார்கள். இவர்களில் அநேகர் அரபியா தேசத்திற்கு விரோதமாக யுத்தம்செய்து, அரபியரை முறியடித்து, அங்கே குடியேறினார்கள். அந்தப் பட்டணங்களை தேதோரின் எல்லையாகிய பள்ளத்தாக்கு என்று அழைத்துக்கொண்டார்கள். எசேக்கியா கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாயிருந்தான். அவனுடைய தேசம் செழித்திருந்தது.

பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களிலே அங்கே போய், அங்கே கண்டுபிடித்தவர்களின் கூடாரங்களையும் தாபரங்களையும் அழித்து, இந்நாளிலே இருக்கிறதுபோல, அவர்களைச் சங்காரம்பண்ணி, அங்கே தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சல் இருந்தபடியினால், அவர்கள் அந்த ஸ்தலத்திலே குடியேறினார்கள் (1நாளா 4:41).

"பூர்வகாலத்தில் காமின் சந்ததியார் அங்கே குடியிருந்தார்கள்" (1நாளா 4:40) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலிருந்து இவர்களை யார், எப்போது துரத்தினார்கள் என்று தெரியவில்லை. இக்காலத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் கானானைச் சுதந்தரித்த காலம் வரையிலும் இந்தப் பகுதியில் இராட்சதர்கள் குடியிருந்தார்கள்.

ஒருவேளை இந்த இராட்சதரே காமின் சந்ததியாரை இந்தத் தேசத்தைவிட்டு துரத்தியிருக்க வேண்டும். இங்கே தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சல் இருந்தபடியினால், சிமியோனியர் அந்த ஸ்தலத்திலே குடியேறினார்கள். (1நாளா 4:41).

எசேக்கியாவின் நாட்களில் சிமியோனியர் அங்கு போய் குடியேறினார்கள். அவர்கள் "இந்நாளில் இருக்கிறதுபோல" அங்கு இருக்கிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் நாளாகமம் புஸ்தகம் எசேக்கியாவின் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும் (1நாளா 4:41-43).

சிமியோனின் புத்திரராகிய ஐநூறு மனுஷரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் அமலேக்கியரில் தப்பி மீதியாயிருந்தவர்களை மடங்கடித்தார்கள். அமலேக்கியரை முழுவதுமாகச் சங்காரம் பண்ணவேண்டும். ஆனாலும் அவர்களில் சிலர் தப்பித்துக் கொண்டார்கள். 1சாமு 15 ஆவது அதிகாரத்தின் காலத்தில் அமலேக்கியர் முழுவதுமாக அழிக்கப்படவில்லை. (1சாமு 27:8; 1சாமு 30:1; 2சாமு 8:12; எஸ் 3:1).

யோர்தானுக்கு அக்கரையிலே இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார் வாசம்பண்ணுகிறார்கள். ரூபன் கோத்திரத்தார் (நாளா 5:1-10). காத் கோத்திரத்தார் (நாளா 5:11-17). மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் (நாளா 5:23,24).

யோர்தானுக்கு அக்கரையிலே குடியிருக்கிற, இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாரும் கூட்டாக இணைந்து ஆகாபியரை முறியடிக்கிறார்கள் (நாளா 5:18-22).

இரண்டரைக் கோத்திரத்தாரும் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அசீரியாவின் ராஜா அவர்களைச் சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போகிறான் (நாளா 5:25,26).

ரூபன்

1நாளா 5:1,2

1நாளா 5:1. ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன்; ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது.

1நாளா 5:2. யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டானது; ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.

ரூபன் என்னும் பெயருக்கு "ஒரு குமாரனைப் பெற்றேன்" என்று பொருள். யாக்கோபு, லேயாள் ஆகியோருக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன். (ஆதி 29:32). வேதாகமத்தில் 74 இடங்களில் ரூபனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

ரூபன் சேஷ்டபுத்திரனாக இருந்தபோதிலும் அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இதற்கு ரூபனின் பாவமே காரணம். நாளாகமம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் வம்சவரலாற்றில் ரூபனைப் பற்றி முதலாவதாகக் கூறப்படவில்லை.

யூதா ராஜ்யபாரம் பண்ணும் உரிமையைச் சுதந்தரிக்கிறது. (நாளா 5:2; ஆதி 49:10) சேஷ்டபுத்திர ஆசீர்வாதங்களை யோசேப்பு பெற்றுக் கொள்கிறான் (நாளா 5:2).

ரூபனின் குமாரரைப் பற்றி 10 வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. யூதாவின் குமாரரைப் பற்றி 100 வசனங்களிலும், (நாளா 2:3-4:23) சிமியோன் குமாரரைப் பற்றி 22 வசனங்களிலும் (நாளா 4:24-43) கூறப்பட்டிருக்கிறது.

ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன். இவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினான். ஆகையினால் இவனுக்கு சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் கொடுக்கப்படவில்லை.

"தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே" (ஆதி 49:4).

சேஷ்டபுத்திர ஆசீர்வாதத்தின்படி இரட்டிப்பான பங்கு கிடைக்கும். ஆனால் ரூபனுக்கு இரட்டிப்பான பங்கு கிடைக்கவில்லை. சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று. எப்பிராயீம், மனாசே ஆகிய இரண்டு கோத்திரத்தாரும், யோசேப்பின் சந்ததியிலிருந்து வருகிறார்கள்.

யாக்கோபு விசுவாசத்தினால் எப்பிராயீமையும், மனாசேயையும் ஆசீர்வதிக்கிறார்.

"விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்" (எபி 11:21).

"அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர், இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என் பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள் என்றான்" (ஆதி 48:15,16)

5 அதிகாரம்

யோர்தானுக்கு அக்கரையிலே இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார் வாசம்பண்ணுகிறார்கள். ரூபன் கோத்திரத்தார் (நாளா 5:1-10). காத் கோத்திரத்தார் (நாளா 5:11-17). மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் (நாளா 5:23,24).

யோர்தானுக்கு அக்கரையிலே குடியிருக்கிற, இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாரும் கூட்டாக இணைந்து ஆகாபியரை முறியடிக்கிறார்கள் (நாளா 5:18-22).

இரண்டரைக் கோத்திரத்தாரும் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அசீரியாவின் ராஜா அவர்களைச் சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போகிறான் (நாளா 5:25,26).

ரூபன்

1நாளா 5:1,2

1நாளா 5:1. ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன்; ஆனாலும் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினபடியினால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாக எண்ணப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது.

1நாளா 5:2. யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டானது; ஆகிலும் சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.

ரூபன் என்னும் பெயருக்கு "ஒரு குமாரனைப் பெற்றேன்" என்று பொருள். யாக்கோபு, லேயாள் ஆகியோருக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன். (ஆதி 29:32). வேதாகமத்தில் 74 இடங்களில் ரூபனைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

ரூபன் சேஷ்டபுத்திரனாக இருந்தபோதிலும் அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்தரம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இதற்கு ரூபனின் பாவமே காரணம். நாளாகமம் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் வம்சவரலாற்றில் ரூபனைப் பற்றி முதலாவதாகக் கூறப்படவில்லை.

யூதா ராஜ்யபாரம் பண்ணும் உரிமையைச் சுதந்தரிக்கிறது. (நாளா 5:2; ஆதி 49:10) சேஷ்டபுத்திர ஆசீர்வாதங்களை யோசேப்பு பெற்றுக் கொள்கிறான் (நாளா 5:2).

ரூபனின் குமாரரைப் பற்றி 10 வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. யூதாவின் குமாரரைப் பற்றி 100 வசனங்களிலும், (நாளா 2:3-4:23) சிமியோன் குமாரரைப் பற்றி 22 வசனங்களிலும் (நாளா 4:24-43) கூறப்பட்டிருக்கிறது.

ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன். இவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டுப்படுத்தினான். ஆகையினால் இவனுக்கு சேஷ்டபுத்திர ஆசீர்வாதம் கொடுக்கப்படவில்லை.

"தண்ணீரைப்போல தளம்பினவனே, நீ மேன்மை அடையமாட்டாய்; உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; நீ அதைத் தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் ஏறினானே" (ஆதி 49:4).

சேஷ்டபுத்திர ஆசீர்வாதத்தின்படி இரட்டிப்பான பங்கு கிடைக்கும். ஆனால் ரூபனுக்கு இரட்டிப்பான பங்கு கிடைக்கவில்லை. சேஷ்டபுத்திர சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று. எப்பிராயீம், மனாசே ஆகிய இரண்டு கோத்திரத்தாரும், யோசேப்பின் சந்ததியிலிருந்து வருகிறார்கள்.

யாக்கோபு விசுவாசத்தினால் எப்பிராயீமையும், மனாசேயையும் ஆசீர்வதிக்கிறார்.

"விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்" (எபி 11:21).

"அவன் யோசேப்பை ஆசீர்வதித்து: என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் வழிபட்டு வணங்கிய தேவனும், நான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த தேவனும், எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி என்னை மீட்ட தூதனுமானவர், இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிப்பாராக, என் பேரும் என் பிதாக்களாகிய ஆபிரகாம் ஈசாக்கு என்பவர்களின் பேரும் இவர்களுக்கு இடப்படக்கடவது; பூமியில் இவர்கள் மிகுதியாய்ப் பெருகக்கடவர்கள் என்றான்" (ஆதி 48:15,16)

"பின்பு, இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: இதோ, நான் மரணமடையப் போகிறேன்; தேவன் உங்களோடே இருப்பார்; அவர் உங்கள் பிதாக்களின் தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணுவார் என்றும், உன் சகோதரருக்குக் கொடுத்ததைப்பார்க்கிலும், நான் என் பட்டயத்தாலும், என் வில்லினாலும், எமோரியர் கையிலிருந்து சம்பாதித்த ஒரு நிலத்தை உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன் என்றும் சொன்னான்" (ஆதி 48:21,22).

யூதா தன் சகோதரரிலே பலத்ததினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டாயிற்று.

"யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்துகொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்? சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி 49:9,10).

யூதாகோத்திரத்திலே தாவீது ராஜாவும், அதன் பின்பு காலம் நிறைவேறினபோது, யூதராஜசிங்கமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் வருகிறார்கள்.

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா 5:2).

ரூபனின் கோத்திரங்கள் 1நாளா 5:3-8

1நாளா 5:3. இஸ்ரவேலின் முதற்பேறான ரூபனின் குமாரர் ஆனோக்கு, பல்லூ, எஸ்ரோன், கர்மீ என்பவர்கள்.

1நாளா 5:4. யோவேலின் குமாரரில் ஒருவன் செமாயா; இவன் குமாரன் கோக்; இவன் குமாரன் சிமேயி.

1நாளா 5:5. இவன் குமாரன் மீகா; இவன் குமாரன் ராயா; இவன் குமாரன் பாகால்.

1நாளா 5:6. இவன் குமாரன் பேரா; ரூபனியரின் பிரபுவான இவனை அசீரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசர் சிறைபிடித்துப் போனான்.

1நாளா 5:7. தங்கள் சந்ததிகளின்படியே தங்கள் வம்ச அட்டவணைகளில் எழுதப்பட்ட அவன் சகோதரரில் தலைவர் ஏயேலும், சகரியாவும்,

1நாளா 5:8. யோவேலின் மகனாகிய சேமாவுக்குப் பிறந்த ஆசாசின் குமாரன் பேலவும்; இவன் சந்ததியார் ஆரோவேரிலும், நேபோமட்டும், பாகால்மெயோன் மட்டும் வாசம்பண்ணினார்கள்.

ரூபனின் கோத்திரங்களில் வந்த பிரபுக்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ரூபனின் குமாரனாகிய ஆனோக்கு முதல், ரூபனின் சந்ததியில் வந்த பதினேழு கோத்திரங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் வரிசையாக சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் கடைசியாக பாகாலின் குமாரன் பேரா என்பவன் பிரபுவாக வருகிறான்.

ரூபனியரின் பிரபுவான பேராவை, அசீரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசர் தன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகிறான்.

இந்தச் சிறையிருப்பு பத்துக் கோத்திரத்தாரின் முதலாவது சிறையிருப்பாகும். (2இராஜா 15:29; ஏசா 9:1) இந்த வசனத்திற்கு முன்பாகக் கூறப்பட்டிருக்கும் வசனங்கள் இந்தச் சிறையிருப்புக்கு முன்பு நடைபெற்றிருக்க வேண்டும்.

ரூபன் புத்திரரின் வெற்றிகள் 1நாளா 5:9,10

1நாளா 5:9. கிழக்கே ஐபிராத்து நதிதொடங்கி வனாந்தரத்தின் எல்லைமட்டும் அவர்கள் வாசம்பண்ணினார்கள்; அவர்கள் ஆடுமாடுகள் கீலேயாத்தேசத்தில் மிகுதியாயிற்று.

1நாளா 5:10. சவுலின் நாட்களில் ஆகாரியரோடு அவர்கள் யுத்தம்பண்ணி, தங்கள் கையால் அவர்கள் விழுந்தபின், அவர்கள் கூடாரங்களிலே கீலேயாத்தின் கீழ்ப்புறமெல்லாம் குடியேறினார்கள்.

ரூபன் கோத்திரத்தார் தங்கள் எல்லைகளை விரிவு பண்ணுகிறார்கள். அவர்கள் திரளாய் பலுகிப் பெருகுகிறார்கள். ரூபன் கோத்திரத்தார் பலுகிப் பெருகுவதோடு, அவர்களுடைய ஆடுமாடுகளும் மிகுதியாயிற்று. ரூபன்புத்திரர் கிழக்கே ஐபிராத்து நதிதொடங்கி வனாந்தரத்தின் எல்லைமட்டும் வாசம் பண்ணுகிறார்கள்.

ரூபன் கோத்திரத்தார் சவுலின் நாட்களில் ஆகாகியரோடு யுத்தம்பண்ணுகிறார்கள்.

ஆகாரியர் என்பவர்கள் ஆகாரின் சந்ததியார் ஆவார்கள். இஸ்மவேல் மூலமாக இந்தச் சந்ததியார் வருகிறார்கள் (1நாளா 5:10,19; ஆதி 16; சங் 83:6). இவர்களுடைய தோல்வியைப் பற்றி 1நாளா 5:18-22 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

ஆகாகியர் கீலேயாத் தேசத்திற்கு அருகாமையிலே குடியிருக்கிறார்கள். ரூபன் புத்திரர் ஆகாகியரை முறியடித்து, அவர்களுடைய தேசத்திலே குடியிருக்கிறார்கள். ரூபன் புத்திரரின் எல்லை விரிவடைகிறது.

காத்தின் புத்திரர் 1நாளா 5:11-17

1நாளா 5:11. காத்தின் புத்திரர் அவர்களுக்கு எதிரே பாசான்தேசத்திலே சல்காமட்டும் வாசம்பண்ணினார்கள்.

1நாளா 5:12. அவர்களில் யோவேல் தலைவனும், சாப்பாம் அவனுக்கு இரண்டாவதுமாயிருந்தான்; யானாயும் சாப்பாத்தும் பாசானில் இருந்தார்கள்.

1நாளா 5:13. அவர்கள் பிதாக்களின் வீட்டாராகிய அவர்கள் சகோதரர், மிகாவேல், மெசுல்லாம், சேபா, யோராயி, யாக்கான், சீகா, ஏபேர் என்னும் ஏழுபேர்.

1நாளா 5:14. இவர்கள் ஊரிக்குப் பிறந்த அபியேலின் குமாரர்; ஊரி என்பவன் யெரோவாவுக்கும், யெரோவா கீலேயாத்துக்கும், கீலேயாத் மிகாவேலுக்கும், மிகாவேல் எசிசாயிக்கும், எசிசாயி யாதோவுக்கும், யாதோ பூசுக்கும் குமாரராயிருந்தவர்கள்.

1நாளா 5:15. கூனியின் குமாரனாகிய அப்தியேலின் மகன் அகி, அவர்கள் பிதாக்களின் வீட்டுத் தலைவனாயிருந்தான்.

1நாளா 5:16. அவர்கள் கீலேயாத்திலிருக்கிற பாசானிலும், அதின் வெளிநிலங்களிலும், சாரோனின் எல்லாப் பேட்டைகளிலும் அவைகளின் கடையந்தரங்கள்மட்டும் வாசம்பண்ணினார்கள்.

1நாளா 5:17. இவர்களெல்லாரும் யூதாவின் ராஜாவாகிய யோதாமின் நாட்களிலும், இஸ்ரவேலின் ராஜாவாகிய யெரொபெயாமின் நாட்களிலும் தங்கள் வம்சத்து அட்டவணைப்படி தொகை ஏற்றப்பட்டார்கள்.

காத் என்னும் பெயருக்கு "சேனை" என்று பொருள். யாக்கோபின் ஏழாவது குமாரன். (ஆதி 30:11). காத்தைப் பற்றி வேதாகமத்தில் 57 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது.

தாவீதின் காலத்தில் காத் என்னும் பெயரில் ஒரு தீர்க்கதரிசி இருந்தான். (1நாளா 21:9-19; 1நாளா 29:29; 1சாமு 22:5; 2சாமு 24:11-19; 2நாளா 29:25) மேலும் காத்தின் பெயரில் ஒரு நதியும் உள்ளது. (2சாமு 24:5).

இந்த வசனப்பகுதியில் காத்தின் சந்ததியாரைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கோபின் குமாரனாகிய காத்திலிருந்து, யூதாவின் ராஜாவாகிய யோதாம் வரையிலும் உள்ளவர்களைப்பற்றி இந்த வசனப்பகுதி வரிசையாகச் சொல்லுகிறது.

காத்தின் குமாரரில் ஏழுபேர் அபியேலின் குமாரர் (1நாளா 5:14,15). இவர்களுடைய வம்சவரலாறு, குமாரனிலிருந்து, அவனுடைய தகப்பனார் வரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 1நாளா 5:4,5 ஆகிய வசனங்களில், வம்சவரலாறு தகப்பனிலிருந்து, அவனுடைய குமாரன் வரையிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கிற நபர்கள் அனைவரும் யோதாமின் நாட்களுக்கும், யெரொபெயாமின் நாட்களுக்கும் முந்தியோர் ஆவர்.

இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார் 1நாளா 5:18-22

1நாளா 5:18. ரூபன் புத்திரரிலும், காத்தியரிலும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிலும் கேடகமும் பட்டயமும் எடுத்து, வில்லெய்து, யுத்தத்திற்குப் பழகி, படைக்குப் போகத்தக்க சேவகர் நாற்பத்துநாலாயிரத்து எழுநூற்று அறுபதுபேராயிருந்தார்கள்.

1நாளா 5:19. அவர்கள் ஆகாரியரோடும், யெத்தூர் நாப்பீஸ் நோதாப் என்பவர்களோடும் யுத்தம்பண்ணுகிறபோது,

1நாளா 5:20. அவர்களோடே எதிர்க்கத் துணை பெற்றபடியினால், ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்; அவர்கள் யுத்தத்திலே தேவனை நோக்கிக் கூப்பிட்டு, அவர்மேல் நம்பிக்கைவைத்தபடியினால் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்.

1நாளா 5:21. அவர்கள் இவர்களுக்கு இருந்த மிருகஜீவன்களாகிய ஐம்பதினாயிரம் ஒட்டகங்களையும், இரண்டுலட்சத்து ஐம்பதினாயிரம் ஆடுகளையும், இரண்டாயிரம் கழுதைகளையும், மனுஷரில் லட்சம்பேர்களையும் பிடித்தார்கள்.

1நாளா 5:22. யுத்தம் தேவனால் நடந்தபடியினால் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள்; தாங்கள் சிறைப்பட்டுப்போகுமட்டும் இவர்களுடைய ஸ்தலத்திலே குடியிருந்தார்கள்.

இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார், யோர்தானுக்கு இக்கரையிலே, கீலேயாத் தேசத்திலே குடியிருக்கிறார்கள். ரூபன் கோத்திரத்தார், காத் கோத்திரத்தார், மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் ஆகியோர் கீலேயாத் தேசத்தில் குடியிருக்கிறவர்கள்.

இவர்களுடைய சுதந்தரவீதம் ஆரம்பத்தில் பாசான் வரையில் மாத்திரமே இருந்தது. அதன் பின்பு இவர்களுடைய செல்வமும், பெலமும் அதிகரித்தது. இவர்கள் வடக்கு திசையில், எர்மோன் வரையிலும் பலுகிப்பெருகினார்கள்.

யோர்தானுக்கு இக்கரையிலே, கீலேயாத் தேசத்திலிருந்த இரண்டரைக் கோத்திரத்தார், ஆகாகியரோடு யுத்தம்பண்ணினார்கள். ஆகாகியர் பிற்காலத்தில் இஸ்மவேலர் என்று அழைக்கப்படுகிறார்கள். இஸ்மவேல் கோத்திரத்தார் அடிமைப்பெண்ணாகிய ஆகாரின் வழியில் வந்தவர்கள்.

கீலேயாத் தேசத்தில் குடியிருக்கிற, இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாரும், ஆகாகியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, அவர்கள் தேவனை நோக்கிக் கூப்பிட்டார்கள். அவர்கள் தேவன்மேல் நம்பிக்கை வைத்தார்கள். கர்த்தர் அவர்களுடைய விண்ணப்பத்தைக் கேட்டருளினார். இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தார் ஆகாகியரை முறியடித்தார்கள். அவர்களுடைய மிருகஜீவன்களை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொண்டார்கள்.

ரூபன் புத்திரரிலும், காத்தியரிலும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிலும் கேடகமும் பட்டயமும் எடுத்து, வில்லெய்து, யுத்தத்திற்குப் பழகி, படைக்குப் போகத்தக்க சேவகர் நாற்பத்துநாலாயிரத்து எழுநூற்று அறுபதுபேராயிருந்தார்கள். இரண்டரைக்கோத்திரத்தாரின் சேனை பெலமுள்ளதாகயிருந்தாலும், அவர்கள் கர்த்தர்மீது நம்பிக்கை வைத்தார்கள். அவர்கள் தங்கள் சுயபலத்தை சார்ந்துகொள்ளாமல், கர்த்தருடைய தெய்வீக பலத்தை சார்ந்துகொண்டார்கள்.

"யூதா ஜனங்கள் திரும்பிப்பார்க்கிறபோது, முன்னும் பின்னும் யுத்தம் நடக்கிறதைக் கண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; ஆசாரியர்கள் பூரிகைகளை முழக்கினார்கள்" *(2நாளா 13:14).*

விசுவாசிகளாகிய நமக்கு ஆவிக்குரிய போராட்டங்கள் உண்டு. நம்முடைய சுயபலத்தின்மேல் நாம் சார்ந்திருக்கக்கூடாது. நாம் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவருடைய தெய்வீக பலத்தை சார்ந்துகொள்ளவேண்டும். விசுவாசத்தோடு ஜெபம்பண்ணும்போது, நமக்கு ஆவிக்குரிய போராட்டங்களில் ஜெயம் கிடைக்கும். ஜெபமே ஜெயம்.

இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தார் ஆகாரியரோடு யுத்தம்பண்ணியபோது கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருந்தார்கள். யுத்தத்தில் வெற்றி கிடைத்த பின்பு அவர்கள் கர்த்தரை மறந்துவிட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். இதனால் அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் அவர்களை சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போனான்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்திருப்பார்களென்றால், அவர்கள் அந்நிய தேசத்தின் சிறையிருப்புக்கு போயிருந்திருக்கமாட்டார்கள் *(1நாளா 5:20,21).* ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் போனார்கள். இதனால் அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குட்பட்டார்கள்.

கீலேயாத் தேசத்தில் குடியிருந்த, இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தார், தில்காத்பில்நேசர் அவர்களை சிறைப்பிடித்து செல்லுமட்டும், தங்களுடைய ஸ்தலத்தில் குடியிருந்தார்கள்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவின் நாட்களில் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசர் வந்து, ஈயோனையும், பெத்மாக்கா என்னும் ஆபேலையும், யனோவாகையும், கேதேசையும், ஆத்சோரையும், கீலேயாத்தையும், கலிலேயாவாகிய நப்தலி தேசமனைத்தையும் பிடித்து, குடிகளைச் சிறையாக அசீரியாவுக்குக் கொண்டுபோனான்" *(2இராஜா 15:29).*

யோர்தானுக்கு கிழக்கு பகுதியில் குடியிருந்த யூதர்கள், மற்ற இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக சிறைப்பிடித்து செல்லப்பட்டார்கள்.

"அப்பொழுது ஜனங்கள் அசீரியா ராஜாவை நோக்கி: நீர் இங்கேயிருந்து அனுப்பி, சமாரியாவின் பட்டணங்களிலே குடியேற்றுவித்த ஜாதிகள் அந்த தேசத்து தேவனுடைய காரியத்தை அறியாதபடியினால், அவர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை அனுப்பினார்; அந்த தேசத்து தேவனுடைய காரியத்தை அவர்கள் அறியாதபடியினால், அவைகள் அவர்களைக் கொன்றுபோடுகிறது என்று சொன்னார்கள்" (2இராஜா 17:26).

மனாசேயின் பராக்கிரமசாலிகள் 1நாளா 5:23,24

1நாளா 5:23. மனாசேயின் பாதிக்கோத்திரத்துப் புத்திரரும் அந்த தேசத்தில் குடியிருந்து, பாசான்தொடங்கிப் பாகால் எர்மோன் மட்டும், செனீர்மட்டும், எர்மோன் பர்வதமட்டும் பெருகியிருந்தார்கள்.

1நாளா 5:24. அவர்கள் தங்கள் பிதாக்களின் வீட்டுத் தலைவராகிய ஏப்பேர், இஷி, ஏலியேல், அஸரியேல், எரேமியா, ஒதாவியா, யாதியேல் என்பவர்கள் பராக்கிரம வீரரான மனுஷரும் பேர்பெற்ற தலைவருமாயிருந்தார்கள்.

மனாசே என்னும் பெயருக்கு "மறக்க வைப்பது" என்று பொருள். வேதாகமத்தில் மனாசேயைப் பற்றி 111 இடங்களில் கூறப்பட்டிருக்கிறது.

யோர்தானின் கிழக்குப் பகுதியில் இருந்த மனாசேயின் பாதிக் கோத்திரத்தாரின் பராக்கிரமசாலிகளைப்பற்றி 1நாளா 5:23-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

முதலாவது சிறையிருப்பு 1நாளா 5:25,26

1நாளா 5:25. அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனுக்குத் துரோகம்பண்ணி, தேவன் அவர்களுக்கு முன்பாக அழித்திருந்த தேசஜனங்களின் தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போனார்கள்.

1நாளா 5:26. ஆகையால் இஸ்ரவேலின் தேவன் அசீரியா ராஜாவாகிய பூலின் ஆவியையும், அசீரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசரின் ஆவியையும் எழுப்பினதினாலே, அவன் ரூபனியரும் காத்தியரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருமாகிய அவர்களைச் சிறைபிடித்து, இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, ஆலாவுக்கும் ஆபோருக்கும் ஆரோவுக்கும் கோசான் ஆற்றங்கரைக்கும் கொண்டுபோனான்.

யோர்தானின் அக்கரையிலே, கீலேயாத் தேசத்தில் குடியிருக்கிற, இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தார் கர்த்தரை விட்டுப்பின்வாங்கிப்போகிறார்கள். விக்கிரகங்களைப் பின்பற்றி அவற்றை பணிந்துகொள்கிறார்கள்.

அவர்கள் தங்கள் பிதாக்களின் தேவனுக்குத் துரோகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு முன்பாக அழித்திருந்த தேசஜனங்களின் தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போகிறார்கள்.

கீலேயாத் தேசத்திலுள்ளவர்கள், தங்கள் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிற அந்நிய தேசத்தாரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். அந்த தேசங்களில் விக்கிரகாராதனை பிரபல்யமாயிருக்கிறது. கீலேயாத் தேசத்திலுள்ள இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாரும் புறஜாதியாரின் விக்கிரகாராதனையைப் பின்பற்றுகிறார்கள்.

விக்கிரகாராதனை கீலேயாத் தேசத்திலே பிரபல்யமாயிற்று. அவர்கள் மூலமாக இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் விக்கிரகாராதனை பரவிற்று. இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைவிட, கீலேயாத் தேசத்தில் குடியிருக்கிற, இரண்டரைக் கோத்திரத்தார், புறஜாதி ஜனங்களுக்கு அருகாமையிலிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தைக் காத்துக்கொள்ளவில்லை. இதனால் அவர்கள் சீக்கிரத்தில் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தேசத்தாரின் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள்.

தம்மைவிட்டு விலகிப்போகிற இஸ்ரவேல் ஜனங்களைவிட்டு கர்த்தரும் விலகிப்போகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கவில்லை.

இஸ்ரவேலின் தேவன் அசீரியா ராஜாவாகிய பூலின் ஆவியையும், அசீரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசரின் ஆவியையும் எழுப்புகிறார்.

அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் ரூபனியரும் காத்தியரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருமாகிய அவர்களைச் சிறைபிடித்து, இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, ஆலாவுக்கும் ஆபோருக்கும் ஆரோவுக்கும் கோசான் ஆற்றங்கரைக்கும் கொண்டுபோகிறான்.

6 அதிகாரம்

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களுக்குள்ளே, லேவி கோத்திரத்தாருக்கு விசேஷித்த முக்கியத்துவமும், கனமும், மேன்மையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் லேவி கோத்திரத்தாருக்கு ஆசாரிய ஊழியத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் லேவியரை தமக்காக வேறுபிரித்திருக்கிறார்.

மோசே லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர். கர்த்தர் மோசேயினிமித்தமாக, லேவிகோத்திரத்தாருக்கு விசேஷித்த மேன்மைகளையும், சிலாக்கியங்களையும் கொடுத்திருக்கலாம்.

லேவி கோத்திரத்தார் (1நாளா 6:1-3). ஆரோனிலிருந்து சிறையிருப்புக்குப்போகும் காலம் வரையிலும், ஆசாரியரின் வம்சவழி (1நாளா 6:4-15). லேவிகோத்திரத்தாரின் மற்ற குடும்பத்தார் (1நாளா 6:16-30).

லேவியரின் ஊழியம் (1நாளா 6:31-48). ஆசாரியரின் ஊழியம் (1நாளா 6:49-53). கானான் தேசத்திலே லேவியருக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்ட பட்டணங்கள் (1நாளா 6:54-81).

லேவியின் குமாரர் 1நாளா 6:1-3

1நாளா 6:1. லேவியின் குமாரர், கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள்.

1நாளா 6:2. கோகாத்தின் குமாரர், அம்ராம், இத்சார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்.

1நாளா 6:3. அம்ராமின் பிள்ளைகள், ஆரோன், மோசே, மிரியாம் என்பவர்கள்; ஆரோனின் குமாரர், நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்கள்.

லேவி என்னும் பெயருக்கு "இணைந்தது" என்று பொருள். இவன் யாக்கோபுக்கும், லேயாளுக்கும் பிறந்த மூன்றாவது குமாரன். வேதாகமத்தில் இவனைப் பற்றி 68 தடவைகள் கூறப்பட்டிருக்கிறது. லேவியர் என்னும் வார்த்தை லேவிக் கோத்திரத்தாரைக் குறிக்கும். இந்த வார்த்தை வேதாகமத்தில் 293 தடவைகள் வந்திருக்கிறது.

லேவியின் குமாரரைப்பற்றி 1நாளா 6-ஆவது அதிகாரம் முழுவதிலுமுள்ள 81 வசனங்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. லேவியரில் மூன்று பெரும்பிரிவுகள் இருக்கிறார்கள். அவர்களுடைய விவரம் வருமாறு :

1. கெர்சோனியர் (1நாளா 6:1,20-21; எண் 3:21-4:27)

2. கோகாத்தியர் (1நாளா 6:1,22-28; எண் 3:27-4:37)

3 மெராரியர் (1நாளா 6:1,29-30; எண் 3:17-4:45; எண் 26:57)

அம்ராம் என்னும் பெயருக்கு "உயர்த்தப்பட்ட ஜனம்" என்று பொருள். இவன் ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோரின் தகப்பன் (1நாளா 6:2-3).

நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் ஆகியோர் ஆரோனின் குமாரராவர். இவர்களில் நாதாபும், அபியூவும் சீனாய் மலையில் கர்த்தர் அனுப்பிய வாதையினால் மரித்துப் போனார்கள். (லேவி 10).

இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் ஆசாரியரும் லேவியரும் மிகவும் விசேஷமானவர்கள். இவர்கள் தங்களுடைய வம்சவழி அட்டவணையையும், பூர்வோத்திரத்தையும் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். இவர்களால் தங்களுடைய பூர்வோத்திரத்தை நிரூபிக்க முடியவேண்டும்.

கர்த்தர் லேவி கோத்திரத்தாருக்கு விசேஷித்த மேன்மைகளையும், மகிமைகளையும், சிலாக்கியங்களையும் வாக்குப்பண்ணியிருக்கிறார். இந்த மேன்மைகள் லேவிகோத்திரத்தாருக்கு மாத்திரமே பிரத்தியேகமாக உரியது. ஆகையினால் லேவிகோத்திரத்தார் தங்களுடைய வம்சாவழியில் கலப்பு எதுவுமில்லாமல் சுத்தமாயிருக்கவேண்டும்.

இந்த வசனப்பகுதியில் லேவிகோத்திரத்தாரைப்பற்றி மிகவும் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. லேவிகோத்திரத்தாரின் முற்பிதாக்களைப்பற்றி, இந்த அதிகாரத்தின் இரண்டு வசனங்கள் தெளிவுபடுத்துகிறது.

"லேவியின் குமாரர், கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்கள்" (1நாளா 6:1). "லேவியின் குமாரர், கெர்சோம், கோகாத், மெராரி என்பவர்களே" (1நாளா 6:16).

கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களைப்பற்றி எண்ணாகமம் புஸ்தகத்தில் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோர் லேவிகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணினார். கர்த்தர் இஸ்ரவேலரை விடுதலைபண்ணுவதற்கு, ஆரோன், மோசே, மிரியாம் ஆகியோரை தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்தினார்.

மோசே கர்த்தருடைய தீர்க்கதரிசி. ஆரோன் கர்த்தருடைய ஆசாரியன். நாதாப், அபியு ஆகியோரைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், அவருடைய பயங்கரத்திற்கும் அடையாளமாயிருக்கிறார்கள்.

எலெயாசாரின் சந்ததி 1நாளா 6:4-15

1நாளா 6:4. எலெயாசார் பினெகாசைப் பெற்றான்; பினெகாஸ் அபிசுவாவைப் பெற்றான்.

1நாளா 6:5. அபிசுவா புக்கியைப் பெற்றான்; புக்கி ஊசியைப் பெற்றான்.

1நாளா 6:6. ஊசி செராகியாவைப் பெற்றான்; செராகியா மெராயோதைப் பெற்றான்.

1நாளா 6:7. மெராயோத் அமரியாவைப் பெற்றான்; அமரியா அகித்தூபைப் பெற்றான்.

1நாளா 6:8. அகித்தூப் சாதோக்கைப் பெற்றான்; சாதோக் அகிமாசைப் பெற்றான்.

1நாளா 6:9. அகிமாஸ் அசரியாவைப் பெற்றான்; அசரியா யோகனானைப் பெற்றான்.

1நாளா 6:10. யோகனான் அசரியாவைப் பெற்றான்; சாலொமோன் எருசலேமில் கட்டின ஆலயத்திலே ஆசாரிய பணிவிடையைச் செய்தவன் இவன்தான்.

1நாளா 6:11. அசரியா அமரியாவைப் பெற்றான்; அமரியா அகித்தூபைப் பெற்றான்.

1நாளா 6:12. அகித்தூப் சாதோக்கைப் பெற்றான்; சாதோக் சல்லூமைப் பெற்றான்.

1நாளா 6:13. சல்லூம் இல்க்கியாவைப் பெற்றான்; இல்க்கியா அசரியாவைப் பெற்றான்.

1நாளா 6:14. அசரியா செராயாவைப் பெற்றான்; செராயா யோசதாக்கைப் பெற்றான்.

1நாளா 6:15. கர்த்தர் நேபுகாத்நேச்சாரைக் கொண்டு யூதா ஜனங்களையும் எருசலேமியரையும் சிறைபிடித்துக்கொண்டு போகச் செய்தபோது யோசதாக்கும் சிறைப்பட்டுப்போனான்.

எலெயாசார் ஆரோனின் குமாரன். ஆரோனுக்கு பின்பு, அவனுடைய குமாரன் எலெயாசார் ஆசாரிய ஊழியம் செய்கிறார். எலெயாசாரின் காலத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போகும் வரையிலும், ஆசாரியருடைய வம்சாவழி அட்டவணை இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் ஆரோனிலிருந்து பாபிலோனிய சிறையிருப்பு வரையிலுமுள்ள 22 ஆசாரிய வம்சங்களை 1நாளா 6:4-15 ஆகிய வசனங்களில் விரிவாகக் குறிப்பிடுகிறார். ஆனாலும் இது ஆசாரியரின் முழுமையான அட்டவணை அல்ல. இங்கு சொல்லப்பட்டிருப்போரைத்தவிர, ராஜாக்கள் புஸ்தகத்திலும் நாளாகமத்தின் மற்ற வேதப்பகுதியிலும் மேலும் பல ஆசாரியர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் ஆசாரியர்கள் யோசதாக்கின் வம்சத்தில் பிரதானமானவர்கள். இந்த அட்டவணை பிரதான ஆசாரியருடைய அட்டவணையோடு ஓரளவு ஒத்துப் போகிறது. (1நாளா 6:15). எஸ்றா 7:1-5 ஆகிய வசனங்களிலும், இந்த ஆசாரியரின் பெயர் அட்டவணையின் ஒரு பகுதி காணப்படுகிறது.

பிரதான ஆசாரியர்களில் மோசே முதன்மையானவர். (சங் 99:6) ஆனால் மோசேயின் பெயர் இந்த அட்டவணையில் இடம் பெறவில்லை. லேவியரின் ஆசாரியத்துவ முறைமை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக அவர் அரசாங்கக் காரியங்களில் ஈடுபட்டிருந்ததினால் மோசே ஓர் ஆசாரியராக இங்கு கருதப்படவில்லை.

இந்த வசனப்பகுதியில் ஆசாரியரின் அட்டவணை எலெயாசாரிலிருந்து ஆரம்பமாகிறது. இவன் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று வெளியேறி வந்தவன். இந்த அட்டவணையின் முடிவில் யோசபாத்தைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

நேபுகாத்நேச்சார் செராயாவைக் கொன்றபின்பு, அவனுடைய ஸ்தானத்தில் யோசதாக் பிரதான ஆசாரியனானான். இவனும் சிறைப்பட்டுப் போனான். இவனுடைய குமாரன் யோசுவா இவனுக்குப் பின்பு, பிரதான ஆசாரியனாக இருந்தான். இவன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தான். (எஸ்றா 3:2; எஸ்றா 5:2; நெகே 12:26; ஆகாய் 1:1,12; சக 6:11).

இந்த அட்டவணையில் இருபத்திரண்டு ஆசாரிய வம்சங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோருமே பிரதான ஆசாரியர்கள் என்று சொல்ல முடியாது. நியாயாதிபதிகளின் காலத்தில் இத்தாமாரின் குடும்பத்திற்கு முக்கியத்துவம் வருகிறது. ஆசாரியனாகிய ஏலி இத்தமாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இதற்கு பின்பு சாதோக்கு ஆசாரியராகயிருக்கிறார். இவர் எலெயாசாரின் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆசாரியரின் அட்டவணையில் அசரியாவைப்பற்றி விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "யோகனான் அசரியாவைப் பெற்றான்; சாலொமோன் எருசலேமில் கட்டின ஆலயத்திலே ஆசாரிய பணிவிடையைச் செய்தவன் இவன்தான்" (1நாளா 6:10).

உசியா ராஜா ஆசாரிய ஊழியத்திலே தலையிட்டான். இதன் நிமித்தமாக ஆசாரியனாகிய அசரியா, உசியா ராஜாவைக் கடிந்துகொண்டான்.

"ஆசாரியனாகிய அசரியாவும், அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமசாலிகளாகிய எண்பதுபேரும், அவன் பிறகே உட்பிரவேசித்து, ராஜாவாகிய உசியாவோடு எதிர்த்து நின்று: உசியாவே, கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு அடுத்ததல்ல; தூபங்காட்டுகிறது பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும்; பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள்" (2நாளா 26:17,18). ஆசாரியர்கள் கர்த்தருக்கு பக்தி வைராக்கியமாக ஊழியம் செய்தார்கள்.

ஊசியின் நாட்களில் பிரதான ஆசாரியரின் வரிசை எலெயாசாரின் வம்சத்திலிருந்து இத்தாமாரின் வம்சத்திற்கு மாறுகிறது. இந்த மாற்றத்திற்கான காரணம் தெரியவில்லை. ஆனாலும் பல சந்ததியாக இந்த மாற்றம் தொடர்கிறது.

யோசியாவின் ஆட்சிக் காலத்தில் இல்க்கியா என்பவன் பிரதான ஆசாரியனாய் ஊழியம் செய்கிறான் *(2இராஜா 22:4; 2நாளா 34:9).*

செராயா என்பவன் கலகம் பண்ணியதினால் நேபுகாத்நேச்சார் இவனை ரிப்லாவில் கொன்றுபோட்டான். *(2இராஜா 25:18,21).*

லேவி கோத்திரத்தார் 1நாளா 6:16-30

1நாளா 6:16. லேவியின் குமாரர், கெர்சோம், கோகாத், மெராரி என்பவர்களே.

1நாளா 6:17. கெர்சோமுடைய குமாரரின் நாமங்கள், லிப்னி, சிமேயி என்பவைகள்.

1நாளா 6:18. கோகாத்தின் குமாரர், அம்ராம், இத்சார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள்.

1நாளா 6:19. மெராரியின் குமாரர், மகேலி, மூசி, என்பவர்கள். லேவியருக்கு அவர்கள் பிதாக்கள் வழியாய் உண்டான வம்சங்கள்:

1நாளா 6:20. கெர்சோமின் குமாரன் லிப்னி; இவன் குமாரன் யாகாத்; இவன் குமாரன் சிம்மா.

1நாளா 6:21. இவன் குமாரன் யோவா; இவன் குமாரன் இத்தோ; இவன் குமாரன் சேரா; இவன் குமாரன் யாத்திராயி.

1நாளா 6:22. கோகாத்தின் குமாரரில் ஒருவன் அம்மினதாப், இவன் குமாரன் கோராகு; இவன் குமாரன் ஆசீர்.

1நாளா 6:23. இவன் குமாரன் எல்க்கானா; இவன் குமாரன் அபியாசாப்; இவன் குமாரன் ஆசீர்.

1நாளா 6:24. இவன் குமாரன் எல்க்கானா; இவன் குமாரன் ஊரியேல்; இவன் குமாரன் ஊசியா; இவன் குமாரன் சவுல்.

1நாளா 6:25. எல்க்கானாவின் குமாரர், அமாசாயி, ஆகிமோத் என்பவர்கள்.

1நாளா 6:26. எல்க்கானாவின் குமாரரில் ஒருவன் சோபாய்; இவன் குமாரன் நாகாத்.

1நாளா 6:27. இவன் குமாரன் எலியாப்; இவன் குமாரன் எரோகாம்; இவன் குமாரன் எல்க்கானா.

1நாளா 6:28. சாமுவேலின் குமாரர், அவனுடைய முதற்பேறான வஷ்னீ அபியா என்பவர்கள்.

1நாளா 6:29. மெராரியின் குமாரரில் ஒருவன் மகேலி; இவன் குமாரன் லிப்னி; இவன் குமாரன் சிமேயி; இவன் குமாரன் ஊசா.

1நாளா 6:30. இவன் குமாரன் சிமெயா; இவன் குமாரன் அகியா; இவன் குமாரன் அசாயா.

லேவிகோத்திரத்தாரில் மூன்று முக்கியமான பிரிவுகள் இருக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு :

1. கெர்சோமின் குமாரர்கள்
2. கோகாத்தின் குமாரர்
3. மெராரியின் குமாரர்

இந்த வசனப்பகுதியில் லேவி கோத்திரத்தாரின் மூன்று பிரிவுகளின் தலைவர்களைப்பற்றியும், அவர்களுடைய குமாரரைப்பற்றியும் வரிசையாக சொல்லப்பட்டிருக்கிறது.

எல்க்கானா என்பவன் சாமுவேலின் தகப்பன். ஆனாலும் இந்த உறவு இங்கு குறிப்பிடப்படவில்லை. (1சாமு 1-2). சாமுவேலின் குமாரரைப் பற்றிய வம்ச வரலாற்று அட்டவணை கூறப்படும்போது, சாமுவேலின் பெயரும் வருகிறது. இந்த விவரம் தவிர இந்த அட்டவணையில் சாமுவேலைப் பற்றி வேறு எதுவும் கூறப்படவில்லை (1நாளா 6:26-27).

1நாளா 6:28-ஆவது வசனத்தில் வஷ்னீயைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 1சாமு 8:2 ஆவது வசனத்தில் இவனுடைய பெயர் யோவேல் என்றுள்ளது. ஒருவேளை இதுவே அவனுடைய மறுபெயராக இருக்கலாம்.

சங்கீத சேவை நடத்துகிறவர்கள் 1நாளா 6:31-47

1நாளா 6:31. கர்த்தருடைய பெட்டி நிலைபெற்றபோது, தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் சங்கீத சேவையை நடத்துகிறதற்கு ஸ்தாபித்தவர்களும்,

1நாளா 6:32. சாலொமோன் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டித் தீருமட்டும் ஆசரிப்புக்கூடார வாசஸ்தலத்திற்கு முன்பாக சங்கீத சேவனையுடன் தங்கள் முறைமையின்படியே பணிவிடை செய்துவந்தவர்களுமாகிய மனுஷரும் அவர்கள் குமாரருமானவர்கள்.

1நாளா 6:33. கோகாத்தியரின் குமாரரில் ஏமான் என்னும் பாடகன்; இவன் யோவேலின் குமாரன்; இவன் சாமுவேலின் குமாரன்.

1நாளா 6:34. இவன் எல்க்கானாவின் குமாரன்; இவன் யெரொகாமின் குமாரன்; இவன் எலியேலின் குமாரன்; இவன் தோவாகின் குமாரன்.

1நாளா 6:35. இவன் சூப்பின் குமாரன்; இவன் இல்க்கானாவின் குமாரன்; இவன் மாகாத்தின் குமாரன்; இவன் அமாசாயின் குமாரன்.

1நாளா 6:36. இவன் எல்க்கானாவின் குமாரன்; இவன் யோவேலின் குமாரன்; இவன் அசரியாவின் குமாரன்; இவன் செப்பனியாவின் குமாரன்.

1நாளா 6:37. இவன் தாகாதின் குமாரன்; இவன் ஆசீரின் குமாரன்; இவன் எபியாசாப்பின் குமாரன்; இவன் கோராகின் குமாரன்.

1நாளா 6:38. இவன் இத்சாரின் குமாரன்; இவன் கோகாத்தின் குமாரன்; இவன் இஸ்ரவேலின் குமாரனாகிய லேவியின் குமாரன்.

1நாளா 6:39. இவன் சகோதரனாகிய ஆசாப் இவன் வலதுபக்கத்திலே நிற்பான்; ஆசாப் பெரகியாவின் குமாரன்; இவன் சிமேயாவின் குமாரன்.

1நாளா 6:40. இவன் மிகாவேலின் குமாரன்; இவன் பாசெயாவின் குமாரன்; இவன் மல்கியாவின் குமாரன்.

1நாளா 6:41. இவன் எத்னியின் குமாரன்; இவன் சேராவின் குமாரன்; இவன் அதாயாவின் குமாரன்.

1நாளா 6:42. இவன் ஏத்தானின் குமாரன்; இவன் சிம்மாவின் குமாரன்; இவன் சீமேயின் குமாரன்.

1நாளா 6:43. இவன் யாகாதின் குமாரன்; இவன் கெர்சோமின் குமாரன்; இவன் லேவியின் குமாரன்.

1நாளா 6:44. மெராரியின் புத்திரராகிய இவர்களுடைய சகோதரர் இடதுபக்கத்திலே நிற்பார்கள்; அவர்களில் ஏதான் என்பவன் கிஷியின் குமாரன்; இவன் அப்தியின் குமாரன்; இவன் மல்லூகின் குமாரன்.

1நாளா 6:45. இவன் அஸபியாவின் குமாரன்; இவன் அமத்சியாவின் குமாரன்; இவன் இல்க்கியாவின் குமாரன்.

1நாளா 6:46. இவன் அம்சியின் குமாரன்; இவன் பானியின் குமாரன்; இவன் சாமேரின் குமாரன்.

1நாளா 6:47. இவன் மகேலியின் குமாரன்; இவன் மூசியின் குமாரன்; இவன் மெராரியின் குமாரன்; இவன் லேவியின் குமாரன்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, மோசே லேவியர்களை ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணினார். அப்போது லேவியர்களுக்கு விசேஷித்த ஊழியப்பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டது. லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சுமந்துசெல்லவேண்டும். அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தைப் பாதுகாக்கவேண்டும். ஆசாரிப்புக்கூடாரத்தில் பயன்படுத்தப்படும் பரிசுத்த பணிமுட்டுகளெல்லாவற்றையும் இவர்கள் தங்கள் பொறுப்பில் வைத்திருக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணிய காலத்தில், இதுவே லேவியருடைய பிரதான ஊழியமாயிருந்தது.

தாவீதின் காலத்திலே லேவியரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. லேவியர்கள் சமஸ்த இஸ்ரவேல் தேசமெங்கும் சுற்றித்திரிந்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தரைப்பற்றிய சத்தியங்களை உபதேசம்பண்ண வேண்டும். லேவியர்கள் கர்த்தருடைய பிரமாணங்களையும் இஸ்ரவேல் புத்திரருக்கு போதிக்கவேண்டும்.

லேவியர்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறார்கள். அவர்கள் எல்லோருக்குமே கர்த்தருடைய ஆசாரிப்புக்கூடாரத்திலே ஊழியம் நியமிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிற தாவீது, தேவனுடைய தெய்வீக கட்டளையின் பிரகாரமும், தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரமும், லேவியருக்கு புதிய ஊழியப்பொறுப்புக்களைக் கொடுக்கிறார். தாவீது லேவியருக்கு கொடுத்த ஊழியப்பொறுப்புக்கள் இந்த அதிகாரத்திலும், இதற்கு அடுத்து வரும் அதிகாரங்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பெட்டி நிலைப்பெற்றபோது தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் சங்கீத சேவையை நடத்துகிறதற்கு லேவியரை ஸ்தாபிக்கிறார். சாலொமோன் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டித்தீருமட்டும், ஆசரிப்புக்கூடார வாசஸ்தலத்திற்கு முன்பாக, லேவியர்கள் தங்கள் முறைமையின்படியே சங்கீத சேவனையுடன் பணிவிடை செய்து வருகிறார்கள் (1நாளா 6:31,32).

சமஸ்த இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதும் ஒரு சங்கீதக்காரர். "மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன்" (2சாமு 23:1) என்று தாவீது தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

தாவீது ஏராளமான சங்கீதங்களை இயற்றியிருக்கிறார். அவர் சங்கீதங்களை இயற்றியது மாத்திரமல்ல, கர்த்தருடைய ஆலயத்திலே சங்கீத சேவையை நடத்துகிறதற்கு லேவியரையும் நியமிக்கிறார். கர்த்தருடைய பெட்டி நிலைபெற்றபோது தாவீது லேவியரை சங்கீத சேவையை நடத்துகிறதற்கு நியமிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அவர்கள் தங்கள் மனதில் அமைதியில்லாமல், வேதனைகளையும், துக்கங்களையும், உபத்திரவங்களையும் அனுபவித்து வந்தார்கள். அவர்கள் தங்களுடைய வாத்தியக்கருவிகளை அலரிச்செடிகளில் தொங்கவிட்டு, வேதனையோடிருந்தார்கள். யூதர்கள் சிறையிருப்பிலிருந்த காலத்தில் கர்த்தரைத் துதித்துப்பாடவேண்டும் என்னும் ஆர்வம் அவருடைய மனதில் உண்டாகவில்லை.

சிறையிருப்பிலிருந்த யூதர்களின் வாயிலிருந்து கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதங்கள் புறப்பட்டு வரவில்லை. ஆனாலும் அவர்கள் தங்களுடைய வாத்தியக்கருவிகளைப் பாதுகாப்பாக வைத்திருந்தார்கள். கர்த்தருடைய பெட்டி நிலைப்பெற்றபோதோ, அவர்கள் கர்த்தரைத் துதிக்கும் பாடல்களை, மறுபடியும் துதித்துப்பாட ஆரம்பித்துவிடுகிறார்கள்.

லேவியர்கள் எப்போதும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். அவர்கள் ஒருபோதும் சும்மாயிருக்கக்கூடாது. லேவியர்கள் கர்த்தரைத் துதிக்காமல், உலகப்பிரகாரமான வேலைகளில் தங்களை ஈடுபடுத்தும்போது, அவர்களுக்கு பிரச்சனைகளும் வேதனைகளும் அதிகரிக்கிறது.

தாவீது கர்த்தருடைய ஆலயத்திலே சங்கீத சேவையை நடத்துகிறதற்கு லேவியரை நியமிக்கிறார். தாவீதின் காலத்தில் ஆலயம் கட்டப்படவில்லை. ஆசரிப்புக்கூடாரம் மாத்திரமே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன் எருசலேமிலே கர்த்தருடைய ஆலயத்தை கட்டித் தீர்க்கிறார். அதுவரையிலும் தாவீது ஸ்தாபித்த லேவியர்கள், ஆசாரிப்புக்கூடார வாசஸ்தலத்திற்கு முன்பாக, சங்கீத சேவையை தங்கள் முறைமையின்படியே நடத்துகிறார்கள்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் சங்கீத சேவையை நடத்துகிறதற்கு மூன்று மனுஷரையும் அவர்களுடைய குமாரர்களையும் நியமிக்கிறார். அவர்களின் விவரம் வருமாறு :

1. ஏமான் - கோகாத்தியன் (1நாளா 6:33)
2. ஆசாப் கெர்சோனியன் (1நாளா 6:39)
3. ஏதான் - மெராரியன் (1நாளா 6:44)

ஏமான், ஆசாப், ஏதான் ஆகியோரும், அவர்களுடைய புத்திரரும், கர்த்தருடைய ஆலயத்திலே சங்கீத சேவையை நடத்துகிறார்கள். இவர்கள் மூன்றுபேரும் லேவியரின் மூன்று குடும்பங்களை சேர்ந்தவர்கள்.

"கோகாத்தியரின் குமாரரில் ஏமான் என்னும் பாடகன்; இவன் யோவேலின் குமாரன்; இவன் சாமுவேலின் குமாரன்" (1நாளா 6:33).

ஏமான் எப்போதும் துக்கமுகத்தோடிருப்பான். இவனுடைய துக்கம் உலகப்பிரகாரமான துக்கமோ அல்லது மாம்சப்பிரகாரமான துக்கமோ அல்ல. ஏமான் எப்போதும் ஆவிக்குரிய துக்கத்தோடிருக்கிறான். ஏமான் 88-ஆவது சங்கீதத்தை இயற்றியவன். இவன் சங்கீதத்தை இயற்றுகிறவன் மாத்திரமல்ல. சங்கீதத்தை ராகத்தோடு பாடுகிறவனாகவும் இருக்கிறான்.

ஏமான் தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் பேரன். இவன் யோவேலின் குமாரன். யோவேல் சாமுவேலின் வழிகளில் நடக்கவில்லை. சாமுவேலின் குமாரன் அவருடைய வழியில் நடக்கவில்லை. ஆனாலும் சாமுவேலின் பேரன் அவருடைய வழியில் நடக்கிறான்.

"அவனுடைய மூத்தகுமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர் செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள். ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்" (1சாமு 8:2,3).

இந்த வசனப்பகுதியில் கெர்சோனியரின் புத்திரரைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. 1நாளா 6:39-ஆவது வசனத்தில் "இவன் சகோதரனாகிய ஆசாப்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"இவன் சகோதரன்" என்பது லேவியின் மற்றொரு கோத்திரத்தைக் குறிக்கும். இவர்கள் ஒரே பெற்றோருக்குப் பிறந்த குமாரர்கள் அல்ல. யாக்கோபின் குமாரனாகிய லேவியிலிருந்து ஆசாப் வரையிலும் உள்ள 15 சந்ததியார் 1நாளா 6:39-43 ஆகிய வசனங்களில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருமே ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே ஊழியத்தை செய்கிறவர்கள். ஆகையினால் இவர்கள் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், இவர்கள் "சகோதரர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

ஆசாப் ஏமானுக்கு வலது பக்கத்திலே நின்று சங்கீதம் பாடுவான். ஆசாப் பல சங்கீதங்களை இயற்றியிருக்கிறான். பல சங்கீதங்களின் தலைப்புக்களில் ஆசாபின் பெயரும் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் தாவீதின் வார்த்தைகளினாலும், ஆசாபின் வார்த்தைகளினாலும், கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள்.

ஆசாப் ஒரு நல்ல பாடகனாகவும், சிறந்த தரிசனக்காரனாகவும் இருக்கிறான். "பின்பு எசேக்கியா ராஜாவும் பிரபுக்களும் லேவியரை நோக்கி: நீங்கள் தாவீதும் ஞானதிருஷ்டிக்காரனாகிய ஆசாபும் பாடின வார்த்தைகளினால் கர்த்தரைத் துதியுங்கள் என்றார்கள்; அப்பொழுது மகிழ்ச்சியோடே துதிசெய்து தலைகுனிந்து பணிந்துகொண்டார்கள்" (2நாளா 29:30).

1நாளா 6:39-43 ஆகிய வசனங்களில் ஆசாபின் வம்சவரலாற்றை பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. லேவியின் வம்சவரலாற்றைப்போலவே ஆசாபின் வம்சவரலாறும் மிகவும் பெரியதாயிருக்கிறது.

1நாளா 6:44-47 ஆகிய வசனங்களில் மெராரியின் புத்திரரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மெராரியின் புத்திரரும் கோகாத்தியரின் குமாரருக்கும், கெர்சோமியரின் குமாரருக்கும் சகோதரராயிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவருமே கர்த்தருடைய ஆலயத்திலே சங்கீத சேவையை நடத்துகிறார்கள். கெர்சோமியரின் புத்திரர் வலது பக்கத்திலும், மெராரியின் புத்திரர் இடது பக்கத்திலும் நின்று சங்கீத சேவையை நடத்துவார்கள்.

மெராரியின் புத்திரரில் ஏதான் பிரதானமானவன். இவன் ஆசாபுக்கு இடதுபக்கத்திலே நின்று சங்கீத சேவையை நடத்துவான். ஏதானின் மறுபெயர் எதுத்தூன் (1நாளா 9:16; 1நாளா 16:41; 1நாளா 25:1; 2நாளா 35:15). ஏதான் என்னும் பெயர் 1நாளா 15:19 ஆவது வசனம் வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பின்பு எதுத்தூண் என்னும் பெயரே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "ஏதான்" என்னும் பெயருக்கு "உறுதி" என்று பொருள். "எதுத்தூண்" என்னும் பெயருக்கு "துதிக்கப்பட வேண்டியவர்" என்று பொருள்.

யாக்கோபின் குமாரனாகிய லேவியிலிருந்து ஏதான் வரையிலுமுள்ள 14 சந்ததியார் 1நாளா 6:44-47 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

லேவியரின் பணிவிடைகள் 1நாளா 6:48

1நாளா 6:48. அவர்கள் சகோதரராகிய மற்ற லேவியர் தேவனுடைய ஆலயமாகிய வாசஸ்தலத்தின் பணிவிடைக்கெல்லாம் வைக்கப்பட்டிருந்தார்கள்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தில் சங்கீத சேவையை நடத்துகிறதற்கு லேவியரை ஸ்தாபித்தார். சங்கீத சேவை தவிர லேவியருக்கு மற்ற பணிவிடைகளும் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்திலே ஏராளமான பணிவிடை வேலைகள் உள்ளன. சுத்திகரிப்பதற்கு தேவையான தண்ணீரைக் கொண்டு வரவேண்டும். சர்வாங்க தகனங்களை செலுத்துவதற்கு விறகுகளை கொண்டு வரவேண்டும். ஆசரிப்புக்கூடாரத்தை கூட்டி பெருக்கி சுத்தம்பண்ணவேண்டும். சாம்பல்களை கூட்டி அள்ளி வெளியேற்றவேண்டும்.

பலிசெலுத்துவதற்கு கொண்டு வரப்படும் மிருகங்களை கொல்லுவது, அவற்றை வேவிப்பது ஆகியவையெல்லாம் ஆசாரியரின் பணிவிடைகள். ஆசரிப்புக்கூடாரத்தின் ஒவ்வொரு பணிவிடைகளுக்கும், லேவியரும், அவர்களுடைய குடும்பத்தாரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சங்கீத சேவையை நடத்த தெரியாதவர்கள், ஆசாரிப்புக்கூடாரத்தில் இதுபோன்ற பணிவிடைகளை செய்வார்கள். ஒருவேளை இந்த லேவியரின் குரல் வளம் இனிமையாக இல்லாமலிருக்கலாம். ஆனாலும் எல்லா லேவியருக்கும் ஆசரிப்புக்கூடாரத்தில் பணிவிடை உண்டு. கர்த்தரிடத்திலிருந்து கிருபைகளையும் வரங்களையும் பெற்றுக்கொண்டவர்கள் எல்லோரும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்.

ஆசாரியரின் பணிவிடை
1நாளா 6:49-53

1நாளா 6:49. ஆரோனும் அவன் குமாரரும் சர்வாங்க தகனபலி பீடத்தின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டும் பீடத்தின்மேல் தூபங்காட்டி, மகா பரிசுத்த ஸ்தலத்தின் எல்லா வேலைக்கும், தேவனுடைய தாசனாகிய மோசே கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேலுக்காகப் பாவநிவிர்த்தியுண்டாக்குகிறதற்கும் வைக்கப்பட்டிருந்தார்கள்.

1நாளா 6:50. ஆரோனின் குமாரரில் எலெயாசார் என்பவனுடைய குமாரன் பினேகாஸ்; இவன் குமாரன் அபிசுவா.

1நாளா 6:51. இவன் குமாரன் புக்கி; இவன் குமாரன் ஊசி; இவன் குமாரன் செராகியா.

1நாளா 6:52. இவன் குமாரன் மெராயோத்; இவன் குமாரன் அமரியா; இவன் குமாரன் அகித்தூப்.

1நாளா 6:53. இவன் குமாரன் சாதோக்; இவன் குமாரன் அகிமாஸ்.

சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் பலியிடுவதும், தூபங்காட்டும் பீடத்தின்மேல் தூபங்காட்டுவதும் ஆசாரியருடைய பிரத்தியேகமான பணிவிடைகளாகும். ஆசாரியர்கள் மாத்திரமே பலிபீடத்தின்மீது பலிசெலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்தை தெளிக்கவேண்டும்.

மகாபரிசுத்த ஸ்தலத்தில், பிரதான ஆசாரியர் மாத்திரமே ஊழியம் செய்யவேண்டும். ஒவ்வொரு ஆசாரியருக்கும் கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து கர்த்தருடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தில் எல்லா ஆசாரியருடைய பணிவிடைகளும் தேவைப்படுகிறது.

ஆசாரியர்கள் இஸ்ரவேலுக்காக பாவநிவர்த்தி உண்டாக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் நடுவாக நின்று மத்தியஸ்த ஊழியம் செய்யவேண்டும். ஆசாரியர்கள் தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்திக்கொள்ளக்கூடாது. அவர்கள் தங்களைத் தாங்களே பெருமைப்படுத்தவோ, உயர்த்தவோ செய்யக்கூடாது.

ஆசாரியர்கள் தங்களுடைய சுயலாபத்திற்காக கர்த்தருடைய ஊழியத்தை செய்யக்கூடாது. ஏராளமான ஐசுவரியத்தை சம்பாதிக்கவேண்டும் என்பது ஆசாயரின் நோக்கமாயிருக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். ஜனங்களுக்கு உதவியாயிருக்கவேண்டும்.

ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே, தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற பணிவிடைகளை செய்யவேண்டும். கர்த்தரே ஆசாரியருக்கு ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு ஆசாரியரும் தன்னுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவராயிருக்க வேண்டும்.

ஆரோனும் அவன் குமாரரும் சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் பலியிடவேண்டும். தூபங்காட்டும் பீடத்தின்மேல் தூபங்காட்ட வேண்டும். மகா பரிசுத்த ஸ்தலத்தின் எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும். இவற்றை தேவனுடைய தாசனாகிய மோசே கற்பித்த படியெல்லாம் செய்ய வேண்டும். ஆசாரியர் மட்டுமே இந்தப் பணிவிடைகளைச் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசாரியரைத் தவிர, ராஜாக்களோ அல்லது தீர்க்கதரிசிகளோ ஆசாரியரின் பணிவிடைகளைச் செய்யக்கூடாது.

ஆனாலும் அவர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ஆசாரியரின் பணிவிடைகளைச் செய்யலாம். இஸ்ரவேலின் எந்த ராஜாவும் லேவி கோத்திரத்திலிருந்து வரவில்லை. சில தீர்க்கதரிசிகள் மாத்திரமே லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

லேவியரின் பட்டணங்கள் 1நாளா 6:54-81

1நாளா 6:54. அவர்கள் பேட்டைகளின்படியே அவர்கள் எல்லைக்குள்ளான அவர்கள் வாசஸ்தலங்களாவன: கோகாத்தியரின் வம்சமான ஆரோனின் புத்திரருக்கு விழுந்த சீட்டின்படியே,

1நாளா 6:55. யூதாதேசத்திலிருக்கிற எப்ரோனையும் அதைச் சுற்றியிருக்கிற வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்.

1நாளா 6:56. அந்தப் பட்டணத்தின் வயல்களையும் அதின் பட்டிகளையும் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்குக் கொடுத்தார்கள்.

1நாளா 6:57. இப்படியே ஆரோனின் புத்திரருக்கு எப்ரோன் என்னும் அடைக்கலப்பட்டணங்களில் ஒன்றையும், லிப்னாவையும் அதின் வெளிநிலங்களையும், யாத்தீரையும் எஸ்தெமோவாவையும் அவற்றின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:58. ஈலேனையும் அதின் வெளிநிலங்களையும், தெபீரையும் அதின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:59. ஆசானையும் அதின் வெளிநிலங்களையும், பெத்சேமேசையும் அதின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:60. பென்யமீன் கோத்திரத்திலே கேபாவையும் அதின் வெளிநிலங்களையும், அலெமேத்தையும் அதின் வெளிநிலங்களையும், ஆனதோத்தையும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; இவர்கள் வம்சங்களுக்குக் கொடுத்த இவர்கள் பட்டணங்களெல்லாம் பதின்மூன்று.

1நாளா 6:61. கோகாத்தின் மற்றப் புத்திரருக்கு வேறொரு கோத்திர வம்சத்திலும், பாதிக்கோத்திரமாகிய மனாசேயின் பாதியிலும் விழுந்த சீட்டின்படியே பத்துப் பட்டணங்கள் இருந்தது.

1நாளா 6:62. கெர்சோமின் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே, இசக்கார் கோத்திரத்திலும், ஆசேர் கோத்திரத்திலும், நப்தலி கோத்திரத்திலும் பதின்மூன்று பட்டணங்கள் இருந்தது.

1நாளா 6:63. மெராரியின் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே, ரூபன் கோத்திரத்திலும், காத் கோத்திரத்திலும், செபுலோன் கோத்திரத்திலும் விழுந்த சீட்டின்படி பன்னிரண்டு பட்டணங்கள் இருந்தது.

1நாளா 6:64. அப்படியே இஸ்ரவேல் புத்திரர் லேவியருக்குக் கொடுத்த பட்டணங்களும் அவைகளின் வெளிநிலங்களும் என்னவென்றால்,

1நாளா 6:65. சீட்டுப்போட்டு, சிலருக்கு யூதா புத்திரரின் கோத்திரத்திலும், சிமியோன் புத்திரரின் கோத்திரத்திலும், பென்யமீன் புத்திரரின் கோத்திரத்திலும், பேர்பேராகச் சொல்லப்பட்ட அந்தப் பட்டணங்களைக் கொடுத்தார்கள்.

1நாளா 6:66. கோகாத் புத்திரரில் மற்ற வம்சங்களுக்கு அவர்கள் எல்லையான பட்டணங்கள் அவர்களுக்கு எப்பிராயீம் கோத்திரத்திலே இருந்தது.

1நாளா 6:67. எவையெனில், அடைக்கலப்பட்டணங்களில் அவர்களுக்கு எப்பிராயீம் மலைத் தேசத்திலிருக்கிற சீகேமையும் அதின் வெளிநிலங்களையும், கேசேரையும் அதின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:68. யோக்மேயாமையும் அதின் வெளிநிலங்களையும், பேத்ஓரோனையும் அதின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:69. ஆயலோனையும் அதின் வெளிநிலங்களையும், காத்ரிம்மோனையும் அதின் வெளிநிலங்களையும்,

1நாளா 6:70. மனாசேயின் பாதிக்கோத்திரத்திலே ஆனேரையும் அதின் வெளிநிலங்களையும், பீலியாமையும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; இவைகள் காகாத் புத்திரரிலுள்ள மற்ற வம்சங்களுக்கு இருந்தது.

1நாளா 6:71. கெர்சோம் புத்திரருக்கு மனாசேயின் பாதிக்கோத்திர வம்சத்திலே பாசானிலிருக்கிற கோலானும் அதின் வெளிநிலங்களும், அஸ்தரோத்தும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:72. இசக்கார் கோத்திரத்திலே கேதேசும் அதின் வெளிநிலங்களும், தாபிராத்தும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:73. ராமோத்தும் அதின் வெளிநிலங்களும், ஆனேமும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:74. ஆசேர் கோத்திரத்திலே மாஷாலும் அதின் வெளிநிலங்களும், அப்தோனும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:75. உக்கோக்கும் அதின் வெளிநிலங்களும், ரேகோபும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:76. நப்தலி கோத்திரத்திலே கலிலேயாவிலிருக்கிற கேதேசும் அதின் வெளிநிலங்களும், அம்மோனும் அதின் வெளிநிலங்களும், கீரியாத்தாயிமும் அதின் வெளிநிலங்களும் இருந்தது.

1நாளா 6:77. மெராரியின் மற்றப் புத்திரருக்கு செபுலோன் கோத்திரத்திலே ரிம்மோனும் அதின் வெளிநிலங்களும், தாபேரும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:78. எரிகோவுக்கு அப்புறமாயிருக்கிற யோர்தானுக்கு அப்பாலே யோர்தானுக்குக் கிழக்கே இருக்கிற ரூபன் கோத்திரத்திலே வனாந்தரத்திலுள்ள பேசேரும் அதின் வெளிநிலங்களும், யாத்சாவும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:79. கேதேமோத்தும் அதின் வெளிநிலங்களும், மேப்பாத்தும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:80. காத் கோத்திரத்திலே கீலேயாத்திலுள்ள ராமோத்தும் அதின் வெளிநிலங்களும், மக்னாயீமும் அதின் வெளிநிலங்களும்,

1நாளா 6:81. எஸ்போனும் அதின் வெளிநிலங்களும், யாசேரும் அதின் வெளிநிலங்களும் இருந்தது.

கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் லேவிகோத்திரத்தாருக்கு கானான் தேசத்தில் பங்குவீதம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு கானானிலே சுதந்தரம் இல்லை. கர்த்தரே அவர்களுக்கு பங்கும் சுதந்தரமுமாகயிருக்கிறார்.

கர்த்தர் லேவியரை பாதுகாக்கிறார். அவர்களைப் பராமரிக்கிறார். அவர்கள் சர்வவல்லவருடைய நிழலில் தங்கியிருக்கிறார்கள். கானான் தேசத்திலே லேவியருக்கு பங்குவீதம் பிரித்துக் கொடுக்கப்படாவிட்டாலும், இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திலும் லேவியருக்கென்று பட்டணங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக லேவியர்கள் ஒரு குறிப்பிட்ட கோத்திரத்திற்குள் மாத்திரம் என்று வாசம்பண்ணாமல், எல்லா கோத்திரத்தார் மத்தியிலும் வாசம்பண்ணுகிறார்கள்.

லேவிகோத்திரத்தாருக்கு குடியிருப்பதற்கு பட்டணங்களும், அவர்களுடைய கால்நடைகளை பராமரிப்பதற்கு வெளிநிலங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ஒலோனையும் அதின் வெளிநிலங்களையும், தெபீரையும் அதின் வெளிநிலங்களையும், ஆயினையும் அதின் வெளிநிலங்களையும், யுத்தாவையும் அதின் வெளிநிலங்களையும், பெத்ஷிமேசையும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; அந்த இரண்டு கோத்திரங்களிலிருக்கிற பட்டணங்கள் ஒன்பது" (யோசு 21:15,16)

"பென்யமீன் கோத்திரத்திலே அவர்களுக்குக் கிபியோனையும் அதின் வெளிநிலங்களையும் கேபாவையும் அதின் வெளிநிலங்களையும், ஆனதோத்தையும் அதின் வெளிநிலங்களையும், அல்மோனையும் அதின் வெளிநிலங்களையும் கொடுத்தார்கள்; இந்தப் பட்டணங்கள் நாலு" (யோசு 21:17,18).

யோசுவாவின் காலத்தில் லேவியருக்கு கொடுக்கப்பட்ட பட்டணங்களின் பெயர்களும், இந்த வசனப்பகுதியில் அந்தப் பட்டணங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பெயர்களும் வித்தியாசமாயிருக்கிறது. பட்டணம் ஒன்றாயிருந்தாலும், அதன் பெயர் காலப்போக்கில் மாறியிருக்கிறது.

லேவியருக்கு கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக பட்டணங்கள் பிரித்து கொடுக்கப்படுகிறது. யாக்கோபு லேவி கோத்திரத்தாரைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொன்னபோது, அவர்கள் இஸ்ரவேல் தேசமெங்கிலும் சிதறியிருப்பார்கள் என்று சொன்னார்.

"யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களைச் சிதறவும்பண்ணுவேன்" (ஆதி 49:7).

இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் கர்த்தரை அறியும் அறிவும், ஞானமும் நிரம்பியிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு, இஸ்ரவேல் தேசம் எங்கிலும், லேவியர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கவேண்டும். இதற்காக இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தார் மத்தியிலும், லேவியருக்கு பட்டணங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

லேவியர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான காரியங்களில் ஊழியம் செய்கிறார்கள். லேவியரும் அவர்களுடைய குடும்பத்தாரும் போஷிக்கப்படவேண்டும். கர்த்தர் லேவியருக்கு ஆதரவாக, விசேஷமான பட்டணங்களை அவர்களுக்கு கொடுக்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே மிகவும் முக்கியமான பட்டணங்களும், செழிப்பான வெளிநிலங்களும் லேவியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கோகாத்தியருக்கு கொடுக்கப்பட்ட பட்டணங்களின் விவரம் வருமாறு :

1. யூதா தேசத்தில் உள்ளவை

(1) எப்ரோன் (நாளா 6:55-57)

(2) லிப்னா (நாளா 6:57)

(3) யாத்தீர்

(4) எஸ்தெமோவா

(5) ஈலேன் (நாளா 6:58)

(6) தெபீர்

(7) ஆசான் (நாளா 6:59)

(8) பெத்சேமேஸ்

2. பென்யமீன் தேசத்தில் உள்ளவை

(1) கேபா (நாளா 6:60)

(2) அலெமேத்

(3) ஆனதோத்

யூதா தேசத்திலும், பென்யமீன் தேசத்திலும் மொத்தம் 13 பட்டணங்களும், (நாளா 6:60) மனாசே தேசத்தில் 10 பட்டணங்களும் (நாளா 6:61) கோகாத்தியரின் பட்டணங்களாகும். இந்தப் பட்டணங்களின் முழுமையான அட்டவணை இங்கு கொடுக்கப்படவில்லை.

7 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் ஆறு கோத்திரத்தாருடைய வம்சவரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. இசக்காரின் சந்ததியார் (1நாளா 7:1-5). பென்யமீனின் சந்ததியார் (1நாளா 7:6-12). நப்தலியின் சந்ததியார் (1நாளா 7:13). மனாசேயின் சந்ததியார் (1நாளா 7:14-19). எப்பிராயீமின் சந்ததியார் (1நாளா 7:20-29). ஆசேரின் சந்ததியார் (1நாளா 7:30-40).

இசக்காருடைய குமாரர் 1நாளா 7:1-5

1நாளா 7:1. இசக்காருடைய குமாரர், தோலா, பூவா, யசுப், சிம்ரோன் என்னும் நாலுபேர்.

1நாளா 7:2. தோலாவின் குமாரர், ஊசி, ரெப்பாயா, யெரியேல், யக்மாயி, இப்சாம், சாமுவேல் என்பவர்கள்; தோலாவுக்குப் பிறந்த இவர்கள் தங்கள் பிதாக்கள் வம்சத்தலைவரும் தங்கள் சந்ததிகளிலே பராக்கிரமசாலிகளுமாயிருந்தார்கள்; தாவீதின் நாட்களில் அவர்கள் தொகை இருபத்தீராயிரத்து அறுநூறுபேராயிருந்தது.

1நாளா 7:3. ஊசியின் குமாரரில் ஒருவன் இஸ்ரகியா; இஸ்ரகியாவின் குமாரர், மிகாயேல், ஒபதியா, யோவேல், இஷியா, என்பவர்கள்; இவர்கள் ஐந்துபேரும் தலைவராயிருந்தார்கள்.

1நாளா 7:4. அவர்கள் பிதாக்கள் வம்சத்தாரான அவர்கள் சந்ததிகளில் யுத்தமனுஷரான கூட்டங்கள் முப்பத்தாறாயிரம்பேர் அவர்களோடிருந்தார்கள்; அவர்களுக்கு அநேகம் பெண்ஜாதிகளும் பிள்ளைகளும் இருந்தார்கள்.

1நாளா 7:5. இசக்காருடைய மற்ற எல்லா வம்சங்களிலும் அவர்களுக்குச் சகோதரரான பராக்கிரமசாலிகள் தங்கள் வம்ச அட்டவணைகளின்படியெல்லாம் எண்பத்தேழாயிரம் பேராயிருந்தார்கள்.

இசக்கார் என்னும் பெயருக்கு "வெகுமதி" என்று பொருள். யாக்கோபின் குமாரனாகிய இசக்காரைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் 41 தடவைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபு இசக்கார் கோத்திரத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களை பலமுள்ளவர்களாகவும், பராக்கிரமசாலிகளாகவும் சொல்லியிருக்கிறார்.

"இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை" (ஆதி 49:14).

இசக்கார் கோத்திரத்தார் சுறுசுறுப்பாகவும், கடினமாகவும் உழைக்கக்கூடியவர்கள். அவர்கள் தங்கள் தேசத்தின் நலனில் மிகுந்த அக்கறை காண்பிக்கிறவர்கள். இசக்கார் கோத்திரத்தார் தங்கள் கூடாரங்களில் சந்தோஷமாய் குடியிருக்கிறவர்கள்.

"செபுலோனைக்குறித்து: செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையிலும், இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையிலும் சந்தோஷமாயிரு" (உபா 33:18).

இசக்கார் கோத்திரத்தின் பங்குவீதத்தில் மிகவும் செழிப்பான நிலங்கள் உள்ளது. இங்கே தானிய விளைச்சல் நன்றாயிருக்கிறது. ஆகையினால் இவர்கள் பல வருஷங்களுக்கு தேவையான தானியங்களை களஞ்சியங்களில் சேமித்து வைக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு வருஷமும் முன்மாரியும், பின்மாரியும் பெய்வதினால், ஒவ்வொரு வருஷத்திலும் பசுமையான புதிய நவதானியங்கள் இவர்களுக்கு கிடைக்கிறது.

இசக்கார் கோத்திரத்தார் வயல்நிலங்களில் வேலைசெய்கிறார்கள். இதனால் இந்தக் கோத்திரத்தார் எல்லோருக்குமே வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு திரளாயிருந்தாலும், அவர்கள் எல்லோருமே வயல்வெளிகளில் வேலை செய்யலாம்.

ஒரு தேசத்தில் ஜனத்தொகை அதிகமாக இருப்பதை யாரும் குறை சொல்லக்கூடாது. அதுவும் ஒரு ஆசீர்வாதம். எல்லோரும் வேலை செய்யவேண்டும். ஒருவரும் சோம்பேறியாய் இருக்கக்கூடாது. வேலை செய்யாமல் சும்மாயிருந்தால் தரித்திரம் வரும். சுறுசுறுப்பாக வேலை செய்தால் திருப்தியான போஜனம் கிடைக்கும்.

தாவீதின் நாட்களில் இசக்கார் கோத்திரத்தாரின் தொகை 20,600 பேர் (1நாளா 7:2). நாளாகமத்தின் முதலாம் புஸ்தகம் தாவீதின் நாட்களுக்கு பின்பு எழுதப்பட்டிருக்கவேண்டும். இசக்கார் கோத்திரத்தில் யுத்த மனுஷரான பராக்கிரமசாலிகளின் எண்ணிக்கை 36,000 பேர் ஆகும் (1நாளா 7:4).

இசக்கார் கோத்திரத்தாருக்கு அநேகம் பெண்ஜாதிகளும், பிள்ளைகளும் இருக்கிறார்கள் (1நாளா 7:4). அக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்திலே பல மனைவி விவாகம் வழக்கத்திலிருந்தது. சாலொமோனுக்கு 700 மனைவிகளும், 300 மறுமனையாட்டிகளும் இருந்தார்கள் (1இராஜா 11:3).

இசக்கார் கோத்திரத்தில் யுத்த மனுஷரானவர்கள் மொத்தம் 1,45,000 பேர் இருந்தார்கள்.

பென்யமீன் குமாரர்
1நாளா 7:6-12

1நாளா 7:6. பென்யமீன் குமாரர், பேலா, பெகேர், யெதியாயேல் என்னும் மூன்றுபேர்.

1நாளா 7:7. பேலாவின் குமாரர், எஸ்போன், ஊசி, ஊசியேல், யெரிமோத், இரி என்பவர்கள்; இவர்கள் தங்கள் பிதாக்களின் வம்சத்தில் பராக்கிரமசாலிகளான ஐந்து தலைவராயிருந்தார்கள்; இவர்கள் வம்ச அட்டவணைக்குள்ளானவர்கள் இருபத்தீராயிரத்து முப்பத்துநாலுபேர்.

1நாளா 7:8. பெகேரின் குமாரர், செமிரா, யோவாஸ், எலியேசர், எலியோனாய், உம்ரி, யெரிமோத், அபியா, ஆனதோத் அலமேத் என்பவர்கள்; இவர்கள் எல்லாரும் பெகேரின் குமாரர்.

1நாளா 7:9. தங்கள் பிதாக்களின் வம்சத்தலைவராகிய அவர்கள் சந்ததிகளின் அட்டவணைக்குள்ளான பராக்கிரமசாலிகள் இருபதினாயிரத்து இருநூறுபேர்.

1நாளா 7:10. யெதியாயேலின் குமாரரில் ஒருவன் பில்கான்; பில்கானின் குமாரர், எயூஷ், பென்யமீன், ஏகூத், கெனானா, சேத்தான், தர்ஷீஸ், அகிஷாகார் என்பவர்கள்.

1நாளா 7:11. யெதியாயேலின் குமாரராகிய இவர்கள் எல்லாரும் தங்கள் பிதாக்கள் வம்சத்தாரில் தலைவராயிருந்தார்கள்; இவர்களில் யுத்தத்திற்குப் போகத்தக்க சேவகரான பராக்கிரமசாலிகள் பதினேழாயிரத்து இருநூறுபேர்.

1நாளா 7:12. சுப்பீமும் உப்பீமும் ஈரின் குமாரர், ஊசிம் ஆகேரின் குமாரரில் ஒருவன்.

பென்யமீன் என்னும் பெயருக்கு "எனது வலதுகரத்தின் குமாரன்" என்று பொருள். 1நாளா 7-ஆவது அதிகாரத்தில் பென்யமீன் கோத்திரத்தாரைப்பற்றி சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இதற்கு அடுத்த அதிகாரத்தில், இவர்களைப்பற்றி அதிகமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

பென்யமீன் கோத்திரத்தில் பராக்கிரமசாலிகளின் எண்ணிக்கை சுமார் 60,000 பேர் (1நாளா 7:7,9,11). இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். தாவீதின் வீட்டாருக்கு விரோதமாக இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் கலகம் பண்ணியபோது, பென்யமீன் கோத்திரத்தார், தாவீதின் வீட்டாருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள்.

ஆதி 46:21 ஆவது வசனத்தில் பென்யமீனுக்கு பத்துக் குமாரர் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. நாளாகமம் புஸ்தகத்திலோ மூன்று குமாரர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். 1நாளா 8:1-2 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஐந்து குமாரரும், மற்றவர்களும் மரித்துப்போயிருக்க வேண்டும். எண் 26:38 ஆவது வசனத்திலும் ஐந்து குமாரர்மட்டுமே கூறப்பட்டிருக்கிறார்கள். மற்ற குமாரருக்கு என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. எகிப்து தேசத்தைவிட்டு, வெளியேறிப் போவதற்கு முன்பாகவே அவர்கள் எகிப்து தேசத்தில் மரித்துப் போயிருக்க வேண்டும். இங்கு கூறப்பட்டிருக்கும் மூன்று குமாரரும் பென்யமீனின் மூன்று கோத்திரங்களுக்குப் பிதாக்களானவர்கள்.

நப்தலியின் குமாரர்
1நாளா 7:13

1நாளா 7:13. நப்தலியின் குமாரரான பில்காளின் பேரன்மார், யாத்சியேல், கூனி, எத்சேர், சல்லூம் என்பவர்கள்.

நப்தலியின் குமாரரைப்பற்றி இந்த வசனத்தில் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. நப்தலி என்னும் பெயருக்கு "போராடி பெற்றது" என்று பொருள்.

நப்தலியின் குமாரரைப்பற்றி ஆதி 46:24 ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "நப்தலின் குமாரர் யாத்சியேல்,கூனி, எத்செர், சில்லேம் என்பவர்கள்". ஆதியாகமம் புஸ்தகத்தில் சில்லேம் என்னும் பெயர், நாளாகமம் புஸ்தகத்தில் சல்லூம் என்று பெயர் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

நப்தலியின் கோத்திரத்தாருடைய வம்சவரலாற்றைப்பற்றி விரிவாக சொல்லப்படவில்லை. ஒருவேளை இஸ்ரவேல் கோத்திரதார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனபோது, நப்தலி கோத்திரத்தாருடைய வம்சவரலாற்று அட்டவணை காணாமல் போயிருக்கலாம்.

மனாசேயின் புத்திரர்
1நாளா 7:14-19

1நாளா 7:14. மனாசேயின் புத்திரரில் ஒருவன் குலஸ்திரீயினிடத்தில் பிறந்த அஸ்ரியேல்; அவன் மறுமனையாட்டியாகிய அராமிய ஸ்திரீயினிடத்தில் கீலேயாத்தின் தகப்பனாகிய மாகீர் பிறந்தான்.

1நாளா 7:15. மாகீர் மாக்காள் என்னும் பேருள்ள உப்பீம் சுப்பீம் என்பவர்களின் சகோதரியை விவாகம்பண்ணினான்; மனாசேயின் இரண்டாம் குமாரன் செலோப்பியாத்; செலோப்பியாத்திற்குக் குமாரத்திகள் இருந்தார்கள்.

1நாளா 7:16. மாகீரின் பெண்ஜாதியாகிய மாக்காள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பேரேஸ் என்று பேரிட்டாள்; இவன் சகோதரன் பேர் சேரேஸ்; இவனுடைய குமாரர் ஊலாம், ரேகேம் என்பவர்கள்.

1நாளா 7:17. ஊலாமின் குமாரரில் ஒருவன் பேதான்; இவர்கள் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கீலேயாத் புத்திரர்.

1நாளா 7:18. இவன் சகோதரியாகிய அம்மொளேகேத் இஸ்கோதையும் அபியேசரையும் மாகலாவையும் பெற்றாள்.

1நாளா 7:19. செமிதாவின் குமாரர், அகியான், சேகேம், லிக்கே, அனியாம் என்பவர்கள்.

மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் யோர்தானுக்கு அப்புறத்திலும், மீதிக்கோத்திரத்தார் யோர்தானுக்கு இப்புறத்திலும் குடியிருக்கிறார்கள். யோர்தானுக்கு அப்புறத்திலே, கீலேயாத் தேசத்திலே குடியிருந்த மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரைப்பற்றி 1நாளா 5:23 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வசனப்பகுதியில், யோர்தானுக்கு இப்புறத்திலே குடியிருந்த மனாசேயின் மீதி பாதிக்கோத்திரத்தாரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மனாசேயின் புத்திரரில் ஒருவன் அராமிய ஸ்திரீயை விவாகம்பண்ணியிருக்கிறான். அராமியா ஸ்திரீ என்பது சீரிய தேசத்தாளைக் குறிக்கும் (1நாளா 7:14).

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தபோது, அவர்கள் புறஜாதி தேசத்தாரை விவாகம் செய்துகொண்டார்கள். மாகீர் என்பதும் சீரிய தேசத்து பெயர்.

எப்பிராயீமின் குமாரர் 1நாளா 7:20-29

1நாளா 7:20. எப்பிராயீமின் குமாரரில் ஒருவன் சுத்தெலாக்; இவனுடைய குமாரன் பேரேத்; இவனுடைய குமாரன் தாகாத்; இவனுடைய குமாரன் எலாதா; இவனுடைய குமாரன் தாகாத்.

1நாளா 7:21. இவனுடைய குமாரன் சாபாத்; இவனுடைய குமாரர் சுத்தெலாக், எத்சேர், எலியாத்; இவர்கள் தேசத்தில் பிறந்த காத்தூராருடைய ஆடுமாடுகளைப் பிடிக்கப்போனபடியால் அவர்கள் இவர்களைக் கொன்றுபோட்டார்கள்.

1நாளா 7:22. அவர்கள் தகப்பனாகிய எப்பிராயீம் அநேகநாள் துக்கங்கொண்டாடுகையில், அவன் சகோதரர் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்தார்கள்.

1நாளா 7:23. பின்பு அவன் தன் பெண்ஜாதியினிடத்தில் பிரவேசித்ததினால், அவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்; அவன், தன் குடும்பத்துக்குத் தீங்கு உண்டானதினால், இவனுக்குப் பெரீயா என்று பேரிட்டான்.

1நாளா 7:24. இவனுடைய குமாரத்தியாகிய சேராள் கீழ்ப்புறமும் மேற்புறமுமான பெத்தொரோனையும், ஊசேன்சேராவையும் கட்டினவள்.

1நாளா 7:25. அவனுடைய குமாரர், ரேப்பாக், ரேசேப் என்பவர்கள்; இவனுடைய குமாரன் தேலாக்; இவனுடைய குமாரன் தாகான்.

1நாளா 7:26. இவனுடைய குமாரன் லாதான்; இவனுடைய குமாரன் அம்மியூத்; இவனுடைய குமாரன் எலிஷாமா.

1நாளா 7:27. இவனுடைய குமாரன் நூன், இவனுடைய குமாரன் யோசுவா.

1நாளா 7:28. அவர்களுடைய காணியாட்சியும், வாசஸ்தலங்களும், கிழக்கேயிருக்கிற நாரானும், மேற்கேயிருக்கிற கேசேரும் அதின் கிராமங்களும், பெத்தேலும் அதின் கிராமங்களும், சீகேமும் அதின் கிராமங்களும், காசாமட்டுக்குமுள்ள அதின் கிராமங்களும்,

1நாளா 7:29. மனாசே புத்திரரின் பக்கத்திலே பெத்செயானும் அதின் கிராமங்களும், தானாகும் அதின் கிராமங்களும், மெகிதோவும் அதின் கிராமங்களும், தோரும் அதின் கிராமங்களுமே; இவ்விடங்களில் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் புத்திரர் குடியிருந்தார்கள்.

எப்பிராயீம் என்னும் பெயருக்கு "இரட்டிப்பான கனி" என்று பொருள். இவன் யோசேப்பின் இரண்டாம் குமாரன். எப்பிராயீமின் வம்சவரலாறு இந்த வசனப்பகுதியில் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தில் இருந்தார்கள். அந்தக் காலத்தில் எப்பிராயீம் புத்திரர் பட்ட வேதனைகளும் கஷ்டங்களும் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

எப்பிராயீம் கோத்திரத்தாருடைய சரித்திரத்திலே, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், அவர்களுடைய குடும்பங்கள் மத்தியிலே மிகப்பெரிய அழிவு உண்டாயிற்று. எப்பிராயீம் புத்திரர் காத்தூராருடைய ஆடுமாடுகளை பிடிக்கப்போனார்கள். காத் தேசத்தார் பெலிஸ்தர்கள். அவர்கள் இராட்சத பிறவிகள். காத் ஊரார் எப்பிராயீம் புத்திரரை பிடித்து கொன்றுபோட்டார்கள் (நாளா 7:21).

எப்பிராயீம் புத்திரர் தப்பு செய்தார்களா அல்லது காத் ஊரார் தப்பு செய்தார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை. எப்பிராயீமர் ஆடுமாடு மேய்கிறவர்கள். இவர்கள் எகிப்து தேசத்திலே கோசேன் என்னும் பகுதியில் குடியிருக்கிறார்கள். காத் ஊரார் எப்பிராயீமரின் ஆடுமாடுகளை பிடிக்க வந்தார்கள் என்றும், அவர்களை எதிர்த்து நின்ற எப்பிராயீமின் புத்திரரை, காத் ஊரார் கொன்றுபோட்டார்கள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

எப்பிராயீம் புத்திரரில் அநேகர் செத்துப்போனதற்கு வேறொரு விளக்கமும் சொல்லப்படுகிறது. காத் ஊரில் ஏராளமான ஆடுமாடுகள் இருக்கிறது. அவற்றைக் கொள்ளையிடுவதற்காக எப்பிராயீம் புத்திரர் காத் ஊருக்குப் போகிறார்கள். காத் ஊராரோ தங்களுடைய ஆடுமாடுகளை பாதுகாக்கும் வண்ணமாக, எப்பிராயீம் புத்திரரை கொன்றுபோடுகிறார்கள் என்றும் ஒரு விளக்கம் சொல்லப்படுகிறது.

காத் ஊராரே எப்பிராயீம் புத்திரருடைய ஆடுமாடுகளை பிடித்துக்கொள்ள வந்தார்கள் என்பதை வேதபண்டிதர்களில் அநேகர் ஏற்றுக்கொள்கிறார்கள். இக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்தார் எகிப்து தேசத்திலே குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் யுத்தவீரர்களல்ல. அவர்கள் ஆடுமாடுகளை மேய்க்கிறவர்கள். இவர்கள் மற்ற தேசத்தின்மீது யுத்தம்பண்ணப் போகிறவர்களுமல்ல.

எப்பிராயீமின் குமாரர்களில் சிலர் மரித்துப் போன சம்பவம், இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டு வெளியேறியதற்கு முன்பு நடைபெற்றிருக்க வேண்டும். யோசேப்பு இக்காலத்தில் எகிப்தின் பிரதான அதிகாரியாக இருந்தான் (ஆதி 46:20).

காத் ஊரார் எப்பிராயீம் புத்திரரைக் கொன்றுபோட்டபோது, செத்துப்போன தன் குமாரருக்காக எப்பிராயீம் அநேகநாள் துக்கங்கொண்டாடுகிறான். எப்பிராயீம் தன்னுடைய முதிர் வயதிலிருக்கிறான். தன்னுடைய குமாரரெல்லாம் செத்துப்போனது எப்பிராயீமுக்கு மிகுந்த வேதனையாகவும் துக்கமாகவும் இருக்கிறது. எப்பிராயீமுக்கு ஆறுதல் சொல்லுவதற்காக அவனுடைய சகோதரர், அவனிடத்தில் வருகிறார்கள்.

இந்த சம்பவத்திற்கு பின்பு எப்பிராயீமுக்கு அவனுடைய முதிர்வயதிலே ஒரு குமாரன் பிறக்கிறான். அவனுக்கு பெரீயா என்று பெயர் (நாளா 7:23). காயீன் ஆபேலைக் கொன்றுபோட்டான். கர்த்தர் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சேத்தைக் கொடுத்தார்.

"பின்னும் ஆதாம் தன் மனைவியை அறிந்தான்; அவள் ஒரு குமாரனைப் பெற்று: காயீன் கொலைசெய்த ஆபேலுக்குப் பதிலாக, தேவன் எனக்கு வேறொரு புத்திரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குச் சேத் என்று பேரிட்டாள்" (ஆதி 4:25).

எப்பிராயீமின் குமாரரெல்லாம் செத்துப்போனார்கள். கர்த்தர் அவனுக்கு பெரீயா என்னும் குமாரனைக் கொடுக்கிறார். கர்த்தர் நம்முடைய துக்கநாளுக்கு தக்கதாக, சந்தோஷ நாளை கட்டளையிடுவார்.

"கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்? உமது அடியாருக்காகப் பரிதபியும். நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும். தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" (சங் 90:13-15).

எப்பிராயீமுக்கு பெரீயா பிறந்ததினால் சந்தோஷம் உண்டானதாக தெரியவில்லை. பெரீயா என்னும் பெயருக்கு "துரதிஷ்டம்" என்று பொருள். பெரீயா பிறந்த பின்பும், எப்பிராயீம் தன்னுடைய செத்துப்போன குமாரரை நினைத்து வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறான். தன்னுடைய குடும்பத்திற்கு தீங்கு உண்டானதினால், எப்பிராயீம் தன் குமாரனுக்கு பெரீயா என்று பெயரிடுகிறான்.

எப்பிராயீம் கோத்திரத்தில் நூனின் குமாரனாகிய யோசுவா பிறந்திருக்கிறான் (1நாளா 7:27). கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு யோசுவா தீவிரமாக யுத்தம்பண்ணினான். யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தில் பிறந்திருப்பது, அந்தக் கோத்திரத்தாருக்கு மேன்மை. யோசுவா என்னும் பெயருக்கு, "கர்த்தர் இரட்சிப்பாயிருக்கிறார்" என்று பொருள்.

ஆசேரின் குமாரர் 1நாளா 7:30-40

1நாளா 7:30. ஆசேரின் குமாரர், இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயா என்பவர்கள்; இவர்கள் சகோதரி சேராள்.

1நாளா 7:31. பெரீயாவின் குமாரர், ஏபேர், மல்கியேல் என்பவர்கள்; இவன் பிர்சாவீத்தின் தகப்பன்.

1நாளா 7:32. ஏபேர் யப்லேத்தையும், சோமேரையும், ஒத்தாமையும், இவர்கள் சகோதரியாகிய சூகாளையும் பெற்றான்.

1நாளா 7:33. யப்லேத்தின் குமாரர், பாசாக், பிம்மால், அஸ்வாத் என்பவர்கள்; இவர்களே யப்லேத்தின் குமாரர்.

1நாளா 7:34. சோமேரின் குமாரர் அகி, ரோகா, எகூபா ஆராம் என்பவர்கள்.

1நாளா 7:35. அவன் சகோதரனாகிய ஏலேமின் குமாரர், சோபாக், இம்னா, சேலேஸ், ஆமால் என்பவர்கள்.

1நாளா 7:36. சோபாக்கின் குமாரர், சூவாக், அர்னெப்பர், சூகால், பேரி, இம்ரா,

1நாளா 7:37. பேசேர், ஓத், சம்மா சில்சா, இத்ரான், பேரா என்பவர்கள்.

1நாளா 7:38. யெத்தேரின் குமாரர், எப்புனே, பிஸ்பா, ஆரா என்பவர்கள்.

1நாளா 7:39. உல்லாவின் குமாரர், ஆராக், அன்னியேல், ரித்சியா என்பவர்கள்.

1நாளா 7:40. ஆசேரின் புத்திரராகிய இவர்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களின் வம்சத்தலைவரும் தெரிந்துகொள்ளப்பட்ட பராக்கிரமசாலிகளும், பிரபுக்களின் தலைவருமாயிருந்தார்கள்; அவர்கள் வம்ச அட்டவணைகளில் யுத்தத்திற்குப் போகத்தக்க சேவகரின் இலக்கம் இருபத்தாறாயிரம் பேர்.

ஆசேர் என்னும் பெயருக்கு "சந்தோஷம்" என்று பொருள். ஆசேர் கோத்திரத்தாரில் மிகவும் பிரபல்யமான ஒரு சிலரைப்பற்றி மாத்திரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆசேர் கோத்திரத்து வம்ச அட்டவணைகளில் யுத்தத்திற்கு போகத்தக்க சேவகரின் இலக்கம் மிகவும் குறைவாகயிருக்கிறது. ஆசேரின் புத்திரரில் யுத்தவீரர் 26,000 பேர் மாத்திரமே இருக்கிறார்கள்.

ஆசேர் கோத்திரத்தில் யுத்தவீரரின் எண்ணிக்கை குறைவாகயிருந்தாலும், இவர்கள் எல்லாரும் தங்கள் பிதாக்களின் வம்சத்தலைவரும் தெரிந்துகொள்ளப்பட்ட பராக்கிரமசாலிகளும், பிரபுக்களின் தலைவருமாயிருக்கிறார்கள் (1நாளா 7:40). இவர்கள் கொஞ்சம் பேராயிருந்தாலும், இவர்கள் எல்லோருமே ஞானமுள்ளவர்கள்.

8 அதிகாரம்

1நாளா 7-ஆவது அதிகாரத்தில் பென்யமீனின் புத்திரரைப்பற்றி சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் அவர்களுடைய வம்சவரலாறு விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

பென்யமீன் கோத்திரத்தாருக்கு பரிசுத்த வேதாகமத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. அவையாவன :

1. இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

2. பென்யமீன் கோத்திரத்தார் யூதாகோத்திரத்தாரை நெருங்கி சேர்ந்துகொள்கிறார்கள். இவர்கள் எருசலேமிலே குடியிருக்கிறார்கள். யூதாகோத்திரத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போய், அங்கே இருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்தார்கள்.

பென்யமீனின் சந்ததியார் (1நாளா 8:1-32). சவுலின் சந்ததியார் (1நாளா 8:33-40)

பென்யமீனின் சந்ததியார் 1நாளா 8:1-32

1நாளா 8:1. பென்யமீன், பேலா என்னும் தன் மூத்த குமாரனையும், அஸ்பால் என்னும் இரண்டாம் குமாரனையும், அகராக் என்னும் மூன்றாம் குமாரனையும்,

1நாளா 8:2. நோகா என்னும் நாலாம் குமாரனையும், ரப்பா என்னும் ஐந்தாம் குமாரனையும் பெற்றான்.

1நாளா 8:3. பேலாவுக்கு இருந்த குமாரர், ஆதார், கேரா, அபியூத் என்பவர்கள்.

1நாளா 8:4. அபிசுவா, நாமான், அகோவா,

1நாளா 8:5. கேரா, செப்புப்பான், ஊராம் என்பவர்கள் எகூதின் குமாரர்.

1நாளா 8:6. கேபாவின் குடிகளுக்கு மூப்பான தலைவராயிருந்து, இவர்களை மனாகாத்திற்கு அழைத்துக்கொண்டுபோனவர்கள், நாமான், அகியா, கேரா என்பவர்களே.

1நாளா 8:7. கேரா அவர்களை அங்கே அழைத்துக் கொண்டுபோனபின்பு, ஊசாவையும் அகியூதையும் பெற்றான்.

1நாளா 8:8. அவர்களை அனுப்பிவிட்டபின், சகராயீம் மோவாப் தேசத்திலே ஊசிம் பாராள் என்னும் தன் பெண்ஜாதிகளிடத்திலே பெற்ற பிள்ளைகளைத்தவிர,

1நாளா 8:9. தன் பெண்ஜாதியாகிய ஒதேசாலே யோவாபையும், சீபீயாவையும், மேசாவையும், மல்காமையும்,

1நாளா 8:10. எயூசையும், சாகியாவையும், மிர்மாவையும் பெற்றான்; பிதாக்களின் தலைவரான இவர்கள் அவனுடைய குமாரர்.

1நாளா 8:11. ஊசிம் வழியாய் அவன் அபிதூபையும் எல்பாலையும் பெற்றான்.

1நாளா 8:12. எல்பாலின் குமாரர், ஏபேர், மீஷாம், சாமேத்; இவன் ஓனோவையும் லோதையும் அதின் கிராமங்களையும் உண்டாக்கினவன்.

1நாளா 8:13. பெரீயாவும் சேமாவும் ஆயலோன் குடிகளுடைய பிதாக்களிலே தலைவராயிருந்தார்கள்; இவர்கள் காத்தின் குடிகளை ஓட்டிவிட்டார்கள்.

1நாளா 8:14. அகியோ, சாஷாக், எரேமோத்,

1நாளா 8:15. செபதியா, ஆராத், ஆதேர்,

1நாளா 8:16. மிகாயேல், இஸ்பா, யோகா என்பவர்கள் பெரீயாவின் குமாரர்.

1நாளா 8:17. செபதியா, மெசுல்லாம், இஸ்கி, ஏபேர்,

1நாளா 8:18. இஸ்மெராயி, இஸ்லியா, யோபாப் என்பவர்கள் எல்பாலின் குமாரர்.

1நாளா 8:19. யாக்கிம், சிக்ரி, சப்தி,

1நாளா 8:20. எலியேனாய், சில்தாய், எலியேல்,

1நாளா 8:21. அதாயா, பெராயா, சிம்ராத் என்பவர்கள் சிமியின் குமாரர்.

1நாளா 8:22. இஸ்பான், ஏபேர், ஏலியேல்,

1நாளா 8:23. அப்தோன், சிக்ரி, ஆனான்,

1நாளா 8:24. அனனியா, ஏலாம், அந்தோதியா,

1நாளா 8:25. இபிதியா, பெனூயேல் என்பவர்கள் சாஷாக்கின் குமாரர்.

1நாளா 8:26. சம்சேராய், செகரியா, அத்தாலியா,

1நாளா 8:27. யரெஷியா, எலியா, சிக்ரி என்பவர்கள் எரோகாமின் குமாரர்.

1நாளா 8:28. இவர்கள் தங்கள் சந்ததிகளின் பிதாக்களிலே தலைவராயிருந்து, எருசலேமிலே குடியிருந்தார்கள்.

1நாளா 8:29. கிபியோனிலே குடியிருந்தவன், கிபியோனின் மூப்பன்; அவன் பெண்ஜாதியின்பேர் மாக்காள்.

1நாளா 8:30. அவன் மூத்த குமாரன் அப்தோன் என்பவன்; மற்றவர்கள் சூர், கீஸ், பாகால், நாதாப்,

1நாளா 8:31. கேதோர், அகியோ, சேகேர் என்பவர்கள்.

1நாளா 8:32. மிக்லோத் சிமியாவைப் பெற்றான்; இவர்களும் தங்கள் சகோதரரோடுங்கூட எருசலேமிலே தங்கள் சகோதரருக்குச் சமீபத்தில் குடியிருந்தார்கள்.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் இஸ்ரவேல் கோத்திரத்தாரின் வம்ச வரலாற்றை வரிசையாக எழுதுகிறார். இதில் தாண் கோத்திரத்தார் சேர்க்கப்படவில்லை. பென்யமீனின் குமாரரைப் பற்றி ஆசிரியர் 40 வசனங்களில் விரிவாக எழுதுகிறார்.

சவுலின் குடும்பத்தாரைப் பற்றிய விவரம் இங்கு வருகிறது. (1நாளா 8:1-40). சிறையிருப்புக்குப் பின்பு இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டது. (1நாளா 8:28; 1நாளா 9:3,27) பென்யமீனும், மற்ற கோத்திரத்தாரும் பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்பே மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள். (எஸ்றா 2; எஸ்றா 4; நெகே 7:1-73; நெகே 10: 1-11:7,31; நெகே 12:34)

பென்யமீன் கோத்திரத்தார் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து வந்தார்கள். யூதாவிற்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். இவர்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள்.

இந்த வசனப்பகுதியில் பென்யமீன் கோத்திரத்தாரின் வம்ச அட்டவணை கொடுக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய சரித்திர சம்பவங்களைப்பற்றி இங்கு மிகவும் சுருக்கமாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

பென்யமீன் கோத்திரத்தாரின் வம்ச வரலாற்றைப்பற்றிச் சொல்லும்போது, சில சமயங்களில் அவர்கள் தகப்பனிலிருந்து குமாரன் வரையிலும் சந்ததி சந்ததியாக சொல்லப்படுகிறார்கள். வேறு சில சமயங்களில் அவர்கள் குமாரனிலிருந்து தகப்பன் வரையிலும் சந்ததி சந்ததியாகவும் சொல்லப்படுகிறார்கள்.

இஸ்ரவேலின் ஒரு சில கோத்திரங்களைப்பற்றிச் சொல்லும்போது, ஒரு சில வசனங்களில் அவர்களுடைய எண்ணிக்கையைப் பற்றியும், அவர்களுடைய பட்டணங்களைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

வம்சவரலாற்று அட்டவணைகளைப் பற்றி சொல்லப்பட்டிருக்கும் வசனங்கள் சிலவற்றில், அவர்களோடு தொடர்புடைய சரித்திர சம்பவங்களும் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறது. சில கோத்திரங்களைப்பற்றிய சரித்திர சம்பவங்கள் ஒன்றுமே சொல்லப்படவில்லை.

வேதவசனங்களில் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் சரித்திர சம்பவங்கள் சுருக்கமாகவோ அல்லது விரிவாகவோ இருக்கலாம். ஆனாலும் அவையெல்லாம் ஒன்றாய் ஒத்துப்போகிறது. காலப்போக்கில் வேதாகமத்தின் ஆவணங்கள் சில காணாமல்போயிருக்கலாம். அல்லது சரித்திர ஆவணங்கள் கிழிந்து பாழசாய்ப் போயிருக்கலாம். இதனால் இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தைப்பற்றிய முழுவிவரம் நமக்கு கிடைக்கவில்லை.

தாண் கோத்திரத்தார், ரூபன் கோத்திரத்தார் ஆகியோருக்கு என்ன சம்பவத்தது என்றே தெரியவில்லை. அவர்கள் சரித்திரத்தில் மொத்தமாக காணாமல் போய்விட்டார்கள்.

நாளாகமம் புஸ்தகத்தில் இஸ்ரவேல் புத்திரரின் வம்சவரலாற்றை பற்றி சொல்லப்பட்டிருந்தாலும், வம்ச அட்டவணை வரிசையில் ஒரு சில இடைவெளி காணப்படுகிறது. ஒரு கோத்திரத்தைப்பற்றிச் சொல்லப்படும்போது, அந்த செய்தி திடீரென்று நின்றுவிடுகிறது. அங்கே வேறொரு கோத்திரத்தைப்பற்றிய செய்தி ஆரம்பமாகிறது.

இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு, அவர்களைப்பற்றிய விவரம் பரிசுத்த வேதாகமத்தில் எங்கெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவையெல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து, கோர்த்து, மொத்தமாக தியானிக்கவேண்டும்.

சரித்திரத்திலே மிகவும் பிரபல்யமான ஆட்கள், வல்லரசாக விளங்கிய தேசங்கள் ஆகியவற்றின் விவரம் மண்ணோடு மண்ணாக புதைந்துவிட்டது. ஆனால் இஸ்ரவேல் புத்திரருடைய சரித்திர சம்பவங்கள் நமக்கு கிடைத்திருப்பது கர்த்தருடைய கிருபை. கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சரித்திரத்தைப் பாதுகாக்கிறார்.

பென்யமீன் கோத்திரத்தார் நியாயாதிபதிகளின் காலத்தில் மிகவும் தாழ்வான நிலமையிலிருந்தார்கள். பென்யமீன் கோத்திரத்தார் செய்த அக்கிரமத்தினால், அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. 600 பேர் மாத்திரமே நீதியின் பட்டயத்திற்கு தப்பினார்கள். ஆனாலும் பென்யமீன் கோத்திரமே வம்சவரலாற்று அட்டவணையில், மற்ற கோத்திரத்தாரைவிட, நேர்த்தியாக பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டிருக்கிறது.

பென்யமீன் கோத்திரத்தில் ஏகூதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவனுடைய சந்ததியில் வந்தவர்கள் மோவாப் தேசத்திலே பிள்ளைகளைப் பெற்றிருக்கிறார்கள் (நாளா 8:8). ஏகூத் என்பவன் இஸ்ரவேலின் இரண்டாவது நியாயாதிபதியாயிருந்தவன். மோவாபியர் இஸ்ரவேலரை ஒடுக்கியபோது ஏகூத் மோவாபின் ராஜாவைக் கொன்றுபோட்டான்.

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்" (நியா 3:15).

காத்தின் குடிகளை ஓட்டிவிட்ட பென்யமீன் புத்திரைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நாளா 8:13). இவர்கள் ஒருவேளை எப்பிராயீமரை கொன்று போட்டவர்களாயிருக்கலாம்.

"இவனுடைய குமாரன் சாபாத்; இவனுடைய குமாரர் சுத்தெலாக், எத்சேர், எலியாத்; இவர்கள் தேசத்தில் பிறந்த காத்தூராருடைய ஆடுமாடுகளைப் பிடிக்கப்போனபடியால் அவர்கள் இவர்களைக் கொன்றுபோட்டார்கள்" (நாளா 7:21).

பெரியா என்பவன் காத்தின் குடிகளை ஓட்டிவிட்ட பென்யமீன் புத்திரருக்கு தலைவராயிருக்கிறான். பென்யமீன் புத்திரரில் அநேகர் எருசலேமிலே குடியிருந்தார்கள். இவர்களைப்பற்றிய குறிப்பு இரண்டு வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது (1நாளா 8:28,32).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பென்யமீன் புத்திரர், தங்கள் முன்னோர் குடியிருந்த எருசலேம் நகரத்திற்கே திரும்பவும் வந்து, அங்கே மனப்பூர்வமாய்க் குடியேறுகிறார்கள்.

"ஆனாலும் எருசலேமிலே குடியிருக்க மனப்பூர்வமாய்ச் சம்மதித்த மனுஷர்களையெல்லாம் ஜனங்கள் வாழ்த்தினார்கள்" (நெகே 11:2).

சவுலின் சந்ததியார் 1நாளா 8:33-40

1நாளா 8:33. நேர் கீசைப் பெற்றான்; கீஸ் சவுலைப் பெற்றான்; சவுல் யோனத்தானையும், மல்கி சூவாவையும், அபினதாபையும், எஸ்பாலையும் பெற்றான்.

1நாளா 8:34. யோனத்தானின் குமாரன் மேரிபால்; மேரிபால் மீகாவைப் பெற்றான்.

1நாளா 8:35. மீகாவின் குமாரர், பித்தோன், மேலேக், தரேயா, ஆகாஸ் என்பவர்கள்.

1நாளா 8:36. ஆகாஸ் யோகதாவைப் பெற்றான்; யோகதா அலமேத்தையும், அஸ்மாவேத்தையும், சிம்ரியையும் பெற்றான்; சிம்ரி மோசாவைப் பெற்றான்.

1நாளா 8:37. மோசா பினியாவைப் பெற்றான்; இவன் குமாரன் ரப்பா; இவன் குமாரன் எலியாசா; இவன் குமாரன் ஆத்சேல்.

1நாளா 8:38. ஆத்சேலுக்கு ஆறுகுமாரர் இருந்தார்கள்; அவர்கள் நாமங்களாவன, அஸ்ரீக்காம், பொக்குரு, இஸ்மவேல், செகரியா, ஒபதியா, ஆனான்; இவர்கள் எல்லாரும் ஆத்சேலின் குமாரர்.

1நாளா 8:39. அவன் சகோதரனாகிய எசேக்கின் குமாரர், ஊலாம் என்னும் மூத்தகுமாரனும், ஏகூஸ் என்னும் இரண்டாம் குமாரனும், எலிபேலேத் என்னும் மூன்றாம் குமாரனுமே.

1நாளா 8:40. ஊலாமின் குமாரர் பராக்கிரமசாலிகளான வில்வீரராய் இருந்தார்கள்; அவர்களுக்கு அநேகம் புத்திரர் பௌத்திரர் இருந்தார்கள்; அவர்கள் தொகை நூற்றைம்பதுபேர்; இவர்கள் எல்லாரும் பென்யமீன் புத்திரர்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் தாவீதின் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோனார்கள். அவர்களுடைய கோத்திரங்களில் வந்த ராஜாக்களின் வம்சங்களைப்பற்றி, நாளாகமம் புஸ்தகத்திலே, வம்சவரலாற்று அட்டவணை எதுவும் கொடுக்கப்படவில்லை. யெரொபெயாமின் வீட்டாரைப்பற்றியோ, பாஷாவின் வீட்டாரைப்பற்றியோ, உம்ரி, யெகூ ஆகியோரின் வீட்டாரைப்பற்றியோ நாளாகமம் புஸ்தகத்தில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இவர்கள் எல்லோரும் விக்கிரகாராதனைக்காரர்கள்.

ஆனாலும் சவுலின் குடும்பத்தாரைப்பற்றி நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது ராஜ்யபாரம் பண்ணுவதற்கு முன்பாகவே, சவுல் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருந்தார்.

சவுலின் குடும்பத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நேர் கீசைப் பெற்றான், கீஸ் சவுலைப் பெற்றான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சவுலின் தகப்பனாரும், சவுலின் தாத்தாவும் சவுலின் வம்சவரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்கள் (1நாளா 8:33).

சவுல் நேரின் குமாரன் என்றும், அபியேலின் பேரன் என்றும் சாமுவேலின் முதலாம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது "கீஸ் சவுலின் தகப்பன்; அப்னேரின் தகப்பனாகிய நேர் ஆபியேலின் குமாரன்" (1சாமு 14:51).

சவுல் பெற்ற குமாரருடைய பெயர் மாத்திரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சவுலின் குமாரர் பெற்ற பிள்ளைகளைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆனாலும் யோனத்தானின் பிள்ளைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. யோனத்தான் தாவீதுக்கு நெருங்கிய சிநேகிதனாயிருந்தான். இதனால் சவுலின் குடும்ப வம்சவரலாற்றில், யோனத்தானுக்கு விசேஷித்த மேன்மை கிடைத்திருக்கிறது (1நாளா 8:34).

சவுலின் குடும்ப வரலாறு ஊலாமோடு முடிவு பெறுகிறது. ஊலாமின் குமாரர் பராக்கிரமசாலிகளான வில்வீரராயிருந்தார்கள். இவர்கள் பென்யமீன் கோத்திரத்தில் மிகவும் பிரசித்திப்பெற்றவர்கள். அவர்களுடைய தொகை 150 பேர்.

9 அதிகாரம்

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் சிறையிருப்புக்குப்போனபோது, வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் பிரிந்திருந்தார்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறபோது, கோத்திர பாகுபாடு எதுவுமில்லாமல், இஸ்ரவேலராக, எருசலேம் நகரத்திலே குடியேறுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், எருசலேமுக்கு வருகிறார்கள். எருசலேமிலே தேவாலயம் பாழடைந்து இடிந்து கிடக்கிறது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள், தேவாலயத்தினுடைய பழைய அஸ்திபாரத்தின்மீது, அதை திரும்பவும் கட்டியெழுப்ப ஆரம்பிக்கிறார்கள்.

எருசலேமிலே வந்து குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர் (நாளா 9:1-9). ஆசாரியர்கள் (நாளா 9:10-13). லேவியரும் நிதனீமியரும் (நாளா 9:14-26).

ஆசாரியர், லேவியர் ஆகியோரின் பணிவிடைகள் (நாளா 9:27-34). சவுலின் வம்சவரலாறு (நாளா 9:35-44).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள்

1நாளா 9:1-13

1நாளா 9:1. இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் வம்சவரலாற்றின்படி எண்ணப்பட்டார்கள்; இவர்கள் நாமங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது, யூதா கோத்திரத்தார் தங்கள் துரோகத்தினிமித்தம், பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டார்கள்.

1நாளா 9:2. தங்கள் காணியாட்சியிலும் தங்கள் பட்டணங்களிலும் முன் குடியிருந்தவர்கள் இஸ்ரவேலரும் ஆசாரியரும் லேவியரும் நிதினீமியருமே.

1நாளா 9:3. யூதா புத்திரரிலும், பென்யமீன் புத்திரரிலும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் புத்திரரிலும், எருசலேமில் குடியிருந்தவர்கள் யாரென்றால்,

1நாளா 9:4. யூதாவின் புத்திரனாகிய பேரேசின் சந்ததியில் பானியின் குமாரனாகிய இம்ரியின் மகனான உம்ரிக்குப் பிறந்த அம்மியூதின் குமாரன் ஊத்தாய்.

1நாளா 9:5. சேலாவின் சந்ததியில் மூத்தவனாகிய அசாயாவும், அவன் பிள்ளைகளும்,

1நாளா 9:6. சேராவின் சந்ததியில் யெகுவேலும், அவன் சகோதரராகிய அறுநூற்றுத் தொண்ணூறுபேருமே.

1நாளா 9:7. பென்யமீன் புத்திரரில் அசெனூவாவின் குமாரனாகிய ஒதாவியாவுக்குப் பிறந்த மெசுல்லாமின் மகன் சல்லு.

1நாளா 9:8. எரோகாமின் குமாரன் இப்னெயா; மிக்கிரியின் குமாரனாகிய ஊசியின் மகன் ஏலா; இப்னியாவின் குமாரனாகிய ரேகுவேலுக்குப் பிறந்த செபதியாவின் மகன் மெசுல்லாம் என்பவர்களும்;

1நாளா 9:9. தங்கள் சந்ததிகளின்படி இருந்த இவர்கள் சகோதரராகிய தொளாயிரத்து ஐம்பத்தாறுபேருமே; இந்த மனுஷர் எல்லாரும், தங்கள் பிதாக்களின் வம்சத்திலே பிதாக்களின் தலைவராயிருந்தார்கள்.

1நாளா 9:10. ஆசாரியர்களில் யெதாயா, யோயாரீப், யாகீன்.

1நாளா 9:11. அகித்தூபின் குமாரனாகிய மெராயோதின் மகன் சாதோக்குக்குப் பிறந்த மெசுல்லாவின் குமாரனாகிய இல்க்கியாவின் மகன் அசரியா என்பவன் தேவாலயத்து விசாரணைக்கர்த்தன்.

1நாளா 9:12. மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூருக்குப் பிறந்த எரோகாமின் மகன் அதாயா; இம்மேரின் குமாரனாகிய மெசில்லேமித்தின் மகன் மெசுல்லாமுக்குப் பிறந்த யாசெராவின் குமாரனாகிய ஆதியேலின் மகன் மாசாய் என்பவர்களும்,

1நாளா 9:13. அவர்கள் சகோதரரும், தங்கள் பிதாக்களின் வம்சத்தலைவரான ஆயிரத்து எழுநூற்று அறுபதுபேர் தேவாலயத்துக்கடுத்த பணிவிடைக்குத் திறமையுள்ளவர்களாயிருந்தார்கள்.

"இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் வம்சவரலாற்றின்படி எண்ணப்பட்டார்கள்; இவர்கள் நாமங்கள் இஸ்ரவேல் ராஜாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" (1நாளா 9:1) என்று இந்த அதிகாரத்தின் முதலாவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

நாளாகமம் புஸ்தகத்தை எழுதின ஆசிரியர் இஸ்ரவேல் புத்திரரின் சிறையிருப்பைப்பற்றிச் சொல்லும்போது, "யூதா கோத்திரத்தார் தங்கள் துரோகத்தினிமித்தம், பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டார்கள்" (1நாளா 9:1) என்று எழுதுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சிறையிருப்புக்கான காரணம் சொல்லப்பட்ட பின்பு, சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் தங்கள் பட்டணங்களில் குடியேறுகிறார்கள். அவர்களில் விசேஷமாய் எருசலேம் நகரத்திலே குடியேறியவர்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

"இஸ்ரவேலர் எல்லாரும் தங்கள் வம்சவரலாற்றின்படி எண்ணப்பட்டார்கள்" என்று முதலாவது வசனத்தில், முதல் வாக்கியமாக எழுதப்பட்டிருக்கிறது.

சிறையிருப்புக்கு முன்பாக யூதர்கள் "இஸ்ரவேலர்கள்" என்று அழைக்கப்பட்டது போலவே சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களும் "இஸ்ரவேலர்" என்றே அழைக்கப்படுகிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் யூதாகோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும், எப்பிராயீம், மனாசே ஆகிய கோத்திரத்தாரும், மேலும் இஸ்ரவேலின் மற்ற பத்துக்கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். ஆகையினால் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "யூதா புத்திரரிலும், பென்யமீன் புத்திரரிலும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் புத்திரரிலும், எருசலேமில் குடியிருந்தவர்கள்" (1நாளா 9:3) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

யூதாதேசத்தார் சிறைப்பட்டுப்போவதற்கு முன்பாகவே, அசீரியர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை சிறைப்பிடித்துக்கொண்டு போனார்கள். அப்போது வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்த இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரில் பலர், அசீரியரின் சிறையிருப்புக்குத்தப்பித்து, தெற்கு யூதாதேசத்திற்கு ஓடி வந்துவிட்டார்கள்.

அதன்பின்பு அசீரியர்கள் தெற்கு யூதாதேசத்தையும் சிறைப்பிடித்தார்கள். அப்போது தெற்கு யூதாதேசத்தாரோடு, வடக்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து தப்பித்து வந்த இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாரும், அசீரிய தேசத்து சிறையிருப்புக்குப்போனார்கள்.

அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப் போனவர்கள், இரண்டு தேசங்களாக பிரிந்துபோனாலும், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து அவர்கள் திரும்பி வரும்போது, தங்களுக்குள் பிரிவினை இல்லாமல், இஸ்ரவேல் புத்திரராக திரும்பி வருகிறார்கள். இந்த சம்பவத்தை ஓசியாவும் எசேக்கியேலும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

"அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தேசத்திலிருந்து புறப்பட்டுவருவார்கள்; யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும்" (ஓசி 1:11).

"அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை" (எசே 37:22).

உலோகங்கள் பிரிந்திருந்தாலும், அவற்றை சூளையில் வைத்து உருக்கும்போது, பிரிந்த உலோகங்கள் ஒன்றாய்ச் சேரும். அதுபோலவே தெற்கு யூதாதேசத்தாரும், வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும் இரண்டு தேசங்களாகப் பிரிந்திருந்தாலும், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே அவர்கள் உருக்கப்பட்டு, ஒரே இஸ்ரவேல் புத்திரராக, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்கள் செருபாபேல், யோசுவா, நெகேமியா, எஸ்றா ஆகியோரின் காலத்தில், தங்கள் காணியாட்சியிலும் தங்கள் பட்டணங்களிலும் வந்து குடியேறுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் நிதனீமியரும் இருக்கிறார்கள். இவர்கள் தேவாலயத்தின் பணிவிடைக்காரர்கள். லேவியருக்கு உதவி புரிவதற்காக இவர்களில் 50 பேர் அழைத்துச் செல்லப்பட்டார்கள். (எஸ்றா 2:43,58,70; எஸ்றா 7:7,24; எஸ்றா 8:17-20; நெகே 3:26,31; நெகே 7:46,60,73; நெகே 10:28; நெகே 11:3,21).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த இஸ்ரவேல் புத்திரர், "எப்பிராயீம் மனாசே என்பவர்களின் புத்திரர்" என்று பொதுவாக அழைக்கப்படுகிறார்கள் (நாளா 9:3) இவர்கள் பத்துக் கோத்திரத்தின் பிரதிநிதிகள். வடக்கு ராஜ்யம் எப்பிராயீம் என்று பலதடவை அழைக்கப்பட்டிருக்கிறது. பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேலின் 13 கோத்திரத்தாரும் திரும்பி வந்து, ஒரு புதிய தேசமாகத் தங்களை ஸ்தாபிக்கிறார்கள்.

இவர்களில் யூதா கோத்திரத்தாரும், பென்யமீன் கோத்திரத்தாரும் மட்டுமல்லாமல் எல்லாக் கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். மற்றக் கோத்திரத்தாரும் "யூதர்கள்" என்றே அழைக்கப்படுகிறார்கள். (எஸ்றா 6:21; நெகே 10:28-29; அப் 13:16).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து ஆசாரியர்களும் திரும்பி வருகிறார்கள். பாபிலோன் தேசத்திலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்த முதலாவது குழுவினரில், ஆசாரியர் இடம் பெற்றிருப்பது மிகவும் மேன்மையான காரியம். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஆசாரியர்கள் தேவாலயத்திற்கடுத்த பணிவிடைக்கு திறமையுள்ளவர்களாயிருக்கிறார்கள் (1நாளா 9:13).

கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தருக்கு தொடர்ந்து ஆராதனை நடைபெறவேண்டும். ஆராதனைக்கு விடுமுறை கிடையாது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் துதிகளுக்கு பாத்திரர். அவர் துதிகளின் மத்தியிலே வாசம்பண்ணுகிறவர். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஆசாரியர்கள், தேவாலயத்துக்கடுத்த பணிவிடைக்கு திறமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை சேவிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து ஊழியர்கள் எப்போதும் கர்த்தரைத் துதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதியுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யக்கூடிய தகுதியுள்ளவர்களை மாத்திரமே, ஊழியக்காரர்களாய் நியமிக்கவேண்டும்.

"புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2கொரி 3:6).

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவருடைய ஊழியத்தை செய்வதற்கு, சரீரப்பிரகாரமாகவும் தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அதோடு அவர்கள் ஆவிக்குரிய ரீதியாகவும் தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தர் மீதுள்ள பக்தி வைராக்கியம் நிரம்பியிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள், எப்போதும் பரிசுத்த ஆவியினால் நிரம்பி, ஆவிக்குரிய அனலோடிருக்கவேண்டும்.

எருசலேமுக்கு திரும்பி வந்தவர்கள் 1நாளா 9:14-34

1நாளா 9:14. லேவியரில் மெராரியின் சந்ததியான அசபியாவின் குமாரனாகிய அஸ்ரீகாமுக்குப் பிறந்த அசூபின் மகன் செமாயா,

1நாளா 9:15. பக்பக்கார், ஏரேஸ், காலால், ஆசாபின் குமாரனாகிய சிக்ரிக்குப் பிறந்த மிகாவின் மகன் மத்தனியா,

1நாளா 9:16. எதுத்தூனின் குமாரனாகிய காலாலுக்குப் பிறந்த செமாயாவின் மகன் ஒபதியா; நெத்தோபாத்தியரின் கிராமங்களில் குடியிருந்த எல்க்கானாவின் குமாரனாகிய ஆசாவின் மகன் பெரகியா,

1நாளா 9:17. வாசல் காவலாளிகளாகிய சல்லூம், அக்கூப், தல்மோன், அகிமான் என்பவர்களும், இவர்கள் சகோதரருமே; இவர்கள் தலைவன் சல்லூம்.

1நாளா 9:18. லேவிபுத்திரரின் சேனைகளில் இவர்கள் கிழக்கேயிருக்கிற ராஜாவின் வாசலைக் காவல்காத்துவந்தார்கள்.

1நாளா 9:19. கோராகின் குமாரனாகிய எபியாசாபுக்குப் பிறந்த கோரேயின் மகன் சல்லூமும், அவன் பிதாவின் வம்சத்தாராகிய அவனுடைய சகோதரருமான கோராகியர் பணிவிடைவேலையை விசாரித்து, அவர்கள் பிதாக்கள் கர்த்தருடைய பாளயத்திலே வாசஸ்தலத்திற்குப்போகிற வழியைக் காவல்காத்ததுபோல, வாசஸ்தலத்து வாசல்களைக் காத்துவந்தார்கள்.

1நாளா 9:20. எலெயாசாரின் குமாரனாகிய பினேகாசுடனே கர்த்தர் இருந்தபடியினால், அவன் முற்காலத்திலே அவர்கள்மேல் விசாரணைக்காரனாயிருந்தான்.

1நாளா 9:21. மெசெல்மியாவின் குமாரனாகிய சகரியா ஆசரிப்புக் கூடாரவாசல் காவல்காரனாயிருந்தான்.

1நாளா 9:22. வாசல்களைத் காக்கிறதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்களெல்லாரும் இருநூற்றுப் பன்னிரண்டுபேராயிருந்து, தங்கள் கிராமங்களின்படியே தங்கள் வம்சத்து அட்டவணைகளில் எழுதப்பட்டார்கள்; தாவீதும், ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலும், அவர்களைத் தங்கள் வேலைகளில் வைத்தார்கள்.

1நாளா 9:23. அப்படியே அவர்களும், அவர்கள் குமாரரும் கர்த்தருடைய ஆலயமாகிய வாசஸ்தலத்து வாசல்களைக் காக்கிறவர்களை முறைமுறையாய் விசாரித்து வந்தார்கள்.

1நாளா 9:24. வாசல்களைக் காக்கிறவர்கள் நாலு திசைகளாகிய கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்தார்கள்.

1நாளா 9:25. அவர்கள் சகோதரர் தங்கள் கிராமங்களிலிருந்து, ஏழுநாளுக்கு ஒருவிசை மாறிமாறி அவர்களோடிருக்க வருவார்கள்.

1நாளா 9:26. தேவாலயத்தின் பண்டகசாலைகள் மேலும் பொக்கிஷசாலைகள்மேலுமுள்ள விசாரணை உத்தியோகம் லேவியரான அந்த நாலு பிரதான காவலாளர்வசத்தில் ஒப்புவிக்கப்பட்டது.

1நாளா 9:27. காவல் அவர்களுக்கு ஒப்புவித்திருந்தபடியால் அவர்கள் தேவாலயத்தைச் சுற்றிலும் இராத்தங்கியிருந்து, காலமே கதவுகளைத் திறந்துவிடுவார்கள்.

1நாளா 9:28. அவர்களில் சிலரிடத்தில் ஆராதனை பணிமுட்டுகள் ஒப்புவித்திருந்தது; அவர்கள் அவைகளை எண்ணி உள்ளே கொண்டு போய், எண்ணி வெளியே கொண்டுவருவார்கள்.

1நாளா 9:29. அவர்களில் சிலர் மற்றப் பணிமுட்டுகளின்மேலும், பரிசுத்த பாத்திரங்கள் எல்லாவற்றின்மேலும், மெல்லிய மா, திராட்சரசம், எண்ணெய், சாம்பிராணி, சுகந்தவர்க்கங்களின்மேலும் விசாரணைக்காரராயிருந்தார்கள்.

1நாளா 9:30. ஆசாரியரின் குமாரரில் சிலர் சுகந்தவர்க்கத்தால் பரிமளதைலம் இறக்குவார்கள்.

1நாளா 9:31. லேவியரில் கோராகியனான சல்லூமின் மூத்த குமாரனாகிய மத்தித்தியாவுக்குப் பலகாரம் சுடுகிற வேலையின் விசாரிப்பு ஒப்புவித்திருந்தது.

1நாளா 9:32. அவர்கள் சகோதரராகிய கோகாத்தியரின் புத்திரரில் சிலருக்கு ஓய்வுநாள் தோறும் சமுகத்து அப்பங்களை ஆயத்தப்படுத்தும் விசாரிப்பு இருந்தது.

1நாளா 9:33. இவர்களில் லேவியருடைய பிதாக்களின் தலைவராகிய சங்கீதக்காரர் இரவும் பகலும் தங்கள் வேலையை நடத்தவேண்டியிருந்தபடியால், மற்ற வேலைக்கு நீங்கலாய்த் தங்கள் அறைகளில் இருந்தார்கள்.

1நாளா 9:34. லேவியரில் பிதாக்களின் தலைவராகிய இவர்கள் தங்கள் சந்ததிகளுக்குத் தலைமையானவர்கள்; இவர்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து எருசலேம் நகரத்திற்கு திரும்பி வந்தவுடனேயே, கர்த்தருடைய ஊழியம் மறுபடியும் ஆரம்பமாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் பாபிலோன் தேசத்திலே கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், அவரை ஆராதிக்கும் ஆராதனைகளும் இல்லாமல், சிறையிருப்பிலே இருந்தார்கள். இப்போதோ அவர்களுக்கு சிறையிருப்பிலிருந்து விடுதலை உண்டாயிற்று.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த ஆசாரியர்களும் லேவியர்களும், கர்த்தருடைய ஆராதனைகளை மறுபடியும் ஆரம்பிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், ஆராதனைகளும் மறுபடியும் நடைபெறுகிறது.

சாலொமோன் எருசலேமிலே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டினார். ஆலயம் கட்டப்படுவதற்கு முன்பாக ஆசரிப்புக்கூடாரமே கர்த்தருடைய வாசஸ்தலமாயிருந்தது. ஆசரிப்புக்கூடாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக தூக்கி சுமந்து செல்லலாம்.

இஸ்ரவேல் புத்திரரின் சரித்திரத்திலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்படாத காலத்தில், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை ஆராதித்தார். ஆசரிப்புக்கூடாரத்தை பரிசுத்தப்படுத்தினார்கள். அங்கே கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும், தூபபலிகளையும் செலுத்தினார்கள்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டப்படாத காலத்திலும், இஸ்ரவேல் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரை பயபக்தியோடு ஆராதித்தது, புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு ஒரு நல்ல முன்மாதிரியாயிருக்கிறது. நம்முடைய ஊரில் சபை கட்டிடம் இல்லாவிட்டாலும், நாம் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். கர்த்தரை ஆராதிப்பதற்கு, சபை கட்டிடம் இல்லாதது ஒரு தடையாயிருக்கக்கூடாது.

தாவீது, சாமுவேல் ஆகியோரின் காலத்திலேயே, ஆசரிப்புக்கூடாரத்திலே, கர்த்தருடைய ஆராதனையை நடத்துவதற்கு, ஆசாரியரும் லேவியரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள் (1நாளா 9:22).

தாவீதும், ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலும் ஆகிய இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஆலோசனை கூறியிருந்திருக்க வேண்டும். கட்டப்படப்போகிற தேவாலயத்தைப் பற்றியும், நடைபெறப் போகிற ஆராதனையைப் பற்றியும் இவர்கள் இருவரும் கர்த்தருடைய வெளிப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டும்.

சாமுவேல் தன்னுடைய காலத்திலே ஆராதனை முறைமைகளை திட்டம்பண்ணினார். கர்த்தருடைய ஆராதனைக்கு சாமுவேல் அஸ்திபாரமிட்டார். சாமுவேலின் காலத்தில் தேவாலயம் கட்டப்படவில்லை. தாவீதின் காலத்தில் ஆராதனை முறைமைகள் ஒழுங்குபடுத்தப்பட்டது. சாமுவேலும் தாவீதும் தங்களுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாகவோ அல்லது சுயசித்தத்தின் பிரகாரமாகவோ, ஆராதனை முறைமைகளை திட்டம் பண்ணவில்லை. இவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரம், ஆராதனை முறைமைகளை வகுத்தார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களில் அநேகர், எருசலேமுக்கு வந்து அங்கே குடியிருக்கிறார்கள். "லேவியரில் பிதாக்களின் தலைவராகிய இவர்கள் தங்கள் சந்ததிகளுக்குத் தலைமையானவர்கள்; இவர்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள்" (1நாளா 9:34).

எருசலேமிலே குடியிருந்தவர்கள் சங்கீதக்காரரின் தலைவர்கள். இவர்கள் இரவும், பகலும் தங்கள் வேலையை நடத்த வேண்டும். ஆகையினால் இவர்கள் எருசலேமிலேயே தங்களை அறைகளில் தங்கியிருந்தார்கள். (1நாளா 9:33-34).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் அநேகர் எருசலேமிலே குடியிருந்தாலும், அவர்களில் சிலர் கிராமங்களிலும் குடியிருக்கிறார்கள்.

"எதுத்தூனின் குமாரனாகிய காலாலுக்குப் பிறந்த செமாயாவின் மகன் ஒபதியா; நெத்தோபாத்தியரின் கிராமங்களில் குடியிருந்த எல்க்கானாவின் குமாரனாகிய ஆசாவின் மகன் பெரகியா" (1நாளா 9:16).

வாசல்களைத் காக்கிறதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்களெல்லாரும் இருநூற்றுப் பன்னிரண்டுபேராயிருந்து, தங்கள் கிராமங்களின்படியே தங்கள் வம்சத்து அட்டவணைகளில் எழுதப்பட்டார்கள் (1நாளா 9:22).

கிராமங்களில் குடியிருக்கிறவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்தாலும், அவர்களால் எருசலேம் நகரத்திலே குடியிருக்க முடியவில்லை. அவர்களுக்கு எருசலேமிலே போதுமான அளவு வீடு வசதிகள் கிடைக்கவில்லை. ஆகையினால் "அவர்கள் சகோதரர் தங்கள் கிராமங்களிலிருந்து, ஏழுநாளுக்கு ஒருவிசை மாறிமாறி அவர்களோடிருக்க வருவார்கள்" (1நாளா 9:25).

வாசல் காக்கிறவர்கள் ஏழுநாளுக்கு ஒருவிசை மாறிமாறி அவர்களோடிருக்க வருவார்கள். வாசல்களைக் காக்கிறவர்கள் பாடகர்களைப் போலவும், மற்ற பணிவிடைக்காரர்களைப் போலவும் எருசலேமுக்கு அருகில் இருந்த கிராமங்களில் குடியிருந்தார்கள். வாசலைக் காக்கிறவர்களின் தலைவர்களோ தேவாலயத்துக்கு அருகிலேயே தங்கியிருந்தார்கள் (1நாளா 9:26).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த லேவியருக்கு, கர்த்தருடைய ஆலயத்திலே விசேஷமான ஊழியம் ஒப்புவிக்கப்படுகிறது. தேவாலயத்தின் பண்டகசாலைகள் மேலும் பொக்கிஷசாலைகள்மேலுமுள்ள விசாரணை உத்தியோகம் லேவியரான அந்த நாலு பிரதான காவலாளர்வசத்தில் ஒப்புவிக்கப்பட்டது (1நாளா 9:26). இவர்களோடு மேலும் பலர் தேவாலயத்தின் வாசல்களை காக்கிறதற்கு தெரிந்துகொள்ளப்பட்டார்கள். இவர்களுடைய எண்ணிக்கை 212 பேர் ஆகும் (1நாளா 9:22).

வாசல்காக்கிறவர்களும், அவர்களுடைய குமாரரும் கர்த்தருடைய ஆலயமாகிய வாசஸ்தலத்து வாசல்களை காக்கிறவர்களை முறைமுறையாய் விசாரித்து வருகிறார்கள் (1நாளா 9:23).

கோராகின் குமாரனாகிய எபியாசாபுக்குப் பிறந்த கோரேயின் மகன் சல்லூமும், அவன் பிதாவின் வம்சத்தாராகிய அவனுடைய சகோதரருமான கோராகியர் பணிவிடைவேலையை விசாரித்து, அவர்கள் பிதாக்கள் கர்த்தருடைய பாளயத்திலே வாசஸ்தலத்திற்குப்போகிற வழியைக் காவல்காத்ததுபோல, வாசஸ்தலத்து வாசல்களைக் காத்துவந்தார்கள் (1நாளா 9:19).

கர்த்தருடைய ஆலயத்திலே வாசல்களை காப்பது மிகவும் சாதாரணமான பணிவிடை. இது தேவாலயத்தில் நடைபெறுகிற மற்ற ஊழியங்களைப்போல மேன்மையான ஊழியமோ அல்லது கனமான ஊழியமோ அல்ல. ஆனாலும் தேவாலயத்து பணிவிடைகள் எல்லாமே கர்த்தருடைய பார்வையில் மேன்மையானதாகவே இருக்கிறது. தமக்காக ஊழியம் செய்கிற எல்லோரையும் கர்த்தர் கனம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தின் பணிவிடையை தாவீது மிகவும் உயர்வாகச் சொல்லுகிறார்.

"ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன்" (சங் 84:10).

கர்த்தருடைய ஆலயத்திலே வாசல்காக்கிறவர்களின் வேலைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு :

1. அவர்கள் தேவாலயத்தின் கதவுகளை காலமே திறந்துவிடவேண்டும் (1நாளா 9:27). அந்தக் கதவுகளை அவர்கள் இரவு வேளையிலே அடைத்துவிடவேண்டும்.

2. கர்த்தருடைய ஆலயத்திலே அசுத்தமான பொருட்கள் எதுவும் இல்லாதவாறு, ஆலயத்தைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் தடைபண்ணப்பட்டிருக்கிற தீட்டான பொருட்கள் எதையும், யாரும் ஆலயத்திற்குள்ளே கொண்டு வந்து விடாதவாறு, மிகவும் எச்சரிப்பாய்க் காவல் காக்கவேண்டும்.

3. கர்த்தருடைய ஆலயத்திலே கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்களின் கூட்டத்தை ஒழுங்குபடுத்தவேண்டும். அவர்களை வழிநடத்தி, கர்த்தரை ஆராதிப்பதில் அவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எல்லோருமே இதுபோன்ற ஊழியங்களை செய்யவேண்டும்.

இந்த வசனப்பகுதியில் எலெயாசாரின் குமாரனாகிய பினெகாசைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. "எலெயாசாரின் குமாரனாகிய பினேகாசுடனே கர்த்தர் இருந்தபடியினால், அவன் முற்காலத்திலே அவர்கள்மேல் விசாரணைக்காரனாயிருந்தான்" (1நாளா 9:20).

பினெகாஸ் என்பவன் இந்தக் காலத்தில் மிகவும் பிரசித்திப்பெற்ற பிரதான ஆசாரியனல்ல. இவன் லேவியர் மத்தியில் பிரதானமானவன். இவன் கர்த்தருடைய வாசல்களை காவல்காத்து வருகிறவர்கள்மேல், பினெகாஸ் விசாரணை காரணராயிருக்கிறான். கர்த்தர் பினெகாசோடு கூடயிருக்கிறார். கல்தேயருடைய பாஷையில் எழுதப்பட்ட வேதாகமத்தில், "கர்த்தருடைய வார்த்தை பினெகாசோடு கூடயிருந்தது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தின் வாசல்களை காவல்காக்கிறவர்கள், தேவாலயத்திலேயே இரவு வேளையில் தங்கியிருப்பார்கள். அவர்கள் அதிகாலமே ஆலயத்தின் கதவுகளைத் திறந்துவிடுவார்கள் (1நாளா 9:27).

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தை சுமந்துகொண்டு போவார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாளயமிறங்கியிருக்கிற ஸ்தலங்களிலே அவர்கள் கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரத்தை நிறுத்துவார்கள். லேவியர்களே கூடாரங்களை சுமக்கிறவர்கள். அவர்களே கூடாரங்களைப்போடுகிறவர்கள். லேவியர்களே வாசல்களை காவல்காக்கிறவர்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிற எல்லா லேவியருக்கும் ஊழியப்பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலர் பரிசுத்த பணிமுட்டுக்கள் சம்பந்தமான காரியங்களை விசாரிக்கவேண்டும்.

லேவியர்களில் சிலர் மற்றப் பணிமுட்டுகளின் மேலும், பரிசுத்த பாத்திரங்கள் எல்லாவற்றின்மேலும், மெல்லிய மா, திராட்சரசம், எண்ணெய், சாம்பிராணி, சுகந்தவர்க்கங்களின்மேலும் விசாரணைக்காரராயிருந்தார்கள். ஆசாரியரின் குமாரரில் சிலர் சுகந்தவர்க்கத்தால் பரிமளதைலம் இறக்குவார்கள் (1நாளா 9:29,30).

லேவியரில் கோராகியனான சல்லூமின் மூத்த குமாரனாகிய மத்தித்தியாவுக்குப் பலகாரம் சுடுகிற வேலையின் விசாரிப்பு ஒப்புவித்திருந்தது. அவர்கள் சகோதரராகிய கோகாத்தியரின் புத்திரரில் சிலருக்கு ஓய்வுநாள் தோறும் சமுகத்து அப்பங்களை ஆயத்தப்படுத்தும் விசாரிப்பு இருந்தது (1நாளா 9:31,32).

கர்த்தருடைய ஆலயத்திலே சங்கீதக்காரரும் இருக்கிறார்கள். இவர்களில் லேவியருடைய பிதாக்களின் தலைவராகிய சங்கீதக்காரர் இரவும் பகலும் தங்கள் வேலையை நடத்தவேண்டியிருந்தபடியால், மற்ற வேலைக்கு நீங்கலாய்த் தங்கள் அறைகளில் இருந்தார்கள் (1நாளா 9:33).

லேவியரில் பிதாக்களின் தலைவராகிய இவர்கள் தங்கள் சந்ததிகளுக்குத் தலைமையானவர்கள்; இவர்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள் (1நாளா 9:34).

கர்த்தருடைய ஆலயத்தில் சங்கீத சேவனை செய்கிற சங்கீதக்காரர்கள் லேவியருடைய பிதாக்களின் தலைவர்களாவார்கள். இவர்கள் சாதாரண பாடகர்களல்ல. மிகவும் விசேஷித்த பாடகர்கள். இவர்கள் தேவாலயத்தில் தங்களுக்கு நியமிக்கப்பட்ட அறைகளில் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே எப்போதும் சங்கீத சேவனை நடத்திக்கொண்டிருக்க வேண்டும். இவர்கள் இரவும் பகலுமாக, தங்கள் தங்கள் வகுப்புக்களின்படியே வந்து, கர்த்தரைத் துதித்துப் பாடவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் துதிகளின் மத்தியிலே வாசம்பண்ணுகிறவர்.

சவுலின் வம்சவரலாறு
1நாளா 9:35-44

1நாளா 9:35. கிபியோனிலே குடியிருந்தவர்கள் யாரென்றால், கிபியோனின் மூப்பனாகிய யெகியேல், இவன் பெண்ஜாதியின்பேர் மாக்காள்.

1நாளா 9:36. அவன் மூத்த குமாரனாகிய அப்தோனும், சூர், கீஸ், பாகால், நேர், நாதாப்,

1நாளா 9:37. கேதோர், அகியோ, சகரியா, மிக்லோத் என்பவர்களுமே.

1நாளா 9:38. மிக்லோத் சீமியாமைப் பெற்றான்; இவர்களும் தங்கள் சகோதரரோடுங்கூட எருசலேமிலிருக்கிற தங்கள் சகோதரருக்குச் சமீபத்தில் குடியிருந்தார்கள்.

1நாளா 9:39. நேர் கீசைப் பெற்றான்; கீஸ் சவுலைப் பெற்றான்; சவுல் யோனத்தானையும், மல்கிசூவாவையும், அபினதாபையும், எஸ்பாலையும் பெற்றான்.

1நாளா 9:40. யோனத்தானின் குமாரன் மெரிபால்; மெரிபால் மீகாவைப் பெற்றான்.

1நாளா 9:41. மீகாவின் குமாரர், பித்தோன், மேலேக், தரேயா, ஆகாஸ் என்பவர்கள்.

1நாளா 9:42. ஆகாஸ் யாராகைப் பெற்றான்; யாராக் அலெமேத்தையும், அஸ்மவேத்தையும், சிம்ரியையும் பெற்றான்; சிம்ரி மோசாவைப் பெற்றான்.

1நாளா 9:43. மோசா பினியாவைப் பெற்றான்; இவன் குமாரன் ரப்பாயா; இவன் குமாரன் எலியாசா; இவன் குமாரன் ஆத்சேல்.

1நாளா 9:44. ஆத்சேலுக்கு ஆறு குமாரர் இருந்தார்கள்; அவர்கள் நாமங்களாவன, அசரீக்காம், பொக்குரு, இஸ்மவேல், சேராயா, ஒபதியா, ஆனான், இவர்கள் ஆத்சேலின் குமாரர்.

1நாளா 8:29-38 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்களே இந்த வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் முதலாவது ராஜாவாகிய சவுலின் முன்னோர்களைப்பற்றியும், சவுலின் குமாரனாகிய யோனத்தானின் பின்சந்ததியாரைப்பற்றியும் இந்த வசனப்பகுதி சொல்லுகிறது.

1நாளா 8-ஆவது அதிகாரத்தில், சவுலின் வம்சவரலாறு, பென்யமீனின் வம்சவரலாற்றோடு முடிவு பெறுகிறது. 1நாளா 9:35-44 ஆகிய வசனப்பகுதியிலோ பென்யமீனின் வம்சவரலாறு, சவுலின் சரித்திரத்திற்கு முன்னுரையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

10 அதிகாரம்

இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள். இந்த யுத்தத்தில் சவுலும், அவருடைய மூன்று குமாரரும் செத்துப்போகிறார்கள் (நாளா 10:1-7). பெலிஸ்தர் சவுலின் சரீரத்தை அவனமானப்படுத்துகிறார்கள் (நாளா 10:8-10).

கீலேயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்தார் சவுலின் சரீரத்தை எடுத்து, யாபேசுக்கு கொண்டு வந்து அங்கே அடக்கம்பண்ணுகிறார்கள் (நாளா 10:11,12). கர்த்தர் சவுலை தண்டித்ததற்கான காரணம் (நாளா 10:13,14).

சவுலின் மரணம்
1நாளா 10:1-7

1நாளா 10:1. பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்; இஸ்ரவேல் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள்.

1நாளா 10:2. பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூவாவையும் வெட்டிப் போட்டார்கள்.

1நாளா 10:3. சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது; வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள்; அப்பொழுது சவுல் வில்வீரருக்கு மிகவும் பயப்பட்டு,

1நாளா 10:4. தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால் அப்படிச் செய்யமாட்டேன் என்றான். அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்.

1நாளா 10:5. சவுல் செத்துப்போனதை அவன் ஆயுததாரி கண்டபோது, அவனும் பட்டயத்தின்மேல் விழுந்து செத்துப்போனான்.

1நாளா 10:6. அப்படியே சவுலும், அவன் மூன்று குமாரரும், அவன் வீட்டு மனுஷர் அனைவரும் கூடச் செத்துப்போனார்கள்.

1நாளா 10:7. ஜனங்கள் முறிந்தோடினதையும், சவுலும் அவன் குமாரரும் செத்துப்போனதையும், பள்ளத்தாக்கிலுள்ள இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது தங்கள் பட்டணங்களை விட்டு ஓடிப்போனார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் வந்து, அவைகளில் குடியிருந்தார்கள்.

பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணுகிறார்கள். இந்த சரித்திர சம்பவம் 1சாமு 31:1-7 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ராஜாக்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அந்த தேசத்து ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

பெற்றோர் பாவம் செய்யும்போது, அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களுடைய பிள்ளைகள் பாதிக்கப்படுகிறார்கள்.

சவுலின் அக்கிரமம் அதிகரிக்கிறது. இதனால் சவுலின் நாள் முடிவு பெறுகிறது. கர்த்தர் சவுலின் அக்கிரமங்களை விசாரிக்கிறார். சவுலின் மரணத்தைக் குறித்து தாவீது இவ்வாறு சொல்லியிருக்கிறார்.

"பின்னும் தாவீது: கர்த்தர் அவரை அடித்து, அல்லது அவருடைய காலம் வந்து, அவர் மரித்து, அல்லது அவர் யுத்தத்திற்குப்போய் மாண்டாலொழிய, நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் போடாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காக்கக்கடவர் என்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (1சாமு 26:10,11) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலக்கிறது.

யுத்தத்தில் சவுலுக்குக் காயம் ஏற்பட்டது. தன் சத்துருக்களின் கைகளில் சிக்கி, அவமானப்பட சவுலுக்கு இஷ்டமில்லை. ஆகையினால் தன் ஆயுததாரியை நோக்கி, தன்னைக் குத்திப் போடுமாறு கூறுகிறார். ஆனால் அந்த வாலிபனோ ராஜாவைக் கொல்லப் பயப்படுகிறான். இதனால் சவுல் ஒரு பட்டயத்தை நட்டு, அதின்மேல் விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார் (1நாளா 10:4-5).

இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் நடத்திய யுத்தத்திலே, சவுலும் அவருடைய மூன்று குமாரரும் செத்துப்போகிறார்கள். அந்த மூன்று குமாரரின் விவரம் வருமாறு :

1. யோனத்தான் (1சாமு 13:2)

2. அபினதாப் (1சாமு 14:49)

3. மல்கிசூவா (1சாமு 14:49)

சவுலின் குமாரரில் இஸ்போசேத் மாத்திரமே பிழைத்திருக்கிறான். மற்றவர்கள் எல்லோரும் செத்துப்போனார்கள். சவுலின் குமாரனாகிய யோனத்தான் கிருபையும் இரக்கமுமுள்ளவன். அவன் நல்லவன். ஆனாலும் சவுலுடைய பாவத்தின் நிமித்தமாக, சவுலின் குமாரருக்கு கேடு வரும்போது, அந்தக்கேடு யோனத்தானுக்கும் வருகிறது.

சவுலின் சரீரம்
1நாளா 10:8-10

1நாளா 10:8. வெட்டுண்டவர்களின் வஸ்திரங்களை உரிந்துகொள்ளப் பெலிஸ்தர் மறுநாளில் வந்தபோது, அவர்கள் சவுலையும் அவன் குமாரரையும் கில்போவா மலையிலே விழுந்துகிடக்கக் கண்டு,

1நாளா 10:9. அவன் வஸ்திரங்களை உரிந்து, அவன் தலையையும் அவன் ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களுக்கும் ஜனங்களுக்கும் அதைப் பிரசித்தப்படுத்தும்படி பெலிஸ்தருடைய தேசத்திலே சுற்றிலும் செய்தி அனுப்பி,

1நாளா 10:10. அவன் ஆயுதங்களைத் தங்கள் தேவர்களின் கோவிலிலே வைத்து, அவன் தலையைத் தாகோன் கோவிலிலே தூக்கிவைத்தார்கள்.

யுத்தத்தில் வெற்றி பெறுவது பெலிஸ்தருக்கு மிகப்பெரிய கொண்டாட்டமாக இருக்கிறது. தோற்றுப்போன ராஜாக்களின் தலைகளை எடுத்து, தங்களுடைய விக்கிரகக் கோவில்களில் தொங்க விடுவது பெலிஸ்தரின் வழக்கம். (1நாளா 10:8-10).

பெலிஸ்தர் சவுலின் தலையைப் வெட்டிக் கொண்டுவந்தது பற்றி 1சாமு 31:9-10 ஆகிய வசனங்களில் கூறப்படவில்லை. நாளாகமம் புஸ்தகத்தில் அவர்கள் சவுலின் சரீரத்தைக் கொண்டு வந்தது பற்றியும் கூறப்படவில்லை. சாமுவேல் புஸ்தகமும், நாளாகமம் புஸ்தகமும் ஒரே செய்தியைத் தனித்தனியாக விளக்குகிறது.

"அவன் தலையைத் தாகோன் கோவிலிலே தூக்கிவைத்தார்கள்" என்று 1நாளா 10:10 ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 1சாமு 31:10 ஆவது வசனத்தில் சவுலின் ஆயுதங்களை அஸ்தரோத் கோவில் தூக்கி வைத்தார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. சவுலின் தலை தாகோனின் கோவிலில் இருக்கிறது. சவுலின் ஆயுதங்கள் அஸ்தரோத் கோவிலிலே இருக்கிறது. சவுலின் தலையும், அவனுடைய ஆயுதங்களும் பெலிஸ்தரின் தெய்வங்களுக்குப் பங்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமான யுத்தத்திலே வெற்றி பெறுகிறார்கள். அவர்கள் தோற்றுப்போன இஸ்ரவேலரை வெகுவாய் அவமானப்படுத்துகிறார்கள். சவுலோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் முறிந்து ஓடுகிறார்கள். சவுலும் அவருடைய குமாரரும் யுத்தத்திலே செத்துப்போனார்கள்.

சவுல் செழித்திருந்த காலத்தில், அவர் கர்த்தரைக் கனம்பண்ணவில்லை. நம்முடைய ஜீவியத்தில், நாம் அனுபவிக்கும் எல்லா நன்மைகளுக்காகவும், நாம் கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும்.

கர்த்தர் நமக்கு செய்திருக்கிற நன்மைகளை மறந்து, கர்த்தரைக் கனம்பண்ணாமல் ஜீவித்தால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நமக்கு விரோதமாக வரும். சவுல் கர்த்தரைக் கனம்பண்ணவில்லை. அவருக்கு பெலிஸ்தர் மூலமாக நியாயத்தீர்ப்பு வந்தது. நாம் கர்த்தரைக் கனம்பண்ணவில்லையென்றால், நம்முடைய ஜீவியத்திலும் பெலிஸ்தரைப்போன்ற சத்துருக்கள் நம்மை நியாயந்தீர்ப்பார்கள். சத்துருக்கள் நம்மைக் கடிந்துகொள்வார்கள்.

பெலிஸ்தருக்கு முன்பாக இஸ்ரவேலரால் எதிர்த்து நிற்கமுடியவில்லை. இஸ்ரவேலர் முறிந்து ஓடுகிறார்கள். பெலிஸ்தர் சவுலின் தலையை எடுத்து தாகோனின் கோவிலிலே தூக்கி வைக்கிறார்கள்.

தாகோன் ஒரு விக்கிரகம். அதற்கு ஜீவனில்லை. யுத்தத்திலே என்ன நடைபெற்றது என்பது தாகோனுக்கு தெரியாது. ஆனாலும் பெலிஸ்தர் தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள். அவர்கள் சவுலின் ஆயுதங்களை தங்கள் தேவர்களின் கோவிலிலே வைக்கிறார்கள். பெலிஸ்தருடைய செய்கைகள், இஸ்ரவேல் புத்திரருக்கு அவமானமாயிருக்கிறது.

சவுலின் சரீரம் மீட்கப்படுகிறது 1நாளா 10:11,12

1நாளா 10:11. பெலிஸ்தர் சவுலுக்குச் செய்த எல்லாவற்றையுங் கீலேயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் யாவரும் கேட்டபோது,

1நாளா 10:12. பராக்கிரமசாலிகள் எல்லாரும் எழுந்துபோய், சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையும் எடுத்து, யாபேசுக்குக் கொண்டுவந்து, அவர்கள் எலும்புகளை யாபேசிலிருக்கிற ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம்பண்ணினார்கள்.

பெலிஸ்தர் சவுலுக்குச் செய்த எல்லாவற்றையுங் கீலேயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் யாவரும் கேள்விப்படுகிறார்கள்

சவுல் ராஜ்யபாரம் ஏற்ற ஆரம்ப காலத்தில் கீலேயாத் தேசத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தாருக்கு உதவி புரிந்தார். இவர்கள் சவுலுக்குத் தங்களுடைய நன்றியை வெளிப்படுத்தும் விதமாக, இந்த ஊரிலுள்ள பராக்கிரமசாலிகள் எல்லாரும் எழுந்துபோய், சவுலின் உடலையும், அவருடைய குமாரரின் உடல்களையும், எடுத்து, யாபேசுக்குக் கொண்டுவந்தார்கள்.

அவர்கள் எலும்புகளை யாபேசிலிருக்கிற ஒரு கர்வாலிமரத்தின்கீழ் அடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம் பண்ணினார்கள். யாபேஸ் பட்டணத்தார் சவுலின் சரீரத்தையும், அவருடைய குமாரரின் சரீரங்களையும் எரித்துவிட்டு, அதன்பின்பு அவர்களுடைய எலும்புகளை தங்கள் ஊரிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தார் சவுலின் சரீரத்தையும், அவருடைய குமாரரின் சரீரத்தையும் சத்துருக்களின் கைகளிலிருந்து மீட்டுக்கொள்கிறார்கள்.
செத்துப்போனவர்களின் சரீரங்களுக்கு யாபேஸ் பட்டணத்தார் மதிப்பு கொடுக்கிறார்கள். அந்த சரீரங்களை நல்லடக்கம்பண்ணுகிறார்கள்.

பெலிஸ்தர் சவுலைக் கொன்றுபோடுகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். சவுலின் பாவங்களினாலேயே அவருக்கு மரணமுண்டாயிற்று. நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர், சவுலின் இரண்டு பாவங்களை இங்கு விசேஷமாகச் சொல்லுகிறார். அவையாவன :

1. சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குத் துரோகம் செய்தார். *(1சாமு 13:8-14; 1சாமு 15:1-23)*

2. சவுல் கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினார். *(1நாளா 10:13-14; 1சாமு 28:7-25)*

11 அதிகாரம்

சவுல் மரித்துப்போன பின்பு, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகமனதாக, தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள் (நாளா 11:1-3).

தாவீது எபூசியரிடமிருந்து சீயோன் கோட்டையைப் பிடிக்கிறார். அது தாவீதின் நகரமாயிற்று (நாளா 11:4-9).

தாவீதின் பராக்கிரமசாலிகள் (நாளா 11:10-47).

தாவீதின் ராஜாபிஷேகம் 1நாளா 11:1-3

1நாளா 11:1. இஸ்ரவேலர் எல்லாரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் கூடிவந்து: இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்.

1நாளா 11:2. சவுல் இன்னும் ராஜாவாயிருக்கும்போதே, நீர் இஸ்ரவேலை நடத்திக் கொண்டுபோய் நடத்திக்கொண்டுவருவீர்; என் ஜனமாகிய இஸ்ரவேலை நீர் மேய்த்து, என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் தலைவனாயிருப்பீர் என்று உம்முடைய தேவனாகிய கர்த்தர் உமக்குச் சொல்லியும் இருக்கிறார் என்றார்கள்.

1நாளா 11:3. அப்படியே இஸ்ரவேலின் மூப்பரெல்லாரும் எப்ரோனிலே ராஜாவினிடத்தில் வந்தார்கள்; தாவீது எப்ரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டபின்பு, கர்த்தர் சாமுவேலைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே அவர்கள் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள்.

சவுல் மரித்துப் போனார். தாவீது யூதா கோத்திரத்தாருக்கு மாத்திரம் ராஜாவாயிருக்கிறார். யூதா கோத்திரத்தாரைத் தவிர மற்றக் கோத்திரத்தாருக்கு ராஜா இல்லை. இதனால் இஸ்ரவேலர் எல்லாரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் கூடிவருகிறார்கள். தாவீதுக்குக் கீழ் ஒரே தேசமாக இருப்பதற்கு ஒருமனப்படுகிறார்கள். (நாளா 11:1-3; 2சாமு 5:1-5).

தாவீது இஸ்ரவேலை ஆளுகை செய்வதற்குத் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ராஜா என்பதை இஸ்ரவேலர் எல்லாரும் அங்கிகரிக்கிறார்கள். இஸ்ரவேலர் எல்லாரும் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் கூடிவரும்போது, தாவீது எப்ரோனில் யூதாவின்மீது ஏற்கெனவே ஏழரை வருஷம் ராஜ்யபாரம் பண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவையாவன:

1. இஸ்ரவேலை நடத்திக் கொண்டுபோய் சத்துருக்கள்மீது பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்திருக்கிறார். (1சாமு 17:1-18:30)

2. கர்த்தர் தாவீதைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்னும் தீர்க்கதரிசனம் ஏற்கெனவே முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

தாவீது யூதாகோத்திரத்தாரை ஏழுவருஷம் ராஜ்யபாரம்பண்ணினார். அப்போது எபிரோன் தாவீதின் தலைநகரமாயிருந்தது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்குமே தாவீதின் மேன்மையும், அவர் இஸ்ரவேலை நடத்திக்கொண்டுபோன விதமும், தாவீது சத்துருக்கள்மீது வெற்றிகளை தேடிக்கொடுத்த சம்பவமும் தெரிந்திருக்கிறது.

கர்த்தர் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக தெரிந்தெடுத்திருக்கிறார் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் அறிந்திருக்கிறார்கள். தீர்க்கதரிசியாகிய சாமுவேல் மூலமாய் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. அந்த வார்த்தையின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறார்கள். அவர்கள் தாவீதைப் பாதுகாப்பதாகவும், அவர்மீது நம்பிக்கை வைப்பதாகவும், தாவீதின் ராஜ்யபாரத்திற்கு உண்மையுள்ளவர்களாயிருப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்கள்.

சீயோன் கோட்டை
1நாளா 11:4-9

1நாளா 11:4. பின்பு தாவீது இஸ்ரவேலனைத்தோடுங்கூட எபூசாகிய எருசலேமுக்குப் போனான்; எபூசியர் அத்தேசத்தின் குடிகளாயிருந்தார்கள்.

1நாளா 11:5. அப்பொழுது எபூசின் குடிகள் தாவீதை நோக்கி: நீ இதற்குள் பிரவேசிப்பதில்லை என்றார்கள்; ஆனாலும் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான்; அது தாவீதின் நகரமாயிற்று.

1நாளா 11:6. எபூசியரை முறிய அடிக்கிறதில் எவன் முந்தினவனாயிருக்கிறானோ, அவன் தலைவனும் சேனாபதியுமாயிருப்பானென்று தாவீது சொல்லியிருந்தான்; செருயாவின் குமாரனாகிய யோவாப் முந்தி ஏறித் தலைவனானான்.

1நாளா 11:7. தாவீது அந்தக் கோட்டையில் வாசம் பண்ணினபடியால், அது தாவீதின் நகரம் என்னப்பட்டது.

1நாளா 11:8. பிற்பாடு அவன் நகரத்தை மில்லோ தொடங்கிச் சுற்றிலும் கட்டினான்; யோவாப் நகரத்தின் மற்ற இடங்களைப் பழுது பார்த்தான்.

1நாளா 11:9. தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளுடைய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.

எருசலேமின் பழைய பெயர் எபூஸ் என்பதாகும். எபூசியர் இத்தேசத்தின் குடிகளாயிருந்தார்கள். தாவீது எபூசாகிய எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார். அது வரையிலும் சீயோன்கோட்டை எபூசியர் வசமாயிருந்தது. தாவீது சீயோன்கோட்டையைப் பிடிக்கிறார். அது தாவீதின் நகரமாயிற்று.

கானான் தேசத்திலே ஏராளமான பட்டணங்கள் இருந்தாலும், தாவீது எபூசாகிய எருசலேமின்மீது பிரியமாயிருக்கிறார். எருசலேமை தன்னுடைய ராஜ்யபாரத்தின் தலைநகரமாக்க வேண்டும் என்பது தாவீதின் விருப்பம். கர்த்தர் எருசலேமை தாவீதுக்கு கொடுப்பதாக ஒருவேளை வாக்குப்பண்ணியிருந்திருக்கலாம்.

தாவீது முதலாவது பிடித்த கோட்டையே சீயோன் கோட்டைதான். ஆகையினால் சீயோன் கோட்டையை தனக்கு தலைநகரமாக்க வேண்டுமென்று தாவீது விரும்புகிறார். சீயோன் கோட்டையைப் பிடித்த பின்பு, அது தாவீதின் நகரமாயிற்று.

"நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்" *(சங் 2:6)*.

தாவீது எபூசியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது யோவாப் என்பவன், தாவீதின் சேனையில் பராக்கிரமசாலியாயிருந்தான். இவன் செருயாவின் குமாரன்.

யோவாப் தாவீதின் படைத்தலைவனாக எவ்வாறு தெரிந்தெடுக்கப் பட்டான் என்பதை இந்த வாக்கியம் மட்டுமே விவரித்துக் கூறுகிறது. இவன் தாவீதுக்காக எருசலேமைப் பிடித்துக் கொடுத்தான்.

தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்து, அந்த நகரத்தை பழுதுபார்க்கிறார். தாவீதின் நகரத்தில் மில்லோ தொடங்கி சுற்றிலும் கட்டுகிறார். மில்லோ என்பது எருசலேமைச் சுற்றிலும் கட்டப்பட்டிருக்கும் அரணான மதில்சுவராகும். (1இராஜா 9:15,24; 1இராஜா 11:27; 2இராஜா 12:20; 2நாளா 32:5) இந்த மில்லோ நியா 9:6,20 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மில்லோ அல்ல.

யாஷோபியாம்
1நாளா 11:10,11

1நாளா 11:10. கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் சொன்ன வார்த்தைகளின்படியே, தாவீதை ராஜாவாக்கும்படி அவன் வசமாயிருந்து ராஜ்யபாரம்பண்ணுகிற அவனிடத்திலும், சகல இஸ்ரவேலரிடத்திலும், வீரதத்துவத்தைப் பாராட்டின பிரதான பராக்கிரமசாலிகளும்,

நாளா 11:11. தாவீதுக்கு இருந்த அந்தப் பராக்கிரமசாலிகளின் இலக்கமுமாவது: அக்மோனியின் குமாரனாகிய யாஷோபியாம் என்னும் சேர்வைக்காரரின் தலைவன்; இவன் முந்நூறுபேர்களின்மேல் தன் ஈட்டியை ஓங்கி அவர்களை ஒருமிக்கக் கொன்றுபோட்டான்.

தாவீதின் பராக்கிரமசாலிகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதுக்கு மொத்தம் 52 பராக்கிரமசாலிகள் இருந்தார்கள். (1நாளா 11:10-47) ஆனால் 2சாமு 23:8-39 ஆகிய வசனங்களில் 37 பராக்கிரமசாலிகளின் பெயர்களே கூறப்பட்டிருக்கிறது. இவர்கள் தாவீதின் ராஜ்யபாரத்தின் கடைசியில் இருந்தவர்கள். 52 பராக்கிரமசாலிகள் என்பது தாவீதினுடைய ராஜ்யபாரத்தில் முதலில் இருந்தவர்களாக இருக்க வேண்டும். இவர்களில் 15 பேர் தாவீதின் ஆட்சிக் காலத்தில் மரித்துப் போனார்கள். ஆகையினால் தாவீதின் கடைசிக் காலத்தில் 37 பராக்கிரமசாலிகள் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

தாவீதின் 52 பராக்கிரமசாலிகளையும், வேதபண்டிதர்கள் ஐந்து பிரிவாகப் பிரிக்கிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

1. யாஷோபியாம் (1நாளா 11:10; 2சாமு 23:8)

2. எலெயாசார் (1நாளா 11:12; 2சாமு 23:9)

3. அபிசாய் (1நாளா 11:20; 2சாமு 23:18)

4. பெனாயா (1நாளா 11:22; 2சாமு 23:20)

5. 48பராக்கிரமசாலிகள் (1நாளா 11:26-47)

தாவீதின் பராக்கிரமசாலிகளில் பிரதானமானவனாகிய யாஷோபியாம் சேர்வைக்காரரின் தலைவன் (2சாமு 23:8). ஒவ்வொரு 30 சேர்வைக்காரருக்கும் ஒரு தலைவர் இருப்பார். ஒரு சேனையில் இதைப் போன்று பல தலைவர்கள் இருப்பார்கள். (1நாளா 11:15,25; 2சாமு 23:13,23-24,39). சேனையின் பிரிவுகளைப் பற்றி 1நாளா 27:1-24 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது.

யாஷோபியாம் முந்நூறுபேர்களின்மேல் தன் ஈட்டியை ஓங்கி அவர்களை ஒருமிக்கக் கொன்று போட்டான். 2சாமு 23:8 ஆவது வசனத்தில் 800 பேரைக் கொன்றுபோட்டான் என்றிருக்கிறது. இதுவே சரியான வாக்கியமாகும். ஏனெனில் அபிசாய் 300 பேரைக் கொன்றுபோட்டான். (1நாளா 11:18) அபிசாய் யாஷோபியாமைவிட மேன்மையானவன் அல்ல.

யாஷோபியாமும் 300 பேரைக் கொன்று போட்டிருந்தால் இவனும், அபிசாயும் சமமானவர்களே. ஆகையினால் 1நாளா 11:11 ஆவது வசனத்தைப் பிரதியெடுத்தவர்கள் பிழை செய்திருக்கிறார்கள். பழங்காலச் சுவடிகளில் பிரதிகள் எடுத்து எழுதும்போது இதுபோன்ற பிழைகள் ஏற்பட்டிருக்கிறது.

தாவீது தன் பராமக்கிரசாலிகள்மீது மிகவும் பிரியமாயிருக்கிறார். தாவீதின் பராக்கிரமசாலிகளைப்பற்றி 2சாமு 23:8 ஆவது வசனத்திலிருந்து வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சாமுவேலின் இரண்டாம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற பராமக்கிரசாலிகளின் பெயர்களும், நாளாகத்தின் முதலாம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற பராக்கிரமசாலிகளின் பெயர்களும் ஒன்றுபோலிருக்கிறது.

தாவீதின் பராக்கிரமசாலிகளைப்பற்றிச் சொல்லும்போது, நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியர் தாவீதைப்பற்றியும் சொல்லுகிறார். தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தார் என்றும், சேனைகளுடைய கர்த்தர் தாவீதோடே கூடயிருந்தார் என்றும் 1நாளா 11:9-ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தாவீதோடு கூடயிருக்கிறார். அவர் தாவீதுக்காக யுத்தம்பண்ணுகிறார். தாவீதின் பராக்கிரமசாலிகள், தாவீதோடு கூடயிருந்தாலும், கர்த்தரே தாவீதுக்காக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தரே தாவீதுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். தாவீதின் பராக்கிரமசாலிகள், கர்த்தரால் பயன்படுத்தப்படும் கருவிகளாயிருக்கிறார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் தாவீதோடு கூடயிருந்து வீரதத்துவத்தை பாராட்டினவர்கள். இவர்கள் தாவீதை பலப்படுத்தியதோடு தங்களையும் பலப்படுத்திக்கொண்டார்கள். சமுதாயத்தில் தாங்களும் முன்னேறவேண்டும் என்பதே பராக்கிரமசாலிகளின் விருப்பம். இவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்காக, தாவீதைப் பலப்படுத்தினார்கள். அவர்கள் தங்களுடைய மேன்மைக்காகவும் தாவீதுக்கு வீரதத்துவத்தை பாராட்டினார்கள்.

பராக்கிரமசாலிகள் தாவீதுக்கு நன்மை செய்திருக்கிறார்கள். அவர்கள் தாவீதை ராஜாவாக்கும்படிக்கு அவருக்கு ஆதரவாயிருந்தார்கள். தாவீதின் பராக்கிரமசாலிகள் பெலிஸ்தரையும், இஸ்ரவேலின் மற்ற சத்துருக்களையும் சங்காரம்பண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரவேலை இரட்சிப்பதற்கு தாவீதின் பராக்கிரமசாலிகளை தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்தினார்.

இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில், விசுவாசிகளாகிய நாமும் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்கவேண்டும். அவருக்காக நேர்த்தியாய் ஊழியம் செய்யவேண்டும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களுடைய சுயத்தை வெறுத்து, இயேசுகிறிஸ்துவின் சிலுவையை சுமந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும்.

தாவீதின் பராக்கிரமசாலிகள் உலகப்பிரகாரமான நன்மைகளுக்காக அவருக்கு வேலை செய்தார்கள். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாமோ, பரலோகத்தின் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, அவருக்கு ஊழியம் செய்யவேண்டும். நம்முடைய மனச்சாட்சி சுத்தமனச்சாட்சியாயிருக்க வேண்டும்.

எலெயாசார்
1நாளா 11:12-14

1நாளா 11:12. இவனுக்கு இரண்டாவது அகோயின் குமாரனாகிய தோதோவின் மகன் எலெயாசார்; இவன் மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவன்.

1நாளா 11:13. பெலிஸ்தர் பாஸ்தம்மீமிலிருக்கிற வாற்கோதுமை நிறைந்த வயல்நிலத்தில் யுத்தத்திற்குக் கூடிவந்தபோதும், ஜனம் பெலிஸ்தரைக் கண்டு ஓடினபோதும் இவன் தாவீதோடே அங்கே இருந்தான்.

1நாளா 11:14. அப்பொழுது அவர்கள் அந்த நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தரை மடங்கடித்தார்கள்; அதினாலே கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார்.

எலெயாசார் தாவீதோடு பாஸ்தம்மீமில் இருந்தான். தாவீதின் பராக்கிரமசாலிகளில் இவன் இரண்டாவது ஸ்தானத்தைப் பிடித்திருக்கிறான். இஸ்ரவேல் ஜனங்களெல்லாம் பெலிஸ்தரைக் கண்டு ஓடினபோது எலெயாசார் தாவீதைவிட்டுப் பிரிந்து போகாமல், அவனோடுகூடவே இருந்தான்.

எலெயாசாரும், தாவீதும் வாற்கோதுமை நிறைந்த வயல் நிலத்தின் நடுவிலே நின்று அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தரை மடிங்கடித்தார்கள்; அதினாலே கர்த்தர் பெரிய ரட்சிப்பை நடப்பித்தார். (2சாமு 23:9-10).

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகள் 1நாளா 11:15-19

1நாளா 11:15. முப்பது தலைவரில் மூன்றுபேர் அதுல்லாம் என்னும் கன்மலைக் கெபியிலிருக்கிற தாவீதினிடத்தில் போயிருந்தார்கள்; பெலிஸ்தரின் பாளயம் ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் இறங்குகிறபோது,

1நாளா 11:16. தாவீது அரணான ஒரு இடத்திலிருந்தான்; அப்பொழுது பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமில் இருந்தது.

1நாளா 11:17. தாவீது பெத்லேகமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீர் மேல் ஆவல்கொண்டு, என் தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவருகிறவன் யார் என்றான்.

1நாளா 11:18. அப்பொழுது அந்த மூன்றுபேர் பெலிஸ்தரின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்துபோய், பெத்லேகமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டுவந்தார்கள்; ஆனாலும் அவன் அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டு:

1நாளா 11:19. நான் இதைச் செய்யாதபடிக்கு, என் தேவன் என்னைக் காத்துக்கொள்ளக்கடவர்; தங்கள் பிராணனை எண்ணாமல் போய் அதைக் கொண்டுவந்த இந்த மனுஷரின் ரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி அதைக் குடிக்கமாட்டேன் என்றான். இப்படி இந்த மூன்று பராக்கிரமசாலிகளும் செய்தார்கள்.

தாவீதுக்கு ஐம்பத்திரண்டு பராக்கிரமசாலிகள் இருந்தாலும், அவர்களில் மூன்று பராக்கிரமசாலிகளின் வீரச்செயல்களைப்பற்றி மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது அரணான ஒரு இடத்திலிருக்கிறார். பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலிருக்கிறது. அப்போது பெத்லகேமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்று தண்ணீரின்மேல் தாவீதுக்கு ஆசை உண்டாயிற்று. அந்தக் கிணற்றின் தண்ணீர் தனக்கு வேண்டுமென்று தாவீது கேட்டபோது, தாவீதின் பராக்கிரமசாலிகளில் மூன்றுபேர், பெலிஸ்தரின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்துபோய், அந்தத் தண்ணீரை மொண்டு, தாவீதினிடத்தில் கொண்டு வருகிறார்கள்.

பெலிஸ்தர் சவுலின்மீது வெற்றி கொண்டு பெத்லகேமில் ஒரு தாணையத்தை வைத்திருந்தார்கள். தாவீது ராஜாவாக வந்து, பெலிஸ்தரை முறியடிக்கும் வரையிலும் பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமிலும், மேலும் பல இடங்களிலும் இருந்தன. தாவீது ராஜாவான பின்பு, பெலிஸ்தரின் தாணையங்களையெல்லாம் துரத்திப் போட்டார்.

இந்த வசனத்தில் பெலிஸ்தரின் தாணையம் பெத்லகேமில் இருந்ததாகக் கூறப்படுவதினால் இந்த நிகழ்ச்சி சவுல் மரணமடைந்தவுடன், தாவீது தன்னுடைய ராஜ்யபாரத்தை ஸ்தாபிப்பதற்கு முன்பு நடைபெற்ற நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்.

ஆனால் தாவீதோ அந்தத் தண்ணீரைக் குடிக்கவில்லை. தாவீது அந்தத் தண்ணீரை குடிக்க மனதில்லாமல், அதை கர்த்தருக்கென்று ஊற்றிப்போடுகிறார் (1நாளா 11:18,19). தாவீது தன்னுடைய பலவீனத்திலிருந்து மனந்திரும்புகிறார். தன்னுடைய சுயஆசையை வெறுக்கிறார்.

தாவீதுக்கு பெத்லகேமின் தண்ணீரின்மீது ஆவல் இருந்தது. ஆனால் அந்தத் தண்ணீர் தனக்கு கிடைத்தபோதோ, அதை அவர் குடிக்கவில்லை. தாவீதுக்கு தன்னுடைய சுயஆவலை நிறைவேற்றும் விருப்பமில்லை. அவர் அந்த தண்ணீரை கர்த்தருக்கென்று ஊற்றிப்போடுகிறார். தாவீது தன்னுடைய சுயசித்தத்திற்கும், சுயவிருப்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர் கர்த்தரைப்பற்றித் தியானிக்கிறார்.

தாவீதின் கையிலுள்ள தண்ணீர் மிகவும் சுவையானது. அது அவருக்கு பிடித்தமான தண்ணீர். தனக்கு பிரியமான தண்ணீரை, தாவீது கர்த்தருக்கு பானபலியாக வார்க்கிறார்.

தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளும் தங்கள் பிராணனை எண்ணாமல், பெலிஸ்தரின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்துபோய், அந்தத் தண்ணீரை கொண்டு வந்தார்கள். தனக்காக தங்களுடைய ஜீவனையே கொடுக்க துணிந்த தன்னுடைய பராக்கிரமசாலிகளை தாவீது நினைத்துப் பார்க்கிறார். தாவீதின் பார்வையில், அவர்கள் கொண்டு வந்த தண்ணீர், அவர்களுடைய இரத்தமாக தெரிகிறது.

தாவீது கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். அவர் தன்னையே கர்த்தருக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறார்.

அபிசாய்
1நாளா 11:20,21

1நாளா 11:20. யோவாபின் சகோதரனாகிய அபிசாய் அந்த மூன்றுபேரில் பிரதானமானவன்; அவன் தன் ஈட்டியை ஓங்கி, முந்நூறுபேரை மடங்கடித்ததினால் இந்த மூன்றுபேரில் பேர்பெற்றவனானான்.

1நாளா 11:21. இந்த மூன்றுபேரில் அவன் மற்ற இரண்டுபேரிலும் மேன்மையுள்ளவனானதினால், அவர்களில் தலைவனானான்; ஆனாலும் அந்த முந்தின மூன்றுபேருக்கு அவன் சமானமானவனல்ல.

அபிசாய் ஒரு யுத்தத்தில் 300 பேரைக் கொன்று போட்டான். ஆனாலும் இவன் முதல் மூன்றுபேருக்குத் தலைவன் அல்ல. இரண்டாம் மூன்றுபேருக்குத் தலைவன். தாவீதின் பராக்கிரமசாலிகளில் அபிசாய் நான்காம் இடத்தைப் பிடித்திருக்கிறான். (1நாளா 11:20-21).

சம்மா முதல் மூன்றுபேரில் மூன்றாம் இடத்தைப் பிடித்திருக்கிறவன். ஆனால் அவனைப் பற்றி இங்கு கூறப்பட வில்லை. சம்மாவைப் பற்றி 2சாமு 23:11-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் தெரியவில்லை.

சம்மா 1நாளா 11:27 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறான். ஆனால் இப்போது அவன் முதல் மூன்றுபேரின் வரிசையில் இடம் பெறவில்லை. தாவீதின் பிற்காலத்து ஆட்சியில் இவன் மூன்றாவது இடத்தை வகித்தபடியினால் அவனுடைய பெயர் 2சாமு 23:11-17 ஆகிய வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது.

பெனாயா
1நாளா 11:22-25

1நாளா 11:22. பராக்கிரமசாலியாகிய யோய்தாவின் குமாரனும், கப்சேயேல் ஊரானுமாகிய பெனாயாவும் செய்கைகளில் வல்லவனாயிருந்தான்; அவன் மோவாப் தேசத்தின் இரண்டு வலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல், உறைந்த மழைபெய்த நாளில் அவன் ஒரு கெபிக்குள்ளே இறங்கிப்போய், ஒரு சிங்கத்தைக் கொன்றான்.

1நாளா 11:23. ஐந்துமுழ உயரமான ஒரு எகிப்தியனையும் அவன் கொன்றுபோட்டான்; அந்த எகிப்தியன் கையில் நெய்கிறவர்களின் படைமரக் கனதியான ஒரு ஈட்டி இருக்கையில், இவன் ஒரு தடியைப் பிடித்து, அவனிடத்தில் போய், அந்த எகிப்தியன் கையிலிருந்த ஈட்டியைப் பறித்து, அவன் ஈட்டியினாலே அவனைக் கொன்றுபோட்டான்.

1நாளா 11:24. இவைகளை யோய்தாவின் குமாரனான பெனாயா செய்தபடியினால், மூன்று பராக்கிரமசாலிகளுக்குள்ளே பேர்பெற்றவனாய் இருந்தான்.

1நாளா 11:25. முப்பதுபேரிலும் இவன் மேன்மையுள்ளவன்; ஆனாலும் அந்த முந்தின மூன்றுபேருக்கும் இவன் சமானமானவனல்ல; அவனைத் தாவீது தன் மெய்க்காவலருக்குத் தலைவனாக வைத்தான்.

பெனாயா 30 பராக்கிரமசாலிகளில் மேன்மையுள்ளவன். ஆனாலும் முதல் மூன்று பேரில் இவனுடைய ஸ்தானம் வரவில்லை. இரண்டாவது மூன்று பேரின் வரிசையில் இவன் இடம் பெறுகிறான். (1நாளா 11:24-25).

பெனாயாவின் பராக்கிரம கிரியைகளைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் விவரம் வருமாறு:

1. மோவாப் தேசத்தில் சிங்கம் போன்ற முகத்தையுடைய இருவரைக் கொன்றுபோட்டான்.

2. உறைந்த மழைபெய்த நாளில் ஒரு கெபிக்குள்ளே இறங்கிப்போய், ஒரு சிங்கத்தைக் கொன்றான்.

3. ஏழரை அடி உயரமான ஒரு எகிப்தியனைக் கொன்றுபோட்டான் (2சாமு 23:20-21)

நாற்பத்தெட்டு பராக்கிரமசாலிகள் 1நாளா 11:26-47

1நாளா 11:26. இராணுவத்திலிருந்த மற்றப் பராக்கிரமசாலிகள்: யோவாபின் தம்பி ஆசகேல், பெத்லகேம் ஊரானாகிய தோதோவின் குமாரன் எல்க்கானான்,

1நாளா 11:27. ஆரோதியனாகிய சம்மோத், பெலோனியனாகிய ஏலெஸ்,

1நாளா 11:28. தெக்கோவியனாகிய இக்கேசின் குமாரன் ஈரா, ஆனதோத்தியனாகிய அபியேசர்,

1நாளா 11:29. ஊசாத்தியனாகிய சிபெக்காய், அகோகியனாகிய ஈலாய்,

1நாளா 11:30. நெத்தோபாத்தியனாகிய மகராயி, நெத்தோபாத்தியனாகிய பானாவின் குமாரன் ஏலேத்,

1நாளா 11:31. பென்யமீன் புத்திரரின் கிபேயா ஊரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி, பிரத்தோனியனாகிய பெனாயா,

1நாளா 11:32. காகாஸ் நீரோடைத் தேசத்தானாகிய ஊராயி, அர்பாத்தியனாகிய அபியேல்,

1நாளா 11:33. பகரூமியனாகிய அஸ்மாவேத், சால்போனியனாகிய எலியாபா,

1நாளா 11:34. கீசோனியனாகிய ஆசேமின் குமாரர், ஆராரியனாகிய சாகியின் குமாரன் யோனத்தான்.

1நாளா 11:35. ஆராரியனாகிய சாக்காரின் குமாரன் அகியாம், ஊரின் குமாரன் எலிபால்,

1நாளா 11:36. மெகராத்தியனாகிய ஏப்பேர், பெலோனியனாகிய அகியா,

1நாளா 11:37. கர்மேலியனாகிய எஸ்ரோ, எஸ்பாயின் குமாரன் நாராயி,

1நாளா 11:38. நாத்தானின் சகோதரன் யோவேல், அகரியின் குமாரன் மிப்கார்,

1நாளா 11:39. அம்மோனியனாகிய சேலேக், செருயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுததாரியான பெரோத்தியனாகிய நாராயி,

1நாளா 11:40. இத்தரியனாகிய ஈரா, இத்தரியனாகிய காரெப்,

1நாளா 11:41. ஏத்தியனாகிய உரியா, அக்லாயின் குமாரன் சாபாத்,

1நாளா 11:42. ரூபனியரின் தலைவனாகிய சீசாவின் குமாரன் அதினா என்னும் ரூபனியன்; அவனோடே முப்பதுபேர் இருந்தார்கள்.

1நாளா 11:43. மாகாவின் குமாரன் ஆனான், மித்னியனாகிய யோசபாத்,

1நாளா 11:44. அஸ்தரேத்தியனாகிய உசியா, ஆரோவேரியனாகிய ஓத்தாமின் குமாரர் சமாவும், யேகியேலும்,

1நாளா 11:45. சிம்ரியின் குமாரன் எதியாயேல், திச்சியனாகிய அவன் சகோதரன் யோகா,

1நாளா 11:46. மாகாவியரின் புத்திரன் எலியேல், எல்நாமின் குமாரன் எரிபாயும், யொசவியாவும், மோவாபியனான இத்மாவும்,

1நாளா 11:47. மெசோபாயா ஊராராகிய எலியேலும், ஓபேதும், யாசீயேலுமே.

தாவீதின் பராக்கிரமசாலிகள் பலத்த கிரியைகளை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ இப்படிப்பட்ட பெரிய காரியங்களை செய்யவில்லை. அவர்கள் கர்த்தருடைய பலத்தினாலேயே பராக்கிரம கிரியைகளைச் செய்கிறார்கள். கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், பெலமும் அவர்களுக்கு கிடைக்கவில்லையென்றால், அவர்கள் சாதாரண மனுஷராகவே இருப்பார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் அம்மோனியன் (1நாளா 11:39). மற்றொரு பராக்கிரமசாலி மோவாபியன் (1நாளா 11:46). அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்குட்படலாகாது என்று சொல்லப்பட்டிருந்தாலும், இவர்கள் இருவரும் தாவீதின் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள்.

"அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது; பத்தாம் தலைமுறையிலும் என்றைக்கும் அவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது" (உபா 23:3).

அம்மோனியனாகிய சேலாக்கும், மோவாபியனான இத்மாவும் இஸ்ரவேலின் நன்மைக்காக பாடுபடுகிறார்கள். அவர்களுடைய நல்ல சுபாவங்களும், நற்கிரியைகளும் இஸ்ரவேல் புத்திரரால் அங்கீகரிக்கப்படுகிறது. இவர்கள் புறஜாதியாராயிருந்தாலும் தாவீதுக்கு பிரியமானவர்களாயிருக்கிறார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகளில் புறஜாதியார் இருப்பது, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திலே புறஜாதியாரும் இடம் பெறுவார்கள் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

12 அதிகாரம்

தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்தில் திடீரென்று அமர்ந்து ராஜ்யபாரம்பண்ணவில்லை. கர்த்தர் தாவீதை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துகிறார். தாவீதின் ராஜ்யம் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கவேண்டும். ஆகையினால் அதன் அஸ்திபாரமும் பலமாயிருக்கவேண்டும். மெதுவாக பழுக்கும் கனிகளே, நீண்ட காலத்திற்கு கெட்டுப்போகாமல் சுவையாயிருக்கும்.

தாவீது சிக்லாகிலிருக்கிறார். அப்போது யூதாதேசத்தின்மீது அவரை ராஜாவாக்கும்படிக்கு, தாவீதினிடத்தில் வந்தவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (1நாளா 12:1-22).

தாவீது எப்ரோனிலிருக்கிறார். தாவீதை சமஸ்த இஸ்ரவேல்மீதும் ராஜாவாக்கும்படிக்கு, எப்ரோனிலே அவரிடத்தில் வந்தவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (1நாளா 12:23-40).

பென்யமீன் கோத்திரத்தார் 1நாளா 12:1-7

1நாளா 12:1. தாவீது கீசின் குமாரனாகிய சவுலினிமித்தம் இன்னும் மறைவாயிருக்கையில், சிக்லாகிலிருக்கிற அவனிடத்திற்கு வந்து,

1நாளா 12:2. யுத்தத்திற்கு ஒத்தாசை செய்த வில்வீரரும், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைவாட்டமான பராக்கிரமசாலிகளான மற்ற மனுஷருமாவன: சவுலின் சகோதரராகிய பென்யமீன் கோத்திரத்தில்,

1நாளா 12:3. கிபேயா ஊரானாகிய சேமாவின் குமாரர் அகியேசர் என்னும் தலைவனும், யோவாசும், அஸ்மாவேத்தின் குமாரராகிய ஏசியேலும், பேலேத்தும், பெராக்கா, ஆனதோத்தியனான ஏகூ என்பவர்களும்,

1நாளா 12:4. முப்பதுபேரில் பராக்கிரமனும் முப்பதுபேருக்குப் பெரியவனுமான இஸ்மாயா என்னும் கிபியோனியனும், எரேமியா, யாகாசியேல், யோகனான், கெதேரூரானான யோசபாத்,

1நாளா 12:5. எலுசாயி, எரிமோத், பிகலியா, செமரியா, அருப்பியனான செப்பத்தியா,

1நாளா 12:6. எல்க்கானா, எஷியா, அசாரியேல், யொவேசேர், யாசொபெயாம் என்னும் கோரேகியரும்,

1நாளா 12:7. யொவேலா, செபதியா என்னும் கேதோர் ஊரானான எரோகாமின் குமாரருமே.

சவுல் தாவீதைக் கொன்றுபோட வகைதேடுகிறார். தாவீது சவுலின் நிமித்தம் சிக்லாகிலே மறைவாகயிருக்கிறார். அப்போது தாவீதினிடத்தில் அநேகர் வந்து சேருகிறார்கள். அவரிடத்தில் வந்து சேர்ந்த பென்யமீன் கோத்திரத்தாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது சிக்லாகிலிருக்கும்போது அவரிடத்தில் வந்து சேர்ந்தவர்கள் எல்லோருமே தாவீதின் சிநேகிதர்கள். சவுல் மரித்துப்போனார். யூதாதேசத்திலே ஒரு புரட்சியை ஏற்படுத்தி, தாவீதை ராஜாவாக்கவேண்டும் என்பது, அவருடைய சிநேகிதரின் திட்டம்.

சவுல் உயிரோடிருந்தபோது தாவீதை வெகுவாய்த் துன்பப்படுத்தினார். சவுல் தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்று முயற்சிபண்ணினார். தாவீது தன்னுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள சிக்லாகுக்கு தப்பி ஓடினபோது, அவரோடுகூட அறுநூறு பேர் மாத்திரமே இருந்தார்கள்.

இப்போதோ சவுலும் மரித்துப்போனார். தாவீது யூதாவின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ராஜ்யபாரம்பண்ணும் காலமும் சாதகமாக வந்திருக்கிறது. தாவீதுக்கு உதவிசெய்ய அவருடைய சிநேகிதரில் அநேகர் இப்போது சிக்லாகுக்கு அவரிடத்தில் வருகிறார்கள். கர்த்தருடைய தெய்வீக கிருபையினாலும் அவருடைய தெய்வீக பராமரிப்பினாலும் தாவீதுக்கு அதிகமான உதவி கிடைக்கிறது.

சவுல் உயிரோடிருக்கும்போதும், அவர் தாவீதைக் கொல்லவேண்டுமென்று நெருக்கியபோதும், தாவீது சவுலுக்கு பயந்து சிக்லாகிலே ஒளிந்திருந்தபோதும், தாவீதினிடத்தில் அநேகர் வந்து சேருகிறார்கள். தன்னுடைய சிநேகிதரெல்லாம் தன்னோடு கூட சேரவேண்டுமென்று தாவீதால் சொல்ல முடியவில்லை. ஏனென்றால் சவுல் மூலமாக தாவீதுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கிறது.

சவுல் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தத்திலே சீக்கிரத்தில் செத்துப்போவார் என்பதும் தாவீதுக்கு தெரியாது. ஆகையினால் தாவீதின் சிநேகிதர்கள், சவுல் உயிரோடிருந்த காலத்தில், தாவீதைப் பார்க்க வரவில்லை. தாவீதுக்கு ஆதரவு சொல்ல முன்வரவில்லை. ஆனாலும் இந்த சூழ்நிலையிலும், சிக்லாகிலிருக்கிற தாவீதைப் பார்க்க, அவருடைய சிநேகிதரில் சிலர் அவரிடத்தில் வருகிறார்கள்.

கர்த்தர் தாவீதைப் பலப்படுத்துகிறார். தாவீதின் சிநேகிதர்களில் அநேகரை கர்த்தர் சிக்லாகுக்கு அனுப்புகிறார். கர்த்தர் இஸ்ரவேலின் ராஜாவாக தாவீதை ஆயத்தம்பண்ணுவதுபோலவே, தாவீதின் சிநேகிதர்களை ஒரு சேனையாகவும் ஆயத்தம்பண்ணுகிறார்.

தாவீது சிக்லாகிலிருந்தாலும் கர்த்தரை நம்பி அங்கே இருக்கிறார். கர்த்தரை நம்பி ஊழியம் செய்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தர்மீது விசுவாசம் வைத்து, அவருடைய வழியில் முன்னேறிச் செல்லுகிறவர்கள், ஏற்றகாலத்திலே கர்த்தருடைய உதவிகளையும், ஒத்தாசைகளையும், பராமரிப்புக்களையும் பெற்றுக்கொள்வார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, காலம் நிறைவேறும்போது சகலமும் நன்மையாய் நிறைவேறும்.

சவுல் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். தாவீது சிக்லாகிலிருக்கும் போது, பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த அநேகர் அவரிடத்தில் வருகிறார்கள். அவர்களில் சிலர் சவுலின் உறவினர்கள். ஆனாலும் அவர்கள் சவுலை விட்டு விட்டு, தாவீதினிடத்தில் வந்து சேருகிறார்கள்.

பென்யமீன் கோத்திரத்தார் யுத்தவீரர்கள். அவர்கள் வில்வீரரும், கவண்கல் எறிகிறதற்கும் வில்லினால் அம்பு எய்கிறதற்கும் வலது இடது கைவாட்டமான பராக்கிரமசாலிகளுமானவர்கள் (1நாளா 12:2). இவர்களுடைய இடது கையும் வலது கையைப்போல பலமுள்ளதாயிருக்கிறது.

"அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள்" (நியா 20:16).

சிக்லாகிலிருக்கிற தாவீதினிடத்திற்கு வந்த இவர்களைப் பற்றி வேறு எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆகையினால் நாளாகமம் தனித்தன்மை உடைய ஒரு புஸ்தகமாகக் கருதப்படுகிறது.

பென்யமீன் கோத்திரத்தார் சவுலின் கோத்திரத்தார். இவர்கள் சவுலை விட்டுப் பிரிந்து தாவீதைப் பின்பற்றுகிறார்கள். அகியேசர் என்பவன் பென்யமீன் கோத்திரத்திலே தலைவராயிருக்கிறான். பென்யமீன் கோத்திரத்திலிருந்து இவனைப் போல 23 தலைவர்கள் சவுலைவிட்டுப் பிரிந்து தாவீதைப் பின்பற்றுகிறார்கள். தங்களோடு 3,000 பென்யமீனரைச் சேர்த்துக் கொண்டு தாவீதை ராஜாவாக ஆக்குவதற்காக வருகிறார்கள் (1நாளா 12:3-7,29).

காத்தியர்கள்
1நாளா 12:8-15

1நாளா 12:8. காத்தியரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, சிங்கமுகம்போன்ற முகமும், மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம் போன்ற வேகமுமுள்ளவர்களாயிருந்து, யுத்தசேவகரான பராக்கிரமசாலிகள் சிலரும் வனாந்தரத்திலுள்ள அரணான இடத்தில் இருக்கிற தாவீது பட்சமாய்ச் சேர்ந்தார்கள்.

1நாளா 12:9. யாரென்றால், எத்சேர் என்னும் தலைவன், அவனுக்கு இரண்டாவது ஒபதியா; மூன்றாவது எலியாப்,

1நாளா 12:10. நாலாவது மிஸ்மன்னா, ஐந்தாவது எரேமியா,

1நாளா 12:11. ஆறாவது அத்தாயி, ஏழாவது எலியேல்,

1நாளா 12:12. எட்டாவது யோகனான், ஒன்பதாவது எல்சபாத்,

1நாளா 12:13. பத்தாவது எரேமியா, பதினோராவது மக்பன்னாயி;

1நாளா 12:14. காத் புத்திரரான இவர்கள் இராணுவத்தலைவராயிருந்தார்கள்; அவர்களில் சிறியவன் நூறுபேருக்கும் பெரியவன் ஆயிரம்பேருக்கும் சேர்வைக்காரராயிருந்தார்கள்.

1நாளா 12:15. யோர்தான் கரைபுரண்டுபோயிருக்கிற முதலாம் மாதத்தில் அதைக் கடந்து, கிழக்கேயும், மேற்கேயும் பள்ளத்தாக்குகளில் இருக்கிற யாவரையும் துரத்திவிட்டவர்கள் இவர்களே.

காத்தியர்கள் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களும் தாவீதின்மீது விசுவாசம் வைக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தில் ராஜ்யபாரம்பண்ணுவதற்கு தாவீதே தகுதியானவர் என்பதை அவர்கள் அங்கீகரிக்கிறார்கள்.

காத்தியர்களில் சிலர் தாவீதுக்கு ஆதரவு கொடுப்பதற்காக, தங்களுடைய கோத்திரத்தாரை விட்டுப் பிரிந்து வனாந்தரத்திலுள்ள அரணான இடத்திலிருக்கிற தாவீது பட்சமாய்ச் சேருகிறார்கள் (1நாளா 12:8).

தாவீதோடு கூடயிருக்கிற காத்தியர் மொத்தம் பதினொரு பேர்தான். அவர்களுடைய பெயர்கள் மாத்திரமே இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களும் தாவீதுக்கு பலத்தை சேர்க்கிறார்கள்.

காத் புத்திரரான இவர்கள் இராணுவத்தலைவராயிருக்கிறார்கள்; அவர்களில் சிறியவன் நூறுபேருக்கும் பெரியவன் ஆயிரம்பேருக்கும் சேர்வைக்காரராயிருக்கிறார்கள் (1நாளா 12:14).

தாவீது சிக்லாகிலிருந்தபோது, ஆரம்பத்தில் அவரோடு கூட வந்துசேர்ந்தவர்கள் மிகவும் சாதாரணமானவர்கள். அவர்கள் தேர்ச்சி பெற்ற யுத்தவீரர்களல்ல. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களே ஆரம்பத்தில் தாவீதோடுகூட வந்து சேர்ந்தார்கள். அவர்கள் தாவீதுக்கு உதவி செய்வதற்காக வரவில்லை. தாவீதோடு கூடயிருந்தால் தங்களுக்கு பாதுகாப்பும், நன்மையும் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, அவரோடு கூட வந்து சேர்ந்தார்கள்.

"ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் அவனோடே கூடிக்கொண்டார்கள்; அவன் அவர்களுக்குத் தலைவனானான்; இந்தப்பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவனோடிருந்தார்கள்" (1சாமு 22:2).

ஆனால் காத்தியரோ யுத்தவீரர்கள். அவர்கள் பரிசையும் ஈட்டியும் பிடிக்கக்கூடியவர்கள். அவர்கள் மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம்போன்ற வேகமுள்ளவர்கள். அவர்கள் யுத்த சேவகரான பராக்கிரமசாலிகள். அப்படிப்பட்ட யுத்தவீரர்கள் இப்போது, தாவீது பட்சமாய் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

காத்தியர் ஒழுக்க கட்டுப்பாடு மிகுந்த யுத்தவீரர்கள். அவர்கள் மத்தியிலே இராணுவத்தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிறியவன் நூறு பேருக்கும், பெரியவன் ஆயிரம் பேருக்கும் சேர்வைக்காரராயிருக்கிறார்கள். காத் புத்திரர் சிக்கிலாகிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்தபோது, அவர்கள் அநேக தடைகளை சந்தித்திருக்கவேண்டும். பள்ளத்தாக்குகளில் அவர்களுக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் வந்திருப்பார்கள்.

காத்தியர் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிறவர்கள். இவர்கள் யோர்தானைக் கடந்து வந்த சம்பவத்தைப்பற்றி இந்த வசனப்பகுதியில் ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்கள் பராக்கிரமசாலிகளாயிருந்து, தைரியமாய் யோர்தானைக் கடந்து, சிக்லாகிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்திருக்கிறார்கள்.

காத்தியரில் 11 பராக்கிரமசாலிகள் தாவீதை அவருடைய பிரயாணம் முழுவதிலும் பின்பற்றிச் செல்லுகிறார்கள். காத், ரூபன், யோர்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள மனாசே ஆகிய கோத்திரங்களிலிருந்து 1,20,000 பேரைத் தாவீதினிடத்தில் கொண்டுவருவதற்குக் காத்தியர் உதவி புரிகிறார்கள். (1நாளா 12:37). யோர்தான் கரைபுரண்டுபோயிருக்கிற முதலாம் மாதத்தில் அதைக் கடந்து, கிழக்கேயும், மேற்கேயும் பள்ளத்தாக்குகளில் இருக்கிற யாவரையும் துரத்திவிட்டவர்கள் இந்தக் காத்தியரே. (1நாளா 12:8-15).

பென்யமீன் புத்திரரும் யூதாபுத்திரரும் 1நாளா 12:16-18

1நாளா 12:16. பின்னும் பென்யமீன் புத்திரரிலும் யூதாபுத்திரரிலும் சிலர் அரணான ஸ்தலத்தில் இருக்கிற தாவீதினிடத்தில் வந்தார்கள்.

1நாளா 12:17. தாவீது புறப்பட்டு, அவர்களுக்கு எதிர்கொண்டுபோய், அவர்களுக்கு உத்தரவுகொடுத்து: நீங்கள் எனக்கு உதவி செய்ய சமாதானமாய் என்னிடத்தில் வந்தீர்களானால், என் இருதயம் உங்களோடு இசைந்திருக்கும்; என் கைகளில் கொடுமை இல்லாதிருக்க, என்னை என் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க வந்தீர்களேயாகில், நம்முடைய பிதாக்களின் தேவன் அதைப் பார்த்துக் கண்டிப்பாராக என்றான்.

1நாளா 12:18. அப்பொழுது அதிபதிகளுக்குத் தலைவனான அமாசாயின்மேல் ஆவி இறங்கினதினால், அவன்: தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்; ஈசாயின் குமாரனே, உமது பட்சமாயிருப்போம்; உமக்குச் சமாதானம், சமாதானம்; உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம்; உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார் என்றான்; அப்பொழுது தாவீது அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களைத் தண்டுக்குத் தலைவராக்கினான்.

பென்யமீன், யூதா ஆகிய இவ்விரண்டு கோத்திரங்களிலிருந்தும் சிலர் தாவீதினிடத்தில் வந்தார்கள். (1நாளா 12:16-18). கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரவேல் புத்திரரைத் தாவீதினிடத்தில் அழைத்து வருகிறார். ஏற்ற வேளையில் ராஜ்யபாரத்தைத் தாவீதின் கையில் ஒப்புக் கொடுப்பதற்குக் கர்த்தர் கிரியை செய்து கொண்டிருக்கிறார்.

பென்யமீன் புத்திரரில் சிலரும், யூதாபுத்திரரில் சிலரும் தாவீதினிடத்திற்கு வருகிறார்கள். இவர்களுக்கு அமாசாய் என்பவன் தலைவனாயிருக்கிறான். பிற்காலத்தில் அப்சலோமோடு கூடயிருந்த அமாசாவும், இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிற அமாசாயும் ஒரே நபரா என்பது தெரியவில்லை.

"அப்சலோம், யோவாபுக்குப் பதிலாக அமாசாவை இராணுவத்தலைவனாக்கினான்; இந்த அமாசா, நாகாசின் குமாரத்தியும் செருயாவின் சகோதரியும் யோவாபின் அத்தையுமாகிய அபிகாயிலைப் படைத்த இஸ்ரவேலனாகிய எத்திரா என்னும் பேருள்ள ஒரு மனுஷனுடைய குமாரனாயிருந்தான்" (2சாமு 17:25).

தாவீது பென்யமீன் புத்திரரோடும், யூதாபுத்திரரோடும் மிகவும் ஞானத்தோடும், பொறுமையோடும் நடந்துகொள்கிறார். அவர்களை பார்த்தபோது தாவீதுக்கு ஆச்சரியமுண்டாயிற்று. சீப் ஊராரும், கேயிலா ஊராரும் தாவீதுக்கு சத்துருக்களாயிருந்தவர்கள். அந்த ஊராரில் அநேகர் யூதாகோத்திரத்தார். தாவீதும் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆனாலும் அந்த ஊர் ஜனங்கள் தாவீதுக்கு சத்துருக்களாயிருந்தார்கள்.

இப்போது பென்யமீன் புத்திரரோடு, யூதாபுத்திரரும் சிக்லாகிலிருக்கிற தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவர்கள் தனக்கு சிநேகிதர்களா அல்லது தனக்கு சத்துருக்களா என்னும் சந்தேகம் தாவீதுக்கு உண்டாயிற்று. அவர்கள் தன்னிடத்தில் வந்ததைப் பார்த்து தாவீது ஆச்சரியப்படுகிறார். தாவீது அவர்களோடு மிகவும் கவனமாக பழகுகிறார்.

தாவீது புறப்பட்டு, அவர்களுக்கு எதிர்கொண்டுபோய், அவர்களுக்கு உத்தரவுகொடுக்கிறார். தாவீது அவர்களை நோக்கி, "நீங்கள் எனக்கு உதவி செய்ய சமாதானமாய் என்னிடத்தில் வந்தீர்களானால், என் இருதயம் உங்களோடு இசைந்திருக்கும்; என் கைகளில் கொடுமை இல்லாதிருக்க, என்னை என் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க வந்தீர்களேயாகில், நம்முடைய பிதாக்களின் தேவன் அதைப் பார்த்துக் கண்டிப்பாராக" (நாளா 12:17) என்று சொல்லுகிறார்.

யூதா கோத்திரத்திலிருந்தும், பென்யமீன் கோத்திரத்திலிருந்தும் இரண்டாம் முறையாகச் சிலர் தாவீதினிடத்தில் வருகிறார்கள். அவர்களைக் குறித்து தாவீது மிகுந்த எச்சரிப்போடு இருக்கிறார். அவர்கள் சமாதானத்தோடு வருகிறார்களா அல்லது தன்னைக் காட்டிக் கொடுக்க வருகிறார்களா என்பதை அறிந்து கொள்வதில் தாவீது அக்கரை காண்பிக்கிறார்.

அந்த வேளையில் கர்த்தருடைய ஆவியானவர் அமாசாயின்மேல் இறங்கினார். இவன் தாவீதின் அதிபதிகளுக்குத் தலைவன். அதன் பின்பு, தாவீது அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களைத் தண்டுக்குத் தலைவராக்குகிறார். (நாளா 12:16-18).

தாவீதிடத்தில் வந்திருக்கிற பென்யமீன் புத்திரரும், யூதாபுத்திரரும், தாவீதுக்கு உதவி செய்ய சமாதானமாய் வந்திருந்தால், தாவீதும் அவர்களுக்கு உதவி செய்வார். அவர்கள் ஒருவேளை சவுலின் வேவுகாரராக, தன்னை வஞ்சிப்பதற்காக வந்திருந்தால், கர்த்தர் அவர்களை நியாயந்தீர்ப்பார் என்று தாவீது சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் சரித்திரத்திலே தாவீதைப்போல வேறு எந்த ராஜாவும் இவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்கவில்லை. தாவீதுக்கு நன்மைகளும் வருகிறது. சோதனைகளும் வருகிறது. தாவீது எல்லா சூழ்நிலைகள் வழியாகவும் கடந்து வருகிறார். அவர் எந்த சூழ்நிலையிலிருந்தாலும் கர்த்தரை மறக்கவில்லை. தாவீதின் மனச்சாட்சி சுத்தமானதாயிருக்கிறது. அவருடைய கைகளில் பாவமில்லை.

தாவீது பென்யமீன் புத்திரரிடத்திலும், யூதாபுத்திரரிடத்திலும் உடன்படிக்கை பண்ணும்போது, "நம்முடைய பிதாக்களின் தேவன் அதைப் பார்த்து கண்டிப்பாராக" என்று சொல்லுகிறார். தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது அவரை, "நம்முடைய பிதாக்களின் தேவன்" என்று சொல்லுகிறார். கர்த்தர் தாவீதின் தேவனாகவும் இருக்கிறார், பென்யமீன் புத்திரருடைய தேவனாகவும் இருக்கிறார். யூதாபுத்திரருடைய தேவனாகவும் இருக்கிறார்.

தாவீதைப் பார்க்க வந்திருக்கிற பென்யமீன் புத்திரரும், யூதாபுத்திரரும், இஸ்ரவேலின் கோத்திரங்களை சேர்ந்தவர்கள். அவர்கள் கர்த்தருடைய இஸ்ரவேலர்கள். கர்த்தரும் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். அவர்கள் எல்லோருக்குமே ஒரே முற்பிதாக்களே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே தேவனையே ஆராதிக்கிறார்கள்.

தாவீது, தன்னைப் பார்க்க வந்திருக்கிற பென்யமீன் புத்திரரையும், யூதாபுத்திரரையும் கர்த்தருடைய நாமத்தினால் சபிக்கவில்லை. அவர்களோடு இதமான வார்த்தைகளைப் பேசுகிறார். "என்னை என் சத்துருக்களுக்கு காட்டிக் கொடுக்க வந்தீர்களேயாகில்" என்று தாவீது அவர்களிடத்தில் ஒரு நிபந்தனையைச் சொல்லுகிறார். அவர்கள் தாவீதைக் காட்டிக்கொடுக்க வந்திருந்தால், தேவன் அவர்களைக் கண்டிப்பார். தாவீது அவர்களை பயமுறுத்தாமல், அவர்களோடு சிநேகமான வார்த்தைகளைப் பேசி, அவர்களை தன்னிடத்தில் சேர்த்துக்கொள்கிறார்.

தாவீதைப் பார்க்க வந்த பென்யமீன் புத்திரருக்கும், யூதாபுத்திரருக்கும் அமாசா என்பவன் தலைவனாயிருக்கிறான். தாவீது அவர்களிடத்தில் பேசிய பொழுது, அமாசாயின்மேல், கர்த்தருடைய ஆவியானவர் வந்து இறங்குகிறார்.

அமாசாய் தாவீதை நோக்கி, "தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்; ஈசாயின் குமாரனே, உமது பட்சமாயிருப்போம்; உமக்குச் சமாதானம், சமாதானம்; உமக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம்; உம்முடைய தேவன் உமக்குத் துணை நிற்கிறார்" (1நாளா 12:18) என்று சொல்லுகிறான்.

அமாசாய் தாவீதை "ஈசாயின் குமாரனே" என்று அழைக்கிறான். தாவீது நாகசோன், சல்மோன் ஆகியோரின் சந்ததியில் வந்தவர் என்பதை அமாசாய் நினைவுபடுத்துகிறான். நாகசோன், சல்மோன் ஆகியோர் யூதாகோத்திரத்திற்கு பிரபுக்களாயிருந்தவர்கள்.

சவுல் தாவீதைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "ஈசாயின் மகன்" என்று சொல்லி அவமானப்படுத்தினார். ஆனால் இப்போதோ, தாவீதைப் பார்க்க வந்திருக்கிறவர்கள், அவரை, "ஈசாயின் மகன்" என்று சொல்லி மேன்மைப்படுத்துகிறார்கள். அவர்கள் தாவீதுக்கும், அவருக்கு உதவி செய்கிறவர்களுக்கும் சமாதானம் என்று சொல்லுகிறார்கள்.

"அமாவாசிக்கு மறுநாளிலும் தாவீது இருக்கும் இடம் காலியாயிருந்தது; அப்பொழுது சவுல்: ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனது என்ன என்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்டான்" 1சாமு 20:27

"சவுல் தன்னண்டையில் நிற்கிற தன் ஊழியக்காரரைப் பார்த்து: பென்யமீன் புத்திரரே கேளுங்கள்; ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையும் திராட்சத்தோட்டங்களையும் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரத்துக்கு அதிபதிகளும் நூற்றுக்கு அதிபதிகளுமாக வைப்பானோ?" (1சாமு 22:7).

அமாசாய் தாவீதை ஆசீர்வதிக்கும்போது, "உம்முடைய தேவன் உமக்கு துணை நிற்கிறார்" என்று சொல்லுகிறான். நம்முடைய தேவன் நமக்கு துணை நிற்கும்போது, காரியங்கள் அநுகூலமாய்க் கைகூடிவரும்.

தாவீது தன்னிடத்தில் வந்திருக்கிற பென்யமீன் புத்திரரையும் யூதாபுத்திரரையும் சேர்த்துக்கொண்டு, அவர்களை தண்டுக்கு தலைவனாக்குகிறார்.

மனாசே கோத்திரம்
1நாளா 12:19-22

1நாளா 12:19. சவுலின்மேல் யுத்தம்பண்ணப்போகிற பெலிஸ்தருடனே கூடத் தாவீது வருகிறபோது, மனாசேயிலும் சிலர் அவன் பட்சமாய்ச் சேர்ந்தார்கள்; பெலிஸ்தரின் பிரபுக்கள் யோசனைபண்ணி, அவன் நம்முடைய தலைகளுக்கு மோசமாய்த் தன் ஆண்டவனாகிய சவுலின் பட்சமாய்ப் போவான் என்று அவனை அனுப்பிவிட்டார்கள்; அதனால் அவர்கள் இவர்களுக்கு உதவிசெய்யவில்லை.

1நாளா 12:20. அப்படியே அவன் சிக்லாகுக்குத் திரும்பிப்போகையில், மனாசேயில் அத்னாக், யோசபாத், எதியாவேல், மிகாயேல், யோசபாத், எலிகூ, சில்த்தாயி என்னும் மனாசே கோத்திரத்தாரின் ஆயிரத்துச் சேர்வைக்காரர் அவன் பட்சமாய் வந்தார்கள்.

1நாளா 12:21. அந்தத் தண்டுக்கு விரோதமாய் இவர்கள் தாவீதுக்கு உதவிசெய்தார்கள்; இவர்களெல்லாரும் பராக்கிரமசாலிகளும் இராணுவத்தில் சேர்வைக்காரருமாயிருந்தார்கள்.

1நாளா 12:22. அக்காலத்திலே நாளுக்குநாள் தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் அவனிடத்தில் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவசேனையைப்போல மகா சேனையானார்கள்.

தாவீது சிக்லாக்கில் இருந்தபோது, மனாசே கோத்திரத்தாரில் சிலரும் தாவீதினிடத்தில் வருகிறார்கள். இந்தச் சம்பவம் சவுலின் வீழ்ச்சிக்குச் சற்று முன்பாக நடைபெறுகிறது. இவர்களில் ஏழு பிரதானிகளும் இருக்கிறார்கள்.

அமலேக்கியர் கொள்ளையடித்தப் பொருட்களை மீட்டுத் தருவதில் இவர்கள் உதவிபுரிகிறார்கள் (1சாமு 30, 1நாளா 12:19-21) சில வருஷங்களுக்குப் பின்பு, ராஜ்யபாரத்தைத் தாவீதினிடத்தில் ஒப்புக்கொடுப்பதற்கும் இவர்கள் உதவிபுரிகிறார்கள் (1நாளா 12:37).

பெலிஸ்தர் சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போன சம்பவம், தாவீது இந்த யுத்தத்தில் கலந்து கொள்ளமால் திரும்பி வந்த சம்பவம் ஆகியவை 1சாமு 29:4-ஆவது வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

தாவீது பெலிஸ்தரோடு கூட சேர்ந்து சவுலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், சிக்லாகுக்கு திரும்பிப்போகிறார். அப்போது மனாசே கோத்திரத்தாரில் சிலர் தாவீதோடுகூட சேர்ந்துகொள்கிறார்கள்.

தாவீது எப்ரோனிலிருந்தபோது, அவரோடுகூட வந்து சேர்ந்தவர்கள் 1நாளா 12:23-40

1நாளா 12:23. கர்த்தருடைய வாக்கின்படியே, சவுலின் ராஜ்யபாரத்தைத் தாவீதினிடமாய்த் திருப்ப, எப்ரோனிலிருக்கிற அவனிடத்துக்கு வந்த யுத்தசன்னத்தரான தலைவரின் இலக்கமாவன:

1நாளா 12:24. யூதாபுத்திரரில் பரிசையும் ஈட்டியும் பிடித்து, யுத்தசன்னத்தரானவர்கள் ஆறாயிரத்து எண்ணூறுபேர்.

1நாளா 12:25. சிமியோன் புத்திரரில் பராக்கிரமசாலிகளாகிய யுத்தவீரர் ஏழாயிரத்து நூறுபேர்.

1நாளா 12:26. லேவி புத்திரரில் நாலாயிரத்து அறுநூறுபேர்.

1நாளா 12:27. ஆரோன் சந்ததியாரின் அதிபதியாகிய யோயதாவும், அவனோடிருந்த மூவாயிரத்து எழுநூறுபேரும்,

1நாளா 12:28. பராக்கிரமசாலியான சாதோக் என்னும் வாலிபனும், அவன் தகப்பன் வம்சத்தாரான இருபத்திரண்டு தலைவருமே.

1நாளா 12:29. பென்யமீன் புத்திரரான சவுலின் சகோதரரில் மூவாயிரம்பேர்; அதுவரைக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்றப் பார்த்தார்கள்.

1நாளா 12:30. எப்பிராயீம் புத்திரரில் தங்கள் பிதாக்களின் வம்சத்தில் பேர்பெற்ற மனுஷரான பராக்கிரமசாலிகள் இருபதினாயிரத்து எண்ணூறுபேர்.

1நாளா 12:31. மனாசேயின் பாதிக்கோத்திரத்தில் தாவீதை ராஜாவாக்குகிறதற்கு வரும்படி, பேர்பேராகக் குறிக்கப்பட்டவர்கள் பதினெண்ணாயிரம்பேர்.

1நாளா 12:32. இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவி கொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே.

1நாளா 12:33. செபுலோன் புத்திரரில் சகலவித யுத்த ஆயுதங்களாலும் யுத்தம் செய்கிறதற்கும், தங்கள் அணியைக் காத்துநிற்கிறதற்கும் பழகி, வஞ்சனைசெய்யாமல் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் ஐம்பதினாயிரம்பேர்.

1நாளா 12:34. நப்தலி புத்திரரில் ஆயிரம் தலைவர்கள் பரிசையும் ஈட்டியும் பிடித்த அவர்களோடேகூட இருந்தவர்கள் முப்பத்தேழாயிரம்பேர்.

1நாளா 12:35. தாண் புத்திரரில் யுத்தத்திற்குத் தேறினவர்கள் இருபத்து எண்ணாயிரத்து அறுநூறுபேர்.

1நாளா 12:36. ஆசேர் புத்திரரில் யுத்தத்திற்குத் தேறினவர்களாய் சேவகம்பண்ணப் போகத்தக்கவர்கள் நாற்பதினாயிரம்பேர்.

1நாளா 12:37. யோர்தானுக்கு அக்கரையான ரூபனியரிலும், காத்தியரிலும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிலும், யுத்தம்பண்ண சகலவித ஆயுதங்களையும் தரித்தவர்கள் நூற்றிருபதினாயிரம்பேர்.

1நாளா 12:38. தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்குகிறதற்கு, இந்த யுத்தமனுஷர் எல்லாரும் அணி அணியாய் வைக்கப்பட்டவர்களாக, உத்தம இருதயத்தோடே எப்ரோனுக்கு வந்தார்கள்; இஸ்ரவேலில் மற்ற யாவரும் தாவீதை ராஜாவாக்குகிறதற்கு ஒருமனப்பட்டிருந்தார்கள்.

1நாளா 12:39. அவர்கள் அங்கே தாவீதோடேகூட மூன்றுநாள் இருந்து, போஜனபானம் பண்ணினார்கள்; அவர்கள் சகோதரர் அவர்களுக்காகச் சகலத்தையும் ஆயத்தம் பண்ணியிருந்தார்கள்.

1நாளா 12:40. இசக்கார், செபுலோன், நப்தலியின் எல்லைமட்டும் அவர்களுக்குச் சமீபமாயிருந்தவர்களும், கழுதைகள்மேலும் ஒட்டகங்கள்மேலும் கோவேறு கழுதைகள் மேலும் மாடுகள்மேலும், தின்பண்டங்களாகிய மா, அத்திப்பழ அடைகள், வற்றலான திராட்சப்பழங்கள், திராட்சரசம், எண்ணெய், ஆடுமாடுகள் ஆகிய இவைகளை வேண்டிய மட்டும் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்; இஸ்ரவேலிலே மகிழ்ச்சியுண்டாயிற்று.

தாவீது எப்ரோனிலிருக்கிறார். அக்காலத்திலே நாளுக்குநாள் தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் அவரிடத்தில் வந்து சேர்ந்தபடியால், அவர்கள் தேவசேனையைப்போல மகா சேனையானார்கள் (1நாளா 12:22).

நாளுக்குநாள் தாவீதுக்கு உதவிசெய்யும் மனுஷர் அவரிடத்தில் வந்து சேர்ந்தார்கள். சவுலிடமிருந்து ராஜ்யபாரத்தைத் தாவீதினிடத்திற்கு ஒப்புக் கொடுப்பதற்காக இவர்கள் ஆயுதங்களோடு வருகிறார்கள். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது. (1நாளா 12:22-23).

தாவீதின் மகாசேனையில் வந்த சேர்ந்தவர்களின் விவரம் வருமாறு:

1. யூதாவின் மனுஷர் - 6,800பேர்
2. சிமியோனின் மனுஷர் - 7,100பேர்
3. லேவியின் மனுஷர் - 4,600பேர்
4. பென்யமீனின் மனுஷர் - 3,000பேர்
5. எப்பிராயீமின் மனுஷர் - 20,800பேர்
6. யோர்தானின் மேற்குப் பகுதியிலிருந்த மனாசேயின் மனுஷர் - 18,000பேர்
7. இசக்காரின் மனுஷர் - 200பேர்
8. செபுலோனின் மனுஷர் - 50,000பேர்
9. நப்தலியின் மனுஷர் - 38,000பேர்
10. தாணின் மனுஷர் - 28,600பேர்

11. ஆசேரின் மனுஷர் - 40,000

12. யோர்தானின் கிழக்குப் பகுதியிலிருந்த மனாசேயின் மனுஷரும், காத்தின் மனுஷரும், ரூபனின் மனுஷரும் - 120,000பேர்

மொத்தம் 337,110பேர்

தாவீதின் மகா சேனையின் மொத்த எண்ணிக்கை 337,100 மனுஷரைவிட அதிகமாக உள்ளது. இசக்காரின் 200 தலைவருக்கு உட்பட்ட மனுஷர் இந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவில்லை. (நாளா 12:32).

சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் மரித்துப்போகிறான். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். யுத்தசன்னத்தரின் தலைவர்களெல்லாம் எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து சேருகிறார்கள். தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம்பண்ணுவதற்கு, எதிர்ப்புக்கள், தடைகள், பிரச்சனைகள் ஏழ்வது வந்தால், அதை சந்தித்து மேற்கொள்வதற்கு, யுத்தசன்னத்தரான தலைவர்கள் தாவீதோடு கூடயிருக்கிறார்கள்.

தாவீது இக்காலத்தில் எப்ரோனிலிருக்கிறார். எப்ரோனுக்கு அருகாமையிலுள்ளவர்கள், சொற்ப எண்ணிக்கையில் தாவீதோடு கூட வந்து சேருகிறார்கள். யூதாவின் மனுஷர் 6,800 பேரும், சிமியோனின் மனுஷர் 7,100 பேரும் மாத்திரமே தாவீதோடு சேருகிறார்கள்.

செபுலோன் கோத்திரத்தாரோ எப்ரோனுக்கு வெகுதூரத்திலிருக்கிறார்கள். செபுலோன், ஆசேர், மனாசேயின் பாதிக்கோத்திரத்தார் ஆகியோர் யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் திரளான எண்ணிக்கையில், எப்ரோனிலிருக்கிற தாவீதினிடத்தில் வந்து சேருகிறார்கள்.

தாவீதுக்கு அருகாமையிலிருக்கிறவர்கள் சொற்பஎண்ணிக்கையில் வந்திருப்பதினால், அவர்களுக்கு தாவீதின்மீது பிரியம் குறைவாகயிருக்கிறது என்று சொல்ல முடியாது. அவர்கள் சொற்பஎண்ணிக்கையில் வந்திருந்தாலும், அந்தக் கோத்திரங்களில் மீதமுள்ளவர்கள், தாவீதுக்கு அருகாமையிலேயே இருக்கிறார்கள். ஆகையினால் தாவீதுக்கு எப்போது உதவி தேவைப்பட்டாலும், அவர்கள் உடனே தாவீதோடு கூட வந்து சேர்ந்துகொள்வார்கள்.

லேவியரும் ஆசாரியரும் தாவீதோடு கூடவருகிறார்கள். இவர்கள் இந்த வசனப்பகுதியில் "ஆரோன் சந்ததியார்" என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தாவீதுக்காக யுத்தம்பண்ணவும், கர்த்தருக்காக ஜெபம்பண்ணவும் ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தர் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார் என்பதை ஆரோன் சந்தியார் அறிந்திருக்கிறார்கள்.

சவுல் உயிரோடிருந்த வரையிலும் தாவீதுக்கு சத்துருவாயிருந்தார். தாவீதை கொல்லவேண்டுமென்று முயற்சிபண்ணினார். சவுல் மரித்துப்போன பின்பு, சவுலின் சகோதரரில் 3,000 பேர் இப்போது தாவீதினிடத்தில் வருகிறார்கள். இவர்கள் இதுவரையிலும் சவுலின் குடும்பத்தைக் காப்பாற்ற பார்த்தவர்கள். ஆனால் இப்போதோ அவர்கள் தாவீதினிடத்தில் வந்திருக்கிறார்கள் (1நாளா 12:29).

தாவீதோடு கூட வந்திருக்கிறவர்கள் பராக்கிரமசாலிகளாகிய யுத்தவீரர்கள் (1நாளா 12:25,28,30). இவர்கள் யுத்தத்திற்கு தேறினவர்கள் (1நாளா 12:35,36). இவர்கள் எல்லோரும் யுத்தமனுஷர்கள் இவர்கள் அணியணியாக வைக்கப்பட்டிருக்கிறார்கள் (1நாளா 12:38).

இசக்கார் கோத்திரத்தாரில் 200பேர் மாத்திரமே தாவீதினிடத்தில் வந்திருக்கிறார்கள். இவர்கள் சொற்ப எண்ணிக்கையிலிருந்தாலும், தாவீதுக்கு நல்ல யோசனைகளை சொல்லி மிகவும் உதவியாயிருக்கிறார்கள்.

"இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவி கொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே" (1நாளா 12:32).

இசக்கார் கோத்திரத்தாருக்கு இஸ்ரவேல் தேசத்தைப்பற்றியும், இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றியும் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இசக்காரின் பிரபுக்கள் எல்லோருமே மிகுந்த ஞானமுள்ளவர்கள். இசக்காரின் பிரபுக்களுக்கு எவ்வாறு ஆளுகை செய்வது என்பதும் தெரியும், மீதமுள்ள இசக்கார் கோத்திரத்தாருக்கு, ஆளுகைக்கு எவ்வாறு கீழ்ப்படிவது என்பதும் தெரியும்.

"இசக்காரின் பிரபுக்களும் தெபொராளோடே இருந்தார்கள்; பாராக்கைப் போல இசக்கார் மனுஷரும் பள்ளத்தாக்கில் கால்நடையாய் அனுப்பப்பட்டுப் போனார்கள்; ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி" (நியா 5:15).

இவர்களுடைய இருதயம் தாவீதோடு ஒருமனப்பட்டிருக்கிறது. இவர்கள் தாவீதுக்கும், சவுலுக்குமாக இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யவில்லை. இவர்கள் ஒரே இருதயத்தோடும், ஒரே ஆத்துமாவோடும் தாவீதோடு சேர்ந்திருக்கிறார்கள் (1நாளா 12:38).

அவர்கள் அங்கே தாவீதோடேகூட மூன்று நாள் இருந்து, போஜனபானம் பண்ணுகிறார்கள். மூன்றுநாட்களுக்கு விருந்து நடைபெறுகிறது. இந்த விருந்திற்கு தின்பண்டங்களாகிய மா, அத்திப்பழ அடைகள், வற்றலான திராட்சப் பழங்கள், திராட்சரசம், எண்ணெய், ஆடுமாடுகள் ஆகியவற்றை இஸ்ரவேல் புத்திரர்கள் கொண்டு வருகிறார்கள். (1நாளா 12:40).

தாவீதோடுகூட வந்து சேர்ந்திருக்கிறவர்களின் இருதயங்கள், ஒரே இருதயமாகவும் (1நாளா 12:33), உத்தம இருதயமாகவும் (1நாளா 12:38), ஒரு மனப்பட்ட இருதயமாகவும் இருக்கிறது.

இதனால் இஸ்ரவேலிலே மகிழ்ச்சியுண்டாயிற்று. இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இஸ்ரவேலின் எல்லாக் கோத்திரத்தாரும் தாவீதினிடத்தில் வந்து, அவரைச் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக்குகிறார்கள். எப்ரோனில் தாவீது யூதாவின்மீது ராஜ்யபாரம் பண்ணுவதைப் பற்றி இந்த அதிகாரத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

13 அதிகாரம்

இஸ்ரவேலின் மார்க்க காரியங்களைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டி கீரியாத்யாரீமிலிருக்கிறது. அந்தப் பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். தாவீது இது சம்பந்தமாக இஸ்ரவேலில் புத்திரரின் பிரதிநிதிகளோடு ஆலோசனை பண்ணுகிறார் (நாளா 13:1-4).

இஸ்ரவேலர் அனைவரும் மிகுந்த சந்தோஷத்தோடு, தேவனுடைய பெட்டியை கீரியாத்யாரீமிலிருந்து ஒரு புது இரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள் (நாளா 13:5-8).

ஊசா பெட்டியைப் பிடிக்க தன் கையை நீட்டின போது, கர்த்தர் அவனை அங்கே அடிக்கிறார். அங்கே ஊசா தேவசமுகத்தில் செத்துப்போகிறான் (நாளா 13:9-14).

தேவனுடைய பெட்டி 1நாளா 13:1-8

1நாளா 13:1. தாவீது ஆயிரம்பேருக்குத் தலைவரோடும் நூறுபேருக்குத் தலைவரோடும் சகல அதிபதிகளோடும் ஆலோசனை பண்ணி,

1நாளா 13:2. இஸ்ரவேல் சபையையெல்லாம் நோக்கி: உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சித்தமுமாயிருந்தால், இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம்முடைய மற்றச் சகோதரரும், அவர்களோடே தங்கள் வெளிநிலங்களில் இருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடே கூடும்படிக்கு நாம் சீக்கிரமாய் அவர்களிடத்துக்கு ஆள் அனுப்பி,

1நாளா 13:3. நமது தேவனுடைய பெட்டியைத் திரும்ப நம்மிடத்துக்குக் கொண்டுவருவோமாக; சவுலின் நாட்களில் அதைத் தேடாதேபோனோம் என்றான்.

1நாளா 13:4. இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம் என்றார்கள்.

1நாளா 13:5. அப்படியே தேவனுடைய பெட்டியைக் கீரியாத்யாரீமிலிருந்து கொண்டுவரும்படி, தாவீது எகிப்தைச்சேர்ந்த சீகோர் நதிதுவக்கி ஆமாத்தின் எல்லை மட்டுமுள்ள இஸ்ரவேலையெல்லாங்கூட்டி,

1நாளா 13:6. கேருபீன்களின் நடுவே வாசம் பண்ணுகிற கர்த்தராகிய தேவனுடைய நாமம் தொழுதுகொள்ளப்படுகிற அவருடைய பெட்டியை யூதாவிலிருக்கிற கீரியாத்யாரீமுக்கடுத்த பாலாவிலிருந்து கொண்டுவரும்படிக்கு, அவனும் இஸ்ரவேலர் அனைவரும் அவ்விடத்திற்குப் போனார்கள்.

1நாளா 13:7. அவர்கள் தேவனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு புது ரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வந்தார்கள்; ஊசாவும் அகியோவும் ரதத்தை நடத்தினார்கள்.

1நாளா 13:8. தாவீதும் சகல இஸ்ரவேலரும் தங்கள் முழுப் பலத்தோடும் தேவனுக்குமுன்பாகச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் மேளங்களையும் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் சேவித்து மகிழ்ச்சியாய் ஆடிப்பாடினார்கள்.

தேவனுடைய பெட்டி யூதாவுக்கடுத்த கீரியாத்யாரீமிலே இருக்கிறது. தாவீது அந்தப் பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார். எருசலேம் கர்த்தருடைய பரிசுத்த நகரம். இது தாவீதின் ராஜ்யத்திலே ராஜதானி பட்டணமாயிருக்கிறது.

தாவீது இஸ்ரவேலின் சிங்காசனத்திலே ராஜாவாக அமர்ந்தவுடனே அவர் தேவனுடைய பெட்டியைப்பற்றி சிந்திக்க ஆரம்பிக்கிறார். "நமது தேவனுடைய பெட்டியை திரும்ப நம்மிடத்துக்குகொண்டு வருவோமாக" (1நாளா 13:3) என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். தேவனுடைய பெட்டி, கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. தாவீது தேவனுடைய பெட்டிக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்.

தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரும்போது, அது அவர்களுக்கு மேன்மையாயும், மகிமையாயும் இருக்கும். அது மாத்திரமல்ல, தேவனுடைய பெட்டியினால் அவர்களுக்கு ஆசீர்வாதமும் கிடைக்கும். கர்த்தருடைய பரிசுத்தமான வார்த்தைகள் நம்மிடத்தில் தங்கியிருக்கும்போது, அதன் மூலமாக நமக்கு ஆறுதல்களும் ஆசீர்வாதங்களும் உண்டாகும்.

நாம் எங்குபோனாலும், கர்த்தருடைய வார்த்தை நம்மோடு கூடவரவேண்டும். கர்த்தருடைய வாக்கியங்கள் நம்முடைய இருதயத்தில் தங்கியிருக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார், தாங்கள் பிரயாணம்பண்ணிய இடங்களுக்கெல்லாம், கர்த்தருடைய பெட்டியை சுமந்துகொண்டு போனதுபோல, நாமும் நம்முடைய இருதயத்திலே கர்த்தருடைய வார்த்தைகளை சுமக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய பிரமாணமே, அவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைக் கொடுத்தது. கர்த்தருடைய பிரமாணம் அவர்களை ஆளுகை செய்கிற சட்டங்களாகவும், கட்டளைகளாகவும் இருந்தது.

தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டும் என்பது தாவீதின் விருப்பம். ஆனாலும் தாவீது தனிநபராக இந்தக் காரியத்தை செய்ய விரும்பவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்து, தேவனுடைய பெட்டியை கீரியாத்யாரீமிலிருந்து எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று தாவீது விரும்புகிறார். தாவீது இது சம்பந்தமாக இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதிகளோடு ஆலோசனை பண்ணுகிறார்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். அவரால் தன்னுடைய ராஜரீக அதிகாரத்தைப் பயன்படுத்தி, தன்னுடைய மனதின் விருப்பங்களை நிறைவேற்ற முடியும். ஆனால் தாவீதோ தேவனுடைய பெட்டியை, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமாகச் சேர்ந்து எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார். தாவீது இஸ்ரவேல் புத்திரரின் பிரதிநிதிகளோடு, இது சம்பந்தமாக ஆலோசனைபண்ணுகிறார்.

தாவீது இஸ்ரவேல் தேசத்திலுள்ள தலைவர்களுக்கும், அதிபதிகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர்களோடு ஆலோசனைபண்ணி அவர்களைக் கனம்பண்ணுகிறார். ஒரு தேசத்திற்கு நல்ல ராஜாவாக இருக்கிறவர், தன்னுடைய தேசத்திலுள்ள முக்கியஸ்தர்களுக்கும், பிரதானமானவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார். எல்லாவற்றையும் தானே செய்யவேண்டுமென்று பேராசைப்படமாட்டார்.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். ஆனாலும் அவருக்கு இஸ்ரவேல் தேசத்திலுள்ள தலைவர்களின் ஆலோசனைகளும், அதிபதிகளின் ஆலோசனைகளும் தேவைப்படுகிறது.

தாவீது இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் தன்னிடத்தில் கூட்டிச் சேர்க்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரைப்பற்றிச் சொல்லும்போது, "நம்முடைய மற்ற சகோதரர்" (1நாளா 13:2) என்று சொல்லுகிறார். இந்த வாக்கியம் தாவீதின் மனத்தாழ்மைக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. அவரிடத்தில் சுயபெருமையில்லை. அவர் இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருந்தாலும், தன்னை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் சகோதரராகவே பாவிக்கிறார்.

தாவீது இஸ்ரவேல் சபையைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் எல்லோரும் தீங்குகளுக்கும், அழிவுகளுக்கும் தப்பித்து மீந்தவர்கள் என்று பொருள்படுமாறு பேசுகிறார். தாவீது இஸ்ரவேலரைப்பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் தேசங்களிலெல்லாம் இருக்கிற நம்முடைய மற்ற சகோதரர்" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலர் எல்லோரும் தங்கள் வெளிநிலங்களிலிருக்கிறார்கள். அவர்கள் தேசம் முழுவதிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதங்களும், ஆதரவுகளும், அநுக்கிரகங்களும் அவர்களுக்கு, அவ்வப்போது, அங்கங்கே கிடைக்கிறது.

தாவீது இஸ்ரவேலரை தன்னிடத்தில் கூட்டிச் சேர்க்கும்போது, அவர் ஆசாரியரையும், லேவியரையும் மறந்துவிடவில்லை. தாவீது அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். அவர்களை அழைத்து வருமாறு அவர்களிடத்திற்கு ஆட்களை அனுப்புகிறார்.

தேவனுடைய பெட்டி இப்போது கீரியாத்யாரீமிலே இருக்கிறது. அதை எருசலேமுக்கு கொண்டு வரவேண்டும். இதுவே தாவீதின் திட்டமும் விருப்பமும் ஆகும்.

தாவீது தேவனுடைய பெட்டியைப்பற்றிச் சொல்லும்போது, "சவுலின் நாட்களில் அதை தேடாதேபோனோம்" என்று சொல்லுகிறார். தாவீது சவுலின்மீது குற்றம் சொல்லாமல், "தேடாதேபோனோம்" என்று தன்மீதும் குற்றம் சொல்லுகிறார். தேவனுடைய பெட்டியை தேடாமல் போன தப்பிதத்தை, எல்லோரையும் போல தாவீதும் செய்திருக்கிறார்.

தாவீது இஸ்ரவேல் புத்திரருடைய பிரதிநிதிகளிடம், "நமது தேவனுடைய பெட்டியை திரும்ப நம்மிடத்திற்கு கொண்டு வருவோமாக" என்று சொன்னபோது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், "இந்தக் காரியம் சகல ஜனத்தின் பார்வைக்கும் செம்மையாயிருந்தபடியால், சபையார் எல்லாரும் அப்படியே செய்வோம்" (1நாளா 13:4) என்று சொல்லுகிறார்கள்.

தேவனுடைய பெட்டியைக் கொண்டு வருவதற்காக இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் யூதாவிலிருக்கிற கீரியாத்யாரீமுக்குப் போகிறார்கள்.

ஊசாவின் பாவம்
1நாளா 13:9-14

1நாளா 13:9. அவர்கள் கீதோனின் களமட்டும் வந்தபோது, மாடுகள் இடறினபடியினால், ஊசா பெட்டியைப் பிடிக்கத் தன் கையை நீட்டினான்.

1நாளா 13:10. அப்பொழுது கர்த்தர் ஊசாவின் மேல் கோபம் மூண்டவராகி, அவன் தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினதினிமித்தம் அவனை அடித்தார்; அங்கே அவன் தேவசமுகத்தில் செத்தான்.

1நாளா 13:11. அப்பொழுது கர்த்தர் ஊசாவை அடித்ததினிமித்தம் தாவீது விசனப்பட்டு, அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டும் வழங்கிவருகிற பேரேஸ் ஊசா என்னும் பேரிட்டு,

1நாளா 13:12. அன்றையதினம் தேவனுக்குப் பயந்து: தேவனுடைய பெட்டியை நான் என்னிடத்துக்குக் கொண்டுவருவது எப்படியென்று சொல்லி,

1நாளா 13:13. பெட்டியைத் தன்னிடத்தில் தாவீதின் நகரத்திலே கொண்டுவராமல், அதைக் கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே சேர்த்தான்.

1நாளா 13:14. தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கையில், கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார்.

அவர்கள் தேவனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு புது ரதத்தின்மேல் ஏற்றிக்கொண்டு வருகிறார்கள்; ஊசாவும் அகியோவும் ரதத்தை நடத்துகிறார்கள்.

தாவீதும் சகல இஸ்ரவேலரும் தங்கள் முழுப் பலத்தோடும் தேவனுக்குமுன்பாகச் சுரமண்டலங்களையும் தம்புருகளையும் மேளங்களையும் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் சேவித்து மகிழ்ச்சியாய் ஆடிப்பாடுகிறார்கள்.

அவர்கள் கீதோனின் களமட்டும் வந்தபோது, மாடுகள் இடறினபடியினால், ஊசா பெட்டியைப் பிடிக்கத் தன் கையை நீட்டுகிறான். அப்பொழுது கர்த்தர் ஊசாவின் மேல் கோபம் மூண்டவராகி, அவன் தன் கையை பெட்டியண்டைக்கு நீட்டினதினிமித்தம் அவனை அடிக்கிறார்; அங்கே அவன் தேவசமுகத்தில் செத்துப்போகிறான் (1நாளா 13:9,10).

இந்த சம்பவம் 2சாமு 6:6-ஆவது வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. ஊசாவின் பாவம் நமக்கு எச்சரிப்பாக இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருடைய ஊழியத்தை அவசரப்பட்டோ, பக்தியில்லாமலோ செய்யக்கூடாது.

தேவனுடைய பெட்டி இரதத்திலிருந்து கீழே விழுந்துவிடும், அதைப் பிடிக்கவேண்டும் என்னும் நல்ல நோக்கத்தோடுதான், ஊசா அந்தப் பெட்டியைப் பிடிக்க தன் கையை நீட்டுகிறான். ஆனாலும் கர்த்தருடைய பார்வையிலே ஊசா செய்தது பாவமாயிருக்கிறது. தீயகாரியங்கள் நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டாலும், அவை ஒருபோதும் கர்த்தருக்கு பிரியமாயிருக்காது.

ஊசா செத்துப்போன பின்பு, தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வருவதை நிறுத்திவிடுகிறார். அவர் பெட்டியை கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே சேர்க்கிறார். தேவனுடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே அவனிடத்தில் மூன்று மாதம் இருக்கிறது. அப்போது கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதிக்கிறார் (1நாளா 13:13,14).

14 அதிகாரம்

தாவீதின் ராஜ்யபாரம் ஸ்திரப்படுகிறது (1நாளா 14:1,2). தாவீதின் குடும்பம் கட்டியெழுப்பப்படுகிறது (1நாளா 14:3-7). பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக இரண்டுமுறை யுத்தம்பண்ணுகிறார்கள் (1நாளா 14:8-17). இந்த சம்பவங்கள் 2சாமு 5:11-ஆவது வசனப்பகுதியிலும் விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதின் குடும்பம் 1நாளா 14:1-7

1நாளா 14:1. தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதினிடத்தில் ஸ்தானாபதிகளையும், அவனுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறதற்குக் கேதுரு மரங்களையும், தச்சரையும், கல்தச்சரையும் அனுப்பினான்.

1நாளா 14:2. கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாகத் திடப்படுத்தி, இஸ்ரவேல் என்னும் தம்முடைய ஜனத்தினிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை மிகவும் உயர்த்தினார் என்று தாவீது அறிந்துகொண்டான்.

1நாளா 14:3. எருசலேமிலே தாவீது பின்னும் அநேக ஸ்திரீகளை விவாகம்பண்ணி, பின்னும் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

1நாளா 14:4. எருசலேமிலே அவனுக்குப் பிறந்த குமாரரின் நாமங்களாவன: சம்முவா, சோபாப், நாத்தான், சாலொமோன்,

1நாளா 14:5. இப்கார், எலிசூவா, எல்பெலேத்,

1நாளா 14:6. நோகா, நெப்பேக், யப்பியா,

1நாளா 14:7. எலிஷாமா, பெலியதா, எலிப்பெலேத் என்பவைகள்.

கர்த்தர் தாவீதை அதிகமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவரை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தனக்கு செய்திருக்கிற உதவிகளை தாவீதும் அறிந்திருக்கிறார். தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசம் மிகப்பெரிய தேசமாயிருக்கிறது.

தாவீதின் ராஜ்யபார காலத்திலே தீருவானது மிகவும் சிறிய தேசம். தீருவின் ராஜாவாகிய ஈராம் தாவீதின்மீது அன்பாயிருக்கிறான். தாவீதால் தனக்கு ஒரு வீட்டைக் கட்ட முடியவில்லை. தீருவின் ராஜாவாகிய ஈராமே, தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொடுக்கிறான். வீடு கட்டுவதற்குத் தேவையான பொருட்களை ஈராம் அனுப்புகிறான். ஈராமின் வேலையாட்கள் தாவீதுக்கு வீட்டைக் கட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக அபிஷேகம்பண்ணினார்கள். தாவீதும் தன்னுடைய ராஜாசனத்தில் ஸ்திரப்பட்டிருக்கிறார். தாவீது இப்போது உயர்ந்த நிலமையிலிருக்கிறார். தாவீது உயர்ந்திருந்தாலும், அவர் கர்த்தரை மறக்கவில்லை. கர்த்தரே தன்னை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக திடப்படுத்தியிருக்கிறார் என்பதை தாவீது அறிந்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் நிமித்தம், தாவீதை உயர்த்தியிருக்கிறார். தாவீது கர்த்தருக்கு பயந்து இஸ்ரவேல் ஜனத்தாரை ராஜ்யபாரம்பண்ணவேண்டும். சத்துருக்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கவேண்டும்.

கர்த்தர் தாவீதை உயர்த்தினதுபோலவே, நம்மையும் உயர்த்துகிறார். கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை, அவருடைய நாமமகிமைக்காக பயன்படுத்தவேண்டும். இதனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பிரயோஜனமுண்டாகவேண்டும். நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும் என்பதற்காகவே, கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை அசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:2).

எருசலேமிலே தாவீது பின்னும் அநேக ஸ்திரீகளை விவாகம்பண்ணினார். எருசலேமில் இருந்த தாவீதின் மனைவிகளையும், அவருடைய குமாரரையும், குமாரத்திகளையும் பற்றிய குறிப்பு இந்த வசனத்திலும் கூறப்பட்டிருக்கிறது (1நாளா 14:3-7).

தாவீதின் மனைவிகளில் ஒருத்தி பெலியதா. இவளுடைய மறுபெயர் எலியாதா என்பதாகும். (2சாமு 5:16) பெலியதா என்பது பாகாலோடு தொடர்புடையது. ஆகையினால் இந்தப் பெயர் பின்பு எலியாதா என்று கர்த்தரோடு தொடர்புடையதாக மாற்றப்பட்டிருக்கிறது.

பெலிஸ்தரோடு யுத்தம் 1நாளா 14:8-17

1நாளா 14:8. தாவீது சமஸ்த இஸ்ரவேலின்மேலும் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டதைப் பெலிஸ்தர் கேள்விப்பட்டபோது, பெலிஸ்தர் எல்லாரும் தாவீதைத் தேடும்படி வந்தார்கள்; அதைத் தாவீது கேட்டபோது அவர்களுக்கு விரோதமாகப் புறப்பட்டான்.

1நாளா 14:9. பெலிஸ்தர் வந்து ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலே பரவியிருந்தார்கள்.

1நாளா 14:10. பெலிஸ்தருக்கு விரோதமாகப் போகலாமா, அவர்களை என் கையில் ஒப்புக்கொடுப்பீரா என்று தாவீது தேவனைக் கேட்டபோது, கர்த்தர்: போ, அவர்களை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.

1நாளா 14:11. அவர்கள் பாகால்பிராசீமுக்கு வந்தபோது, தாவீது அங்கே அவர்களை முறிய அடித்து: தண்ணீர்கள் உடைந்தோடுகிறதுபோல, தேவன் என் கையினால் என் சத்துருக்களை உடைந்தோடப்பண்ணினார் என்றான்; அதினிமித்தம் அந்த ஸ்தலத்திற்குப் பாகால்பிராசீம் என்னும் பேரிட்டார்கள்.

1நாளா 14:12. அங்கே அவர்கள் தங்கள் தெய்வங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; தாவீது கற்பித்தபடி அவைகள் அக்கினியாலே சுட்டெரிக்கப்பட்டன.

1நாளா 14:13. பெலிஸ்தர் மறுபடியும் வந்து அந்தப் பள்ளத்தாக்கிலே இறங்கினார்கள்.

1நாளா 14:14. அப்பொழுது தாவீது திரும்ப தேவனிடத்தில் விசாரித்ததற்கு, தேவன் நீ அவர்களுக்குப் பின்னாலே போகாமல், அவர்களுக்குப் பக்கமாய்ச் சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள் மேல் பாய்ந்து,

1நாளா 14:15. முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும்போது, யுத்தத்திற்குப் புறப்படு; பெலிஸ்தரின் பாளயத்தை முறிய அடிக்க, தேவன் உனக்கு முன்னே புறப்பட்டிருப்பார் என்றார்.

1நாளா 14:16. தேவன் தனக்குக் கற்பித்தபடியே தாவீது செய்தபோது, பெலிஸ்தரின் இராணுவத்தைக் கிபியோன் துவக்கிக் காசேர்மட்டும் முறிய அடித்தார்கள்.

1நாளா 14:17. அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி, அவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல ஜாதிகளின்மேலும் வரப்பண்ணினார்.

பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக இரண்டுமுறை யுத்தம்பண்ண வருகிறார்கள். இந்த யுத்தத்திலே தாவீது பெலிஸ்தியரை முறியடிக்கிறார். இந்த சம்பவம் 2சாமு 5:17-ஆவது வசனப்பகுதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தாலும், தாவீதின் உயர்வோ, வளர்ச்சியோ நின்றுபோகவில்லை. அவருடைய முன்னேற்றம் தடைபடவுமில்லை. நம்முடைய ஜீவியத்திலும் பெலிஸ்தரைப்போன்ற சத்துருக்கள், நமக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரலாம். நாம் சத்துருக்களைப் பார்த்து பயந்துவிடக்கூடாது. நாம் கர்த்தரை நோக்கிப் பார்த்து தைரியம் பெறவேண்டும்.

தாவீதின் ராஜாசனம் ஸ்திரப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் தேசத்தில் அமைதியும் சந்தோஷமும் நிரம்பியிருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில்தான் பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். பெலிஸ்தர் தாவீதின் ராஜ்யபாரத்திற்கு பிரச்சனைகளைக் கொடுக்க வருகிறார்கள்.

நம்முடைய ஜீவியத்தில், நாம் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் இருக்கும்போது, சத்துரு நமக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவான். அவன் நம்மைப் பயமுறுத்துவான். நம்முடைய சந்தோஷத்தையும் சமாதானத்தையும் குலைத்துப்போட முயற்சிபண்ணுவான்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கிறார். கிறிஸ்துவின் சபை இந்தப் பூமியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக சத்துருக்கள் யுத்தம்பண்ண வருகிறார்கள். சபை வளர்ந்து பெருகும்போது, சர்ப்பத்தின் வித்தாகயிருக்கிறவர்கள், சபையின் வளர்ச்சியை குலைத்துப்போட முயற்சி பண்ணுகிறார்கள்.

பெலிஸ்தர் தாவீதுக்கு விரோதமாக வந்தபோது, தாவீது அவர்களுக்கு விரோதமாக உடனே யுத்தம்பண்ணாமல், அதை கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக யுத்தம்பண்ணுகிறார்.

நமக்கு பிரச்சனைகள் வரும்போது, நம்முடைய சுயமுயற்சியினாலோ அல்லது சுயபலத்தினாலோ அந்தப் பிரச்சனைகளை சந்தித்துவிடலாம் என்று நினைக்கக்கூடாது. நமக்கு கர்த்தருடைய உதவி தேவை. கர்த்தருடைய உதவியில்லாமல் நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. தாவீது கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணுகிறார். அவர் பெலிஸ்தரை முறியடிக்கிறார்.

தோற்றுப்போன பெலிஸ்தர் மறுபடியும் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். ஏற்கெனவே பெலிஸ்தர் தாவீதோடு யுத்தம் பண்ண வந்தார்கள். தாவீது அவர்களை ஜெயித்து துரத்தினார். தோற்றுப்போன பெலிஸ்தர் தங்களுடைய சேனையைப் பெரிதாக்கி, மறுபடியும் தாவீதோடு யுத்தம் பண்ண வருகிறார்கள். தாவீது பெலிஸ்தரோடு இரண்டாம் முறையும் யுத்தம் பண்ணி, அவர்களை ஜெயிக்கிறார் *(2சாமு 5:22)*.

கர்த்தர் தனக்கு செய்த உதவிகளை தாவீது நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூருகிறார். தாவீது கர்த்தருடைய பலிபீடத்திலே, துதிகளையும், ஸ்தோத்திர பலிகளையும் ஏறெடுக்கிறார். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. நம்முடைய வாயில் கர்த்தரைத் துதிக்கும் துதிகள் எப்போதும் நிரம்பியிருக்கவேண்டும்.

15 அதிகாரம்

தேவனுடைய பெட்டி கீரியாத்யாரீமிலே இருந்தது. தாவீது அதை எருசலேமுக்கு கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்டார். தாவீதின் முயற்சி நல்ல முயற்சியாயிருந்தாலும், அந்த முயற்சி நிறைவேறவில்லை. தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலே தங்கிவிடுகிறது. தாவீது மறுபடியுமாய் முயற்சிபண்ணி, தேவனுடைய பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து எருசலேமுக்கு கொண்டு வருகிறார்.

தாவீது, தாவீதின் நகரத்திலே தேவனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி, அதற்கு ஒரு கூடாரத்தைப் போடுகிறார் (1நாளா 15:1). ஆசாரியர்கள் தேவனுடைய பெட்டியை எடுத்து வரவேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார் (1நாளா 15:2-15).

லேவியர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியத்தை செய்கிறார்கள். அவர்கள் கீதவாத்தியங்கள் முழங்க தங்கள் சத்தத்தை உயர்த்தி கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள் (1நாளா 15:16-24).

தேவனுடைய பெட்டியை எடுத்து வருவதற்கு தாவீது மேற்கொண்ட முதலாவது முயற்சி இடையிலே நின்றுபோயிற்று. ஆனாலும் அவருடைய இரண்டாவது முயற்சி பெற்றி பெறுகிறது. அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து, தாவீதின் நகரத்திற்கு மகிழ்ச்சியோடே கொண்டு வருகிறார்கள் (1நாளா 15:25).

லேவியர் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கிறார்கள் (1நாளா 15:26). தாவீதும் இஸ்ரவேல் ஜனங்களும் மிகுந்த சந்தோஷத்தோடு கர்த்தருடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வருகிறார்கள் (1நாளா 15:27,28).

தேவனுடைய பெட்டிக்கு முன்பாக தாவீது ராஜா ஆடிப்பாடி வருகிறார். தாவீதின் மனைவியாகிய மீகாள், தன் இருதயத்திலே தாவீதை அவமதிக்கிறாள் (1நாளா 15:29).

தேவனுடைய பெட்டி
1நாளா 15:1-24

1நாளா 15:1. அவன் தனக்குத் தாவீதின் நகரத்தில் வீடுகளை உண்டாக்கி, தேவனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி, அதற்கு ஒரு கூடாரத்தைப் போட்டான்.

1நாளா 15:2. பிற்பாடு தாவீது: லேவியர் ஒழிய வேறொருவரும் தேவனுடைய பெட்டியை எடுக்கலாகாது; தேவனுடைய பெட்டியை எடுக்கவும், என்றைக்கும் அவருக்குப் பணிவிடைசெய்யவும், அவர்களையே கர்த்தர் தெரிந்துகொண்டார் என்றான்.

1நாளா 15:3. அப்படியே கர்த்தருடைய பெட்டிக்குத்தான் ஆயத்தப்படுத்தின அதின் ஸ்தலத்திற்கு அதைக் கொண்டுவரும்படி, தாவீது இஸ்ரவேலையெல்லாம் எருசலேமிலே கூடிவரச்செய்தான்.

1நாளா 15:4. ஆரோனின் புத்திரரையும்,

1நாளா 15:5. லேவியராகிய கோகாத் புத்திரரில் பிரபுவாகிய ஊரியேலையும், அவன் சகோதரராகிய நூற்றிருபதுபேரையும்,

1நாளா 15:6. மெராரியின் புத்திரரில் பிரபுவாகிய அசாயாவையும், அவன் சகோதரராகிய இருநூற்றிருபதுபேரையும்,

1நாளா 15:7. கெர்சோன் புத்திரரில் பிரபுவாகிய யோவேலையும், அவன் சகோதரராகிய நூற்றுமுப்பதுபேரையும்,

1நாளா 15:8. எலிசாப்பான் புத்திரரில் பிரபுவாகிய செமாயாவையும், அவன் சகோதரராகிய இருநூறுபேரையும்,

1நாளா 15:9. எப்ரோன் புத்திரரில் பிரபுவாகிய எலியேலையும், அவன் சகோதரராகிய எண்பதுபேரையும்,

1நாளா 15:10. ஊசியேல் புத்திரரில் பிரபுவாகிய அம்மினதாபையும், அவன் சகோதரராகிய நூற்றுப் பன்னிரண்டுபேரையும் தாவீது கூடிவரப்பண்ணினான்.

1நாளா 15:11. பின்பு தாவீது ஆசாரியராகிய சாதோக்கையும், அபியத்தாரையும், லேவியராகிய ஊரியேல், அசாயா, யோவேல், செமாயா, எலியேல், அம்மினதாப் என்பவர்களையும் அழைத்து,

1நாளா 15:12. அவர்களை நோக்கி: லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர், நீங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியை அதற்கு நான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்கு கொண்டுவரும்படி, உங்களையும் உங்கள் சகோதரரையும் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்.

1நாளா 15:13. முதலில் நீங்கள் அதைச் சுமக்காதபடியினாலும், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதேபோனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடிவிழப்பண்ணினார் என்றான்.

1நாளா 15:14. அப்படியே ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியைக் கொண்டுவரத் தங்களை சுத்தம்பண்ணிக்கொண்டார்கள்.

1நாளா 15:15. பின்பு லேவி புத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்தபிரகாரம் தேவனுடைய பெட்டியை அதின் தண்டுகளினாலே தங்கள் தோள் மேல் எடுத்துக்கொண்டுவந்தார்கள்.

1நாளா 15:16. தாவீது லேவியரின் பிரபுக்களை நோக்கி: நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகரைத் தம்புரு சுரமண்டலம் கைத்தாள முதலிய கீதவாத்தியங்கள் முழங்க தங்கள் சத்தத்தை உயர்த்தி, சந்தோஷம் உண்டாகப் பாடும்படி நிறுத்தவேண்டும் என்று சொன்னான்.

1நாளா 15:17. அப்படியே லேவியர் யோவேலின் குமாரனாகிய ஏமானையும், அவன் சகோதரரில் பெரகியாவின் குமாரனாகிய ஆசாப்பையும், மெராரியின் புத்திரரான தங்கள் சகோதரரில் குஷாயாவின் குமாரனாகிய ஏத்தானையும்,

1நாளா 15:18. இவர்களோடுங்கூட இரண்டாவது வரிசையாகத் தங்கள் சகோதரராகிய சகரியா, பேன், யாசியேல், செமிரமோத், யெகியேல், உன்னி, எலியாப், பெனாயா, மாசெயா, மத்தித்தியா, எலிப்பெலேகு, மிக்னேயா, ஓபேத்ஏதோம், ஏயெல் என்னும் வாசல் காவலாளரையும் நிறுத்தினார்கள்.

1நாளா 15:19. பாடகராகிய ஏமானும், ஆசாப்பும், ஏத்தானும், பஞ்சலோகக் கைத்தாளங்களைத் தொனிக்கப்பண்ணிப் பாடினார்கள்.

1நாளா 15:20. சகரியா, ஆசியேல், செமிரமோத், யெகியேல், உன்னி, எலியாப், மாசெயா, பெனாயா என்பவர்கள் அல்மோத் என்னும் இசையில் பாடி, தம்புருகளை வாசித்தார்கள்.

1நாளா 15:21. மத்தித்தியா, எலிப்பெலேகு, மிக்னேயா, ஓபேத்ஏதோம், ஏயெல், அசசியா என்பவர்கள் செமனீத் என்னும் இசையில் பாடி, சுரமண்டலங்களை நேர்த்தியாய் வாசித்தார்கள்.

1நாளா 15:22. லேவியருக்குள்ளே கெனானியா என்பவன் சங்கீதத்தலைவனாயிருந்தான்; அவன் நிபுணனானபடியால், கீதவித்தையைப் படிப்பித்தான்.

1நாளா 15:23. பெரகியாவும் எல்க்கானாவும் பெட்டிக்கு முன்பாகக் காவல்காத்துவந்தார்கள்.

1நாளா 15:24. செபனியா, யோசபாத், நெதனெயேல், அமாசாயி, சகரியா, பெனாயா, எலியேசர் என்னும் ஆசாரியர் தேவனுடைய பெட்டிக்கு முன்பாகப் பூரிகைகளை ஊதினார்கள்; ஓபேத்ஏதோமும், எகியாவும், பெட்டிக்கு வாசல் காவலாளராயிருந்தார்கள்.

தேவனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீட்டிலிருக்கிறது. தாவீது அந்தப் பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து எருசலேமுக்கு கொண்டு வர ஆயத்த வேலைகளை செய்கிறார். தேவனுடைய பெட்டியை தாவீதின் நகரத்திற்கு கொண்டு வருவதற்கு முன்பாகவே, தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி, அதற்கு ஒரு கூடாரத்தைப் போடுகிறார். தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலத்தைக் கட்டவில்லை. அதற்கு ஒரு கூடாரத்தை மாத்திரமே போடுகிறார்.

கர்த்தர் மோசேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி வடிவத்தை வெளிப்படுத்தினார். தாவீது தேவனுடைய பெட்டிக்குப்போட்ட கூடாரம், மோசே போட்ட கூடாத்தைப்போல் இருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒருவேளை தாவீது போட்ட கூடாரமும், மோசே போட்ட கூடாரமும் ஒன்றுபோல் இல்லாவிட்டாலும், இவ்விரண்டு கூடாரங்களுக்கும் இடையே அதிகமான ஒற்றுமைகள் இருக்கிறது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

தாவீது, தாவீதின் நகரத்திலே தனக்கு வீடுகளை உண்டாக்குகிறார். அங்கே தேவனுடைய பெட்டிக்கு ஒரு கூடாரத்தையும் போடுகிறார். நாம் நம்முடைய சொந்த உபயோகத்திற்காக எங்கே கட்டிடங்களைக் கட்டினாலும், அங்கே கர்த்தருடைய பெட்டிக்கும் ஒரு கூடாரத்தைப் போடவேண்டும். நம்முடைய வீட்டிலே பரிசுத்த வேதாகத்தை வைத்திருப்பதற்கு நாம் ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணவேண்டும். நம்முடைய ஊரில் கர்த்தருக்கு ஆலயம் கட்டப்படும்போது, நாமும் ஆலயம் கட்ட உதவிசெய்யவேண்டும்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்துகிறார். மோசேயின் ஆசரிப்புக் கூடாரத்தைத் தாவீது எருசலேமுக்குக் கொண்டுவரவில்லை. அது கிபியோனிலேயே இருக்கிறது. கர்த்தர் சாலொமோனுக்கு அங்கு தரிசனமானார் *(1நாளா 21:29)*.

தேவனுடைய பெட்டியை லேவியர்களோ அல்லது ஆசாரியர்களோ மாத்திரமே சுமந்து வரவேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார். லேவியர் ஒழிய வேறு ஒருவரும் தேவனுடைய பெட்டியை எடுக்கலாகாது என்று தாவீது சொல்லுகிறார். கர்த்தர் தமக்கு பணிவிடை செய்ய லேவியரைத் தெரிந்துகொண்டார்.

லேவியரோ அல்லது ஆசாரியரோ தேவனுடைய பெட்டியை தங்கள் தோள்களில் சுமந்து செல்லவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, சாதாரண நாட்களில், கோகாத்தியர் தேவனுடைய பெட்டியை சுமந்து சென்றார்கள். ஆகையினால் தேவனுடைய பெட்டிக்கு இரதமோ அல்லது வண்டியோ நியமிக்கப்படவில்லை.

"கோகாத்தின் புத்திரருக்கோ ஒன்றும் கொடுக்கவில்லை; தோள்மேல் சுமப்பதே அவர்களுக்குரிய பரிசுத்த ஸ்தலத்தின் வேலையாயிருந்தது" *(எண் 7:9)*.

தேவனுடைய பெட்டியை கோகாத்தியர் சாதாரண நாட்களில் சுமந்து சென்றாலும், விசேஷித்த நாட்களில் ஆசாரியர்களே தேவனுடைய பெட்டியை சுமந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் யோர்தானைக் கடந்து எரிகோவுக்கு போனபோது, ஆசாரியர் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை சுமந்து சென்றார்கள்.

தேவனுடைய பெட்டியை சுமப்பது பற்றிய பிரமாணம், மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தாவீது இதை எப்படியோ மறந்துவிட்டார். தேவனுடைய பெட்டியை புது இரதத்தில் ஏற்றி கொண்டு வந்தார். ஆனால் பெட்டி எருசலேமுக்கு வந்து சேரவில்லை. அது ஓபேத்ஏதோமின் வீட்டிலேயே தங்கிவிடுகிறது.

ஏற்கெனவே ஏற்பட்ட தப்பிதம், மறுபடியும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் தாவீது மிகுந்த கவனத்தோடிருக்கிறார். லேவியர் மாத்திரமே தேவனுடைய பெட்டியை எடுக்கவேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார். தாவீது இதற்காக இஸ்ரவேலையெல்லாம் எருசலேமிலே கூடிவரச் செய்கிறார் (1நாளா 15:3). இதற்கு முன்பும் தாவீது இஸ்ரவேலை கூடிவரப்பண்ணினார் (1நாளா 13:2).

"நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதேபோனபடியினாலும்" என்று தாவீது தன்னுடைய பழைய தப்பிதத்தை இங்கே நினைவுகூருகிறார். கர்த்தரைத் தேடும்போதும், அவரை ஆராதிக்கும் போதும், அவரிடத்தில் விண்ணப்பம் பண்ணும்போதும், கர்த்தருடைய திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், அவர் வகுத்திருக்கும் நியதிகளைப் பின்பற்ற வேண்டும்.

கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை நமக்காக மீறுவார் என்றோ அல்லது தமது வார்த்தைக்கு முரணாக நடப்பார் என்றோ யாரும் எதிர்பார்க்கக்கூடாது. தனி மனுஷனுடைய சுயலாபத்திற்காகக் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தை மாற்றிப் போடமாட்டார். தம்முடைய பிள்ளைகள் தமக்குக் கீழ்ப்படியும்போது கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். தமக்குக் கீழ்ப்படியாமல் கலகம் பண்ணும்போது கர்த்தர் அவர்களைச் சபிக்கிறார்.

"அவர் நமக்குள்ளே அடிவிழப்பண்ணினார்" என்று தாவீது சொல்லுகிறார். கர்த்தருடைய பெட்டியைத் தொடுவதற்காக ஊசா தன் கையை நீட்டியதினால் அவன் செத்துப்போனான். (1நாளா 13:9-14).

ஆசாரியர் தேவனுடைய பெட்டியை அதின் தண்டுகளினாலே தங்கள் தோள் மேல் எடுத்துக்கொண்டுவருகிறார்கள். ஊசா செத்துப்போனதின் நிமித்தமாகத் தாவீதும், அவனுடைய மனுஷரும் கர்த்தருடைய வார்த்தைக்கும், மோசேயின் பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து தேவனுடைய பெட்டியைத் தங்கள் தோள் மேல் எடுத்துக்கொண்டுவருகிறார்கள் (யாத் 25:14; எண் 4:15; எண் 7:9; உபா 31:9).

ஆரோனின் புத்திரர் எல்லோரும் கூடிவருவதை தாவீது உறுதிபண்ணிக் கொள்கிறார். அவர்களை பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுமாறும் தாவீது அவர்களிடத்தில் சொல்லுகிறார்.

தாவீது ஆசாரியரையும் லேவியரையும் நோக்கி: "லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர், நீங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியை அதற்கு நான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்கு கொண்டுவரும்படி, உங்களையும் உங்கள் சகோதரரையும் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்" (1நாளா 15:12) என்று சொல்லுகிறார்.

ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியைக் கொண்டுவர தங்களை சுத்தம்பண்ணிக் கொள்கிறார்கள் (1நாளா 15:14).

பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுதல் என்பதற்குக் கர்த்தருடைய பரிசுத்த ஊழியத்திற்காகத் தங்களை வேறுபிரித்துக் கொள்ளுதல் என்று பொருள். இவர்கள் அனைவரும் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொண்டார்கள்.

தங்களை பரிசுத்தம் பண்ணிக்கொண்ட ஆசாரியர், லேவியர் ஆகியோரைப்பற்றிய விவரம் வருமாறு:

1. கோகாத் புத்திரர் - 120 பேர்
2. மெராரி புத்திரர் - 220பேர்
3. கெர்சோன் புத்திரர் - 130 பேர்
4. எலிசாப்பான் புத்திரர் - 200பேர்
5. எப்ரோன் புத்திரர் - 80 பேர்
6. ஊசியேல் புத்திரர் - 112பேர்

மொத்தம் - 862 பேர்

பின்பு லேவி புத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படியே, மோசே கற்பித்தபிரகாரம் தேவனுடைய பெட்டியை அதின் தண்டுகளினாலே தங்கள் தோள் மேல் எடுத்துக்கொண்டுவருகிறார்கள் (1நாளா 15:15).

லேவியரின் பிரபுக்கள் கீதவாத்தியங்களை முழங்கி, தங்கள் சத்தத்தை உயர்த்தி, தேவனுடைய பெட்டிக்கு முன்பாக சந்தோஷமாய்ப் பாடுகிறார்கள். அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள்.

கர்த்தரைத் துதித்துப் பாடுவதற்கு ஏமான், ஆசாப், ஏத்தான் ஆகியோர் முதலாவதாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் பஞ்சலோக கைத்தாளங்களை தொனிக்கப்பண்ணி, கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். வேறு சிலரோ தம்புருகளை வாசிக்கிறார்கள். சிலர் சுரமண்டலங்களை நேர்த்தியாய் வாசிக்கிறார்கள். ஆசாரியரில் சிலர் தேவனுடைய பெட்டிக்கு முன்பாக பூரிகைகளை ஊதுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோதும், அவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தூக்கிச் சென்றபோதும், பண்டிகை நாட்களின்போதும் பூரிகைகளை ஊதுவது வழக்கம்.

"ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக் கடவர்கள்; உங்கள் தலைமுறைதோறும் இது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது" (எண் 10:8).

"மாதப்பிறப்பிலும், நியமித்தகாலத்திலும், நம்முடைய பண்டிகைநாட்களிலும், எக்காளம் ஊதுங்கள்" (சங் 81:3).

லேவியருக்குள்ளே கெனானியா என்பவன் சங்கீதத்தலைவனாயிருக்கிறான்; அவன் நிபுணனானபடியால், கீதவித்தையைப் மற்றவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறான் (1நாளா 15:22).

பாடகரைத் தெரிந்தெடுத்து, அவர்களை நியமிக்க லேவியரின் பிரபுக்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிரதான பாடகரையும், கீதவாத்தியங்களை முழங்குகிறவர்களையும் பற்றிய விவரம் வருமாறு:

1. ஏமான் - கோகாத்தியன் (1நாளா 15:16; 1நாளா 6:33)
2. ஆசாப் - கெர்சோனியன் (1நாளா 15:17; 1நாளா 6:39-43)
3. ஏதான் - மெராரியன் (1நாளா 15:17; 1நாளா 6:44)

இரண்டாவது வரிசையில் 14 பேர் பாடகராகவும், கீதவாத்தியங்களை முழங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு:

1. சகரியா
2. பேன் 1நாளா 15:18)
3. யாசியேல்
4. செமிரமோத்
5. யெகியேல்
6. உன்னி
7. எலியாப்
8. பெனாயா
9. மாசெயா
10. மாசெயா
11. எலிப்பெலேகு
12. மிக்னேயா
13. ஓபேத்ஏதோம்
14. ஏயெல்

பாடகர் குழுவில் மூன்று பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களின் விவரம் வருமாறு:

1. லேவியன் (1நாளா 15:16-19)
2. அல்மோத் என்னும் இசையில் பாடுகிறவர்கள். (1நாளா 15:20)
3. ஆண் பாடகர்கள் (1நாளா 15:21)

இந்தப் பாடகர் குழுவைப் பற்றி சங் 68:25 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலரின் சந்தோஷம்
1நாளா 15:25-28

1நாளா 15:25. இப்படித் தாவீதும், இஸ்ரவேலின் மூப்பரும், ஆயிரத்துச் சேர்வைக்காரரும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து மகிழ்ச்சியோடே கொண்டுவரப் போனார்கள்.

1நாளா 15:26. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியருக்கு தேவன் அநுக்கிரகம்பண்ணினபடியால், அவர்கள் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டார்கள்.

1நாளா 15:27. தாவீதும், பெட்டியைச் சுமக்கிற சகல லேவியரும், பாடகரும், பாடகரின் வேலையை விசாரிக்கிற தலைவனாகிய கெனானியாவும், மெல்லிய புடவையான சால்வைகளைத் தரித்திருந்தார்கள்; தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருந்தான்.

1நாளா 15:28. அப்படியே இஸ்ரவேலனைத்தும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கெம்பீரத்தோடும், எக்காளங்கள் பூரிகைகள் கைத்தாளங்களின் தொனியோடும், தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற சத்தத்தோடும் கொண்டுவந்தார்கள்.

தாவீதும், இஸ்ரவேலின் மூப்பரும், ஆயிரத்துச் சேர்வைக்காரரும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து மகிழ்ச்சியோடே கொண்டுவரப்போகிறார்கள்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவியருக்கு தேவன் அநுக்கிரகம்பண்ணினபடியால், அவர்கள் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் பலியிடுகிறார்கள் (நாளா 15:26).

தேவனுடைய பெட்டியை சுமப்பதற்கு கர்த்தர் லேவியருக்கு உதவிசெய்கிறார். கர்த்தர் நமக்கு உதவி செய்யவில்லையென்றால், நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. கர்த்தர் லேவியருக்கு அநுக்கிரகம்பண்ணவில்லையென்றால், அவர்களால் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை தூக்கிக்கொண்டு ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது.

லேவியர்கள் தேவனுடைய பெட்டியை சுமந்து வரும்போது, ஊசா செய்த அக்கிரமத்தை நினைவுகூருகிறார்கள். அவர்கள் ஓபேத்ஏதோமின் வீட்டிலிருந்து, உடன்படிக்கைப் பெட்டியைத் தூக்கி, தங்கள் தோள்களின்மேல் வைத்தபோது, பெட்டி ஆடுவதற்கு வாய்ப்புள்ளது. ஊசாவைப்போல தாங்களும் செத்துப்போவோமோ என்னும் பயம் லேவியருக்கு உண்டாயிற்று. ஆனாலும் கர்த்தர் லேவியருக்கு அநுக்கிரகம் பண்ணுகிறார். அவர்களுடைய பயத்தை நீக்கிப்போடுகிறார். அவர்களுடைய விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவருடைய பாத்திரங்களை சுமக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தெய்வீக உதவி தேவைப்படுகிறது. ஊழியக்காரர்கள் கர்த்தர் பயன்படுத்தும் பாத்திரங்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மகிமைப்படுத்தும் ஊழியத்தைச் செய்கிறார்கள்.

தாவீதும், பெட்டியைச் சுமக்கிற சகல லேவியரும், பாடகரும், பாடகரின் வேலையை விசாரிக்கிற தலைவனாகிய கெனானியாவும், மெல்லிய புடவையான சால்வைகளைத் தரித்திருக்கிறார்கள்; தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்திருக்கிறார்.

அப்படியே இஸ்ரவேலனைத்தும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைக் கெம்பீரத்தோடும், எக்காளங்கள் பூரிகைகள் கைத்தாளங்களின் தொனியோடும், தம்புருகளையும் சுரமண்டலங்களையும் வாசிக்கிற சத்தத்தோடும் கொண்டுவருகிறார்கள் (நாளா 15:27,28).

லேவியர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை சுமந்து வரும்போது, அவர்கள் கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னத்தை உணருகிறார்கள். தேவன் தங்களுக்கு அநுக்கிரகம்பண்ணுவதை புரிந்துகொள்கிறார்கள். லேவியர்கள் கர்த்தரைத் துதிக்கும் வண்ணமாக, அவர்கள் கர்த்தருக்கு ஏழுகாளைகளையும், ஏழுஆட்டுக்கடாக்களையும் பலியிடுகிறார்கள் (1நாளா 15:26).

பெட்டியை சுமக்கிற லேவியரும் சந்தோஷமாய் சுமக்கிறார்கள். கர்த்தரைத் துதிப்பாடுகிற பாடகரும் சந்தோஷமாய்ப் பாடுகிறார்கள். தாவீது ராஜா தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஆடிப்பாடி வருகிறார்.

"தாவீது சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு, தன் முழுப் பலத்தோடும் கர்த்தருக்கு முன்பாக நடனம் பண்ணினான். அப்படியே தாவீதும், இஸ்ரவேல் சந்ததியார் அனைவரும் கர்த்தருடைய பெட்டியைக் கெம்பீர சத்தத்தோடும் எக்காள தொனியோடும் கொண்டுவந்தார்கள்" *(2சாமு 6:14,15).*

மீகாளின் பாவம்
1நாளா 15:29

1நாளா 15:29. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி தாவீதின் நகரமட்டும் வந்தபோது, சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாய்ப் பார்த்து, தாவீது ராஜா ஆடிப்பாடி வருகிறதைக் கண்டு, அவனைத் தன் இருதயத்திலே அவமதித்தாள்.

மீகாள் சவுலின் குமாரத்தி. அவள் தாவீது ராஜாவின் மனைவி. தாவீது தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஆடிப்பாடி வருவது, அவளுக்கு பிடிக்கவில்லை. மீகாள் தாவீதை தன் இருதயத்தில் அவமதிக்கிறாள். இந்தப் பாவத்தினிமித்தமாய் கர்த்தர் மீகாளை தண்டிக்கிறார். கர்த்தர் மீகாளின் கர்ப்பத்தை அடைத்துவிடுகிறார். மீகாளின் கர்ப்பத்தில் பிள்ளை எதுவும் பிறக்கவில்லை *(2சாமு 6:16).*

16 அதிகாரம்

தேவனுடைய பெட்டி கூடாரத்தின் நடுவே வைக்கப்படுகிறது (1நாளா 16:1-6). தாவீது கர்த்தரை துதித்துப்பாடின சங்கீதம் (1நாளா 16:7-36). தேவனுடைய பெட்டிக்கு முன்பாக நித்தமும் நடைபெறுகிற ஆராதனை (1நாளா 16:37-41).

தேவனுடைய பெட்டி
1நாளா 16:1-6

1நாளா 16:1. அவர்கள் தேவனுடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்தபோது, தாவீது அதற்குப் போட்ட கூடாரத்தின் நடுவே அவர்கள் அதை வைத்து, தேவனுடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலிகளையும் செலுத்தினார்கள்.

1நாளா 16:2. தாவீது சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தித் தீர்ந்த பின்பு, அவன் ஜனத்தைக் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதித்து,

1நாளா 16:3. புருஷர் தொடங்கி ஸ்திரீகள்மட்டும், இஸ்ரவேலராகிய அனைவருக்கும் அவரவருக்கு ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித் துண்டையும், ஒவ்வொருபடி திராட்சரசத்தையும் பங்கிட்டுக் கொடுத்தான்.

1நாளா 16:4. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணித் துதித்துப் புகழுகிறதற்கு கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகச் சேவிக்கத்தக்க லேவியரில் சிலரை நியமித்தான்.

1நாளா 16:5. அவர்களில் ஆசாப் தலைவனும், சகரியா அவனுக்கு இரண்டாவதுமாயிருந்தான்; ஏயெல், செமிரமோத், யெகியேல், மத்தித்தியா, எலியாப், பெனாயா, ஓபேத், ஏதோம், ஏயெல் என்பவர்கள் தம்புரு சுரமண்டலம் என்னும் கீதவாத்தியங்களை வாசிக்கவும், ஆசாப் கைத்தாளங்களைக் கொட்டவும்,

1நாளா 16:6. பெனாயா, யாகாசியேல் என்னும் ஆசாரியர் எப்போதும் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாகப் பூரிகைகளை ஊதவும் நியமிக்கப்பட்டார்கள்.

தேவனுடைய பெட்டியை எருசலேமுக்கு கொண்டு வருவதற்கு முன்பாகவே, தாவீது அந்தப் பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தி, அதற்கு ஒரு கூடாரத்தைப் போட்டார் (1நாளா 15:1). லேவியர்கள் தேவனுடைய பெட்டியை தாவீதின் நகரத்திற்கு சுமந்து கொண்டு வருகிறார்கள். தாவீது தேவனுடைய பெட்டிக்குப்போட்ட கூடாரத்திற்குள்ளே, லேவியர்கள் தேவனுடைய பெட்டியை கொண்டு வந்து, அந்தக் கூடாரத்தின் நடுவே அதை வைக்கிறார்கள்.

தேவனுடைய பெட்டி இதுவரையிலும் கீரியாத்யாரீமிலே இருந்தது. இது கிராமப்புறமான பகுதி. இப்போதோ தேவனுடைய பெட்டி ராஜதானி பட்டணமாகிய எருசலேமுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலின் எல்லா ஜனங்களும் கர்த்தரை ஆராதிக்கும் வண்ணமாக, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, இப்போது தாவீதின் நகரத்திலே வைக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும் கர்த்தரைத் தேடவில்லை. அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை புறக்கணித்துவிட்டார்கள். தேவனுடைய பெட்டி உடைந்துபோன பாத்திரம்போல அவர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போதோ தாவீது தேவனுடைய பெட்டிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி அவருடைய பரிசுத்த பிரசன்னத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவருடைய பெட்டிக்கு முன்பாக வந்து, அவரை ஆராதிக்கிறார்கள்.

தேவனுடைய பெட்டி இப்போது ஒரு கூடாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. கூடாரம் என்பது ஏழைகளின் வாசஸ்தலம். தேவனுடைய பெட்டிக்கு மாளிகை கட்டப்படவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி கூடாரத்தில் வைக்கப்பட்டிருந்தாலும், இந்தக் கூடாரமே கர்த்தருடைய ஆசரிப்புக்கூடாரமாயிருக்கிறது. தாவீது தன்னுடைய சங்கீதங்களில் இந்தக் கூடாரத்தைப்பற்றி மிகவும் பாசத்தோடும், நேசத்தோடும் சொல்லுகிறார்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு கூடாரத்தைப் போட்டார். தேவனுடைய பெட்டி இந்தக் கூடாரத்திலேயே தொடர்ந்து நிலைத்திருக்கிறது. சாலொமோன் கர்த்தருக்கு ஆலயம் கட்டும் வரையிலும், கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி, இந்தக் கூடாரத்திலேயே வைக்கப்பட்டிருந்தது.

தாவீது தேவனுடைய பெட்டியை கூடாரத்தில் வைத்தாலும், தாவீது தான் சாகும் வரையிலும் கர்த்தரிடத்தில் பயபக்தியோடிருந்தார். சாலொமோனோ கர்த்தருக்கு ஆலயம் கட்டினார். ஆனாலும் சாலொமோன் தன்னுடைய கடைசி காலத்தில் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார். சாலொமோன் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், தன்னுடைய அந்நிய ஜாதி மனைவிகளுக்கு செவிகொடுத்து, விக்கிரகங்களுக்கு மேடைகளைக் கட்டினார்.

ஆலயம் அழகாகயிருக்கிறதா அல்லது ஆடம்பரமாயிருக்கிறதா என்பது முக்கியமல்ல. ஆலயம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தில் வாசம்பண்ணுகிறார். சபை எளிமையிலிருக்கும் காலமே, அது பரிசுத்தமாயிருக்கும் காலம். சபையில் அழகும் ஆடம்பரமும், அலங்காரமும் பிரவேசிக்கும்போது, சபையின் பரிசுத்தம் குறைந்துபோகிறது.

தேவனுடைய பெட்டி அதன் கூடாரத்தில் வைக்கப்பட்டதினால் தாவீது மிகவும் சந்தோஷமாயிருக்கிறார். இப்போது கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி தாவீதுக்கு அருகாமையிலிருக்கிறது. தாவீதுக்கு மனஆறுதலும் சந்தோஷமும் உண்டாயிற்று. தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். அவருக்கு பலிகளை செலுத்துகிறார்.

தாவீது கர்த்தருக்கு சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார். தாவீது ஓர் ஆசாரியன் அல்ல. ஆகையினால் தாவீது தன் சொந்தக் கையினால், பலிகளைச் செலுத்தவில்லை. பலிகளைச் செலுத்துவதற்குத் தாவீது கட்டளையிடுகிறார்.

இதுபோலவே "கர்த்தர் வாதையை அனுப்பினார்" என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறதற்கும் வியாக்கியானம் பண்ண வேண்டும். கர்த்தர் வாதையை அனுப்பவில்லை. அவர் மனுஷருக்கு வாதைகள் வர அனுமதிக்கிறார். சில சமயங்களில் தமது பிரதிநிதிகள் மூலமாகத் தமக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளுக்கு கர்த்தர் வாதையை நியாயத்தீர்ப்பாக அனுப்புகிறார்.

தாவீது இஸ்ரவேலராகிய அனைவருக்கும் ஒவ்வொரு அப்பத்தையும், ஒவ்வொரு இறைச்சித் துண்டையும், ஒவ்வொருபடி திராட்சரசத்தையும் பங்கிட்டுக் கொடுக்கிறார். ஆகையினால் அங்கு ஏராளமான மிருகஜீவன்களை அவர்கள் பலியிட்டிருக்க வேண்டும். அதுபோலவே ஏராளமான அப்பத்தையும், அவர்கள் சுட்டிருக்கவேண்டும்.

தாவீது கர்த்தருடைய பரிபூரணமான கிருபைகளையும், இரக்கங்களையும் நினைவுகூர்ந்து, அவருக்கு சர்வாங்க தகனபலிகளை செலுத்துகிறார். கர்த்தர் தனக்கு காண்பித்த நன்மைகளை நினைவுகூர்ந்து, தாவீது கர்த்தருக்கு சமாதான பலிகளை செலுத்துகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணித் துதித்துப் புகழுகிறதற்கு கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகச் சேவிக்கத்தக்க லேவியரில் சிலரை தாவீது நியமிக்கிறார் (1நாளா 16:4).

லேவியர்கள் கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணித் துதித்துப்புகழவேண்டும். தாவீது பாடகரையும், இசைக் கருவிகளை இசைக்கிறவர்களையும் நியமிக்கிறார். இவர்கள் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஊழியம் செய்து, கர்த்தரைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் காலையிலும், மாலையிலும் கர்த்தரைத் தொடர்ந்து துதித்துப் போற்றுவார்கள்.

இந்த நாளிலிருந்து தாவீதின் ஜீவிய காலம் வரையிலும் தாவீதால் நியமிக்கப் பட்டிருக்கிறவர்களின் சங்கீதசேவனை தொடர்ந்து நடைபெறுகிறது. தாவீதுக்குப் பின்பு, ஆட்சி புரிந்த ராஜாக்களில், ஒருசிலருடைய காலத்திலும் இந்தச் சங்கீதசேவனை தொடர்ந்து நடைபெறுகிறது (1நாளா 16:4-6).

லேவியர்கள் தேவனாகிய கர்த்தரை பிரஸ்தாபம்பண்ணி துதிக்கும்போது, ஆராதனையிலே பங்குபெறுகிற ஜனங்கள், கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் அறிந்துகொள்வார்கள். ஜனங்களுக்கு ஆவிக்குரிய போதனைகள் கிடைக்கும்.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள், கர்த்தருடைய சர்வவல்லமையையும், சர்வஞானத்தையும், சர்வமகிமையையும் தியானித்து, கர்த்தருக்குள்ளே மகிழ்ந்து களிகூருவார்கள். தாவீது இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கிறார். தாவீது தன்னுடைய நாமத்தினால் ஜனங்களை ஆசீர்வதிப்பதைவிட, கர்த்தருடைய நாமத்தினால் அவர்களை ஆசீர்வதிப்பதே, அவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம்.

தாவீதின் சங்கீதம்
1நாளா 16:7-36

1நாளா 16:7. அப்படி ஆரம்பித்த அந்நாளிலே தானே கர்த்தருக்குத் துதியாகப் பாடும்படி தாவீது ஆசாப்பிடத்திலும் அவன் சகோதரிடத்திலும் கொடுத்த சங்கீதமாவது:

1நாளா 16:8. கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்.

1நாளா 16:9. அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணி, அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.

1நாளா 16:10. அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள்; கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக.

1நாளா 16:11. கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.

1நாளா 16:12. அவருடைய தாசனாகிய இஸ்ரவேலின் சந்ததியே! அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய யாக்கோபின் புத்திரரே!

1நாளா 16:13. அவர் செய்த அதிசயங்களையும் அவருடைய அற்புதங்களையும், அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.

1நாளா 16:14. அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர்; அவருடைய நியாயத்தீர்ப்புகள் பூமியெங்கும் விளங்கும்.

1நாளா 16:15. ஆயிரந்தலைமுறைக் கென்று அவர்கட்டளையிட்ட வாக்கையும், ஆபிரகாமோடே அவர் பண்ணின உடன்படிக்கையையும்,

1நாளா 16:16. அவர் ஈசாக்குக்கு இட்ட ஆணையையும் என்றென்றைக்கும் நினைத்திருங்கள்.

1நாளா 16:17. அதை யாக்கோபுக்குப் பிரமாணமாகவும், இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாகவும் உறுதிப்படுத்தி:

1நாளா 16:18. உங்கள் சுதந்தரபாகமாக கானான் தேசத்தை உனக்குத் தருவேன் என்றார்.

1நாளா 16:19. அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத்தொகைக்குட்பட்ட சொற்பஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள்.

1நாளா 16:20. அவர்கள் ஒரு ஜனத்தை விட்டு மறுஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தை விட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்.

1நாளா 16:21. அவர்களை ஒடுக்கும்படி ஒருவருக்கும் இடங்கொடாமல், அவர்கள்நிமித்தம் ராஜாக்களைக் கடிந்துகொண்டு:

1நாளா 16:22. நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார்.

1நாளா 16:23. பூமியின் சகல குடிகளே, கர்த்தரைப் பாடி, நாளுக்குநாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள்.

1நாளா 16:24. ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்.

1நாளா 16:25. கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.

1நாளா 16:26. சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே; கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர்.

1நாளா 16:27. மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது.

1நாளா 16:28. ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.

1நாளா 16:29. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

1நாளா 16:30. பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள்; அவர் பூச்சக்கரத்தை அசையாதபடிக்கு உறுதிப்படுத்துகிறவர்.

1நாளா 16:31. வானங்கள் மகிழ்ந்து, பூமி பூரிப்பதாக; கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவதாக.

1நாளா 16:32. சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்கி, நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக.

1நாளா 16:33. அப்பொழுது கர்த்தருக்கு முன்பாகக் காட்டுவிருட்சங்களும் கெம்பீரிக்கும்; அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்.

1நாளா 16:34. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.

1நாளா 16:35. எங்கள் ரட்சிப்பின் தேவனே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டும்படிக்கு, எங்களை ரட்சித்து எங்களைச் சேர்த்துக்கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும் என்று சொல்லுங்கள்.

1நாளா 16:36. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக; அதற்கு ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லிக் கர்த்தரைத் துதித்தார்கள்.

தாவீது கர்த்தரை துதித்துப்பாடும் சங்கீதங்களை இயற்றுகிறார். தான் எழுதின சங்கீதத்தை இராகத்தலைவர்களிடம் கொடுத்து, அதைப் பாடச் சொல்லுகிறார். தேவனுடைய பெட்டி, அதற்காக போடப்பட்டிருக்கிற கூடாரத்திற்குள் கொண்டு வரப்படும்போது, இராகத்தலைவர்கள் தாவீது எழுதிக்கொடுத்த சங்கீதங்களை பாடுகிறார்கள். தாவீது இந்த விசேஷித்த வைபவத்திற்காக இந்த துதியின் சங்கீதத்தை எழுதியிருக்கிறார்.

இந்த சங்கீதம் தாவீது எழுதின பல சங்கீதங்களிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பு ஆகும். 1நாளா 16:23-ஆவது வசனத்திலிருந்து ஆரம்பமாகும் வரிகள், சங் 105:1 ஆவது வசனங்களில் எழுதப்பட்டிருக்கிறது. 1நாளா 16:23-34 ஆகிய வசனங்கள் 96-ஆவது சங்கீதமாகும். 1நாளா 16:34-ஆவது வசனம் சங்கீதம் 136:1 ஆவது வசனமாகும். இந்த சங்கீதத்தின் கடைசி இரண்டு வரிகளும் 106-ஆவது சங்கீதத்தின் கடைசி பகுதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

தாவீது கர்த்தரைத் துதித்துப்பாடும் அநேக சங்கீதங்களை எழுதியிருக்கிறார். தாவீது தன்னுடைய சங்கீதத்தில் பயன்படுத்தியிருக்கும் வாக்கியங்களை, நாமும் பயன்படுத்தி கர்த்தரைத் துதிக்கலாம்.

நாம் கர்த்தரைத் துதிக்கும்போது, பாடுகளை அனுபவிக்கும் பரிசுத்தவான்களுக்காகவும் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளவேண்டும்.

"எங்கள் ரட்சிப்பின் தேவனே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டும்படிக்கு, எங்களை ரட்சித்து எங்களைச் சேர்த்துக்கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும் என்று சொல்லுங்கள்" (1நாளா 16:35) என்று தாவீது சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் அந்நிய தேசங்களிலே சிதறிப்போயிருக்கிறார்கள். அவர்கள் புறஜாதியாரால் ஒடுக்கப்படுகிறார்கள். கர்த்தர் தாமே தம்முடைய ஜனத்தை சத்துருக்களின் கைகளுக்கு நீங்கலாக்கி, அவர்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்று, தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

நாம் கர்த்தருடைய கிருபைகளையும், உதவிகளையும், ஒத்தாசைகளையும், சிலாக்கியங்களையும் அனுபவிக்கும்போது, பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிற சகவிசுவாசிகளையும் நினைவுகூரவேண்டும். அவர்களுடைய இரட்சிப்புக்காகவும், மீட்புக்காகவும் நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும்.

விசுவாசிகள் எல்லோருமே ஒரே சரீரத்தின் அவயவங்களாகயிருக்கிறோம். நாம் எல்லோருமே இயேசுகிறிஸ்துவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் சகோதரராகவும், சகோதரிகளாகவும் இருக்கிறோம்.

தாவீது இந்த சத்தியத்தை நினைவுகூர்ந்து, "அவர்களை இரட்சித்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, ஜாதிகளுக்கு அவர்களை நீங்கலாக்கியருளும்" என்று ஜெபம்பண்ணாமல், "எங்களை இரட்சித்து, எங்களை சேர்த்துக்கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும்" (1நாளா 16:35) என்று ஜெபம்பண்ணுகிறார்.

நம்முடைய துதிகளுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தரே ஆதியும், அந்தமுமாயிருக்கிறார். அவரே அல்பாவும் ஓமெகாவுமாக இருக்கிறார். ஆகையினால் தாவீது சகல இஸ்ரவேல் ஜனங்களையும் நோக்கி, "கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தை பிரஸ்தாபமாக்குங்கள்" (1நாளா 16:8) என்று பாடுகிறார்.

தாவீது இந்த சங்கீதத்தின் முடிவில் "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு சதாகாலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக" (1நாளா 16:36) என்று சொல்லி பாடுகிறார். இந்த வாக்கியம் சங் 106:48-ஆவது வசனத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர். ஜனங்களெல்லாரும்: ஆமென், அல்லேலூயா, என்பார்களாக" (சங் 106:48).

இந்த சங்கீத வாக்கியத்தில் சொல்லப்பட்ட பிரகாரம், "ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லி கர்த்தரைத் துதிக்கிறார்கள்" (நாளா 16:36).

தாவீது இந்த சங்கீதத்தில் கர்த்தரைத் துதிக்குமாறு இஸ்ரவேல் சபையாருக்கு உபதேசம்பண்ணுகிறார். அதன் விவரம் வருமாறு :

1. கர்த்தரைத் துதியுங்கள் (நாளா 16:8).
2. அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள்
3. அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப் படுத்துங்கள்.
4. அவரைப் பாடுங்கள் (நாளா 16:9).
5. அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்
6. அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.
7. அவருடைய பரிசுத்த நாமத்தைக் குறித்து மேன்மைபாராட்டுங்கள் (நாளா 16:10).
8. கர்த்தரைத் தேடுகிறவர்களின் இருதயம் மகிழ்வதாக.
9. கர்த்தரை நாடுங்கள் (நாளா 16:11).
10. அவர் வல்லமையை நாடுங்கள்.
11. அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்.
12. அவர் செய்த அதிசயங்களை நினைவுகூருங்கள். (நாளா 16:13).
13. அவருடைய அற்புதங்களை நினைவுகூருங்கள்.
14. அவர் வாக்கின் நியாயத்தீர்ப்புகளை நினைவுகூருங்கள்.
15. கர்த்தருடைய உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைத்திருங்கள். (நாளா 16:16).

தாவீது இந்த சங்கீதத்தில், கர்த்தரைத் துதிப்பதற்கான காரணங்களையும் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு:

1. ஜெபத்தின் சிலாக்கியம். (நாளா 16:8,10-11)
2. ஜனங்களுக்குள்ளே கர்த்தருடைய செய்கைகள். (நாளா 16:8)
3. கர்த்தருடைய அதிசயமான கிரியைகள் (நாளா 16:9)
4. அவருடைய பரிசுத்த நாமம் (நாளா 16:10)
5. அவர் வல்லமை (நாளா 16:11)
6. அவர் செய்த அதிசயங்கள் (நாளா 16:13)
7. பூமியில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கள்
8. அவரே நம்முடைய தேவனாகிய கர்த்தர். (நாளா 16:14)

கர்த்தர் ஆயிரம் தலைமுறைக்கும் தம்முடைய ஜனத்திற்கு வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆயிரம் தலைமுறை என்பது நித்திய தலைமுறையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வாக்கியம். (ஆதி 9:12, 1நாளா 16:17, உபா 7:9, சங் 105:8)

கர்த்தருடைய உடன்படிக்கை நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தர் பண்ணிய உடன்படிக்கை நித்தியமாக இருப்பதினால் மனுஷரும் நித்தியமாக ஜீவிப்பதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தர் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரோடு நித்திய உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அவர் தம்முடைய உடன்படிக்கையை உறுதிபண்ணியிருக்கிறார். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆபிரகாமின் சந்ததியார் கானான் தேசத்தை நித்திய சுதந்தரமாகப் பெற்றுக்கொள்வார்கள் (ஆதி 17:8).

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியபோது, அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத்தொகைக்குட்பட்ட சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள் (1நாளா 16:19).

வாக்குத்தத்த தேசத்தில் அப்போதிருந்த ராட்சதர்கள், மற்ற புறஜாதி தேசத்தார் ஆகியோரோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஆபிரகாமின் சந்ததியார் கொஞ்சத் தொகைக்குட்பட்ட சொற்பஜனங்களாக இருந்தார்கள்.

கர்த்தர் ஆபிரகாமோடு பண்ணிய உடன்படிக்கையில் 25 வருஷங்களாக ஆபிரகாம் மட்டும் தனியாக இருந்தார். அதன் பின்பு, 60 வருஷங்களாக ஆபிரகாமும், ஈசாக்கும் மட்டுமே இருந்தார்கள். அதன்பின்பு 70 வருஷங்களாக ஆபிரகாமின் உடன்படிக்கையில் ஈசாக்கும், யாக்கோபும் மட்டுமே இருந்தார்கள்.

அதன் பின்பு, யாக்கோபின் 12 குமாரர்களும், அவர்களுடைய குடும்பத்தாரும் ஆபிரகாமின் உடன்படிக்கையில் பங்கு பெறுகிறார்கள். யாக்கோபு எகிப்து தேசத்திற்குப் போனபோது, 70 பேரோடு போனார் (ஆதி 46:8-27; அப் 7:14).

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியபோது அவர்கள் பரதேசிகளாயிருந்தார்கள். பரதேசிகள் என்று கூறப்படுகிறவர்கள் ஆபிரகாமின் சந்ததியார் அல்ல (லேவி 17:8-13; எபே 2:12,19). இஸ்ரவேல் புத்திரர் "அந்நிய தேசத்திலே பரதேசிகளாக" இருந்தார்கள் என்று வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது (ஆதி 15:13; ஆதி 17:8-12; ஆதி 36:7).

இஸ்ரவேலின் முற்பிதாக்கள் ஒரு ஜனத்தை விட்டு மறுஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தை விட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள் (1நாளா 16:20).

ஆதி 15:18-21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பத்து தேசங்களைத் தவிர, அவர்கள் பெலிஸ்தியரின் தேசத்திற்கும், (ஆதி 20) எகிப்தியரின் தேசத்திற்கும் (ஆதி 13; ஆதி 45-யாத் 12) போனார்கள்.

தாவீது இந்த சங்கீதத்திலும், அவர் எழுதின மற்ற சங்கீதங்களிலும் கர்த்தருடைய கிரியைகளைப்பற்றி விரிவாக சொல்லியிருக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு:

1. கர்த்தர் பூமியெங்கும் நியாயத்தீர்ப்பு வழங்குவார் (சங் 105:7)
2. ஆபிரகாமோடே நித்திய உடன்படிக்கை பண்ணினார் (சங் 105:8-11; ஆதி 12; ஆதி 15; ஆதி 17)
3. நித்திய உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைத்திருக்கிறார் (சங் 105:8)
4. தம்முடைய நித்திய உடன்படிக்கையைக் கைக்கொள்ளுமாறு கர்த்தர் கட்டளையிடுகிறார் (சங் 105:8)
5. ஆபிரகாமின் உடன்படிக்கையை ஈசாக்குக்கு இட்ட ஆணையாக உறுதிப்படுத்துகிறார் (சங் 105:9; ஆதி 26:1-5,24)
6. ஆபிரகாமின் உடன்படிக்கையை, யாக்கோபுக்கு பிரமாணமாகவும் உறுதிப்படுத்துகிறார் (சங் 105:10; ஆதி 28:13-15; ஆதி 35:11-12; ஆதி 48:1-4)
7. ஆபிரகாமின் உடன்படிக்கையை இஸ்ரவேலுக்கு நித்திய உடன்படிக்கையாக உறுதிப்படுத்துகிறார் (சங் 105:10-13; உபா 6:10; உபா 7:12-24)
8. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்ற இஸ்ரவேலர்கள் அனைவரும் பரதேசிகளாய்த் திரிந்த 430 வருடக் காலங்களில் கர்த்தர் அவர்களைப் பாதுகாத்தார் (சங் 105:12-15; ஆதி 13; ஆதி 20; ஆதி 26; ஆதி 31; ஆதி 32; ஆதி 34; ஆதி 46-50; யாத் 1-12)
9. இஸ்ரவேலர்களை ஒடுக்க இடங்கொடாமல் அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து கொண்டார் (சங் 105:14-15; ஆதி 13; ஆதி 20; ஆதி 26; யாத் 1-12)

10. இஸ்ரவேலை பரீட்சிக்க தேசத்தில் பஞ்சத்தை வருவித்தார் (சங் 105:16; ஆதி 13; ஆதி 26; ஆதி 39-45)

11. பஞ்சத்திலிருந்து இஸ்ரவேலை விடுவிக்க, யோசேப்பை அனுப்பினார் (சங் 105:17-22; ஆதி 37-50)

12. கர்த்தர் யோசேப்பை புடமிட்டார் (சங் 105:19; சங் 37-45)

13. கர்த்தர், தமது வாக்கின்படி இஸ்ரவேலை மிகவும் பலுகப் பண்ணினார் (சங் 105:24; ஆதி 13:16; ஆதி 15:5; யாத் 1:7)

14. எகிப்தியர்களைப் பார்க்கிலும் இஸ்ரவேலர்களைப் பலவான்களாக்கினார் (சங் 105:24; யாத் 1:7-10)

15. இஸ்ரவேலர்களைப் பகைக்கவும், தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், எகிப்தியர்களின் இருதயத்தை மாற்றினார் (சங் 105:25; யாத் 1:10)

16. எகிப்திலிருந்து, இஸ்ரவேலை வெளியேற்றி, வழிநடத்த மோசேயையும், ஆரோனையும் அனுப்பினார் (சங் 105:26; யாத் 3-12)

17. மோசேயும், ஆரோனும் எகிப்திலே, கர்த்தருடைய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்ய அனுமதித்தார் (சங் 105:27; யாத் 4-15)

18. எகிப்திலே இருளை அனுப்பினார் (சங் 105:28; யாத் 10:21-23)

19. தண்ணீர்களை இரத்தமாக மாற்றி, அவர்களுடைய மச்சங்களைச் சாகப் பண்ணினார் (சங் 105:29; யாத் 7:14-25)

20. கர்த்தர் தவளைகளைத் திரளாய் அனுப்பினார் (சங் 105:30; யாத் 8:1-15)

21. வண்டுகளை அவர்களுடைய எல்லைகளிலெங்கும் அனுப்பினார் (சங் 105:31; யாத் 8:20-32)

22. கர்த்தர் பேன்களையும் அனுப்பினார் (சங் 105:31; யாத் 8:16-19)

23. கல்மழையையும் அக்கினியையும் வரப்பண்ணினார் (சங் 105:32-33; யாத் 9:23-35)

24. எண்ணிமுடியாதபடி வெட்டுக்கிளிகளை அனுப்பினார் (சங் 105:34-35; யாத் 10:1-20).

25. தேசத்தின் தலைச்சன்களைச் சங்கரித்தார் (சங் 105:36; யாத் 12)

26. எகிப்திலிருந்து, இஸ்ரவேலை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப் பண்ணினார் (சங் 105:37; யாத் 12:35-36)

27. அவர்கள் கோத்திரங்களில் பலவீனப் பட்டவர்களை குணமாக்கினார் (சங் 105:37-38; சங் 107:20; யாத் 15:26; யாத் 23:25)

28. கர்த்தர் மேகத்தை மறைவுக்காக விரித்து, இரவை வெளிச்சமாக்குகிறதற்காக அக்கினியையும் தந்தார் (சங் 105:39; யாத் 13:21-22)

29. காடைகளை வரப்பண்ணி அவர்களுக்கு ஆகாரமாகக் கொடுத்தார் (சங் 105:40; யாத் 16:1-13; எண் 11:4-35)

30. வான அப்பத்தையும் அளித்து அவர்களைத் திருப்தியாக்கினார் (சங் 105:40; யாத் 16:14-22; யோவான் 6:23-59)

31. கன்மலையைத் திறந்து தண்ணீரை ஆறாக ஓடிவரப்பண்ணினார் (சங் 105:41; யாத் 17:5-7; எண் 20:8)

32. ஆபிரகாமையும், அவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்தார் (சங் 105:42; ஆதி 12)

33. கர்த்தர், தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரவேலை, எகிப்திலிருந்து களிப்போடு புறப்படப்பண்ணினார் (சங் 105:43; யாத் 14-15)

34. கர்த்தர், தாம் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை இஸ்ரவேலர்களுக்குக் கொடுத்தார் (சங் 105:44; யோசு 13-21)

35. கர்த்தர், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் பிரவேசிக்கப் பண்ணினார். அங்கு கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், நிரப்பாத சகல நல்ல வஸ்துக்களால் நிரம்பிய வீடுகளையும், வெட்டாமல் வெட்டப் பட்டிருக்கிற துரவுகளையும், நடாத திரட்சத் தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் அளித்தார் (சங் 105:44; உபா 6:10-11).

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி, அதற்காக போடப்பட்டிருக்கிற கூடாரத்திற்குள் கொண்டு வரப்படுகிறது. அப்போது அங்கே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சபையாராக கூடியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையும் திரளாயிருக்கிறது. தாவீது தான் எழுதின சங்கீதத்தில், பூமியின் சகல குடிகளும் கர்த்தரைத் துதித்துப்பாட வேண்டுமென்று சொல்லுகிறார். கர்த்தரை எவ்வாறு துதிக்கவேண்டும் என்றும் தாவீது ஜனங்களுக்கு போதிக்கிறார். அதன் விவரம் வருமாறு :

1. பூமியின் சகல குடிகளே, கர்த்தரைப் பாடுங்கள்.

2. நாளுக்குநாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள். (நாளா 16:23)

3. ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள். (நாளா 16:24)

4. ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். (நாளா 16:28)

5. கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்துங்கள் (நாளா 16:29)

6. காணிக்கைகளைக் கொண்டு வாருங்கள்.

7. அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்.

8. பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

9. பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள் (நாளா 16:30)

10. வானங்கள் மகிழ்வதாக. (நாளா 16:31)

11. பூமி பூரிப்பதாக.

12. கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார் என்று ஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவதாக.

13. சமுத்திரமும் அதின் நிறைவும் முழங்குவதாக. (நாளா 16:32)

14. நாடும் அதிலுள்ள யாவும் களிகூருவதாக.

15. கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. (நாளா 16:34)

16. எங்கள் ரட்சிப்பின் தேவனே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டும்படிக்கு, எங்களை ரட்சித்து எங்களைச் சேர்த்துக்கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும் என்று சொல்லுங்கள். (நாளா 16:35)

கர்த்தரை ஏன் துதித்துப் பாடவேண்டும் என்பதற்கான காரணங்களையும் தாவீது இந்த சங்கீதத்தில் தெளிவாகச் சொல்லுகிறார். அதன் விவரம் வருமாறு:

1. அவருடைய சிருஷ்டிப்பு (1நாளா 16:23,26)
2. கர்த்தருடைய இரட்சிப்பு
3. கர்த்தருடைய மகிமை (1நாளா 16:24)
4. சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்கள்.
5. கர்த்தர் பெரியவர். (1நாளா 16:25)
6. கர்த்தருடைய வல்லமை.
7. அவருடைய மகா மகிமை (1நாளா 16:27)
8. அவருடைய வல்லமையும், மகிழ்ச்சியும்
9. அவருடைய நாமம் (1நாளா 16:29)
10. அவர் பூச்சக்கரத்தை அசையாதபடிக்கு உறுதிப்படுத்துகிறவர். (1நாளா 16:30)
11. கர்த்தருடைய ராஜரீகம். (1நாளா 16:31)
12. கர்த்தருடைய வரப்போகிற நியாயத்தீர்ப்பு (1நாளா 16:33)
13. கர்த்தருடைய பிரசன்னம் (1நாளா 16:33)
14. கர்த்தருடைய நன்மை (1நாளா 16:34)
15. அவருடைய நித்திய கிருபை
16. கர்த்தருடைய ஆசீர்வாதம் (1நாளா 16:35)

தாவீது இந்த சங்கீதத்தின் முடிவில் "எங்களை ரட்சித்து எங்களைச் சேர்த்துக் கொண்டு ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும்" (1நாளா 16:35) என்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதிகள் மத்தியில் சிதறடிக்கப்படுவார்கள் என்பதைத் தாவீது தெரிந்து வைத்திருக்கிறார். (உபா 4:27; உபா 28:64, லேவி 26) இந்த வெளிப்பாட்டின் அடிப்படையில் தாவீது ஜெபிக்கிறார். சாலொமோனுக்கும், இதுபோன்ற வெளிப்பாடு கிடைத்திருக்க வேண்டும் (1இராஜா 8:48-50).

ஆராதனை
1நாளா 16:37-43

1நாளா 16:37. பின்பு பெட்டிக்கு முன்பாக நித்தம் அன்றாடக முறையாய்ச் சேவிக்கும்படி அவன் அங்கே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஆசாப்பையும், அவன் சகோதரரையும், ஓபேத் ஏதோமையும், அவர்களுடைய சகோதரராகிய அறுபத்தெட்டுப்பேரையும் வைத்து,

1நாளா 16:38. எதித்தூனின் குமாரனாகிய இந்த ஓபேத்ஏதோமையும் ஓசாவையும் வாசல் காக்கிறவர்களாக வைத்தான்.

1நாளா 16:39. கிபியோனிலுள்ள மேட்டின்மேலிருக்கிற கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக இருக்கிற சர்வாங்க தகனபலி பீடத்தின்மேல் சர்வாங்க தகனங்களை நித்தமும், அந்திசந்தியில், கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியெல்லாம் கர்த்தருக்குச் செலுத்துவதற்காக,

1நாளா 16:40. அங்கே அவன் ஆசாரியனாகிய சாதோக்கையும், அவன் சகோதரராகிய ஆசாரியரையும் வைத்து,

1நாளா 16:41. இவர்களோடுங்கூட ஏமானையும், எதித்தூனையும், பேர்பேராகக் குறித்துத் தெரிந்துகொள்ளப்பட்ட மற்றச் சில்லரையும்: கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைத் துதிக்கவும்,

1நாளா 16:42. பூரிகைகளையும் கைத்தாளங்களையும் தேவனைப் பாடுகிறதற்குரிய கீதவாத்தியங்களையும் தொனிக்கச் செய்யவும் அவர்களுடன் ஏமானையும் எதித்தூனையும் வைத்து, எதித்தூனின் குமாரரை வாசல் காக்கிறவர்களாகக் கட்டளையிட்டான்.

1நாளா 16:43. பின்பு ஜனங்கள் எல்லாரும் அவரவர் தங்கள் வீட்டிற்குப் போனார்கள்; தாவீதும் தன் வீட்டாரை ஆசீர்வதிக்கத் திரும்பினான்.

பண்டிகை நாட்களும், விசேஷித்த நாட்களும் எப்போதாவது வரும். அந்த விசேஷித்த நாட்களில் மாத்திரம் நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும் என்று நினைத்து, மற்ற நாட்களில் கர்த்தரை துதியாமலிருந்துவிடக்கூடாது. நாம் கர்த்தரை அநுதினமும் துதிக்கவேண்டும். நமக்கு ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய கிருபை தேவைப்படுகிறது.

தாவீது கர்த்தரை ஆராதிக்கும் முறைமைகளை எருசலேமிலும், கிபியோனிலும் ஸ்தாபனம்பண்ணுகிறார். தேவனுடைய பெட்டி இப்போது எருசலேமில் வைக்கப்பட்டிருக்கிறது.

பெட்டிக்கு முன்பாக நித்தம் அன்றாடக முறையாய்ச் சேவிக்கும்படி, தாவீது அங்கே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக ஆசாப்பையும், அவன் சகோதரரையும், ஒபேத் ஏதோமையும், அவர்களுடைய சகோதரராகிய அறுபத்தெட்டுப்பேரையும் வைக்கிறார் (1நாளா 16:37).

தேவனுடைய பெட்டிக்கு எருசலேமிலே போடப்பட்டிருக்கிற கூடாரத்திலே சர்வாங்க தகனபலிகள் எதுவும் செலுத்தப்படவில்லை. தூபங்களும் காட்டப்படவில்லை. இந்தக் கூடாரத்தில் தகனபலிபீடமோ, தூபபீடமோ வைக்கப்படவில்லை. தாவீது இந்தக் கூடாரத்தில் சர்வாங்க தகனபலிகளை செலுத்தாவிட்டாலும், அவர் துதியின் பலிகளை செலுத்துகிறார்.

"என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையெடுப்பு அந்திப்பலியாகவும் இருக்கக்கடவது" (சங் 141:2).

தாவீது கிபியோனிலும் ஆராதனை முறைமைகளை ஸ்தாபிக்கிறார். எருசலேமிலே தேவனுடைய பெட்டி வைக்கப்பட்டாலும், தாவீது கர்த்தருக்கு பலிசெலுத்துவதை நிறுத்திவிடவில்லை. பலியின் பிரமாணமும் தெய்வீக பிரமாணமாகும். கிபியோனிலுள்ள ஆசாரிப்புக்கூடாரத்திலே சர்வாங்க தகனபலிபீடமும், தூபபீடமும் இருக்கிறது. இங்கே ஆசாரியர்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். அங்கே தூபங்களை காண்பிக்கிறார்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, கிபியோனிலே பலிகளை செலுத்துவதற்கு, தாவீது ஆசாரியரையும் லேவியரையும் நியமிக்கிறார்.

கிபியோனிலுள்ள மேட்டின்மேலிருக்கிற கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாக இருக்கிற சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனங்களை நித்தமும், அந்திசந்தியில், கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியெல்லாம் கர்த்தருக்குச் செலுத்துவதற்காக, அங்கே தாவீது ஆசாரியனாகிய சாதோக்கையும், அவன் சகோதரராகிய ஆசாரியரையும் வைக்கிறார் (1நாளா 16:39,40).

பலிசெலுத்துவதைவிட கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதே உத்தமம். சர்வாங்க தகனபலிகளைவிட, நம்முடைய ஜெபமும் துதியுமே கர்த்தருக்கு பிரியமானது. தாவீதோ கர்த்தரைத் துதிக்கவும் செய்கிறார். அவருக்கு பலிகளையும் செலுத்துகிறார். கர்த்தருக்கு பலிகளை செலுத்துவது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

கிபியோனிலே கர்த்தருக்கு பலிபீடம் இருக்கிறது. தாவீது அந்தப் பலிபீடத்திலே கர்த்தருக்கு பலிசெலுத்த ஆசாரியரை நியமிப்பதோடு, கர்த்தரைத் துதிப்பதற்கு பாடகர்களையும் நியமிக்கிறார்.

தாவீது ஏமானையும், எதித்தூனையும், பேர்பேராகக்குறித்துத் தெரிந்துகொள்ளப்பட்ட மற்றச் சிலரையும்: "கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளது" என்று அவரைத் துதிக்கவும் கட்டளையிடுகிறார் (1நாளா 16:41).

கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி எருசலேமுக்குக் கொண்டுவரப்படுகிறது. கர்த்தருடைய சமுகத்தில் துதித்துப் பாடுவதற்குப் பாடகர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மூன்றுநாள் பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. இவையெல்லாம் முடிந்த பிற்பாடு கர்த்தருடைய ஊழியங்களை அன்றாடம் செய்யும்படியாக அதற்கென்று நியமித்த நபர்களிடம் தாவீது ஒப்புக்கொடுத்துவிட்டு, தன் வீட்டிற்குத் திரும்பிப் போகிறார் (நாளா 16:37-43).

இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த சந்தோஷத்தோடு தங்கள் வீடுகளுக்கு திரும்பிப்போகிறார்கள். தாவீதும் தன்னுடைய வீட்டாரை ஆசீர்வதிப்பதற்காக திரும்புகிறார். தானும் தன்னுடைய குடும்பத்தாரும் கர்த்தரை ஆராதிப்பதாக தாவீது தீர்மானம்பண்ணுகிறார். விசுவாசிகளாகிய நாம் மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து சபையிலும் ஜெபிக்கவேண்டும், அதோடு நம்முடைய வீடுகளிலே, நம்முடைய குடும்பத்தாரோடும் ஜெபிக்கவேண்டும். மேலும் நாம் கர்த்தருடைய சமுகத்திலே தனியாகவும் ஜெபிக்கவேண்டும்.

17 அதிகாரம்

1நாளா 17-ஆவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள், 2சாமு 7-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டிக்கு ஒரு வீட்டைக் கட்டவேண்டும் என்று தாவீதின் மனதிலே விருப்பமுண்டாயிற்று. கர்த்தர் தாவீதுக்கு தம்முடைய வாக்குத்தத்தங்களை சொல்லுகிறார் (1நாளா 17:1-15).

தாவீது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறார். கர்த்தர் தாவீதுக்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். தாவீது கர்த்தரிடத்தில் ஏறெடுத்த ஜெபம் (1நாளா 17:16-27).

தாவீது தேவனுடைய பெட்டியை சந்தோஷமாய் பராமரிக்கிறார். தேவனுடைய பெட்டி இப்போது திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு வீட்டை கட்டவேண்டுமென்று, தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் தன்னுடைய விருப்பத்தை சொல்லுகிறார் (1நாளா 17:1) தாவீதின் விருப்பத்தை நாத்தான் அங்கீகரிக்கிறான் (1நாளா 17:2).

தாவீதின் மனதிலுள்ள விருப்பத்தை நாத்தான் கர்த்தருக்கு அறிவிக்கிறான். கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று (1நாளா 17:3-14)

நாத்தான் தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறான் (1நாளா 17:15). தாவீது கர்த்தருடைய வார்த்தையை கேட்டு அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். தேவன் தனக்கு சொன்ன வாக்குத்தத்தங்களை தாவீது நன்றியோடு ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தனக்கு நிறைவேறவேண்டுமென்று தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (1நாளா 17:16-27)

தேவனுடைய பெட்டி
1நாளா 17:1,2

1நாளா 17:1. தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறபோது, அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: பாரும், நான் கேதுருமர வீட்டிலே வாசம்பண்ணுகிறேன்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியோ திரைகளின்கீழ் இருக்கிறது என்றான்.

1நாளா 17:2. அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும்; தேவன் உம்மோடு இருக்கிறார் என்றான்.

கர்த்தர் தாவீதை இளைப்பாறப்பண்ணுகிறார். தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் யுத்தமில்லை. அமைதி உண்டாயிற்று. கர்த்தர் தாவீதைச் சுற்றிலுமிருந்த, அவருடைய எல்லா சத்துருக்களுக்கும், அவரை நீங்கலாக்கி இளைப்பாறப்பண்ணுகிறார் (2சாமு 7:1).

தாவீதுக்கு விரோதமாக அவருடைய சத்துருக்கள் யாரும் யுத்தம்பண்ண வரவில்லை. தாவீதும் யுத்தக்களத்திற்கு போகவேண்டிய அவசியமில்லை. தாவீது நீண்டகாலமாக சத்துருக்களோடு யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார். அவருக்கு இளைப்பாறுதல் இல்லாமலிருந்தது. கர்த்தரோ தாவீதை இப்போது இளைப்பாறப்பண்ணுகிறார்.

தாவீது சத்துருக்களோடு பல யுத்தங்களை நடத்தியிருக்கிறார். இப்போது தேசத்திலே யுத்தமில்லாமல் அமைதலாயிருக்கிறது. தாவீது தன் வீட்டிலே வாசமாயிருக்கிறார். அங்கே இளைப்பாறிக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பிரமாணத்தைத் தியானம்பண்ணுகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமைதியாகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

தேவனுடைய நாமமகிமைக்காக அவருக்கு ஒரு ஆலயத்தை கட்டியெழுப்பவேண்டும் என்னும் எண்ணம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. தாவீது, தனக்கு ஒரு வீட்டை கட்டினார். தன்னுடைய வேலையாட்களுக்கு ஒரு பட்டணத்தைக் கட்டினார். தாவீது இப்போது தேவனுடைய பெட்டியை வைப்பதற்கு ஒரு வாசஸ்தலத்தை கட்டவேண்டுமென்று விரும்புகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். தாவீதும் கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக்கட்டி, தன்னுடைய நன்றியுள்ள இருதயத்தை கர்த்தருக்கு வெளிப்படுத்த விரும்புகிறார். தாவீது கர்த்தரைக் கனம்பண்ணி, அவரை மகிமைப்படுத்த விரும்புகிறார். "நான் கர்த்தருக்காக என்ன செய்வேன்" என்னும் எண்ணமே தாவீதின் மனதில் இருக்கிறது.

தாவீதின் வீடு கேதுரு மரங்களால் செய்யப்பட்டிருக்கிறது. தேவனுடைய பெட்டியோ திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீது இவ்விரண்டு வாஸ்தலங்களையும் பார்க்கிறார். தான் பெரிய அரண்மனையில் வாசம்பண்ணும்போது, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருப்பது, தாவீதின் மனதிற்கு வேதனையைத் தருகிறது.

"கர்த்தாவே, தாவீதையும் அவனுடைய சகல உபத்திரவத்தையும் நினைத்தருளும். அவன்: நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபின் வல்லவருக்கு ஒரு வாசஸ்தலத்தையும் காணு மட்டும், என் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறுவதுமில்லை. என் கண்களுக்கு நித்திரையையும், என் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று, கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவருக்குப் பொருத்தனைபண்ணினான்" *(சங் 132:1-5).*

தாவீது கர்த்தர்மீது பயபக்தியாயும், பிரியமாயும் இருக்கிறார். அவர் கர்த்தருக்கு நன்றியுள்ளவராயிருக்கிறார். தாவீது கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசம்பண்ணுகிறார். இது கர்த்தர் அவருக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதம். ஆனால் தேவனுடைய பெட்டியோ திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. இதைப் பார்க்கும்போது தாவீதின் மனது வேதனைப்படுகிறது.

கர்த்தருடைய ஆலயக்கட்டிடம் பாழாய்க்கிடக்கும்போது, நம்முடைய வீடு பிரமாண்டமானதாகவும், அலங்காரமானதாகவும் இருந்தால், நம்முடைய மனதிற்கும் வேதனையாயிருக்கும். நமக்கு கர்த்தர்மீது உண்மையான பக்தியும், அன்பும் இருக்குமென்றால், நாம் பாழாய்க்கிடக்கிற ஆலயத்தைப்பற்றி வேதனையோடு நினைத்துப் பார்ப்போம்.

தாவீது கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசம்பண்ணினாலும், அவருடைய மனதிலே சந்தோஷமில்லை. தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதை நினைத்து அவர் வேதனைப்படுகிறார். தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலத்தை கட்டவேண்டும் என்னும் விருப்பம் தாவீதின் மனதில் உண்டாயிற்று. தேவனுடைய பெட்டி நல்ல ஸ்தலத்திலே வாசம்பண்ணினால்தான், தாவீதால் தன்னுடைய வீட்டிலே சந்தோஷமாய் வாசம்பண்ண முடியும். அதுவரையிலும், தாவீதின் இருதயத்தில் வேதனை இருக்கும்.

தாவீது தன் மனதில் ஏற்பட்ட எண்ணத்தை, தீர்க்கதரிசியாகிய நாத்தானிடத்தில் அறிவிக்கிறார். தீர்க்கதரிசிக்கு தேவனுடைய மனது தெரியும். தாவீது கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய விரும்புகிறார். தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்டுவது, மெய்யாகவே நல்ல காரியம் தான். ஆனால் இந்த வாசஸ்தலத்தைக் கட்டுவது தேவனுக்குச் சித்தமானதா, இல்லையா என்பது தாவீதுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை.

தேவனுடைய பெட்டி இப்போது திரைச்சீலைகளின் நடுவே வாசமாயிருக்கிறது. தாவீதோ கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசமாயிருக்கிறார். தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது நல்ல வேலையாகயிருந்தாலும், அது கர்த்தருக்கு சித்தமான வேலையாக இருந்தால் மாத்திரமே, தாவீது அதைக் கட்ட விரும்புகிறார். கர்த்தருடைய சித்தத்தை தெரிந்துகொள்வதற்காக, தன்னுடைய மனதிலே ஏற்பட்ட யோசனையை, தாவீது தீர்க்கதரிசியாகிய நாத்தானிடத்தில் சொல்லுகிறார்.

ராஜா தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி: "பாரும், கேதுருமரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே நான் வாசம்பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே" (நாளா 17:1) என்று சொல்லுகிறார். அப்பொழுது நாத்தான் ராஜாவை நோக்கி: "உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும்; தேவன் உம்மோடு இருக்கிறாரே" (நாளா 17:2) என்று நாத்தான் தாவீதுக்கு ஆதரவாகப் பேசுகிறான்.

தாவீதின் மனதிலுள்ள சிந்தனை நாத்தானுக்கு தெரிந்திருக்கிறது. தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது நல்ல வேலை என்றும், அதை தாவீது கட்ட ஆரம்பிக்கலாம் என்றும், தீர்க்கதரிசியாகிய நாத்தான் தாவீதை உற்சாகப்படுத்துகிறான்.

நாத்தானைப்போலவே நாமும் மற்றவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்கள் நல்ல நோக்கங்களோடு, நல்ல திட்டங்களை நிறைவேற்றும்போது நாமும் அவர்களுக்கு ஆதரவாயிருக்க வேண்டும். நல்ல வேலைகள் எங்கே நடைபெற்றாலும், அது நல்லதுதான்.

நாத்தான் இப்போது தாவீது ராஜாவிடம் பேசும்போது, கர்த்தருடைய நாமத்தினால் பேசவில்லை. அவன் தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசுகிறான். நாத்தான் இப்போது தாவீதிடம் ஒரு தீர்க்கதரிசியாகப் பேசவில்லை. அவன் ஒரு புத்தியுள்ள மனுஷனாகவும், ஒரு நல்ல மனுஷனாகவும் பேசுகிறான்.

கர்த்தருடைய வார்த்தை 1நாளா 17:3-15

1நாளா 17:3. அன்று ராத்திரியிலே, தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்:

1நாளா 17:4. நீ போய், என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்.

1நாளா 17:5. நான் இஸ்ரவேலை வரப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், ஒரு கூடாரத்திலிருந்து மறு கூடாரத்துக்கும், ஒரு வாசஸ்தலத்திலிருந்து மறு வாசஸ்தலத்துக்கும் போனேன்.

1நாளா 17:6. நான் சகல இஸ்ரவேலோடும் உலாவி வந்த எவ்விடத்திலாகிலும், நான் என் ஜனத்தை மேய்க்கக் கற்பித்த இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் யாதொருவனை நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுருமரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று யாதொரு வார்த்தை சொன்னது உண்டோ?

1நாளா 17:7. இப்போதும், நீ என் தாசனாகிய தாவீதை நோக்கி: சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை ஆட்டுமந்தையை விட்டு எடுத்து,

1நாளா 17:8. நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்.

1நாளா 17:9. நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தையும் ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்முதல் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கவும் அவர்களை நாட்டினேன்.

1நாளா 17:10. உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன். இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்.

1நாளா 17:11. நீ உன் பிதாக்களிடத்திலே போக, உன் நாட்கள் நிறைவேறும்போது, நான் உனக்குப்பின்பு உன் புத்திரரில் ஒருவனாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்.

1நாளா 17:12. அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.

1நாளா 17:13. நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்; உனக்கு முன்னிருந்தவனை விட்டு என் கிருபையை நான் விலக்கப்பண்ணினதுபோல், அவனை விட்டு விலகப்பண்ணாமல்,

1நாளா 17:14. அவனை என் ஆலயத்திலும் என் ராஜ்யத்திலும் என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்; அவனுடைய ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும் என்று சொல் என்றார்.

1நாளா 17:15. நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும் இந்த எல்லாத் தரிசனத்தின்படியும் தாவீதுக்குச் சொன்னான்.

தாவீது தன்னுடைய மனதின் விருப்பத்தை தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் சொல்லுகிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், நல்ல காரியங்களுக்கு எப்போதுமே ஆதரவாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். எங்கெல்லாம் நல்ல காரியங்கள் நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் தீர்க்கதரிசிகளின் உற்சாகப்படுத்தும் வார்த்தைகளும் இருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாகயிருக்கிறார். அவர் தேவாதி தேவனாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். ஆனாலும் கர்த்தர் ஆடம்பரத்திலோ, அலங்காரத்திலோ பிரியப்படுகிறவரல்ல. கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். தம்முடைய ஆராதனையிலே பகட்டுகளும், வெளிவேஷங்களும், தேவையில்லாத ஆடம்பர அலங்காரங்களும் இருப்பதை கர்த்தர் விரும்புவதில்லை.

தேவனுடைய பெட்டி இப்போது கூடாரத்திலிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் இந்தக் கூடாரத்தில் வெளிப்படுகிறது. தேவனுடைய பெட்டி கூடாரத்திலிருந்தாலும், கர்த்தர் இந்தக் கூடாரத்தில் திருப்தியோடிருக்கிறார்.

கர்த்தர் நாத்தானிடம் தம்முடைய வாசஸ்தலத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் இஸ்ரவேலை வரப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், ஒரு கூடாரத்திலிருந்து மறு கூடாரத்துக்கும், ஒரு வாசஸ்தலத்திலிருந்து மறுவாசஸ்தலத்துக்கும் போனேன்" (1நாளா 17:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயாதிபதிகள் ஜனங்களை மேய்க்கவேண்டும். அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனங்களைக் கொடுக்கவேண்டும். தமக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று கர்த்தர் தம்முடைய நியாயாதிபதிகளிடத்தில் ஒருபோதும் கேட்டதில்லை.

கர்த்தர் இதுபற்றி நாத்தானிடம் சொல்லும்போது, "நான் சகல இஸ்ரவேலோடும் உலாவி வந்த எவ்விடத்திலாகிலும், நான் என் ஜனத்தை மேய்க்கக் கற்பித்த இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் யாதொருவனை நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுருமரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று யாதொரு வார்த்தை சொன்னது உண்டோ?" (1நாளா 17:6) என்று கேட்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின் விருப்பங்களை அங்கீகரிக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால், அவர்களுடைய அன்பையும், நேசத்தையும் ஏற்றுக்கொள்கிறார். ஆனாலும் சில சமயங்களில் தம்முடைய ஜனங்கள் தமக்காக செய்ய விரும்பும் காரியங்களை தடைபண்ணிவிடுகிறார். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று விரும்பினார். கர்த்தரோ, "நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்" (1நாளா 17:4) என்று சொல்லி, தாவீதின் விருப்பத்தை அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார்.

கர்த்தருடைய ஆலயம் கட்டப்படுவதற்கு தாவீது ஆயத்த வேலைகளை செய்யலாம். ஆனால் அவர் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். மோசே அவர்களை வனாந்தரப் பாதையின் வழியாக வழிநடத்தினார். மோசே யோர்தானின் இக்கரையிலிருந்து கானான் தேசத்தைப் பார்த்தார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்குள்ளே வழிநடத்திச் செல்லும் சிலாக்கியம் மோசேக்கு கிடைக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்தும் பொறுப்பை மோசே யோசுவாவிடம் ஒப்புக்கொடுத்தார். மோசேக்கு பின்பு யோசுவா இஸ்ரவேலரை கானான் தேசத்திற்குள் வழிநடத்தினார். அவர் கானான் தேசத்தை சுதந்தரித்து, தேசத்தின் நிலத்தை, இஸ்ரவேல் புத்திரருக்கு பங்கு பிரித்து கொடுத்தார்.

கர்த்தர் தாவீதிடம், "நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்" என்று சொன்னதினால், தாவீது சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் தாவீதைப் புறக்கணித்துவிடவில்லை. தாவீதின் முயற்சிகள் வீணானவையுமல்ல. தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டாவிட்டாலும், கர்த்தர் அவர்மீது இன்னும் பிரியமாகவே இருக்கிறார்.

கர்த்தர் தாவீதைப்பற்றிச் சொல்லும்போது, "நீ என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை ஆட்டுமந்தையை விட்டு எடுத்து, நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்" (1நாளா 17:7,8) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது நல்ல ஊழியம். தாவீது இதை நல்ல நோக்கத்தோடு செய்ய விரும்புகிறார். தமக்கு ஆலயம் கட்டக்கூடாது என்று கர்த்தர் தாவீதை தடுத்து விட்டதினால், தன்னுடைய நோக்கம் வீணாய்ப்போயிற்று என்று நினைத்து, தாவீது சோர்ந்துபோய்விடக்கூடாது. தாவீது கர்த்தருக்கு ஆலயம் கட்டுவதற்கு முன்பாகவே, கர்த்தர் தாவீதை ஆசீர்வதிக்கிறார். "இப்போதும் கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார் என்பதை உனக்கு அறிவிக்கிறேன்" (1நாளா 17:10) என்று கர்த்தர் தாவீதுக்கு சொல்லுகிறார்.

நாம் கர்த்தருக்காக மனப்பூர்வமாய்ச் செய்யும் எல்லா ஊழியங்களையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். அவர் நம்முடைய நற்கிரியைகளை அங்கீகரிப்பது மாத்திரமல்ல, நம்முடைய நற்கிரியைகளுக்கேற்ற நல்ல பலன்களையும் நமக்கு கொடுத்து, கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கிறார்.

"நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்" என்று கர்த்தர் தாவீதுக்கு சொன்னதினால், கர்த்தருக்கு இனிமேல் ஒருபோதும் ஆலயம் கட்டப்படாது என்று நினைத்து, தாவீது ஏமாற்றமடையவேண்டியதில்லை. கர்த்தருடைய ஆலயம் கட்டப்படும். அந்த ஆலயத்தை தாவீது கட்டமாட்டார். தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுவார்.

"நீ உன் பிதாக்களிடத்திலே போக, உன் நாட்கள் நிறைவேறும்போது, நான் உனக்குப்பின்பு உன் புத்திரரில் ஒருவனாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன் (1நாளா 17:11,12) என்று கர்த்தர் தாவீதுக்கு சொல்லுகிறார்.

தாவீது உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை மாத்திரம் நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் தற்காலிகமானது. தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருக்கிறார். தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, இஸ்ரவேலரை ராஜ்யபாரம்பண்ணவேண்டும் என்று தாவீது உலகப்பிரகாரமாக சிந்திக்கக்கூடாது. அவர் ஆவிக்குரிய காரியங்களையும் சிந்திக்கவேண்டும்.

தாவீது இஸ்ரவேல் ராஜ்யத்தைப்பற்றி நினைக்கும்போது, இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தைப்பற்றியும் தியானிக்கவேண்டும். தாவீதின் சந்ததியிலிருந்து இயேசுகிறிஸ்து பிறப்பார். அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யமாயிருக்கும். கர்த்தர் தாவீதுக்கு மேசியாவின் நித்திய ராஜ்யத்தைப்பற்றியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "அவருடைய ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அன்று இராத்திரியிலே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தாவீதுக்கு கிருபையாய் இரங்குகிறார். தாவீதைப்பற்றிய காரியங்கள் நாத்தானுக்கு பூரணமாக வெளிப்படுத்தப்படுகிறது. கர்த்தர் நாத்தானை தாவீதிடத்தில் அனுப்புகிறார். கர்த்தர் நாத்தானுக்கு தம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தி, அதை தாவீதுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்ட வேண்டுமென்று விரும்புகிறார். நாத்தானும் தாவீதிடம், "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ள படியெல்லாம் செய்யும்" என்று சொல்லி, தாவீதின் யோசனையை அங்கீகரிக்கிறான். ஆனால் கர்த்தர் தாவீதின் இருதயத்திலுள்ள யோசனையை அங்கீகரிக்கவில்லை. தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது கர்த்தருக்கு சித்தமாயில்லை.

தாவீது நாத்தானிடம் தன்னுடைய இருதயத்திலுள்ள யோசனையைச் சொன்னபோது, நாத்தான் அந்த யோசனையை உடனே அங்கீகரிக்கிறான். ஆனால் கர்த்தரோ தாவீதினுடைய இருதயத்தின் யோசனையை அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் சொன்ன வார்த்தையை நாத்தான் தாவீதுக்கு சொல்லவேண்டும். நாத்தான் தாவீதுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தையும், இப்போது கர்த்தர் தாவீதுக்கு நாத்தான் மூலமாய் சொல்லச் சொல்லுகிற வார்த்தையும் வித்தியாசமாயிருக்கிறது.

நாத்தான் கர்த்தருடைய வார்த்தையை தாவீதுக்கு சொல்லவேண்டும். அவன் சற்று நேரத்திற்கு முன்பு தாவீதிடம் "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்னான். இப்போது நாத்தான் தாவீதிடம்போய், "உம்முடைய இருதயத்திலுள்ளபடி செய்யக்கூடாது" என்று சொல்லவேண்டும். நாத்தானுடைய வார்த்தையைக் கேட்டு தாவீதுக்கு குழப்பம் ஏற்படும். அவர் நாத்தான்மீது வைத்திருக்கும் மதிப்பும் மரியாதையும் குறைந்துபோகும். ஆனாலும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தும் வார்த்தைகளை அப்படியே சொல்லவேண்டும்.

நாத்தான் தாவீதை நோக்கி, "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்ன வார்த்தை, கர்த்தருக்கு சித்தமான வார்த்தையல்ல. நாத்தானோ, தான் சொன்னது கர்த்தருக்கு சித்தமானதல்ல என்பதை அறிந்துகொள்ளாமலேயே, அப்படி சொல்லிவிட்டான். நாத்தான் தாவீதிடம் தப்பிதமாகப் பேசிவிட்டான்.

ஆனாலும் கர்த்தர் நாத்தானை சந்திக்கிறார். நாத்தானுடைய தப்பிதத்தை அவனுக்கு உணர்த்துகிறார். அன்று இராத்திரியிலேயே கர்த்தருடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாயிற்று. நாத்தான் தாவீதுக்கு அனுமதி கொடுத்ததினால், தாவீது தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டும் வேலையை உடனே ஆரம்பித்துவிடுவார். நாத்தான் இப்போது தாவீதுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, அந்த வேலையை தடுத்து நிறுத்தவேண்டும்.

தாவீது தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டக்கூடாது என்னும் சிந்தனை, நாத்தானுடைய மனதில் இதுவரையிலும் வரவில்லை. ஏனென்றால், தேவனுடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது ஒரு நல்ல வேலை. இந்த வேலை கர்த்தருக்கு பிரியமாயிருக்கும் என்று நாத்தான் நினைத்தான். ஆனால் தாவீது கர்த்தருடைய பெட்டிக்கு வாசஸ்தலம் கட்டுவது, கர்த்தருக்கு சித்தமல்ல என்பதை, கர்த்தர் நாத்தானுக்கு வெளிப்படுத்துகிறார்.

தேவனுடைய பெட்டிக்கு ஒரு வாசஸ்தலம் கட்டப்படுவதை கர்த்தர் தடைபண்ணவில்லை. ஆனால் அந்த வாசஸ்தலத்தை தாவீது கட்டக்கூடாது என்று, கர்த்தர் தாவீதை தடைபண்ணுகிறார். கர்த்தர் எல்லா காரியங்களையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நடத்துகிறவர். அவர் யோசனையில் பெரியவர். கர்த்தருடைய செய்கைகள் எல்லாமே நீதியுள்ளவை.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் என் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தில் இருந்தது. ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதை நோக்கி: என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்லகாரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் குமாரனே என் நாமத்திற்கு அந்த ஆலயத்தைக் கட்டுவான் என்றார்" (1இராஜா 8:17-19).

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது நல்ல காரியம் தான் என்பதை கர்த்தரும் அங்கீகரிக்கிறார். ஆனால் அந்த ஆலயத்தை தாவீது கட்டுவதை கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் நாத்தானிடம், "நீ போய் என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் வாசமாயிருக்கத்தக்க ஆலயத்தை நீ எனக்குக் கட்டுவாயோ?" (2சாமு 7:5) என்று சொல்லச் சொல்லுகிறார்.

"ஆலயத்தை நீ எனக்கு கட்டுவாயோ" என்னும் வாக்கியத்திற்கு, "ஆலயத்தை நீ எனக்கு கட்டமாட்டாய்" என்று பொருள். "அன்று ராத்திரியிலே, தேவனுடைய வார்த்தை நாத்தானுக்கு உண்டாகி, அவர்: நீ போய், என் தாசனாகிய தாவீதை நோக்கி: கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் வாசமாயிருக்க நீ எனக்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்" (1நாளா 17:3,4) என்று சொல்லுகிறார்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது நல்ல காரியமாயிருந்தாலும், தாவீது அந்த ஆலயத்தைக் கர்த்தருக்கு கட்டமாட்டார். கர்த்தர் தாவீதைக் குறித்து வேறு திட்டங்கள் வைத்திருக்கிறார். தாவீது முதலாவதாக, கர்த்தர் அவருக்கு நியமித்திருக்கிற வேலைகளை செய்யவேண்டும்.

தாவீது ஒரு யுத்தவீரர். அவர் ஒரு பராக்கிரமசாலி. அவர் அந்நிய தேசத்தாரோடு யுத்தம்பண்ணி, இஸ்ரவேலின் எல்லைகளை விஸ்தாரம்பண்ணவேண்டும். இஸ்ரவேலின் காணியாட்சியில் தங்கியிருக்கிற புறஜாதியாரை, தாவீது முறியடிக்கவேண்டும். அந்நியரை இஸ்ரவேல் தேசத்தைவிட்டு துரத்தவேண்டும். இதுவே தாவீதைக் குறித்து கர்த்தருடைய சித்தம்.

தாவீது இனிமையான சங்கீதங்களை பாடுகிறவர். அவர் கர்த்தரைத் துதித்துப்பாடும் சங்கீதங்களை இயற்றவேண்டும். தாவீது கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டக்கூடாது. ஆனாலும் கர்த்தருக்காக கட்டப்பட்டிருக்கும் ஆலயத்தில், தாவீது எழுதின சங்கீதங்கள் பாடப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

தாவீது லேவியரின் வகுப்புகளை தீர்மானம்பண்ணவேண்டும். ஆலயத்தில் ஊழியங்களை ஒழுங்கு செய்யவேண்டும். தாவீதைவிட, அவருடைய குமாரன் கர்த்தருக்கு நேர்த்தியான ஆலயத்தைக் கட்டுவார். ஆலயம் கட்டுவதற்கு தாவீதின் குமாரனிடத்தில் தேவையான பொக்கிஷம் இருக்கும். தம்முடைய ஆலயத்தைக் கட்டும் பொறுப்பை, தாவீதின் குமாரனிடத்தில் கொடுக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

கர்த்தரிடத்திலிருந்து வரங்களையும் தாலந்துகளையும் பெற்றிருக்கிறவர்கள் எல்லோரும், கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய ஆலயம், அவருக்கு சித்தமான வேளையில் கட்டியெழுப்பப்படும். அதை கர்த்தருடைய கிருபையினால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடித்துவிடலாம்.

கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும்போது அதற்கு ஆயத்த வேலைகளையும் செய்யவேண்டும். தாவீது கர்த்தருக்கு ஆலயம் கட்ட வேண்டும் என்று யோசித்தார். ஆனால் அதற்குரிய ஆயத்த வேலைகளை செய்யவேண்டும் என்னும் யோசனை தாவீதின் இருதயத்தில் ஏற்படவில்லை. இப்போது கர்த்தர் அதுபற்றி நாத்தானுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் எந்த ஒரு ஆலயத்திலும் வாசம்பண்ணவில்லை. அவர் கூடாரத்திலும், வாசஸ்தலத்திலும் உலாவினார். கர்த்தர் நாத்தானிடம், தம்முடைய வாசஸ்தலத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தர் நாத்தானிடம் "நான் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும், நான் ஒரு ஆலயத்திலே வாசம்பண்ணாமல், கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினேன்" *(2சாமு 7:6)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணினார். இதுவரையிலும் ஆசாரிப்புக்கூடாரத்தில் வாசம்பண்ணின கர்த்தரால், இன்னும் கொஞ்சகாலம் அங்கே வாசம்பண்ண முடியும். கர்த்தர் மனுஷர் பார்க்கிற பிரகாரமாக பார்ப்பதில்லை. ஆலயக்கட்டிடம் அழகாயிருக்கவேண்டும் என்றும், அது ஆடம்பரமாய் அழகுபடுத்தப்படவேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். புறம்பான அழகே நம்முடைய கண்களுக்கு பிரத்தியட்சமாய்த் தெரிகிறது.

கர்த்தரோ தம்முடைய ஆலயத்தின் வெளித்தோற்றம் அலங்காரமாயிருக்கிறதா, அது ஆடம்பரமாய் அழகுபடுத்தப்பட்டிருக்கிறதா என்பதைப் பார்ப்பதில்லை. கர்த்தர் ஆலயத்தின் பரிசுத்தத்தைப் பார்க்கிறார். கர்த்தர் பரிசுத்தர். அவருடைய வாசஸ்தலமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். கர்த்தருடைய ஆலயத்தில், அவரைத் தொழுதுகொள்ள வருகிறவர்களும், பரிசுத்தத்தோடு வரவேண்டும். கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம். இதுவே அவருக்கு பிரியமானது.

தேவனுடைய பெட்டி இதுவரையிலும் ஆசரிப்புக்கூடாரத்திலிருந்தது. கர்த்தருடைய பிரசன்னம் ஆசரிப்புக்கூடாரத்தில் தங்கியிருந்தது. கர்த்தர் கூடாரத்திலும் வாசஸ்தலத்திலும் உலாவினார். ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டால்தான், அங்கே தம்முடைய பிரசன்னம் இருக்கும் என்று கர்த்தர் எங்கும் சொல்லவில்லை. அவர் பெரிய ஆலயக்கட்டிடத்திலிருப்பதுபோல, சாதாரண கூடாரத்திலும் இருப்பார். கர்த்தர் தம்மை ஆராதிக்க வருகிற ஜனங்கள் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி எங்கே இருக்கிறதோ அங்கே தேவனுடைய பிரசன்னமும் இருக்கும். பெட்டி ஆசாரிப்புக்கூடாரத்திலிருந்தாலும், அது தேவாலயத்திலிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னம் அவருடைய பெட்டி இருக்கும் இடத்தில் இருக்கும்.

கிறிஸ்துவானவர் உடன்படிக்கைப் பெட்டிக்கு அடையாளமாயிருக்கிறார். அவர் இந்தப் பூமியிலிருந்த வரையிலும் கூடாரத்திலே உலாவினார். அவர் செல்லுமிடங்களுக்கெல்லாம் நன்மை செய்கிறவராக சுற்றி அலைந்தார். இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த காலம் வரையிலும் அவருக்கென்று சொந்தமாக வீடு இல்லை. அவர் வானத்திலே பரமேறிப்போகும் வரையிலும், இந்தப் பூமியிலே அவருக்கு வீடு இல்லை. பரலோகத்திலே, தம்முடைய பிதாவின் வீட்டில், தமக்கு வாசஸ்தலம் இருப்பதாக இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவானவருடைய பிதாவின் வீட்டிலே, பரலோகத்திலே, அநேக வாசஸ்தலங்கள் உண்டு. குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பிதாவின் வலதுபாரிசத்திலே அமர்ந்திருக்கிறார். இந்தப் பிரபஞ்சத்தில், இயேசுகிறிஸ்துவின் சபை தேவனுடைய பெட்டியைப்போல இருக்கிறது. பெட்டி கூடாரத்திலிருப்பதுபோல, கர்த்தருடைய சபையும் கூடாரத்திலிருக்கிறது. விசுவாசிகளாகிய நமக்கு இந்தப் பிரபஞ்சம் நித்திய நகரமல்ல. பரலோகமே நமக்கு நித்திய நகரம்.

தாவீது தன்னுடைய சங்கீதங்களில், ஆசரிப்புக்கூடாரத்தை, ஆலயம் என்று பல சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார்.

"நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்துக்குள் பிரவேசித்து, உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்ளுவேன்" *(சங் 5:7).*

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" *(சங் 27:4).*

"கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனும்படி செய்து, காடுகளை வெளியாக்கும்; அவருடைய ஆலயத்திலுள்ள யாவரும் அவருடைய மகிமையைப் பிரஸ்தாபிக்கிறார்கள்" *(சங் 29:9).*

"உம்முடைய பிராகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்; உம்முடைய பரிசுத்த ஆலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருப்தியாவோம்" *(சங் 65:4).*

"உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராகநான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்" *(சங் 138:2).*

தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருந்தாலும், கர்த்தருடைய பிரசன்னம் அங்கேயும் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் எங்கே இருக்கிறதோ, அதுவே அவருடைய வாசஸ்தலம். அதுவே கர்த்தருடைய கூடாரம். அதுவே கர்த்தருடைய ஆலயம்.

கர்த்தர் தமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்று, இஸ்ரவேலின் செங்கோலைப் பிடித்திருக்கிற எந்த ராஜாவினிடத்திலும் சொல்லவில்லை. கர்த்தர் இஸ்ரவேலின் நியாயாதிபதிகளிடத்திலும், தமக்கு ஒரு ஆலயம் கட்டப்படவேண்டும் என்று சொன்னதில்லை.

"நான் சகல இஸ்ரவேலோடும் உலாவி வந்த எவ்விடத்திலாகிலும், நான் என் ஜனத்தை மேய்க்கக் கற்பித்த இஸ்ரவேலின் நியாயாதிபதிகளில் யாதொருவனை நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுருமரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று யாதொரு வார்த்தை சொன்னது உண்டோ?" *(1நாளா 17:6).*

செங்கோல் என்னும் வார்த்தை, ராஜாக்களையும், பிரபுக்களையும் குறிக்கிறது.

"அதின் கொடிகளிலுள்ள ஒரு கொப்பிலிருந்து அக்கினி புறப்பட்டு, அதின் கனியைப் பட்சித்தது; ஆளுகிற செங்கோலுக்கேற்ற பலத்த கொப்பு இனி அதில் இல்லையென்று சொல்; இதுவே புலம்பல், இதுவே புலம்பலாயிருக்கும் என்றார்" *(எசே 19:14).*

"அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்" (எண் 24:17).

கர்த்தர் நாத்தானை நோக்கி, "நான் இஸ்ரவேலாகிய என் ஜனத்தை மேய்க்கும்படி கட்டளையிட்ட இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரத்தையாவது நோக்கி: நீங்கள் எனக்குக் கேதுரு மரத்தால் செய்யப்பட்ட ஆலயத்தைக் கட்டாதிருக்கிறது என்ன என்று நான் இஸ்ரவேல் புத்திரருக்குள் உலாவிவந்த எவ்விடத்திலாவது யாதொரு வார்த்தையைச் சொன்னதுண்டோ?" (2சாமு 7:7) என்று கேட்கிறார்.

கர்த்தர் நாத்தானிடம் தாம் வெளிப்படுத்தும் வார்த்தைகளை, தம்முடைய தாசனாகிய தாவீதுக்கு சொல்ல சொல்லுகிறார். கர்த்தர் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். நாத்தான் அந்த நன்மைகளை தாவீதுக்கு நினைவுபடுத்த வேண்டும்.

தாவீது இப்போது இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். இதற்கு முன்பு அவர் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். கர்த்தர் தாவீதை சாதாரண நிலமையிலிருந்து, உயர்ந்த நிலைக்கு உயர்த்தியிருக்கிறார்.

"நீ இஸ்ரவேல் என்கிற என் ஜனங்களுக்கு அதிபதியாயிருக்கும்படி, ஆடுகளின் பின்னே நடந்த உன்னை நான் ஆட்டுமந்தையை விட்டு எடுத்து, நீ போன எவ்விடத்திலும் உன்னோடே இருந்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முன்பாக நிர்மூலமாக்கி, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உனக்கு உண்டாக்கினேன்" (2சாமு 7:8,9; 1நாளா 17:7,8) என்று கர்த்தர் நாத்தானிடம், தாவீதுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதை சாதாரண நிலையிலிருந்து உயர்த்தியது மாத்திரமல்ல, அவர் தாவீதின் சத்துருக்களையெல்லாம் அவருக்கு முன்பாக நிர்மூலமாக்கினார். தாவீது போன எவ்விடத்திலும் கர்த்தர் அவரோடு கூடயிருந்து, அவரைப் பாதுகாத்தார். கர்த்தர் தாவீதினுடைய கைகளின் பிரயாசங்களை ஆசீர்வதித்தார். கர்த்தருடைய கிருபையினால் தாவீது இம்மட்டுமாக செழித்திருக்கிறார்.

கர்த்தர் தாவீதுக்கு பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த பெரிய நாமத்தை உண்டாக்கியிருக்கிறார். கர்த்தர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இதனால் தாவீதுக்கு இஸ்ரவேலின்மேல் அதிகாரமும் ஆளுகையும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் தாவீதை இஸ்ரவேல் தேசத்தின்மேல் உயர்த்தியதோடு, மற்ற தேசங்களிலும் உயர்த்தியிருக்கிறார். தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே, கனமும் மகிமையும், மதிப்பும் மரியாதையும் உண்டானதுபோல, மற்ற தேசங்கள் மத்தியிலும் அவருக்கு மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. கர்த்தர் தாவீதுக்கு பெரிய நாமத்தை உண்டாக்கியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலுக்கு தம்முடைய வாக்குத்தத்தைக் கொடுத்து, தம்முடைய வார்த்தைகளை அவர்கள் மத்தியிலே நிறைவேற்றுகிறார். கர்த்தர் தாவீதுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுப்பதற்கு முன்பாகவே, அவர் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேறும் வண்ணமாக, அவர் தாவீதை இஸ்ரவேலுக்கு ராஜாவாக கொடுத்திருக்கிறார். தாவீதின் ஆளுகையில் இஸ்ரவேல் ஜனத்தார் பாதுகாப்பாயிருப்பார்கள். அவர்களுக்கு அமைதியும் ஆறுதலும் உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேலுக்கு கொடுத்த வாக்குத்தத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு ஒரு இடத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்கள் ஸ்தானத்திலே குடியிருக்கவும், இனி அவர்கள் அலையாமலும், முன்போலும், நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளைக் கட்டளையிட்ட நாள்வரையில் நடந்ததுபோலும், நியாயக்கேட்டின் மக்களால் இனிச் சிறுமைப்படாமலும் இருக்கும்படி அவர்களை நாட்டினேன்" *(2சாமு 7:10; 1நாளா 17:9)* என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்கு பிரியம். இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களால் சிறுமைப்படக்கூடாது. நியாயக்கேட்டின் மக்கள் அவர்களை துன்பப்படுத்தக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். "நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்" *(சங் 128:6)*.

கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற ஆசீர்வாதமான தேசம். கானான் தேசத்திலே சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனத்தார், நியாயக்கேட்டின் மக்களால், இனிமேல் சிறுமைப்படமாட்டார்கள். சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை, கானான் தேசத்திலிருந்து துரத்திவிடமாட்டார்கள். புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய ஜனத்தை ஒடுக்கி அடிமைப்படுத்தமாட்டார்கள். "உன்னுடைய எல்லா சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்" *(2சாமு 7:11)* என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைக் குறித்து வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலுக்கு சத்துருவாயிருக்கிறவர்கள், தாவீதுக்கும் சத்துருவாயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் இங்கு, "உன்னுடைய எல்லா சத்துருக்களுக்கும் உன்னை நீங்கலாக்கி, இளைப்பாறவும் பண்ணினேன்" என்று சொல்லுவது, தாவீதுக்கு சொல்லப்படும் விசேஷித்த வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது.

நியாயக்கேட்டின் மக்கள் என்பது பெலிஸ்தரைக் குறிக்கிற வார்த்தை. இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, நீண்டகாலமாக வாதையாகவும், கொள்ளைநோயாகவும் இருந்தார்கள். பெலிஸ்தர் இனிமேல் இஸ்ரவேல் புத்திரரை சிறுமைப்படுத்தமாட்டார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் சிறுமைப்படமாட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை, இங்கு மறுபடியுமாய் சொல்லிவிட்டு, அவர் தாவீதையும், அவருடைய குடும்பத்தாரையும் ஆசீர்வதிக்கிறார். தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்று வாஞ்சையோடிருக்கிறார். கர்த்தரோ தாவீதுக்கு ஒரு வீட்டை உண்டுபண்ண ஆயத்தமாயிருக்கிறார். "இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார் என்பதைக் கர்த்தர் உனக்கு அறிவிக்கிறார்" *(2சாமு 7:11; 1நாளா 17:10)*.

கர்த்தர் இங்கு சொல்லும் வாக்குத்தத்தங்களில் சில, தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கு சொல்லப்படுகிறது. தாவீதுக்கு பின்பு, சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகிறார். கர்த்தர் இங்கு சொல்லும் வாக்குத்தத்தங்கள், யூதாவின் சிங்காசனத்தில் அமருகிற எல்லா ராஜாக்களுக்கும் பொதுவாக சொல்லப்படுகிறது.

கர்த்தர் தாவீதுக்கு, "உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரைபண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்" *(2சாமு 7:12; 1நாளா 17:11)* என்று தம்முடைய வாக்குத்தத்தத்தை சொல்லுகிறார். தாவீதுக்கு பின்பு அவருடைய கர்ப்பப்பிறப்பாகிய சாலொமோனுக்கு, கர்த்தர் ராஜ்யத்தை நிலைப்படுத்துவார். கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவார் *(2சாமு 7:13)*.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவார் (2சாமு 7:13; 1நாளா 17:12). தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று விரும்பினார். ஆனால் கர்த்தர் தாவீதுக்கு அந்த சிலாக்கியத்தைக் கொடுக்கவில்லை. ஆனாலும் தாவீது கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான திட்டங்களையும், பொருட்களையும் சேகரித்து கொடுப்பார். தாவீதின் குமாரனாகிய சாலொமோனே, கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவார்.

கர்த்தர் தாவீதை ஆசீர்வதிப்பதுபோல, தாவீதின் குமாரனாகிய சாலொமோனையும் ஆசீர்வதிப்பார். கர்த்தர் சாலொமோனோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்வார். சாலொமோன் கர்த்தருக்கு சுவீகார புத்திரனாகயிருப்பார். "நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பான்" (2சாமு 7:14; 1நாளா 17:13) என்று கர்த்தர் சாலொமோனைக் குறித்து சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய பிதாவாயிருப்பது, நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். நாம் அவருடைய பிள்ளைகளாயிருப்பது நம்முடைய பாக்கியம். விசுவாசிகளாகிய நமக்கு, இதைவிட பெரிய ஆசீர்வாதமோ, சிலாக்கியமோ, பாக்கியமோ வேறு எதுவும் இருக்க முடியாது.

பிதாவாகிய தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் இங்கு ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். "அவன் அக்கிரமம் செய்தால், நான் அவனை மனுஷருடைய மிலாற்றினாலும் மனுபுத்திரருடைய அடிகளினாலும் தண்டிப்பேன்" (2சாமு 7:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை காயப்படுத்தும் நோக்கத்தோடு அடிக்கமாட்டார். அவர் நம்மை மென்மையாக கண்டித்து திருத்துவார். தன்னுடைய பிள்ளைகளை சிட்சியாத தகப்பன் யாருமில்லை.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சிட்சித்தாலும், அடித்தாலும், அவர்களை தம்மைவிட்டு விலக்கிவிடமாட்டார். "உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்" (2சாமு 7:15; 1நாளா 17:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், தாவீதின் குமாரனாகிய சாலொமோனுக்கு விசேஷமாகச் சொல்லப்பட்டாலும், இந்த வாக்குத்தத்தங்கள், கர்த்தருடைய பிள்ளைகளாகிய விசுவாசிகள் அனைவருக்கும் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் நம்மைக் கைவிடாத தேவனாயிருக்கிறார்.

ரெகொபெயாமின் ஆட்சிக்காலத்தில், இஸ்ரவேல் புத்திரரில் பத்துக்கோத்திரத்தார், தாவீதின் குடும்பத்தாருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, தாவீதின் ராஜாசனத்தை விட்டுப் பிரிந்துபோனார்கள். அவர்களுடைய மீறுதல்களினிமித்தம் கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். ஆனாலும் தாவீதின் குடும்பத்தாரோடு இரண்டு கோத்திரத்தார் எப்போதும் கூடவே இருந்தார்கள். இவர்கள் தாவீதின் குடும்பத்தைவிட்டு விலகி போகவில்லை.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார். தாவீதுக்கு பின்பு, அவருடைய குமாரன் சாலொமோனும் சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாயிருந்தார். ஆனால் சாலொமோனுக்கு பின்பு, அவருடைய குமாரன் ரெகொபெயாமின் காலத்திலே சமஸ்த இஸ்ரவேல் தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும், இரண்டாய்ப் பிரிந்தது. தாவீதின் குடும்பத்தார், தெற்கு யூதாதேசத்திலுள்ள இரண்டு கோத்திரத்தாரை மாத்திரமே ஆட்சி செய்தார்கள்.

தாவீதின் ராஜாசனம் எண்ணிக்கையில் குறைந்துபோயிற்று. ஆனாலும் தேவனுடைய கிருபையும் இரக்கமும், தாவீதின் சந்ததியாரிடத்தில் தங்கியிருக்கிறது. தாவீதின் குடும்பத்தார் எண்ணிக்கையில் குறைந்துபோனாலும், கர்த்தருடைய கிருபை அவர்களைவிட்டு விலக்கப்படவில்லை. "உனக்கு முன்பாக நான் தள்ளிவிட்ட சவுலிடத்திலிருந்து என் கிருபையை விலக்கினதுபோல அவனைவிட்டு விலக்கமாட்டேன்" *(2சாமு 7:15)* என்று கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், தாவீதின் குமாரனாகிய சாலொமோனோடு தொடர்புடையதாயிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தாவீதின் குமாரனாயிருக்கிறார். கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்களெல்லாம், இயேசுகிறிஸ்துவில் பூரணமாய் நிறைவேறும்.

"பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார். அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்" *(அப் 13:22,23)*.

கர்த்தர், "நான் அவனுக்கு பிதாவாயிருப்பேன், அவன் எனக்கு குமாரனாயிருப்பான்" *(2சாமு 7:14)* என்று தாவீதின் குமாரனுக்கு வாக்குப்பண்ணினார். இந்த வாக்குத்தத்தம், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு சொல்லப்பட்டிருக்கிறது என்று, அப்போஸ்தலர்கள் சாட்சியாய் அறிவித்தார்கள்.

"எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா?" *(எபி 1:5)*.

கர்த்தர் தாவீதின் குமாரனுடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தைக் குறித்து வாக்குத்தத்தமாய்ச் சொல்லும்போது, "அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" *(2சாமு 7:13; 1நாளா 17:18)* என்றும், "உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" *(2சாமு 7:16; 1நாளா 17:14)* என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் மாத்திரமே பொருந்தும். தாவீதின் குடும்பத்தார் இஸ்ரவேல் தேசத்தை இப்போது ஆளுகை செய்யவில்லை. தாவீதின் ராஜ்யம் எப்போதோ முடிந்துபோயிற்று. இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் மாத்திரமே, இன்றும் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் மாத்திரமே, என்றும் நிலைத்திருக்கும்.

கர்த்தர் தாவீதைக் குறித்து தம்முடைய வார்த்தைகளை நாத்தானுக்கு வெளிப்படுத்துகிறார். நாத்தான் இந்த எல்லா வார்த்தைகளின்படியும், இந்த எல்லாத் தரிசனத்தின்படியும், தாவீதுக்குச் சொல்லுகிறான் *(2சாமு 7:17; 1நாளா 17:15)*.

நாத்தான் ஆரம்பத்திலே தாவீதை நோக்கி "நீர் போய் உம்முடைய இருதயத்திலுள்ளபடியெல்லாம் செய்யும்" என்று சொன்னான். ஆனால் இப்போது, தான் தாவீதுக்கு ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளுக்கு, முரணாகச் சொல்லுகிறான். நாத்தான் முதலில் சொன்னது அவனுடைய சொந்த வார்த்தை. நாத்தான் இப்போது சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை.

தமக்கு ஆலயம் கட்ட கர்த்தர் தாவீதுக்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனாலும் கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய சந்ததிக்கும் தம்முடைய கிருபைகளையும், வாக்குத்தத்தங்களையும் வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ஏற்ற காலத்தில் நிறைவேறும்.

தாவீதின் ஜெபம்
1நாளா 17:16-27

1நாளா 17:16. அப்பொழுது தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து: தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?

1நாளா 17:17. தேவனே, இது இன்னும் உம்முடைய பார்வைக்கு கொஞ்சக்காரியமாயிருக்கிறது என்று தேவனான கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானுடைய வீட்டைக்குறித்து வெகுதூரமாயிருக்கும் காலத்துச் செய்தியையும் சொல்லி, என்னை மகா மேன்மையான சந்ததியின் மனுஷனாகப் பார்த்தீர்.

1நாளா 17:18. உமது அடியானுக்கு உண்டாகும் கனத்தைப்பற்றி, தாவீது அப்புறம் உம்மோடே சொல்வது என்ன? தேவரீர் உமது அடியானை அறிவீர்.

1நாளா 17:19. கர்த்தாவே, உமது அடியானின் நிமித்தமும், உமது இருதயத்தின்படியும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் அறியப்பண்ணும்படிக்கு, இந்தப் பெரிய காரியத்தையெல்லாம் செய்தீர்.

1நாளா 17:20. கர்த்தாவே, நாங்கள் எங்கள் காதுகளால் கேட்ட எல்லாவற்றின்படியும் தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தேவனும் இல்லை.

1நாளா 17:21. உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்தில் இந்த ஒரே ஜாதியை தேவனாகிய நீர் உமக்கு ஜனமாக மீட்கும்படி, பயங்கரமான பெரிய காரியங்களினால் உமக்குக் கீர்த்தியை உண்டாக்கி, நீர் எகிப்திற்கு நீங்கலாக்கி மீட்ட உமது ஜனத்திற்கு முன்பாக ஜாதிகளைத் துரத்தி,

1நாளா 17:22. உமது ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உமது ஜனமாயிருப்பதற்கு அவர்களை நிலைப்படுத்தி, கர்த்தராகிய நீர் தாமே அவர்களுக்கு தேவனானீர்.

1நாளா 17:23. இப்போதும் கர்த்தாவே, தேவரீர் அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தை என்றென்றைக்கும் நிலைவரப்பட்டிருப்பதாக; தேவரீர் சொன்னபடியே செய்தருளும்.

1நாளா 17:24. ஆம், அது நிலைவரப்பட்டிருக்கவும், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலுக்கு தேவன் என்றும், உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாகத் திடமானதென்றும் சொல்லப்படுவதினால், உமது நாமம் என்றைக்கும் மகிமைப்படவும்கடவது.

1நாளா 17:25. உனக்கு வீடு கட்டுவேன் என்று என் தேவனாகிய நீர் உமது அடியான் செவி கேட்க வெளிப்படுத்தினீர்; ஆகையால் உமக்கு முன்பாக விண்ணப்பம்பண்ண, உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது.

1நாளா 17:26. இப்போதும் கர்த்தாவே, நீரே தேவன்; நீர் உமது அடியானைக்குறித்து இந்த நல்ல விசேஷத்தைச் சொன்னீர்.

1நாளா 17:27. இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு, அதை ஆசீர்வதித்தருளினீர்; கர்த்தராகிய தேவரீர் அதை ஆசீர்வதித்தபடியினால், அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்றான்.

கர்த்தர் நாத்தான் மூலமாய் தம்முடைய செய்தியை தாவீதுக்கு அறிவிக்கிறார். கர்த்தர் சொல்லுகிற செய்தியையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் தாவீது நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்கிறார். கர்த்தருடைய கிருபைக்காக தாவீது அவருக்கு துதிகளையும் ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்கிறார்.

தாவீது விசுவாசத்தோடு கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் பெற்றுக் கொள்கிறார். அவர் வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு, தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்திலே முன்னேறிச் செல்லுகிறார்.

“இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவவாசத்தோடே மரித்தார்கள்” (எபி 11:13).

தாவீது கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடும், பயபக்தியோடும் ஜெபம்பண்ணுகிறார். தாவீதின் ஜெபம் 2சாமு 7-ஆவது அதிகாரத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. இவ்விரண்டு வசனப்பகுதியிலும் ஒரு சில மாற்றங்களே காணப்படுகிறது. மற்ற வார்த்தைகள் எல்லாமே ஒன்றுபோலிருக்கிறது.

சாமுவேல் தீர்க்கதரிசி தாவீது ஏறெடுத்த ஜெபத்தைப்பற்றி சொல்லும்போது, “உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்” (2சாமு 7:21) என்று ஜெபித்ததாக சொல்லுகிறார்.

நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியரோ, தாவீதின் ஜெபத்தைப்பற்றிச் சொல்லும்போது, “கர்த்தாவே, உமது அடியானின் நிமித்தமும், உமது இருதயத்தின்படியும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் அறியப்பண்ணும்படிக்கு, இந்தப் பெரிய காரியத்தையெல்லாம் செய்தீர்” (1நாளா 17:19) என்று ஜெபித்ததாக சொல்லுகிறார்.

“உம்முடைய வாக்குத்தத்தம்” என்னும் வாக்கியத்திற்கு “உம்முடைய வார்த்தை” என்ற பொருள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தேவனுடைய வார்த்தையாகவும் இருக்கிறார், அவர் தேவனுடைய தாசனாகவும் இருக்கிறார்.

“இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார்; அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே” (வெளி 19:13).

“இதோ, நான் ஆதரிக்கிற என் தாசன், நான் தெரிந்துகொண்டவரும், என் ஆத்துமாவுக்குப் பிரியமானவரும் இவரே; என் ஆவியை அவர்மேல் அமரப்பண்ணினேன்; அவர் புறஜாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார்” (ஏசா 42:1).

தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும், அவர் நிமித்தமாகவும், அவரை விசுவாசிக்கிற நமக்கு வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள்ளே ஆம் என்றும், ஆமென் என்றும் இருக்கிறது. நன்மையான எல்லா ஈவுகளும் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நமக்கு உண்டாகிறது.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறபோது, “சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் தேவனானவர்” (2சாமு 7:27) என்று சாமுவேலும், “இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலுக்கு தேவன்” (1நாளா 17:24) என்று நாளாகமம் புஸ்தகத்தின் ஆசிரியரும் சொல்லுகிறார்கள்.

புறஜாதி ஜனத்தார் மத்தியிலே தேவர்கள் இருக்கிறார்கள். அசீரியருக்கும், எகிப்தியருக்கும் விக்கிரக தெய்வங்கள் உண்டு. ஆமாத்தும், அர்பாத்தும் விக்கிரகங்களின் தேவர்கள். இந்த விக்கிரகங்கள் தேவர்கள் என்று அழைக்கப்பட்டாலும், இவற்றிற்கு ஜீவனில்லை. இவைகள் பெயரளவில் தெய்வங்கள் என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரோ இஸ்ரவேலுக்கு தேவனாகவும், அவர் இஸ்ரவேலின்மேல் தேவனாகவும் இருக்கிறார். சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலை பாதுகாக்கிறார். அவர்களை பராமரிக்கிறார். அவர்களுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுத்து அவர்களை ஆதரிக்கிறார்.

தாவீது தன்னுடைய ஜெபத்தின் முடிவிலே, "இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக" *(2சாமு 7:29)* என்று ஜெபித்து முடித்ததாக சாமுவேல் சொல்லுகிறார்.

இதே வாக்கியம் நாளாகமம் புஸ்தகத்தில், "இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படிக்கு, அதை ஆசீர்வதித்தருளினீர்; கர்த்தராகிய தேவரீர் அதை ஆசீர்வதித்தபடியினால், அது என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்" *(1நாளா 17:27)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதின் வீட்டை கர்த்தர் ஆசீர்வதிக்கும்போது, அந்த வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். இது தாவீதின் பரிசுத்தமான வாஞ்சையும், அவருடைய விசுவாசமும் ஆகும்.

கர்த்தர் தாவீதுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தை சொன்னபோது, "அவனை என் ஆலயத்திலும் என் ராஜ்யத்திலும் என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன், அவனுடைய ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" *(1நாளா 17:14)* என்றும் சொன்னார்.

தாவீது தன்னுடைய ஜெபத்தின் முடிவிலே, கர்த்தர் தனக்கு சொன்ன வாக்குத்தத்தமான வார்த்தைகளை சொல்லி, தன்னுடைய ஜெபத்தை நிறைவு செய்கிறார். கர்த்தருடைய வார்த்தைகளும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நித்தியமானது. நாமும் நித்தியத்திற்கு ஏதுவான காரியங்கள்மீது வாஞ்சையாயிருக்கவேண்டும்.

நாத்தான் கர்த்தருடைய வார்த்தைகளை தாவீதுக்கு சொன்னபோது, தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டு வந்ததற்கு நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்?" *(2சாமு 7:18; 1நாளா 17:16)* என்று கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக உட்பிரவேசிக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டி ஆசரிப்புக்கூடாரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது தேவனுடைய பிரசன்னத்திற்கு அடையாளம். தாவீது, ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக உட்பிரவேசிக்கிறார்.

தாவீது ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து, "கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமர்ந்து" என்று மூலபாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறவர்கள், முழங்கால் படியிட்டோ அல்லது, நின்றுகொண்டோ ஜெபம்பண்ணுவது வழக்கம். தாவீது "கர்த்தருடைய சமுகத்திலிருந்து" *(2சாமு 7:18; 1நாளா 17:16)* என்று இந்த வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது கர்த்தருக்கு முன்பாக அமர்ந்திருந்தாரா அல்லது நின்றுகொண்டு ஜெபம்பண்ணினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தாவீது தன்னுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் ஏறெடுப்பதற்கு முன்பாக, அவர் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக அமைதியாக காத்திருக்கிறார். கர்த்தருடைய மகிமையைப்பற்றியும், அவருடைய மகத்துவங்களைப்பற்றியும் அமைதியாக தியானிக்கிறார். தாவீது கர்த்தரைப்பற்றி இவ்வாறு ஜெபம்பண்ணுவது வழக்கம். அவர் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசித்து கர்த்தருடைய சமுகத்திலே நீண்ட நேரம் ஜெபம்பண்ணுவது வழக்கமாயிருக்கிறது.

தாவீதின் இருதயத்தில், கர்த்தர்மீது பயமும் பக்தியும் நிரம்பியிருக்கிறது. அவர் கர்த்தர்மீது பிரியமாயிருக்கிறார். தாவீது கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். தாவீது தன்னுடைய ஜெபத்தை ஆரம்பிக்கும்போதே, "நான் எம்மாத்திரம், என் வீடும் எம்மாத்திரம்" என்று பணிவோடு சொல்லுகிறார்.

தாவீதின் இருதயத்தில் மனத்தாழ்மையிருக்கிறது. தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னையும் தாழ்த்துகிறார், தன்னுடைய குடும்பத்தையும் தாழ்த்துகிறார். கர்த்தர் தாவீதுக்கும், அவருடைய குடும்பத்திற்கும் நன்மையான வாக்குத்தத்தங்களைச் சொல்லியிருக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களையெல்லாம் பெற்றுக்கொள்வதற்கு, தானும், தன்னுடைய வீடும் எம்மாத்திரம் என்று, தாவீது கர்த்தருக்கு முன்பாக மிகவும் பணிவோடு கேட்கிறார்.

இஸ்ரவேல் தேசத்திலே தாவீது உயர்ந்தவராகவும், உத்தமராகவும் இருக்கிறார். அவர் ஒரு பராக்கிரமசாலி. தாவீது நல்ல யுத்தவீரர். தேசத்திலே மிகவும் பிரயோஜனமான நபர்களில் தாவீதும் ஒருவர். தாவீதின் சரீரமும், அவருடைய மனதும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது. தாவீது இஸ்ரவேலிலுள்ள சாதாரண மனுஷரைப்போல் இல்லாமல், அவர் எல்லா விஷயங்களிலும் உயர்ந்தவராகவும், மேலானவராகவும் இருக்கிறார்.

ஆனாலும் தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து, "கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நான் எம்மாத்திரம்?" *(2சாமு 7:18; 1நாளா 17:16)* என்று கேட்கிறார். கர்த்தர் தன்னை நினைத்துப் பார்ப்பதற்கு, தான் அபாத்திரனாயிருப்பதாக, தாவீது மிகுந்த மனத்தாழ்மையோடு அறிக்கை பண்ணுகிறார்.

தாவீதின் குடும்பத்தாரும் இஸ்ரவேல் தேசத்திலே விசேஷமானவர்களாயிருக்கிறார்கள். ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாவீதோடு சம்பந்தம் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் தாவீது, கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தும்போது, தன்னுடைய வீட்டையும் தாழ்த்துகிறார். "என் வீடும் எம்மாத்திரம்" என்று தாவீது கர்த்தருக்கு முன்பாக பணிவோடு சொல்லுகிறார்.

தாவீதின் குடும்பத்தார் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இந்தக் கோத்திரத்திலிருந்து பிரபுக்களும், ராஜாக்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் தாவீதோ தன்னுடைய குடும்பத்தாரைப்பற்றி மிகவும் தாழ்மையாய் நினைக்கிறார். கிதியோன் தன்னைப்பற்றியும், தன் குடும்பத்தைப்பற்றியும் மிகுந்த மனத்தாழ்மையோடு சொன்னார்.

"அதற்கு கிதியோன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" *(நியா 6:15)*.

கிதியோனைப்போலவே, தாவீதும் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். விசுவாசிகள் தங்களை கர்த்தருடைய சமுகத்திலே உயர்த்தக்கூடாது. நம்மிடத்தில் சுயபெருமை காணப்படக்கூடாது. கர்த்தருக்கு முன்பாக நாம் வரும்போது, நம்மை வெறுமையாக்கி தாழ்த்தவேண்டும்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தினாலும், அவர் கர்த்தரை கனம்பண்ணுகிறார். கர்த்தரைக் குறித்து பயபக்தியான வார்த்தைகளைப் பேசுகிறார். கர்த்தர் தாவீதை இதுவரைக்கும் கொண்டு வந்திருக்கிறார். கர்த்தர் அவரை இதுவரைக்கும் கனப்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு இதுவரைக்கும் ராஜாசனத்தைக் கொடுத்திருக்கிறார்.

தாவீதின் சொந்த முயற்சியினாலோ, பலத்தினாலோ, பராக்கிரமத்தினாலோ, இந்த சிலாக்கியங்கள் அவருக்கு கிடைக்கவில்லை. இது கர்த்தருடைய கிருபை. கர்த்தருடைய உதவி நமக்கு கிடைக்கவில்லையென்றால், நாம் ஒன்றுமில்லை.

கர்த்தர் தாவீதுக்கு ஏற்கெனவே, அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் இன்னும் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவருக்கு ஏற்கெனவே அநேக நன்மைகளை செய்திருந்தாலும், அவையெல்லாம் கர்த்தருடைய பார்வையிலே ஒன்றும் இல்லாததுபோலிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் தாவீதுக்கு இன்னும் ஏராளமான நன்மைகளை செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி, "கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குச் கொஞ்சகாரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக் குறித்து, வெகுதூரமாயிருக்கும் காலத்துச்செய்தியை மனுஷர் முறைமையாய்ச் சொன்னீரே" *(2சாமு 7:19; 1நாளா 17:17)* என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் தாவீதுக்கு மனுஷர் முறைமையாய்ச் சொன்னார். தாவீது எதிர்பார்த்திராத காரியங்களையெல்லாம், வெகுதூரமாயிருக்கும் காலத்து செய்தியையெல்லாம், கர்த்தர் அவருக்கு சொன்னார். கர்த்தரே மனுஷனை சிருஷ்டித்தவர். கர்த்தர் மனுஷனுடைய பாவத்தை மன்னிப்பதற்காக, தம்முடைய சொந்த இரத்தத்தையே கிரயமாகச் செலுத்தி அவனை மீட்டுக்கொண்டார். கர்த்தர் தம்முடைய இரத்தத்தினால் மனுஷனை சுத்தப்படுத்தி, அவனை தமக்கு அருகாமையில் அழைத்துக்கொண்டார். கர்த்தர் மனுஷனோடு உடன்படிக்கை பண்ணினார்.

கர்த்தர் மனுஷனோடு ஐக்கியமாயிருக்கிறார். மனுஷரை சிருஷ்டித்த கர்த்தர், மனுஷருக்கு இவ்வளவு கிருபைகளைக் காண்பிப்பார் என்று, எந்த மனுஷனும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். கர்த்தர் மனுஷனை மீட்டுக்கொண்டது தேவனுடைய தெய்வீக அன்பின் வெளிப்பாடு.

கர்த்தர் மனுஷனோடு பிரியமாகவும், ஐக்கியமாகவும் இருப்பதுபோல, மனுஷன் மற்ற மனுஷரோடு பிரியமாகவும், ஐக்கியமாகவும் இருப்பதில்லை. மனுஷனுடைய வழிகள் வேறு. கர்த்தருடைய வழிகள் வேறு. கர்த்தருடைய வழிகள் எப்போதுமே, மனுஷருடைய வழிகளுக்கு மேலான வழியாகவும், உன்னதமான வழியாகவும் இருக்கிறது.

கர்த்தர் உயர்ந்தவராகவும், உன்னதமானவராகவும் இருந்தாலும், அவர் தாழ்வான மனுக்குலத்தை நினைத்துப் பார்க்கிறார். மனுஷரை நேசிக்கிறார். மனுஷனோ தன்னைவிட தாழ்வானவர்களை நினைத்துப் பார்க்கமாட்டான். தன்னைவிட மேலானவர்களை நினைத்துப் பார்ப்பான். அவர்களிடத்திலிருந்து தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்று எதிர்பார்ப்பான். இது மனுஷனுடைய சிந்தனை. கர்த்தரோ மனுஷன் சிந்திக்கிற பிரகாரமாக சிந்திப்பதில்லை. கர்த்தர் மனுஷர்மீது காண்பிக்கிற அன்பு, பிரதிபலன் எதிர்பாராத அன்பாகும்.

கர்த்தர் மனுஷனுக்கு அநேக நன்மைகளை செய்தாலும், அவர் மனுஷன்மீது அன்பாயிருந்தாலும், மனுஷன் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறான். கர்த்தருக்கு தீங்கு செய்கிறான். கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளுக்கு நன்றியில்லாதவனாயிருக்கிறான். மனுஷன் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யும்போது, அவன் தன் பாவத்திற்கு மனந்திரும்பி, தம்மோடுகூட ஒப்புரவாகவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

கர்த்தர் மனுஷன்மீது அன்பாகவே இருக்கிறார். அவனுக்கு தம்முடைய கிருபைகளை அதிகமாய் வெளிப்படுத்துகிறார். மனுஷனுடைய திரளான பாவங்களை மன்னிக்கிறார். கர்த்தர் இதில் எதையும் மனுஷர் முறையாய்ச் செய்யவில்லை. தம்முடைய தெய்வீக அன்பின் முறையாகவும், தம்முடைய கிருபையின் முறையாகவும் கர்த்தர் மனுஷனுக்கு நன்மை செய்கிறார்.

மனுஷன் கர்த்தருக்கு ஒரு நன்மையும் செய்ததில்லை. நாம் கர்த்தருக்கு ஒரு நன்மையும் செய்யாதிருந்தாலும், கர்த்தர் நமக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர் நமக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளே அதிகம். நாம் கர்த்தரிடத்திலிருந்து, இதற்குமேல் அதிகமான நன்மைகளை எதிர்பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்ப்பதற்கு நமக்கு ஒரு தகுதியுமில்லை.

கர்த்தர் இதுவரைக்கும் தனக்கு செய்த நன்மைகளை தாவீது நினைத்துப் பார்த்து, "இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர்" *(2சாமு 7:20; 1நாளா 17:18)* என்று கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய அடியான். கர்த்தர் தாவீதை அறிந்திருக்கிறார். தாவீதுக்கு எது நன்மையானது என்றும், எது அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்றும் கர்த்தர் அறிந்திருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் தாவீதுக்கு போதுமான அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நமக்கு கிறிஸ்துவை வாக்குப்பண்ணியிருக்கிறார். கிறிஸ்துவைப்பற்றிய வாக்குத்தத்தத்தில், நமக்கு தேவையான எல்லா ஆசீர்வாதங்களும் இடம் பெற்றிருக்கிறது. கர்த்தர் நம்மை அறிந்திருக்கிறார். நமக்கு என்ன தேவை என்பதையும் அறிந்திருக்கிறார். நமக்குத் தேவையானது எல்லாவற்றையும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் நமக்கு கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

ஆகையினால் நாம் கர்த்தரிடத்தில் இனிமேல் வேண்டிக்கொள்வதற்கோ அல்லது விண்ணப்பம்பண்ணுவதற்கோ ஒன்றுமே இல்லை. கர்த்தர் நமக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்களைவிட, நாம் கர்த்தரிடத்தில் கேட்பதற்கு பெரிய காரியங்கள் வேறு ஒன்றுமில்லை. நாம் நினைப்பதற்கும், நாம் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக, கர்த்தர் நமக்கு கொடுக்கிறார்.

கர்த்தருடைய கிருபை பெரியது. கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்கு இலவசமாகக் கொடுக்கிறார். கர்த்தர் நமக்கு காண்பிக்கும் தயவுக்கு ஈடாக, நம்மால் கர்த்தருக்கு ஒன்றையும் செலுத்த முடியாது. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே, தன்னை இதுவரையிலுக்கும் கொண்டு வந்திருக்கிறார் என்றும், தனக்கு இவ்வளவு பெரிதான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாய்ச் சொல்லியிருக்கிறார் என்றும் தாவீது கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் "உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர்" *(2சாமு 7:21; 1நாளா 17:19)* என்று பயபக்தியோடு சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளுக்காகவும், கர்த்தர் தனக்கு காண்பித்த மகாபெரிய காரியங்களுக்காகவும், தாவீது கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

தாவீது கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் நினைத்து அவரை நன்றியோடு துதிக்கிறார். "ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது; நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்கு நிகரானவர் இல்லை; உம்மைத்தவிர வேறே தேவனும் இல்லை" *(2சாமு 7:22; 1நாளா 17:20)* என்று சொல்லி தாவீது பயபக்தியோடு கர்த்தரைத் துதிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் தாவீதை உயர்த்தியிருக்கிறார். அவர் தாவீதுக்கு இஸ்ரவேல் தேசத்திலே கனத்தையும், மகிமையையும் கட்டளையிட்டிருக்கிறார். தாவீது இஸ்ரவேல் தேசத்தில் உயர்ந்தவராகயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாவீதைவிட உயர்ந்தவராயிருக்கிறார்.

கர்த்தர் தாவீதை தம்முடைய சமுகத்திற்கு அருகாமையில் அழைத்து வருகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திலே எவ்வளவு நெருக்கமாகப் போகிறாரோ, அவ்வளவு அதிகமாக கர்த்தருடைய மகிமையைக் காண்கிறார். தாவீதைப்போலவே நாமும், கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திற்குள் வரும்போது, அவருடைய மகிமையையும், மகத்துவத்தையும் அதிகமாய் தரிசித்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

தாவீதைப்போலவே நாமும், கர்த்தரைப் பார்த்து, "தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர்" என்று நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து, பயபக்தியோடு சொல்லவேண்டும். தேவரீருக்கு நிகரானவர் வானத்திலும் பூமியிலும் ஒருவருமில்லை. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தவிர வேறு தேவனுமில்லை.

தாவீது தேவனுடைய இஸ்ரவேல் ஜனத்தைப்பற்றி மிகவும் உயர்வாக பேசுகிறார். "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும் தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே; தேவரீர் எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டுவந்த உம்முடைய ஜனத்திற்குமுன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தி, உம்முடைய தேசத்திற்கும், அதிலிருந்த ஜாதிகளுக்கும், அவர்கள் தேவர்களுக்கும், உமது மகிமையை விளங்கச்செய்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர்தாமே அவர்களுக்குத் தேவனானீர்" *(2சாமு 7:23,24; 1நாளா 17:21,22)* என்று தாவீது இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவரீருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. அவரை தவிர வேறே தெய்வமில்லை என்று தாவீது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி உயர்வாகச் சொன்னார். இப்போதோ இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றியும் தாவீது உயர்வாகச் சொல்லுகிறார். "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ" என்று தாவீது கேட்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்காக அநேக நன்மைகளை செய்திருக்கிறார். கர்த்தர் அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். கர்த்தர் அவர்களுக்காக பயங்கரமான பெரிய காரியங்களை செய்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே தம்முடைய மகிமையை விளங்கப்பண்ணினார்.

கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டுக்கொண்டது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய ஆத்துமாக்களை மீட்டுக்கொள்வதற்கு அடையாளமாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை அந்நிய ஜாதிகளிலிருந்தும், அவர்களுடைய தேவர்களிலிருந்தும் மீட்டுக்கொண்டார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நம்மை, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பிரபஞ்சத்தின் மாயைகளிலிருந்தும், மாம்சப்பிரகாரமான பாவக்கிரியைகளிலிருந்தும் மீட்டுக் கொண்டார். பாவிகளை இரட்சிப்பதற்காகவே கிறிஸ்து இயேசு இந்த உலகத்திற்கு வந்தார்.

இஸ்ரவேலர் என்றென்றைக்கும் தம்முடைய ஜனமாயிருக்கவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜாதியாயிருக்கவேண்டும் என்பதற்காகவும் கர்த்தர் அவர்களை மீட்டுக்கொண்டார். கர்த்தர் அவர்களை தமக்காக பரிசுத்தப்படுத்தி, தமக்காக திடப்படுத்திக்கொண்டார். கர்த்தர் தம்முடைய மகிமையை அவர்களுக்கு விளங்கச் செய்யவேண்டும் என்பதற்காகவும், அவர்களுக்கு முன்பாக பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தினார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அவர்களும் கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இஸ்ரவேலர் என்றென்றைக்கும் கர்த்தருடைய ஜனமாயிருக்கவேண்டும். கர்த்தர் என்றென்றைக்கும் அவர்களுடைய தேவனாயிருக்கவேண்டும். இதுவே இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சம்.

கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை திடப்படுத்தினார். தம்முடைய உடன்படிக்கையை அவர்களுக்கு உறுதிபண்ணினார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தாமே அவர்களுக்கு தேவனாயிருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணும்போது, தன்னுடைய பணிவான விண்ணப்பங்களினால் இந்த ஜெபத்தை நிறைவு செய்கிறார். கர்த்தர் தாவீதுக்கு நாத்தான் மூலமாக தம்முடைய வார்த்தைகளை அனுப்பினார். ஆகையினால் தாவீதுக்கு கர்த்தருடைய சமுகத்திலே, இந்த விண்ணப்பங்களை ஏறெடுக்கவேண்டும் என்னும் மனத்தைரியமுண்டாயிற்று.

"உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர்; ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது" *(2சாமு 7:27; 1நாளா 17:25)* என்று தாவீது கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

தாவீது தன்னுடைய ஜெபத்திலே, கர்த்தரிடத்தில் கேட்பது அதிகமாயிருக்கிறது. தாவீது பெரிய காரியங்களை கர்த்தரிடத்தில் கேட்கிறார். கர்த்தருடைய வார்த்தைகளும், வாக்குத்தத்தங்களும் தாவீதுக்கு சொல்லப்பட்டிருப்பதினால், தாவீது தன்னுடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் கர்த்தரிடத்தில் மனத்தைரியத்தோடு கேட்கிறார். தாவீது கர்த்தரிடத்தில் கேட்பது பெரிய காரியமாகயிருந்தாலும், அவையெல்லாம் கர்த்தருக்கு சாதாரண காரியங்களாகவும், அற்புதகாரியங்களாகவும் இருக்கிறது. தாவீது கர்த்தரிடத்தில் இந்தக் காரியங்களை கேட்பதற்கு முன்பாகவே, கர்த்தர் தாவீதுக்கு இதைவிட பெரிய காரியங்களை வாக்குத்தத்தமாய்ச் சொல்லியிருக்கிறார்.

வாக்குத்தத்தம் பண்ணின கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் வாக்குமாறாதவர். தாவீது கர்த்தரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தர் தாம் சொன்னதை செய்வார் என்று தாவீது நம்புகிறார். "இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்" *(2சாமு 7:25; 1நாளா 17:23)* என்று தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகளும், அவருடைய கிரியைகளும் ஒன்றாயிருக்கும். கர்த்தரிடத்தில் முரண்பாடுகள் காணப்படாது. கர்த்தர் எதைச் சொல்லுகிறாரோ அதை நிச்சயமாய்ச் செய்வார். அவர் எதைச் செய்வாரோ அதை மாத்திரமே சொல்லுவார். மனமாறுவதற்கோ, பொய்சொல்லுவதற்கோ கர்த்தர் ஒரு மனுஷனல்ல. மனுஷன் ஒன்றைச் சொல்லுவான் அதன் பின்பு அவன் மனம்மாறி, வேறொன்றை செய்வான். கர்த்தரிடத்தில் இப்படிப்பட்ட மாறுபாடுகள் இருக்காது என்று தாவீது நம்புகிறார்.

கர்த்தருடைய வாக்குத்தத்தம் தன்னுடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டுமென்று, தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். தாவீது கர்த்தரிடத்தில் அதிகமாக ஆசைப்படவில்லை. அதே வேளையில் அவர் கர்த்தரிடத்தில் குறைவாகவும் எதிர்பார்க்கவில்லை. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தை நிறைவேறவேண்டும் என்று தாவீது விண்ணப்பம்பண்ணுகிறார்.

"இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும்" *(2சாமு 7:25; 1நாளா 17:23)* என்பதே தாவீது கர்த்தரிடத்தில் ஏறெடுக்கும் விண்ணப்பமாயிருக்கிறது.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய நாமம் என்றென்றும் மகிமைப்படுவதாக என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருக்கு மகிமை உண்டாகவேண்டும். தன்னுடைய நாமத்திற்கு மகிமை ஏற்பட்டாலும், மகிமை ஏற்படாவிட்டாலும், கர்த்தருடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படவேண்டும் என்று, தாவீது கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார்.

தாவீது தன்னுடைய வீட்டுக்காக ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதின் வீட்டைக் குறித்து ஏற்கெனவே தம்முடைய வார்த்தைகளை சொல்லியிருக்கிறார். கர்த்தர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறவேண்டும் என்று தாவீது ஜெபிக்கிறார்.

"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக" *(2சாமு 7:29; 1நாளா 17:27)* என்று தாவீது கர்த்தரிடத்தில் தன்னுடைய வீட்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபம்பண்ணுகிறார். "உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக" *(2சாமு 7:26; 1நாளா 17:24)* என்பதே தாவீதின் ஜெபமாயிருக்கிறது.

தாவீது கர்த்தருடைய சமுகத்தில் தனக்காகவும், தன்னுடைய வீட்டிற்காகவும் ஜெபம்பண்ணும்போது, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை கனம்பண்ணுகிறார்.

"இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரே தேவன்; உம்முடைய வார்த்தைகள் சத்தியம்; தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம்பண்ணினீர்" *(2சாமு 7:28; 1நாளா 17:26)* என்று தாவீது கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் கனம்பண்ணுகிறார்.

தாவீது தன்னுடைய வீட்டைக்குறித்து ஏறெடுகிற ஜெபம், தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில், பரிபூரணமாக நிறைவேறுகிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும் நிலைத்திருக்கிறது. கிறிஸ்துவானவர் என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார். கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமானது. அது பரிபூரணமானது.

"இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, இனித் தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார்" *(எபி 10:12,13)*.

18 அதிகாரம்

நாம் முதலாவதாக தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். அப்போது நம்முடைய தேவனாகிய கர்த்தர், நாம் தேடுவதோடு, அநேக ஆசீர்வாதங்களையும் சேர்த்துக்கொடுப்பார். தாவீதின் ராஜ்யபாரத்தின்போது, அவருக்கு இஸ்ரவேல் தேசத்திலும் ஆசீர்வாதமுண்டாயிற்று. மற்ற தேசங்களிலிருந்தும் அவருக்கு ஆசீர்வாதம் வந்தது.

தாவீது பெலிஸ்தரையும், மோவாபியரையும், சோபாவின் ராஜாவையும், சீரியரையும் முறியடிக்கிறார் (1நாளா 18:1-8). ஆமாத்தின் ராஜாவும், ஏதோமியரும் தாவீதுக்கு கப்பம் கட்டுகிறார்கள் (1நாளா 18:9-13).

தாவீதினுடைய ராஜ்யபாரத்தின்போது இஸ்ரவேல் தேசமும் செழித்திருக்கிறது (1நாளா 18:14-17). நாளாகமம் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற இந்த சம்பவங்கள், 2சாமு 8-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது தேவனுடைய ராஜ்யத்தை முதலாவதாக தேடுகிறார். தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்து, அதிலே தன் வீட்டாரோடு தங்கியிருக்கிறார். அவர் தேவனுடைய பெட்டியையும் தாவீதின் கோட்டைக்கு கொண்டு வருகிறார்.

இதற்கு பின்பு, தாவீது இஸ்ரவேலுக்கு சத்துருக்களாயிருக்கிறவர்களோடு யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதுக்கு யுத்தங்களிலே ஜெயத்தைக் கொடுக்கிறார்.

தாவீதுக்கு அநேகர் வெகுமதிகளைக் கொண்டுவருகிறார்கள். தாவீது யுத்தம்பண்ணின தேசங்களிலிருந்து கொள்ளைப்பொருட்களை கொண்டு வருகிறார். தாவீது அவற்றை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்.

தாவீதின் ஆளுகையும் ஆசீர்வாதமாயிருக்கிறது. தாவீது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் நீதியும் நியாயமும் செய்து வருகிறார். தாவீதுக்கு இராணுவ தலைவர்களும், மந்திரிகளும், ஆசாரியர்களும், சம்பிரதிகளும், பிரதானிகளும் இருக்கிறார்கள். தாவீது வர வர விருத்தியடைகிறார். தாவீதின் ராஜாசனமும் உறுதியாயிருக்கிறது.

தாவீது முறியடித்த ஜாதியார் 1நாளா 18:1-8

1நாளா 18:1. இதற்குப்பின்பு, தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, காத்பட்டணத்தையும் அதின் கிராமங்களையும் பெலிஸ்தரின் கையிலிருந்து பிடித்துக்கொண்டான்.

1நாளா 18:2. அவன் மோவாபியரையும் முறிய அடித்ததினால், மோவாபியர் தாவீதைச் சேவித்து அவனுக்குக் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்.

1நாளா 18:3. சோபாவின் ராஜாவாகிய ஆதாரேசர் ஐபிராத் நதியண்டையில் தன் இராணுவத்தை நிறுத்தப்போகிறபோது, தாவீது அவனையும் ஆமாத்தின் கிட்டே முறிய அடித்தான்.

1நாளா 18:4. அவனுக்கு இருந்த ஆயிரம் இரதங்களையும் ஏழாயிரம் குதிரைவீரரையும் இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்களை வைத்துக் கொண்டு, மற்றவைகளையெல்லாம் துண்டாடிப்போட்டான்.

1நாளா 18:5. சோபாவின் ராஜாவாகிய ஆதாரேசருக்கு உதவிசெய்யத் தமஸ்குபட்டணத்தாராகிய சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டிப்போட்டு,

1நாளா 18:6. தமஸ்குவுக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தான்; சீரியர் தாவீதைச் சேவித்து அவனுக்குக் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்; தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

1நாளா 18:7. ஆதாரேசரின் சேவகருக்கு இருந்த பொன் பரிசைகளைத் தாவீது எடுத்து, அவைகளை எருசலேமுக்குக் கொண்டுவந்தான்.

1நாளா 18:8. ஆதாரேசரின் பட்டணங்களாகிய திப்காத்திலும் கூனிலுமிருந்து தாவீது வெகு திரளான வெண்கலத்தையும் எடுத்துக்கொண்டுவந்தான்; அதினாலே சாலொமோன் வெண்கலக் கடல்தொட்டியையும் தூண்களையும் வெண்கலத் தட்டுமுட்டுகளையும் உண்டாக்கினான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கானான் தேசத்தை முழுவதுமாக சுதந்தரித்துக்கொள்ளவில்லை. கானான் தேசத்திலே இஸ்ரவேலரோடு புறஜாதி ஜனங்களும் குடியிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். சத்துருக்கள் இஸ்ரவேலரை, அவர்களுடைய பட்டணங்களிலிருந்து துரத்திவிட்டு, அங்கே குடியிருக்கிறார்கள்.

கர்த்தருடைய வாக்குத்தத்தின் பிரகாரம், கானான் தேசம் முழுவதும் இஸ்ரவேலருக்கு சுதந்தரவீதமாயிருக்க வேண்டும். இஸ்ரவேலுக்கு விரோதமாக சத்துருக்களாயிருக்கிறவர்கள்மீது தாவீது யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களிடம் இழந்துபோன பட்டணங்களையும், உரிமைகளையும் தாவீது திரும்ப மீட்டுக்கொள்கிறார்.

தாவீது, தேவனுடைய பெட்டியை, அதற்காக போட்ட கூடாரத்திலே வைக்கிறார். கர்த்தரை ஆராதிப்பதற்கு ஆசாரியர்களையும், லேவியரையும் நியமிக்கிறார். தாவீது கர்த்தரை துதித்துப் பாடும் துதியின் கீதங்களை இயற்றுகிறார். அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிய பின்பு, கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற கடமைகளை ஒவ்வொன்றாய் நிறைவேற்றுகிறார். தாவீதின் கிரியைகளில் வேகமும், விவேகமும், தைரியமும், பெலமும் இருக்கிறது.

பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு எப்போதுமே சத்துருக்களாயிருக்கிறார்கள். தாவீது பெலிஸ்தரைக் கீழ்ப்படுத்துகிறார். தாவீது முறியடித்த ஜாதியாரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு:

1. பெலிஸ்தர் (1நாளா 18:1)
2. மோவாபியர் (1நாளா 18:2,11)
3. சோபா புத்திரர் (1நாளா 18:3)
4. சீரியர் (1நாளா 18:5-6)
5. ஏதோமியர் (1நாளா 18:11-12)
6. அம்மோன் புத்திரர் (1நாளா 18:11-12)
7. அமலேக்கியர் (1நாளா 18:11).

தாவீது பெலிஸ்தரை முறிடியத்து அவர்களைக் கீழ்ப்படுத்துகிறார். உலகப்பிரகாரமான காரியங்கள் இதுபோலவே நிலையற்றதாகயிருக்கும். ஒரு காலத்தில் ஐசுவரிய செழிப்போடும், வல்லமையோடும் இருந்தவர்கள், பின்பு ஐசுவரியமில்லாமல், பெலனற்றுப் போகிறார்கள். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் தங்களிடத்தில் நிரந்தரமாக தங்கியிருக்கும் என்று நினைக்கிறவர்கள், பெலிஸ்தரைப்போல ஏமாந்துபோவார்கள்.

தாவீது முதலாவதாக பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார். தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொள்கிறார் (2சாமு 8:1; 1நாளா 18:1). பெலிஸ்தர் நீண்டகாலமாக இஸ்ரவேலை ஒடுக்கினார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை நெருக்கினார்கள்.

சவுலின் காலத்தில், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள். ஒரு சில யுத்தங்களில் சவுலுக்கு பெலிஸ்தர்மீது வெற்றி கிடைத்தது. பின்பு இஸ்ரவேல் ஜனத்தார் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, சவுலும் அவருடைய மூன்று குமாரரும் யுத்தக்களத்திலே செத்துப்போனார்கள்.

நியாயாதிபதிகளின் காலத்தில் சிம்சோன் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆரம்பித்தார். அப்போது கர்த்தர், "நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்" *(நியா 13:5).*

பெலிஸ்தருக்கு விரோதமாக, பல வருஷங்களுக்கு முன்பு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டாலும், தாவீதின் காலத்தில்தான் பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தம் முடிவு பெறுகிறது. தாவீது பெலிஸ்தரை முறியடித்து அவர்களை கீழ்ப்படுத்துகிறார். இஸ்ரவேலை பெலிஸ்தரின் கையிலிருந்து முற்றிலுமாய் இரட்சிக்கிறார்.

மேத்தேக் அம்மா பெலிஸ்தரின் பிரதான பட்டணம். இது அவர்களுக்கு ராஜதானி பட்டணமாயிருக்கிறது. பெலிஸ்தர்கள் மேத்தேக் அம்மாவிலே தங்களுடைய சேனையோடு பாளயமிறங்குவார்கள். இது காத் தேசத்திலுள்ளது. "யோவாபும் அபிசாயும் சூரியன் அஸ்தமிக்குமட்டும் அப்னேரைப் பின்தொடர்ந்தார்கள்; கிபியோன் வனாந்தரவழிக்கு அருகான கீயாவுக்கு எதிரே இருக்கிற அம்மா மேடுமட்டும் வந்தார்கள்" *(2சாமு 2:24).*

அம்மா மேடு என்பது மேத்தேக் அம்மாவைக் குறிக்கிறது. மேத்தேக் என்னும் பெயருக்கு "கடிவாளம்" என்று பொருள். பெலிஸ்தரின் சேனை மேத்தேக் அம்மாவில் பாளயமிறங்கி, இஸ்ரவேல் ஜனத்தாரை கடிவாளம் போட்டு ஒடுக்குவது போல ஒடுக்கினார்கள். தாவீது மேத்தேக் அம்மாவைப் பிடித்துக்கொண்டார். அவர் பெலிஸ்தரை முறியடித்தார். பெலிஸ்தர் இதுவரையிலும் இஸ்ரவேலரைக் கீழ்ப்படுத்தினார்கள். இப்போது இஸ்ரவேலர் பெலிஸ்தரைக் கீழ்ப்படுத்துகிறார்கள். இதுவரையிலும் கடிவாளம் பெலிஸ்தரின் கையிலிருந்தது. இப்போது அந்தக் கடிவாளம் தாவீதின் கையிலும், இஸ்ரவேல் புத்திரர் கையிலும் இருக்கிறது.

தாவீது மோவாபியரையும் முறிய அடித்து, அவர்களைத் தரைமட்டும் பணியப்பண்ணினார். தாவீது அவர்கள்மேல் நூல்போட்டு, இரண்டுபங்கு மனுஷரைக் கொன்றுபோட்டு, ஒரு பங்கை உயிரோடே வைத்தார்; இவ்விதமாய் மோவாபியர் தாவீதைச் சேவித்து, அவருக்குக் கப்பங்கட்டுகிறவர்களானார்கள் *(2சாமு 8:2; 1நாளா 18:2).*

தாவீது மோவாபியரின் தேசத்தை மூன்று பங்காக பிரிக்கிறார். அந்த தேசத்தின் இரண்டு பங்கை அழித்துப்போடுகிறார். மீதமுள்ள ஒரு பங்கை அழித்துப்போடாமல் வைக்கிறார். மோவாபியரில் மூன்றில் ஒரு பங்கு மனுஷர் உயிரோடிருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தாருக்கு வேலையாட்களாயிருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நிலத்தை பயிரிடுகிறார்கள்.

பிலேயாம் மோவாபைக் குறித்து சொன்ன தீர்க்கதரிசனம் இங்கு நிறைவேறுகிறது. "அவரைக் காண்பேன், இப்பொழுது அல்ல; அவரைத் தரிசிப்பேன், சமீபமாய் அல்ல; ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்; அது மோவாபின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரர் எல்லாரையும் நிர்மூலமாக்கும்" *(எண் 24:17)*

ஆகாப் மரிக்கும் வரையிலும் மோவாபியர் இஸ்ரவேலுக்கு கப்பம் கட்டுகிறவர்களாயிருந்தார்கள். அதன் பின்பு மோவாபியர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரால் அவர்களை ஒடுக்க முடியவில்லை.

"மோவாபின் ராஜாவாகிய மேசா ஆடுமாடுகள் பெருத்தவனாயிருந்து, இஸ்ரவேலின் ராஜாவுக்கு இலட்சம் ஆட்டுக்குட்டிகளையும், இலட்சம் குறும்பாட்டுக்கடாக்களையும் செலுத்திவந்தான். ஆகாப் இறந்துபோனபின் மோவாபின் ராஜா இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினான்" (2இராஜா 3:4,5).

தாவீது சீரியரையும் முறியடிக்கிறார். இவர்கள் அராமியர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். சீரியர்கள் இரண்டு வெவ்வேறு ராஜ்யமாயிருக்கிறார்கள். 60-ஆவது சங்கீதத்தின் தலைப்பில் சீரியரைப்பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"(தாவீது மொசொபொத்தாமிய தேசத்துச் சீரியரோடும், சோபா தேசத்துச் சீரியரோடும் யுத்தம் பண்ணினபோது, யோவாப் திரும்பி உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரில் பன்னீராயிரம்பேரை வெட்டினபோது, அவன் சாட்சியை விளக்குவிக்கும் ஆறு நரம்புக் கின்னரத்திலே போதிப்பதற்காகப் பாடினதும் இராகத்தலைவனுக்கு ஒப்புவித்ததுமான மிக்தாம் என்னும் சங்கீதம்)" (சங் 60).

சீரியாவில் ஆப்னா, பர்பார் ஆகிய நதிகள் உள்ளன. தமஸ்கு சீரியாவின் தலைநகரம். சோபாவின் ராஜா சீரியாவோடு சேர்ந்துகொள்கிறான். ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜா ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திரும்பத் தன் வசமாக்கிக்கொள்ளப்போகிறான் (2சாமு 8:3). சீரியாவின் ராஜாவும் சோபாவின் ராஜாவும் வடக்கு சீமையிலிருக்கிறார்கள்.

தாவீது சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசரை முறியடிக்கிறார். ஆதாதேசர் ஐபிராத்து நதியண்டையில் இருக்கிற சீமையைத் திருப்பி தன் வசமாக்கிக் கொள்ள முயற்சி பண்ணுகிறான். கர்த்தர் அந்த சீமையை ஆபிரகாமின் சந்ததியாருக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார்.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி 15:18-21).

கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியாருக்கு கொடுத்த ஐபிராத்து தேசத்தை, சோபாவின் ராஜா தன்னுடைய வசமாக்கிக்கொள்ள முயற்சிபண்ணினான். இந்த தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கு சொந்தமானது. தாவீது சோபாவின் ராஜாவை முறியடித்தார்.

தாவீது சோபாவின் ராஜாவுக்கு இருந்த இராணுத்தில் ஆயிரத்து எழுநூறு குதிரைவீரரையும், இருபதினாயிரம் காலாட்களையும் பிடித்து, இரதங்களில் நூறு இரதங்களை வைத்துக்கொண்டு, மற்றவைகளையெல்லாம் துண்டாடிப்போட்டார் (2சாமு 8:4; 1நாளா 18:3).

சோபாவின் ராஜாவாகிய ஆதாதேசருக்கு உதவிசெய்ய தமஸ்குப்பட்டணத்தாராகிய சீரியர் வந்தார்கள்; தாவீது சீரியரில் இருபத்தீராயிரம்பேரை வெட்டிப்போட்டு, தமஸ்குக்கடுத்த சீரியாவிலே தாணையங்களை வைத்தார்; சீரியர் தாவீதைச் சேவித்து, அவருக்குக் கப்பங்கட்டினார்கள் (2சாமு 8:5,6; 1நாளா 18:4,5).

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார். கர்த்தர் தாவீதைப் பாதுகாத்துக்கொண்டார். தாவீது போன இடத்திலெல்லாம், கர்த்தர் அவரைக் காப்பாற்றினார்.

தாவீது வர வர விருத்தியடைந்தார். தாவீதின் ஐசுவரியம் அதிகரித்தது. தாவீது ஆதாதேசரின் சேவகருடைய பொற்பரிசைகளை எடுத்து, அவைகளை எருசலேமுக்குக் கொண்டுவந்தார் (2சாமு 8:7; 1நாளா 18:7).

ஆதாதேசரின் பட்டணங்களாகிய பேத்தாகிலும் பேரொத்தாயிலுமிருந்து தாவீது ராஜா மகா திரளான வெண்கலத்தையும் எ த்துக்கொண்டு வந்தார் (2சாமு 8:8; 1நாளா 18:8). ஆதாதேசரின் பட்டணங்களெல்லாம் ஆபிரகாமின் சந்ததிக்கு சொந்தமான சுதந்தரவீதம்.

"ஏழாயிரம் குதிரைவீரர்" என்று 1நாளா 18:4-ஆவது வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் 2சாமு 8:4 ஆவது வசனத்தில் 700 குதிரைவீரர் என்று கூறப்பட்டிருக்கிறது. எபிரெய மொழியில் 7 என்னும் எண்ணுக்கும், 700 என்னும் எண்ணுக்கும் குறியீட்டில் அதிக வித்தியாசம் இல்லை. வேதபண்டிதர்கள் 7,000 குதிரைவீரர் என்பதே சரியான எண்ணிக்கை என்று கூறுகிறார்கள். (2சாமு 8:4)

தாவீது திப்காத்திலும் கூனிலுமிருந்து வெகு திரளான வெண்கலத்தையும் எடுத்துக்கொண்டு வருகிறார் (1நாளா 18:8). தேவாலயத்தில் வெண்கலக் கடல் தொட்டியையும், மற்றும் அநேக வெண்கல வேலைகளைச் செய்வதற்குத் தேவையான வெண்கலத்தையும் சாலொமோன் இங்கிருந்து பெற்றுக் கொள்கிறார்.

தாவீதின் கொள்ளைப்பொருட்கள் 1நாளா 18:9-13

1நாளா 18:9. தாவீது சோபாவின் ராஜாவாகிய ஆதாரேசரின் இராணுவத்தையெல்லாம் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயூ கேட்டபோது,

1நாளா 18:10. அவன் தாவீது ராஜாவின் சுகசெய்தியை விசாரிக்கவும், அவன் ஆதாரேசரோடு யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்ததற்காக அவனுக்கு வினவுதல் சொல்லவும், தன் குமாரனாகிய அதோராமையும், பொன்னும் வெள்ளியும் வெண்கலுமான சகலவிதத் தட்டுமுட்டுகளையும், அவனிடத்துக்கு அனுப்பினான்; ஆதாரேசர் தோயூவின்மேல் யுத்தம்பண்ணுகிறவனாயிருந்தான்.

1நாளா 18:11. அந்தத் தட்டுமுட்டுகளையும், தான் ஏதோமியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதிகளின் கையிலும் வாங்கின வெள்ளியையும், பொன்னையும் கூடத் தாவீதுராஜா கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்டான்.

1நாளா 18:12. செருயாவின் குமாரன் அபிசாயி உப்புப் பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் ஏதோமியரை முறிய அடித்தான்.

1நாளா 18:13. ஆகையால் தாவீது ஏதோமிலே தாணையம் போட்டான்; ஏதோமியர் எல்லாரும் அவனைச் சேவிக்கிறவர்களானார்கள்; தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்.

தோயி என்பவன் ஆமாத்திற்கு ராஜாவாயிருக்கிறான். ஆதாத்தேசாருக்கும் தோயிக்கும் நீண்டகாலமாக பகையிருக்கிறது. ஆதாதேசார் தோயியின்மேல் எப்போதும் யுத்தம்பண்ணிக்கொண்டிருப்பான். இப்போது தாவீது ஆதாதேசாரை முறியடித்திருக்கிறார். தாவீது ஆதாதேசருடைய எல்லா இராணுவத்தையும் முறிய அடித்த செய்தியை ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ கேள்விப்படுகிறான் (2சாமு 8:9; 1நாளா 18:9).

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீக்கு, ஆதாதேசார் முறியடிக்கப்பட்ட செய்தி நல்ல செய்தியாயிருக்கிறது. தாவீதின் மூலமாக, ஆமாத் தேசத்திற்கு பாதுகாப்பு கிடைத்திருக்கிறது என்று தோயீ நினைக்கிறான். தாவீது ஆதாதேசாரை முறியடித்ததற்காக, தோயீ தாவீதுக்கு நன்றி சொல்ல விரும்புகிறான். அவருக்கு வெகுமதி கொடுக்க ஆசைப்படுகிறான்.

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ ராஜாவாகிய தாவீதின் சுகசெய்தியை விசாரிக்கவும், அவர் ஆதாதேசரோடே யுத்தம்பண்ணி, அவனை முறிய அடித்தற்காக அவருக்கு வாழ்த்துதல் சொல்லவும், தோயீ தன் குமாரனாகிய யோராமை ராஜாவினிடத்தில் அனுப்புகிறான். மேலும் யோராம் தன் கையிலே வெள்ளியும் பொன்னும் வெண்கலமுமான தட்டுமுட்டுகளை தாவீதுக்கு கொண்டுவருகிறான் (2சாமு 8:10; 1நாளா 18:18,19).

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ தாவீதோடு சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொள்ள விரும்புகிறான். தோயீ தாவீதின் சிநேகிதத்தை விரும்புகிறான். ஆமாத்தின் ராஜாவாகிய தோயீயோடு சமாதான உடன்படிக்கை பண்ணுவதினால் தாவீதுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. தாவீது ஆமாத்தின் ராஜாவைப்போல மேலும் சில ராஜாக்களை தன்னுடைய பாதுகாப்பின் கீழ் கொண்டு வருகிறார். இவர்கள் தாவீதுக்கு வெகுமதிகளைக் கொடுக்கிறார்கள்.

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை முறியடித்த பின்பு, அவர்களுடைய தேசத்திலிருந்து எருசலேமுக்கு கொள்ளைப்பொருளை கொண்டு வருவது வழக்கம். அந்தக் கொள்ளைப் பொருட்களெல்லாம் தாவீதின் பொக்கிஷத்திலிருக்கிறது. இந்தப் பொக்கிஷங்களோடு ஆமாத்தின் ராஜாவாகிய தோயீ தன் குமாரனாகிய யோராம் மூலமாக கொடுத்தனுப்பி வெகுமதிகளும் இருக்கிறது. தாவீதின் ஐசுவரியம் விருத்தியடைகிறது. அவருடைய பொக்கிஷ சாலை நிரம்பி வழிகிறது. தாவீது ராஜாக்களிடத்தில் கொள்ளையிட்டதிலும், தனக்கு வந்த வெகுமதிகளிலும், வெள்ளியையும் பொன்னையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்.

ஆமாத்தின் ராஜாவாகிய தோயீயின் குமாரனாகிய யோராம் கொண்டுவந்தவைகளைத் தாவீதுராஜா கீழ்ப்படுத்தின சீரியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர், அமலேக்கியர் என்னும் சகல ஜாதியர்களிடத்திலும், ரேகோபின் குமாரனாகிய ஆதாதேசர் என்னும் சோபாவின் ராஜாவினிடத்திலும் கொள்ளையிட்டதிலும் எடுத்து, கர்த்தருக்கு நியமித்த வெள்ளியோடும் பொன்னோடுங்கூட கர்த்தருக்குப் பிரதிஷ்டைபண்ணுகிறார் (2சாமு 8:11,12; 1நாளா 18:11).

இந்தப் பிரபஞ்சத்தின் சரித்திரத்தில் தாவீதைப்போல பெரிய ராஜாக்கள், தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியிருக்கிறார்கள். மகா அலெக்சாந்தர், ரோமப்பேரரசனாகிய சீஷர் ஆகியோரை பெரிய ராஜாக்களுக்கு ஒப்பாகச் சொல்லலாம். இவர்களெல்லோரும் தங்களுடைய நாமமகிமைக்காகவும், தங்களுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காகவும் மற்ற தேசங்களோடு யுத்தம்பண்ணினார்கள். தாவீதோ கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணினார்.

தாவீது கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணின வெள்ளியும் பொன்னும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்காக, கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேர்த்து வைக்கப்படுகிறது. இவையெல்லாம் கர்த்தருக்காக நியமிக்கப்பட்ட பொக்கிஷங்களாகும்.

தாவீது சத்துருக்களிடமிருந்து கொள்ளையிட்ட பொருட்களில், வெள்ளி பாத்திரங்களையும், பொன் பாத்திரங்களையும் மாத்திரம் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணினார். தாவீது பொன்னால் செய்யப்பட்ட விக்கிரகங்களை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டார்.

"அங்கே பெலிஸ்தர் தங்கள் விக்கிரகங்களைவிட்டு ஓடிப்போனார்கள்; அவைகளைத் தாவீதும் அவன் மனுஷரும் சுட்டெரித்தார்கள்" (2சாமு 5:21).

தாவீது கர்த்தருடைய நாமமகிமைக்காக யுத்தம்பண்ணுகிறார். ஆகையினால் தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவரைக் காப்பாற்றுகிறார். இஸ்ரவேலின் சத்துருக்கள் எல்லோரும் முறியடிக்கப்படுகிறார்கள்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து மனுஷருடைய ஆத்துமாக்களை தமக்கு சொந்தமாக்கிக் கொள்கிறார். தேவனுக்கு விரோதமான அந்தகார சக்திகளை கிறிஸ்துவானவர் அழித்துப்போடுகிறார். நம்முடைய மாம்ச இச்சைகளும், உலகப்பிரகாரமான இச்சைகளும் சிலுவையிலே அறையப்படவேண்டும். கர்த்தருக்கு நியமிக்கப்பட்டவையெல்லாம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தரை கனம்பண்ணி மகிமைப்படுத்த வேண்டும்.

தாவீது உப்புப்பள்ளத்தாக்கிலே பதினெண்ணாயிரம் சீரியரை முறிய அடித்துத் திரும்பினதினால் கீர்த்திபெறுகிறார் *(2சாமு 8:13; 1நாளா 18:12).* தாவீது கர்த்தருடைய கீர்த்திக்காக யுத்தம்பண்ணினாலும், தாவீதின் நாமத்திற்கும் கீர்த்தி உண்டாயிற்று. தன்னுடைய நாமம் கீர்த்தி பெற்றாலும், தாவீது, கர்த்தரை கனம்பண்ண மறக்கவில்லை. மனுஷர் தன்னைப் புகழ்ந்தாலும், தாவீது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். மனுஷர் மூலமாய் வருகிற எந்த கனத்தையும், மகிமையையும் தாவீது தனக்கு சொந்தமாக அங்கீகரிப்பதில்லை. துதி கன மகிமை எல்லாவற்றையும் தாவீது கர்த்தருக்கே செலுத்துகிறார்.

தாவீது ஏதோமியரை முறியடிக்கிறார். ஏதோமியர் எல்லோரும் தாவீதை சேவிக்கிறவர்களாகிறார்கள். தாவீது ஏதோமில் தாணயங்களை வைக்கிறார்; ஏதோம் எங்கும் அவர் தாணயங்களை வைத்ததினாலே, ஏதோமியர் எல்லாரும் தாவீதைச் சேவிக்கிறவர்களாகிறார்கள் *(2சாமு 8:14; 1நாளா 18:13).*

யோராம் ராஜாவின் காலம் வரையிலும் ஏதோமியர்கள் இஸ்ரவேலின் ராஜாக்களை சேவிக்கிறார்கள். அதுவரையிலும் ஏதோமியர் இஸ்ரவேலுக்கு கப்பம் கட்டுகிறார்கள். அதன் பின்பு ஏதோமியர் இஸ்ரவேலுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள்.

"அவன் நாட்களில் யூதாவுடைய கையின்கீழிருந்த ஏதோமியர் கலகம் பண்ணி, தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்திக்கொண்டார்கள்" *(2நாளா 21:8).*

"தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" *(2சாமு 8:6; 1நாளா 18:6)* என்று ஏற்கெனவே சொல்லப்பட்டதுபோல, இங்கு மறுபடியுமாக, "தாவீது போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார்" *(2சாமு 8:14; 1நாளா 18:13)* என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பின சத்துருக்களையெல்லாம் முறியடித்தார். இதனால் இஸ்ரவேல் தேசம் சத்துருக்களின் பிரச்சனையில்லாமல் அமைதியாயிருக்கிறது. தாவீதின் குமாரனாகிய சாலொமோனின் காலத்தில், இஸ்ரவேல் தேசம் எங்கும் யுத்தமில்லாமல் அமைதியாயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, தேசத்தில் காணப்படுகிற அமைதியும் சமாதானமும், சாதகமான சூழ்நிலையாயிருக்கிறது.

தாவீது சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய தேசங்களிலிருந்து கொள்ளைப்பொருட்களை கொண்டு வருகிறார். தாவீது கொள்ளைப்பொருட்களிலுள்ள பொன்னையும் வெள்ளியையும் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்.

பொன்னும் வெள்ளியும் கர்த்தருக்கு நியமிக்கப்பட்டு, கர்த்தருடைய பொக்கிஷத்தில் சேமித்து வைக்கப்படுகிறது. தாவீதின் குமாரனாகிய சாலொமோன், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டும். அதற்கு தேவையான பொக்கிஷங்களை தாவீது கர்த்தருக்கென்று பிரதிஷ்டைபண்ணி வைக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை வெவ்வேறு ஊழியங்களில் பயன்படுத்துகிறார். ஒரு சிலர் ஆவிக்குரிய யுத்தங்களிலே யுத்தம்பண்ணுகிறார்கள். வேறு சிலரோ ஆவிக்குரிய காரியங்களை கட்டியெழுப்புகிறார்கள். ஒரு ஊழியம் மற்றொரு ஊழியத்தைக் கட்டியெழுப்புவதற்கு பிரயோஜனமாயிருக்கிறது. கர்த்தருக்காக செய்யப்படுகிற எல்லா ஊழியங்களிலும் கர்த்தர் மகிமைப்படுகிறார்.

தாவீதுக்கு சத்துருக்கள்மேல் ஜெயம் கிடைத்தது. விசுவாசிகளாகிய நமக்கு சாத்தானுடைய ராஜ்யத்தின்மீது ஜெயம் கிடைக்கும்.

தாவீதின் ராஜ்யபாரம்
1நாளா 18:14-17

1நாளா 18:14. தாவீது இஸ்ரவேலையெல்லாம் ஆண்டு, தன்னுடைய ஜனத்திற்கெல்லாம் நியாயமும் நீதியும் செய்தான்.

1நாளா 18:15. செருயாவின் குமாரன் யோவாப் இராணுவத்தலைவனாயிருந்தான்; ஆகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயிருந்தான்.

1நாளா 18:16. அகிதூபின் குமாரன் சாதோக்கும், அபியத்தாரின் குமாரன் அபிமெலேக்கும் ஆசாரியராயிருந்தார்கள்; சவிஷா சம்பிரதியாயிருந்தான்.

1நாளா 18:17. யோய்தாவின் குமாரன் பெனாயா கிரேத்தியருக்கும் பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் புத்திரர் ராஜாவினிடத்தில் பிரதானிகளாயிருந்தார்கள்.

தாவீது இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினாலும், தன்னுடைய ராஜாசனத்தையும் முறைப்படி ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் தேசத்தைக் கவனிக்காமல், வெளிதேசங்களில் யுத்தம்பண்ண அதிக கவனம் செலுத்தினால், உள்நாட்டிலே குழப்பம் ஏற்பட்டுவிடும். தேசத்து நிர்வாகம் சீராகயிருக்காது. தாவீது மிகுந்த ஞானமாய் இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜரீகம்பண்ணுகிறார்.

தாவீது இஸ்ரவேல் அனைத்தின்மேலும் ராஜாவாயிருக்கிறார் *(2சாமு 8:15; 1நாளா 18:14)*. சமஸ்த இஸ்ரவேலும் தாவீதின் ராஜ்யபாரத்திற்கு கீழே இருக்கிறது. தாவீது இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லா ஜனத்திற்கும் நீதியும் நியாயமும் செய்து வருகிறார். அவரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் யாருக்கும் முகஸ்துதி பண்ணவுமில்லை.

இஸ்ரவேல் தேசத்தார் தங்களுடைய வழக்குகளை ராஜாவிடம் சொல்லும்போது, தாவீது ராஜா அந்த வழக்குகளுக்கு கவனமாய்ச் செவிகொடுக்கிறார். வழக்கின் தன்மைகளை நீதியாய் ஆராய்ந்து பார்க்கிறார். ஜனங்களுக்கு நியாயமான தீர்ப்பு கொடுக்கிறார். ஜனங்களால் தங்கள் ராஜாவை எளிதாகப் பார்க்க முடிகிறது. தாவீதும் தேசத்தின் நிர்வாக காரியங்கள் எல்லாவற்றையும் சீராக கவனித்து வருகிறார்.

ஒவ்வொரு தேசத்திற்கும், அந்த தேசத்தின் ராஜாவே நியாயாதிபதியாயிருக்கிறார். கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதி. அவரே எல்லா தேசத்திற்கும் ராஜாதி ராஜாவாயும், கர்த்தாதி கர்த்தாவாயும் இருக்கிறவர். அவரே சர்வசிருஷ்டிக்கும் நீதியுள்ள நியாயாதிபதியாயும் இருக்கிறார். தாவீது இந்த சத்தியத்தை அறிந்திருக்கிறார். தான் இஸ்ரவேல் தேசத்திற்கு நியாயாதிபதியாயிருந்தாலும், தனக்கு மேலாக இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நியாயாதிபதியாயிருக்கிறார் என்பதை உணர்ந்து, தாவீது தன் தேசத்திலுள்ள எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும் செய்து வருகிறார்.

"என் ஜனங்களே, என் உபதேசத்தைக் கேளுங்கள்; என் வாயின் வசனங்களுக்கு உங்கள் செவிகளைச் சாயுங்கள். என் வாயை உவமைகளால் திறப்பேன்; பூர்வகாலத்து மறைபொருள்களை வெளிப்படுத்துவேன்" *(சங் 72:1,2)*.

தாவீதின் அரண்மனையில் நிர்வாகம் சீராக நடைபெறுகிறது. தாவீது தகுதியுள்ளவர்களை ஒவ்வொரு பொறுப்புக்கும் நியமிக்கிறார். தாவீதின் ராஜ்யம் ஸ்திரப்பட்டிருக்கிறது. சவுல் தாவீதுக்கு முன்பாக இஸ்ரவேல் தேசத்திலே சிறிதுகாலம் ராஜாவாயிருந்தார். ஆனால் சவுலின் ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டிருக்கவில்லை. தாவீதோ சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். தாவீதின் ராஜாசனம் ஸ்திரமாயிருக்கிறது. தாவீதின் நிர்வாகமும், ஆளுகையும், மற்ற ராஜாக்களுக்கு முன்மாதிரியாயிருக்கிறது.

சவுலின் ராஜாங்கத்தில் அப்னேர் என்பவனின் பெயர் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. இவன் இஸ்ரவேலின் சேனைக்கு தலைவனாயிருந்தான். அப்னேரைத் தவிர சவுலுக்கு வேறு யாரும் மந்திரிகளாகவோ, இராணுவத்தலைவர்களாகவோ, பிரதானிகளாகவோ இருந்ததாக தெரியவில்லை. சவுலின் குமாரனாகிய யோனத்தான் சவுலோடு கூடயிருந்தான்.

தாவீதோ, தன்னுடைய ராஜாங்கத்தில் ஏராளமான அதிகாரிகளை நியமிக்கிறார். அவர்கள் எல்லோருமே திறமையுள்ளவர்கள். தாவீதின் இராணுவத்தில் இரண்டுபேர் படைத்தளபதிகளாயிருக்கிறார்கள். ஒருவன் யோவாப். இவன் செருயாவின் குமாரன். தாவீது யோவாபை இஸ்ரவேலின் இராணுவத்திற்கு தலைவனாக நியமித்திருக்கிறார். இஸ்ரவேல் தேசத்தார் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, யோவாப் இஸ்ரவேலின் சேனையை வழிநடத்துவான்.

யோவாபை தவிர, யோய்தாவின் குமாரன் பெனாயா என்பவனும் தாவீதின் இராணுவத்திற்கு தலைவனாயிருக்கிறான். இவன் கிரேத்தியருக்கும், பிலேத்தியருக்கும் தலைவன். இவனுடைய கட்டுப்பாட்டின் கீழிருக்கிறவர்கள் வில்வீரர்களாயும், குறிபார்த்து கவண் எரிகிறவர்களாயும் இருக்கிறார்கள்.

யோவாபின் கட்டுப்பாட்டிலுள்ள இராணுவத்தார் யுத்தம்பண்ணப்போகும்போது, பெனாயாவின் கட்டுப்பாட்டிலுள்ள சேனையும், யுத்தம்பண்ண ஆயத்தமாயிருப்பார்கள். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் உள்நாட்டு பாதுகாப்பை கவனித்துக்கொள்வார்கள். ராஜாவுக்கு பக்கபலமாக அவரோடு கூடவே இருப்பார்கள். பெனாயாவின் கீழிருக்கிற வீரர்கள், தாவீது ராஜாவுக்கு மெய்க்காப்பாளராகயிருக்கிறார்கள்.

யோவாபும், பெனாயாவும், இஸ்ரவேலின் இராணுவத்திற்கு தளபதிகளாயிருந்து, தேசத்தின் பாதுகாப்பை கவனித்துக் கொள்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே உள்நாட்டு குழப்பம் ஏற்பட்டுவிடாதவாறு, சட்டம் ஒழுங்கை பாதுகாக்கிறார்கள்.

தாவீது வழக்குகளை நியாயம் விசாரிக்கும்போது, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்துவதற்கு இவர்கள் உதவியாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் சமாதானம் இருக்கவேண்டும். அந்நிய தேசத்தார் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தால், அவர்களைத் தடுத்து நிறுத்தவேண்டும். தாவீதுக்கு யுத்த தந்திரங்களும், யுத்தவியூகங்களும் தெரிந்திருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தின் ஆவிக்குரிய மார்க்க காரியங்களை கவனிப்பதற்கு, தாவீது இரண்டு பேரை ஆசாரியராய் நியமிக்கிறார். தாவீது இஸ்ரவேலை ஆளுகை செய்யும்போது, அகிதூபின் குமாரன் சாதோக்கும், அபியத்தாரின் குமாரன் அகிமெலேக்கும் ஆசாரியராயிருக்கிறார்கள் (2சாமு 8:17; 1நாளா 18:16). அபியத்தார் பிரதான ஆசாரியனாயிருக்கிறார். சாதோக்கும் அகிமெலேக்கும், பிரதான ஆசாரியனாகிய அபியத்தாரின் கீழ் ஊழியம் செய்யவேண்டும்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின் உள்நாட்டு நிர்வாகத்தை கவனிப்பதற்கு இரண்டு அதிகாரிகளை நியமிக்கிறார். அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியாயிருக்கிறான். செராயா சம்பிரதியாயிருக்கிறான்.

இஸ்ரவேல் தேசத்து நாளாகமத்தை சம்பிரதியாகிய செராயா ஒவ்வொரு நாளும் எழுதவேண்டும். ராஜா ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய வேலைகளை, சம்பிரதி ராஜாவுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். ராஜா சில காரியங்களை மறந்துவிடுவார். அந்தக் காரியங்களையெல்லாம் சம்பிரதி அவருக்கு ஞாபகப்படுத்தவேண்டும். சம்பிரதி ராஜாவுக்கு யோசனைகளை சொல்லக்கூடாது. ராஜாவின் வேலைகளை விமர்சனம் பண்ணவும் கூடாது. ராஜாவின் அன்றாட வேலைகளை எழுதி வைப்பதும், அதை ராஜாவுக்கு ஞாபகப்படுத்துவதும் மாத்திரம் சம்பிரதியின் வேலை.

அகிலுதின் குமாரனாகிய யோசபாத் தாவீதுக்கு மந்திரியாயிருக்கிறான். இவன் தேசத்தின் நன்மைக்காகவும், ராஜாவின் நன்மைக்காகவும் யோசனை சொல்லுவான். ராஜாவுக்கு மந்திரியின் யோசனையை கேட்கவேண்டும் என்னும் அவசியம் இல்லை. ராஜா கேட்கும்போது மாத்திரமே, மந்திரி யோசனை சொல்லவேண்டும். ராஜா வழக்குகளை விசாரித்து, தீர்ப்புகளை சொல்லும்போது, ராஜாவின் தீர்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு மந்திரிக்கு உண்டு.

தாவீதின் குமாரர் பிரதானிகளாயிருக்கிறார்கள். அவர்கள் தாவீதுக்கு அடுத்த ஸ்தானத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்கிறார்கள். தாவீதின் பிள்ளைகள் எல்லோரும் வளர்ந்து பெரியவர்களாயிருக்கிறார்கள்.

"யோய்தாவின் குமாரன் பெனாயா கிரேத்தியருக்கும் பிலேத்தியருக்கும் தலைவனாயிருந்தான்; தாவீதின் புத்திரர் ராஜாவினிடத்தில் பிரதானிகளாயிருந்தார்கள்" (1நாளா 18:17).

தாவீதின் குமாரர் அவருக்கு அருகாமையிலேயே இருப்பார்கள். அவர்கள் ராஜாவின் கண்பார்வையில், ராஜாவின் மேற்பார்வையின்கீழ், இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்வார்கள்.

கிறிஸ்துவானவர், விசுவாசிகளாகிய நம்மை, ராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் நியமித்திருக்கிறார்.

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (வெளி 1:6).

19 அதிகாரம்

தாவீது அம்மோன் புத்திரர்மீதும், அவர்களுக்கு உதவியாக வந்த சீரியர்மீதும் யுத்தம்பண்ணுகிறார். இந்த சம்பவம் 2சாமு 10-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீது அம்மோனின் ராஜாவாகிய ஆனூனுக்கு சமாதான தூதுவரை அனுப்புகிறார் (1நாளா 19:1,2). ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து அவர்களை அவமானப்படுத்துகிறான் (1நாளா 19:3,4). தாவீது தன்னுடைய ஊழியக்காரரை எரிகோவிலே தங்கச் சொல்லுகிறார் (1நாளா 19:5). அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள் (1நாளா 19:6).

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தன்னுடைய சேனையை அனுப்புகிறார். யோவாபும், அபிசாயும் தாவீதின் சேனைக்கு தளபதிகளாயிருக்கிறார்கள் (1நாளா 19:7-12). தாவீதின் சேனை அம்மோன் புத்திரரையும், அவர்களுக்கு உதவியாக வந்த சீரியரையும் முறியடிக்கிறார்கள் (1நாளா 19:13,14).

சீரியர்கள் தாவீதுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ண வருகிறார்கள். இந்த யுத்தத்திலும் சீரியர்கள் முறியடிக்கப்படுகிறார்கள் (1நாளா 19:15-19).

ஆனூன்
1நாளா 19:1-5

1நாளா 19:1. அதன்பின்பு, அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்து, அவன் குமாரன் அவன் ஸ்தானத்தில் ராஜாவானான்.

1நாளா 19:2. அப்பொழுது தாவீது: ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் எனக்குத் தயவு செய்ததுபோல, நானும் அவன் குமாரனாகிய இவனுக்குத் தயவுசெய்வேன் என்று சொல்லி, அவன் தகப்பனுக்காக அவனுக்கு ஆறுதல்சொல்ல ஸ்தானாபதிகளை அனுப்பினான்; தாவீதின் ஊழியக்காரர் ஆனூனுக்கு ஆறுதல்சொல்ல அம்மோன் புத்திரரின் தேசத்திலே வந்தபோது,

1நாளா 19:3. அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் ஆனூனைப் பார்த்து: தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? தேசத்தை ஆராயவும், அதைக் கவிழ்த்துப் போடவும், உளவுபார்க்கவும் அல்லவோ, அவன் ஊழியக்காரர் உம்மிடத்தில் வந்தார்கள் என்று சொன்னார்கள்.

1நாளா 19:4. அப்பொழுது ஆனூன்: தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்கள் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப் பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிட்டான்.

1நாளா 19:5. அந்த மனுஷர் வருகையில், அவர்கள் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது அந்த மனுஷர் மிகவும் வெட்கப்பட்டபடியினால், அவர்களுக்கு எதிராக ராஜா ஆட்களை அனுப்பி: உங்கள் தாடி வளருமட்டும் நீங்கள் எரிகோவிலிருந்து, பிற்பாடு வாருங்கள் என்று சொல்லச்சொன்னான்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டைதேசத்தாராயிருக்கிறார்கள். தாவீது இஸ்ரவேலுக்கு அருகாமையிலுள்ள எல்லா தேசத்தாரோடும் சமாதானமாயிருக்கிறார். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸோடு தாவீது சிநேகமாயிருக்கிறார். அதன்பின்பு அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் மரித்துப்போகிறான்; அவன் குமாரனாகிய ஆனூன் அவன் பட்டத்திற்கு ராஜாவாகிறான் (2சாமு 10:1; 1நாளா 19:1).

நம்மைச் சுற்றிலும் நல்லவர்கள் இருப்பது நமக்கு மிகுந்த ஆசீர்வாதம். நம்முடைய பக்கத்து வீட்டுக்காரர்கள், நம்முடைய சிநேகிதர்களாகயிருப்பதற்காக, நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். நாம் எல்லோரோடும் சமாதானமாயிருக்க நாடவேண்டும்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலேயே அம்மோன் புத்திரர் வாசம்பண்ணுகிறார்கள். ஆனூன் என்பவன் அம்மோன் புத்திரருக்கு ராஜாவாயிருக்கிறான். தாவீது அவனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பிக்கிறார். அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் தேசத்திற்கு அண்டை தேசத்தாராயிருந்ததினால் தாவீது அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறார்.

அம்மோன் புத்திரர் புறஜாதியாராயிருந்தாலும், தாவீது மனுஷாபிமான அடிப்படையில், அவர்களையும் நேசிக்கிறார். நாகாஸ் என்பவன் ஆனூனின் தகப்பன். நாகாஸ் உயிரோடிருந்தபோது, அவன் தாவீதுக்கு தயவு காண்பித்திருக்கிறான். இப்போது நாகாஸ் மரித்துப்போனான். நாகாசின் குமாரனாகிய ஆனூனுக்கு தாவீது தயவு காண்பிக்க விரும்புகிறார்.

ஆனூனோ துன்மார்க்கனாயிருக்கிறான். அவனோடு கூடயிருந்து, அவனுக்கு ஆலோசனை சொல்லுகிறவர்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். நாம் கர்த்தருக்குள் சந்தோஷமாயும் சமாதானமாயும் இருக்கவேண்டும். நாம் கர்த்தரை நம்பாவிட்டால் மனுஷரையும் நம்பமாட்டோம். நாம் கர்த்தருக்கு பயப்படவில்லையென்றால், மனுஷருக்குப் பயப்படுவோம்.

நாம் கர்த்தரிடத்தில் அன்புகூரவில்லையென்றால், மனுஷரிடத்திலும் அன்புகூரமாட்டோம். மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவோம். மற்றவர்களை நம்பாமல், அவர்களைப்பற்றி சந்தேகப்படுவோம். தாவீது ஆனூனுக்கு தயவு காண்பிக்கிறார். ஆனால் ஆனூனோ தாவீதின்மீது பொறாமைப்படுகிறான். தாவீதை சந்தேகப்படுகிறான்.

நாகாஸ் உயிரோடிருந்தபோது அவன் தாவீதுக்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறான். தனக்கு தயை செய்த நாகாசுக்கு, தாவீது நன்றிசொல்ல விரும்புகிறார். நாகாசின் குமாரனாகிய ஆனூனுக்கு தாவீது தயை செய்ய விரும்புகிறார். நாகாஸ் மரித்துப்போனதற்காக, அவனுடைய குமாரன் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல தாவீது தன்னுடைய சேவகரை அனுப்புகிறார் (2சாமு 10:2; 1நாளா 19:2).

தாவீதுக்கு யாராவது தயவு செய்தால், தாவீது அவர்களுக்கு பலமடங்கு அதிகமாக தயவு செய்வார். நாகாஸ் தாவீதுக்கு தயவு செய்ததினால், அதற்கு பிரதி உபகாரமாக, தாவீது நாகாசின் குமாரன் ஆனூனுக்கு தயவு செய்ய விரும்புகிறார். பெற்றோர் மரித்துப்போகும்போது, அவர்களுடைய பிள்ளைகள் மிகுந்த வேதனையிலிருப்பார்கள். பிள்ளைகளுக்கு பெரியவர்கள் ஆறுதல் சொல்லவேண்டும்.

மரித்துப்போனவர்களின் சிநேகிதர்கள், அவர்களுடைய பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களுடைய துக்கத்தைக் குறைக்கவேண்டும். தங்கள் பெற்றோரின் சிநேகிதர்கள், தங்களுக்கும் சிநேகிதர்களாகயிருப்பார்கள் என்னும் ஆறுதலான உணர்வு பிள்ளைகளுக்கு வரவேண்டும். மரித்துப்போனவர்களின் பிள்ளைகளை கைவிட்டுவிடாமல், அவர்களுக்கு தங்களுடைய சிநேகத்தையும், ஐக்கியத்தையும் கொடுத்து அவர்களுக்கு ஆறுதலாயிருக்கவேண்டும்.

தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலே வருகிறார்கள். அவர்கள் மரித்துப்போன நாகாசுக்காக, அவனுடைய குமாரன் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல வருகிறார்கள். தாவீது ராஜா இதற்காகவே தன்னுடைய ஊழியக்காரர்களை அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு அனுப்பியிருக்கிறார்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தாவீதைப் பகைக்கிறார்கள். அவர்கள் தாவீதின்மீது சந்தேகப்படுகிறார்கள். ஆனூன் தன்னுடைய பிரபுக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்துகிறான்.

தாவீதின் ஊழியக்காரர்கள் ஆனூனுக்கு ஆறுதல் சொல்ல வரவில்லை என்றும், அவர்கள் அம்மோன் புத்திரரின் பட்டணத்தை ஆராய்ந்து உளவு பார்க்க வந்திருக்கிறார்கள் என்றும், பிரபுக்கள் ஆனூனுக்கு தவறான செய்தியை சொல்லுகிறார்கள். தாவீது அனுப்பின ஊழியக்காரர்கள் ஸ்தானாபதிகள் அல்ல என்றும், அவர்கள் வேவுகாரர்கள் என்றும், பிரபுக்கள் ஆனூனை நம்ப வைக்கிறார்கள்.

பிறருக்கு தீங்கு செய்கிற துன்மார்க்கர்கள் மற்றவர்களை நம்பமாட்டார்கள். தங்களைப்போலவே அவர்களும் தங்களுக்கு தீங்கு செய்வார்கள் என்று அவர்களைப்பற்றி சந்தேகப்படுவார்கள். அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் மற்ற தேசத்து ஜனங்களை நேசிக்கமாட்டார்கள். பக்கத்து தேசத்தின் ராஜாக்களோ, பிரபுக்களோ மரித்துப்போனால்கூட, அவர்களுக்கு ஆறுதல் சொல்லமாட்டார்கள்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் சிநேகிதர்களைப் பிரித்து, அவர்களை பகையாளியாக்கிவிடுகிறார்கள். சிநேகமான வார்த்தைகளுக்கும், ஆறுதலான வார்த்தைகளுக்கும் தப்பிதமான விளக்கங்களைக் கொடுத்து, அவர்களுக்குள்ளே பகையை மூட்டிவிடுகிறார்கள்.

அம்மோன் புத்திரரின் பிரபுக்கள் தங்கள் ஆண்டவனாகிய ஆனூனைப் பார்த்து: "தாவீது ஆறுதல் சொல்லுகிறவர்களை உம்மிடத்தில் அனுப்பினது, உம்முடைய தகப்பனைக் கனம்பண்ணுகிறதாய் உமக்குத் தோன்றுகிறதோ? இந்தப் பட்டணத்தை ஆராய்ந்து, உளவுபார்த்து, அதைக் கவிழ்த்துப்போட அல்லவோ தாவீது தன் ஊழியக்காரரை உம்மிடத்திற்கு அனுப்பினான்" *(2சாமு 10:3)* என்றும் , "அவன் ஊழியக்காரர் உம்மிடத்தில் வந்தார்கள்" *(1நாளா 19:3)* என்றும் சொல்லுகிறார்கள்.

ஆனூன் தன்னுடைய பிரபுக்களின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கிறான். ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒருபக்கத்துத் தாடியைச் சிரைத்து, அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிடமட்டும் வைத்துவிட்டு, மற்றப்பாதியைக் கத்தரித்துப்போட்டு, அவர்களை அனுப்பிவிடுகிறான் *(2சாமு 10:4; 1நாளா 19:4)*.

ஆனூன் தாவீதின் ஊழியக்காரர்களை அவமானப்படுத்துகிறான். ஆனூனிடம் நல்ல ஆவி இல்லை. அவனை பொல்லாத ஆவி அலைக்கழிக்கிறது. ஆனூனுக்கு ராஜாவாயிருக்கும் தகுதியில்லை. ஆனூனின் தகப்பன் நாகாஸ் நல்லவன். நாகாஸ் தாவீதோடு சிநேகமாயிருந்தவன். அவன் தாவீதுக்கு தயை செய்தவன்.

நாகாஸ் மரித்துப்போனபின்பு, ஆனூன் திடீரென்று அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு ராஜாவாகிவிட்டான். ஆனூனுக்கு ராஜாசனம்பண்ணி அனுபவமுமில்லை, முதிர்ச்சியுமில்லை. அவனுக்கு ஆலோசனை சொல்லுகிற பிரபுக்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். சிங்காசனத்தில் உட்காருவதற்கு தகுதியில்லாத ஆனூன், அம்மோன் புத்திரரை ஆளுகை செய்கிறான்.

ஒரு தேசத்திற்கு, மற்ற தேசத்திலிருந்து ஸ்தானாபதிகள் வரும்போது, அந்த தேசத்தின் ராஜா ஸ்தானாபதிகளை கனம்பண்ணவேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இது எல்லா தேசங்களிலும் கடைப்பிடிக்கப்படும் பொதுவான சட்டம். ஆனால் ஆனூனுக்கு, ராஜ்யபாரத்தைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவன் தன் ராஜாசனத்தின் மேன்மையை அசட்டைபண்ணுகிறான். தாவீது அனுப்பின ஸ்தானாபதிகளை அவமானப்படுத்துகிறான்.

ஸ்தானாபதிகள் யுத்தவீரர்களைப்போல வரமாட்டார்கள். அவர்களிடத்தில் பட்டயம் இருக்காது. தங்கள் தேசத்து ராஜா அனுப்பின செய்திச்சுருள் மாத்திரமே இருக்கும். ஸ்தானாபதிகளின் கையில் ஆயுதத்திற்கு பதிலாக ஒலை இருக்கும். அவர்கள் நிராயுதபாணிகளாயிருப்பார்கள். ஆனால் ஆனூனோ, தாவீதின் ஊழியக்காரரை, கொள்ளைக்காரராகவும், கொலைகாரராகவும், வேவுகாரராகவும் பாவிக்கிறான்.

ஆனூன் தாவீதின் ஊழியக்காரரைப் பிடித்து, அவர்களுடைய ஒரு பக்கத்து தாடியை சிரைத்துவிடுகிறான். அவர்களுடைய வஸ்திரங்களை இருப்பிட மட்டும் வைத்துவிட்டு மற்ற பாதியை கத்தரித்துப்போடுகிறான். இப்போது தாவீதின் ஊழியக்காரர், ஆனூனுடைய அரண்மனையில் கோமாளிகளைப்போலவும், வேடிக்கைப் பொருட்களைப்போலவும் இருக்கிறார்கள். ஆனூன் தாவீதின் ஊழியக்காரர்களை அவமானப்படுத்தி அனுப்பிவிடுகிறான்.

ஆனூன் தன்னுடைய ஊழியக்காரரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான் என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீதின் ஊழியக்காரர் அம்மோன் புத்திரரின் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் எருசலேமுக்கு வருவதற்கே வெட்கப்படுகிறார்கள். அவர்களுடைய ஒரு பக்கத்து தாடி சிரைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய வஸ்திரங்கள் இருப்பிட மட்டும் வைக்கப்பட்டு, மற்ற பாதி கத்தரித்துப்போடப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்வைக்கு அலங்கோலமாயிருக்கிறார்கள்.

தாவீதின் ஊழியக்காரர், அம்மோன் புத்திரரின் தேசத்திலிருந்து, எருசலேமுக்கு திரும்பி வரும்போது, தாவீது தன்னுடைய ஆட்களை அவர்களுக்கு எதிராக அனுப்புகிறார். அவர்களை எருசலேமுக்கு வரவேண்டாம் என்றும், அவர்கள் எரிகோவில் தங்கியிருக்கட்டும் என்றும், அவர்களுடைய தாடி வளருமட்டும் அவர்கள் எரிகோவில் இருந்துவிட்டு, அதன் பிற்பாடு அவர்கள் எருசலேமுக்கு வரலாம் என்றும் தாவீது செய்தி சொல்லியனுப்புகிறார்.

தாவீதின் ஊழியக்காரர்கள் எரிகோவிலே, மற்றவர்களுக்கு தெரியாமல், ஒரு தனிமையான இடத்திலிருக்கிறார்கள். சிரைக்கப்பட்ட தாடி வளருமட்டும் அவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் தங்கியிருக்கும் வீட்டை விட்டு வெளியே வரமாட்டார்கள். அவர்கள் மிகவும் வெட்கப்பட்ட படியினால் வெளிஆட்களோடு பேசவும் மாட்டார்கள், பழகவும் மாட்டார்கள்.

ஆனூன் தாவீதின் ஊழியக்காரருடைய ஒரு பக்கத்து தாடியை சிரைத்திருக்கிறான். சிரைக்கப்பட்ட தாடி, மறுபக்கத்து தாடியைப்போல சீராக வளரவேண்டும். அதுவரையிலும் அவர்கள் எரிகோவில் தங்கியிருக்கவேண்டும். யூதர்கள் தங்கள் தாடிகளை நீளமாக வளர்ப்பார்கள். நீளமான தாடி யூதர்களுக்கு தங்கள் ஜனத்தார் மத்தியில் மதிப்பையும் மரியாதையையும் கொடுக்கும். யூதர்களில் வயதான பெரியவர்கள் நீளமான தாடியை வளர்ப்பது வழக்கம்.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன் தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தினான். பிறரை அவனமானப்படுத்துவது அநீதியானது. அது அக்கிரமமான செயல். நாம் மற்றவர்களுடைய பாரம்பரியத்திற்கும், பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் மதிப்பு கொடுக்கவேண்டும். மற்றவர்களின் கலாச்சாரத்தை நாம் ஒருபோதும் அவமானப்படுத்தவும் கூடாது. நிந்திக்கவும் கூடாது. அது அநீதியான செயல்.

சிரைக்கப்பட்ட தாடி மறுபடியும் வளரும். தாவீதின் ஊழியக்காரர் இப்போது அவமானப்பட்டாலும், அவர்களுடைய தாடி மறுபடியும் வளரும்போது, அவர்களுடைய நிந்தை அவர்களைவிட்டு நீங்கும். அதன் பின்பு அவர்களை அவமானப்படுத்திய ஆனூனுக்கு அவமானமுண்டாகும்.

"உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார். கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே" *(சங் 37:6,7)*.

அம்மோன் புத்திரர்
1நாளா 19:6-15

1நாளா 19:6. அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஆனூனும் அம்மோன் புத்திரரும் மெசொப்பொத்தாமியாவிலும் மாக்கா சோபா என்னும் சீரியரின் தேசத்திலுமிருந்து தங்களுக்கு இரதங்களும் குதிரைவீரரும் கூலிக்கு வரும்படி ஆயிரம் தாலந்து வெள்ளி அனுப்பி,

1நாளா 19:7. முப்பத்தீராயிரம் இரதங்களையும், மாக்காவின் ராஜாவையும், அவன் ஜனத்தையும் கூலிப்படையாக அழைப்பித்தான்; இவர்கள் வந்து, மேதேபாவுக்கு முன்புறத்திலே பாளயமிறங்கினார்கள்; அம்மோன் புத்திரரும் தங்கள் பட்டணங்களிலிருந்து கூடிக்கொண்டு யுத்தம்பண்ணவந்தார்கள்.

1நாளா 19:8. அதைத் தாவீது கேட்டபோது, யோவாபையும் பலசாலிகளின் இராணுவம் முழுவதையும் அனுப்பினான்.

1நாளா 19:9. அம்மோன் புத்திரர் புறப்பட்டுவந்து, பட்டணத்து வாசலண்டையில் அணி வகுத்தார்கள்; வந்த ராஜாக்கள் தனித்து வெளியிலே போருக்கு ஆயத்தமாய் நின்றார்கள்.

1நாளா 19:10. யுத்த இராணுவங்களின் முகப்புத் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதை யோவாப் கண்டு, அவன் இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட அனைவரிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக நிறுத்தி,

1நாளா 19:11. மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராகப் போருக்கு ஆயத்தப்படுத்தி, தன் சகோதரனாகிய அபிசாயிக்கு ஒப்புவித்து, அவனை நோக்கி:

1நாளா 19:12. என்னைப்பார்க்கிலும் சீரியர் பலங்கொண்டால் நீ எனக்குத் துணைநில்; உன்னைப்பார்க்கிலும் அம்மோன் புத்திரர் பலங்கொண்டால் நான் உனக்குத் துணை நிற்பேன்.

1நாளா 19:13. தைரியமாயிரு; நாம் நம்முடைய ஜனத்திற்காகவும், நமது தேவனுடைய பட்டணங்களுக்காகவும் திடன்கொண்டிருக்கக்கடவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக என்றான்.

1நாளா 19:14. பின்பு யோவாபும் அவனோடிருந்த ஜனமும் சீரியரோடு யுத்தம்பண்ணச் சேர்ந்தார்கள்; அவர்கள் அவனுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்.

1நாளா 19:15. சீரியர் முறிந்தோடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் அவன் சகோதரனாகிய அபிசாயிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்திற்கு உட்பட்டார்கள்; யோவாப் திரும்ப எருசலேமுக்கு வந்தான்.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன், தாவீதின் ஊழியக்காரரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். இந்த செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. தாவீது இதன் நிமித்தமாக அம்மோன் புத்திரர்மீது கோபப்படுகிறார். அம்மோன் புத்திரர் தாவீதுக்கு அருவருப்பானவர்களாயிருக்கிறார்கள். தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாகக் கோபப்படுவதை, அம்மோன் புத்திரரும் அறிந்துகொள்கிறார்கள்.

நாம் எல்லோரோடும் சமாதானமாயிருக்கவேண்டும். சமாதானமாயிருப்பதற்கான காரியங்களை ஆராய்ந்து பார்த்து, அதைக் கைக்கொள்ளவேண்டும். நம்மிடத்தில் மனத்தாழ்மையும் இருக்கவேண்டும். நாம் பிறருக்கு விரோதமாகத் தீங்கு செய்யக்கூடாது. நமக்கு விரோதமாக மற்றவர்கள் தீங்கு செய்திருந்தாலும், நாம் அவர்கள் செய்த தீங்குகளை மன்னித்து மறந்துவிடவேண்டும்.

அம்மோன் புத்திரரோ துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் தாவீதின் ஸ்தானாபதிகளை அவமானப்படுத்தினார்கள். இப்போது அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதை கண்டபோது, அம்மோன் புத்திரர் தாவீதோடு சமாதானம்பண்ண வரவேண்டும். ஆனால் அவர்களோ தாவீதோடு யுத்தம்பண்ண வருகிறார்கள்.

அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். தாவீதின் சேனை மிகவும் பெரியது. அது அதிக பெலமுள்ளது. தாவீதின் சேனையோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், அம்மோன் புத்திரரின் சேனை எண்ணிக்கையில் சிறியது. பலவீனமானது.

தங்களால் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது என்று அம்மோன் புத்திரருக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது. இதனால் அம்மோன் புத்திரர் தங்களுடைய சேனையைப் பலப்படுத்துவதற்கு, பக்கத்து தேசங்களிலுள்ள யுத்த வீரர்களை கூலிப்படையாக அழைப்பிக்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஸ்தானாபதிளை அனுப்பி, பெத்ரேகோப் தேசத்துச் சீரியரிலும், சோபாவிலிருக்கிற சீரியரிலும் இருபதினாயிரம் காலாட்களையும், மாக்காதேசத்து ராஜாவினிடத்தில் ஆயிரம்பேரையும், இஷ்தோபிலிருக்கிற பன்னீராயிரம்பேரையும், கூலிப்படையாக அழைப்பிக்கிறார்கள் (2சாமு 10:6; 1நாளா 19:6,7).

அம்மோன் புத்திரர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். அவர்கள் தங்களுடைய சேனையை பலப்படுத்துகிறார்கள். அம்மோன் புத்திரரைப்பற்றிய செய்தியை தாவீதும் கேள்விப்படுகிறார். அவர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ண யோவாபையும், பராக்கிரமசாலிகளாகிய சமஸ்த இராணுவத்தையும் அனுப்புகிறார். இஸ்ரவேலின் சேனைக்கு யோவாப் தளபதியாயிருக்கிறார்.

தாவீதுக்கு யுத்த தந்திரமும், யுத்த வியூகமும் நன்றாய்த் தெரியும். அம்மோன் புத்திரர் புறப்பட்டு, ஒலிமுகவாசலண்டையிலே போர்செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள்; ஆனாலும் சோபாவிலும் ரேகோபிலுமிருந்துவந்த சீரியரும், இஷ்தோபிலும் மாக்காவிலுமிருந்து வந்த மனுஷரும், வெளியிலே பிரத்தியேகமாயிருக்கிறார்கள் (2சாமு 10:8; 1நாளா 19:8).

அம்மோன் புத்திரரின் யுத்த அணிவகுப்புக்களையும், யுத்த வியூகங்களையும் தாவீது கேள்விப்படுகிறார். ராப்பா அம்மோன் புத்திரரின் தலைநகரம். மேதாபா அம்மோன் புத்திரரின் எல்லைப்பட்டணம். அம்மோன் புத்திரரின் படைகள் ராப்பாவின் ஒலிமுகவாசலண்டையில் அணிவகுத்து நிற்கிறார்கள். தாவீதும் அவருடைய சேனையும் ராப்பா பட்டணத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதபடிக்கு, அம்மோன் புத்திரர், தங்கள் பட்டணத்தின் ஒலிமுகவாசலண்டையில் போர் செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள்.

"அம்மோன் புத்திரர் தாங்கள் தாவீதுக்கு அருவருப்பானதைக் கண்டபோது, ஆனூனும் அம்மோன் புத்திரரும் மெசொப்பொத்தாமியாவிலும் மாக்கா சோபா என்னும் சீரியரின் தேசத்திலுமிருந்து தங்களுக்கு இரதங்களும் குதிரைவீரரும் கூலிக்கு வரும்படி ஆயிரம் தாலந்து வெள்ளி அனுப்பி, முப்பத்தீராயிரம் இரதங்களையும், மாக்காவின் ராஜாவையும், அவன் ஜனத்தையும் கூலிப்படையாக அழைப்பித்தான்; இவர்கள் வந்து, மேதேபாவுக்கு முன்புறத்திலே பாளயமிறங்கினார்கள்; அம்மோன் புத்திரரும் தங்கள் பட்டணங்களிலிருந்து கூடிக்கொண்டு யுத்தம்பண்ணவந்தார்கள்" (1நாளா 19:6,7).

அம்மோன் புத்திரரின் சேனையும் தாவீதின் சேனையும் யுத்தபண்ண ஆயத்தமாயிருக்கிறார்கள். தாவீதின் சேனைத் தளபதியாகிய யோவாப், அம்மோன் புத்திரருடைய இராணுவங்களின் படைமுகம் தனக்கு முன்னும் பின்னும் இருக்கிறதைக் காண்கிறான். ஆகையினால், யோவாப் இஸ்ரவேலிலே தெரிந்துகொள்ளப்பட்ட எல்லா இராணுவங்களிலும் ஒரு பங்கைப் பிரித்தெடுத்து, அதைச் சீரியருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்துகிறான். மற்ற ஜனத்தை அம்மோன் புத்திரருக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தும்படி தன் சகோதரனாகிய அபிசாயினிடத்தில் ஒப்புவிக்கிறான் (2சாமு 10:9,10; 1நாளா 19:9,10).

தாவீதின் சேனை அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். அம்மோன் புத்திரரும் சீரியரும், தாவீதின் சேனைக்கு முன்னும் பின்னுமாக இருக்கிறார்கள். தாவீதின் படைத்தளபதியாகிய யோவாப், சத்துருக்களின் யுத்த அணிவகுப்பைப் பார்த்து, இஸ்ரவேலின் சேனையை இரண்டாகப் பிரிக்கிறான். ஒரு பிரிவை அம்மோன் புத்திரருக்கு எதிராகவும், மற்றொரு பிரிவை சீரியருக்கு எதிராகவும் அணிவகுத்து நிறுத்துகிறான்.

இஸ்ரவேலின் சேனை இரண்டு பிரிவாகப் பிரிக்கப்படுகிறார்கள். ஒரு பிரிவு அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். மற்றொரு பிரிவு சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். சீரியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் படைப்பிரிவுக்கு யோவாப் தளபதியாகயிருக்கிறான். அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணும் படைப்பிரிவுக்கு, யோவாபின் சகோதரன் அபிசாய் படைத்தளபதியாயிருக்கிறான்.

யோவாபும் அபிசாயும், இஸ்ரவேலின் சேனைக்கு தளபதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும், சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணப்போகும் முன்பு, யோவாப் தன் சகோதரன் அபிசாயிடம் புத்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகிறான்.

யோவாப் அபிசாயை நோக்கி, "சீரியர் கைமிஞ்சுகிறதாயிருந்தால் நீ எனக்கு உதவிசெய்யவேண்டும்; அம்மோன் புத்திரர் கை மிஞ்சுகிறதாயிருந்தால் நான் உனக்கு உதவிசெய்ய வருவேன். தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்; கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" (2சாமு 10:11,12; 1நாளா 19:12,13) என்று சொல்லுகிறான்.

இந்த யுத்தத்திலே யோவாபும் அபிசாயும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ள வேண்டும். யாருக்கு உதவி தேவைப் படுகிறதோ, அவருக்கு மற்றவன் வந்து உதவிசெய்யவேண்டும். உதவி தேவைப் படுகிறவர் அதற்குரிய செய்கை காண்பிக்க வேண்டும். யுத்தம் ஒன்றுதான். யுத்தம் சத்துருவுக்கு விரோதமாக நடைபெறுகிறது. சத்துருக்கள் இரண்டு படைகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேலின் சேனை இரண்டு சேனைகளோடு யுத்தம்பண்ணுவது போல யுத்தம்பண்ணவேண்டும். இஸ்ரவேலின் இரண்டு சேனையும் ஒருவருக்கொருவர் ஆதரவாயும், உதவியாயும் இருந்து யுத்தம்பண்ணவேண்டும்.

விசுவாசிகளாகிய நமக்கும், இந்தப் பிரபஞ்சத்தில் ஆவிக்குரிய யுத்தம் உண்டு. இந்த யுத்தத்தில் விசுவாசிகள் ஒருவருடைய கரத்தை மற்றொருவர் பலப்படுத்தவேண்டும். ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். பலமுள்ளவர் பலவீனமாயிருக்கிறவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். தேவனுடைய கிருபையினால் சோதனைகளை மேற்கொண்டவர்கள், சோதனைகளில் சிக்கிக்கொண்டவர்களுக்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லவேண்டும்.

விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லி, தங்களை திடப்படுத்திக்கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் ஜெபம்பண்ணவேண்டும். சோதிக்கப்படுகிறவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். அவர்களுக்கு ஆலோசனைகளைச் சொல்லவேண்டும்.

"நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக் கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்" (லூக் 22:32).

யோவாப் தன்னையும் உற்சாகப்படுத்துகிறான். தன்னுடைய சகோதரன் அபிசாயையும் உற்சாகப்படுத்துகிறான். தாவீதின் சேனையிலுள்ள படைவீரர்களையும், அவர்களுடைய சேனாபதிகளையும் உற்சாகப்படுத்துகிறான்.

யோவாப் தனக்கு விரோதமாக வருகிற படைகளின் அணிவகுப்பைப் பார்க்கிறான். அவர்கள் யோவாபுக்கு முன்னும் பின்னும் இருக்கிறார்கள். யோவாப் சத்துருக்களைப் பார்த்து பயந்து பின்வாங்கி ஓடிப்போய்விடவில்லை. அவன் கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணுகிறான். இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களையும் உற்சாகப்படுத்துகிறான்.

"தைரியமாயிரு; நம்முடைய ஜனத்திற்காகவும், நம்முடைய தேவனுடைய பட்டணங்களுக்காகவும் சவுரியத்தைக் காட்டுவோம்" என்று யோவாப் படைவீரர்களுக்கு உற்சாகமான வார்த்தைகளைச் சொன்னதாக, 2சாமு 10:12-ஆவது வசனத்திலும், "தைரியமாயிரு; நாம் நம்முடைய ஜனத்திற்காகவும், நமது தேவனுடைய பட்டணங்களுக்காகவும் திடன்கொண்டிருக்கக் கடவோம்" என்று 1நாளா 19:13-ஆவது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

தாவீதின் சேனையிலிருக்கிறவர்கள் மாதச்சம்பளத்திற்காகவோ அல்லது தங்களுடைய பெயர் பிரஸ்தாபத்திற்காகவோ அல்லது சுயபெருமைக்காகவோ, யுத்தம்பண்ண வரவில்லை. அவர்கள் தங்களுடைய ஜனத்திற்காகவும், தங்கள் தேவனுடைய பட்டணங்களுக்காகவும் யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தின் பாதுகாப்புக்காகவும், தங்கள் தேசத்தின் க்ஷேமத்திற்காகவும் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம்.

தாவீதின் சேனையிலிருக்கிற ஒவ்வொருவரும் தங்கள் தேவனைப்பற்றியும், தங்கள் தேசத்தைப்பற்றியும் கரிசனையுள்ளவர்களாயிருக்கிறார்கள். யுத்தத்தின் முடிவு எப்படியிருக்கும் என்பது யோவாபுக்கு தெரியாது. அது யாருக்கும் தெரியாது. யோவாப் யுத்தத்தின் முடிவை கர்த்தருடைய கரத்தில் ஒப்புக்கொடுக்கிறான். "கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று யோவாப் விசுவாசத்தோடு சொல்லுகிறான்.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை உண்மையாய்ச் செய்யவேண்டும். தங்களுடைய மனச்சாட்சிக்கு கீழ்ப்படிந்து, தங்களுடைய கடமைகளை நிறைவேற்றவேண்டும். முடிவு கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தருக்கு சித்தமான காரியம் வாய்க்கும். கர்த்தர் தமது பார்வைக்கு நலமானதை செய்வார். கர்த்தர் எதை செய்தாலும், அது அவருடைய பிள்ளைகளின் நன்மைக்கேதுவாகயிருக்கும்.

தாவீதின் சேனை அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும் சீரியருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறார்கள். முதலாவதாக யோவாபும் அவனோடிருந்த ஜனமும் சீரியர்மேல் யுத்தம்பண்ணக் கிட்டுகிறார்கள்; சீரியர் யோவாபுக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள் *(2சாமு 10:13; 1நாளா 19:14)*.

சீரியர் முறிந்தோடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் அபிசாயிக்கு முன்பாக முறிந்தோடிப் பட்டணத்திற்குள் புகுந்து கொள்கிறார்கள்; அப்பொழுது யோவாப் அம்மோன் புத்திரரை விட்டுத் திரும்பி எருசலேமுக்கு வருகிறான் *(2சாமு 10:14; 1நாளா 19:15)*.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவே ஆரம்பிக்கவில்லை. சீரியர்கள் முறிந்து ஓடிப்போவதைப் பார்த்து, அம்மோன் புத்திரரும் முறிந்து ஓடிப்போகிறார்கள். தங்கள் பட்டணத்திற்குள் புகுந்து கொள்கிறார்கள். அம்மோன் புத்திரர் யுத்தம்பண்ணாமலேயே தோற்றுப்போகிறார்கள்.

சீரியர்
1நாளா 19:16-19

1நாளா 19:16. தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டபோது, அவர்கள் நதிக்கு அப்புறத்திலிருக்கிற சீரியரை வரவழைத்தார்கள்; ஆதாரேசரின் படைத்தலைவனாகிய சோப்பாக் அவர்களுக்கு முன்னாலே நடந்துபோனான்.

1நாளா 19:17. அது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் இஸ்ரவேலையெல்லாம் கூட்டிக்கொண்டு, யோர்தானைக் கடந்து, அவர்களுக்குச் சமீபமாய் வந்தபோது, அவர்களுக்கு எதிராக இராணுவங்களை நிறுத்தினான்; தாவீது சீரியருக்கு எதிராக இராணுவங்களைப் போருக்கு ஆயத்தப்படுத்தினபின் அவனோடு யுத்தம்பண்ணினார்கள்.

1நாளா 19:18. சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடினார்கள்; தாவீது சீரியரில் ஏழாயிரம் இரதங்களின் மனுஷரையும், நாற்பதினாயிரம் காலாட்களையும் கொன்று, படைத்தலைவனாகிய சோப்பாக்கையும் கொன்றான்.

1நாளா 19:19. தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதை ஆதாரேசரின் சேவகர் கண்டபோது, அவர்கள் தாவீதோடே சமாதானம்பண்ணி, அவனைச் சேவித்தார்கள்; அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய சீரியர் மனதில்லாதிருந்தார்கள்.

சீரியர் தாவீதின் சேனைக்கு விரோதமாக யுத்தம்பண்ண மறுபடியும் ஆயத்தமாகிறார்கள். தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைச் சீரியர் கண்டபோது, ஒருமிக்கக் கூடுகிறார்கள். சீரியர்கள் ஏற்கெனவே யோவாபுக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாமல், அவனுக்கு முன்பாக முறிந்து ஓடிப்போனவர்கள்.

சீரியர் தங்களுடைய சேனையை வலுப்படுத்துகிறார்கள். சேனையிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கிறார்கள். ஆதாரேசர் என்பவன் சீரியருக்கு ராஜா. அவன் நதிக்கு அப்பாலிருந்த சீரியரையும் அழைத்தனுப்புகிறான்; அவர்கள் ஏலாமுக்கு வருகிறார்கள்; ஆதாரேசருடைய படைத்தலைவனாகிய சோபாக் அவர்களுக்கு முன்னாலே செல்கிறான் (2சாமு 10:16; 1நாளா 19:16).

சீரியர் ஒருமிக்க கூடுகிறார்கள் என்னும் செய்தி தாவீதுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது தாவீது இஸ்ரவேலையெல்லாம் கூட்டிக்கொண்டு, யோர்தானைக் கடந்து, ஏலாமுக்குப் போகிறார்; சீரியர் தாவீதுக்கு எதிராக இராணுவங்களை அணிவகுத்து நிற்கிறார்கள் (2சாமு 10:17; 1நாளா 19:17).

சீரியர் தாவீதுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்களால் தாவீதின் சேனையோடு யுத்தம்பண்ண முடியவில்லை. சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடுகிறார்கள்; தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும் நாற்பதினாயிரம் குதிரைவீரரையும்கொன்று போடுகிறார். சீரியருடைய படைத்தலைவனாகிய சோபாகையும் தாவீது சாகும்படி வெட்டிப்போடுகிறார் (2சாமு 10:18; 1நாளா 19:18).

தாவீது சீரியருக்கு விரோமாக யுத்தம்பண்ணியபோது, சீரியரின் படைத்தலைவனாகிய சோபாக் செத்துப்போகிறான். தாவீது வெற்றியோடு எருசலேமுக்கு திரும்பி வருகிறார். சீரியருக்கு விரோதமான இந்த யுத்தத்திலே தாவீதுக்கு ஜெயம் கிடைக்கிறது. சீரியரின் ராஜாவாகிய ஆதாரேசர் தோற்றுப்போகிறான்.

சிறிய தேசத்தின் ராஜாக்கள், சீரியரின் ராஜாவாகிய ஆதாரேசரை சேவிக்கிறார்கள். சீரியர் இஸ்ரவேலுக்கு முன்பாக தோற்றுப்போனதை ஆதாரேசரை சேவிக்கிற ராஜாக்கள் பார்த்து, அவர்கள் தாவீதோடே சமாதானம் பண்ணி, தாவீதை சேவிக்கிறார்கள். முன்பு ஆதாரேசரை சேவித்த ராஜாக்களெல்லாம் இப்போது தாவீதை சேவிக்கிறார்கள்.

சீரியரின் படைபலம் குறைந்துபோயிற்று. தாவீது சீரியரில் எழுநூறு இரதவீரரையும், நாற்பதினாயிரம் குதிரை வீரரையும் கொன்றுபோட்டார். ஆரம்பத்தில் தாவீதுக்கு சீரியர்மீது பகையில்லை. அவர் அம்மோன் புத்திரர்மீதுதான் யுத்தம்பண்ண புறப்பட்டார். சீரியர் அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய வந்தார்கள். அவர்கள் ஏற்கெனவே இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்தோடினார்கள். இப்போது அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக மறுபடியும் முறியடிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேலோடு நடைபெற்ற இரண்டாவது யுத்தத்தில், சீரியருக்கு பேரிழப்பு உண்டாயிற்று. இதனால் சீரியர் அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய பயப்படுகிறார்கள் (2சாமு 10:19; 1நாளா 19:19).

இஸ்ரவேலரோடு நடைபெற்ற யுத்தத்திலே, சீரியாவின் ராஜா தன்னுடைய படைத்தலைவனையும் இழந்தான். தன்னுடைய இரதவீரரையும் இழந்தான், தன்னுடைய குதிரை வீரரையும் இழந்தான். தன்னை சேவிக்கிற சகல ராஜாக்களையும் இழந்தான். சீரியாவின் ராஜாவுக்கு இந்த யுத்தத்திலே மிகப்பெரிய இழப்பு உண்டாயிற்று.

அப்பொழுது ஆதாரேசரைச் சேவிக்கிற சகல ராஜாக்களும் தாங்கள் இஸ்ரவேலுக்கு முன்பாக முறிய அடிக்கப்பட்டதைக் கண்டு, இஸ்ரவேலரோடே சமாதானம்பண்ணி, அவர்களைச் சேவித்தார்கள். அப்புறம் அம்மோன் புத்திரருக்கு உதவிசெய்ய சீரியர் பயப்பட்டார்கள் *(2சாமு 10:19; 1நாளா 19:19).*

தாவீது ஆதாரேசரை சேவித்த ராஜாக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறார். கர்த்தர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் இதன் மூலமாக நிறைவேறிற்று. கர்த்தர் இந்த வாக்குத்தத்தத்தை யோசுவாவுக்கு மறுபடியும் சொல்லி உறுதிபடுத்தினார். இஸ்ரவேல் தேசத்தின் எல்லை ஐபிராத்து நதிக்கு அப்பாலும் சென்றது.

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்............ எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" *(ஆதி 15:18-21).*

"நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். வனாந்தரமும் இந்த லீபனோனும் தொடங்கி ஐபிராத்து நதியான பெரியநதிமட்டுமுள்ள ஏத்தியரின் தேசம் அனைத்தும், சூரியன் அஸ்தமிக்கிற திசையான பெரிய சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்" *(யோசு 1:3,4).*

இஸ்ரவேலுக்கு விரோதமான யுத்தத்திலே அம்மோன் புத்திரரும், சீரியரும் தோற்றுப்போனார்கள். இந்த யுத்தத்திற்கு முன்பு அம்மோன் புத்திரரும், சீரியரும் இராணுவ உடன்படிக்கை செய்திருந்தார்கள். சீரியர் அம்மோன் புத்திரருக்கு நீண்டகாலமாக இராணுவ உதவி செய்து வந்தார்கள். இந்த யுத்தத்திற்கு பின்பு, சீரியர் அம்மோன் புத்திரருக்கு உதவி செய்ய பயந்து, தங்களுடைய இராணுவ உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள்.

20 அதிகாரம்

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாகவும் பெலிஸ்தருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணின சம்பவங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, ரப்பாவைப் பிடித்துக்கொள்கிறார் (1நாளா 20:1-3). தாவீது பெலிஸ்தரின் இராட்சத புத்திரரோடு யுத்தம்பண்ணி அவர்களை சங்காரம்பண்ணுகிறார் (1நாளா 20:4-8).

அம்மோன் புத்திரருக்கு விரோதமான யுத்தம் 1நாளா 20:1-3

1நாளா 20:1. மறுவருஷம், ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படும் காலம் வந்தபோது, யோவாப் இராணுவ பலத்தைக் கூட்டிக்கொண்டுபோய், அம்மோன் புத்திரரின் தேசத்தைப் பாழ்க்கடித்து ரப்பாவுக்கு வந்து அதை முற்றிக்கைபோட்டான்; தாவீதோ எருசலேமில் இருந்துவிட்டான்; யோவாப் ரப்பாவை அடித்துச் சங்கரித்தான்.

1நாளா 20:2. தாவீது வந்து, அவர்கள் ராஜாவுடைய தலையின்மேல் இருந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டான்; அது ஒரு தாலந்து பொன்நிறையும் ரத்தினங்கள் பதித்ததுமாயிருந்தது; அது தாவீதின் தலையில் வைக்கப்பட்டது; பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையையும் கொண்டுபோனான்.

1நாளா 20:3. பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், கோடரிகளுக்கும் உட்படுத்தி; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் தாவீது செய்து, எல்லா ஜனத்தோடுங் கூட எருசலேமுக்குத் திரும்பினான்.

தாவீது சீரியருக்கு விரோதமாக இரண்டுமுறை யுத்தம்பண்ணினார். இவ்விரண்டு யுத்தத்திலும் சீரியர் தாவீதுக்கு முன்பாக முறிந்து ஓடினார்கள். முதலாவது யுத்தத்தில் சீரியர் முறிந்து ஓடுகிறதை அம்மோன் புத்திரர் கண்டபோது, அவர்களும் முறிந்து ஓடி தங்கள் பட்டணமாகிய ரப்பாவுக்குள் புகுந்து கொள்கிறார்கள்.

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தம்பண்ணுகிறார். ரப்பா அம்மோன் புத்திரரின் தலைநகரம். இது பிரமாண்டமான பட்டணம். யோவாப் தாவீதின் படைத்தளபதி. தாவீது ஏற்கெனவே அம்மோன் புத்திரருக்கும், சீரியருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, ஒருவருஷத்திற்கு பின்பு, இப்போது மறுபடியுமாக, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்.

மறுவருஷம் ராஜாக்கள் யுத்தத்திற்குப் புறப்படுங்காலம் வருகிறது. அப்போது, தாவீது யோவாபையும், அவனோடேகூடத் தன் சேவகரையும், இஸ்ரவேல் அனைத்தையும், அம்மோன் புத்திரரை அழிக்கவும், ரப்பாவை முற்றிக்கைபோடவும் அனுப்புகிறார். தாவீதோ யுத்தத்திற்குப்போகாமல் எருசலேமில் இருந்துவிடுகிறார் (2சாமு 11:1; 1நாளா 20:1).

இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவை முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். அப்போது தாவீது எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார். அப்போது அவர் பத்சேபாளோடு பாவம் செய்கிறார்.

தாவீது பல தேசங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதன் ராஜாக்களை ஜெயித்தவர். ஆனால் இப்போதோ தாவீதால் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளை ஜெயிக்க முடியவில்லை. தாவீது தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாகி பாவத்திலே விழுந்துவிடுகிறார். பத்சேபாள் உரியாவின் மனைவி. தாவீது பத்சேபாளோடு விபசாரம் பண்ணுகிறார்.

தாவீது இப்போதிருக்கிற சூழ்நிலை, பாவத்தில் விழுவதற்கு சாதகமாகயிருக்கிறது. இஸ்ரவேலின் சேனை, அம்மோன் புத்திரரின் பட்டணமான ரப்பாவை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். தாவீது யுத்தக்களத்திலே இருக்கவேண்டும். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். ஆனால் தாவீதோ தன்னுடைய கடமையை மறந்து, எருசலேமிலுள்ள தன்னுடைய அரண்மனையில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர்கள் தங்களுக்காகவும், தங்கள் கர்த்தருக்காகவும் யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய யுத்தத்தை நடத்துகிறார்கள். இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் பங்குபெறவேண்டும். தாவீதோ இந்த யுத்தத்தில் பங்குபெறாமல், தன்னுடைய கடமையை அசட்டைபண்ணுகிறார். தான் செய்ய வேண்டிய வேலைகளை, மற்றவர்கள்மீது சுமத்திவிட்டு, தாவீது எருசலேமிலே இருந்துவிடுகிறார்.

தாவீது அம்மோன் புத்திரருக்கு விரோதமாக நடைபெறுகிற யுத்தத்திலே பங்குபெறுவதற்கு போயிருந்தால், பத்சேபாளோடு பாவம் செய்யும் சூழ்நிலை அவருக்கு வந்திருக்காது. தாவீது இந்த சோதனையிலிருந்து தப்பித்திருப்பார்.

தாவீதைப்போலவே நாமும் நம்முடைய கடமையை செய்யாமல், சோம்பேறித்தனமாக ஓய்வெடுத்துக்கொண்டிருந்தால், சோதனையில் சிக்கிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் ரப்பா பட்டணத்தையும், அம்மோன் புத்திரரின் மற்ற பட்டணங்களையும் பிடிக்கிறார்கள். தாவீதின் குமாரன் பிறந்தபின்பு இந்த சம்பவம் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த சம்பவம் இதற்கு முன்பு நடைபெற்றிருக்கவேண்டும்.

இஸ்ரவேலின் சேனை ரப்பா பட்டணத்திற்கு விரோதமாக முற்றிக்கையிட்டபோது உரியா அம்மோன் புத்திரரின் பட்டயத்தினால் கொல்லப்பட்டார். பத்சேபாள் உரியாவுக்காக இழவு கொண்டாடினாள். அந்த சந்தர்ப்பத்தில் இந்த சம்பவம் நடைபெற்றிருக்க வேண்டுமென்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தாவீதுக்கு கிருபையாக இரங்குகிறார். தாவீது இஸ்ரவேலின் சத்துருக்கள்மீது யுத்தம்பண்ணி அவர்களை முறியடிக்கிறார். தாவீதின் பட்டயம் நீதிக்காக யுத்தம்பண்ணுகிறது. அந்தப் பட்டயம் கர்த்தருக்காகவும், இஸ்ரவேல் தேசத்திற்காகவும், இஸ்ரவேல் ஜனங்களுக்காகவும் யுத்தம்பண்ணுகிறது.

தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளோடு விபசாரம்பண்ணி பாவம் செய்தார். இதனால் தாவீதின் ஜீவியத்தில் களங்கமுண்டாயிற்று. பாவக்கறைகள் தாவீதை தீட்டுப்படுத்தியது. தாவீதின் பட்டயம் நீதிக்காக யுத்தம்பண்ணாமல், சிறிதுகாலம் அநியாயத்திற்காக யுத்தம்பண்ணியது. இந்தக் காலத்தில் உரியா செத்துப்போனான்.

தாவீது தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். கர்த்தர் தனக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்க்கிறார். தாவீது மறுபடியும் கர்த்தரோடு ஒப்புரவாகிறார். தாவீதின் படைத்தளபதியாகிய யோவாப், தாவீதுக்கும், இஸ்ரவேல் தேசத்திற்கும் உண்மையுள்ளவனாயிருக்கிறான். அவன் தாவீதுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறான்.

யோவாப் அம்மோன் புத்திரருடைய ரப்பாபட்டணத்தின் மேல் யுத்தம்பண்ணி, ராஜதானியைப்பிடிக்கிறான். இது தண்ணீர் ஓரமான பட்டணம். அம்மோன் புத்திரருக்கு ஏராளமான பட்டணங்கள் உள்ளன. அந்தப் பட்டணங்களுக்கெல்லாம் ரப்பா பட்டணத்திலிருந்து தண்ணீர் அனுப்பப்படும். தாவீதின் சேனை ரப்பாவின்மேல் யுத்தம்பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் ரப்பாவுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டு, அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அந்தப் பட்டணத்தைப் பிடிக்கப்போகிறார்கள். யுத்தம் முடிவு பெறப்போகிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீது வந்து யுத்தத்தை முடிக்க வேண்டும். அப்போதுதான் தாவீது ராஜாவுக்கு கனமும், மேன்மையும் உண்டாகும்.

யுத்தம் முடிவுபெறப்போகிறது என்றும், தாவீது இந்த யுத்தத்தை முடித்து வைக்கவேண்டும் என்றும், தாவீதின் பெயர் வழங்கவேண்டும் என்றும், யோவாப் தாவீது ராஜாவுக்கு செய்தி சொல்லியனுப்புகிறான்.

யோவாப் தாவீதினிடத்தில் ஆள் அனுப்பி, "நான் ரப்பாவின்மேல் யுத்தம்பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக்கொண்டேன். நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என் பேர் வழங்காதபடிக்கு, நீர் மற்ற ஜனங்களைக் கூட்டிக்கொண்டுவந்து, பட்டணத்தை முற்றிக்கைபோட்டு, பிடிக்கவேண்டும்" *(2சாமு 12:27,28)* என்று சொல்லச்சொல்லுகிறான்.

அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ரப்பாவுக்குப் போய், அதின்மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடிக்கிறார் *(2சாமு 12:29)*. அம்மோன் புத்திரருடைய ராஜாவின் தலையின்மேல் ஒரு கிரீடம் இருக்கிறது. அது இரத்தினங்கள் பதிக்கப்பட்ட விலையுயர்ந்த கிரீடம். தாவீது ராஜா அந்தக் கிரீடத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். ரப்பா பட்டணத்தில் திரளான ஐசுவரியம் இருக்கிறது. தாவீது அவற்றைக் கொள்ளையிட்டு எருசலேமுக்கு கொண்டு வரவேண்டுமென்று விரும்புகிறார்.

அம்மோன் புத்திரருடைய ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை தாவீது எடுத்துக்கொள்கிறார்; அது ஒரு தாலந்து நிறைபொன்னும்; இரத்தினங்கள் பதித்ததுமாயிருக்கிறது; அது தாவீதினுடைய தலையில் வைக்கப்படுகிறது; தாவீது ரப்பா பட்டணத்திலிருந்து ஏராளமான கொள்ளையை எருசலேமுக்கு கொண்டுபோகிறார் *(2சாமு 12:30; 1நாளா 20:2)*.

தாவீது அம்மோன் புத்திரரை மொத்தமாய் சங்காரம்பண்ணவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய ஆனூன், தாவீதின் ஊழியக்காரரை ஏற்கெனவே அவமானப்படுத்தினவன். தாவீது ஆனூனுக்கும், அவனுடைய ஜனத்திற்கும் புத்தி வரப்பண்ணுவேண்டுமென்று விரும்பினார். அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனார்.

அம்மோன் புத்திரர் சீரியரின் துணையோடு, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தார்கள். இந்த யுத்தத்திலே சீரியர்கள் முறியடிக்கப்பட்டார்கள். சீரியர்கள் முறிந்து ஓடுவதைப் பார்த்து, அம்மோன் புத்திரர், இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமலேயே, தங்கள் பட்டணங்களுக்குள் ஓடி ஒழிந்துகொண்டார்கள்.

இஸ்ரவேலரின் சேனை அம்மோன் புத்திரரின் பட்டணமான ரப்பாவை முற்றிக்கையிட்டு அதைப் பிடிக்கிறார்கள். அம்மோனியரின் மற்ற பட்டணங்களையும் தாவீது பிடிக்கிறார். தாவீது அம்மோன் புத்திரரை சங்காரம்பண்ணுகிறார்.

தாவீது அம்மோன் புத்திரரின் பட்டணங்களிலிருந்த ஜனங்களை வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இருப்புப் பாரைகளுக்கும், இருப்புக் கோடரிகளுக்கும், உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப்பண்ணுகிறார்; இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது இஸ்ரவேலின் எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்புகிறார்.

தாவீது எருசலேமுக்கு திரும்பிய பின்பு, அவர் அம்மோன் புத்திரர்மீது கோபமாயிருந்ததுபோல, இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கவில்லை. தாவீதின் ராஜாசனத்தில் இரக்கமும் இருக்கிறது. நீதியும் இருக்கிறது.

"இரக்கத்தையும் நியாயத்தையும் குறித்துப் பாடுவேன்; கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்" *(சங் 101:1)*.

பெலிஸ்தருக்கு விரோதமான யுத்தம்
1நாளா 20:4-8

1நாளா 20:4. அதற்குப்பின்பு கேசேரிலே பெலிஸ்தரோடு யுத்தம் உண்டாயிற்று; அப்பொழுது ஊசாத்தியனாகிய சிபெக்காய் இராட்சத புத்திரரில் ஒருவனான சிப்பாயி என்பவனைக் கொன்றான்; அதினால் அவர்கள் வசப்படுத்தப்பட்டார்கள்.

1நாளா 20:5. திரும்ப பெலிஸ்தரோடு யுத்தம் உண்டாகிறபோது, யாவீரின் குமாரனாகிய எல்க்கானான் காத்தூரானாகிய கோலியாத்தின் சகோதரனான லாகேமியைக் கொன்றான்; அவன் ஈட்டித் தாங்கு நெய்கிறவர்களின் படைமரம் அவ்வளவு பெரிதாயிருந்தது.

1நாளா 20:6. மறுபடியும் ஒரு யுத்தம் காத்திலே நடந்தபோது, அங்கே நெட்டையனான ஒரு மனுஷன் இருந்தான்; அவனுக்கு அவ்வாறு விரலாக இருப்பத்துநாலு விரல்கள் இருந்தது, அவனும் இராட்சத சந்ததியாயிருந்து,

1நாளா 20:7. இஸ்ரவேலை நிந்தித்தான்; தாவீதின் சகோதரனாகிய சிமேயாவின் குமாரன் யோனத்தான் அவனைக் கொன்றான்.

1நாளா 20:8. காத்தூரிலிருந்த இராட்சதனுக்குப் பிறந்த இவர்கள் தாவீதின் கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்.

தாவீது ஏற்கெனவே பெலிஸ்தரை முறியடித்திருக்கிறார். "இதற்குப்பின்பு, தாவீது பெலிஸ்தரை முறிய அடித்து, அவர்களைக் கீழ்ப்படுத்தி, காத்பட்டணத்தையும் அதின் கிராமங்களையும் பெலிஸ்தரின் கையிலிருந்து பிடித்துக்கொண்டார்" (1நாளா 18:1).

ஆனாலும் காத் பட்டணத்திலுள்ள இராட்சத புத்திரர் இன்னும் முறியடிக்கப்படவில்லை. இவர்களும் பெலிஸ்தர்கள். தாவீது இராட்சதர்களையும் முறியடிக்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கிருபைக்கும், அக்கிரமத்திற்கும் இடையே எப்போதும் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும். நம்முடைய பாவங்களில் சில இராட்சதரைப்போல பெரிதாயும், பெலமுள்ளதாயும் இருக்கும். இராட்சதரை சாதாரணமாக யுத்தம்பண்ணி துரத்திவிட முடியாது. அவர்களுக்கு விரோதமாக கடினமாய் யுத்தம்பண்ணவேண்டும். ஒரு வேளை யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறாமல், யுத்தம் நடைபெறுகிற காலம் அதிகரிக்கலாம்.

ஒரு சில பிசாசுகள் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயல்லாமல் வேறு எந்த விதத்திலும் புறப்பட்டுப்போகாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் காணப்படுகிற, இராட்சதரைப்போன்ற பெரிய பாவங்களை, கர்த்தருடைய பெலத்தினால் யுத்தம்பண்ணி மேற்கொள்ளவேண்டும்.

பெலிஸ்தர் மத்தியிலே இராட்சத புத்திரர்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இராட்சத புத்திரர் இருந்ததாக வேதத்தில் சொல்லப்படவில்லை. பெலிஸ்தரின் இராட்சத புத்திரர் காத் ஊரைச் சேர்ந்தவர்கள்.

எருசலேமிலே இராட்சதர் இல்லை. எருசலேமிலிருக்கிறவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். கர்த்தர் தம்முடைய பரிசுத்த நகரத்திலே நல்ல கனிகளைத் தரும், நல்ல திராட்சச்செடிகளைப்போல, இஸ்ரவேல் புத்திரரை நாட்டியிருக்கிறார்.

தாவீதின் சேனையிலுள்ளவர்கள் சாதாரண உருவமுள்ளவர்கள். இவர்களுக்கு இராட்சதரைப்போன்ற பெரிய உருவமில்லை. இஸ்ரவேல் புத்திரரோடு கர்த்தர் கூடயிருக்கிறார். ஆகையினால் காத் ஊரிலிருந்த இராட்சத புத்திரரால் இஸ்ரவேல் புத்திரரை மேற்கொள்ள முடியவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் புத்திரர் இராட்சதரை முறியடிக்கிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், நமக்கு விரோதமாக சிலர் எழும்பி வரலாம். அவர்களில் சிலர் இராட்சதரைப்போல, உலகப்பிரகாரமாக பெரிய மனுஷராகயிருக்கலாம். அவர்களுடைய பதவியும் அதிகாரமும் பெரிதாயிருக்கலாம். ஆனாலும் இந்த உலகத்திலிருக்கிறவனிலும் நமக்குள்ளே இருக்கிற கர்த்தர் பெரியவர். ஆகையினால் நமக்கு விரோதமாக எழும்பியிருக்கிற சத்துருக்களைப் பார்த்து நாம் பயப்படக்கூடாது.

இராட்சதருக்கு கைகளில் ஒரு விரல் கூடயிருக்கலாம். அவர்களுடைய கால்களில்கூட ஒரு விரல் கூடயிருக்கலாம். அவர்களுக்கு எத்தனை விரல்கள் இருந்தாலும், அவர்கள் நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நம்மைப் பாதுகாக்கிற கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். சர்வவல்லவருக்கு முன்பாக சாதாரண விரல்களால் எதிர்த்து நிற்க முடியாது.

தாவீதின் மனுஷர் கொன்றுபோட்ட இராட்சதரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு:

1. சிபெக்காய் (1நாளா 20:4)
   மறுபெயர் சாப் (2சாமு 21:18)

2. லாகேம் - கோலியாத்தின் சகோதரன் (1நாளா 20:5; 2சாமு 21:19)

3. அவ்வாறு விரலாக இருப்பத்துநாலு விரல்கள் இருந்த இராட்சதன். (1நாளா 20:6-8; 2சாமு 21:20-22)

4. இஸ்பி -பெனோப் (2சாமு 21:16-17)

5. கோலியாத் (1சாமு 17)

இந்த ஐந்து இராட்சதர்களும் சகோதரர்கள். 2சாமு 21:22 ஆவது வசனத்தில் "இந்த நாலு பேரும்" என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நாலுபேரும் கோலியாத்தின் சகோதரர். (2சாமு 21:19) ஆகையினால் இந்த ஐந்துபேருமே சகோதரர்கள் ஆவார்கள். 1நாளா 20:5 ஆவது வசனத்தில் லாகேம் என்பவன் கோலியாத்தின் சகோதரன் என்பது தெரியவருகிறது. இராட்சதர்களில் இவர்களே கடைசியானவர்கள்.

21 அதிகாரம்

தாவீது இஸ்ரவேலைத் தொகையிடுகிறார். இது கர்த்தருடைய பார்வையில் பாவமாயிருக்கிறது. தாவீது யோவாபையும் ஜனத்தின் சேர்வைக்காரரையும் நோக்கி இஸ்ரவேலை எண்ணிதொகையிடுமாறு கட்டளையிடுகிறார் (1நாளா 21:1-6).

தாவீது செய்த காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேலை வாதிக்கிறார். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புகிறார் (1நாளா 21:7,8).

கர்த்தர் தாவீதினுடைய பாவத்திற்காக அவரைத் தண்டிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு முன்பாக மூன்று காரியங்களை வைக்கிறார். அவற்றில் ஒன்றை தாவீது தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் அதன் பிரகாரமாக தண்டிப்பார் (1நாளா 21:9-13).

கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளை நோயை வரப்பண்ணுகிறார். அதினால் இஸ்ரவேலில் 70,000 பேர் மடிந்துபோகிறார்கள். கர்த்தர் தமது கிருபையினால் எருசலேமை அழிக்காமல் விட்டுவிடுகிறார் (1நாளா 21:14-17).

தாவீது தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார். இஸ்ரவேல் தேசத்திலே கொள்ளைநோய் மும்முரமாயிருக்கிறது. தாவீது கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார் (1நாளா 21:18-30).

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற சம்பவங்கள் 2சாமு 24-ஆவது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலைத் தொகையிடுதல் 1நாளா 21:1-6

1நாளா 21:1. சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது.

1நாளா 21:2. அப்படியே தாவீது யோவாபையும், ஜனத்தின் சேர்வைக்காரரையும் நோக்கி: நீங்கள் போய், பெயெர்செபாதொடங்கித் தாண்மட்டும் இருக்கிற இஸ்ரவேலை எண்ணி, அவர்கள் இலக்கத்தை நான் அறியும்படிக்கு, என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றான்.

1நாளா 21:3. அப்பொழுது யோவாப்: கர்த்தருடைய ஜனங்கள் இப்போது இருக்கிறதைப்பார்க்கிலும் நூறத்தனையாய் அவர் வர்த்திக்கப் பண்ணுவாராக: ஆனாலும் ராஜாவாகிய என் ஆண்டவனே, அவர்களெல்லாரும் என் ஆண்டவனின் சேவகரல்லவா? என் ஆண்டவன் இதை விசாரிப்பானேன்? இஸ்ரவேலின்மேல் குற்றமுண்டாக இது நடக்கவேண்டியது என்ன என்றான்.

1நாளா 21:4. யோவாப் அப்படிச் சொல்லியும், ராஜாவின் வார்த்தை மேலிட்டபடியினால், யோவாப் புறப்பட்டு, இஸ்ரவேல் எங்கும் சுற்றித்திரிந்து எருசலேமுக்கு வந்து,

1நாளா 21:5. ஜனத்தை இலக்கம்பார்த்து, தொகையைத் தாவீதிடத்தில் கொடுத்தான்; இஸ்ரவேலிலெல்லாம் பட்டயமும் உருவத்தக்கவர்கள் பதினொருலட்சம்பேரும், யூதாவில் பட்டயம் உருவத்தக்கவர்கள் நாலுலட்சத்து எழுபதினாயிரம்பேரும் இருந்தார்கள்.

1நாளா 21:6. ஆனாலும் ராஜாவின் வார்த்தை யோவாபுக்கு அருவருப்பாயிருந்தபடியினால், லேவி பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களை அவர்களுடைய இலக்கத்திற்குட்பட எண்ணாதேபோனான்.

ஜனங்களை எண்ணித் தொகையிடுவது எல்லா தேசங்களிலும் நடைபெறுகிற சாதாரண காரியம். இதைப் பாவம் என்று சொல்லுவதற்கு இதில் ஒன்றுமே இல்லை. நல்ல மேய்ப்பன் தன்னுடைய மந்தையில் எத்தனை ஆடுகள் இருக்கிறது என்பதை அறிந்திருப்பான்.

ஆனால் தாவீதின் இருதயத்திலோ மேட்டிமை இருக்கிறது. அவருடைய மனதில் பெருமையிருக்கிறது. கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். மனத்தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார். தாவீது இஸ்ரவேலை தொகையிடுமாறு சொன்னது பாவமல்ல. ஆனால் அதை மனமேட்மையோடும், இருதயத்திலே பெருமையோடும் சொன்னது பாவமாயிருக்கிறது. இது தாவீதின் பாவம்.

சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்புகிறான். அவன் இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்கு தாவீதை ஏவிவிடுகிறான். "கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டது" (2சாமு 24:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாக சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்படுகிறார்.

சாத்தான் தாவீதை ஏவினாலும், கர்த்தர் தீமையை நன்மையாக மாற்றுகிறவர். சாத்தான் எந்த நோக்கத்திற்காக தாவீதை ஏவினான் என்பது அவனுக்கே தெரியாது. ஆனாலும் இந்த சம்பவத்தின் மூலமாக, கர்த்தர் நன்மையை உண்டுபண்ணுகிறார். தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் சாத்தானையும் ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்.

சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்புகிறான். கர்த்தருடைய அனுமதியில்லாமல், சாத்தானால் இஸ்ரவேலுக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியாது. இஸ்ரவேலை அழித்துப்போடுமாறு, சாத்தானால் கர்த்தரை ஏவமுடியாது. ஆகையினால் சாத்தான் தாவீதை ஏவுகிறான்.

இஸ்ரவேல் தேசத்திலே தாவீதுக்கு ஏராளமான சிநேகிதர்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேலைத் தொகையிடுவதற்கு சாத்தான் தாவீதை ஏவுகிறான். அவர்களை கர்த்தருக்கு விரோதமாகத் திருப்பவேண்டும் என்பது சாத்தானுடைய திட்டம். தாவீது இஸ்ரவேலின் மொத்த எண்ணிக்கையைப் பார்த்து, தன்னுடைய மனதிலே இன்னும் அதிகமாய்ப் பெருமைப்படுவார். அவர் இனிமேல் கர்த்தரை நம்பாமல், இஸ்ரவேல் புத்திரரை நம்புவதற்கும் வாய்ப்புள்ளது. சாத்தான் மிகவும் தந்திரமாக தாவீதை தன்னுடைய திட்டத்திலே பயன்படுத்துகிறான்.

சாத்தான் தாவீதை சோதித்ததுபோலவே நம்மையும் சோதிப்பான். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யுமாறு நம்மை ஏவுவான். சாத்தான் கர்த்தருக்கு முன்பாக நம்மைக் குற்றம் சொல்லமாட்டான். சாத்தானுக்கு வாய்ப்பு கிடைக்குமென்றால், கர்த்தருக்கு முன்பாக நம்மைப்பற்றி புகழ்ந்துபேசுவான். ஆனாலும் சாத்தான் நம்மை கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ய ஏவுவான். இது சாத்தானுடைய தந்திரம்.

இஸ்ரவேலைத் தொகையிடுவதற்கு தாவீது யோவாபைப் பயன்படுத்துகிறார். யோவாபுக்கு ஜனங்கள் மத்தியிலே நல்ல செல்வாக்கு இருக்கிறது. தாவீதின் அரண்மனையிலே யோவாபுக்கு முக்கியமான பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற பொறுப்புக்களோடு, இஸ்ரவேலின் இலக்கத்தை எண்ணி தொகையிடும் பொறுப்பையும் தாவீது யோவாபுக்கு கொடுக்கிறார்.

தன்னுடைய கட்டளையை யோவாப் சரியாக நிறைவேற்றுவான் என்பது தாவீதுக்கு தெரியும். ஆனால் தாவீதின் கட்டளை யோவாபுக்கு பிடிக்கவில்லை. தனக்கு பிடிக்காத ஒரு காரியத்தை யோவாப் தாவீதுக்காக செய்ய முன்வருகிறான். அவன் ராஜாவுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறவன்.

இஸ்ரவேலை எண்ணித் தொகையிடுவது யோவாப் செய்த பாவமல்ல. அது தாவீதின் பாவம். தாவீது செய்த பாவத்தினால் இஸ்ரவேலுக்கு தீங்கு உண்டாயிற்று. இந்தத் தீங்குக்கு தாவீது காரணமாயிருப்பதுபோல, தாவீதின் கட்டளைக்கு கீழ்ப்படிந்த யோவாபும் காரணமாயிருக்கிறான். தாவீது கர்த்தரைக் கோபப்படுத்தியதுபோல, யோவாபும் கர்த்தரைக் கோபப்படுத்துகிறான்.

யோவாப் தாவீதின் கட்டளைப்படி இஸ்ரவேலை தொகையிடுகிறான். ஆனாலும் அவன் இரண்டு கோத்திரத்தாரை எண்ணாமல் விட்டுவிடுகிறான். "ஆனாலும் ராஜாவின் வார்த்தை யோவாபுக்கு அருவருப்பாயிருந்தபடியினால், லேவி பென்யமீன் கோத்திரங்களில் உள்ளவர்களை அவர்களுடைய இலக்கத்திற்குட்பட எண்ணாதேபோனான்" (1நாளா 21:6).

இஸ்ரவேலிலும், யூதாவிலும் பட்டயம் உருவத்தக்கவர்களின் எண்ணிக்கை 15,70,000 பேராகும். இவர்கள் எல்லோரும் பராக்கிரமசாலிகள் அல்ல. (2சாமு 24:9). லேவி, பென்யமீன் ஆகிய கோத்திரங்களில் பட்டயம் உருவத்தக்கவர்களின் எண்ணிக்கை இந்த எண்ணிக்கையோடு சேர்க்கப்படவில்லை. (1நாளா 21:5-6).

இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு, தாவீது யோவாபுக்கு கட்டளைகொடுக்கிறார். இதனால் கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூளுகிறது.

"இஸ்ரவேல் யூதா என்பவர்களை இலக்கம் பார்" என்று அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்படுகிறார். தாவீது ராஜா தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து: "ஜனங்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண்முதல் பெயெர்செபா மட்டுமுள்ள இஸ்ரவேலரின் கோத்திரமெங்கும் சுற்றித்திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள்" (2சாமு 24:2) என்று சொல்லுகிறார். "அவர்கள் இலக்கத்தை நான் அறியும்படிக்கு என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" (1நாளா 21:2) என்று சொல்லுகிறார்.

தாவீதின் கட்டளையில் இரண்டு காரியங்கள் விநோதமாயிருக்கிறது. தாவீது பாவமான காரியத்தை செய்யச் சொல்லுகிறார். இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்ப்பதில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஆனாலும் கர்த்தருடைய கோபம் இதன் நிமித்தமாக, இஸ்ரவேலின்மேல் திரும்பவும் மூளுகிறது. கர்த்தருடைய கோபத்திற்கு வேதபண்டிதர்கள் காரணங்களை சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் இருபது வயதிற்கும் மேற்பட்ட ஆண்பிள்ளைகளை மாத்திரம் இலக்கம் பார்க்கவேண்டும் தாவீதோ இருபது வயது ஆகாத வாலிபரையும் இலக்கம் பார்க்குமாறு கட்டளை கொடுத்திருக்கவேண்டும். இவர்கள் ஆயுதம் ஏந்தக்கூடிய சரீர பெலமுள்ளவர்களாக இருந்திருப்பார்கள். பலசாலிகளாகவும் இருந்திருப்பார்கள். ஆனாலும் கர்த்தருடைய பிரமாணத்தின்படி, இருபது வயது ஆகாதவர்களை இலக்கம் பார்க்கக்கூடாது.

"இஸ்ரவேலை வானத்தின் நட்சத்திரங்கள் அத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தபடியால், தாவீது இருபது வயதுமுதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தைத் தொகையேற்றவில்லை. செருயாவின் குமாரன் யோவாப் எண்ணத்துவக்கியும் முடிக்காதே போனான்; அதற்காக இஸ்ரவேலின்மேல் கடுங்கோபம் வந்தது; ஆதலால் அந்தத் தொகை தாவீதுராஜாவின் நாளாகமக் கணக்கிலே ஏறவில்லை" (1நாளா 27:23,24).

தாவீது இருபது வயதிற்கும் மேற்பட்ட புருஷரை இலக்கம் பார்த்திருந்தாலும், இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் தன் தன் ஆத்துமாவுக்காக கர்த்தருக்கு அரைசேக்கலை மீட்கும் பொருளாக கொடுக்கவேண்டும். இது கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியத்திற்கு பயன்படுத்தப்படும். தாவீதோ இலக்கம் பார்க்கப்பட்ட ஜனங்களிடத்திலிருந்து, கர்த்தருக்கு மீட்கும் பொருளை சேகரிக்கவில்லை.

"பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படி கணக்குப்பார்க்கும் பொருட்டு, அவர்களை எண்ணும்போது, அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவனும் எண்ணப்படும் சமயத்தில் தன்தன் ஆத்துமாவுக்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக் கொடுக்கக்கடவன்" (யாத் 30:11,12).

தாவீது தன்னுடைய அரண்மனையின் கஜானாவை பொக்கிஷங்களினால் நிரப்ப ஆசைப்படுகிறார். இதற்காக அவர் இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்த்து, அவர்களிடத்திலிருந்து வரிவசூலிப்பதற்கு திட்டமிடுகிறார். இதன் நிமித்தமாக கர்த்தருடைய கோபம் திரும்பவும் இஸ்ரவேலின்மேல் மூளுவதற்கு வாய்ப்புள்ளது.

தாவீது கர்த்தரிடத்தில் விசாரிக்காமலேயே, இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கிறார். தாவீது அவர்களை இலக்கம் பார்ப்பதற்கு கர்த்தருடைய அனுமதியை பெற்றுக்கொள்ளவில்லை.

கர்த்தர் பூர்வகாலத்தில் இஸ்ரவேலின் முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சொன்னார். ஆபிரகாமின் சந்ததி கடற்கரை மணலத்தனையாகவும், வானத்து நட்சத்திரங்களைப்போலவும் எண்ணமுடியாத அளவுக்கு அதிகமாயிருக்கும் என்று கர்த்தர் சொன்னார். கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை, தாவீது விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாமல், இஸ்ரவேலையும் யூதாவையும் எண்ணித் தொகையேற்றி, கர்த்தருடைய வார்த்தையை உறுதிபண்ண ஆசைப்படுகிறார். தாவீது கர்த்தரைச் சோதிக்கிறார்.

தாவீதின் இருதயத்தில் பெருமையிருக்கிறது. மனமேட்டிமையிருக்கிறது. எசேக்கியாவின் இருதயத்திலும் பெருமை இருந்தது. அவன் தன்னுடைய அரண்மனையின் பொக்கிஷங்களையெல்லாம் அந்நிய தேசத்து சேனாபதிகளுக்கு காண்பித்தான். எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக பணிவாயில்லாமல், இருதயத்தில் பெருமையோடிருந்தது அவனுக்கு பாவமாயிற்று. தாவீதும், எசேக்கியாவைப்போலவே, கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தாமல், தன் இருதயத்தில் பெருமைப்பட்டு, இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கிறார்.

தன்னுடைய தேசத்தில் ஏராளமான ஜனங்கள் இருப்பது தனக்கு பெருமையாகவும், பெலமாகவும் இருக்கும் என்று தாவீது நினைக்கிறார். இது அவருடைய பெருமைக்கும், மேட்டிமைக்கும் அடையாளம்.

தாவீது கர்த்தரை நம்பாமல், தன்னுடைய பலத்தை நம்புகிறார். தன்னுடைய சுயபலத்தில் பெருமைப்படுகிறார். தன்னுடைய இராணுவத்தில் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை, அந்நிய தேசத்தாருக்கு பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறார்.

மேலே சொல்லப்பட்டிருக்கிற காரணங்களுக்காக, கர்த்தருடைய கோபம் தாவீதின்மேலும், இஸ்ரவேலின்மேலும், மறுபடியும் மூண்டிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தர் தடைபண்ணின காரியத்தை தாவீது செய்கிறார். அது தாவீதுக்கு பாவமாயிற்று.

இஸ்ரவேல், யூதா என்பவர்களை இலக்கம் பார் என்று அவர்களுக்கு விரோதமாக சொல்லுகிறதற்கு தாவீது ஏவப்பட்டார் (2சாமு 24:1; 1நாளா 21:1) இஸ்ரவேலுக்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் மூளுவது புதுமையான காரியமல்ல. ஆனால் அந்தக் கோபம் மூளுவதற்கு, தாவீது இங்கு ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறார். இஸ்ரவேலை இலக்கம் பார்ப்பதற்கு தாவீது ஏவப்படுகிறார்.

கர்த்தர் ஒருபோதும் மனுஷருடைய பாவத்திற்கு காரணமானவரல்ல. அவர் எந்த மனுஷரையும் சோதிக்கிறவருமல்ல. இஸ்ரவேலை இலக்கம் பார்க்க சொல்லுமாறு, கர்த்தர் தாவீதை ஏவவில்லை. சாத்தானே தாவீதை இந்தக் காரியத்தை செய்யுமாறு ஏவுகிறான். "சாத்தான் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்பி, இஸ்ரவேலைத் தொகையிடுகிறதற்குத் தாவீதை ஏவிவிட்டது" (1நாளா 21:1).

சாத்தான் மனுக்குலத்திற்கு சத்துருவாயிருக்கிறான். அவன் மனுஷரைப் பாவம் செய்யத் தூண்டுகிறான். இயேசுகிறிஸ்துவைக் காட்டிக்கொடுக்குமாறு சாத்தான் யூதாஸ்காரியோத்தை ஏவினான். கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி. சாத்தான் தாவீதை ஏவினான், கர்த்தர் ஒரு நோக்கத்தோடு அதை அனுமதிக்கிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தினிமித்தமாக, ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்கிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வரும்போது, அவருடைய கோபத்திற்கு மனுஷருடைய பாவமே காரணம் என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். மனுஷர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள்.

தாவீது தன்னோடிருக்கிற சேனாதிபதியாகிய யோவாபைப் பார்த்து, ஜனங்களை தொகையிடுமாறு கட்டளையிடுகிறார். யோவாப் தாவீதின் கட்டளைக்கு உடனே கீழ்ப்படியாமல், அவருடைய வார்த்தைகளை எதிர்க்கிறார். யோவாபால் தாவீதுக்கு விரோதமாக கடினமான வார்த்தைகளைப் பேசமுடியாது. தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார். யோவாபோ தாவீதுக்கு கீழே வேலை செய்கிற அவருடைய சேனாபதி.

இஸ்ரவேலின் கோத்திரங்களை எண்ணித்தொகையிடுமாறு தாவீது யோவாபுக்கு கட்டளை கொடுக்கிறார். தாவீதின் வார்த்தைகள் மதியீனமானது என்று யோவாபுக்கு தெரிந்திருக்கிறது. தாவீது மாயையையும், வீண்பெருமையையும் நம்புகிறார்.

இஸ்ரவேல் தேசம் செழிப்பாயிருக்கிறது. ஜனங்கள்மீது அதிகமான வரியை சுமத்தவேண்டும் என்னும் அவசியமில்லை. தாவீதின் பொக்கிஷங்கள் நிரம்பியிருக்கிறது. ஜனங்களை இலக்கம் பார்த்து, அவர்கள்மீது புதிய வரிகளை விதிக்கவேண்டிய அவசியமில்லை. ஜனங்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்கும் தாவீதின் கஜானாவில் ஒன்றுமில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோருமே சமாதானமாயும், சந்தோஷமாயும், ஆறுதலாயும் இருக்கிறார்கள்.

தாவீதுக்கு வயதாயிற்று. இஸ்ரவேல் ஜனங்களை எண்ணித்தொகையேற்றும் போது, அவர்களுடைய தொகை நிச்சயமாகவே அதிகரித்திருக்கும். தாவீது இஸ்ரவேலின் ஜனத்திரட்சியைப் பார்த்து சந்தோஷப்படுவார். ஒருவேளை தாவீது தன்னுடைய சொந்த சந்தோஷத்திற்காக இஸ்ரவேலை எண்ணித்தொகையேற்றுமாறு யோவாபுக்கு கட்டளை கொடுத்திருக்கலாம்.

ஆனாலும் யோவாப் தன்னுடைய மனதிலுள்ளதை தாவீதிடம் சொல்லுகிறார். யோவாப் தாவீது ராஜாவைப் பார்த்து: "ராஜாவாகிய என் ஆண்டவனுடைய கண்கள் காணும்படி உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஜனங்களை இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும், நூறுமடங்கு அதிகமாய் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் என் ஆண்டவனாகிய ராஜா இந்தக் காரியத்தை விரும்புகிறது என்ன" *(2சாமு 24:3)* என்று கேட்கிறான்.

அப்பொழுது யோவாப்: கர்த்தருடைய ஜனங்கள் இப்போது இருக்கிறதைப்பார்க்கிலும் நூறத்தனையாய் அவர் வர்த்திக்கப்பண்ணுவாராக; ஆனாலும் ராஜாவாகிய என் ஆண்டவனே, அவர்களெல்லாரும் என் ஆண்டவனின் சேவகரல்லவா? என் ஆண்டவன் இதை விசாரிப்பானேன்? இஸ்ரவேலின்மேல் குற்றமுண்டாக இது நடக்கவேண்டியது என்ன என்றான் *(1நாளா 21:3)*.

"இஸ்ரவேலரின் ஜனங்களை எண்ணித்தொகையிடவேண்டிய அவசியம் என்ன" என்று யோவாப் தாவீதிடம் கேட்கிறான். தாவீதின் வீண்பெருமையும், மாயையான நம்பிக்கையும், மதியீனமும் யோவாபுக்கு தெரிந்திருக்கிறது. ஆனாலும் யோவாபால் தாவீதை கடின வார்த்தைகளால் கண்டிக்க முடியவில்லை. யோவாபும் இராணுவத்தலைவரும் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு, தாவீது ராஜாவின் வார்த்தை பலக்கிறது *(2சாமு 24:4)*.

யோவாப் தாவீது ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறான். யோவாபும் இராணுவத்தலைவரும் இஸ்ரவேல் ஜனங்களைத் தொகையிட, தாவீது ராஜாவைவிட்டு புறப்பட்டுப் போகிறார்கள். தாவீது ராஜாவின் கட்டளை யோவாபுக்கு பிடிக்கவில்லை. யோவாபின் மனதில் சந்தோஷமில்லாவிட்டாலும், அவன் தாவீது ராஜாவின் கட்டளையை நிறைவேற்ற புறப்பட்டுப்போகிறான். தனக்கு உதவிசெய்ய இராணுவத்தலைவரையும் தன்னோடு கூட்டிக்கொண்டு போகிறான்.

அவர்கள் யோர்தானைக் கடந்து, காத் என்னும் ஆறுகளின் நடுவே இருக்கிற பட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேரிடத்திலும் பாளயமிறங்கி, அங்கேயிருந்து கிலேயாத்திற்கும் தாதீம்ஒத்சிக்கும் போய், அங்கேயிருந்து தாண்யானுக்கும், சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் போகிறார்கள் *(2சாமு 24:5,6)*.

பிற்பாடு அவர்கள் தீரு என்னும் கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் போய், அங்கேயிருந்து யூதாவின் தென்புறமான பெயெர்செபாவுக்குப் போய், இப்படி தேசமெங்கும் சுற்றித்திரிந்து, ஒன்பது மாதமும் இருபது நாளும் ஆனபிற்பாடு எருசலேமுக்கு வருகிறார்கள் *(2சாமு 24:7,8)*.

யோவாப் ஜனத்தை இலக்கம்பார்த்த தொகையை ராஜாவுக்குக் கொடுக்கிறான்; இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்த சேவகர் எட்டுலட்சம்பேர் இருக்கிறார்கள்; யூதா மனுஷர் ஐந்து லட்சம் பேர் இருக்கிறார்கள் *(2சாமு 24:9)*.

ஜனத்தை இலக்கம்பார்த்து, தொகையைத் தாவீதிடத்தில் கொடுத்தான்; இஸ்ரவேலிலெல்லாம் பட்டயமும் உருவத்தக்கவர்கள் பதினொருலட்சம்பேரும், யூதாவில் பட்டயம் உருவத்தக்கவர்கள் நாலுலட்சத்து எழுபதினாயிரம்பேரும் இருந்தார்கள் *(1நாளா 21:5)*.

யோவாப் தனக்கு கொடுத்த இலக்கத்தை தாவீது பெற்றுக்கொள்கிறார். இது தாவீது எதிர்பார்த்த இலக்கமா, இந்த இலக்கம் தாவீதுக்கு திருப்தியாயிருக்கிறதா என்று இங்கு சொல்லப்படவில்லை. இந்த இலக்கத்தைப் பார்த்து தாவீதின் பெருமை அதிகரித்ததா அல்லது அவருடைய பெருமை அவரைவிட்டு நீங்கிப்போயிற்றா என்றும் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு 1நாளா 21:7-17

1நாளா 21:7. இந்தக் காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததானபடியினால் அவர் இஸ்ரவேலை வாதித்தார்.

1நாளா 21:8. தாவீது தேவனை நோக்கி: நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன்; இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; வெகு புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான்.

1நாளா 21:9. அப்பொழுது கர்த்தர், தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்துடனே பேசி,

1நாளா 21:10. நீ தாவீதினிடத்தில் போய்: மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள்; அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

1நாளா 21:11. அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி:

1நாளா 21:12. மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி, தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள் என்று கர்த்தர் உரைக்கிறார். இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோகவேண்டும் என்பதை யோசித்துப்பாரும் என்றான்.

1நாளா 21:13. அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான்.

1நாளா 21:14. ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளைநோயை வரப்பண்ணினார்; அதினால் இஸ்ரவேலில் எழுபதினாயிரம்பேர் மடிந்தார்கள்.

1நாளா 21:15. எருசலேமையும் அழிக்க தேவன் ஒரு தூதனை அனுப்பினார்; ஆனாலும் அவன் அழிக்கையில் கர்த்தர் பார்த்து, அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு, சங்கரிக்கிற தூதனை நோக்கி: போதும்; இப்போது உன் கையை நிறுத்து என்றார்; கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய ஒர்னானின் களத்தண்டையிலே நின்றான்.

1நாளா 21:16. தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் கண்டான்; அப்பொழுது தாவீதும் மூப்பர்களும் இரட்டுப் போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுந்தார்கள்.

1நாளா 21:17. தாவீது தேவனை நோக்கி: ஜனத்தை எண்ணச்சொன்னவன் நான் அல்லவோ? நான்தான் பாவஞ்செய்தேன்; பொல்லாப்பு நடப்பித்தேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? என் தேவனாகிய கர்த்தாவே, வாதிக்கும்படி உம்முடைய கரம் உம்முடைய ஜனத்திற்கு விரோதமாயிராமல், எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக என்றான்.

தாவீது இஸ்ரவேலை எண்ணி தொகைப்பார்த்தது கர்த்தருடைய பார்வையிலே பாவமாயிருக்கிறது. இது தாவீதின் பாவம். கர்த்தர் தாவீதைத் தண்டிக்கிறார். தாவீதின் மனதிலே பெருமையும் மதியீனமும் இருக்கிறது. கர்த்தர் தாவீதின் மதியீனத்தை, தம்முடைய நியாயத்தீர்ப்பின் கோலினால் தண்டிக்கிறார்.

தாவீது செய்த காரியம் தேவனுடைய பார்வைக்கு ஆகாததாயிருக்கிறது. கர்த்தர் இஸ்ரவேலை வாதிக்கிறார் (1நாளா 21:7). இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவம் தேவனுடைய பார்வைக்கு அருவருப்பாயிருக்கிறது. எல்லா பாவங்களையும்விட இருதயத்தின் பெருமையே கர்த்தருக்கு மிகவும் அருவருப்பான பாவம்.

தாவீதின் இருதயத்தில் பெருமையிருக்கிறது. தாவீது தன்னுடைய சேனாபதியாகிய யோவாபையும், ஜனத்தின் சேர்வைக்காரரையும் நோக்கி, "இஸ்ரவேலை எண்ணி, அவர்கள் இலக்கத்தை நான் அறியும்படிக்கு, என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" (1நாளா 21:2) என்று கட்டளையிட்டார்.

தாவீது இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையிடும்போது, கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அதே இஸ்ரவேல் புத்திரரை தொகையிடுகிறார். இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவத்தக்கவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பது தாவீதின் விருப்பம். கர்த்தரோ, இஸ்ரவேல் புத்திரரில் எத்தனைபேர் தமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணித் தொகையிடுகிறார். மனுஷன் போடும் கணக்கும், கர்த்தர் போடும் கணக்கும் வித்தியாசமாயிருக்கிறது.

யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்த தொகையை தாவீதினிடத்தில் கொடுக்கிறான். இஸ்ரவேலிலெல்லாம் பட்டயமும் உருவத்தக்கவர்கள் பதினொருலட்சம்பேரும், யூதாவில் பட்டயம் உருவத்தக்கவர்கள் நாலுலட்சத்து எழுபதினாயிரம்பேரும் இருக்கிறார்கள் (1நாளா 21:5). இந்த திரளான எண்ணிகையைப்பார்த்து தாவீது சந்தோஷப்படுகிறார்.

கர்த்தரோ, இஸ்ரவேல் புத்திரரில் எத்தனைபேர் தமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, மனம் வேதனைப்படுகிறார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய நீதியினால், தன்க்கு விரோதமாகப் பாவம் செய்த இஸ்ரவேலை வாதிக்கிறார் (1நாளா 21:7).

தாவீது தன் கண்களை ஏறெடுத்து, பூமிக்கும் வானத்திற்கும் நடுவே நிற்கிற கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தைத் தன் கையில் பிடித்து, அதை எருசலேமின்மேல் நீட்டியிருக்கக் காண்கிறார்; அப்பொழுது தாவீதும் மூப்பர்களும் இரட்டுப் போர்த்துக்கொண்டு முகங்குப்புற விழுகிறார்கள் (1நாளா 21:16).

இஸ்ரவேல் தேசத்திலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளை நோயை வரப்பண்ணுகிறார். அதினால் ஏராளமான பேர் மடிந்துபோகிறார்கள்.

தாவீது இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு கட்டளை கொடுத்தார். தான் கொடுத்த கட்டளை கர்த்தருக்கு விரோதமான பாவம் என்பதை தாவீது இப்போது உணருகிறார். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்புகிறார். தாவீது கர்த்தருடைய சமுகத்திலே தன்னுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கிறார்.

இவ்விதமாய் ஜனங்களை எண்ணின பின்பு, தாவீது ராஜாவின் இருதயம் அவரை வாதிக்கிறது; தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது. அதுவரையிலும் தூங்கிக்கொண்டிருந்த அவருடைய மனச்சாட்சி, இரவுவேளையிலே விழித்துக் கொள்கிறது. அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி: "நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாவஞ்செய்தேன்; இப்போதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன்" (2சாமு 24:10) என்று சொல்லுகிறார்.

தாவீது தேவனை நோக்கி: நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன்; இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; வெகு புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான் (1நாளா 21:8).

தாவீது காலமே எழுந்திருந்த போது, தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று (2சாமு 24:11). அதிகாலையில் காத் என்னும் தீர்க்கதரிசி தாவீதைப் பார்க்க வருவதற்கு முன்பாகவே தாவீதின் இருதயம் அவரை வாதிக்கிறது. தாவீதின் மனச்சாட்சி அவரைக் குற்றப்படுத்துகிறது.

"தாவீது காலமே எழுந்திருந்தபோது" என்று 2சாமு 24:11ஆவது வசனத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தாவீது காலமே எழுந்திருந்தபோது, தாவீதின் இருதயம் அவரை வாதித்தது என்றும், அவர் கர்த்தரை நோக்கி, "நான் இப்படி செய்ததினால் பெரிய பாவம் செய்தேன்" என்றும் ஜெபம்பண்ணியிருக்கவேண்டும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

தாவீது கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார். கர்த்தர் தாமே தன்னுடைய பாவங்களை தயவாய் மன்னிக்கவேண்டுமென்று கருத்தாய் ஜெபம்பண்ணுகிறார். "நான் பெரிய பாவம் செய்தேன்" என்றும், "நான் மகாபுத்தியீனமாய்ச் செய்தேன்" என்றும் தாவீது கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். தாவீது தன்னுடைய இருதயத்தின் பெருமையினால் இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்கச் சொன்னார். இது புத்தியீனமான காரியம்.

கர்த்தர் தாவீதின் பாவத்திற்கு தக்கதாக அவருக்கு நியாயத்தீர்ப்பு கொடுக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியும் நியாயமுமுள்ளது. பாவம் செய்த தாவீது தண்டிக்கப்படவேண்டும். அவர் தன்னுடைய பாவத்தை உணரவேண்டும். தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். தாவீது பல சமயங்களில் பாவம் செய்திருக்கிறார். அவர் ஒவ்வொருமுறை பாவம் செய்யும்போதும், தன்னுடைய பாவத்திற்கு இதுபோல மனம் வருந்துவது வழக்கம். எப்போதும்போலவே, இப்போதும் தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்துகிறார்.

தாவீது காலமே எழுந்திருந்தபோது, தன்னுடைய பாவத்தைப்பற்றி தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத் என்னும் தீர்க்கதரிசியிடம் விசாரிக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார். தாவீதுக்கு என்னென்ன வார்த்தைகளைச் சொல்லவேண்டுமென்று, கர்த்தருடைய வார்த்தை காத்திற்கு உண்டாயிற்று.

கர்த்தர் காத்தை நோக்கி, "நீ தாவீதினிடத்தில் போய், மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்" *(2சாமு 24:12; 1நாளா 21:10)* என்று சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் வெறுக்கிற ஏழுகாரியங்களில் மேட்டிமையும் ஒன்று.

"ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே" *(நீதி 6:16-19)*.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்திற்கு தண்டனை கொடுக்கப்படும். தாவீது பாவம் செய்தாலும், இந்தப் பாவத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் பங்குள்ளது. ஆகையினால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேலின்மேல் மூளுகிறது *(2சாமு 24:1)*. இஸ்ரவேல் ஜனங்களும் தாவீதின் பாவத்திற்கு பங்காளிகளாயிருப்பதினால், தாவீதுக்கு தண்டனை வரும்போது, இஸ்ரவேல் ஜனங்களுக்கும் தண்டனை வருகிறது.

தாவீது கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பித்தார். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் பாவத்திற்கு ஆதரவாயிருந்தார்கள். தாவீது இஸ்ரவேல் தேசம் முழுவதும் பாவம் செய்யுமாறு, ஜனங்கள் அவரை வழிநடத்தினார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தாவீதின் பாவத்தை பரிபூரணமாக நிறைவேற்றி வைத்தார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் தாவீதின்மேலும், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோர்மேலும் வருகிறது.

கர்த்தர் தாவீதுக்கு மூன்று தண்டனைகளைச் சொல்லுகிறார். இந்த மூன்று தண்டனைகளில் தாவீது ஒரு தண்டனையை தெரிந்துகொள்ளவேண்டும். கர்த்தர் மூன்று தண்டனைகளையும் மொத்தமாகக் கொடுக்க விரும்பவில்லை. அதே வேளையில் கர்த்தர் தாவீதை தண்டிக்காமலும் விட்டு விடவில்லை.

கர்த்தர் காத் மூலமாக தாவீதை நோக்கி, "மூன்று காரியங்களை உனக்கு முன்பாக வைக்கிறேன்; அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்துகொள், அதை நான் உனக்குச் செய்வேன்" *(2சாமு 24:12; 1நாளா 21:10)* என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை காத் தாவீதுக்கு சொல்லுகிறார். அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவரை நோக்கி: "உம்முடைய தேசத்திலே ஏழு வருஷம் பஞ்சம் வர வேண்டுமோ? அல்லது மூன்றுமாதம் உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின்தொடர, நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்றுநாள் கொள்ளைநோய் உண்டாகவேண்டுமோ? இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோக வேண்டும் என்பதை நீர் யோசித்துப் பாரும்" *(2சாமு 24:13)* என்று சொல்லுகிறான்.

அப்படியே காத் தாவீதினிடத்தில் வந்து, அவனை நோக்கி: மூன்று வருஷத்துப் பஞ்சமோ? அல்லது உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரமோ? அல்லது மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோயோ? இவைகளில் ஒன்றைத் தெரிந்துகொள் என்று கர்த்தர் உரைக்கிறார். இப்போதும் என்னை அனுப்பினவருக்கு நான் என்ன மறுஉத்தரவு கொண்டுபோகவேண்டும் என்பதை யோசித்துப்பாரும் என்றான் (1நாளா 21:11,12).

பரலோகப்பிதா தாவீதை தண்டித்து திருத்த விரும்புகிறார். தாவீதைத் தண்டிப்பதில் கர்த்தருக்கு பிரியமல்ல. கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். அவர் பாவிகளையும் நேசிக்கிறார். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். மனுஷருடைய பாவத்தினிமித்தமாக, அவர்களை தண்டித்து முற்றிலுமாக அழித்துப்போடவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமல்ல. பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் பாவிகளுக்கு கொடுக்கும் தண்டனை, அவர்கள் தங்களுடைய பாவங்களை உணரவும், அவர்கள் தங்களுடைய பாவங்களிலிருந்து விடுதலை பெறவும் உதவியாயிருக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் தாவீதுக்கு மூன்று தண்டனைகளைச் சொல்லுகிறார். அவையாவன : 1. இஸ்ரவேல் தேசத்திலே மூன்றுவருஷம் பஞ்சம். 2. மூன்றுமாத சங்காரம் 3. இஸ்ரவேல் தேசத்திலே கொள்ளை நோய் உண்டாகும். தாவீது இந்த மூன்று தண்டனைகளில், ஏதாவது ஒரு தண்டனையைத் தெரிந்துகொள்ளவேண்டும். தாவீது இதை அவசரப்பட்டு முடிவுபண்ண வேண்டிய அவசியமில்லை. அவர் யோசித்துப் பார்த்து முடிவு பண்ணலாம். தாவீது முடிவு பண்ணாமலும் இருக்கமுடியாது.

அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: "கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக" (2சாமு 24:14; 1நாளா 21:13) என்று சொல்லுகிறார்.

சத்துருக்கள் மூலமாக தனக்கு தண்டனையோ அல்லது பஞ்சமோ வரக்கூடாது என்று தாவீது நினைக்கிறார். கர்த்தருடைய கோல் தன்னை கண்டித்து திருத்தட்டும் என்று, தாவீது கர்த்தரிடத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கிறார். தாவீது மனுஷர் கையில் விழ விரும்பவில்லை. அவர் கர்த்தருடைய கையில் விழ ஆயத்தமாயிருக்கிறார். கர்த்தருடைய இரக்கங்கள் மகாபெரியது என்பது தாவீதுக்கு தெரியும். தாவீது ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில், கர்த்தருடைய மகாபெரிய தயவையும், கிருபையையும், இரக்கங்களையும் அனுபவித்திருக்கிறார்.

பஞ்சம் மூன்றுவருஷம் இஸ்ரவேல் தேசத்தில் இருக்கும். சத்துருக்கள் மூன்று மாதம் தாவீதைப் பின்தொடருவார்கள். கொள்ளைநோயோ இஸ்ரவேல் தேசத்தில் மூன்று நாள் மாத்திரமே இருக்கும். இம்மூன்று தண்டனைகளில், கொள்ளைநோய் மாத்திரமே மிகவும் குறுகிய காலத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. தாவீது இந்தக் குறுகிய காலத்திற்குள் தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி விடலாம் என்றும், கர்த்தரோடு ஒப்புரவாகிவிடலாம் என்றும் விசுவாசத்தோடிருக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தில் மூன்று நாள் கொள்ளை நோய் உண்டாகும்போது, அந்த நோய் தாவீதின் மேலும், அவருடைய சொந்தக் குடும்பத்தார்மேலும் வரும். இஸ்ரவேல் தேசத்திலே சாதாரண ஜனங்கள்மீது கொள்ளை நோய் வருவதுபோல, பிரபுக்கள் மேலும், ராஜகுடும்பத்தார்மேலும் கொள்ளை நோய் வரும்.

பஞ்சம் அப்படிப்பட்டதல்ல. தரித்திரருக்கு மாத்திரமே பஞ்சம் வரும். ஐசுவரியவான்கள் பஞ்சத்திற்கு தப்பித்துக்கொள்வார்கள். தாவீதும் அவருடைய ராஜகுடும்பத்தாரும் பஞ்சத்திற்கு நிச்சயமாய்த் தப்பித்துக்கொள்வார்கள். இஸ்ரவேலையும் யூதாவையும் இலக்கம் பார்க்குமாறு தாவீதுதான் கட்டளைகொடுத்தார். இந்தப் பாவத்திற்கு தண்டனையாக இஸ்ரவேல் தேசத்தின்மேல் மூன்றுவருஷம் பஞ்சம் வரும்போது, தாவீதும் அவருடைய ராஜகுடும்பத்தாரும் பஞ்சத்திற்கு தப்பிப்பார்கள். தாவீது இந்தத் தண்டனைக்குத்தப்பிக்க விரும்பவில்லை. தன்னுடைய பாவத்திற்கு மற்றவர்கள் தண்டனை அனுபவிக்கும்போது, தான் மாத்திரம் பாவத்திற்கு தப்பிக்க விரும்பவில்லை.

தாவீது கொள்ளை நோய்க்கு ஒப்புக்கொடுக்கிறார். மனுஷர் கையிலே விழாமல் கர்த்தருடைய கையிலே விழ ஆரம்பித்திருக்கிறார். கர்த்தருடைய இரக்கங்கள் மகாபெரியதாயிருப்பதினால், கர்த்தர் தன்னுடைய பாவத்தை மன்னிப்பார் என்று தாவீது எதிர்பார்க்கிறார். தாவீதின் இருதயம் மேட்டிமையாயிருந்தபோது அது பாவம் செய்தது. இப்போதோ அவருடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறது. தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்துகிறது. அந்த இருதயம் கர்த்தருடைய இரக்கத்திற்காக கெஞ்சுகிறது.

தான் பாவம் செய்தாலும், கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர் என்று தாவீது சொல்லுகிறார். பரிசுத்தவான்கள் கர்த்தருடைய தண்டனைகளை அனுபவித்தாலும், அவர்கள் கர்த்தரைப்பற்றி நல்ல வார்த்தைகளையே சொல்லுவார்கள். அவர்கள் கர்த்தரை மேன்மைப்படுத்துவார்கள். அவரை மகிமைப்படுத்துவார்கள். அவரைப் போற்றிப் புகழுவார்கள். தங்களுடைய பாவத்திற்கு கர்த்தர் நீதியான தண்டனையைக் கொடுத்தார் என்று பரிசுத்தவான்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை அங்கீகரிப்பார்கள். "கர்த்தர் என்னைக் கொன்றுபோட்டாலும், நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன்'' என்று யோபு சொன்னார். இதுவே பரிசுத்தவான்களின் பொதுவான வார்த்தை.

இஸ்ரவேல் தேசத்திலே மூன்றுநாள் கொள்ளை நோய் உண்டாகட்டும் என்று தாவீது சொல்லுகிறார். அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்று காலமேதொடங்கி குறித்தகாலம் வரைக்கும் கொள்ளைநோயை வரப்பண்ணுகிறார்; அதினால் தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள ஜனங்களில் எழுபதினாயிரம்பேர் செத்துப்போகிறார்கள் *(2சாமு 24:15)*. மூன்று நாளில் எழுபதினாயிரம் பேர் செத்துப்போகிறார்களா அல்லது முதல்நாள் மாலையில், அந்திப்பலி செலுத்தும் வேளைக்கு முன்பாக எழுபதினாயிரம் பேர் செத்துப்போகிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கர்த்தரோ தம்முடைய கிருபையினால், தம்முடைய நியாயத்தீர்ப்பை தளர்த்துகிறார். தேவதூதன் எருசலேமை அழிக்கத் தன் கையை அதின்மேல் நீட்டினபோது, கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறார். தேவதூதன் எருசலேமை அழிக்க ஆயத்தமாயிருக்கிறான்.

ஒருவேளை மற்ற பட்டணங்களைவிட எருசலேமிலே துன்மார்க்கமும், மேட்டிமையும் அதிகமாகயிருந்திருக்கலாம். ஆகையினால் தேவதூதன் எருசலேமை அழிக்க தன் கையை அதின் மேல் நீட்டுகிறான். அப்போது கர்த்தர் அந்தத் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறார். கர்த்தர் ஜனங்களைச் சங்கரிக்கிற தூதனை நோக்கி: "போதும், இப்போது உன் கையை நிறுத்து" என்று சொல்லுகிறார்; அந்த வேளையில் கர்த்தருடைய தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான் *(2சாமு 24:16; 1நாளா 21:15)*.

ஒர்னானின் போரடிக்கிற களம் மோரியா மலையிலிருக்கிறது. இதே மலையில்தான் ஆபிரகாம் தன்னுடைய ஒரே பேறான குமாரனாகிய ஈசாக்கைப் பலியிடுவதற்கு வந்தார். அப்போது கர்த்தர் வானத்திலிருந்து ஆபிரகாமோடு பேசினார். ஈசாக்கை பலியிடுவதை தடைபண்ணினார். அதுபோலவே இப்போது, கர்த்தர் வானத்திலிருந்து பேசுகிறார். எருசலேமை அழித்துப்போடாதவாறு அதைப் பாதுகாக்கிறார்.

தாவீது ஏற்கெனவே தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார். "நான் இப்படி செய்ததினாலே பெரிய பாவம் செய்தேன்" என்றும், "நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன்" (2சாமு 24:10) என்றும் தாவீது கர்த்தரிடத்தில் கருத்தாய் ஜெபித்தார்.

இப்போது தாவீது மறுபடியுமாய், கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார். ஜனத்தை உபாதிக்கிற தூதன் எபூசியனாகிய அர்வனாவின் போரடிக்கிற களத்திற்கு நேரே இருக்கிறான். அர்வனாவும் ஒர்னானும் ஒரே நபர்.

தாவீது ஜனத்தை உபாதிக்கிற தூதனை காண்கிறார். அப்போது, தாவீது கர்த்தரை நோக்கி: "இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருப்பதாக" (2சாமு 24:17) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

தாவீது தேவனை நோக்கி: ஜனத்தை எண்ணச்சொன்னவன் நான் அல்லவோ? நான்தான் பாவஞ்செய்தேன்; பொல்லாப்பு நடப்பித்தேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? என் தேவனாகிய கர்த்தாவே, வாதிக்கும்படி உம்முடைய கரம் உம்முடைய ஜனத்திற்கு விரோதமாயிராமல், எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக என்றான் (1நாளா 21:17).

தேவதூதனுடைய கையிலே பட்டயம் இருக்கிறது. அவன் அந்தப் பட்டயத்தை எருசலேமை அழிப்பதற்காக, அதற்கு நேராக நீட்டியிருக்கிறான். கர்த்தருடைய தூதன் இப்போது எருசலேமை உபாதிக்கிற தூதனாயிருக்கிறான். தாவீது அந்தத் தூதனைப் பார்க்கிறார். ஆனாலும் அவர் அந்தத் தூதனிடம் ஒன்றும் விண்ணப்பம்பண்ணவில்லை. தாவீது கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய தூதனால் அவனுடைய சுயசித்தத்தின் பிரகாரமோ அல்லது, சுயவிருப்பத்தின் பிரகாரமோ கிரியை செய்ய முடியாது என்பது தாவீதுக்கு தெரியும். கர்த்தரே அந்தத் தூதனை ஆளுகை செய்கிறவர். தூதனுடைய கையில் சுடரொளி பட்டயம் இருக்கிறது. கர்த்தரிடத்தில் மகாபெரிய இரக்கங்கள் இருக்கிறது. தாவீது கர்த்தருடைய இரக்கத்திற்காக ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது கர்த்தரை நோக்கி, "இதோ, நான்தான் பாவஞ்செய்தேன்; நான் தான் அக்கிரமம்பண்ணினேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது?" என்று கேட்கிறார். தாவீது தன்னுடைய பாவங்களை அங்கீகரிக்கிறார். தன்னுடைய பாவங்களுக்கும், மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கும் தானே காரணம் என்பதையும் தாவீது ஒத்துக்கொள்கிறார். தன்னுடைய பாவத்திற்காக, எருசலேம் ஜனங்கள் அழிந்துபோகக்கூடாது என்று தாவீது அவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

தாவீது கர்த்தரிடத்தில் "நான்தான் பாவம் செய்தேன்", ஆகையினால், "உம்முடைய கை எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக" என்று தாவீது விண்ணப்பம்பண்ணுகிறார். தாவீது இஸ்ரவேல் ஜனங்களைப்பற்றிச் சொல்லும்போது, "இந்த ஆடுகள் என்ன செய்தது" என்று கேட்கிறார்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். நம்முடைய பாவங்களிமித்தமாக நாம் தண்டிக்கப்படக்கூடாது என்று கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்துபேசுகிறார். நம்முடைய பாவங்களுக்கும், பாவத்தின் தண்டனைகளுக்கும் நாம் தப்பிக்கவேண்டும் என்பதற்காக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நம்முடைய பாவங்களை சிலுவையிலே தம்மீது ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவானவர் தம்முடைய திருஇரத்தத்தை, நம்முடைய பாவங்களை நீக்குவதற்கான மீட்பின் கிரயமாக செலுத்தினார். ஆடுகள் தப்பிக்க வேண்டும் என்பதற்காக, நல்ல மேய்ப்பர் தன்னுடைய ஜீவனையே கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தை அங்கீகரிக்கிறார். தாவீது தேவனை நோக்கி: "நான் இந்தக் காரியத்தைச் செய்ததினால் மிகவும் பாவஞ்செய்தேன்; இப்போதும் உம்முடைய அடியேனின் அக்கிரமத்தை நீக்கிவிடும்; வெகு புத்தியீனமாய்ச் செய்தேன்" (1நாளா 21:8) என்று சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய பாவத்தை உணருகிறார். தாவீதின் பாவம் மதியீனமானது. தாவீதின் மதியீனம் திருத்தப்படவேண்டும். அவருடைய பாவத்திற்கு தண்டனை கொடுக்கப்படவேண்டும். பாவம் தண்டிக்கப்பட்டால்தான் பாவத்தின் அக்கிரமம் நீங்கும். கர்த்தரால் மாத்திரமே தன்னுடைய அக்கிரமத்தை நீக்க முடியும் என்று தாவீதுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் தாவீது தேவனை நோக்கி, "இப்போதும் உம்முடைய அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும்" என்று சொல்லுகிறார். தன்னுடைய அக்கிரமம் நீக்கப்படுவதற்கு, தாவீது தன்னை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார்.

கர்த்தர் தன்மீது கோபமாயிருக்கிறார் என்பது தாவீதுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் தாவீது தன்னை கர்த்தருடைய கிருபைக்கும், இரக்கத்திற்கும் ஒப்புக்கொடுக்கிறார். தாவீது கர்த்தரோடு வழக்காடவில்லை.

அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: "கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக" (1நாளா 21:13) என்று சொல்லுகிறார்.

தாவீதைப்போல பக்தியுள்ளவர்களும் நீதிமான்களும், தங்களை கர்த்தருடைய கையில் ஒப்புக்கொடுக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய இரக்கத்தையும், கிருபையையும் பற்றி நன்றாய்த் தெரியும். அவர்கள் கர்த்தர்மீது உறுதியான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல்மீது வந்தபோது, தாவீது இஸ்ரவேலுக்காக பரிந்துபேசுகிறார். தாவீது தேவனை நோக்கி: "ஜனத்தை எண்ணச்சொன்னவன் நான் அல்லவோ? நான்தான் பாவஞ்செய்தேன்; பொல்லாப்பு நடப்பித்தேன்; இந்த ஆடுகள் என்னசெய்தது? என் தேவனாகிய கர்த்தாவே, வாதிக்கும்படி உம்முடைய கரம் உம்முடைய ஜனத்திற்கு விரோதமாயிராமல், எனக்கும் என் தகப்பன் வீட்டிற்கும் விரோதமாயிருப்பதாக" (1நாளா 21:17) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதோடு நேரடியாகப் பேசாமல்,தாவீதின் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்துடனே பேசுகிறார். காத் என்பவன் தாவீதின் ஞானதிருஷ்டிக்காரன் (1நாளா 21:9; 2சாமு 24:11; 2நாளா 29:25). காத் தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் கூறி வந்தான். தாவீது ராஜாவாவதற்கு முன்பாகவே காத் அவனுக்குத் தீர்க்கதரிசனம் சொன்னான். (1சாமு 22:5). காத்தைப் போல நாத்தானும் தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் கூறினான். (1நாளா 7:1-29; 1நாளா 12:1-15).

தாவீது மனந்திரும்பிய நாளில் கர்த்தர் காத்தின் மூலமாகத் தாவீதுக்கு மறுஉத்தரவு அருளுகிறார். (2சாமு 24:11). ஆனாலும் கர்த்தர் கூறிய செய்தி மகிழ்ச்சியான செய்தியல்ல. (1நாளா 21:9-12). கர்த்தர் காத் மூலமாக தாவீதுக்கு முன்பாக மூன்று காரியங்களை வைக்கிறார். அவையாவன :

1. மூன்று வருஷத்துப் பஞ்சம்.

2. உன் பகைஞரின் பட்டயம் உன்னைப் பின்தொடர நீ உன் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போகச் செய்யும் மூன்றுமாதச் சங்காரம்.

3. மூன்றுநாள் கர்த்தருடைய தூதன் இஸ்ரவேலுடைய எல்லையெங்கும் சங்காரம் உண்டாகும்படி தேசத்தில் நிற்கும் கர்த்தருடைய பட்டயமாகிய கொள்ளை நோய்.

தாவீதே கர்த்தருடைய கையிலே விழுவதைத் தெரிந்துகொள்கிறார். இதன் நிமித்தமாய் கர்த்தர் இஸ்ரவேலிலே கொள்ளை நோயை வரப்பண்ணுகிறார்.

கர்த்தருக்கு ஒரு பலிபீடம் 1நாளா 21:18-30

1நாளா 21:18. அப்பொழுது எபூசியனாகிய ஒர்னானின் களத்திலே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தை உண்டாக்கும்படி, தாவீது அங்கே போகவேண்டுமென்று தாவீதுக்குச் சொல் என்று கர்த்தருடைய தூதன் காத்துக்குக் கட்டளையிட்டான்.

1நாளா 21:19. அப்படியே தாவீது கர்த்தரின் நாமத்திலே காத் சொன்ன வார்த்தையின்படியே போனான்.

1நாளா 21:20. ஒர்னான் திரும்பிப்பார்த்தான்; அவனும் அவனோடிருக்கிற அவனுடைய நாலுகுமாரரும் அந்த தேவதூதனைக் கண்டு ஒளித்துக்கொண்டார்கள்; ஒர்னானோ போரடித்துக்கொண்டிருந்தான்.

1நாளா 21:21. தாவீது ஒர்னானிடத்தில் வந்தபோது, ஒர்னான் கவனித்துத் தாவீதைப் பார்த்து, அவன் களத்திலிருந்து புறப்பட்டுவந்து, தரைமட்டும் குனிந்து தாவீதை வணங்கினான்.

1நாளா 21:22. அப்பொழுது தாவீது ஒர்னானை நோக்கி: இந்தக் களத்தின் நிலத்திலே நான் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டும்படிக்கு அதை எனக்குக் கொடு; வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்பட, எனக்கு அதைப் பெறும் விலைக்குக் கொடு என்றான்.

1நாளா 21:23. ஒர்னான் தாவீதை நோக்கி: ராஜாவாகிய என் ஆண்டவன் அதை வாங்கிக்கொண்டு, தம்முடைய பார்வைக்கு நலமானபடி செய்வாராக; இதோ, சர்வாங்க தகனங்களுக்கு மாடுகளும், விறகுக்குப் போரடிக்கிற உருளைகளும், போஜனபலிக்குக் கோதுமையும் ஆகிய யாவையும் கொடுக்கிறேன் என்றான்.

1நாளா 21:24. அதற்குத் தாவீதுராஜா ஒர்னானை நோக்கி: அப்படியல்ல, நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்குச் சர்வாங்க தகனத்தைப் பலியிடாமல், அதை பெறும் விலைக்கு வாங்குவேன் என்று சொல்லி,

1நாளா 21:25. தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறைபொன்னை ஒர்னானுக்குக் கொடுத்து,

1நாளா 21:26. அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அப்பொழுது அவர் வானத்திலிருந்து சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவனுக்கு மறுஉத்தரவு கொடுத்ததுமல்லாமல்,

1நாளா 21:27. தேவதூதன் தன்னுடைய பட்டயத்தை உறையிலே திரும்பப் போடவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்.

1நாளா 21:28. எபூசியனாகிய ஒர்னானின் களத்திலே கர்த்தர் தனக்கு உத்தரவு அருளினதைத் தாவீது அக்காலத்திலே கண்டு அங்கே தானே பலியிட்டான்.

1நாளா 21:29. மோசே வனாந்தரத்தில் உண்டாக்கின கர்த்தருடைய வாசஸ்தலமும் சர்வாங்க தகனபலி பீடமும் அக்காலத்திலே கிபியோனின் மேட்டில் இருந்தது.

1நாளா 21:30. தாவீது கர்த்தருடைய தூதனின் பட்டயத்திற்குப் பயந்திருந்தபடியால், அவன் தேவசந்நிதியில் போய் விசாரிக்கக்கூடாதிருந்தது.

கர்த்தர் காத் மூலமாகத் தாவீதுக்குச் சொன்ன இரண்டாவது செய்தி. தாவீது பாவநிவாரண பலிசெலுத்துவதற்கு ஒர்னானின் களத்தில் ஒரு பலிபீடத்தை உண்டாக்க வேண்டும். அப்போது தேவனுடைய கோபம் தாவீதையும், அவனுடைய தேசத்தையும் விட்டு நீங்கும். (1நாளா 21:18-25).

காத் சொன்ன வார்த்தையின்படியே தாவீது போகிறார். தாவீது எந்தவிதமான தாமதமும் பண்ணவில்லை. எருசலேமின் பாதுகாப்பும், இஸ்ரவேலின் ஜீவனும் கர்த்தருடைய கையில் இருக்கிறது. தாவீது கர்த்தருடைய கட்டளைக்கு உடனடியாகக் கீழ்ப்படிந்தால் இவர்கள் எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள். தாவீது கீழ்ப்படியும் வரையிலும் கர்த்தருடைய தூதனின் சங்காரம் தொடரும். ஆகையினால் தாவீது தாமதமில்லாமல் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறார்.

ஒர்னானுக்கு அர்வானா என்ற மறுபெயரும் உள்ளது. (2சாமு 24:18). ஒர்னான் தாவீதையும், கர்த்தருடைய தூதனையும் கண்டான். கர்த்தருடைய தூதனைக் கண்டு, ஒர்னானும், அவனுடைய நாலு குமாரரும் தங்களை ஒளித்துக் கொண்டார்கள். தாவீது ராஜாவையும், ராஜாவின் மனுஷரையும் பார்த்தபோது ஒர்னானுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று. ஆனாலும் தாவீது நீதிமான். அவன் நீதியாய் நியாயம் விசாரிப்பான் என்று நம்பி, ஒர்னான் தன்னுடைய களத்திலிருந்து புறப்பட்டுவந்து, தரைமட்டும் குனிந்து தாவீதை வணங்கினான்.

தேசத்தில் உண்டான வாதையைப் பற்றி ஒர்னானுக்கும் தெரிந்திருக்கும். தாவீதைப் போலவே ஒர்னானும் வாதை ஜனத்தைவிட்டு நிறுத்தப்பட வேண்டுமென்று விரும்புகிறான். தன்னுடைய நிலத்தையும், பலிசெலுத்த மாடுகளையும், விறகுகளையும், கோதுமைகளையும், ஒர்னான் தாவீதுக்குத் தர சம்மதிக்கிறான். (1நாளா 21:22-23).

ஒர்னான் நிலத்தையும், பலிசெலுத்துவதற்குத் தேவையான பொருட்களையும் தாவீதுக்கு இலவசமாகத்தர விரும்புகிறான். தாவீதோ அதை இலவசமாகப் பெற்றுக் கொள்ள மறுத்துவிடுகிறார். தாவீது பாவம் செய்திருக்கிறார். இந்தக் குறிப்பிட்ட இடத்தில் பலிசெலுத்துமாறு கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறார். தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாகத் தாவீது அதற்குரிய கிரயத்தைச் செலுத்த விரும்புகிறார். (1நாளா 21:18).

தாவீது அந்த நிலத்திற்கு அறுநூறு சேக்கல் நிறைபொன் கிரயமாகக் கொடுக்கிறார். (2சாமு 24:24).

தாவீது அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தி, கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறார்; அப்பொழுது கர்த்தர் வானத்திலிருந்து சர்வாங்க தகனபலிபீடத்தின்மேல் இறங்கின அக்கினியினால் அவருக்கு மறுஉத்தரவு கொடுக்கிறார் (1நாளா 21:26).

பலிபீடத்தின்மீது கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியை அனுப்புகிறார். சர்வாங்க தகனபலியைக் கர்த்தர் அங்கிகரித்துக் கொண்டார் என்பதற்கு இது அடையாளமாகும். (ஆதி 4:4; ஆதி 15:17; லேவி 9:24; 1இராஜா 18:38).

தேவதூதன் தன்னுடைய பட்டயத்தை உறையிலே திரும்பப் போடவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொல்லுகிறார். எபூசியனாகிய ஒர்னானின் களத்திலே கர்த்தர் தனக்கு உத்தரவு அருளினதைத் தாவீது அக்காலத்திலே கண்டு அங்கே தானே பலியிடுகிறார்.

ஒர்னானின் களத்தில் கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியை அனுப்பி, மறுஉத்தரவு கொடுக்கிறார். தேவதூதனிடம் தன்னுடைய பட்டயத்தைத் தன்னுடைய உறையிலே திரும்பப் போடுமாறு கர்த்தர் இந்த இடத்தில் கட்டளையிட்டார். ஆகையினால் கர்த்தருடைய தேவாலயத்தை இந்த இடத்திலேயே கட்டி, அங்கு அவருக்குப் பலிகளைச் செலுத்த வேண்டுமென்று தாவீது தீர்மானம் பண்ணுகிறார். (1நாளா 22:1).

மோசே உண்டாக்கின ஆசரிப்புக் கூடாரம் இன்னும் கிபியோனில் இருக்கிறது. பெலிஸ்தர் உடன்படிக்கைப் பெட்டியைக் கைப்பற்றிய போது, அவர்கள் அதை முழுவதுமாக அழித்துப்போடவில்லை. மோசே ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்கி, 620 வருஷங்களுக்கு மேலாயிற்று. (1சாமு 5).

தாவீது கர்த்தருடைய தூதனின் பட்டயத்திற்குப் பயந்திருந்தபடியால், அவர் தேவசந்நிதியில் போய் விசாரிக்கக்கூடாதிருக்கிறது (1நாளா 21:30). தாவீது கிபியோனுக்குப் போய், தேவனிடத்தில் விசாரிப்பதற்குப் பயப்படுகிறார். ஏனெனில் கர்த்தருடைய தூதன் உருவின பட்டயத்தோடு அங்கு நிற்கிறான். ஆகையினால் அங்கு உடனடியாகப் பலிகளைச் செலுத்தி, ஜனத்தின்மீது வரும் வாதையை நிறுத்த வேண்டுமென்று தாவீது விரும்புகிறார்.

22 அதிகாரம்

தாவீது ஒர்னானின் களத்திலே ஒரு பலிபீடம் கட்டி, அதிலே கர்த்தருக்கு பலிசெலுத்துகிறார். அந்த ஸ்தலத்திலே கர்த்தருடைய ஆலயம் கட்டப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1நாளா 22:1).

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஆயத்த வேலைகளை மேற்கொள்கிறார் (1நாளா 22:2-5). கர்த்தருடைய ஆலயம் கட்டுவது சம்பந்தமாக, தாவீது தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு கட்டளை கொடுக்கிறார் (1நாளா 22:6-16). இஸ்ரவேல் பிரபுக்கள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவியாயிருக்க வேண்டுமென்று தாவீது அவர்களுக்கும் கட்டளை கொடுக்கிறார் (1நாளா 22:17-19).

தாவீது இஸ்ரவேல் புத்திரரை எண்ணி தொகையேற்ற சொன்னபோது அவருடைய இருதயத்தில் பெருமையிருந்தது. இப்போதோ அவர் மிகுந்த மனத்தாழ்மையோடு, கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தன்னைத் தாழ்த்துகிறார்.

கர்த்தருடைய ஆலயம் 1நாளா 22:1-5

1நாளா 22:1. அப்பொழுது தாவீது: தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே; இஸ்ரவேல் பலியிடும் சர்வாங்க தகனபலிபீடம் இருக்கும் ஸ்தலமும் இதுவே என்றான்.

1நாளா 22:2. பின்பு தாவீது இஸ்ரவேல் தேசத்திலிருக்கிற அந்நியஜாதியாரைக் கூடிவரச் செய்து, தேவனுடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கான கல்லுகளை வெட்டிப் பணிப்படுத்தும் கல்தச்சரை ஏற்படுத்தினான்.

1நாளா 22:3. தாவீது வாசல்களின் கதவுகளுக்கு வேண்டிய ஆணிகளுக்கும் கீல்களுக்கும் மிகுதியான இரும்பையும், நிறுத்து முடியாத ஏராளமான வெண்கலத்தையும்,

1நாளா 22:4. எண்ணிறந்த கேதுருமரங்களையும் சம்பாதித்தான்; சீதோனியரும் தீரியரும் தாவீதுக்குத் திரளான கேதுருமரங்களைக் கொண்டுவந்தார்கள்.

1நாளா 22:5. தாவீது: என் குமாரனாகிய சாலொமோன் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; கர்த்தருக்குக் கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகா பெரியதாயிருக்கவேண்டும்; ஆகையால் அதற்காக வேண்டியவைகளை இப்பொழுதே சேகரம்பண்ணவேண்டும் என்று சொல்லி, தாவீது தன் மரணத்திற்கு முன்னே திரளாய்ச் சவதரித்துவைத்தான்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது ஒரு ஸ்தலத்தை தீர்மானம்பண்ணுகிறார். இது ஒர்னானின் களமாயிருக்கிறது. ஜீவனுள்ள தேவனுடைய சபை, அவருடைய களத்தைப்போலவே இருக்கிறது. அது கர்த்தர் போரடிக்கிற களம்.

"என் போரடிப்பின் தானியமே, என் களத்தின் கோதுமையே, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரால் நான் கேள்விப்பட்டதை உங்களுக்கு அறிவித்தேன்" (ஏசா 21:10).

இயேசுகிறிஸ்துவின் தூற்றுக்கூடை அவருடைய கையிலிருக்கிறது. கிறிஸ்துவானவர் தம்முடைய களத்தை சுத்தம்பண்ணுகிறார். களம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய பலிபீடம். பலிபீடத்திற்காகவே ஆலயம் கட்டப்படுகிறது. கர்த்தருடைய தேவாலயம் கட்டப்படுவதற்கு முன்பாகவே, அவருக்கு பலிபீடம் இருந்தது.

இஸ்ரவேல் ஜனத்தின்மீது வந்த வாதை நின்றுபோயிற்று. தாவீது ஒர்னானின் களத்தைப் பார்த்து, தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே என்று அறிவிக்கிறார்.

தேவாலயத்தைக் கட்டுவதற்காகத் தேவைப்படும் பொருட்களைச் சேகரிக்கும் வேலை ஆரம்பமாகிறது. தாவீது தேவாலயம் கட்டுவதற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் சேகரிக்கிறார். தாவீதின் குமாரன் சாலொமோன் தேவாலயத்தைக் கட்டுகிறார் (1இராஜா 6:1,38; 1இராஜா 7:1).

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு சேகரித்த பொருட்களின் விவரம் வருமாறு:

1. வெட்டிப் பணிப்படுத்தப்பட்ட கற்கள். (நாளா 22:2,14)

2. ஆணிகளுக்கும் கீல்களுக்கும் தேவையான இரும்பு. (நாளா 22:3,16)

3. நிறுத்து முடியாத ஏராளமான வெண்கலம். (நாளா 22:3,14,16)

4. எண்ணிறந்த கேதுருமரங்கள். (நாளா 22:4; 1நாளா 18:8)

5. பொன் - ஒரு இலட்சம் தாலந்து (நாளா 22:14,16)

6. வெள்ளி - பத்து இலட்சம் தாலந்து (நாளா 22:14,16)

7. ஏராளமான மரங்கள் (நாளா 22:14)

இந்தப் பொருட்கள் தவிர, தாவீது கல்தச்சரையும், மரத்தச்சரையும் ஏராளமாகப் பணிக்கு அமர்த்துகிறார். ஒவ்வொரு வேலையையும் செய்வதற்கு நிபுணர்களையும் சேகரிக்கிறார். (நாளா 22:15).

தாவீது மரித்துப்போவதற்கு முன்பாக கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான எல்லா பொருட்களையும் சேரிக்கிறார். தாவீது ஆலயத்தைக் கட்டாவிட்டாலும், ஆலயத்தைக் கட்டுவதற்கு உதவி செய்கிறார்.

தாவீதின் குமாரனாகிய சாலொமோன் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறார். அவரால் தாவீதைப்போல, தேவாலயத்தைக் கட்டுவதற்கு தேவையான பொருட்களை சேகரிக்க முடியாது. தேவாலயம் கட்டுவது மிகப்பெரிய வேலை. கர்த்தருக்கு கட்டப்படும் ஆலயம், சகல தேசங்களிலும் கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கும்படி மகாபெரியதாயிருக்கவேண்டும் என்று தாவீது விரும்புகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது ஆயத்த வேலைகளை செய்யவில்லையென்றால், சாலொமோன் ஆரம்பத்திலேயே சோர்ந்துபோய்விடுவார். சாலொமோனால் எல்லா வேலைகளையும் மொத்தமாகப் பார்க்க முடியாது. தாவீது இதையெல்லாம் மனதில்கொண்டு, தேவாலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான எல்லா பொருட்களையும் தன்னுடைய மரணத்திற்கு முன்னே, திரளாய் சவதரித்து வைக்கிறார்.

கர்த்தருடைய ஆலயம், அவருக்கு கீர்த்தியும் மகிமையும் உடையதாய் விளங்கவேண்டும். கர்த்தருக்கு கட்டப்படும் ஆலயம் சகல தேசங்களிலும் மகாபெரியதாயிருக்கவேண்டும். இந்த ஆலயம் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்க வேண்டும். இயேசுகிறிஸ்துவிலே பரிபூரணமானதெல்லாம் வாசம்பண்ணுகிறது. அவரிலே சகல ஐசுவரியங்களும் மறைந்திருக்கிறது.

கர்த்தருடைய ஆலயம் கீர்த்தியுள்ளதாயும், மகிமையுள்ளதாயும் மகாபெரியதாயும் இருக்கும்போது, அங்கே கர்த்தரை ஆராதிக்கிற வருகிறவர்களுடைய மனதிலே உற்சாகம் பிறக்கும். அவர்கள் பயபக்தியோடு கர்த்தரை ஆராதிப்பார்கள்.

ஆலயம் மகாபெரியதாயிருக்கும்போது, அந்நிய தேசத்தாரும் அந்த ஆலயத்தின் அழகைப் பார்க்க வருவார்கள். கர்த்தருடைய ஆலயம் சகல தேசங்களிலும் கீர்த்தியுள்ளதாயிருப்பதினால், சகல தேசத்தாரும் அதைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். அவர்கள் புறஜாதி ஜனத்தாராயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றி அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

இஸ்ரவேல் தேசத்திலே அந்நிய ஜாதியாரும் இருக்கிறார்கள். தாவீது அவர்களையெல்லாம் கூடிவரச்செய்து, அவர்களை கல்தச்சராகப் பயன்படுத்துகிறார். புறஜாதியார் கர்த்தருடைய ஆலயத்திற்குத் தேவையான திரளான கேதுரு மரங்களை வெட்டிக்கொண்டு வருகிறார்கள்.

சாலொமோன்
1நாளா 22:6-16

1நாளா 22:6. அவன் தன் குமாரனாகிய சாலொமோனை அழைத்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறதற்காக அவனுக்குக் கட்டளைகொடுத்து,

1நாளா 22:7. சாலொமோனை நோக்கி: என் குமாரனே, நான் என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட என் இருதயத்தில் நினைத்திருந்தேன்.

1நாளா 22:8. ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி: நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்.

1நாளா 22:9. இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையும் அருளுவேன்.

1நாளா 22:10. அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன் என்றார்.

1நாளா 22:11. இப்போதும் என் குமாரனே, நீ பாக்கியவானாயிருந்து, கர்த்தர் உன்னைக்குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி, அவர் உன்னுடனேகூட இருப்பாராக.

1நாளா 22:12. கர்த்தர் உனக்கு ஞானத்தையும் உணர்வையும், அருளிச்செய்து, உன் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, இஸ்ரவேலை ஆளும்படி உனக்குக் கட்டளையிடுவாராக.

1நாளா 22:13. கர்த்தர் இஸ்ரவேலுக்காக மோசேக்குக் கற்பித்த நியமங்களையும் நியாயங்களையும் செய்ய நீ கவனமாயிருந்தால் பாக்கியவனாயிருப்பாய்; நீ பலங்கொண்டு தைரியமாயிரு, பயப்படாமலும் கலங்காமலும் இரு.

1நாளா 22:14. இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன்; நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய்.

1நாளா 22:15. வேலைசெய்யத்தக்க திரளான சிற்பாசாரிகளும், தச்சரும் கல்தச்சரும், எந்த வேலையிலும் நிபுணரானவர்களும் உன்னோடிருக்கிறார்கள்.

1நாளா 22:16. பொன்னுக்கும், வெள்ளிக்கும், வெண்கலத்துக்கும், இரும்புக்கும் கணக்கில்லை; நீ எழும்பிக் காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடே இருப்பாராக என்றான்.

தாவீது தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தன்னுடைய இருதயத்தில் நினைத்திருந்தார். தன்னுடைய மனதின் விருப்பத்தை தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு சொல்லுகிறார். தாவீது கர்த்தருக்கு ஆலயம் கட்டுவதை கர்த்தர் அனுமதிக்கவில்லை.

கர்த்தருடைய வார்த்தை தாவீதுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தாவீதை நோக்கி, "நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்" (நாளா 22:8) என்றும்,

"இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையும் அருளுவேன்" (நாளா 22:9) என்றும்,

"அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன்" (நாளா 22:10) என்றும் சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, கர்த்தர் அனுமதிக்காவிட்டாலும், தாவீதின் குமாரனாகிய சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுவார் என்று, கர்த்தர் தாவீதுக்கு சொல்லுகிறார். இதனால் தாவீது மிகுந்த சந்தோஷமடைந்து, தன்னுடைய குமாரனாகிய சாலொமோனிடத்தில், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுமாறு கட்டளை கொடுக்கிறார்.

தாவீது தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு கொடுத்த கட்டளைகளின் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டு (நாளா 22:6).

2. நான் என் தேவனாகிய கர்த்தரின் நாமத்திற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட என் இருதயத்தில் நினைத்திருந்தேன். ஆனால் கர்த்தர் தம்முடைய ஆலயத்தைக் கட்ட என்னை அனுமதிக்கவில்லை. சாலொமோன் தம்முடைய ஆலயத்தைக் கட்டுவான் என்று கர்த்தர் கட்டளையிட்டார். (நாளா 22:7-10).

3. இப்போதும் என் குமாரனே, நீ பாக்கியவானாயிருந்து, கர்த்தர் உன்னைக் குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி, அவர் உன்னுடனேகூட இருப்பாராக. (நாளா 22:11).

4. கர்த்தர் உனக்கு ஞானத்தையும் உணர்வையும், அருளிச்செய்து, உன் தேவனாகிய கர்த்தரின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு, இஸ்ரவேலை ஆளும்படி உனக்குக் கட்டளையிடுவாராக. (நாளா 22:12).

5. கர்த்தர் இஸ்ரவேலுக்காக மோசேக்குக் கற்பித்த நியமங்களையும் நியாயங்களையும் செய்ய நீ கவனமாயிருந்தால் பாக்கியவனாயிருப்பாய் (நாளா 22:13)

6. நீ பலங்கொண்டு தைரியமாயிரு, பயப்படாமலும் கலங்காமலும் இரு.

7. இதோ, நான் என் சிறுமையிலே கர்த்தருடைய ஆலயத்திற்காக ஒரு லட்சம் தாலந்து பொன்னையும், பத்துலட்சம் தாலந்து வெள்ளியையும், நிறுத்து முடியாத திரளான வெண்கலத்தையும் இரும்பையும் சவதரித்தும், மரங்களையும் கற்களையும் சவதரித்தும் வைத்தேன்; நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய்ச் சவதரிப்பாய். (நாளா 22:14).

8. வேலைசெய்யத்தக்க திரளான சிற்பாசாரிகளும், தச்சரும், கல்தச்சரும், எந்த வேலையிலும் நிபுணரானவர்களும் உன்னோடிருக்கிறார்கள். பொன்னுக்கும், வெள்ளிக்கும், வெண்கலத்துக்கும், இரும்புக்கும் கணக்கில்லை; நீ எழும்பிக் காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடே இருப்பாராக (1நாளா 22:15-16).

கர்த்தருடைய வார்த்தை தாவீதுக்கு உண்டானபோது, சாலொமோன் இன்னும் பிறக்கவில்லை. கர்த்தர் தாவீதிடம் சாலொமோனைக் குறித்து இவ்வாறு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

"இதோ, உனக்குப் பிறக்கப்போகிற குமாரன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்; சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்; ஆகையால் அவன் பேர் சாலொமோன் என்னப்படும்; அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையும் அருளுவேன்" (1நாளா 22:9).

"அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன்" (1நாளா 22:10) என்று கர்த்தர் தாவீதுக்கு சாலொமோனைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்.

இந்த தீர்க்கதரிசனத்தின் பெரும்பகுதி ஏற்கெனவே நிறைவேறிற்று. அதன் விவரம் வருமாறு:

1. உனக்கு ஒரு குமாரன் பிறக்கப்போகிறான்.
2. அவன் அமைதியுள்ள புருஷனாயிருப்பான்.
3. சுற்றிலுமிருக்கும் அவன் சத்துருக்களையெல்லாம் விலக்கி அவனை அமர்ந்திருக்கச் செய்வேன்.
4. அவன் பேர் சாலொமோன் என்னப்படும்.
5. அவன் நாட்களில் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையும் அமரிக்கையும் அருளுவேன்.
6. அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான். (1நாளா 22:10).
7. அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன். (எபி 1:5-7).

இந்தத் தீர்க்கதரிசனத்தில் "இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத்துவேன்" (1நாளா 22:10) என்னும் வாக்கியம் இன்னும் நிறைவேறவில்லை. (ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; அப் 15:13-18; வெளி 11:15; வெளி 20:1-10).

"அவன் பேர் சாலொமோன் என்னப்படும்" (1நாளா 22:9) என்று சாலொமோன் பிறப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் அவனுக்கு பேரிடுகிறார். வேதாகமத்தில் 7 பேருக்கு அவர்கள் பிறப்பதற்கு முன்பாகவே பெயரிடப்பட்டிருக்கிறது. அவர்களின் விபரம் வருமாறு:

1. இஸ்மவேல் (ஆதி 16:11)
2. ஈசாக்கு (ஆதி 17:19)
3. சாலொமோன் (1நாளா 22:9)
4. யோசியா (பிறப்பதற்கு 325 வருஷங்களுக்கு முன்பாக) (1இராஜா 13:2; 2இராஜா 22:1)
5. கோரேஸ் (பிறப்பதற்கு 175 வருஷங்களுக்கு முன்பாக) (ஏசா 44:28-45:1)
6. யோவான் ஸ்நானன் (லூக் 1:13,60-63)
7. இயேசு (மத் 1:21)

"அவன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்" (நாளா 22:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். சாலொமோனின் காலத்தில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. மேசியா இனிமேல் நித்திய ஆலயத்தைக் கட்டுவார். (எசே 43:7; சக 6:12-13).

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனிடம், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுமாறு கட்டளையிடுகிறார். அப்போது தாவீது சாலொமோனை நோக்கி, "கர்த்தர் உனக்கு ஞானத்தையும் உணர்வையும், அருளிச்செய்து, உன் தேவனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு, இஸ்ரவேலை ஆளும்படி உனக்குக் கட்டளையிடுவாராக" (நாளா 22:12) என்று சொல்லி அவரை ஆசீர்வதிக்கிறார்.

சாலொமோன் இளைஞனாக இருக்கும்போதே தாவீது தேவஆவியினாலே ஏவப்பட்டு இந்த வார்த்தையைக் கூறுகிறார். சாலொமோனுக்குக் கிடைத்த எல்லா ஆசீர்வாதங்களைவிட கர்த்தர் அவருக்குக் கொடுத்த ஞானம் மிகவும் மேன்மையானது. சாலொமோனும் கர்த்தரிடத்தில் இதையே விண்ணப்பம் பண்ணினார் (1இராஜா 3:5-14).

சாலொமோன் முதிர்வயதாகும் வரையிலும் கர்த்தருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டார். அதன் பின்பு, அவருடைய அந்நியஜாதி மனைவிகள் அவருடைய இருதயத்தைக் கர்த்தரைவிட்டு விலகிப்போகப்பண்ணினார்கள் (1இராஜா 11:1-8). தன்னுடைய கடைசிக் காலத்தில் சாலொமோன் நல்ல ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார் (பிர 12:13-14). ஆனாலும் தான் கூறிய ஆலோசனைகளுக்குச் சாலொமோன் கீழ்ப்படிந்திருந்தாரா என்று தெரியவில்லை.

சாலொமோன் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்றும் தாவீது அவருக்கு கட்டளை கொடுக்கிறார். தாவீது சாலொமோனை நோக்கி, "கர்த்தர் இஸ்ரவேலுக்காக மோசேக்குக் கற்பித்த நியமங்களையும் நியாயங்களையும் செய்ய நீ கவனமாயிருந்தால் பாக்கியவனாயிருப்பாய்; நீ பலங்கொண்டு தைரியமாயிரு, பயப்படாமலும் கலங்காமலும் இரு" (நாளா 22:13) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியமங்களையும், நியாயங்களையும் செய்வதற்கு நாம் மிகுந்த கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் தேவனுடைய ஆசீர்வாதம் நன்க்குக் கிடைக்கும் (யோசு1:1-8; சங் 1:3-4).

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தேவையான பொன்னையும், வெள்ளியையும், வெண்கலத்தையும், இரும்பையும், மரங்களையும், கற்களையும் சவதரித்து வைத்திருக்கிறார்.

தாவீது பல சமயங்களில் அந்நிய தேசத்தின்மீது யுத்தம் பண்ணினார். அப்போது யுத்தத்தில் அகப்பட்ட கொள்ளைப் பொருட்களையெல்லாம் தேவாலயத்தின் பணிக்காகப் பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்டார். இவ்வாறு அவரிடத்தில் நிறுத்து முடியாத திரளான வெண்கலமும், இரும்பும் இருந்தது. இவைதவிர, தாவீதிடம் நிறுத்து முடியாத திரளான பொன்னும், வெள்ளியும் இருந்தது (1நாளா 22:16).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது இவ்வளவு திரளான பொருட்களை சவதரித்து வைத்திருந்தாலும், அவரால் கர்த்தருக்கு ஆலயம் கட்ட முடியவில்லை. அவர் திரளான இரத்தத்தை சிந்தியபடியினால், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட கர்த்தர் தாவீதை அனுமதிக்கவில்லை.

தாவீது உரியாவின் இரத்தத்தை சிந்தினார். தாவீது அந்த பாவத்திற்காக மனம் வருந்தினார். கர்த்தருடைய மன்னிப்பையும் பெற்றுக்கொண்டார். தாவீது பெரிய யுத்தங்களை பண்ணினார். அதிலே திரளான ஜனங்களின் இரத்தத்தை சிந்தினார். தாவீது கர்த்தருக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தை தரையிலே சிந்தினதினால், கர்த்தருக்கு ஆலயம் கட்டும் சிலாக்கியம் அவருக்கு கிடைக்கவில்லை.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, கர்த்தர் சாலொமோனை நியமிக்கிறார். சாலொமோன் பிறப்பதற்கு முன்பாகவே, சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுவார் என்று கர்த்தர் சொல்லுகிறார். சாலொமோனின் ஆட்சிக்காலத்தில் யுத்தம் இருக்காது. தேசம் அமைதியாயிருக்கும். சாலொமோனுக்கு கர்த்தருடைய ஆலயத்தை நேர்த்தியாய்க் கட்டுவதற்கு அநுகூலமான சூழ்நிலைகள் உண்டாயிருக்கும்.

சாலொமோனுடைய ராஜ்யபாரத்தின்போது அந்நிய தேசத்தார் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரமாட்டார்கள். தேசம் அமைதலாயிருக்கும். உள்நாட்டிலே குழப்பம் எதுவும் இருக்காது. சாலொமோனின் ராஜாசனம் ஸ்திரமாகயிருக்கும். ஆகையினால் சாலொமோனே கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுவார் என்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஆலயம் மகாபெரியதாயிருக்கும். பெரிய ஆலயத்திற்கு வலுவான அஸ்திபாரம் போடவேண்டும். தாவீதுக்கு கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனாலும் தாவீது சோர்ந்துபோய்விடவில்லை. ஏமாற்றமடைந்துவிடவில்லை. தன்னால் ஆலயத்தைக் கட்ட முடியாவிட்டாலும், ஆலயத்தைக் கட்டுவதற்குத் தேவையான எல்லா பொருட்களையும் தாவீது சவதரிக்கிறார்.

ஆலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் ஏற்கெனவே சேகரிக்கப்பட்டிருப்பதினால், ஆலயத்தைக் கட்டுகிற திருப்பணிகள் சாலொமோனுக்கு லேசாகயிருக்கிறது. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தான் சேகரித்து வைத்திருக்கிற பொருட்களின் தொகையைக் கணக்கிட்டு, தாவீது சாலொமோனிடத்தில் ஒப்புவிக்கிறார்.

பொன்னும் வெள்ளியும் வைத்திருக்கிற எல்லோராலும் கட்டிடத்தைக் கட்ட முடியும். ஆனால் அவர்கள் எல்லோராலும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட முடியாது. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறவர்கள் உண்மையான இருதயத்தோடும், பயபக்தியோடும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிதலோடும் கட்டவேண்டும்.

கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், ஆலயத்தைக் கட்டுவதற்கும் சம்பந்தமில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நம்முடைய பாவங்களை கழுவி நம்மைச் சுத்திகரிக்கும்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதினால், அவர் கர்த்தருக்கு விரோதமாக எப்படிப்பட்ட பாவத்தை வேண்டுமானாலும் செய்யலாம் என்னும் அனுமதி அவருக்கு கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதுபோல, இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோனும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும்.

தாவீது இந்த சத்தியத்தை சாலொமோனுக்கு உறுதிபண்ணுகிறார். தாவீது சாலொமோனை நோக்கி, "கர்த்தர் இஸ்ரவேலுக்காக மோசேக்குக் கற்பித்த நியமங்களையும் நியாயங்களையும் செய்ய நீ கவனமாயிருந்தால் பாக்கியவனாயிருப்பாய்" (1நாளா 22:13) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது ஏராளமான பொருட்களை சேகரித்து வைத்திருந்தாலும், இவை போதும் என்று சாலொமோன் நினைக்கக்கூடாது. கர்த்தருடைய ஆலயத்தை மகாபெரியதாய் கட்ட வேண்டியிருப்பதினால், ஆலயம் கட்ட சாலொமோனுக்கு இன்னும் ஏராளமான பொருட்கள் வேண்டும். "நீ இன்னும் அவைகளுக்கு அதிகமாய் சவதரிப்பாய்" (1நாளா 22:14) என்று தாவீது சாலொமோனுக்கு சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தாவீது சாலொமோனை உற்சாகப்படுத்துகிறார். "நீ பலங்கொண்டு தைரியமாயிரு, பயப்படாமலும், கலங்காமலும் இரு" (1நாளா 22:13) என்று தாவீது சாலொமோனுக்கு ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவது, கர்த்தருடைய வேலை. கர்த்தருடைய வேலையில் பங்குபெறுகிறவர்கள், அந்த வேலையை நேர்த்தியாய்ச் செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு ஞானமும் புத்தியும் வேண்டும். கர்த்தரே நமக்கு ஞானத்தைக் கொடுக்கிறவர். தாவீது சாலொமோனிடத்தில், "கர்த்தர் உனக்கு ஞானத்தையும் உணர்வையும் அருளிச்செய்வாராக" (1நாளா 22:12) என்று சொல்லுகிறார். தாவீது சாலொமோனுக்காக ஜெபிக்கிறார்.

தாவீது சாலொமோனுக்கு கொடுக்கும் கட்டளைகளின் முடிவிலே, "நீ எழும்பி காரியத்தை நடப்பி, கர்த்தர் உன்னோடே இருப்பாராக" (நாளா 22:16) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் 1நாளா 22:17-19

1நாளா 22:17. தன் குமாரனாகிய சாலொமோனுக்கு உதவிசெய்ய, தாவீது இஸ்ரவேலின் பிரபுக்கள் அனைவருக்கும் கற்பித்துச் சொன்னது:

1நாளா 22:18. உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருந்து நான்கு திசையிலும் உங்களுக்கு இளைப்பாறுதலைத் தந்தார் அல்லவா? தேசத்தின் குடிகளை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; கர்த்தருக்கு முன்பாகவும், அவருடைய ஜனத்திற்கு முன்பாகவும் தேசம் கீழ்ப்பட்டிருக்கிறது.

1நாளா 22:19. இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்கி, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தேவனுடைய பரிசுத்தப் பணிமுட்டுகளையும், கர்த்தருடைய நாமத்திற்குக் கட்டப்படும் அந்த ஆலயத்திற்குள் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் எழும்பி, தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டுங்கள் என்றான்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுமாறு தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கு கட்டளை கொடுத்து முடித்த பின்பு, அவர் இஸ்ரவேலின் பிரபுக்களையெல்லாம் தன்னிடத்தில் அழைக்கிறார். சாலொமோன் வாலிபனாகவும் இளைஞனாகவும் இருக்கிறார். ஆலயத்தைக் கட்டுகிற வேலை மிகவும் பெரியது. சாலொமோனுக்கு இந்த வேலையைச் செய்ய உதவி தேவைப்படுகிறது. இஸ்ரவேலின் பிரபுக்கள் அனைவரும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையிலே, சாலொமோனுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தாவீது கட்டளையிடுகிறார்.

இஸ்ரவேலின் பிரபுக்கள் அனைவரும் சாலொமோனுக்கு உதவி செய்யுமாறு தாவீது கட்டளையிடுகிறார் (நாளா 22:2). தாவீது முதலாவதாக அந்நிய ஜாதியாரைக் கூட்டிச் சேர்த்து, அவர்களைப் பணியில் அமர்த்தினார். அதன் பின்பு, இஸ்ரவேலின் பிரபுக்களிடம் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் பணியில் சாலொமோனுக்கு உதவி புரியுமாறு கூறுகிறார் (நாளா 22:17-19).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் தேசத்திலே இளைப்பாறுதலைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் தேசத்திற்கு விரோதமாக யுத்தங்கள் எதுவும் நடைபெறவில்லை. தேசத்திலும் உள்நாட்டு குழப்பங்கள் எதுவும் ஏற்படவில்லை. தேசம் கர்த்தருக்கு முன்பாகவும் அவருடைய ஜனத்திற்கு முன்பாகவும் கீழ்ப்படிந்திருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரும், இஸ்ரவேலின் பிரபுக்களும், கர்த்தரைத் தேடுவதற்கு தங்கள் இருதயத்தை ஆயத்தம்பண்ணவேண்டும்.

தாவீது இஸ்ரவேலின் பிரபுக்களை நோக்கி, "இப்போதும் நீங்கள் உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்கி, கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தேவனுடைய பரிசுத்தப் பணிமுட்டுகளையும், கர்த்தருடைய நாமத்திற்குக் கட்டப்படும் அந்த ஆலயத்திற்குள் கொண்டுபோகும்படிக்கு, நீங்கள் எழும்பி, தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டுங்கள்" (நாளா 22:19) என்று சொல்லுகிறார்.

நம்முடைய இருதயத்தையும், நம்முடைய ஆத்துமத்தையும் கர்த்தரைத் தேடுவதற்கு நேராக்க வேண்டும். இது ஒவ்வொரு விசுவாசிக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற மிகவும் முக்கியமான ஆலோசனை (மத் 6:33). நம்முடைய இருதயம் கர்த்தரைத் தேடும்போது, கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிகொடுத்து, அவருடைய சித்தத்தை நிறைவேற்றக் கீழ்ப்படிவோம்.

தாவீது இஸ்ரவேலின் பிரபுக்களுக்கு கொடுத்த கட்டளைகளின் விவரம் வருமாறு:

1. என் குமாரனாகிய சாலொமோனுக்கு உதவி செய்யுங்கள். (நாளா 22:17).

2. உங்கள் இருதயத்தையும், உங்கள் ஆத்துமத்தையும், உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்குங்கள். (நாளா 22:19).

3. நீங்கள் எழும்பி, தேவனாகிய கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டுங்கள்.

4. கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும், தேவனுடைய பரிசுத்தப் பணிமுட்டுகளையும், கர்த்தருடைய நாமத்திற்குக் கட்டப்படும் அந்த ஆலயத்திற்குள் கொண்டுவாருங்கள்.

23 அதிகாரம்

தாவீது கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கு தேவையான கட்டளைகளை, தன் குமாரனாகிய சாலொமோனுக்கும், இஸ்ரவேலின் பிரபுக்களுக்கும் கொடுக்கிறார். அதன் பின்பு தேவாலயத்திலே ஆராதனையை நடத்துவதற்கு ஆசாரியரையும், லேவியரையும் நியமிக்கிறார். அவர்களுடைய பணிவிடைகளையும், வகுப்புகளையும் ஒழுங்குபடுத்துகிறார்.

தாவீது தன்னுடைய ராஜ்யபாரத்தின் ஆரம்பத்திலேயே, கர்த்தருடைய ஆராதனை நடத்துவதற்கு லேவியரையும் ஆசாரியரையும் நியமித்திருந்தார். அந்தக் காலத்தில் அவர் அந்நிய ஜாதிகளோடு யுத்தம் நடத்தியதினால், தேசத்தில் அமைதியில்லை. தாவீதால் ஆராதனைக்காரியங்களை அப்போது முறைப்படுத்த முடியவில்லை. இப்போது தேசத்தில் யுத்தமில்லாமல் அமைதியாயிருக்கிறது. தாவீது இப்போது வகுக்கிற ஆசாரியரின் வகுப்புகளும், லேவியரின் வகுப்புகளும் மிகவும் நேர்த்தியாயிருக்கிறது.

தாவீது கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவும், இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாகவும் இருக்கிறார். தேசத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியங்களையும் சீர்படுத்துகிறார். அங்கே நடைபெறவேண்டிய காரியங்களையும் திட்டம்பண்ணுகிறார். தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்குகிறார் (1நாளா 23:1).

தாவீது லேவியரை எண்ணித் தொகையிடுகிறார். அவர்களுக்கு பணிவிடைகளை நியமிக்கிறார் (1நாளா 23:2-5). தாவீது லேவியரை அவர்களுடைய வகுப்புக்களின்படி வகுக்கிறார் (1நாளா 23:6-23).

பூர்வகாலத்தில் முப்பது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியர் பேர் பேராக எண்ணப்பட்டார்கள். தாவீதோ அவர்களுடைய வயதாக இருபதாக குறைத்து, லேவியரை எண்ணித் தொகையிட்டு, அவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்து பணிவிடையை ஒப்புவிக்கிறார் (1நாளா 23:24-32).

சாலொமோன்
1நாளா 23:1

1நாளா 23:1. தாவீது கிழவனும் பூரண வயதுள்ளவனுமானபோது, தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினான்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்குகிறார். சாலொமோன் தாவீதோடு கூடவோ அல்லது தாவீது ராஜ்யபாரம்பண்ணும்போது அவருடைய அதிகாரத்தின் கீழோ ராஜ்யபாரம் பண்ணக்கூடாது. இது தாவீதின் திட்டமுமல்ல. தாவீது மரித்துப்போனபின்பு, சாலொமோன் அவருடைய ஸ்தானத்திலே வந்து இஸ்ரவேலை ராஜ்யபாரம்பண்ணவேண்டும். இதுவே தாவீதின் திட்டம். அதற்காக தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை, தான் உயிரோடிருக்கும்போதே, இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்குகிறார்.

இப்போது தாவீது கிழவனும் பூரணவயதுள்ளவருமாயிருக்கிறார். தாவீதுக்கு இப்போது 70 வயதாகிறது. தாவீது ராஜாவாக ஆனபோது அவருடைய வயது 30. தாவீது நாற்பது வருஷம் ராஜ்யபாரம் பண்ணினார். (2சாமு 5:4-5).

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் தாவீதைவிட அதிக வருஷங்கள் ஜீவனோடு இருந்திருக்கிறார்கள். ஆபிரகாம் - 175 வருஷம் (ஆதி 25:8-9), ஈசாக்கு - 180 வருஷம் (ஆதி 35:28-29), யாக்கோபு - 147 வருஷம் (ஆதி 47:28; ஆதி 48:2), யோசுவா 110 வருஷம் (யோசு 13:1; யோசு 23:1; யோசு 24:29), மோசே 120 வருஷம். அப்போது "அவன் கண் இருளடையவுமில்லை. அவன் பெலன் குறையவுமில்லை" (உபா 34:7).

தாவீதும், இஸ்ரவேலின் மற்ற ராஜாக்களும் குறைந்த வயதிலேயே மரித்துப் போனார்கள். யுத்தங்களும், அதனால் உண்டான பிரச்சனைகளும் அவர்களுக்கு மிகுதியாய் இருந்ததினால் அவர்களுடைய ஜீவியக்காலம் குறைந்து போயிற்று.

தாவீது சாலொமோனை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக்கினபோது, இஸ்ரவேலின் பிரபுக்களையெல்லாம் அழைத்து, அவர்களுக்கு முன்பாக இந்த வைபவத்தை நடத்துகிறார். இதனால் தாவீதின் குமாரனாகிய அதோனியா, சாலொமோனுக்கு விரோதமாக எழும்புகிறான்.

லேவியரின் எண்ணிக்கை 1நாளா 23:2,3

1நாளா 23:2. இஸ்ரவேலின் எல்லாப் பிரபுக்களையும், ஆசாரியரையும், லேவியரையும் கூடிவரும்படி செய்தான்.

1நாளா 23:3. அப்பொழுது முப்பது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியர் பேர்பேராக எண்ணப்பட்டார்கள்; தலைதலையாக எண்ணப்பட்ட அவர்களுடைய இலக்கம் முப்பத்தெண்ணாயிரம்.

மோசேயின் காலத்தில் லேவியர்கள் எண்ணப்பட்டார்கள். அப்போது முப்பது வயது முதல் அதற்கு மேற்பட்ட லேவியர் மாத்திரமே பேர் பேராக எண்ணப்பட்டார்கள்.

"லேவியின் புத்திரருக்குள்ளே இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில், ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்க முப்பது வயதுமுதல் ஐம்பது வயதுவரைக்குமுள்ள எல்லாரையும் எண்ணி, தொகையிடுவாயாக" (எண் 4:2,3).

"மோசேயினாலும் ஆரோனாலும் இஸ்ரவேலின் பிரபுக்களாலும் எண்ணப்பட்டவர்களும் ஆகிய எல்லாரும், எண்ணாயிரத்து ஐந்நூற்று எண்பது பேராயிருந்தார்கள்" (எண் 4:47,48).

மோசேயின் காலத்தில் லேவியரின் எண்ணிக்கை 8,580 பேராயிருந்தது. தாவீதின் காலத்தில், மோசேயின் பிரமாணத்தின்படி, முப்பது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியர் பேர் பேராக எண்ணப்படுகிறார்கள். இப்போது அவர்களுடைய இலக்கம் 38,000 பேராயிருக்கிறது.

கர்த்தர் மோசேக்கு லேவியரை எண்ணித்தொகையிடுவதுபற்றி ஒரு புதிய பிரமாணத்தைக் கட்டளையிடுகிறார். "இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையை செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும்" (எண் 8:24) என்று கர்த்தர் மேசேக்கு சொல்லுகிறார்.

தாவீது லேவியரை ஆரம்பத்தில் எண்ணியபோது, முப்பது வயது முதல் அதற்கு மேற்பட்டவர்களை மாத்திரம் எண்ணினார் (1நாளா 23:3). அதன் பின்பு தாவீது லேவியரின் வயதை முப்பதிலிருந்து இருபதாக குறைத்துவிடுகிறார்.

"தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, பிதாக்களில் தலைமையாயிருந்த லேவி புத்திரரின் பேர்டாப்பின்படியே, தலைதலையாக எண்ணப்பட்ட இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட இவர்களுடைய சந்ததியார் கர்த்தருடைய ஆலயத்துப் பணிவிடையைச் செய்தார்கள்" (1நாளா 23:24).

லேவியரின் பணிவிடைகள் 1நாளா 23:4,5

1நாளா 23:4. அவர்களில் இருபத்துநாலாயிரம்பேர் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்களும், ஆறாயிரம்பேர் தலைவரும் மணியக்காரருமாயிருக்க வேண்டும் என்றும்,

1நாளா 23:5. நாலாயிரம்பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்றும், துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம்பேர் கர்த்தரைத் துதிக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்றும் தாவீது சொல்லி,

தாவீது லேவியருக்கு பணிவிடைகளை பிரித்துக்கொடுக்கிறார். எல்லா லேவியருக்குமே பணிவிடை கொடுக்கப்படுகிறது. தாவீது அவர்களுக்கு நான்குவிதமான பணிவிடைகளை ஒப்புவிக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு:

1. கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்கள் - 24,000 பேர். லேவியரில் மூன்றில் இரண்டு பங்கு எண்ணிக்கையிலுள்ளவர்கள், கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிப்பதற்கு அமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் ஆலயத்திலே பலிசெலுத்துவதற்காக கொண்டு வரப்படும் மிருகங்களைக் கொல்லுவது, அவற்றை கழுவி சுத்தம்பண்ணுவது, சர்வாங்க தகனம்பண்ணுவது, மிருகங்களின் தோல்களை உரிப்பது, போஜனபலியையும், பானபலியையும் ஆயத்தம்பண்ணுவது தேவாலயத்தின் பணிமுட்டுக்கள், பாத்திரங்கள் ஆகியவற்றை சுத்தம்பண்ணுவது, அவற்றை பராமரித்து அவற்றிற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்தலங்களிலே வைப்பது ஆகிய பணிவிடைகளை இந்த லேவியர்கள் செய்யவேண்டும்.

தேவாலயத்தின் வேலையை விசாரிக்கிற 24,000 லேவியர்களும், 24 வகுப்புக்களாக வகுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 1,000 லேவியர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலுமுள்ள 1,000 லேவியரும், ஒவ்வொரு வாரமும், தேவாலயத்தின் பணிவிடையை செய்வதற்கு மாறி மாறி வருவார்கள்.

கர்த்தருடைய ஆலயம் கட்டப்படும் காலத்திலே, இந்த லேவியர்கள், ஆலயத்தைக் கட்டுகிறவர்களுக்கும் உதவி செய்வார்கள்.

2. மற்ற லேவியர்கள் தலைவராகவும், மணியக்காரராகவும் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்திலே ஊழியம் கொடுக்கப்படவில்லை. இவர்கள் ஜனங்கள் குடியிருக்கிற பட்டணங்களிலும், கிராமங்களிலும் தலைவராகவும் மணியக்காரராகவும் இருப்பார்கள்.

இவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்குப் போதிப்பார்கள். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாக ஜனங்களை நியாயம் விசாரிப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே பிரச்சனைகள் ஏற்படும்போது, இவர்கள் அந்தப் பிரச்சனைகளை தீர்த்து வைக்க உதவிசெய்வார்கள். இவர்களுடைய மொத்த எண்ணிக்கை 6,000 பேராகும்.

இவர்கள் இஸ்ரவேல் தேசம் முழுவதிலும் போய் தங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளை செய்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் பிரபுக்களுக்கும், ஒவ்வொரு கோத்திரத்தின் மூப்பர்களுக்கும் உதவியாக வேலை செய்கிறார்கள். இதனால் எல்லா கோத்திரத்திலும் நீதியான நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது. நியாயவிசாரணை நேர்மையாக நடைபெறுகிறது.

3. லேவியரில் 4,000 பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறவர்களை ஒழுங்குபடுத்துகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய ஆலயத்திற்குள் வாசல் வழியாய் பிரவேசிக்கிற ஒவ்வொருவரையும் சோதித்து உள்ளே அனுப்புகிறார்கள். அனுமதியில்லாமல் தேவாலயத்திற்குள் பிரவேசிக்கிறவர்களை, வாசல் காக்கிற லேவியர்கள் தடுத்து நிறுத்திவிடுவார்கள். இந்த லேவியர்கள் ஆலயத்திலே சுமை தூக்குகிறவர்களாகவும் பணிவிடை செய்கிறார்கள்.

4. இந்த லேவியர்களைத்தவிர மேலும் 4,000 பேர் துதி செய்கிறவர்களாகவும், கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். கர்த்தரைத் துதிப்பதே இவர்களுடைய ஊழியம். மோசேயின் காலத்தில் லேவியருக்கு இந்தப்பணிவிடை நியமிக்கப்படவில்லை. இப்போது இந்தப் புதிய பணிவிடையை தாவீது லேவியருக்கு கொடுத்து, கர்த்தருடைய ஆராதனையை நடத்துகிறார்.

லேவியரின் வகுப்புகள் 1நாளா 23:6-23

1நாளா 23:6. அவர்களை லேவியின் குமாரராகிய கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களுடைய வகுப்புகளின்படி வகுத்தான்.

1நாளா 23:7. கெர்சோனியரில், லாதானும், சிமேயும் இருந்தார்கள்.

1நாளா 23:8. லாதானின் குமாரர், யெகியேல், சேத்தாம், யோவேல் என்னும் மூன்றுபேர்; இவர்களில் மூத்தினவன் தலைமையாயிருந்தான்.

1நாளா 23:9. சிமேயின் குமாரர், செலோமித், ஆசியேல், ஆரான் என்னும் மூன்றுபேர்; இவர்கள் லாதான் வம்சப் பிதாக்களில் தலைமையாயிருந்தார்கள்.

1நாளா 23:10. யாகாத், சீனா, எயுஷ், பெரீயா என்னும் நாலுபேரும் சிமேயின் குமாரராயிருந்தார்கள்.

1நாளா 23:11. யாகாத் தலைமையாயிருந்தான்; சீனா இரண்டாம் குமாரனாயிருந்தான்; எயூஷுக்கும் பெரீயாவுக்கும் அநேகம் குமாரர் இராதபடியினால், அவர்கள் பிதாக்களின் குடும்பத்தாரில் ஒரே வம்சமாக எண்ணப்பட்டார்கள்.

1நாளா 23:12. கோகாத்தின் குமாரர், அம்ராம், இத்சார், எப்ரோன், ஊசியேல், என்னும் நாலுபேர்.

1நாளா 23:13. அம்ராமின் குமாரர், ஆரோன், மோசே என்பவர்கள்; ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்தை என்றைக்கும் பரிசுத்தமாய்க் காக்கிறதற்கும், என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக தூபங்காட்டுகிறதற்கும், அவருக்கு ஆராதனை செய்கிறதற்கும், அவர் நாமத்திலே ஆசீர்வாதம் கொடுக்கிறதற்கும் பிரித்துவைக்கப்பட்டார்கள்.

1நாளா 23:14. தேவனுடைய மனுஷனாகிய மோசேயின் குமாரரோவெனில், லேவி கோத்திரத்தாருக்குள் எண்ணப்பட்டார்கள்.

1நாளா 23:15. மோசேயின் குமாரர், கெர்சோம், எலியேசர் என்பவர்கள்.

1நாளா 23:16. கெர்சோமின் குமாரரில் செபுவேல் தலைமையாயிருந்தான்.

1நாளா 23:17. எலியேசருடைய குமாரரில் ரெகபியா என்னும் அவன் குமாரன் தலைமையாயிருந்தான்; எலியேசருக்கு வேறே குமாரர் இல்லை; ரெகபியாவின் குமாரர் அநேகராயிருந்தார்கள்.

1நாளா 23:18. இத்சாரின் குமாரரில் செலோமித் தலைமையாயிருந்தான்.

1நாளா 23:19. எப்ரோனின் குமாரரில் எரியா என்பவன் தலைமையாயிருந்தான்; இரண்டாவது அமரியா, மூன்றாவது யாகாசியேல், நாலாவது எக்காமியாம்.

1நாளா 23:20. ஊசியேலின் குமாரரில் மீகா என்பவன் தலைமையாயிருந்தான்; இரண்டாவது இஷியா.

1நாளா 23:21. மெராரியின் குமாரர், மகேலி, மூசி என்பவர்கள்; மகேலியின் குமாரர், எலெயாசார், கீஸ் என்பவர்கள்.

1நாளா 23:22. எலெயாசார் மரிக்கிறபோது, அவனுக்குக் குமாரத்திகளே அல்லாமல் குமாரர் இல்லை; கீசின் குமாரராகிய இவர்களுடைய சகோதரர் இவர்களை விவாகம் பண்ணினார்கள்.

1நாளா 23:23. மூசியின் குமாரர், மகலி, ஏதேர், எரேமோத் என்னும் மூன்றுபேர்.

தாவீது லேவியரை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கிறார். அவற்றின் விவரம் வருமாறு :

1. கெர்சோன் புத்திரர் (1நாளா 23:7-11)

2. கோகாத் புத்திரர் (1நாளா 23:12-20)

3. மெராரி புத்திரர் (1நாளா 23:21-23).

லேவியரின் இலக்கம் 38,000 பேராகும். இவர்கள் குடும்பம் குடும்பமாகப் பிரிக்கப்படுகிறார்கள். இதனால் ஒவ்வொரு குடும்பத்தாரையும் கூட்டிச் சேர்ப்பது எளிதாக இருக்கிறது. லேவியரின் சந்ததியில் ஆரோனின் குடும்பத்தாருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. மோசேயின் குடும்பத்தாரோ, மற்ற லேவியரைப்போல சாதாரண நிலமையிலிருக்கிறார்கள்.

"ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்தை என்றைக்கும் பரிசுத்தமாய்க் காக்கிறதற்கும், என்றைக்கும் கர்த்தருக்கு முன்பாக தூபங்காட்டுகிறதற்கும், அவருக்கு ஆராதனை செய்கிறதற்கும், அவர் நாமத்திலே ஆசீர்வாதம் கொடுக்கிறதற்கும் பிரித்துவைக்கப்பட்டார்கள்" (1நாளா 23:13).

மோசே ஒருபோதும் தனக்கு பெருமை உண்டாகவேண்டும் என்று நினைக்கவில்லை. ஆகையினால் மோசேயின் குடும்பத்தார், லேவியரின் மற்ற குடும்பத்தாரைப்போல, சாதாரணமானவர்களாகவே இருக்கிறார்கள். மோசே தன்னுடைய குமாரருக்கு, லேவியர் மத்தியிலே விசேஷித்த மேன்மைகளையோ, சலுகைகளையோ, சிலாக்கியங்களையோ கொடுக்கவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை.

மோசேயினிடத்தில் கர்த்தருடைய ஆவியானவர் வாசம்பண்ணுகிறார். அவரிடத்தில் உலகப்பிரகாரமான ஆவி காணப்படவில்லை. உலகப்பிரகாரமான மனுஷர்கள் பதவிக்கும், அதிகாரத்திற்கும் ஆசைப்படுவார்கள். கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களோ ஊழியங்கொள்ளாமல், ஊழியம் செய்வார்கள்.

கர்த்தர் ஆரோனின் குடும்பத்தாரை ஒரு விசேஷித்த நோக்கத்தோடு இங்கே உயர்த்தியிருக்கிறார். ஆரோனும் மோசேயும் சேர்ந்து ஊழியம் செய்தபோது, ஆரோன் தன்னை வெகுவாகத் தாழ்த்தினார். ஆரோனின் தாழ்மைக்கு வெகுமதியாக, கர்த்தர் அவருடைய குடும்பத்தாரை உயர்த்துகிறார்.

ஆரோன் மோசேயின் மூத்த சகோதரன். மோசே ஆரோனுக்கு இளைய சகோதரனாகயிருந்தாலும், மோசே பார்வோனுக்கு தேவனைப்போல இருந்தார். ஆரோனோ, மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கிற சாதாரண ஊழியக்காரராயிருந்தார். மோசே கட்டளையிடுவதை ஆரோன் நிறைவேற்றவேண்டும். ஆரோன் மூத்த சகோதரனாகயிருந்தாலும், தன் இளைய சகோதரனாகிய மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து செயல்பட்டார். ஆரோன் ஒருபோதும் மோசேக்கு விரோதமாக விவாதம்பண்ணவில்லை. அவரோடு வாக்குவாதம்பண்ணவுமில்லை. ஆரோன் மோசேயின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் கலகம்பண்ணவுமில்லை.

ஆரோன் மோசேக்கு தன்னைத் தாழ்த்தியதினால், கர்த்தர் இப்போது ஆரோனின் குடும்பத்தாரை உயர்த்துகிறார்.

லேவியரின் வயது
1நாளா 23:24-27

1நாளா 23:24. தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, பிதாக்களில் தலைமையாயிருந்த லேவி புத்திரரின் பேர்தொப்பின்படியே, தலைதலையாக எண்ணப்பட்ட இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட இவர்களுடைய சந்ததியார் கர்த்தருடைய ஆலயத்துப் பணிவிடையைச் செய்தார்கள்.

1நாளா 23:25. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை இளைப்பாறியிருக்கப்பண்ணினார்; அவர் என்றென்றைக்கும் எருசலேமில் வாசம்பண்ணுவாரென்றும்,

1நாளா 23:26. இனி லேவியர் வாசஸ்தலத்தையாகிலும் அதின் ஊழியத்திற்கடுத்த அதின் பணிமுட்டுகளில் ஏதையாகிலும் சுமக்கத் தேவையில்லை என்றும்,

1நாளா 23:27. தாவீது அவர்களைக் குறித்துச்சொன்ன கடைசி வார்த்தைகளின்படியே, லேவி புத்திரரில் தொகைக்குட்பட்டவர்கள் இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்டவர்களாயிருந்தார்கள்.

தாவீது லேவியரை எண்ணும்போது ஒரு சிறிய மாற்றத்தை உண்டுபண்ணுகிறார். மோசேயின் காலத்தில் லேவியரில் முப்பது வயதிற்கு மேற்பட்டவர் மாத்திரமே எண்ணப்பட்டார்கள். லேவியருக்கு இருபத்தைந்து வயதாகும் வரையிலும், அவர்களுக்கு தேவாலயத்து பணிவிடை எதுவும் கொடுக்கப்படவில்லை.

"லேவியருக்குரிய கட்டளை என்னவென்றால் : இருபத்தைந்து வயதுமுதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடையைச் செய்யும் சேனையிலே சேவிக்க வரவேண்டும்" (எண் 8:24).

ஆனால் தாவீதோ இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட லேவியரை கர்த்தருடைய ஆலயத்து பணிவிடையை செய்வதற்கு அமர்த்துகிறார். தாவீது இந்த விசேஷித்த கட்டளையை கர்த்தரிடத்திலிருந்தே பெற்றுக்கொண்டார்.

"தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே, பிதாக்களில் தலைமையாயிருந்த லேவி புத்திரரின் பேர்டாப்பின்படியே, தலைதலையாக எண்ணப்பட்ட இருபது வயதுமுதல் அதற்கு மேற்பட்ட இவர்களுடைய சந்ததியார் கர்த்தருடைய ஆலயத்துப் பணிவிடையைச் செய்தார்கள்" (1நாளா 23:24).

இதற்கு முன்பு, லேவியர்கள் இருபத்தைந்து வயதாகும் வரையிலும், அவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்திலே ஒரு வேலையும் கொடுக்கப்படவில்லை. இதனால் லேவியரில் அநேகர் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே சோம்பேறித்தனம் வந்துவிடுகிறது. தாவீது லேவியரிடத்தில் காணப்படுகிற சோம்பேறித்தனத்தை நீக்கிவிட்டு, அவர்களை கர்த்தருடைய ஊழியத்திலே பயன்படுத்த விரும்புகிறார். ஆகையினால் லேவியரை எண்ணும்போது இருபது வயதுமுதல், அதற்கு மேற்பட்டவர்களை எண்ணி, அவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்து பணிவிடையை ஒப்புக்கொடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, ஆசரிப்புக்கூடாரத்தை சுமந்து செல்ல வேண்டிய ஊழியமும், அதோடு பரிசுத்தமான பணிமுட்டுக்களை சுமந்து செல்ல வேண்டிய ஊழியமும் லேவியருக்கு கொடுக்கப்பட்டிருந்தது. இனிமேல் ஆசரிப்புக்கூடாரத்தை சுமக்க வேண்டியதில்லை. லேவியரின் பணிவிடைகள் இனிமேல் எளிதாயிருக்கும்.

லேவியர்கள் இருபது வயதிலே ஆலயத்து பணிவிடையை செய்ய ஆரம்பிக்கும்போது, அவர்களுடைய வேலைகளும் எளிதாயிருக்கும். அவர்கள்மீது அதிகமான பணிவிடைகள் சுமத்தப்படமாட்டாது. இப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலயத்திற்கு பலிகளை கொண்டு வரும்போது, பலிசெலுத்துவதற்கு உதவி செய்ய லேவியர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். பலிசெலுத்துவதற்காக இஸ்ரவேல் புத்திரர் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. பலிசெலுத்துதல் சீக்கிரத்தில் முடிந்துபோகிறது.

லேவியரின் பணிவிடை
1நாளா 23:28-32

1நாளா 23:28. அவர்கள் ஆரோனுடைய குமாரரின் கீழ்க் கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியமாய் நின்று, பிரகாரங்களையும், அறைகளையும், சகல பரிசுத்த பணிமுட்டுகளின் சுத்திகரிப்பையும், தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்கடுத்த வேலையையும் விசாரிப்பதும்,

1நாளா 23:29. சமுகத்தப்பங்களையும், போஜனபலிக்கு மெல்லிய மாவையும், புளிப்பில்லாத அதிரசங்களையும், சட்டிகளிலே செய்கிறதையும் சுடுகிறதையும், திட்டமான சகல நிறையையும் அளவையும் விசாரிப்பதும்,

1நாளா 23:30. நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கர்த்தரைப் போற்றித் துதித்து, ஓய்வுநாட்களிலும், அமாவாசைகளிலும், பண்டிகைகளிலும், கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிற சகல வேளைகளிலும்,

1நாளா 23:31. இலக்கத்திற்குள்ளான அவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டபடியே, எப்பொழுதும் அந்தப் பிரகாரமாய்ச் செய்ய கர்த்தருக்கு முன்பாக நிற்பதும்,

1நாளா 23:32. ஆசரிப்புக் கூடாரத்தின் காவலையும் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் தங்கள் சகோதரராகிய ஆரோனுடைய குமாரரின் காவலையும் காப்பதும், கர்த்தருடைய ஆலயத்தின் பணிவிடையைச் செய்வதும், அவர்கள் வேலையாயிருந்தது.

தேவாலயத்தின் பணிவிடைகள் மிகுதியாயிற்று. ஆசாரியர்கள் தேவாலயத்தின் பிராகாரங்களையும், அறைகளையும், சகல பரிசுத்த பணிமுட்டுகளின் சுத்திகரிப்பையும், தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்கடுத்த வேலையையும் விசாரிக்க வேண்டும். தேவாலயத்தின் பணிவிடைகளைச் செய்வதற்கு ஏராளமான லேவியர் தேவைப்படுகிறார்கள். ஆகையினால் ஊழியம் செய்ய வேண்டிய லேவியரின் வயது 20 முதல் அதற்கு மேற்பட்டவர்கள் என்று குறைக்கப்படுகிறது (1நாளா 23:27-28; 1நாளா 23:3).

தாவீது லேவியரின் பணிவிடைகளை விரிவாகச் சொல்லுகிறார். அவற்றின் விவரம் வருமாறு:

1. ஆரோனுடைய குமாரரின் கீழ்க் கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியமாய் நிற்க வேண்டும்.
2. பிராகாரங்களை விசாரிக்க வேண்டும்.
3. அறைகளை விசாரிக்க வேண்டும்.
4. பரிசுத்த பணிமுட்டுகளின் சுத்திகரிப்பை விசாரிக்க வேண்டும்.
5. தேவனுடைய ஆலயத்தின் ஆராதனைக்கடுத்த வேலையை விசாரிக்க வேண்டும்.
6. சமுகத்தப்பங்களை விசாரிக்க வேண்டும். (1நாளா 23:29)
7. போஜனபலிக்கு மெல்லிய மாவை விசாரிக்க வேண்டும்.
8. புளிப்பில்லாத அதிரசங்களை விசாரிக்க வேண்டும்.
9. சட்டிகளிலே செய்கிறதை விசாரிக்க வேண்டும்.
10. சுடுகிறதை விசாரிக்க வேண்டும்.
11. திட்டமான சகல நிறையையும் அளவையும் விசாரிக்க வேண்டும்.
12. நாள்தோறும் காலையில் கர்த்தரைப் போற்றித் துதிக்க கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும். (1நாளா 23:30)
13. நாள்தோறும் மாலையில் கர்த்தரைப் போற்றித் துதிக்க கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.
14. ஓய்வுநாட்களில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிற வேளையில் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.
15. அமாவாசைகளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிற வேளையில் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.
16. பண்டிகைகளில் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படுகிற வேளையில் கர்த்தருக்கு முன்பாக நிற்க வேண்டும்.
17. ஆசரிப்புக் கூடாரத்தின் காவலைக் காக்க வேண்டும். (1நாளா 23:32)

18. பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்க வேண்டும்.

19. தங்கள் சகோதரராகிய ஆரோனுடைய குமாரரின் காவலைக் காக்க வேண்டும்.

20. கர்த்தருடைய ஆலயத்தின் பணிவிடையைச் செய்ய வேண்டும்.

ஆசரியர்கள் பரிசுத்தமான எல்லாவற்றையும் சுத்திகரிக்கவேண்டும். கர்த்தருக்கு முன்பாக தூபங்களைக் காண்பிக்கவேண்டும். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தருடைய நாமத்தினால் ஆசீர்வதிக்கவேண்டும். ஆசரியரின் பணிவிடைகளும், லேவியரின் பணிவிடைகளும் ஒன்றுக்கொன்று முரண்படக்கூடாது. ஆலயத்தின் எந்தெந்த பணிவிடைகளை, யார் யார் செய்யவேண்டும் என்பதை தாவீது திட்டம்பண்ணி வைத்திருக்கிறார்.

தாவீது லேவியர் எல்லோருக்குமே பணிவிடைகளை நியமனம்பண்ணுகிறார். "அவர்களில் இருபத்துநாலாயிரம்பேர் கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறவர்களும், ஆறாயிரம்பேர் தலைவரும் மணியக்காரருமாயிருக்க வேண்டும் என்றும், நாலாயிரம்பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்கவேண்டும் என்றும், துதிசெய்கிறதற்குத் தான் பண்ணுவித்த கீதவாத்தியங்களால் நாலாயிரம்பேர் கர்த்தரைத் துதிக்கிறவர்களாயிருக்க வேண்டும்" (1நாளா 23:4,5) என்றும் தாவீது சொல்லியிருக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்தின் வேலையை விசாரிக்கிறதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள், ஆரோனுடைய குமாரரின் கீழ் கர்த்தருடைய ஆலயத்தின் ஊழியமாய் நிற்கவேண்டும். லேவியர்கள் தேவாலயத்தின் பிரகாரங்களையும், அதிலுள்ள அறைகளையும் சுத்தம்பண்ணவேண்டும். பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் அதற்குரிய இடங்களில் வைக்கவேண்டும். மேலும் லேவியர்கள் சமுகத்தப்பங்களையும், போஜனபலிக்கு மெல்லிய மாவையும், புளிப்பில்லாத அதிரசங்களையும், சட்டிகளிலே செய்கிறதையும் சுடுகிறதையும் செய்யவேண்டும் (1நாளா 23:29).

ஆசரியர்கள் கர்த்தருக்கு போஜனபலிகளை செலுத்துவார்கள். லேவியர்கள் அவற்றை திட்டமாய் ஆயத்தம்பண்ணி, ஆசாரியரின் கைகளில் கொடுப்பதற்கு, அவற்றை ஆயத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

மோசேயின் பிரமாணத்தில் அளவுகளைப்பற்றியும், நிறைகளைப்பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அளவும் நிறையும் கூடவோ அல்லது குறையவோ கூடாது. லேவியர்கள் திட்டமான சகல நிறையையும் அளவையும் விசாரிக்கவேண்டும்.

தாவீது நாலாயிரம் லேவியரை, கர்த்தரை துதிக்கிறவர்களாக நியமித்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதிக்கவேண்டும் (1நாளா 23:5). அவர்கள் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கர்த்தரைப் போற்றித் துதிக்கவேண்டும் (1நாளா 23:30).

ஒய்வுநாட்களிலும், அமாவாசைகளிலும், பண்டிகைகளிலும், கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகள் செலுத்தப்படும். அந்த வேளைகளில் லேவியர்கள் கர்த்தரை கீதவாத்தியங்களால் துதிக்கவேண்டும்.

"உங்கள் மகிழ்ச்சியின் நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்க தகனபலிகளும் சமாதானபலிகளும் செலுத்தப்படும் போது பூரிகைகளை ஊதவேண்டும்; அப்பொழுது அவைகள் உங்கள் தேவனுடைய சமுகத்தில் உங்களுக்கு ஞாபகக் குறியாயிருக்கும்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றார்" (எண் 10:10).

பூரிகைகளை ஊதுவது லேவியரின் பிரதான ஊழியம். பூரிகைகள் ஊதப்படும்போது எழும்பும் சத்தம், கர்த்தரை ஆராதிக்கிறவர்களுடைய இருதயத்திலே உற்சாகத்தை ஏற்படுத்தும். இவ்வாறாக கர்த்தருடைய ஆராதனை ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் இந்த ஆராதனை சிறிய அளவில் நடைபெற்றாலும், பிற்காலத்தில் இதுவே மிகப்பெரிய ஆராதனையாக வளர்ச்சி பெறுகிறது.

கர்த்தருடைய ஆலயத்தில் லேவியரில் 4,000 பேர் வாசல் காக்கிறவர்களாயிருக்கிறார்கள் (நாளா 23:5). ஆசரிப்புக் கூடாரத்தின் காவலையும் பரிசுத்த ஸ்தலத்தின் காவலையும் தங்கள் சகோதரராகிய ஆரோனுடைய குமாரரின் காவலையும் காப்பதும், கர்த்தருடைய ஆலயத்தின் பணிவிடையைச் செய்வதும், அவர்கள் வேலையாயிருக்கிறது (நாளா 23:32).

லேவியர்கள் ஆசரிப்புக்கூடாரத்தையும், மகாபரிசுத்த ஸ்தலத்தையும் காவல் காக்கிறார்கள். நியமிக்கப்பட்டவர்களைத் தவிர, வேறு யாரும் மகாபரிசுத்த ஸ்தலத்திற்கு அருகாமையில் போகாதவாறு காவல் காப்பது லேவியரின் பணிவிடை.

24 அதிகாரம்

ஆசாரியரும் லேவியரும் வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். இந்த வகுப்புக்கள் அவர்களுடைய குடும்பத்தின் பிரகாரம் பிரிக்கப்படுகிறது. தாவீது இவர்களுடைய ஒவ்வொரு வகுப்புக்கும் ஊழியத்தை நியமிக்கிறார்.

ஆசாரியரின் வகுப்புகள் (1நாளா 24:1-19). லேவியரின் வகுப்புகள் (1நாளா 24:20-31).

ஆசாரியரின் வகுப்புகள் 1நாளா 24:1-19

1நாளா 24:1. ஆரோன் புத்திரரின் வகுப்புகளாவன: ஆரோனின் குமாரர், நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்பவர்கள்.

1நாளா 24:2. நாதபும் அபியூவும் குமாரர் இல்லாமல் தங்கள் தகப்பனுக்கு முன்னே மரித்தபடியினால், எலெயாசாரும் இத்தாமாரும் ஆசாரிய ஊழியம் செய்தார்கள்.

1நாளா 24:3. தாவீது சாதோக்கைக்கொண்டு எலெயாசாரின் புத்திரரையும், அகிமெலேக்கைக் கொண்டு இத்தாமரின் புத்திரரையும் அவர்கள் செய்யவேண்டிய ஊழியத்துக்கு முறைப்படி அவர்களை வகுத்தான்.

1நாளா 24:4. அவர்களை வகுக்கிறபோது, இத்தாமரின் புத்திரைப்பார்க்கிலும் எலெயாசாரின் புத்திரருக்குள்ளே தலைமையானவர்கள் அதிகமானபேர் காணப்பட்டபடியினால், எலெயாசாரின் புத்திரரில் பதினாறுபேர் தங்கள் பிதாக்களுடைய குடும்பத்துக்கும், இத்தாமாரின் புத்திரரில் எட்டுப்பேர் தங்கள் பிதாக்களுடைய குடும்பத்துக்கும் தலைமையாக வைக்கப்பட்டார்கள்.

1நாளா 24:5. எலெயாசாரின் புத்திரரிலும், இத்தாமரின் புத்திரரிலும், பரிசுத்த ஸ்தலத்துக்கும், தேவனுக்கு அடுத்த காரியங்களில் பிரபுக்களாயிருக்கும் படிக்கும், இவர்களுக்கும் அவர்களுக்கும் வித்தியாசம் பண்ணாமல் சீட்டுப்போட்டு அவர்களை வகுத்தார்கள்.

1நாளா 24:6. லேவியரில் சம்பிரதியாகிய செமாயா என்னும் நெதனெயேலின் குமாரன், ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் ஆசாரியனாகிய சாதோக்குக்கும் அபியத்தாரின் குமாரனாகிய அகிமெலேக்குக்கும் ஆசாரியரும் லேவியருமான பிதாக்களின் தலைவருக்கும் முன்பாக அவர்கள் நாமங்களை எழுதினான்; ஒரு பிதாவின் வீட்டுச் சீட்டு எலெயாசாருக்கும் விழுந்தது; பின்பு அந்தப்படியே இத்தாமாருக்கும் விழுந்தது.

1நாளா 24:7. முதலாவது சீட்டு யோயாரீபின் பேர்வழிக்கும், இரண்டாவது யெதாயாவின் பேர்வழிக்கும்,

1நாளா 24:8. மூன்றாவது ஆரிமின் பேர்வழிக்கும், நான்காவது செயோரீமின் பேர்வழிக்கும்,

1நாளா 24:9. ஐந்தாவது மல்கியாவின் பேர்வழிக்கும், ஆறாவது மியாமீனின் பேர்வழிக்கும்,

1நாளா 24:10. ஏழாவது அக்கோத்சின் பேர்வழிக்கும், எட்டாவது அபியாவின் பேர்வழிக்கும்,

1நாளா 24:11. ஒன்பதாவது யெசுவாவின் பேர்வழிக்கும், பத்தாவது செக்கனியாவின் பேர்வழிக்கும்,

1நாளா 24:12. பதினோராவது எலியாசீபின் பேர்வழிக்கும், பன்னிரண்டாவது யாக்கீமின் பேர்வழிக்கும்,

1நாளா 24:13. பதின்மூன்றாவது உப்பாவின் பேர்வழிக்கும், பதினான்காவது எசெபெயாபின் பேர்வழிக்கும்,

1நாளா 24:14. பதினைந்தாவது பில்காவின் பேர்வழிக்கும், பதினாறாவது இம்மேரின் பேர் வழிக்கும்,

1நாளா 24:15. பதினேழாவது ஏசீரின் பேர்வழிக்கும், பதினெட்டாவது அப்சேசின் பேர்வழிக்கும்,

1நாளா 24:16. பத்தொன்பதாவது பெத்தகியாவின் பேர்வழிக்கும், இருபதாவது எகெசெக்கியேலின் பேர்வழிக்கும்,

1நாளா 24:17. இருபத்தோராவது யாகினின் பேர்வழிக்கும், இருபத்திரண்டாவது காமுவேலின் பேர்வழிக்கும்,

1நாளா 24:18. இருபத்து மூன்றாவது தெலாயாவின் பேர்வழிக்கும், இருபத்துநான்காவது மாசியாவின் பேர்வழிக்கும் விழுந்தது.

1நாளா 24:19. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்கள் தகப்பனாகிய ஆரோனுக்குக் கற்பித்தபடியே, அவர்கள் அவனுடைய கட்டளையின் பிரகாரம், தங்கள் முறைவரிசைகளில் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் அவர்களுடைய ஊழியத்திற்காகப் பண்ணப்பட்ட வகுப்புகள் இவைகளே.

ஆசாரியருக்கும், லேவியருக்கும் கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடைகள் நியமிக்கப்படுகிறது. அவர்கள் வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகிறார்கள். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த பின்பு, எஸ்றா ஆசாரியரின் வகுப்புகளையும், லேவியரின் வகுப்புகளையும் அறிவிக்கிறார்.

முதலாவதாக, "ஆரோன் புத்திரரின் வகுப்புகளாவன" *(1நாளா 24:1)* என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வகுப்புகளின் பிரகாரம், ஆரோனின் குடும்பத்தார், தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற தேவாலயத்து பணிவிடைகளை பகிர்ந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு பணிவிடை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆசாரியர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பணிவிடைகளை பொறுப்போடும், நேர்த்தியாயும் செய்யவேண்டும். ஒரு சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் சீராக இயங்கும்போது, முழுசரீரமும் சீராக இயங்கும். ஒவ்வொருவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட பணிவிடைகளை நேர்த்தியாய்ச் செய்யும்போது, கர்த்தருடைய ஆலயத்தின் எல்லா பணிவிடைகளும் நேர்த்தியாய் நடைபெறும்.

"ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" *(ரோம 12:4,5)*

"எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்" *(1கொரி 12:12)*.

ஆசாரியர் 24 வகுப்புக்களாக வகுக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஆரோனின் இரண்டு குமாரரான எலெயாசார், இத்தாமார் ஆகியோரின்கீழ் இரண்டு பிரிவாகப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆரோனின் மற்ற இரண்டு குமாரரான நாதாபும், அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் குடித்து வெறித்து, அந்நிய அக்கினியைக் காண்பித்ததினால் மரித்துப் போனார்கள். *(1நாளா 24:1-2; லேவி 10)*.

இவர்களுக்குப் புத்திரர்கள் பிறக்கவில்லை. இத்தாமாரைவிட எலெயாசாரிடத்தில் தலைமையானவர்கள் அதிகம்பேர் இருந்தார்கள். இதனால் எலெயாசாரின் புத்திரரில் 16 தலைவர்களும், இத்தாமாரின் புத்திரரில் 8 தலைவர்களும் வகுக்கப்பட்டார்கள் (1நாளா 24:3-4).

இவர்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கும், தேவனுக்கடுத்த காரியங்களுக்கும் பிரபுக்களாக இருந்தார்கள். இவர்களுடைய வகுப்பு விசாரிப்பு ஒவ்வொரு வாரமும் மாறிமாறி ஒவ்வொரு தலைவருக்கு வரும். (1நாளா 24:5). இவர்களை வித்தியாசம் பண்ணாமல் சீட்டுப் போட்டு வகுத்த போது, முதலாவது சீட்டு, எலெயாசாருக்கு விழுந்தது. அடுத்த சீட்டு இத்தாமாருக்கு விழுந்தது. (1நாளா 24:6).

ஆசாரிய வகுப்புக்களைப் பிரிக்கும்போது, அவர்களுக்குள் எந்த வித்தியாசமும் பண்ணாமல், சீட்டுப்போட்டு அவர்களை வகுக்கிறார்கள் (1நாளா 24:5). செமாயா என்னும் சம்பிரதி, லேவியருடைய பிதாக்களின் தலைவருக்கு முன்பாக, ஆசாரிகளின் நாமங்களையெல்லாம் எழுதி, எல்லோருக்கும் முன்பாக சீட்டுப்போடுகிறார்கள்.

ஆசாரியர்களை வகுப்புகளாகப் பிரிக்கும்போது, இஸ்ரவேலின் எல்லா ஜனங்களுக்கும் முன்பாக சீட்டுப் போடப்படுகிறது. சீட்டுப்போடப்படும்போது அங்கே ராஜாவும், இஸ்ரவேலின் பிரபுக்களும், ஆசாரியர்களும் கூடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் முன்பாக சீட்டுப்போடப்படுகிறது. ஆகையினால் சீட்டுப்போடுவதில் குழப்பமோ அல்லது சந்தேகமோ ஏற்படவில்லை.

தெரிந்தெடுக்கப்பட்ட ஆசாரியர்கள், பரிசுத்த ஸ்தலத்திற்கும், தேவனுக்கடுத்த காரியங்களுக்கும் பிரபுக்களாயிருப்பார்கள். ஆசாரியர்களில் யார் முதலாவதாக இந்தப் பணிவிடையை செய்யவேண்டும் என்றும், அதற்கு பின்பு, அவர்களைத் தொடர்ந்து இந்தப் பணிவிடையை யார் செய்யவேண்டும் என்றும் சீட்டுப்போடுகிறார்கள்.

ஆசாரியர்கள் 24 வகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் எலெயாசாரின் குடும்பத்திலே 16 ஆசாரிய வகுப்புக்களும், இத்தாமாரின் குடும்பத்திலே 8 ஆசாரிய வகுப்புகளும் இருக்கிறார்கள். ஒரு பிதாவின் வீட்டுச்சீட்டு எலெயாசாருக்கும், மற்றொரு சீட்டு இத்தாமாருக்கும் விழுகிறது.

ஆசாரியரின் 24 வகுப்புக்களில் எட்டாவது சீட்டாவது சீட்டு அபியாவின் பேர்வழிக்கு விழுகிறது (1நாளா 24:10). இந்த வகுப்பைப்பற்றி லூக்கா எழுதின சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"யூதேயாதேசத்தின் ராஜாவாகிய ஏரோதின் நாட்களில், அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னும் பேர் கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி, அவள் பேர் எலிசபெத்து" (லூக் 1:5).

யோவான்ஸ்நானனின் தகப்பனாராகிய சகரியா, அபியா என்னும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், தாவீது வகுத்த ஆசாரிய வகுப்புக்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்திலும் மாறாமல் அப்படியே இருக்கிறது.

தாவீதின் காலத்திற்கும், புதிய ஏற்பாட்டுக்காலத்திற்கும் இடையே, இஸ்ரவேலின் சரித்திரத்தில் ஏராளமான சம்பவங்கள் நடைபெற்றிருக்கிறது. இஸ்ரவேலை துன்மார்க்கமான ராஜாக்கள் ராஜ்யபாரம் பண்ணியிருக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனார்கள். ஆனாலும் பழைய ஏற்பாட்டுக்காலத்தில், தாவீது வகுத்த ஆசாரிய வகுப்பு, இயேசுகிறிஸ்துவின் காலத்திலும் அப்படியே இருக்கிறது.

ரோமப்பேரரசார் இரண்டாவது தேவாலயத்தை முற்றிலுமாய் அழித்துப்போட்டார்கள். அது வரையிலும் தாவீது வகுத்த 24 ஆசாரிய வகுப்புக்களே, அவர்களுடைய முறைமைகளின் பிரகாரம், தேவாலயத்திலே ஆசாரிய ஊழியம் செய்தார்கள் என்றும், அதன் பின்பு ஆசாரியரின் வகுப்பு முறை ஒழிந்துபோயிற்று என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

லேவியரின் வகுப்புகள்
1நாளா 24:20-31

1நாளா 24:20. லேவியின் மற்றப் புத்திரருக்குள்ளே இருக்கிற அம்ராமின் புத்திரரில் சூபவேலும், சூபவேலின் குமாரரில் எகேதியாவும்,

1நாளா 24:21. ரெகபியாவின் குமாரரில் மூத்தவனாகிய இஷியாவும்,

1நாளா 24:22. இத்சாரியரில் செலெமோத்தும், செலெமோத்தின் குமாரரில் யாகாத்தும்,

1நாளா 24:23. எப்ரோனின் குமாரரில் மூத்தவனாகிய எரியாவும், இரண்டாம் குமாரனாகிய அமரியாவும், மூன்றாம் குமாரனாகிய யாகாசியேலும், நான்காம் குமாரனாகிய எக்காமியாமும்,

1நாளா 24:24. ஊசியேலின் குமாரரில் மீகாவும், மீகாவின் குமாரரில் சாமீரும்,

1நாளா 24:25. மீகாவின் சகோதரனாகிய இஷியாவும், இஷியாவின் குமாரரில் சகரியாவும்,

1நாளா 24:26. மெராரியின் குமாரராகிய மகேலிமூசி என்பவர்களும், யாசியாவின் குமாரனாகிய பேனோவும்,

1நாளா 24:27. மெராரியின் குமாரனாகிய யாசியாவின் குமாரனான பேனோ, சோகாம், சக்கூர், இப்ரி என்பவர்களும்,

1நாளா 24:28. மகேலியின் குமாரரில் புத்திரனில்லாத எலெயாசாரும்,

1நாளா 24:29. கீசின் புத்திரரில் யெராமியேலும்,

1நாளா 24:30. மூசியின் குமாரரான மகேலி, ஏதேர், எரிமோத் என்பவர்களுமாகிய இவர்கள் தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே லேவியரின் புத்திரரானவர்கள்.

1நாளா 24:31. இவர்களும் ராஜாவாகிய தாவீதுக்கும் சாதோக்குக்கும் அகிமெலேக்குக்கும் ஆசாரியரிலும் லேவியரிலும் பிதாக்களாயிருக்கிற தலைவருக்கும் முன்பாக, தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர்செய்ததுபோல, தங்களிலிருக்கிற பிதாக்களான தலைவருக்கும், அவர்களுடைய சிறிய சகோதரருக்கும், சரிசமானமாய்ச் சீட்டுப் போட்டுக்கொண்டார்கள்.

லேவியரும் சீட்டுப்போட்டு 24 வகுப்புகளாக வகுக்கப்படுகிறார்கள். லேவியரின் ஒவ்வொரு வகுப்பிலும் வருகிறவர்களின் பெயர்கள் ஏற்கெனவே 1நாளா 23:16-ஆவது வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதியில், லேவியரின் ஒவ்வொரு வகுப்புக்கும் தலைவராகயிருக்கிறவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்கள் 24 வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசாரியரின் ஒவ்வொரு வகுப்புக்கும், லேவியரின் ஒவ்வொரு வகுப்பிலுள்ளவர்கள், அவர்களோடு சேர்ந்து தேவாலயத்திலே பணிவிடை செய்வார்கள்.

லேவியரின் வகுப்புகளில் சீட்டுப்போடும்போது, பிதாக்களுடைய பெயர்களோடு, சகோதரரின் பெயர்களும் எழுதப்பட்டு சீட்டுப்போடப்படுகிறது. அவர்கள் தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர்செய்ததுபோல, தங்களிலிருக்கிற பிதாக்களான தலைவருக்கும், அவர்களுடைய சிறிய சகோதரருக்கும், சரிசமானமாய்ச் சீட்டுப் போட்டுக்கொள்கிறார்கள் (1நாளா 24:31).

இந்த முறைமையின் பிரகாரம் சீட்டுப்போடப்படுவதினால் ஒரே குடும்பத்திலுள்ள மூத்த குமாரருக்கும், இளைய குமாரருக்கும் சமமான அந்தஸ்து கிடைக்கிறது. சீட்டு யாருடைய பெயருக்கு விழுகிறதோ அவரே தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒருவர் மற்றவரைவிட வயதில் மூத்தவர் என்னும் அடிப்படையில் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

லேவியரின் வகுப்புகள் 1நாளா 24:20-31

1நாளா 24:20. லேவியின் மற்றப் புத்திரருக்குள்ளே இருக்கிற அம்ராமின் புத்திரரில் சூபவேலும், சூபவேலின் குமாரரில் எகேதியாவும்,

1நாளா 24:21. ரெகபியாவின் குமாரரில் மூத்தவனாகிய இஷியாவும்,

1நாளா 24:22. இத்சாரியரில் செலெமோத்தும், செலெமோத்தின் குமாரரில் யாகாத்தும்,

1நாளா 24:23. எப்ரோனின் குமாரரில் மூத்தவனாகிய எரியாவும், இரண்டாம் குமாரனாகிய அமரியாவும், மூன்றாம் குமாரனாகிய யாகாசியேலும், நான்காம் குமாரனாகிய எக்காமியாமும்,

1நாளா 24:24. ஊசியேலின் குமாரரில் மீகாவும், மீகாவின் குமாரரில் சாமீரும்,

1நாளா 24:25. மீகாவின் சகோதரனாகிய இஷியாவும், இஷியாவின் குமாரரில் சகரியாவும்,

1நாளா 24:26. மெராரியின் குமாரராகிய மகேலிமூசி என்பவர்களும், யாசியாவின் குமாரனாகிய பேனோவும்,

1நாளா 24:27. மெராரியின் குமாரனாகிய யாசியாவின் குமாரனான பேனோ, சோகாம், சக்கூர், இப்ரி என்பவர்களும்,

1நாளா 24:28. மகேலியின் குமாரரில் புத்திரனில்லாத எலெயாசாரும்,

1நாளா 24:29. கீசின் புத்திரரில் யெரமியேலும்,

1நாளா 24:30. மூசியின் குமாரரான மகேலி, ஏதேர், எரிமோத் என்பவர்களுமாகிய இவர்கள் தங்கள் பிதாக்களுடைய குடும்பங்களின்படியே லேவியரின் புத்திரரானவர்கள்.

1நாளா 24:31. இவர்களும் ராஜாவாகிய தாவீதுக்கும் சாதோக்குக்கும் அகிமெலேக்குக்கும் ஆசாரியரிலும் லேவியரிலும் பிதாக்களாயிருக்கிற தலைவருக்கும் முன்பாக, தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர் செய்ததுபோல, தங்களிலிருக்கிற பிதாக்களான தலைவருக்கும், அவர்களுடைய சிறிய சகோதரருக்கும், சரிசமானமாய்ச் சீட்டுப் போட்டுக்கொண்டார்கள்.

லேவியரும் சீட்டுப்போட்டு 24 வகுப்புகளாக வகுக்கப்படுகிறார்கள். லேவியரின் ஒவ்வொரு வகுப்பிலும் வருகிறவர்களின் பெயர்கள் ஏற்கெனவே 1நாளா 23:16-ஆவது வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனப்பகுதியில், லேவியரின் ஒவ்வொரு வகுப்புக்கும் தலைவராகயிருக்கிறவர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசாரியர்கள் 24 வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆசாரியரின் ஒவ்வொரு வகுப்புக்கும், லேவியரின் ஒவ்வொரு வகுப்பிலுள்ளவர்கள், அவர்களோடு சேர்ந்து, தேவாலயத்திலே பணிவிடை செய்வார்கள்.

லேவியரின் வகுப்புகளில் சீட்டுப்போடும்போது, பிதாக்களுடைய பெயர்களோடு, சகோதரரின் பெயர்களும் எழுதப்பட்டு சீட்டுப்போடப்படுகிறது. அவர்கள் தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர்செய்ததுபோல, தங்களிலிருக்கிற பிதாக்களான தலைவருக்கும், அவர்களுடைய சிறிய சகோதரருக்கும், சரிசமானமாய்ச் சீட்டுப் போட்டுக் கொள்கிறார்கள் (1நாளா24:31).

இந்த முறைமையின் பிரகாரம் சீட்டுப்போடப்படுவதினால் ஒரே குடும்பத்திலுள்ள மூத்த குமாரருக்கும், இளைய குமாரருக்கும் சமமான அந்தஸ்து கிடைக்கிறது. சீட்டு யாருடைய பெயருக்கு விழுகிறதோ அவரே தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஒருவர் மற்றவரைவிட வயதில் மூத்தவர் என்னும் அடிப்படையில் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

ஒரு குடும்பத்தில், மூத்தவனைவிட இளையவன் கர்த்தருக்கு உண்மையுள்ளவனாயிருக்கும்போது, கர்த்தர் இளையவனையே தம்முடைய ஊழியத்திற்கு தேர்ந்தெடுக்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார்.

25 அதிகாரம்

தாவீது ஆசாரியர்களை 24 வகுப்புகளாகப் பிரித்து, அவர்களுக்கு கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடைகளை நியமிக்கிறார். ஆசாரியரின் ஊழியத்திலே, அவர்களுக்கு உதவி செய்வதற்காக தாவீது லேவியரையும் 24 வகுப்புகளாகப் பிரித்து, அவர்களுக்கும் கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடைகளை நியமிக்கிறார்.

மேலும் கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தரைத் துதித்துப் பாடும் பாடல்களைப் பாடுவதற்கும், சுரமண்டலங்கள், தம்புருகள், கைத்தாளங்கள் போன்ற வாத்தியக்கருவிகளை வாசிப்பதற்கும் தாவீது லேவியரை நியமனம்பண்ணுகிறார்.

கீதவாத்தியக்காரர்
1நாளா 25:1-7

1நாளா 25:1. மேலும் சுரமண்டலங்களாலும் தம்புருகளாலும் கைத்தளங்களாலும், தீர்க்கதரிசனம் சொல்லுகிற ஆசாப், ஏமான், எதுத்தூன் என்பவர்களின் குமாரரில் சிலரை, தாவீதும் தேவாலயச் சேனைகளின் பிரபுக்களும் ஊழியத்திற்கென்று பிரித்துவைத்தார்கள்; தங்கள் ஊழியத்தின் கிரியைக்குக் குறித்துவைக்கப்பட்ட மனுஷர்களின் தொகையாவது:

1நாளா 25:2. ராஜாவுடைய கட்டளைப்பிரமாணமாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிற ஆசாப்பின் வசத்திலிருக்கிற, ஆசாப்பின் குமாரரில் சக்கூர், யோசேப்பு, நெதானியா, அஷாரேலா என்பவர்களும்,

1நாளா 25:3. கர்த்தரைப் போற்றித் துதித்துத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தங்கள் தகப்பனாகிய எதுத்தூனின் வசத்திலே சுரமண்டலங்களை வாசிக்க, எதுத்தூனின் குமாரராகிய கெதலியா, சேரி, எஷாயா, அஷபியா, மத்தித்தியா என்னும் ஆறுபேரும்,

1நாளா 25:4. கொம்பைத் தொனிக்கப்பண்ண, தேவவிஷயத்தில் ராஜாவுக்கு ஞானதிருஷ்டியுள்ள புருஷனாகிய ஏமானின் குமாரரான புக்கியா, மத்தனியா, ஊசியேல், செபுவேல், எரிமோத், அனனியா, அனானி, எலியாத்தா, கிதல்தி, ரொமந்தியேசர், யோஸ்பெகாஷா, மலோத்தி, ஒத்திர், மகாசியோத் என்பவர்களுமே.

1நாளா 25:5. இவர்களெல்லாரும் ஏமானின் குமாரராயிருந்தார்கள்; தேவன் ஏமானுக்குப் பதினாலு குமாரரையும் மூன்று குமாரத்திகளையும் கொடுத்தார்.

1நாளா 25:6. இவர்கள் அனைவரும் ராஜாவுடைய கட்டளைப் பிரமாணமாய்க் கர்த்தருடைய ஆலயத்தில் தாளங்கள் தம்புருகள் சுரமண்டலங்களாகிய கீதவாத்தியம் வாசிக்க, தேவனுடைய ஆலயத்தின் ஊழியமாக அவரவர் தங்கள் தங்கள் தகப்பன்மாராகிய ஆசாப், எதுத்தூன், ஏமான் என்பவர்கள் வசத்தில் இருந்தார்கள்.

1நாளா 25:7. கர்த்தரைப் பாடும் பாட்டுகளைக் கற்றுக்கொண்டு, நிபுணரான தங்கள் சகோதரரோடுங்கூட அவர்கள் இலக்கத்திற்கு இருநூற்றெண்பத்தெட்டுபேராயிருந்தார்கள்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்திலே கீதவாத்தியக்காரரை நியமிக்கிறார். இவர்கள் "தீர்க்கதரிசனம்சொல்லுகிறவர்கள்" (1நாளா 25:1-3) என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படுகிறார்கள்.

"தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள்" என்னும் வாக்கியம் வருங்காலத்தில் நடைபெறப்போகிற சம்பவங்களை முன்னறிவிப்பது என்று பொருள்படாமல், பொதுவாக பாடல்களைப் பாடுவதையும், இசைக்கருவிகளை இசைப்பதையும் குறிக்கும். "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத் தக்கதாகப் பேசுகிறான்" (1கொரி 14:3).

ஆகையினால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் கர்த்தரைப் போற்றித் துதித்து மகிமைப்படுத்துகிறார்கள் (நாளா 25:3) இதை இசையோடும், பாடலோடும் செய்கிறார்கள். இந்தப் பணிவிடை ஆசாப், ஏமான், எதுத்தூன் ஆகியோரின் குமாரருக்குள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது (நாளா 25:2-7).

கீதவாத்தியக்காரரை தாவீதும் தேவாலய சேனைகளின் பிரபுக்களும் ஊழியத்திற்கென்று பிரித்து வைக்கிறார்கள் (நாளா 25:1). "தேவாலயச் சேனைகளின் பிரபுக்கள்" என்னும் வாக்கியம், லேவியரின் தலைவர்களைக் குறிக்கும். தேவாலயத்துப் பணிவிடைகளைச் செய்வதற்குப் பாடகர்களைப் பரிசுத்தப்படுத்த இவர்கள் தாவீதுக்கு உதவி புரிகிறார்கள். (நாளா 25:1-31).

கீதவாத்தியக்காரரின் மொத்த இலக்கம் இருநூற்றெண்பத்தெட்டுப் பேராயிருக்கிறார்கள் (நாளா 25:7) இந்த 288 பேரும் 24 வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 12 பேர் இருக்கிறார்கள். (நாளா 25:8-21).

லேவியர் எல்லோருமே தீர்க்கதரிசனக்காரர்களல்ல. கர்த்தருடைய தரிசனங்களைப் பெற்றுக்கொள்வது விசேஷித்த சிலாக்கியம். கர்த்தர் இந்த மேன்மையான சிலாக்கியத்தை லேவியரில் சிலருக்கு கொடுத்து அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஏமான் என்பவன், ராஜாவுக்கு ஞானதிருஷ்டியுள்ள புருஷனாயிருந்தான் (நாளா 25:4).

தீர்க்கதரிசிகள் கர்த்தரைத் துதித்துப்பாடும் சங்கீதங்களை இயற்றுகிறார்கள். அநேக சங்கீதங்களில், தீர்க்கதரிசன செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. சாமுவேலின் காலத்தில் கர்த்தரைத் துதித்துப்பாடுவது, "தீர்க்கதரிசனம் சொல்லுவது" என்றே அழைக்கப்பட்டது.

"பின்பு பெலிஸ்தரின் தாணையம் இருக்கிற தேவனுடைய மலைக்குப் போவாய்; அங்கே நீ பட்டணத்திற்குள் பிரவேசிக்கையில், மேடையிலிருந்து இறங்கிவருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கு எதிர்படுவாய்; அவர்களுக்கு முன்பாகத் தம்புரும் மேளமும் நாகசுரமும் சுரமண்டலமும் போகும்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்" (1சாமு 10:5).

"அப்பொழுது சவுல்: தாவீதைக் கொண்டுவரச் சேவகரை அனுப்பினான்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையும், சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையும் கண்டார்கள்; அப்பொழுது சவுலினுடைய சேவகரின்மேல் தேவனுடைய ஆவி இறங்கினதினால் அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்" (1சாமு 19:20).

கீதவாத்தியக்காரர் சுரமண்டலங்களாலும், தம்புருகளாலும், கைத்தாளங்களாலும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவது, இந்த வசனப்பகுதியில் "ஊழியம்" என்றே அழைக்கப்படுகிறது.

இந்த வசனப்பகுதியில் சுரமண்டலங்கள், தம்புருகள், கைத்தாளங்கள் போன்ற ஒரு சில கீதவாத்தியங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (நாளா 25:1,6). ஏமானின் குமாரர் கொம்பைத் தொனிக்கப்பண்ணுகிறார்கள் (நாளா 25:4).

கீதவாத்தியக்காரர் இசைப்பது நரம்பு வாத்தியமாகவோ, அல்லது தாளவாத்தியமாகவோ அல்லது காற்று வாத்தியமாகவோ இருக்கலாம். இவையெல்லாமே தேவனுடைய நாமமகிமைக்காகவே வாசிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடி கீர்த்தனம்பண்ணவேண்டும்.

"சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" (எபே 5:19-21).

கீதவாத்தியக்காரர் எல்லோருமே ராஜாவுடைய கட்டளைப் பிரமாணமாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (1நாளா 25:2). இவர்கள் அனைவரும் ராஜாவுடைய கட்டளைப் பிரமாணமாய், கர்த்தருடைய ஆலயத்தில் கீதவாத்தியங்களை வாசிக்கிறார்கள் (1நாளா 25:6).

ஆசாப், ஏமான், எதுத்தூன் ஆகிய பிதாக்கள் கர்த்தருடைய ஆலயத்தில் சுரமண்டலங்களை வாசிக்கிறார்கள் (1நாளா 25:1). அப்போது அவர்களுடைய குமாரர்கள், தங்கள் தங்கள் தகப்பன்மார் வசத்திலிருக்கிறார்கள் (1நாளா 25:2,3,6).

ஏமான், ஆசாப், எதுத்தூன் ஆகியோர் தீர்க்கதரிசியாகிய சாமுவேலின்கீழ் ஊழியப்பயிற்சி பெற்றவர்கள். அப்போது அவர்கள் சாமுவேலின் பாடசாலையில் மாணவர்களாகயிருந்தார்கள். இப்போதோ இம்மூவரும் கீதவாத்தியங்களை நேர்த்தியாய் வாசிக்கிறார்கள்.

கீதவாத்தியங்களினால் கர்த்தருக்கு இசைக்கருவிகளை வாசித்து ஊழியம் செய்வதை தாவீது ஆரம்பித்து வைக்கிறார். இந்த ஊழியத்தை சாலொமோன் பூரணப்படுத்துகிறார். தீர்க்கதரிசியாகிய சாமுவேல் ஆரம்பித்து வைத்த ஊழியத்தை தாவீது ராஜா பூரணப்படுத்துகிறார்.

ஆசாப், ஏமான், எதுத்தூன் என்பவர்களின் குமாரரோடு இன்னும் அநேகரும் கர்த்தருடைய ஆலயத்தில் கீதவாத்தியங்களை வாசிக்கிறார்கள். இவர்கள் கர்த்தரைப் பாடும் பாட்டுக்களை கற்றுக்கொண்ட நிபுணரான சகோதரர்கள். இவர்களின் எண்ணிக்கை 288 பேர்.

தாவீது லேவியரில் 4,000 பேரை கர்த்தரை துதிக்கிறவர்களாக நியமனம்பண்ணியிருந்தார் (1நாளா 23:5). 4,000 பேரோடு 288 பேரை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது சொற்ப எண்ணிக்கையாயிருக்கிறது.

தாவீது நியமனம்பண்ணின கீதவாத்தியக்காரர் இஸ்ரவேல் தேசம் எங்கிலும் புறப்பட்டுப்போய் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். அவர்கள் சமஸ்த இஸ்ரவேல் தேசத்திலும் தாவீது இயற்றின சங்கீதங்களை பயபக்தியோடு பாடுகிறார்கள்.

"அன்றியும், புருஷர்கள் கோபமும் தர்க்கமுமில்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்" (1தீமோ 2:8).

கீதவாத்தியக்காரரின் வகுப்புகள் 1நாளா 25:8-31

1நாளா 25:8. அவர்களில் சிறியவனும் பெரியவனும், ஆசானும் மாணாக்கனும், சரிசமானமாய் முறைவரிசைக்காகச் சீட்டுப்போட்டுக்கொண்டார்கள்.

1நாளா 25:9. முதலாவது சீட்டு ஆசாப் வம்சமான யோசேப்பின் பேர்வழிக்கும், இரண்டாவது கெதலியா, அவன் சகோதரர், அவன் குமாரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:10. மூன்றாவது சக்கூர், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:11. நான்காவது இஸ்ரி, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:12. ஐந்தாவது நெத்தனியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:13. ஆறாவது புக்கியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:14. ஏழாவது எசரேலா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:15. எட்டாவது எஷாயா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:16. ஒன்பதாவது மத்தனியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:17. பத்தாவது சிமேயா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:18. பதினோராவது அசாரியேல், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:19. பன்னிரண்டாவது அஷாபியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:20. பதின்மூன்றாவது சுபவேல், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:21. பதினான்காவது மத்தித்தியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:22. பதினைந்தாவது எரேமோத், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:23. பதினாறாவது அனனியா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:24. பதினேழாவது யோஸ்பேக்காஷா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:25. பதினெட்டாவது ஆனானி, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:26. பத்தொன்பதாவது மலோத்தி, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:27. இருபதாவது எலியாத்தா, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:28. இருபத்தோராவது ஒத்திர், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:29. இருபத்திரண்டாவது கிதல்தி, அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:30. இருபத்துமூன்றாவது மகாசியோத், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

1நாளா 25:31. இருபத்துநான்காவது ரொமந்தியேசர், அவன் குமாரர், அவன் சகோதரரென்னும் பன்னிரண்டு பேர்வழிக்கும் விழுந்தது.

ஆசாப், ஏமான், எதுத்தூன் ஆகியோரின் 24 குமாரரைப்பற்றி இந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களில் ஏதான் என்பவன் மூன்றாவதாக இருந்தான்.

"மெராரியின் புத்திரராகிய இவர்களுடைய சகோதரர் இடதுபக்கத்திலே நிற்பார்கள்; அவர்களில் ஏதான் என்பவன் கிஷியின் குமாரன்; இவன் அப்தியின் குமாரன்; இவன் மல்லூகின் குமாரன்" (1நாளா 6:44).

தாவீது கீதவாத்தியக்காரரின் வகுப்புக்களை பகுக்கும்போது, ஏதான் மரித்துப்போய்விட்டான். ஏதாமின் ஸ்தானத்தில் எதுத்தூன் என்பவனை தாவீதும், தேவாலய சேனைகளின் பிரபுக்களும் கீதவாத்திய ஊழியத்திற்காக பிரித்து வைக்கிறார்கள்.

ஒரு வேளை ஏதாம் என்னும் பெயரும், எதுத்தூன் என்னும் பெயரும் ஒரே நபரைக் குறிக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். கீதவாத்திய ஊழியத்திற்காக 24 பேர் பிரித்து வைக்கப்படுகிறார்கள். இவர்களுடைய பெயர்கள் 1நாளா 25:2-4 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவர்கள் எந்த வரிசையில் இங்கு சொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இவர்களெல்லோருமே சீட்டுப்போட்டு தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் (1நாளா 25:8).

சீட்டுப்போடுவதில் பட்சபாதம் எதுவும் காண்பிக்கப்படவில்லை. கீதவாத்தியக்காரர் 24 வகுப்புகளாக பிரிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 12 பேர்வழிகள் இருக்கிறார்கள். கீதவாத்தியக்காரர் எல்லோரும் சரிசமானமாய் இருக்கிறார்கள்.

அவர்களில் சிறியவனும், பெரியவனும், ஆசானும், மாணாக்கனும், சரிசமானமாய் முறைவரிசைக்காகச் சீட்டுப்போட்டுக் கொள்கிறார்கள் (1நாளா 25:8).

கர்த்தர் தமக்குச் சித்தமானவர்களை கீதவாத்தியக்காரராக தீர்மானம்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுடைய வயதிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கீதவாத்தியக்காரரின் திறமைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சீட்டு சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும், ஆசானுக்கும் மாணாக்கனுக்கும் ஒன்றுபோலவே போடப்படுகிறது. இதில் வித்தியாசம் காண்பிக்கப்படவில்லை.

ஒவ்வொரு வம்சத்திலும் பன்னிரண்டு பேர்வழிகள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் துதியின் கீதங்களை பாடுகிறவர்களாகவும், மற்றவர்கள் கீதவாத்தியங்களை வாசிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து கர்த்தரைத் துதித்துப்பாடும் துதியின் கீதங்களைப் பாடுகிறார்கள். அவர்கள் கீதவாத்தியங்களை வாசித்து, கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டு கர்த்தரைத் துதிக்கிறார்கள்.

26 அதிகாரம்

லேவியரின் பணிவிடைகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் லேவிகோத்திரத்தார் சொற்பஎண்ணிக்கையுள்ள ஜனமாகவே இருந்தார்கள். ஏலி, சாமுவேல் ஆகியோரின் காலம் வரையிலும் லேவிகோத்திரத்தார் அதிக முக்கியத்துவம் இல்லாத, சாதாரண கோத்திரத்தாராகவே இருந்தார்கள்.

தாவீது தன்னுடைய ராஜ்யபார காலத்தில் மார்க்க ஆராதனையை உயிர்ப்பிக்கிறார். தாவீது இஸ்ரவேலின் மார்க்கத்தில் லேவியருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இதன் மூலமாக லேவிகோத்திரத்தார் எல்லோரும் அதிக முக்கியத்துவம் பெறுகிறார்கள். கர்த்தருடைய பார்வையில் லேவிகோத்திரத்தார் விசேஷமானவர்களாகவும், கனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

லேவியரில் வாசல் காக்கிறவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் (1நாளா 26:1-19). லேவியரில் சிலர் தேவனுடைய ஆலயத்து பொக்கிஷங்களையும், பிரதிஷ்டையாக்கப்பட்ட பொக்கிஷங்களையும் விசாரிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (1நாளா 26:20-28). லேவியரில் மேலும் சிலர் தேசகாரியங்களை பார்க்கும்படி, இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரராகவும், மணியக்காரராகவும் இருக்கிறார்கள் (1நாளா 26:29-32).

வாசல்காக்கிறவர்கள்
1நாளா 26:1-19

1நாளா 26:1. வாசல்காக்கிறவர்களின் வகுப்புகளாவன: கோராகியர் சந்ததியான ஆசாபின் புத்திரரிலே கோரேயின் குமாரன் மெஷெலேமியா என்பவன்,

1நாளா 26:2. மெஷெலேமியாவின் குமாரர், மூத்தவனாகிய சகரியாவும்,

1நாளா 26:3. எதியாயேல், செபதியா, யதனியேல், ஏலாம், யோகனான், எலியோனாய் என்னும் இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம்ஏழாம் குமாரரும்;

1நாளா 26:4. ஓபேத்ஏதோமின் குமாரர், மூத்தவனாகிய செமாயாவும்,

1நாளா 26:5. யோசபாத், யோவாக், சாக்கார், நெதனெயேல், அம்மியேல், இசக்கார், பெயுள்தாயி என்னும் இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம் ஏழாம் எட்டாம் குமாரருமே; தேவன் அவனை ஆசீர்வதித்திருந்தார்.

1நாளா 26:6. அவன் குமாரனாகிய செமாயாவுக்கும் குமாரர் பிறந்து, அவர்கள் பராக்கிரமசாலிகளாயிருந்து, தங்கள் தகப்பன் குடும்பத்தாரை ஆண்டார்கள்.

1நாளா 26:7. செமாயாவுக்கு இருந்த குமாரர் ஒத்னியும், பலசாலிகளாகிய ரெப்பாயேல், ஓபேத், எல்சாபாத், என்னும் அவன் சகோதரரும், எலிகூவும் செமகியாவுமே.

1நாளா 26:8. ஓபேத்ஏதோமின் புத்திரரும் அவர்கள் குமாரரும் அவர்கள் சகோதரருமாகிய ஊழியத்திற்குப் பலத்த பராக்கிரமசாலிகளான அவர்களெல்லாரும் அறுபத்திரண்டுபேர்.

1நாளா 26:9. மெஷெலேமியாவின் குமாரரும் சகோதரருமான பராக்கிரமசாலிகள் பதினெட்டுப்பேர்.

1நாளா 26:10. மெராரியின் புத்திரரில் ஓசா என்பவனுடைய குமாரர்கள்: சிம்ரி என்னும் தலைமையானவன்; இவன் மூத்தவனாயிராவிட்டாலும் இவன் தகப்பன் இவனைத் தலைவனாக வைத்தான்.

1நாளா 26:11. இல்க்கியா, தெபலியா, சகரியா என்னும் இரண்டாம் மூன்றாம் நான்காம் குமாரரானவர்கள்; ஓசாவின் குமாரரும் சகோதரரும் எல்லாம் பதின்மூன்றுபேர்.

1நாளா 26:12. காவல்காரரான தலைவரின்கீழ்த் தங்கள் சகோதரருக்கொத்த முறையாய்க் கர்த்தருடைய ஆலயத்தில் வாசல்காக்கிறவர்களாய்ச் சேவிக்க இவர்கள் வகுக்கப்பட்டு,

1நாளா 26:13. தங்கள் பிதாக்களின் குடும்பத்தாராகிய சிறியவர்களும் பெரியவர்களுமாய் இன்ன வாசலுக்கு இன்னாரென்று சீட்டுப்போட்டுக்கொண்டார்கள்.

1நாளா 26:14. கீழ்ப்புறத்திற்குச் செலேமியாவுக்குச் சீட்டு விழுந்தது; விவேகமுள்ள யோசனைக்காரனாகிய சகரியா என்னும் அவன் குமாரனுக்குச் சீட்டுப் போட்டபோது, அவன் சீட்டு வடபுறத்திற்கென்று விழுந்தது.

1நாளா 26:15. ஓபேத் ஏதோமுக்குத் தென் புறத்திற்கும், அவன் குமாரருக்கும் அசுப்பீம் வீட்டிற்கும்,

1நாளா 26:16. சுப்பீமுக்கும், ஓசாவுக்கும் மண்போட்டு உயர்த்தப்பட்ட வழியும் காவலுக்கு எதிர்காவலும் இருக்கிற மேற்புறமான வாசலுக்கும் சீட்டு விழுந்தது.

1நாளா 26:17. கிழக்கே லேவியரான ஆறுபேரும், வடக்கே பகலிலே நாலுபேரும், தெற்கே பகலிலே நாலுபேரும், அசுப்பீம் வீட்டண்டையில் இரண்டிரண்டுபேரும்,

1நாளா 26:18. வெளிப்புறமான வாசல் அண்டையில் மேற்கே இருக்கிற உயர்ந்த வழிக்கு நாலுபேரும், வெளிப்புறமான வழியில் இரண்டுபேரும் வைக்கப்பட்டார்கள்.

1நாளா 26:19. கோராகின் புத்திரருக்குள்ளும், மெராரியின் புத்திரருக்குள்ளும், வாசல் காக்கிறவர்களின் வகுப்புகள் இவைகளே.

தாவீது கர்த்தருடைய ஆலயத்திலே வாசல்காக்கிறவர்களை நியமிக்கிறார். இவர்கள் எல்லோருமே லேவியர்கள். இவர்கள் தேவாலயத்தின் வாசல்களை திறப்பது, அடைப்பது ஆகிய பணிவிடைகளை செய்கிறார்கள். தேவாலயத்திற்குள்ளே பிரவேசிக்கிறவர்களை வாசல் காக்கிறவர்கள் ஒழுங்குபடுத்துகிறார்கள். அந்நியர்கள், அசுத்தமானவர்கள், தீட்டானவர்கள், ஆகியவர்களை வாசல்காக்கிறவர்கள், கர்த்தருடைய ஆலயத்திலே பிரவேசிக்க அனுமதிக்கமாட்டார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாக சத்துருக்கள் எழும்பி வரும்போது, வாசல்காக்கிறவர்கள் ஆலயத்திற்கு பாதுகாப்பாயிருப்பார்கள். தேவாலயத்தின் திறவுகோல்கள் வாசல் காக்கிறவர்களின் கைகளிலிருக்கும். புதிய ஏற்பாட்டுக்காலத்திலே பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள், கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

"பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத் 16:19).

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருடைய பிரமாணத்தின்படி செயல்படவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே கட்டவேண்டும், கட்டவிழ்க்கவேண்டும். அவருடைய தெய்வீக பிரமாணத்தின்படியே, கர்த்தருடைய ஊழியக்காரர்கள் பரலோக ராஜ்யத்தின் கதவுகளை திறக்கவும் அடைக்கவும் வேண்டும்.

வாசல் காக்கிறவர்களில் சிலர் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். அவர்கள் ஊழியத்திற்கு பலத்த பராக்கிரமசாலிகளாகவும் இருக்கிறார்கள்.

"அவன் குமாரனாகிய செமாயாவுக்கும் குமாரர் பிறந்து, அவர்கள் பராக்கிரமசாலி களாயிருந்து, தங்கள் தகப்பன் குடும்பத்தாரை ஆண்டார்கள். செமாயாவுக்கு இருந்த குமாரர் ஒத்னியும், பலசாலிகளாகிய ரெப்பாயேல், ஓபேத், எல்சாபாத், என்னும் அவன் சகோதரரும், எலிகூவும் செமகியாவுமே. ஓபேத்ஏதோமின் புத்திரரும் அவர்கள் குமாரரும் அவர்கள் சகோதரருமாகிய ஊழியத்திற்குப் பலத்த பராக்கிரமசாலிகளான அவர்களெல்லாரும் அறுபத்திரண்டுபேர்" (நாளா 26:6-8).

வாசல்காக்கிறவர்களில் ஒருவனாகிய சகரியா என்பவன் விவேகமுள்ள யோசனைக்காரனாயிருக்கிறான் (நாளா 26:14). கர்த்தர் நம்மை எந்த ஊழியத்திற்கு அழைக்கிறாரோ, அந்த ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் நம்மைத் தகுதிப்படுத்தவும் செய்கிறார்.

ஒபேத் ஏதோமின் குமாரரைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய குடும்பத்தில் அறுபத்திரண்டு பேர் இருக்கிறார்கள். கர்த்தருடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்தது. அப்போது ஓபேத் ஏதோமும் அவருடைய குடும்பத்தாரும் கர்த்தருடைய பெட்டியை, சந்தோஷமாயும், பயபக்தியாயும் பராமரித்து வந்தார்கள். கர்த்தர் ஓபேத்ஏதோமையும், அவருடைய குடும்பத்தாரையும் ஆசீர்வதிக்கிறார்.

ஓபேத்ஏதோமுக்கு எட்டு குமாரர் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். "ஓபேத்ஏதோமின் குமாரர், மூத்தவனாகிய செமாயாவும், யோசபாத், யோவாக், சாக்கார், நெதனெயேல், அம்மியேல், இசக்கார், பெயுள்தாயி என்னும் இரண்டாம் மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம் ஏழாம் எட்டாம் குமாரருமே; தேவன் அவனை ஆசீர்வதித்திருந்தார்" (நாளா 26:4,5).

ஓபேத்ஏதோமின் குமாரருக்கு கர்த்தருடைய ஆலயத்திலே விசேஷித்த ஊழியம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் தங்களுடைய வீட்டிலே கர்த்தருடைய பெட்டியை உண்மையாய்க் காவல் காத்தார்கள். இப்போது அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே வாசல்காக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

நம்முடைய குடும்பத்திலே கர்த்தருடைய பிரமாணத்திற்கு நாம் கீழ்ப்படியும்போது, கர்த்தர் நமக்கும் அவருடைய கூடாரத்திலே ஊழிய வாய்ப்புக்களைக் கொடுப்பார்.

"தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (1தீமோ 3:4,5).

மெராரியின் புத்திரரில், சிம்ரி என்பவன் மூத்தவனல்ல. ஆனாலும் இவனுடைய தகப்பன் இவனை தலைவனாக வைக்கிறான் (நாளா 26:10). ஒரு வேளை இவனுடைய மூத்த சகோதரன் சரீர பலவீனத்தோடு இருந்திருக்கலாம் அல்லது இளைய சகோதரனாகிய சிம்ரி, தன்னுடைய மூத்த சகோதரனைவிட திறமையுள்ளவனாகயிருந்திருக்கலாம்.

வாசல்காக்கிறவர்கள், கர்த்தருடைய ஆலயத்திலே எந்தெந்த வாசலைக் காவல்காக்கவேண்டும் என்று, அவர்கள் தங்களுக்குள்ளே சீட்டுப்போட்டுக்கொள்கிறார்கள். இதனால் வாசல்காக்கிறவர்கள் ஒவ்வொருவருக்கும், தங்களுடைய பணிவிடை எங்கே நடைபெறவேண்டும் என்பது தெரிந்திருக்கிறது. அவர்களுக்குள்ளே குழப்பம் ஏற்படவில்லை (நாளா 26:13).

ஆசாரியரைப் போல வாசல்காக்கிறவர்களும் 12 வகுப்புக்களாக வகுக்கப்படுகிறார்கள். ஆசாரியர், லேவியர், பாடகர் ஆகியோரின் வகுப்புக்களுடைய தலைவர்களின் பெயர்கள் வேதாகமத்தில் கூறப்பட்டிருப்பது போன்று, வாசல்காக்கிறவர்களின் வகுப்புகளுடைய தலைவர்களின் பெயர்களும் கூறப்பட்டிருக்கிறது (நாளா 26:1-28).

கர்த்தருடைய ஆலயத்திலே ஒவ்வொரு வாசலுக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற, வாசல் காக்கிறவர்களைப்பற்றிய விவரம் 1நாளா 26:13-19 ஆகிய வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

பொக்கிஷங்களை விசாரிக்கிறவர்கள் 1நாளா 26:20-28

1நாளா 26:20. மற்ற லேவியரில் அகியா என்பவன் தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களையும், பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களின் பொக்கிஷங்களையும் விசாரிக்கிறவனாயிருந்தான்.

1நாளா 26:21. லாதானின் குமாரர் யாரென்றால், கெர்சோனியனான அவனுடைய குமாரரில் தலைமையான பிதாக்களாயிருந்த யெகியேலியும்,

1நாளா 26:22. யெகியேலியின் குமாரராகிய சேத்தாமும், அவன் சகோதரனாகிய யோவேலுமே; இவர்கள் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷங்களை விசாரிக்கிறவர்களாயிருந்தார்கள்.

1நாளா 26:23. அம்ராமீயரிலும், இத்சாகாரியரிலும், எப்ரோனியரிலும், ஊசியேரியரிலும் சிலர் அப்படியே விசாரிக்கிறவர்களாயிருந்தார்கள்.

1நாளா 26:24. மோசேயின் குமாரனாகிய கெர்சோமின் சந்ததியான செபுவேல் பொக்கிஷப் பிரதானியாயிருந்தான்.

1நாளா 26:25. எலியேசர் மூலமாய் அவனுக்கு இருந்த சகோதரரானவர்கள், இவன் குமாரன் ரெகபியாவும், இவன் குமாரன் எஷாயாவும், இவன் குமாரன் யோராமும், இவன் குமாரன் சிக்கிரியும், இவன் குமாரன் செலோமித்துமே.

1நாளா 26:26. ராஜாவாகிய தாவீதும், ஆயிரம் பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளுமான பிதாக்களின் தலைவரும், சேனாபதிகளும் யுத்தத்தில் அகப்பட்ட கொள்ளைகளில் எடுத்து,

1நாளா 26:27. கர்த்தருடைய ஆலயத்தைப் பரிபாலிக்கும் படிக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்ட பொருள்களின் பொக்கிஷங்களையெல்லாம் அந்தச் செலோமித்தும் அவனுடைய சகோதரரும் விசாரித்தார்கள்.

1நாளா 26:28. ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலும் கீசின் குமாரனாகிய சவுலும், நேரின் குமாரனாகிய அப்னேரும், செருயாவின் குமாரனாகிய யோவாபும், அவரவர் பரிசுத்தம் என்று நேர்ந்துகொண்ட அனைத்தும் செலோமித்தின் கையின்கீழும் அவன் சகோதரர் கையின்கீழும் இருந்தது.

கர்த்தருடைய ஆலயத்திலே ஏராளமான பொக்கிஷங்கள் இருக்கிறது. இவை தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களும், பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களின் பொக்கிஷங்களுமாகும். தாவீது இந்தப் பொக்கிஷங்களை பாதுகாப்பதற்கும், விசாரிப்பதற்கும் லேவியரை நியமிக்கிறார்.

பொக்கிஷங்களின் எண்ணிக்கையும் அளவும் ஏராளமாயிருக்கும்போது அவற்றை முறைப்படி பராமரித்து பாதுகாக்கவேண்டும். பெரிய வீடுகளிலே திரளான பொக்கிஷம் இருக்கும். கர்த்தருடைய ஆலயம் மகாபெரியது. ஆலயத்தைப் பராமரிப்பதற்கும், ஆலயத்தின் அன்றாட நடபடிகளை நடத்துவதற்கும் ஏராளமான பொக்கிஷங்கள் வேண்டும். தாவீது கர்த்தருடைய ஆலயத்திற்கு திரளான பொக்கிஷங்களைக் கொடுத்திருக்கிறார். இந்தப் பொக்கிஷங்களை விசாரிப்பதற்கு, தாவீது லேவியரை விசாரிப்புக்காரராக நியமிக்கிறார்.

நம்முடைய பரலோக பிதாவின் வீட்டிலே ஏராளமான பொக்கிஷங்கள் உண்டு. அவையெல்லாம் நமக்கு போதுமானவையாகவும் இருக்கும். நம்முடைய தேவைக்கு அதிகமாகவும் அங்கே இருக்கும். இயேசுகிறிஸ்துவே விசுவாசிகளாகிய நமக்கு மெய்யான ஆலயமாயிருக்கிறார். அவருக்குள்ளே ஞானமும், அறிவும், புத்தியும், ஆராய்ந்து முடியாத ஐசுவரியங்களும் இருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்திலே, தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களைத் தவிர, பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களின் பொக்கிஷங்களும் இருக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய தெய்வீக பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும் தங்களை பாதுகாத்து பராமரிப்பதற்காக, இஸ்ரவேலின் ராஜாக்களும், இஸ்ரவேல் ஜனத்தாரும், தங்களுடைய பொருட்களை கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த உதவிகளை நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார்கள்.

"இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்; ராஜாக்களை முறியடித்துவந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான்" (எபி 7:1).

"இவன் எவ்வளவு பெரியவனாயிருக்கிறான் பாருங்கள்; கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாம் முதலாய் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் இவனுக்குத் தசமபாகம் கொடுத்தான்" (எபி 7:4).

மோசேயின் காலத்திலே, எதிரி தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டு, இஸ்ரவேலின் சேனைத்தலைவர்கள் தங்கள் கூடாரங்களுக்கு திரும்பி வரும்போது, சத்துருக்களின் கொள்ளைப்பொருட்களை கொண்டு வருவார்கள். அவற்றை கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்த்துகொள்வார்கள்.

"ஆகையால், கர்த்தருடைய சந்நிதியில் எங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்பொருட்டு, எங்களுக்குக் கிடைத்த பொற்பணிகளாகிய பாதசரங்களையும், அஸ்தகடகங்களையும், மோதிரங்களையும், காதணிகளையும், காப்புகளையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோம் என்றார்கள்" (எண் 31:50).

பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்ட பொக்கிஷங்கள் யுத்தத்தில் அகப்பட்ட கொள்ளைப் பொருட்களாகும். சாமுவேல், சவுல், அப்னேர், யோவாப், தாவீது ஆகியோர் சுமார் 100 வருஷங்களாக யுத்தத்தில் சேகரித்த கொள்ளைப் பொருட்கள் கர்த்தருடைய ஆலயத்தைப் பரிபாலிக்கும் படிக்குப் பரிசுத்தம் என்று நேர்ந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இவை தவிர, மோசேயின் காலத்திலிருந்து சாமுவேலின் காலம் வரையிலும் சேகரிக்கப்பட்ட பொருட்களும் பரிசுத்தமானவையாகும். (1நாளா 26:27-28).

1நாளா 26:20-28 ஆகிய வசனங்களில் தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களையும், பிரதிஷ்டையாக்கப்பட்ட பொருள்களின் பொக்கிஷங்களையும் விசாரிக்கிறவர்களுடைய பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மணியக்காரர்

1நாளா 26:29-32

1நாளா 26:29. இத்சாகாரியரில் கெனானியாவும் அவன் குமாரரும் தேசகாரியங்களைப் பார்க்கும்படி வைக்கப்பட்டு, இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரரும் மணியக்காரருமாயிருந்தார்கள்.

1நாளா 26:30. எப்ரோனியரில் அசபியாவும் அவன் சகோதரருமாகிய ஆயிரத்து எழுநூறு பராக்கிரமசாலிகள் யோர்தானுக்கு இப்பாலே மேற்கே இருக்கிற இஸ்ரவேலின் மேல் கர்த்தருடைய எல்லா ஊழியத்திற்கும் ராஜாவின் வேலைக்கும் வைக்கப்பட்டார்கள்.

1நாளா 26:31. எப்ரோனியரில் எரியாவும் இருந்தான்; அவன் தன் பிதாக்களின் வம்சங்களான எப்ரோனியரில் தலைமையானவன்; தாவீது அரசாண்ட நாற்பதாம் வருஷத்திலே அவர்கள் தேடப்பட்டபோது அவர்களுக்குள்ளே கீலேயாத்தேசத்து ஏசேரிலே பராக்கிரம வீரர் காணப்பட்டார்கள்.

1நாளா 26:32. பலசாலிகளாகிய அவனுடைய சகோதரர் இரண்டாயிரத்து எழுநூறு பிரதான தலைவராயிருந்தார்கள்; அவர்களைத் தாவீதுராஜா தேவனுக்கடுத்த சகல காரியத்திற்காகவும், ராஜாவின் காரியத்திற்காகவும், ரூபனியர்மேலும், காதியர்மேலும், மனாசேயின் பாதிக்கோத்திரத்தின்மேலும் வைத்தான்.

தேசகாரியங்கள் என்பது, தேவாலயத்து ஆராதனை, ஆலயத்தின் பணிவிடைகள் தவிர, தேசத்தின் மற்றக் காரியங்களாகும் (1நாளா 26:29).

கர்த்தருடைய தெய்வீக பிரமாணத்தின்படியே நியாயாதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். ஜனங்கள் மத்தியில் அமைதியும் சமாதானமும் இருக்கவேண்டும். அப்போதுதான் சபையின் ஊழியம் வளர்ச்சி பெறும். இஸ்ரவேல் தேசத்தை ராஜ்யபாரம்பண்ணுவதற்கு ராஜா அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கிறார். ராஜாவுக்கு கீழே உதவி செய்ய பிரபுக்களும் மூப்பர்களும் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை சேர்ந்தவர்கள்.

தாவீது இஸ்ரவேலின் விசாரிப்புக்காரராகவும், மணியக்காரராகவும் லேவியரை நியமிக்கிறார். பிரபுக்களும் மூப்பர்களும் இருந்தாலும், இஸ்ரவேல் புத்திரரை விசாரிப்பதற்கு லேவியரும் நியமிக்கப்படுகிறார்கள். ஜனங்களை ஆளுகை செய்கிறவர்கள் கர்த்தருடைய பிரமாணத்தின்படி ஆளுகை செய்யவேண்டும்.

பிரபுக்களுக்கும் மூப்பர்களுக்கும் கர்த்தருடைய பிரமாணத்தைப்பற்றி அதிகமாய்த் தெரியாது. லேவியர்கள் அவர்களைவிட கர்த்தருடைய பிரமாணங்களை நன்றாய்க் கற்று அறிந்திருக்கிறார்கள். ஆகையினால் தாவீது லேவியரில் சிலரை இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரராகவும், மணியக்காரராகவும் நியமிக்கிறார். இவர்கள் தேசகாரியங்களைப் பார்க்கும்படி வைக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரராகவும் மணியக்காரராகவும் வைக்கப்படுகிற லேவியருக்கு, கர்த்தருடைய ஆலயத்திலே பணிவிடை கொடுக்கப்படவில்லை. இவர்கள் தேவனுடைய ஆலயத்திலே வாசல்காக்கிறவர்களோ அல்லது கர்த்தரைத் துதித்துப்பாடும் கீதவாத்தியக்காரரோ அல்ல. இவர்களுக்கு தேவாலயத்திலே பணிவிடை இல்லாததினால், தேசகாரியங்களை பார்க்கும்படிக்கு இவர்கள் இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரராகவும் மணியக்காரராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

மணியக்காரர் இஸ்ரவேலின்மேல் கர்த்தருடைய எல்லா ஊழியத்திற்கும், ராஜாவின் ஊழியத்திற்கும் வைக்கப்பட்டிருக்கிறார்கள் (1நாளா 26:30). தாவீது ராஜா மணியக்காரரை தேவனுக்கடுத்த சகல காரியத்திற்காகவும், ராஜாவின் காரியத்திற்காகவும் வைத்திருக்கிறார் (1நாளா 26:32).

இஸ்ரவேலின்மேல் விசாரிப்புக்காரராயும், மணியக்காரராயும் இருக்கிறவர்கள் தேசக்காரியங்களைப் பார்த்துக் கொள்கிறார்கள். அத்தோடு ஜனங்கள் மத்தியிலே, தேவாலயத்தோடு தொடர்புடைய காரியங்களையும் விசாரிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு தசமபாகங்களை செலுத்தவேண்டும். ராஜாவுக்கு வரிகளை கொடுக்கவேண்டும். இவற்றை வசூலிப்பது மணியக்காரரின் வேலை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது மணியக்காரர் அவர்களுடைய தப்பிதங்களை விசாரித்து அவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள். அதுபோலவே ராஜாசனத்திற்கு விரோதமாக தவறு செய்கிறவர்களையும், இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே சமாதானத்தை குலைத்துப்போடுகிறவர்களையும் மணியக்காரர்கள் விசாரித்து அவர்களுக்கு தண்டனை கொடுப்பார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில் விக்கிரகாராதனைக்கு இடமில்லை. இஸ்ரவேல் புத்திரரில் யாராவது விக்கிரகாராதனைக்காரராயிருந்தால், மணியக்காரர் அவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுடைய குற்றங்களை விசாரித்து, அவர்களைத் தண்டிப்பார்கள். நியாயவிசாரணை எல்லாமே கர்த்தருடைய பிரமாணத்திற்குட்பட்டு நடைபெறும்.

யோர்தானுக்கு மேற்குப் பகுதியில் 1,700 பேரும், கிழக்குப் பகுதியில் 2,700 பேரும் விசாரிப்புக்காரரும் மணியக்காரருமாயிருக்கிறார்கள். (1நாளா 26:29-32).

இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்களிலே நியமிக்கப்பட்டிருக்கிற மணியக்காரரைவிட, யோர்தானுக்கு அப்புறத்திலே உள்ள கீலேயாத் தேசத்திலே அதிகமான மணியக்காரர் நியமிக்கப்படுகிறார்கள். இங்கே இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார் குடியிருக்கிறார்கள்.

யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிற இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தாரும், எருசலேமைவிட்டு தூரத்திலே இருக்கிறார்கள். மேலும் இவர்களுடைய தேசத்தைச் சுற்றிலும் அந்நிய தேசத்தார் குடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் விக்கிரகாராதனைக்காரர்கள். புறஜாதியாரின் விக்கிரகாராதனை, இஸ்ரவேலின் இரண்டரைக் கோத்திரத்தார் மத்தியிலே பிரவேசித்து விடாமல், அதைத் தடுப்பதற்கும், அவர்களைக் கண்காணிப்பதற்கும் அதிகமான எண்ணிக்கையில் விசாரிப்புக்காரரும் மணியக்காரரும் நியமிக்கப்படுகிறார்கள்.

27 அதிகாரம்

தாவீது தேவாலயத்தின் பணிவிடைகளை செய்வதற்கு லேவியரை நியமிக்கிறார். அதன் பின்பு இராணுவத்திலே பணிபுரிவதற்கு சேர்வைக்காரரை நியமிக்கிறார். இவர்கள் ஒவ்வொரு மாதமும் ராஜாவை சேவிக்கிறதற்கு வரிசைப்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் (நாளா 27:1-15).

கோத்திரங்களுக்கு தலைவராகயிருக்கிறவர்களின் பெயர்கள் இந்தவசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது (நாளா 27:16-24). ராஜாவுடைய பொக்கிஷங்களின்மேல் விசாரிப்புக்காரராயிருக்கிறவர்கள் (நாளா 27:25-34).

சேர்வைக்காரர் 1நாளா 27:1-15

1நாளா 27:1. தங்கள் இலக்கத்தின்படி இருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு வம்சங்களின் தலைவரும், ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரும், நூற்றிற்குச் சேர்வைக்காரரும் இவர்களுடைய தலைவரும் வைக்கப்பட்டிருந்தார்கள்; இவர்கள் வருஷத்திலுண்டான மாதங்களிலெல்லாம் மாதத்திற்கு மாதம் ராஜாவைச் சேவிக்கிறதற்கு வகுக்கப்பட்ட வரிசைகளின்படியெல்லாம் மாறிமாறி வருவார்கள்; ஒவ்வொரு வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:2. முதலாவது மாதத்துக்கு முதல் வகுப்பின்மேல் சப்தியேலின் குமாரன் யாஷொபெயாம் இருந்தான்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:3. அவன் பேரேசின் சந்ததியாரில் சகல சேனாபதிகளின் தலைவனாயிருந்து முதல் மாதம் விசாரித்தான்.

1நாளா 27:4. இரண்டாவது மாதத்தின் வகுப்பின்மேல் அகோகியனான தோதாயி இருந்தான்; அவன் வகுப்பிலே மிக்லோத் தளகர்த்தனாயிருந்தான்; அவன் வகுப்பிலே இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:5. மூன்றாவது மாதத்தின் மூன்றாம் சேனாபதி யோய்தாவின் குமாரனாகிய பெனாயா என்னும் தலைமையான பிரதானி; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:6. இந்தப் பெனாயா அந்த முப்பது பராக்கிரமசாலிகளில் ஒருவனும் அந்த முப்பது பேர்களின் தலைவனுமாயிருந்தான்; அவனுடைய வகுப்பை அவன் குமாரனாகிய அமிசபாத் விசாரித்தான்.

1நாளா 27:7. நாலாவது மாதத்தின் நாலாம் சேனாபதி யோவாபின் சகோதரனாகிய ஆசகேலும், அவனுக்குப்பின்பு அவன் குமாரன் செப்தியாவுமே; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:8. ஐந்தாவது மாதத்தின் ஐந்தாம் சேனாபதி இஸ்ராகியனான சம்கூத் என்பவன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம் பேர் இருந்தார்கள்.

1நாளா 27:9. ஆறாவது மாதத்தின் ஆறாம் சேனாபதி இக்கேசின் குமாரன் ஈரா என்னும் தெக்கோவியன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:10. ஏழாவது மாதத்தின் ஏழாம் சேனாபதி எப்பிராயீம் புத்திரரில் ஒருவனாகிய ஏலேஸ் என்னும் பெலோனியன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:11. எட்டாவது மாதத்தின் எட்டாம் சேனாபதி சாரியரில் ஒருவனாகிய சிபெக்காயி என்னும் ஊஷாத்தியன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:12. ஒன்பதாவது மாதத்தின் ஒன்பதாம் சேனாபதி பென்யமீனரில் அபியேசர் என்னும் ஆனதோத்தான்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:13. பத்தாவது மாதத்தின் பத்தாம் சேனாபதி சாரியரில் ஒருவனாகிய மக்ராயி என்னும் நெத்தோபாத்தியன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:14. பதினோராவது மாதத்தின் பதினோராம் சேனாபதி எப்பிராயீம் புத்திரரில் பெனாயா என்னும் பிரத்தோனியன்; அவன் வகுப்பில் இருபத்துநாலாயிரம்பேர் இருந்தார்கள்.

1நாளா 27:15. பன்னிரண்டாவது மாதத்தின் பன்னிரண்டாம் சேனாபதி ஒத்னியேல் சந்ததியான எல்தாயி என்னும் நெத்தோபாத்தியன்; அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம்பேர் இருந்தார்கள்.

தாவீது இஸ்ரவேல் தேசத்தின் இராணுவ சேர்வைக்காரரை திட்டம் பண்ணுகிறார். தாவீது ஒரு யுத்த மனுஷர். அவர் ஒரு பராக்கிரமசாலி. இஸ்ரவேல் தேசத்திலே சேர்வைக்காரர் எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும் என்பது தாவீதின் திட்டம். தேவைப்படும்போது சேர்வைக்காரரை அழைத்துக்கொள்ள முடியாது. இராணுவவீரர்கள் பயிற்சி பெற்றவர்களாகவும், தொடர்ந்து பயிற்சி பெறுகிறவர்களாகவும் இருக்கவேண்டும்.

தேசத்தின் சேனையிலிருக்கிறவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண எப்போதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் உள்நாட்டு பாதுகாப்பை உறுதிபண்ணும் வண்ணமாக, எப்போதும் ஆயத்த நிலமையிலிருக்க வேண்டும். தாவீது 24,000 சேர்வைக்காரர்களை எப்போதும் ஆயத்த நிலையில் வைத்திருக்கிறார்.

சேர்வைக்காரர்கள் தங்கள் இலக்கத்தின்படி இருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு வம்சங்களின் தலைவரும், ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரும், நூற்றிற்குச் சேர்வைக்காரரும் இவர்களுடைய தலைவரும் வைக்கப்பட்டிருக்கிறார்கள் (1நாளா 27:1).

தாவீது தன்னுடைய சேர்வைக்காரரை பன்னிரண்டு வகுப்புகளாகப் பிரிக்கிறார். ஒவ்வொரு வகுப்பிலுள்ள சேர்வைக்காரரும், ஒவ்வொரு மாதம் ராஜாவை சேவிப்பார்கள். ராஜாவை சேவிப்பதற்கு 24,000 சேர்வைக்காரர் என்பது போதுமானது.

இஸ்ரவேல் தேசத்திலுள்ள சேர்வைக்காரர்களின் மொத்த எண்ணிக்கை 2,88,000 பேர். இஸ்ரவேல் தேசத்திலே ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ணக்கூடியவர்களில், ஐந்தில் ஒரு பகுதியினர் சேர்வைக்காரராயிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் சேர்வைக்காரராகிய, 2,88,000 பேரும் பன்னிரண்டு வகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு வகுப்பு என்னும் வீதத்தில் இவர்கள் பன்னிரண்டு பிரிவாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் வம்சங்களின் தலைவரும், ஆயிரத்திற்கு சேர்வைக்காரரும், நூற்றுக்கு சேர்வைக்காரரும் தலைவர்களாயிருக்கிறார்கள்.

தாவீதின் பராக்கிரமசாலிகளைப்பற்றிய அட்டவணையில், இவர்களுடைய பெயர்கள் சொல்லப்பட்டிருக்கிறது (2சாமு 23; 1நாளா 11 ஆகிய அதிகாரங்கள்).

மூன்றாவது மாதத்தின் மூன்றாவது சேனாபதியாகிய பெனாயா என்பவன் தலைமையான பிரதானி என்று சொல்லப்பட்டிருக்கிறது (1நாளா 27:5). தலைமையான பிரதானி என்னும் வார்த்தையானது, மூலஎபிரெய பாஷையிலே, தலைமையான ஆசாரியர் என்று பொருள்படுமாறு சொல்லப்பட்டிருக்கிறது. பெனாயா தலைமையான பிரதானியாகவும், தலைமையான ஆசாரியராகவும் இருக்கிறார்.

தேசத்தில் யுத்தமில்லாதிருக்கும்போது, தலைமையான பிரதானியாக இருக்கிற பெனாயா, தலைமையான ஆசாரியராக தேவாலயத்திலே பணிவிடை செய்வார். தாவீதின் குமாரனாகிய சாலொமோனுடைய காலத்தில், இஸ்ரவேல் தேசத்தில் யுத்தம் நடைபெறாமல் அமைதியாயிருக்கிறது. இக்காலத்தில் பெனாயா தலைமையான ஆசாரியராக ஊழியம் செய்கிறார்.

தாவீது ராஜாவைச் சேவிப்பதற்காக இஸ்ரவேல் புத்திரர் 12 வகுப்புக்களாக வகுக்கப் பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் 24,000 பேர் இருக்கிறார்கள். ஆக மொத்தம் 2,88,000 பேர் ராஜாவைச் சேவிக்கிறதற்காக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட மாதத்தில் தங்களுக்கு வகுக்கப்பட்ட வரிசையின்படி ராஜாவைச் சேவிக்க மாறிமாறி வருவார்கள்.

சேர்வைக்காரர்கள் பன்னிரண்டு மாதவகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள். அதன் விவரம் வருமாறு:

1. முதலாம் மாதம் - யாஷொபெயாம் (நாளா 27:2- 3)
2. இரண்டாம் மாதம் - தோதாயி (நாளா 27:4)
3. மூன்றாம் மாதம் - பெனாயா (நாளா 27:5-6)
4. நான்காம் மாதம் - ஆசகேல் (நாளா 27:7)
5. ஐந்தாம் மாதம் - சம்கூத் (நாளா 27:8)
6. ஆறாம் மாதம் - ஈரா (நாளா 27:9)
7. ஏழாம் மாதம் - ஏலேஸ் (நாளா 27:10)
8. எட்டாம் மாதம் - சிபெக்காயி (நாளா 27:11)
9. ஒன்பதாம் மாதம் - அபியேசர் (நாளா 27:12)
10. பத்தாம் மாதம் - மக்ராயி (நாளா 27:13)
11. பதினொறாம் மாதம் - பெனாயா (நாளா 27:14)
12. பன்னிரண்டாம் மாதம் - எல்தாயி (நாளா 27:15)

கோத்திரங்களுக்குத் தலைவர்கள் 1நாளா 27:16-22

1நாளா 27:16. இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவர்கள்: ரூபனியருக்குத் தலைவன் சிக்கிரியின் குமாரன் எலியேசர்; சிமியோனியருக்கு மாக்காவின் குமாரன் செப்பத்தியா.

1நாளா 27:17. லேவியருக்கு கேமுவேலின் குமாரன் அஷாபியா; ஆரோன் சந்ததிக்குச் சாதோக்.

1நாளா 27:18. யூதாவுக்குத் தாவீதின் சகோதரரில் ஒருவனாகிய எலிகூ; இசக்காருக்கு மிகாவேலின் குமாரன் ஓம்ரி.

1நாளா 27:19. செபுலோனுக்கு ஒப்தியாவின் குமாரன் இஸ்மாயா; நப்தலிக்கு அஸ்ரியேலின் குமாரன் எரிமோத்.

1நாளா 27:20. எப்பிராயீம் புத்திரருக்கு அசசியாவின் குமாரன் ஓசெயா; மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்குப் பெதாயாவின் குமாரன் யோவேல்.

1நாளா 27:21. கீலேயாத்திலுள்ள மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்குச் சகரியாவின் குமாரன் இத்தோ; பென்யமீனுக்கு அப்னேரின் குமாரன் யாசியேல்.

1நாளா 27:22. தாணுக்கு எரோகாமின் குமாரன் அசாரியேல்; இவர்கள் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவராயிருந்தார்கள்.

இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கு தலைவர்களைப்பற்றிய விவரம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு :

1. ரூபனியர் - எலியேசர் (1நாளா 27:16)
2. சிமியோனியர் - செப்பத்தியா
3. லேவியர் - அஷாபியா (1நாளா 27:17)
4. ஆரோனியர் - சாதோக்
5. யூதா - எலிகூ (1நாளா 27:18)
6. இசக்கார் - ஒம்ரி
7. செபுலோன் - இஸ்மாயா (1நாளா 27:19)
8. நப்தலி - எரிமோத்
9. எப்பிராயீம் - ஓசெயா (1நாளா 27:20)
10. மனாசே (பாதிக் கோத்திரத்தார்) - யோவேல் (1நாளா 27:20)
11. மனாசே (பாதிக் கோத்திரத்தார்) - இத்தோ (1நாளா 27:21)
12. பென்யமீன் - யாசியேல்
13. தாண் - அசாரியேல் (1நாளா 27:22)

இந்த அட்டவணையில் லேவியரும், ஆரோனியரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் காத் கோத்திரத்தாரும், ஆசேர் கோத்திரத்தாரும் இதில் சேர்க்கப்படவில்லை. இதற்கான காரணம் கொடுக்கப்படவில்லை.

மோசேயின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணினார்கள். அப்போது இஸ்ரவேலின் கோத்திரத்தார் எவ்வாறு பிரிக்கப்பட்டார்களோ அதுபோலவே இப்போது தாவீதின் காலத்திலும் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தலைவர்கள் இருக்கிறார்கள். இந்தத் தலைவர்கள் யுத்தக்காலத்திலே இராணுவ சேர்வைக்காரராகவும் பணிபுரிவார்கள். யுத்தமில்லாமல் சமாதானமாயிருக்கும் காலத்திலே, கோத்திரத்தலைவர்கள் நியாயாதிபதிகளாக பணிபுரிந்து, வழக்குகளை நியாயம் விசாரிப்பார்கள்.

சமஸ்த இஸ்ரவேல் தேசத்திற்கும் தாவீது இப்போது ராஜாவாயிருக்கிறார். மோசேயின் காலத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜா இல்லை. அக்காலத்தில் கோத்திரத்தலைவர்களுக்கு பொறுப்பும் அதிகாரமும் அதிகமாயிருந்தது. இப்போது, இஸ்ரவேலுக்கு ராஜாயிருப்பதினால், கோத்திரத்தலைவர்களின் பொறுப்பும் அதிகாரமும் குறைந்துபோயிற்று.

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தாலும், இஸ்ரவேலின் கோத்திரத்தார் எல்லோரும், பல விஷயங்களில், மற்ற கோத்திரத்தாரோடு ஒத்துப்போகாமல், தனித்தனியாக செயல்படுகிறார்கள். இதனால் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தலைவர்கள் இருப்பது அவசியமாயிற்று.

இஸ்ரவேலின் இலக்கம் 1நாளா 27:23,24

1நாளா 27:23. இஸ்ரவேலை வானத்தின் நட்சத்திரங்கள் அத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருந்தபடியால், தாவீது இருபது வயதுமுதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தைத் தொகையேற்றவில்லை.

1நாளா 27:24. செருயாவின் குமாரன் யோவாப் எண்ணத்துவக்கியும் முடிக்காதே போனான்; அதற்காக இஸ்ரவேலின்மேல் கடுங்கோபம் வந்தது; ஆதலால் அந்தத் தொகை தாவீதுராஜாவின் நாளாகமக் கணக்கிலே ஏறவில்லை.

தாவீது இருபது வயதுமுதல் அதற்குக் கீழ்ப்பட்டவர்களின் இலக்கத்தைத் தொகையேற்றவில்லை. சேனையில் பணிபுரிவதற்குக் குறைந்தபட்சம் 20 வயதாக இருக்க வேண்டும். அதற்குக் கீழ்ப்பட்டவர்கள் எண்ணித் தொகையேற்றப்படவில்லை. (1நாளா 23:27). இஸ்ரவேல் புத்திரரை எண்ணித் தொகையேற்றுமாறு சாத்தான் தாவீதின் மனதில் ஏவினான். (1நாளா 21) இதனால் உண்டான வாதையில் ஏராளமானபேர் மாண்டுபோனார்கள்.

கடற்கரை மணலைப்போல, வானத்து நட்சத்திரங்களைப்போல எண்ண முடியாதவர்களாக இருப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தைத் தாவீது எண்ண முயற்சி பண்ணியது கர்த்தருக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் நிறைவேற்ற வல்லவரா என்று தாவீது சந்தேகப்பட்டிருக்க வேண்டும். அல்லது வருங்கால வெற்றிகளில் கர்த்தருடைய உதவி தனக்கு தொடர்ந்து வருமா என்று தாவீதின் உள்ளத்தில் அவிசுவாசம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால் தாவீதுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் வாதை உண்டாயிற்று.

தாவீதுராஜாவின் விசாரிப்புக்காரர்கள் 1நாளா 27:25-31

1நாளா 27:25. ராஜாவுடைய பொக்கிஷங்களின் மேல் ஆதியேலின் குமாரன் அஸ்மாவேத்தும், பட்டணங்களிலும், கிராமங்களிலும் துருக்கங்களிலுமுள்ள நிலத்தின் வருமான பண்டகசாலைகளின்மேல் உசியாவின் குமாரன் யோனத்தானும்,

1நாளா 27:26. நிலத்தைப் பயிரிட வயல்வெளியின் வேலைசெய்கிறவர்களின்மேல் கேலூப்பின் குமாரன் எஸ்ரியும்,

1நாளா 27:27. திராட்சத்தோட்டங்களின் மேல் ராமாத்தியனான சீமேயும், திராட்சத் தோட்டங்களின் வரத்தாகிய திராட்சரசம் வைக்கும் இடங்களின்மேல் சிப்மியனாகிய சப்தியும்,

1நாளா 27:28. பள்ளத்தாக்குகளிலுள்ள ஒலிவமரங்களின் மேலும் காட்டத்தி விருட்சங்களின்மேலும் கெதேரியனான பால்கானானும், எண்ணெய் கிடங்குகளின்மேல் யோவாசும்,

1நாளா 27:29. சாரோனில் மேய்கிற மாடுகளின் மேல் சாரோனியனான சித்ராயும், பள்ளத்தாக்குகளிலுள்ள மாடுகளின்மேல் அத்லாயின் குமாரன் சாப்பாத்தும்,

1நாளா 27:30. ஒட்டகங்களின்மேல் இஸ்மவேலியனாகிய ஓபிலும், கழுதைகளின்மேல் மெரோனோத்தியனாகிய எகெதியாவும்,

1நாளா 27:31. ஆடுகளின்மேல் ஆகாரியனான யாசீசும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்; இவர்களெல்லாரும் தாவீதுராஜாவின் பொருள்களுக்கு விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

தாவீது ராஜாவுக்கு ஏராளமான பொக்கிஷங்களும், சம்பத்துக்களும், பொருள்களும் இருக்கிறது. தாவீது தன்னுடைய பொருள்களுக்கு விசாரிப்புக்காரர்களை நியமிக்கிறார். இவர்கள் தாவீதின் பொக்கிஷங்களையும், விளைச்சல் நிலங்களையும், எண்ணெய் கிடங்குகளையும், கால்நடைகளையும் பராமரித்து விசாரிக்கிறார்கள்.

இந்த வசனப்பகுதியில் தாவீது ராஜாவின் பொருள்களுக்கு விசாரிப்புக்காரராய் நியமிக்கப்பட்டவர்களைப்பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது அவர்களின் விவரம் வருமாறு :

1. அஸ்மாவேத் - ராஜாவுடைய பொக்கிஷங்களின் மேல்.
2. எஸ்ரி - நிலத்தைப் பயிரிட வயல்வெளியின் வேலைசெய்கிறவர்களின் மேல் (1நாளா 27:26)
3. சீமேயி - திராட்சத்தோட்டங்களின் மேல் (1நாளா 27:27)
4. சப்தி - திராட்சத் தோட்டங்களின் வரத்தாகிய திராட்சரசம் வைக்கும் இடங்களின்மேல்.
5. பால்கானான் - பள்ளத்தாக்குகளிலுள்ள ஒலிவமரங்களின்மேல். (1நாளா 27:28)
6. யோவாஸ் - எண்ணெய் கிடங்குகளின் மேல்.
7. சித்ராய் - சாரோனில் மேய்கிற மாடுகளின் மேல் (1நாளா 27:29)

8. சாப்பாத் - பள்ளத்தாக்குகளிலுள்ள மாடுகளின்மேல்.

9. ஒபில் - ஒட்டகங்களின்மேல். (1நாளா 27:30)

10. எகெதியா - கழுதைகளின்மேல்

11. யாசிஸ் - ஆடுகளின்மேல் (1நாளா 27:31)

தாவீதுக்கு ஆலோசனைக்காரர்கள் 1நாளா 27:32-34

1நாளா 27:32. தாவீதின் சிறிய தகப்பனாகிய யோனத்தான் என்னும் புத்தியும் படிப்புமுள்ள மனுஷன் ஆலோசனைக்காரனாயிருந்தான். அக்மோனியின் குமாரன் யெகியேல் ராஜாவின் குமாரரோடிருந்தான்.

1நாளா 27:33. அகித்தோப்பேல் ராஜாவுக்கு ஆலோசனைக்காரனாயிருந்தான்; அர்கியனான ஊஷாயி ராஜாவின் தோழனாயிருந்தான்.

1நாளா 27:34. பெனாயாவின் குமாரன் யோய்தாவும் அபியத்தாரும் அகித்தோப்பேலுக்கு உதவியாயிருந்தார்கள்; யோவாப் ராஜாவின் படைத்தலைவனாயிருந்தான்.

தாவீது தனக்கு ஆலோசனைக்காரரையும், அதிகாரிகளையும் நியமிக்கிறார். இவர்கள் புத்தியும் படிப்புமுள்ளவர்கள். தாவீதின் சிறிய தகப்பனாகிய யோனத்தான் என்னும் புத்தியும் படிப்புமுள்ள மனுஷன் ஆலோசனைக்காரனாயிருக்கிறான் (1நாளா 27:32). அர்கியனான ஊஷாயி ராஜாவின் தோழனாயிருக்கிறான் (1நாளா 27:33).

தாவீது ராஜாவுக்கு ஆலோசனைக்காரராயும், அதிகாரிகளாயும் இருந்தவர்களின் விவரம் வருமாறு :

1. யோனத்தான் - ஆலோசனைக்காரன்

2. யெகியேல் - ராஜாவின் குமாரரோடிருந்தவன்.

3. அகித்தோப்பேல் - ராஜாவுக்கு ஆலோசனைக்காரன். (1நாளா 27:33)

4. ஊஷாயி - ராஜாவின் தோழன்.

5. யோய்தா - அகித்தோப்பேலுக்கு உதவியாயிருந்தவன்.

6. அபியத்தார் - அகித்தோப்பேலுக்கு உதவியாயிருந்தவன்

7. யோவாப் - ராஜாவின் படைத்தலைவன்.

28 அதிகாரம்

தாவீதின் கடைசி வர்த்தமானங்களைப்பற்றி இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது சாலொமோனையும், இஸ்ரவேல் புத்திரரையும் தன்னிடத்தில் கூடிவரச் செய்கிறார் (1நாளா 28:1).

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிற முதலாவது உபதேசம். தாவீது தன்னுடைய ராஜ்யபாரத்தைப்பற்றியும், சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவது பற்றியும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரிவாகச் சொல்லுகிறார் (1நாளா 28:2-7).

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கும், சாலொமோனுக்கும் புத்தி சொல்லுகிறார். அவர்கள் எல்லோரும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும் என்று அவர்களுக்கு ஆவிக்குரிய புத்திமதிகளைச் சொல்லுகிறார் (1நாளா 28:8-10).

தாவீது சாலொமோனுக்கு கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரி வடிவத்தையும், ஆலயம் கட்டுவதற்கு தான் சவதரித்திருக்கிற பொருட்களையும் கொடுக்கிறார் (1நாளா 28:11-19). சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று தாவீது அவரை உற்சாகப்படுத்துகிறார் (1நாளா 28:20,21).

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு சொன்ன புத்திமதிகள் 1நாளா 28:1-8

1நாளா 28:1. கோத்திரங்களின் தலைவரும், ராஜாவைச் சேவிக்கிற வகுப்புகளின் தலைவரும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறு பேருக்கு அதிபதிகளும், ராஜாவுக்கும் ராஜகுமாரருக்கும் உண்டான எல்லா ஆஸ்தியையும் மிருகஜீவன்களையும் விசாரிக்கிற தலைவருமாகிய இஸ்ரவேலின் சகல பிரபுக்களையும், பிரதானிகளையும், பலசாலிகளையும், சகல பராக்கிரமசாலிகளையும் தாவீது எருசலேமிலே கூடிவரச்செய்தான்.

1நாளா 28:2. அப்பொழுது ராஜாவாகிய தாவீது எழுந்திருந்து காலூன்றி நின்று: என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்வதைக் கேளுங்கள்; கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன்.

1நாளா 28:3. ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்.

1நாளா 28:4. இப்போதும் இஸ்ரவேல் அனைத்தின் மேலும் என்றைக்கும் ராஜாவாயிருக்க, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என் தகப்பனுடைய வீட்டாரிலெல்லாம் என்னைத் தெரிந்துகொண்டார்; அவர் யூதாவையும் யூதாவின் வம்சத்தில் என் தகப்பன் குடும்பத்தையும் தலைமையாகத் தெரிந்துகொண்டு, என்னை எல்லா இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக்க, என் தகப்பனுடைய குமாரருக்குள் என்மேல் பிரியம் வைத்தார்.

1நாளா 28:5. கர்த்தர் எனக்கு அநேகம் குமாரரைத் தந்தருளினார்; ஆனாலும் இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும் என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்துகொண்டு,

1நாளா 28:6. அவர் என்னை நோக்கி: உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்; அவனை எனக்குக் குமாரனாகத் தெரிந்துகொண்டேன்; நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்.

1நாளா 28:7. இந்நாளில் நடக்கிறபடியே அவன் என் கற்பனைகளின்படியும் என் நியாயங்களின்படியும் செய்ய உறுதியாயிருப்பானானால், அவன் ராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவேன் என்றார்.

1நாளா 28:8. இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அநுபவித்து, உங்களுக்குப்பிறகு அதை உங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின்வைக்கும்பொருட்டாக, நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரியுங்கள் என்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்குமுன்பாகவும், நமது தேவனுடைய செவிகேட்கவும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

தாவீது தன்னுடைய காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தார் (அப் 13:36). தாவீது இப்போது வயது முதிர்ந்து, விர்த்தாப்பியராயிருக்கிறார். தாவீது மரிக்கும் காலம் வந்திருக்கிறது. தாவீது, தான் மரிப்பதற்கு முன்பாக, இஸ்ரவேல் புத்திரருக்கும், தன் குமாரனாகிய சாலொமோனுக்கும் அநேக புத்திமதிகளைச் சொல்லுகிறார்.

தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து, இந்தப் பூமியிலே ஜீவித்த காலம் முடிவு பெறும்போது, மிகவும் தீவிரமாக ஊழியம் செய்தார். பல இடங்களுக்கும் நன்மை செய்கிறவராக சுற்றி அலைந்தார். எல்லோருமே தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலம் முடிவு பெறும்போது, சுறுசுறுப்பாக தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவார்கள்.

தாவீது இப்போது எருசலேமிலே இருக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் எருசலேமிலே கூடிவரச் செய்கிறார். தாவீது கூட்டிச்சேர்த்தவர்களின் விவரம் வருமாறு :

1. இஸ்ரவேலின் பிரபுக்கள்
2. கோத்திரங்களின் தலைவர்கள்.
3. ராஜாவைச் சேவிக்கிற வகுப்புகளின் தலைவர்கள்.
4. ஆயிரம்பேருக்கு அதிபதிகள்
5. நூறு பேருக்கு அதிபதிகள்.
6. ராஜாவுக்கும் ராஜகுமாரருக்கும் உண்டான எல்லா ஆஸ்தியையும் மிருக ஜீவன்களையும் விசாரிக்கிற தலைவர்கள்.
7. பிரதானிகள்
8. பலசாலிகள்
9. பராக்கிரமசாலிகள்

தாவீது இஸ்ரவேலில் முக்கியமானவர்கள் அனைவரையும் கூடிவரச்செய்து, தேவாலயத்தைக் கட்டும் பணியில் தன்னுடைய குமாரன் சாலொமோனுக்கு உதவி புரியுமாறு அனைவருக்கும் கட்டளையிடுகிறார். (1நாளா 28:2-8). தாவீது மரிக்கும் தருவாயில் இருந்தபோது, வேறு எந்த காரியத்தையும்விட கர்த்தருடைய ஆலயத்தைக் குறித்தே அதிகக் கரிசனையோடு இருக்கிறார்.

தாவீது இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்லும்போது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கூட்டிச் சேர்த்து, அவர்களுக்கு முன்பாக கடந்து செல்ல வேண்டுமென்று பிரியப்படுகிறார். மோசேயும், யோசுவாவும், இந்த உலகத்தைவிட்டு கடந்துபோனபோது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கூட்டிச் சேர்த்தார்கள்.

"உங்கள் கோத்திரங்களிலுள்ள மூப்பர் உங்கள் அதிபதிகள் எல்லாருடைய காதுகளும் கேட்கத்தக்கதாக நான் இந்த வார்த்தைகளைச் சொல்லவும், அவர்களுக்கு விரோதமாக வானத்தையும் பூமியையும் சாட்சிவைக்கவும் அவர்களை என்னிடத்தில் கூடிவரச்செய்யுங்கள்" (உபா 31:28).

"யோசுவா இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும், மற்ற எல்லாரையும் அழைப்பித்து, அவர்களை நோக்கி: நான் வயதுசென்று முதிர்ந்தவனானேன்" (யோசு 23:2).

"பின்பு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாம் சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையும், தலைவரையும், நியாயாதிபதிகளையும், அதிபதிகளையும் வரவழைத்தான்; அவர்கள் தேவனுடைய சந்நிதியில் வந்து நின்றார்கள்" (யோசு 24:1).

தாவீது இஸ்ரவேல் புத்திரரிடம் பேசும்போது அவர்களுக்கு மிகுந்த மரியாதையைக் கொடுக்கிறார். அவர்களோடு மிகவும் அன்பாகவும், பாசமாகவும் பேசுகிறார். தாவீது வயது முதிர்ந்த காலத்திலிருக்கிறார். படுக்கையில் படுத்திருக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தாவீதுக்கு முன்பாக கூடிவந்திருக்கும்போது, தாவீது தன் படுக்கையிலிருந்து எழுந்திருந்து காலூன்றி நின்று, அவர்களோடு பேசுகிறார்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் ஓரிடத்தில் கூடிவரும்போது, அங்கே இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரும் வருகிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவருடைய ஜனத்தின் மத்தியிலே இருக்கிறது. தாவீது கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக, பயபக்தியோடு எழுந்திருந்து காலூன்றி நிற்கிறார்.

தாவீதுக்கு முன்பாக கோத்திரங்களின் தலைவர்களும் அதிபதிகளும், பிரதானிகளும், பிரபுக்களும், பலசாலிகளும், பராக்கிரமசாலிகளும் கூடிவந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தாவீது ராஜாவின் சேவகர்கள் (1நாளா 21:3). தாவீதுக்கு இவர்கள் சேவகராயிருப்பது, அவருக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம். தாவீது தன்னுடைய சேவகரைப் பார்த்து எப்போதுமே சந்தோஷமாயிருப்பார்.

இப்போதோ தாவீது, தனக்கு முன்பாக கூடிவந்திருக்கிற தன்னுடைய சேவகரை பார்த்து, "என் சகோதரரே, என் ஜனமே" என்று சொல்லுகிறார். தாவீது அவர்களை இப்போது தன்னுடைய சேவகராகப் பார்க்கவில்லை. அவர்களை தன்னுடைய சகோதரராகவும், தன்னுடைய சொந்த ஜனமாகவும் பார்க்கிறார்.

தாவீது தன்னுடைய சகோதரரையும், தன்னுடைய ஜனத்தையும் நேசிக்கிறார். அவர்கள் தாவீதின் சேவகராயிருந்தாலும், தாவீது இதுவரையிலும் அவர்களை பராமரித்து வந்திருக்கிறார். அவர்களுக்கு கட்டளையிடும் உரிமை தாவீதுக்கு இன்னும் இருக்கிறது. ஆகையினால் தாவீது அவர்களைப் பார்த்து, "என் சகோதரரே, என் ஜனமே, நான் சொல்லுவதைக் கேளுங்கள்" (1நாளா 28:2) என்று கட்டளையாகச் சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருக்கு ஆலயம் கட்ட விரும்பினார். ஆனால் கர்த்தரோ அதைத் தடைபண்ணிவிடுகிறார். தாவீது இஸ்ரவேல் புத்திரரிடம் முதலாவதாகச் சொல்லும்போது, கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியே சொல்லுகிறார்.

தாவீது இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, "கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் நமது தேவனுடைய பாதபடியும் தங்குவதற்கு ஒரு ஆலயத்தைக் கட்ட நான் என் மனதிலே நினைத்து, கட்டுகிறதற்கு ஆயத்தமும் பண்ணினேன். ஆனாலும் தேவன்: நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; நீ யுத்த மனுஷனாயிருந்து, ரத்தத்தைச் சிந்தினாய் என்றார்" (1நாளா 28:2,3) என்று சொல்லுகிறார்.

தாவீது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, தன்னுடைய பட்டயத்தின் மூலமாக ஊழியம் செய்தார். தாவீதின் கையில் பட்டயம் இருந்தது. ஆனாலும், அவருடைய குமாரனாகிய சாலொமோனுடைய கையிலோ தூக்கு நூலும், மட்டப் பலகையும் இருக்கிறது. ஒருவர் பட்டயத்தினால் ஊழியம் செய்யும்போது, மற்றொருவர் தூக்குநூலால் ஊழியம் செய்கிறார்.

சாலொமோனுடைய காலத்திலே இஸ்ரவேல் தேசம் யுத்தமில்லாமல் அமைதலாயிருக்கிறது. சமாதான காலம் கட்டியெழுப்புகிற காலம்.

"அப்பொழுது யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப் 9:31).

தாவீது கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவாயிருக்கிறார். தாவீது இஸ்ரவேல் புத்திரரிடம் பேசும்போது, முதலாவதாக தன்னுடைய ராஜ்யபாரத்தைப்பற்றியும், அதன் பின்பு சாலொமோனுடைய ராஜ்யபாரத்தைப்பற்றியும் பேசுகிறார்.

யூதா யாக்கோபுக்கு மூத்தகுமாரனல்ல. ஆனாலும் கர்த்தர் யூதாகோத்திரத்தை, ஆளுகை செய்கிற கோத்திரமாகத் தெரிந்துகொண்டார். யாக்கோபு இஸ்ரவேலை ஆளுகை செய்கிற செங்கோலை, யூதாகோத்திரத்தாரிடம் ஒப்புக்கொடுக்கிறார்.

"சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்" (ஆதி 49:10).

தாவீது ஈசாயின் குமாரன். தாவீது தன்னுடைய குடும்பத்தில் மூத்த குமாரனாயிராமல், இளையகுமாரனாயிருந்தாலும், கர்த்தர் தாவீதின்மேல் பிரியம் வைத்து அவரை சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாகியிருக்கிறார்.

தாவீது இஸ்ரவேல் புத்திரரிடம், தான் ராஜாவானதைப்பற்றிச் சொல்லும்போது, "இப்போதும் இஸ்ரவேல் அனைத்தின் மேலும் என்றைக்கும் ராஜாவாயிருக்க, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என் தகப்பனுடைய வீட்டாரிலெல்லாம் என்னைத் தெரிந்துகொண்டார்; அவர் யூதாவையும் யூதாவின் வம்சத்தில் என் தகப்பன் குடும்பத்தையும் தலைமையாகத் தெரிந்துகொண்டு, என்னை எல்லா இஸ்ரவேலின் மேலும் ராஜாவாக்க, என் தகப்பனுடைய குமாரருக்குள் என்மேல் பிரியம் வைத்தார்" (1நாளா 28:4) என்று சொல்லுகிறார்.

தாவீதுக்கு ஏராளமான குமாரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சாலொமோனும் ஒருவர். சாலொமோன் தாவீதின் மூத்த குமாரனல்ல. ஆனாலும் கர்த்தர் சாலொமோனை, இஸ்ரவேல் தேசத்தின்மீது ராஜாவாக ஏற்படுத்துகிறார்.

தாவீது சாலொமோனுடைய ராஜ்யபாரத்தைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தர் எனக்கு அநேகம் குமாரரைத் தந்தருளினார்; ஆனாலும் இஸ்ரவேலை ஆளும் கர்த்தருடைய ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காருகிறதற்கு, அவர் என்னுடைய எல்லாக் குமாரரிலும் என் குமாரனாகிய சாலொமோனைத் தெரிந்துகொண்டார் (1நாளா 28:5) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தையும் அதன் பிரகாரங்களையும் கட்டவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. கர்த்தர் தாவீதுக்கு தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் தாவீதை நோக்கி, "உன் குமாரனாகிய சாலொமோனே என் ஆலயத்தையும் என் பிரகாரங்களையும் கட்டக்கடவன்; அவனை எனக்குக் குமாரனாகத் தெரிந்துகொண்டேன்; நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்" (1நாளா 28:6) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதை தமக்கு குமாரனாகத் தெரிந்துகொள்கிறார். சாலொமோனே கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். சுவிசேஷ ஆலயத்திற்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே ஆதாரமாகவும், அஸ்திபாரமாகவும் இருக்கிறார்.

கர்த்தர் சாலொமோனை தமக்கு குமாரனாகத் தெரிந்து கொள்கிறார். கர்த்தர் சாலொமோனுக்கு பிதாவாயிருப்பார். சாலொமோனின் ஆரம்ப காலத்தில் அவர் கர்த்தருக்குப் பயந்து ஜீவித்தார். சாலொமோன் கர்த்தருடைய வழியில் நடந்து, கர்த்தரை நேசித்தார். (1இராஜா 3:3) கர்த்தரும் சாலொமோனை நேசித்தார் (2சாமு 12:24).

ஆனால் சாலொமோனின் பிற்காலத்தில் அவர் கர்த்தரைவிட்டு விலகிப்போனார். அநேக அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணினார். அவர்கள் சாலொமோனின் இருதயத்தைக் கர்த்தரைவிட்டு விலகிப்போகப் பண்ணினார்கள் *(1இராஜா 11:1-8)*. இதனால் கர்த்தர் சாலொமோன்மீது கோபம் கொண்டார். சாலொமோன் தம்மைவிட்டுப் பின்வாங்கியதினால் கர்த்தர் சாலொமோனுக்கு விரோதமாகத் திரும்பினார் *(1இராஜா 11:9-40)*.

சாலொமோனின் ராஜ்யத்தைக் கர்த்தர் அவருடைய வம்சத்தை விட்டு எடுத்துப் போட்டார். இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தின் நிமித்தம் கர்த்தர் அந்தத் தேசத்தையே அழித்து விட்டார். இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் மனந்திரும்பும்போது இஸ்ரவேல் தேசம் மறுபடியும் புதுப்பிக்கப்படும். *(சக 12:10-13:1; அப் 15:13-18; ரோமர் 11:25-29)* மேசியாவின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் நித்திய ராஜ்யமாகத் தொடரும் *(ஏசா 9:6-7; லூக்கா 1:32-33; வெளி 11:15; வெளி 20:1-10)*.

சாலொமோன் கர்த்தருடைய கற்பனைகளின்படியும், அவருடைய நியாயங்களின்படியும் செய்ய உறுதியாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தை என்றைக்கும் திடப்படுத்துவார்.

இந்த வசனத்தில் கர்த்தர் கூறியிருக்கும் ஆசீர்வாதம் நிறைவேற வேண்டுமானால், இங்கு கூறப்பட்டிருக்கும் நிபந்தனையைச் சாலொமோன் நிறைவேற்ற வேண்டும். பாவம் செய்கிறவனைக் கர்த்தர் ஆசீர்வதிக்கமாட்டார். கர்த்தருடைய எல்லா ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும், உடன்படிக்கைகளும், நிபந்தனைகளுக் குட்பட்டவை. வேதாகமத்தில் 1,595 நிபந்தனைகள் "ஆல்" **"if"** என்னும் வார்த்தையோடு கூறப்பட்டிருக்கிறது. நிபந்தனையை விளக்குவதற்கு இந்த வார்த்தை தவிர, மேலும் பல வார்த்தைகளும் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவார் *(1நாளா 28:7)*. கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம், ஒரு தீர்க்கதரிசன வாக்கியம். இந்தத் தீர்க்கதரிசனம் மேசியாவின் ராஜ்யத்திலே பூரணமாய் நிறைவேறும்.

"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" *(ஏசா 9:7)*.

"அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" *(லூக் 1:33)*.

தாவீதின் ராஜ்யம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கரத்திலே ஒப்புக்கொடுக்கப்படும். கிறிஸ்துவே நம்முடைய ஆத்தும மீட்பர். அவரே உலகஇரட்சகர். கிறிஸ்துவின் ராஜ்யம், மீட்பரின் ராஜ்யமாகயிருக்கும்.

கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தம் நிறைவேற கர்த்தர் ஒரு நிபந்தனையையும் சொல்லுகிறார். சாலொமோன் கர்த்தருடைய கற்பனைகளின்படியும், கர்த்தருடைய நியாயங்களின்படியும் செய்ய உறுதியாயிருக்கவேண்டும். அப்போது கர்த்தர் சாலொமோனுடைய ராஜ்யபாரத்தை என்றென்றைக்கும் திடப்படுத்துவார் *(1நாளா 28:7)*.

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு புத்திமதிகளை சொல்லும்போது, அவருக்கு முன்பாக ஏராளமான ஜனங்கள் கூடியிருக்கிறார்கள். தாவீது அவர்களை நோக்கி, "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரியுங்கள்" *(1நாளா 28:8)* என்று அவர்களுக்கு புத்தி சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனத்தாரை ஆளுகை செய்கிறார். கர்த்தருடைய கற்பனைகளே அவர்களை ஆளுகை செய்யும் பிரமாணம். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கடமைகளை விசாரித்து அறியவேண்டும். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, கர்த்தருடைய கற்பனைகளைப்பற்றி அறிந்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஊழியக்காரரின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய கற்பனைகளைப்பற்றி போதிக்கிறவர்களின் போதக வாக்கியங்களை அவர்கள் கவனமாய் செவிகொடுத்து கேட்கவேண்டும். கர்த்தர் தாமே தங்களை நித்திய வழியிலே நடத்தவேண்டுமென்று, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். நாம் மிகவும் கவனமாயிருந்தால் மாத்திரமே, கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள முடியும்.

தாவீது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு முன்பாக புத்திசொல்லும்போது, கர்த்தர் தாவீதின் வார்த்தைகளுக்கு சாட்சியாயிருக்கிறார். கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேல் ஜனத்தாரும் தாவீதின் வார்த்தைகளுக்கு சாட்சியாயிருக்கிறார்கள். தாவீது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சொல்லும் புத்திமதிகளை, ஏதோ ஒரு இரகசியமான இடத்தில், யாருக்கும் தெரியாமல் மறைவாக பேசவில்லை. அவர் இஸ்ரவேல் அனைத்தின் கண்களுக்கு முன்பாகப் பேசுகிறார்.

தாவீதின் வார்த்தைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு புத்திமதிகளாகவும் எச்சரிப்புக்களாகவும் இருக்கிறது. அவர்கள் தாவீதின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காவிட்டால் குற்றம் அவர்கள்மீது சுமரும். அப்போது கர்த்தரும் இஸ்ரவேல் சபையாரும் அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லுவார்கள்.

"நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும், விசாரிக்குமுன் நிருணயம் பண்ணாமலும், இவைகளைக் காத்து நடக்கும்படி, தேவனுக்கும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக, உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்" (1தீமோ 5:21).

"நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது" (2தீமோ 4:1).

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு புத்திமதிகளை சொல்லுவதற்கு ஒரு காரணமுண்டு. அவர்கள் இப்போது கானான் தேசத்தை நல்ல சுதந்தரமாக அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் தங்களுக்கு பிறகு, இந்த தேசத்தை தங்கள் பிள்ளைகளுக்கு சுதந்தரமாய் பின்வைக்கவேண்டும். அதற்காகவே தாவீது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இந்தப் புத்திமதிகளை சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு விசாரித்தால், அவர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதம் உண்டாகும்.

தாவீது சாலொமோனுக்கு சொன்ன புத்திமதிகள் 1நாளா 28:9,10

1நாளா 28:9. என் குமாரனாகிய சாலொமோனே, நீ உன் பிதாவின் தேவனை அறிந்து, அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி; கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்; நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்; நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.

1நாளா 28:10. இப்போதும் எச்சரிக்கையாயிரு; பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்; நீ திடன்கொண்டு அதை நடப்பி என்று சொன்னான்.

தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு புத்திமதிகளை சொன்ன பின்பு, தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்கும் புத்திமதிகளை சொல்லுகிறார். சாலொமோன் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும். அவர் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கவேண்டும். சாலொமோன் கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். இதுவே தாவீதின் விருப்பம்.

தாவீது சாலொமோனுக்கு சொன்ன புத்திகளின் விவரம் வருமாறு:

1. உன் பிதாவின் தேவனை அறிந்துகொள். (1நாளா 28:9)

2. அவரை உத்தம இருதயத்தோடும் உற்சாக மனதோடும் சேவி.

3. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்.

4. நீ அவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார்.

5. நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்.

6. இப்போதும் எச்சரிக்கையாயிரு. (1நாளா 28:10)

7. பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்குக் கர்த்தர் உன்னைத் தெரிந்து கொண்டார்.

8. நீ திடன்கொண்டு அதை நடப்பி.

சாலொமோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக பிறந்திருக்கிறார். ஆகையினால் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையுள்ளவராக ஜீவிப்பது சாலொமோனின் கடமை. சாலொமோன் கர்த்தருக்கு நன்றியுள்ளவராக ஜீவிக்கவேண்டும்.

தாவீது சாலொமோனுக்கு புத்திசொல்லும்போது, "நீ கர்த்தரை விட்டுவிட்டால், கர்த்தர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" (1நாளா 28:9) என்று எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை விட்டு விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஒருவன் கர்த்தரைவிட்டு விட்டால், கர்த்தரும் அவனை என்றைக்கும் கைவிட்டுவிடுவார் என்று இந்த வாக்கியம் தெளிவுபடுத்துகிறது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும்.

தாவீது சாலொமோனுக்கு சொல்லுகிற புத்திமதிகள், விசுவாசிகளாகிய நமக்கும் சொல்லப்படும் பொதுவான புத்திமதிகளாகும். தாவீது தான் சொல்லுகிற புத்திமதிகளில், இரண்டு காரியங்களை வெளிப்படுத்துகிறார். அவையாவன:

1. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்.

2. நாம் கர்த்தரைத் தேடினால், அவர் நமக்கு தென்படுவார்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ நம்முடைய இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறார். நம்முடைய ஆத்துமாக்களின் இரகசியங்களெல்லாம் கர்த்தருக்கு முன்பாக பிரத்தியட்சமாயிருக்கும். கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை. கர்த்தர் சாதாரண மனுஷரின் இருதயங்களை மாத்திரமல்ல, ராஜாக்களின் இருதயங்களையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார். பொதுவாக ராஜாக்களின் இருதயங்களை மனுஷரால் ஆராய்ந்து அறியமுடியாது.

"வானத்தின் உயரமும், பூமியின் ஆழமும், ராஜாக்களின் இருதயங்களும் ஆராய்ந்துமுடியாது" (நீதி 25:3).

நாம் இந்தப் பிரபஞ்சத்தில் சந்தோஷமாகவோ அல்லது துக்கமாகவோ இருக்கலாம். நம்முடைய சந்தோஷத்திற்கு என்ன செய்யவேண்டும் என்று நாம் பல்வேறு விதமான காரியங்களை யோசித்துக்கொண்டிருப்போம். தாவீது நம்முடைய மெய்யான சந்தோஷத்திற்கு ஒரு ஆலோசனையைச் சொல்லுகிறார்.

"நாம் கர்த்தரைத் தேடினால் அவர் நமக்கு தென்படுவார்". இதுவே தாவீது சாலொமோனுக்கும் நமக்கும் சொல்லுகிற புத்திமதி. கர்த்தரைக் கண்டுபிடிப்பதே நமக்கு மெய்யான சந்தோஷம்.

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி 11:6).

கர்த்தர் நம்மைக் கைவிடமாட்டார். நாம் கர்த்தரை விட்டுவிட்டால் மாத்திரமே, அவர் நம்மைக் கைவிடுவார். நாம் கர்த்தரை விட்டுவிடவில்லையென்றால், அவர் நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்.

தாவீது சாலொமோனுக்கு ஒரு விசேஷித்த புத்திமதியைச் சொல்லுகிறார். சாலொமோன் கர்த்தருக்கு பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தை சாதாரணமான கட்டிடமாக கட்டக்கூடாது. அதை கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலமாக கட்டவேண்டும். அதற்காக சாலொமோன் கர்த்தரைத் தேடவேண்டும். அவர் உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் கர்த்தரை சேவிக்கவேண்டும். அப்போதுதான் சாலொமோனால் கர்த்தருடைய ஆலயத்தை, அவருக்கு பரிசுத்த ஸ்தலமாக கட்ட முடியும்.

சாலொமோன் கர்த்தரைத் தேடி, அவரை உத்தம இருதயத்தோடும், உற்சாக மனதோடும் சேவித்தால் மாத்திரமே, சாலொமோனால் உத்தம நோக்கத்தோடு கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட முடியும். கர்த்தருக்கு உத்தம நோக்கத்தோடு ஆலயத்தைக் கட்டினால் மாத்திரமே, கர்த்தர் அதை தம்முடைய பரிசுத்த ஸ்தலமாக அங்கீகரிப்பார். பரிசுத்தமில்லாததை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார்.

கர்த்தர் சாலொமோனை, பரிசுத்த ஸ்தலமாக ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்கு தெரிந்துகொண்டார். சாலொமோன் கர்த்தரைத் தெரிந்து கொள்வதற்கு முன்பாகக் கர்த்தரே அவரை முதலாவதாகத் தெரிந்து கொண்டார். மனுஷனை இரட்சிப்பது தேவனுடைய சித்தம். தம்முடைய திட்டத்தைக் கர்த்தர் மனுஷருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆகையினால், ஒவ்வொரு மனுஷரும் தன்னுடைய வாழ்வில் கர்த்தரைத் தேவனாகத் தெரிந்தெடுக்க வேண்டும். சாத்தானைச் சேவிக்கக்கூடாது (யோவான் 3:16; 2தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 22:17; யோவான் 15:16).

தாவீது சாலொமோனிடம், "இப்போதும் எச்சரிக்கையாயிரு" என்று சொல்லுகிறார். இது நம் எல்லோருக்கும் சொல்லப்பட்டிருக்கிற பொதுவான புத்திமதி. நம்முடைய பார்வைக்கு எல்லாமே ஒன்றுபோல் தெரியும். ஆனாலும் நாம் நன்மையையும் தீமையையும் வேறு பிரிப்பதற்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

தாவீது சாலொமோனை நோக்கி, "நீ திடன்கொண்டு, அதை நடப்பி" என்று சொல்லுகிறார். நமக்குள்ளே உறுதியான தீர்மானம் இல்லையென்றால், நம்மால் எந்த வேலையையும் ஒழுங்காக செய்ய முடியாது. நாம் ஒரு காரியத்தை செய்வதற்கு முன்பாக, தேவனுடைய கிருபையினால் பலப்படவேண்டும். கர்த்தருக்குள் திடன்கொள்ளவேண்டும். கர்த்தருக்காக பக்திவைராக்கியமாயிருந்து, அவருடைய ஊழியத்தை நிறைவேற்றவேண்டும்.

தேவாலயத்தின் மாதிரி
1நாளா 28:11-13

1நாளா 28:11. தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு மண்டபமும், அதின் அறைகளும், அதின் பொக்கிஷசாலைகளும், அதின் மேல்வீடுகளும், அதின் உள்ளறைகளும், கிருபாசன ஸ்தானமும் இருக்க வேண்டிய மாதிரியையும்,

1நாளா 28:12. ஆவியினால் தனக்குக் கட்டளையிடப்பட்டபடியெல்லாம் அவன் செய்யவேண்டிய கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களும், தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களையும், பரிசுத்தமாக நேர்ந்துகொள்ளப்பட்டவைகளின் பொக்கிஷங்களையும் வைக்கும் சகல சுற்றறைகளும் இருக்கவேண்டிய மாதிரியையும்,

1நாளா 28:13. ஆசாரியரையும் லேவியரையும் வரிசைகளாக வகுக்கிறதற்கும், கர்த்தருடைய ஆலயப்பணிவிடை வேலை அனைத்திற்கும், கர்த்தருடைய ஆலயத்து வேலையின் பணிமுட்டுகள் அனைத்திற்குமுரிய கட்டளையையும் கொடுத்தான்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு புத்திமதிகளை சொல்லுபோது, அவர் கர்த்தரைத் தேடவேண்டும் என்றும், கர்த்தரை சேவிக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயப்பிரமாண புஸ்தகமே சாலொமோனுடைய ஜீவியத்தை ஆளுகை செய்கிற சட்டங்களாக இருக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையைத் தவிர வேறு எதுவும் சாலொமோனை ஆளுகை செய்யக்கூடாது.

தாவீது இப்போது சாலொமோனுக்கு கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்கான காரியங்களை கட்டளையிடுகிறார். தாவீது சாலொமோனுக்கு மூன்று காரியங்களைக் கொடுக்கிறார். அவையாவன: 1. கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரி வடிவம். 2. கர்த்தருடைய ஆலயத்தை கட்டுவதற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்கள். 3. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, உதவிக்காக கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும் என்னும் புத்திமதி.

தாவீது சாலொமோனிடம் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுமாறு சொல்லுகிறார். ஆனால் அந்த ஆலயத்தின் வடிவம் எப்படியிருக்கும் என்பது சாலொமோனுக்கும் தெரியாது. ஆலயத்தைக் கட்டுகிற வேலையாட்களுக்கும் தெரியாது. அவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய ஆலயத்தை தங்கள் கண்களால் பார்த்ததேயில்லை.

மோசே வனாந்தரத்திலே கர்த்தருக்கு ஆசரிப்புக்கூடாரத்தைப் போட்டார். கர்த்தர் தாமே அந்தக் கூடாரத்தின் மாதிரி வடிவத்தை மோசேக்கு காண்பித்தார்.

"இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார்" (எபி 8:5).

கர்த்தர் மோசேக்கு ஆசரிப்புக்கூடாரத்தின் மாதிரி வடிவத்தைக் காண்பித்ததுபோல, கர்த்தர் இப்போது தாவீதுக்கு ஆலயத்தின் மாதிரி வடிவத்தைக் காண்பிக்கிறார். கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரி வடிவம் கர்த்தருடைய கரத்தினால் தாவீதுக்கு எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது (1நாளா 28:19).

கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரி வடிவம் ஆவியினால் தனக்கு கட்டளையிடப்பட்டதாக தாவீது சொல்லுகிறார் (1நாளா 28:12). கர்த்தருடைய ஆலயத்திலே தாவீதின் பக்திக்கோ அல்லது சாலொமோனுடைய ஞானத்திற்கோ முக்கியத்துவமில்லை. கர்த்தருடைய ஆலயம், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கட்டப்படவேண்டும். கர்த்தருடைய சித்தமும் திட்டமுமே பிரதானம்.

கர்த்தருடைய ஆலயம் கர்த்தர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலமாயிருக்கவேண்டும். அது கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்க வேண்டும். கர்த்தருடைய ஆலயத்தை மனுஷர் தங்கள் கைகளினால் கட்டினாலும், இந்த ஆலயத்தின் வடிவத்தை கர்த்தர் தாமே தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக தீர்மானிக்கிறார். தேவனுடைய ஆலயம் தெய்வீக நியமனமாயிருக்கிறது.

கர்த்தர் தாவீதுக்கு கொடுத்த ஆலயத்தின் மாதிரி வடிவத்தை, தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு கொடுக்கிறார். தேவாலயத்தின் ஒவ்வொரு பகுதியும் எவ்வாறு கட்டப்படவேண்டும் என்னும் மாதிரி, தாவீதுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. தாவீது அதை சாலொமோனுக்கு அப்படியே கொடுக்கிறார்.

தாவீது சாலொமோனுக்கு கொடுத்த கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரி வடிவத்தின் விவரம் வருமாறு :

1. மண்டபத்தின் மாதிரி.
2. மண்டபத்தின் அறைகளின் மாதிரி.
3. பொக்கிஷசாலைகளின் மாதிரி.
4. மேல்வீடுகளின் மாதிரி

5. உள்ளறைகளின் மாதிரி.

6. கிருபாசன ஸ்தானத்தின் மாதிரி.

7. கர்த்தருடைய ஆலயப்பிராகாரங்களின் மாதிரி. (1நாளா 28:12)

8. சகல சுற்றறைகளின் மாதிரி.

9. தேவனுடைய ஆலயத்துப் பொக்கிஷங்களையும், பரிசுத்தமாக நேர்ந்துகொள்ளப்பட்டவைகளின் பொக்கிஷங்களையும் வைக்கும் அறைகளின் மாதிரி.

10. ஆவியினால் தாவீதுக்குக் கட்டளையிடப்பட்ட அனைத்தின் மாதிரி.

தாவீது தனக்கு கொடுத்த மாதிரியின் பிரகாரம் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டும். தேவாலயத்தின் ஒவ்வொரு பகுதியும் எப்படி கட்டப்படவேண்டும் என்பது ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையினால் அதைக் கட்டி முடிப்பதற்கு என்னென்ன பொருட்கள் வேண்டும் என்பதையும், எத்தனை வேலையாட்கள் வேண்டும் என்பதையும் சாலொமோன் திட்டமிடவேண்டும்.

தாவீது சாலொமோனுக்கு கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரியைக் கொடுத்ததோடு, ஆசாரியரையும் லேவியரையும் வரிசைகளாக வகுக்கிறதற்கும், கர்த்தருடைய ஆலயப்பணிவிடை வேலை அனைத்திற்கும், கர்த்தருடைய ஆலயத்து வேலையின் பணிமுட்டுகள் அனைத்திற்குமுரிய கட்டளையையும் கொடுக்கிறார்(1நாளா 28:13).

தாவீது ஆசாரியரையும் லேவியரையும் வரிசைகளாக வகுக்கிறதற்குக் கட்டளைகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய ஆலயப்பணிவிடை வேலை அனைத்திற்குமுரிய கட்டளையையும், சகல பணிமுட்டுகளைப் பற்றிய கட்டளையையும் கொடுக்கிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தின் மாதிரியை சாலொமோனுக்கு கொடுத்தபோது, செட்டைகளை விரித்துக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மூடும் பொன் கேருபீன்களான வாகனத்தின் மாதிரியையும் கொடுக்கிறார் (1நாளா 28:18).

"சந்நிதி ஸ்தானத்தில் ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைத்தான்; ஒவ்வொன்றும் பத்துமுழ உயரமாயிருந்தது. கேருபீனுக்கு இருக்கிற ஒரு செட்டை ஐந்து முழமும் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்து முழமுமாய், இப்படி ஒரு செட்டையின் கடைசிமுனை தொடங்கி மற்றச் செட்டையின் கடைசிமுனைமட்டும் பத்து முழமாயிருந்தது" (1இராஜா 6:23,24).

"மற்றக் கேருபீனும் பத்து முழமாயிருந்தது; இரண்டு கேருபீன்களும் ஒரே அளவும் ஒரே திட்டமுமாயிருந்தது. ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது; மற்றக் கேருபீனும் அப்படியே இருந்தது" (1இராஜா 6:25,26).

"அந்தக் கேருபீன்களை உள் ஆலயத்திலே வைத்தான்; கேருபீன்களின் செட்டைகள் விரித்திருந்ததினால், ஒரு கேருபீனின் செட்டை ஒருபக்கத்துச் சுவரிலும், மற்றக் கேருபீனின் செட்டை மறுபக்கத்துச் சுவரிலும் தொடத்தக்கதாயிருந்தது; ஆலயத்தின் நடுமையத்தில், அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று தொடத்தக்கதாயிருந்தது. அந்தக் கேருபீன்களைப் பொன்தகட்டால் மூடினான்" (1இராஜா 6:27,28).

தாவீது சாலொமோனுக்கு கொடுத்த கேரூபீன்களின் வடிவம் "வாகனம்" என்று அழைக்கப்படுகிறது. தேவதூதர்கள் கர்த்தருக்கு இரதங்களாகவும் வாகனங்களாகவும் இருக்கிறார்கள்.

"தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது; ஆண்டவர் பரிசுத்தஸ்தலமான சீனாயிலிருந்த வண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்" (சங் 68:17).

பொன்னும் வெள்ளியும் 1நாளா 28:14-19

1நாளா 28:14. அவன் பற்பல வேலைக்கு வேண்டிய சகல பொற்பாத்திரங்களுக்காக நிறையின்படி, பொன்னையும், பற்பல வேலைக்கு வேண்டிய சகல வெள்ளிப்பாத்திரங்களுக்காக நிறையின்படி, வெள்ளியையும்,

1நாளா 28:15. பொன் விளக்குத்தண்டுகளுக்கும் அவைகளின் பொன் விளக்குகளுக்கும், ஒவ்வொரு விளக்குத்தண்டுக்கும் அதின் விளக்குகளுக்கும் நிறையின்படி வேண்டிய பொன்னையும், வெள்ளி விளக்குத் தண்டுகளில் ஒவ்வொரு விளக்குத்தண்டுக்கும் அதின் விளக்குகளுக்கும் நிறையின்படி வேண்டிய வெள்ளியையும்,

1நாளா 28:16. சமுகத்தப்பங்களை வைக்கும் ஒவ்வொரு மேஜைக்கும் நிறையின்படி வேண்டிய பொன்னையும், வெள்ளி மேஜைகளுக்கு வேண்டிய வெள்ளியையும்,

1நாளா 28:17. முள்குறடுகளுக்கும் கலங்களுக்கும் தட்டுகளுக்கும் வேண்டிய பசும்பொன்னையும், பொன் கின்னிகளில் ஒவ்வொரு கின்னிக்கும் நிறையின்படி வேண்டியதையும், வெள்ளிக்கின்னிகளில் ஒவ்வொரு கின்னிக்கும் நிறையின்படி வேண்டியதையும்,

1நாளா 28:18. தூபங்காட்டும் பீடத்திற்கு நிறையின்படி வேண்டிய புடமிடப்பட்ட பொன்னையும் கொடுத்து, செட்டைகளை விரித்துக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மூடும் பொன் கேருபீன்களான வாகனத்தின் மாதிரியையும் கொடுத்து,

1நாளா 28:19. இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான்.

கர்த்தருடைய ஆலயத்திலே பரிசுத்த பணிமுட்டுக்கள் பயன்படுத்தப்படும். இவையெல்லாம் பொன்னினாலும் வெள்ளியினாலும் செய்யப்படவேண்டும். ஒவ்வொரு பணிமுட்டுக்கும் எவ்வளவு வெள்ளியும், எவ்வளவு பொன்னும் செலவு பண்ணப்படவேண்டுமென்று கர்த்தர் ஏற்கெனவே திட்டமிட்டுக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தருடைய ஆலயத்திலே பயன்படுத்தப்படவேண்டிய பணிமுட்டுக்களை செய்வதற்கு தேவைப்படும் பொன்னையும் வெள்ளியையும் தாவீது சாலொமோனுக்கு கொடுக்கிறார்.

வனாந்தரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஆசரிப்புக்கூடாரத்திலே, ஒரே ஒரு பொன் விளக்குத்தண்டு மாத்திரமே இருந்தது. ஆனால் இப்போது கர்த்தருடைய ஆலயத்திலோ பத்து விளக்குத்தண்டுகள் இருக்கிறது.

"சந்நிதி ஸ்தானத்திற்கு முன்பாக வைக்கும் பசும்பொன் விளக்குத்தண்டுகள், வலதுபுறமாக ஐந்தையும் இடதுபுறமாக ஐந்தையும், பொன்னான அதின் பூக்களோடும் விளக்குகளோடும் கத்தரிகளோடுங்கூட உண்டாக்கினான்" (1இராஜா 7:49).

கர்த்தருடைய ஆலயத்தில், பொன் விளக்குத்தண்டுகளோடு வெள்ளி விளக்குத்தண்டுகளும் இருக்கிறது. இந்த விளக்குத்தண்டுகள் கைகளில் எடுத்துக்கொண்டு போகவேண்டியவை.

ஆசரிப்புக்கூடாரத்தில் ஒரே ஒரு மேஜை மாத்திரமே இருந்தது. கர்த்தருடைய ஆலயத்திலோ சமுகத்தப்பங்களை வைக்கும் ஒரு மேஜையும், மற்ற பயன்பாட்டிற்காக மேலும் பத்து மேஜைகளும் இருக்கிறது. இவை தவிர அங்கே வெள்ளி மேஜைகளும் இருக்கிறது.

"பத்து மேஜைகளையும் செய்து, அவைகளை தேவாலயத்தில் வலதுபுறத்திலே ஐந்தும் இடதுபுறத்திலே ஐந்துமாக வைத்து, நூறு பொன் கலங்களையும் பண்ணினான்" (2நாளா 4:8).

சாலொமோன் கட்டுகிற கர்த்தருடைய ஆலயம், மோசே வனாந்தரத்திலே போட்ட ஆசரிப்புக்கூடாரத்தைவிட அளவிலே பெரியது. ஆலயம் பெரிதாயிருப்பதினால், பரிசுத்த பணிமுட்டுகளும், மேஜைகளும் அங்கங்கே வைக்கப்படவேண்டும். போதுமான அளவு பணிமுட்டுக்களும், மேஜைகளும் இல்லையென்றால், ஆலயம் வெறுமையாகயிருப்பதுபோல இருக்கும்.

தூபங்காட்டும் பீடத்திற்கு புடமிடப்பட்ட பொன் பயன்படுத்தப்பட்டது. இந்தப் பொன் சாதாரண பொன்னைவிட சுத்தமானது (1நாளா 28:18). தூபங்காட்டும் பீடம் என்பது, கர்த்தருடைய சமுகத்திலே பரிந்து பேசுவதற்கு அடையாளம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே பிதாவின் சமுகத்திலே நமக்காக பரிந்துபேசுகிறார். கிறிஸ்துவானவர் புடமிடப்பட்ட பொன்னைப்போல மிகவும் பரிசுத்தமானவர். அவர் பரிபூரணர்.

கர்த்தருடைய ஆலயத்தின் ஒவ்வொரு பணிமுட்டுக்களிலும் எவ்வளவு பொன்னும், வெள்ளியும் சேர்க்கப்படவேண்டும் என்னும் நிறையை கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தியதாகத் தாவீது சொல்லுகிறார். இவை கர்த்தருடைய கரத்தினால் தனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும் தாவீது சொல்லுகிறார்.

2பேதுரு 1:21 ஆவது வசனத்தில் இதை உறுதிபண்ணும் கருத்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. "தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்" (அப் 3:21; 2தீமோ 3:15-17).

தாவீது சாலொமோனுக்கு சொல்லுகிற இரண்டாவது புத்திமதி 1நாளா 28:20,21

1நாளா 28:20. தாவீது தன் குமாரனாகிய சாலொமோனை நோக்கி: நீ பலங்கொண்டு தைரியமாயிருந்து, இதை நடப்பி; நீ பயப்படாமலும் கலங்காமலும் இரு; தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்.

1நாளா 28:21. இதோ, தேவனுடைய ஆலயத்து வேலைக்கெல்லாம் ஆசாரியர் லேவியருடைய வகுப்புகள் இருக்கிறது; அந்த எல்லாக் கிரியைக்கும் சகலவித வேலையிலும் நிபுணரான மனப்பூர்வமுள்ள சகல மனுஷரும், உன் சொற்படியெல்லாம் கேட்கும் பிரபுக்களும், சகல ஜனங்களும் உன்னிடத்தில் இருக்கிறார்கள் என்றான்.

கர்த்தருக்கு ஆலயம் கட்டுவது மிகப்பெரிய வேலை. கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையுமில்லாமல், சாலொமோனால் கர்த்தருடைய ஆலயத்தை, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக கட்ட முடியாது. சாலொமோன் ஆலயத்தைக் கட்டும்போது அவருக்கு பலவிதமான உதவிகள் தேவைப்படும். தனக்கு உதவி தேவைப்படும்போது சாலொமோன் மனுஷரை நோக்கிப் பார்க்காமல், கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டுமென்று தாவீது புத்திமதி சொல்லுகிறார்.

தாவீது சாலொமோனை நோக்கி, "தேவனாகிய கர்த்தர் என்னும் என் தேவன் உன்னோடே இருப்பார்; கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கடுத்த சகல கிரியைகளையும் நீ முடித்துத் தீருமட்டும், அவர் உன்னைவிட்டு விலகவுமாட்டார், உன்னைக் கைவிடவுமாட்டார்" (1நாளா 28:20) என்று சொல்லுகிறார்.

தாவீது தன்னுடைய தேவனாக கர்த்தரைத் தெரிந்துகொண்டு அவரையே சேவித்தார். கர்த்தரும் தாவீதோடு கூடவே இருந்தார். கர்த்தர் தாவீதை ஆசீர்வதித்தார். தாவீது தன்னுடைய சொந்த அனுபவத்திலே, கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய நன்மைகளையும் அனுபவித்திருக்கிறார். அதே கர்த்தர் சாலொமோனோடும் கூடயிருப்பார் என்று தாவீது சொல்லுகிறார்.

கர்த்தர் தாவீதை வழிநடத்தியதுபோல சாலொமோனையும் வழிநடத்துவார். சாலொமோனைப் பெலப்படுத்துவார். சாலொமோனை ஆசீர்வதிப்பார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையை சாலொமோன் இப்போது ஆரம்பித்திருக்கிறார். சாலொமோன் ஆலயத்தை கட்டி முடித்து தீரு மட்டும், கர்த்தர் சாலொமோனை விட்டு விலகவுமாட்டார். அவர் சாலொமோனைக் கைவிடவுமாட்டார்.

கர்த்தர் நம்முடைய முற்பிதாக்களை தமக்கு சொந்தமாக்கிக்கொண்டார். அவர்களுடைய காலங்களிலே கர்த்தர் அவர்களைக் கைவிடாமல் வழிநடத்தினார். நம்முடைய முற்பிதாக்கள் கர்த்தரை விட்டு விலகாமல் அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தார்கள்.

அவர்களைப்போலவே நாமும் கர்த்தரைவிட்டு விலகாமல், கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது, கர்த்தர் நம்மையும் வழிநடத்துவார். நம்மையும் கைவிடமாட்டார். கர்த்தர் நம்மைவிட்டு விலகவுமாட்டார்.

கர்த்தர் நம்மூலமாக ஒரு காரியத்தை செய்ய வேண்டும் என்று தீர்மானம்பண்ணும்போது, கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தர் செய்யவேண்டும் என்று தீர்மானித்திருக்கிற காரியங்கள் எதுவும் ஒருபோதும் தடைபடுவதில்லை.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு நல்ல மனுஷர்கள் அவருக்கு உதவி செய்வார்கள். ஆசாரியரும் லேவியரும் சாலொமோனுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். சாலொமோனிடத்தில் சகல வேலையிலும் நிபுணரான மனப்பூர்வமான மனுஷர் இருக்கிறார்கள். சாலொமோனுடைய சொற்படி கேட்கும் பிரபுக்களும், சகல ஜனங்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே சாலொமோனுக்கு ஆதரவாயிருந்து உதவி செய்வார்கள்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையிலே, இவர்கள் எல்லோரையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சாலொமோன் பலங்கொண்டு தைரியமாயிருந்து, கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையை ஆரம்பிக்கவேண்டும். சாலொமோன் பயப்படாமலும் கலங்காமலும் இருக்கவேண்டும்.

29 அதிகாரம்

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்கு சொல்ல வேண்டிய புத்திமதிகளை இதுவரையிலும் சொல்லி வருகிறார். தாவீது இப்போது முதிர்வயதுள்ள விர்த்தாப்பியராயிருக்கிறார். மரணம் அவருக்கு சமீபமாயிருக்கிறது. தாவீது மரித்துப்போவதற்கு முன்பாக, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மேலும் சில காரியங்களை சொல்ல விரும்புகிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பொன்னையும் வெள்ளியையும் சவரித்து கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும், கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கும், ஆலயத்தின் பணிமுட்டுகளை செய்வதற்கும் தங்களுடைய திராணிக்குத்தக்கதான காணிக்கைகளைக் கொடுக்கவேண்டுமென்று தாவீது அவர்களுக்கு சொல்லுகிறார் (1நாளா 29:1-5). அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய திராணிக்குத்தக்க பிரகாரம், கர்த்தருடைய ஆலயத்து வேலைக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள்.

தாவீது கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை செலுத்தி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (1நாளா 29:10-20). இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள் (1நாளா 29:21,22).

சாலொமோன் தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாயிருக்கிறார். இஸ்ரவேலர் எல்லோரும் சாலொமோனுக்கு கீழ்ப்படிந்து அடங்கியிருக்கிறார்கள் (1நாளா 29:23-25). தாவீது தீர்க்காயுசு உள்ளவராய், நல்ல முதிர்வயதில் மரணமடைகிறார் (1நாளா 29:26-30).

தாவீதின் ராஜ்யபாரம் சூரியன் அஸ்தமிப்பதுபோலவும், சாலொமோனின் ராஜ்யபாரம் சூரியன் உதிப்பதுபோலவும் இருக்கிறது. இவ்விரண்டு காலங்களில், எந்தக் காலத்தில் இஸ்ரவேல் தேசம் பிரகாசமாயிருந்தது என்று சொல்லுவது மிகவும் கடினம்.

கர்த்தருக்கு காணிக்கைகள்
1நாளா 29:1-9

1நாளா 29:1. பின்பு தாவீதுராஜா சபையார் எல்லாரையும் நோக்கி: தேவன் தெரிந்து கொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்யவேண்டிய வேலையோ பெரியது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை.

1நாளா 29:2. நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்.

1நாளா 29:3. இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.

1நாளா 29:4. அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்.

1நாளா 29:5. இப்போதும் உங்களில் இன்றைய தினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார் என்றான்.

1நாளா 29:6. அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வமாய்,

1நாளா 29:7. தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுத்தார்கள்.

1நாளா 29:8. யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுத்தார்கள்.

1நாளா 29:9. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்பட்டார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுத்தார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்பட்டான்.

தாவீது மறுபடியுமாக இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் முன்பாகப் பேசுகிறார். சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டப்போகிறார். தேவனுடைய ஆலயத்து வேலைக்கு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், தங்களுடைய திராணிக்குத்தக்கதான காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும். அவர்கள் காணிக்கை கொடுக்கவேண்டும் என்று, தாவீது அவர்களைக் கட்டாயம்பண்ணவில்லை. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு பிரத்தியேகமான வரிசுமைகள் எதையும் தாவீது இஸ்ரவேல் புத்திரர்மீது சுமத்தவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலைக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும். கர்த்தர் தங்கள் இருதயத்தில் ஏவுகிற பிரகாரம் அவர்கள் கர்த்தருக்கு உதாரத்துவமான காணிக்கைகளைக் கொடுக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆலயம் பயபக்தியோடு கட்டப்படுகிறது. இதிலே பலவந்தத்திற்கோ, கட்டாயத்திற்கோ இடமில்லை. காணிக்கை கொடுக்க விருப்பமுள்ளவர்கள், மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைக் கொடுக்கலாம். உற்சாகமாய்க் கொடுக்கிறவர்களிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டும் வேலை சாலொமோனிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. தாவீதின் பார்வையில் சாலொமோன் இன்னும் வாலிபனாகவும், இளைஞனாகவும் இருக்கிறார்.

தாவீது ராஜா சபையார் எல்லோரையும் நோக்கி, அவர்களிடத்தில் சாலொமோனைப் பற்றிச் சொல்லும்போது, "தேவன் தெரிந்துகொண்ட என் குமாரனாகிய சாலொமோன் இன்னும் வாலிபனும் இளைஞனுமாயிருக்கிறான்; செய்யவேண்டிய வேலையோ பெரியது; அது ஒரு மனுஷனுக்கு அல்ல, தேவனாகிய கர்த்தருக்குக் கட்டும் அரமனை" (1நாளா 29:1) என்று சொல்லுகிறார்.

சாலொமோன் வாலிபனாகவும் இளைஞனாகவும் இருக்கிறார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையோ பெரியதாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடிக்க சாலொமோனுக்கு உதவி தேவைப்படுகிறது. சாலொமோன் வாலிபனாகவும், இளைஞனாகவும் இருந்தாலும் கர்த்தர் சாலொமோனையே ஆலயத்தைக் கட்டுவதற்கு தெரிந்துகொண்டார்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலை மிகவும் பெரிய வேலையாகயிருப்பதினால், இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா கைகளும், சாலொமோனுடைய கைகளோடு இணைந்து ஆலயத்தைக் கட்டவேண்டும். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டி முடிப்பதற்கு இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தங்களால் முடிந்த உதவிகளை செய்யவேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தாவீது ஏற்கெனவே சில ஆயத்த வேலைகளை செய்து முடித்திருக்கிறார். ஆலயத்தைக் கட்டும் வேலைப்பளு முழுவதையும் தாவீது சாலொமோனுடைய தோளிலே மொத்தமாக சுமத்திவிடவில்லை. அது மிகப்பெரிய பாரம். சாலொமோனால் பெரிய பாரத்தை சுமக்க முடியாது.

கர்த்தருடைய ஆலயத்தின் கட்டுமான வேலைக்கு, தான் செய்திருக்கிற உதவிகளை தாவீது மிகுந்த மனத்தாழ்மையோடு இங்கு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லுகிறார். தனக்கு பெருமை உண்டாகவேண்டும் என்பதற்காக தாவீது தான் செய்த உதவிகளை இங்கு சொல்லவில்லை. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்தை கட்டும் வேலையிலே உதவியாயிருக்க வேண்டும் என்பதற்காகவே தாவீது இதை விரிவாக எடுத்து சொல்லுகிறார்.

தாவீது இஸ்ரவேல் சபையாரை நோக்கி, "நான் என்னாலே இயன்றமட்டும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று பொன்வேலைக்குப் பொன்னையும், வெள்ளி வேலைக்கு வெள்ளியையும், வெண்கல வேலைக்கு வெண்கலத்தையும், இரும்பு வேலைக்கு இரும்பையும், மரவேலைக்கு மரத்தையும், பதிக்கப்படத்தக்க காந்தியுள்ள கற்களையும், பலவருணக் கற்களையும், விலையேறப்பெற்ற சகலவித ரத்தினங்களையும், வெண்கற்பாளங்களையும், கோமேதக முதலிய கற்களையும் ஏராளமாகச் சவதரித்தேன்" (நாளா 29:2) என்று சொல்லுகிறார்.

தாவீது சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் உற்சாகமடையவேண்டும். அவர்களும் ஆலயத்தைக் கட்டும் வேலைக்கு தாராளமாயும், மனப்பூர்வமாயும் தங்கள் காணிக்கைகளைக் கொடுக்க முன்வரவேண்டும். தாவீது இஸ்ரவேல் புத்திரருக்கு நல்ல முன்மாதிரியை ஏற்படுத்தி வைத்திருக்கிறார். தாவீது தன்னுடைய சொந்த பொக்கிஷத்திலிருந்து இரண்டாயிரம் தாலந்து பொன்னையும், ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கையாகக் கொடுத்திருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தான் கொடுக்கும் காணிக்கையைப்பற்றிச் சொல்லும்போது, "இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்" (நாளா 29:3) என்றும்,

"அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன்வேலைக்குப் பொன்னும், வெள்ளிவேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன்" (நாளா 29:4) என்றும் சொல்லுகிறார்.

தாவீது கர்த்தர்மீதும் கர்த்தருடைய வீட்டின்மீதும் பிரியமாயிருக்கிறார். தாவீது கர்த்தருடைய ஆலயத்திற்கு இவ்வளவு திரளான காணிக்கைகளைக் கொடுக்கும்போது, "என் தேவனுடைய ஆலயத்தின்மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால்" இந்தக் காணிக்கைகளை கொடுப்பதாக சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு, தான் கொடுத்திருக்கிற காணிக்கைகளைப்பற்றிச் சொல்லும்போது, இஸ்ரவேல் புத்திரரும் தங்களுடைய திராணிக்குத்தக்க காணிக்கைகளைக் கொடுக்கவேண்டுமென்று அவர்களையும் உற்சாகப்படுத்துகிறார்.

தாவீது இஸ்ரவேல் சபையாரிடத்தில், "இப்போதும் உங்களில் இன்றைய தினம் கர்த்தருக்குத் தன் கைக்காணிக்கைகளைச் செலுத்த மனப்பூர்வமானவர்கள் யார்" (நாளா 29:5) என்று கேட்கிறார்.

கர்த்தரை ஆராதிப்பது நம்முடைய பாக்கியம். நாம் கர்த்தரை ஆராதிக்கும்போது, கர்த்தருக்காக நம்முடைய கைகள் நிரப்பப்பட்டதாயிருக்கவேண்டும். தாவீது காணிக்கையைப்பற்றிச் சொல்லும்போது "கைக்காணிக்கைகள்" (1நாளா 29:5) என்று சொல்லுகிறார். நம்முடைய கைகளில் கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையும், அவரை சேவிக்கும் சேவையும் நிரம்பியிருக்கவேண்டும். நாம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தரை தாராளமாய் ஆராதிக்கவேண்டும். நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கிருபைகளுக்குகேற்ற பிரகாரம், முழுபெலத்தோடு கர்த்தரை ஆராதிக்கவேண்டும்.

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தாவீதின் வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்கிறார்கள். அப்பொழுது வம்சங்களின் பிரபுக்களும், இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரபுக்களும், ஆயிரம்பேருக்கு அதிபதிகளும், நூறுபேருக்கு அதிபதிகளும், ராஜாவின் வேலைக்காரராகிய பிரபுக்களும் மனப்பூர்வமாய், தேவனுடைய ஆலயத்து வேலைக்கு ஐயாயிரம் தாலந்து பொன்னையும், பதினாயிரம் தங்கக்காசையும், பதினாயிரம் தாலந்து வெள்ளியையும், பதினெண்ணாயிரம் தாலந்து வெண்கலத்தையும், லட்சம் தாலந்து இரும்பையும் கொடுக்கிறார்கள் (1நாளா 29:6,7).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஆலயத்து பொக்கிஷத்திற்கு தாராளமாய்க் கொடுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சாதாரண ஜனங்களாயிருந்தாலும், அவர்கள் இஸ்ரவேலின் பிரபுக்களைப்போல கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள்.

யார் கையில் ரத்தினங்கள் இருந்ததோ, அவர்கள் அவைகளையும் கர்த்தருடைய ஆலயத்துப் பொக்கிஷத்திற்கென்று கெர்சோனியனான யெகியேலின் கையிலே கொடுக்கிறார்கள். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுத்ததற்காக ஜனங்கள் சந்தோஷப்படுகிறார்கள்; உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்குக் கொடுக்கிறார்கள்; தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்படுகிறார் (1நாளா 29:8,9).

கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கை கொடுக்க, தங்களுக்கு கிடைத்திருக்கிற வாய்ப்பு மிகப்பெரிய சிலாக்கியம் என்றும், அது பெரிய பாக்கியம் என்றும் நினைத்து இஸ்ரவேல் புத்திரர் சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும் வேலையிலே தங்களுக்கும் ஒரு பங்கு கிடைத்திருப்பதை நினைத்து அவர்கள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டும்போது, இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் உத்தம இருதயத்தோடே உற்சாகமாய் கர்த்தருக்கு கொடுத்ததைப் பார்த்து, தாவீது ராஜாவும் மிகவும் சந்தோஷப்படுகிறார். தாவீது தேவனுடைய ஆலயத்தின்மேல் வாஞ்சை வைத்திருக்கிறார். இப்போது அந்த வாஞ்சை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருடைய இருதயத்திலும் வந்திருக்கிறது.

தாவீதின் ஜெபம்
1நாளா 29:10-22

1நாளா 29:10. ஆகையால் தாவீது சபை அனைத்தின் கண்களுக்கு முன்பாகவும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்திச் சொன்னது: எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

1நாளா 29:11. கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.

1நாளா 29:12. ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்.

1நாளா 29:13. இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்.

1நாளா 29:14. இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்.

1நாளா 29:15. உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்; பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது; நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையில்லை.

1நாளா 29:16. எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப் பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது.

1நாளா 29:17. என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்; இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன்.

1நாளா 29:18. ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்னும் எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே, உமது ஜனத்தின் இருதயத்தில் உண்டான இந்தச் சிந்தையையும் நினைவையும் என்றைக்கும் காத்து, அவர்கள் இருதயத்தை உமக்கு நேராக்கியருளும்.

1நாளா 29:19. என் குமாரனாகிய சாலொமோன் உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கு, இவைகள் எல்லாவற்றையும் செய்து, நான் ஆயத்தம்பண்ணின இந்த அரமனையைக் கட்டும்படிக்கும், அவனுக்கு உத்தம இருதயத்தைத் தந்தருளும் என்றான்.

1நாளா 29:20. அதின்பின்பு தாவீது சபைஅனைத்தையும் நோக்கி: இப்போது உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்றான்; அப்பொழுது சபையார் எல்லாரும் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்து, தலை குனிந்து கர்த்தரையும் ராஜாவையும் பணிந்துகொண்டு,

1நாளா 29:21. கர்த்தருக்குப் பலியிட்டு, மறுநாளிலே சர்வாங்க தகனபலிகளாக ஆயிரம் காளைகளையும், ஆயிரம் ஆட்டுக்கடாக்களையும், ஆயிரம் ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கடுத்த பானபலிகளையும் இஸ்ரவேல் அனைத்திற்காகவும் கர்த்தருக்குச் செலுத்தினார்கள்.

1நாளா 29:22. அவர்கள் அன்றையதினம் மிகுந்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு முன்பாகப் போஜனபானம்பண்ணி, தாவீதின் குமாரனாகிய சாலொமோனை இரண்டாம்விசை ராஜாவாக்கி, கர்த்தருக்கு முன்பாக அவனை அதிபதியாகவும், சாதோக்கை ஆசாரியனாகவும் அபிஷேகம் பண்ணினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். அவர்கள் உத்தம இருதயத்தோடே உற்சாகமாய்க் கர்த்தருக்கு கொடுக்கிறார்கள். தாவீது ராஜா அதைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டு, இஸ்ரவேல் சபையார் எல்லோருடைய கண்களுக்கு முன்பாகவும், கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, கர்த்தரைத் துதிக்கிறார். கர்த்தருடைய சமுகத்திலே துதிகளையும் ஸ்தோத்திரங்களையும், ஜெபங்களையும் ஏறெடுக்கிறார்.

தாவீதின் சங்கீதங்களில் அநேக சங்கீதங்கள் துதியின் சங்கீதங்களாகயிருக்கிறது. நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நெருங்கிச் சேரும்போது, நம்முடைய வாயின் வார்த்தைகள் எல்லாமே, கர்த்தரைத் துதிக்கும் வார்த்தைகளாகவே இருக்கும். நாம் இந்த உலகத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்தாலும், பரலோகத்தின் தேவனுக்கு முன்பாக ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கவேண்டும்.

தாவீது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி சொன்னபோது, "எங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, சதாகாலங்களிலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" (நாளா 29:10) என்று சொல்லுகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுத்தார். தாவீது இங்கு ஏறெடுக்கும் ஜெபம், இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த ஜெபத்தைப் போலிருக்கிறது.

"கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்" (நாளா 29:11) என்று சொல்லி தாவீது கர்த்தரைத் துதிக்கிறார்.

தாவீதின் இருதயத்திலே கர்த்தர்மீது பயபக்தியும், பக்தி வைராக்கியமும் நிரம்பியிருக்கிறது. தாவீது கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும், மாட்சிமையையும் அங்கீகரித்து கர்த்தரைத் துதிக்கிறார். கர்த்தரே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். அவர் ஜோதிகளின் பிதாவாகயிருக்கிறார். மாட்சிமை அனைத்தும் கர்த்தருடையது. வல்லமைகள் கர்த்தருடையது. மகிமை கர்த்தருடையது. ஜெயமும் கர்த்தருடையது என்று சொல்லி தாவீது கர்த்தரைத் துதிக்கிறார்.

வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் கர்த்தருடையது. பூமியிலுள்ள ராஜாக்களெல்லாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஆளுகை செய்யவேண்டும். "கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது" என்று தாவீது சொல்லுகிறார். ராஜ்யம் கர்த்தருடையதாயிருக்கும்போது, ராஜ்யத்திலுள்ள ராஜாக்களும் கர்த்தருடையவர்கள் அவர்கள் கர்த்தருடைய ஆளுகைக்கு கட்டுப்பட்டவர்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறார். தாவீது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி அவரைத் துதிக்கும்போது, "ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்" (நாளா 29:12) என்று சொல்லி துதிக்கிறார்.

இந்தப் பூமியிலுள்ள ஐசுவரியவான்களும், மனுஷர் மத்தியிலே தலைவர்களாகயிருக்கிறவர்களும், பூமியிலே பிரதானமானவர்களும் கர்த்தருடைய ஆளுகைக்குட்பட்டவர்கள். தாவீது தன்னுடைய காணிக்கைகளைப்பற்றிச் சொல்லும்போது, கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கும் அளவில்லாத ஐசுவரியத்திலிருந்து, ஒரு சிறு பகுதியை கர்த்தருக்கு கொடுத்திருப்பதாக, மிகுந்த மனத்தாழ்மையோடு சொல்லுகிறார்.

தம்முடைய ஆலயம் கட்டப்படுவதற்கு, கர்த்தர் தமது கிருபையினாலே, தாவீதையும் இஸ்ரவேல் புத்திரரையும் மனப்பூர்வமாய் காணிக்கை கொடுப்பதற்கு, அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். தாவீது கர்த்தருடைய கிருபையை நன்றியுள்ள இருதயத்தோடு அங்கீகரிக்கிறார்.

"இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்" (1நாளா 29:13,14) என்று சொல்லி தாவீது கர்த்தரைத் துதிக்கிறார். கர்த்தருடைய கிருபையில்லாமல் எதுவும் உண்டாகாது. கர்த்தர் நமக்கு கொடுக்காமல் நம்மிடத்தில் ஒன்றும் இருக்காது. நாம் கர்த்தருக்கு கொடுப்பதை, அவருடைய கரத்திலிருந்து வாங்கி, அவருக்கு கொடுக்கிறோம்.

தாவீது கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னையும், இஸ்ரவேல் புத்திரரையும் வெகுவாகத் தாழ்த்துகிறார். கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு தானும் இஸ்ரவேல் புத்திரரும் கொடுக்கும் காணிக்கைகளையும் தாவீது தாழ்த்துகிறார். கர்த்தருடைய பெரிதான கிருபைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவர்கள் கொடுக்கும் காணிக்கைகள் மிகவும் சாதாரணமானது.

தாவீதோடுகூட இஸ்ரவேலின் பிரபுக்களும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கைகளைக் கொடுக்கிறார்கள். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாகவும், அவரோடு கூடயிருக்கிறவர்கள் இஸ்ரவேலுக்கு பிரபுக்களாகயிருந்தாலும், தாவீது அவர்கள் எல்லோரையும் கர்த்தருக்கு முன்பாக வெகுவாகத் தாழ்த்தி, "நான் எம்மாத்திரம்" என்றும், "என் ஜனங்கள் எம்மாத்திரம்" என்று சொல்லுகிறார்.

"உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போலும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்" (1நாளா 29:15) என்று சொல்லி தாவீது தன்னையும், இஸ்ரவேல் புத்திரரையும் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்துகிறார். அவர்கள் இந்த உலகத்தார் மத்தியிலே மிகவும் சாதாரணமான ஜனங்களாகயிருக்கிறார்கள். அவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாயிருக்கிறார்கள்.

"எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போல இருக்கிறது" என்றும் தாவீது சொல்லுகிறார். நம்முடைய ஜீவியம் மாயையானது. அது இருளானது. அது நிலைத்திருப்பதில்லை. நாம் இந்தப் பூமியில் வாழும் காலத்திலே, நமக்கு பரிபூரமாண வெளிச்சமோ அல்லது பரிபூரணமான இருளோ கிடைப்பதில்லை. எல்லாமே நிலையில்லாமலிருக்கிறது. "நிலைத்திருப்போம் என்னும் நம்பிக்கையும் இல்லை" என்று தாவீது சொல்லுகிறார்.

"இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்" (எபி 7:3).

நம்முடைய உலகப்பிரகாரமான ஜீவியத்திலிருந்து நாம் எதையும் எதிர்பார்க்க முடியாது. நம்முடைய ஜீவியம் நிலைத்திருக்கும் என்னும் நம்பிக்கையுமில்லை. ஆகையினால் கர்த்தருக்காக நாம் செய்யும் ஊழியத்தையோ அல்லது அவருடைய ஊழியத்திற்காக நாம் கொடுக்கும் காணிக்கையையோ குறித்து பெருமைப்படுவதற்கு நம்மிடத்தில் ஒன்றுமே இல்லை.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு காணிக்கைகளைக் கொடுக்கும்போது, "எல்லாம் உம்மால் உண்டானது" என்றும், "உமது கரத்திலே வாங்கி உமக்கு கொடுத்தோம்" என்றும் சொல்லுகிறார். தாவீது இதே வாக்கியத்தை மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "இந்தப் பொருள்களெல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது" என்றும், "எல்லாம் உம்முடையது" (1நாளா 29:16) என்றும் தாவீது மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். ஆகையினால் கர்த்தருடைய நாமமே மகிமைப்படவேண்டும் என்பது தாவீதின் விருப்பமாயும் ஜெபமாயும் இருக்கிறது.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு மனப்பூர்வமாயும், உத்தம இருதயத்தோடும் காணிக்கைகளைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தன்னுடைய இருதயத்தை சோதித்துப் பார்த்தால், தன்னுடைய உத்தம குணம் வெளிப்படும் என்று தாவீது விசுவாசத்தோடு சொல்லுகிறார்.

கர்த்தர் நம்முடைய இருதயத்தை சோதித்துப் பார்த்து, நம்முடைய உத்தம குணத்தில் பிரியமாயிருப்பதை விசுவாசிகளாகிய நாம் பார்க்கும்போது, அதுவே நமக்கு ஆத்தும திருப்தியாகவும், மனதிற்கு பேரானந்தமாகவும் இருக்கும்.

தாவீது தன்னுடைய உத்தம குணத்தை கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடு சாட்சியாக சொல்லுகிறார். "என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்; இவையெல்லாம் நான் உத்தம இருதயத்தோடே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன்" (1நாளா 29:17) என்று தாவீது சொல்லுகிறார்.

தாவீது கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவதற்கு மனப்பூர்வமாய்க் கொடுத்ததைப்போலவே, இஸ்ரவேல் ஜனங்களும் கர்த்தருக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறார்கள். "இப்பொழுது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைக் கண்டு சந்தோஷித்தேன்" (1நாளா 29:17) என்று தாவீது சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கு மனப்பூர்வமாகக் காணிக்கைகளைக் கொடுத்தது, தாவீதின் மனதிலே சந்தோஷமாயும், அவருடைய இருதயத்திலே ஆறுதலாயும் இருக்கிறது. தான் கர்த்தருக்கு உத்தம இருதயத்தோடு காணிக்கை கொடுத்ததைப் பார்த்து, தாவீது தன்னுடைய மனதிலே பெருமைப்படவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு மனப்பூர்வமாகக் கொடுத்ததைப் பார்த்து, தாவீது அவர்கள்மீது பொறாமைப்படவுமில்லை. தாவீது மற்றவர்களுடைய நற்கிரியைகளைப் பார்த்து ஒருபோதும் பொறாமைப்படுகிறவரல்ல.

தாவீது இஸ்ரவேல் ஜனத்திற்காகவும், தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்காகவும் கர்த்தரிடத்திலே விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்கள் எல்லோருமே, தாங்கள் ஆரம்பித்த நற்கிரியைகளைக் காத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் துவக்கிய ஓட்டத்தை முடித்துக்கொள்ளவேண்டும்.

தாவீது கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்போது, "ஆபிரகாம் ஈசாக்கு இஸ்ரவேல் என்னும் எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தாவே" (1நாளா 29:18) என்று சொல்லி தன்னுடைய ஜெபத்தை ஆரம்பிக்கிறார். கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அவர்கள் நிமித்தமாக கர்த்தர் நம்மோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

தாவீது கர்த்தருடைய சமுகத்திலே இஸ்ரவேல் ஜனத்திற்காக ஜெபம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தின் இருதயத்திலே, கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் சிந்தையும் நினைவும் உண்டாயிருக்கிறது. கர்த்தர் தாமே இந்த சிந்தையையும், நினைவையும் அவர்களுடைய இருதயத்திலே என்றைக்கும் காத்தருளவேண்டுமென்று தாவீது விண்ணப்பம்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டவேண்டுமென்று இப்போது மிகுந்த உற்சாகமாயிருக்கிறார்கள். இந்த உற்சாகம் அவர்களுடைய இருதயத்தில் குறைந்துவிடக்கூடாது. நம்முடைய மனதிலே உற்சாகம் இருந்தால்தான், நம்மால் பெரிய காரியங்களை செய்ய முடியும். நம்முடைய மனதிலும் உற்சாகம் இருக்கவேண்டும். நம்முடைய செயலிலும் உற்சாகம் இருக்கவேண்டும்.

நம்முடைய இருதயத்தின் நினைவுகளும் சிந்தனைகளும், நம்முடைய கிரியைகளை ஆளுகை செய்யும். நம்முடைய இருதயத்திலுள்ள நினைவுகளின் பிரகாரமாகவே நாம் சிந்தித்து செயல்படுவோம். நம்முடைய இருதயத்தில் நல்ல சிந்தனைகளும் நல்ல நினைவுகளும் இருக்கும்போது, கர்த்தர் தாமே அதைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று நாம் கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும்.

தாவீது முதிர்வயதிலிருக்கிறார். அவர் சீக்கிரத்தில் மரித்துப்போவார். தாவீது மரித்துப்போனாலும், கர்த்தருடைய ஆலயத்தை கட்டும் வேலை நின்றுவிடக்கூடாது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தின் இருதயத்தில், ஆலயத்தைக் கட்டவேண்டும் என்னும் சிந்தையையும் நினைவையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தாமே இந்த சிந்தையையும் நினைவையும் அவர்களுடைய இருதயத்தில் என்றைக்கும் காத்துக்கொள்ளவேண்டும் என்று தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் இருதயத்தை உமக்கு நேராக்கியருளும்" என்றும் தாவீது ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனுக்காக ஜெபம்பண்ணும்போது, "அவனுக்கு உத்தம இருதயத்தை தந்தருளும்" (1நாளா 29:19) என்று ஜெபம்பண்ணுகிறார்.

தாவீது சாலொமோனுடைய உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்திற்காக ஜெபம்பண்ணவில்லை. "அவனுக்கு திரளான ஐசுவரியத்தைத் தந்தருளும்" என்றோ, "அவனை பராக்கிரமசாலியாக மாற்றும்" என்றோ, "அவனை கல்விமானாக வளரச்செய்யும்" என்றோ தாவீது சாலொமோனுக்காக விண்ணப்பம்பண்ணவில்லை. சாலொமோன் உத்தம இருதயமுள்ளவனாகயிருக்க வேண்டும். இதுவே தாவீதின் விருப்பமும் ஜெபமும் ஆகும்.

சாலொமோன் கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுகிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள் அதை உத்தம இருதயத்தோடு செய்யவேண்டும். தாவீதின் மனச்சாட்சி கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். தாவீதின் இருதயம் உத்தமமில்லாதிருக்குமானால், அவர் கர்த்தருக்காக ஆலயத்தைக் கட்டினாலும் அவருக்கு ஒரு நன்மையும் உண்டாகாது.

நம்முடைய பகுதியில் ஆலயம் கட்டப்பட்டும்போது, நாமும் அதன் கட்டுமான வேலைகளுக்கு உதவி செய்யலாம். நாம் ஆலயக் கட்டிட வேலைகளுக்கு எவ்வளவுதான் உதவி செய்தாலும், நம்முடைய இருதயம் கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் உண்மையில்லாமல், நம்முடைய இருதயத்தில் உத்தமமில்லாமல், நாம் கர்த்தருடைய ஊழியத்திற்கு எவ்வளவுதான் கொடுத்தாலும், எத்தனை ஆலயங்களைக் கட்டுவதற்கு தாராளமாக உதவி செய்தாலும், அதனால் நமக்கு ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை.

நாம் கர்த்தருடைய ஊழியத்திற்காக கொடுக்கும் காணிக்கையோ, கர்த்தருடைய ஆலயங்களை கட்டுவதற்காக கொடுக்கும் நிதி உதவிகளோ, நம்முடைய பாவங்களை மன்னிக்காது. அவை நம்மை இரட்சிக்காது. நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் திருஇரத்தம் மாத்திரமே, நம்முடைய பாவக்கறைகளை நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே, நம்முடைய ஆத்தும இரட்சகர்.

தாவீது கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, இஸ்ரவேல் சபையார் எல்லோரும் அவரோடு கூடயிருக்கிறார்கள். தாவீது இஸ்ரவேல் சபையாருக்காகவும், தன்னுடைய குமாரனாகிய சாலொமோனுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். அதின்பின்பு தாவீது சபைஅனைத்தையும் நோக்கி: "இப்போது உங்கள் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (1நாளா 29:20) என்று சொல்லுகிறார்.

அப்பொழுது சபையார் எல்லாரும் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்து, தலை குனிந்து கர்த்தரையும் ராஜாவையும் பணிந்துகொண்டு, கர்த்தருக்குப் பலியிடுகிறார்கள்.

மறுநாளிலே சர்வாங்க தகனபலிகளாக ஆயிரம் காளைகளையும், ஆயிரம் ஆட்டுக்கடாக்களையும், ஆயிரம் ஆட்டுக்குட்டிகளையும், அவைகளுக்கடுத்த பானபலிகளையும் இஸ்ரவேல் அனைத்திற்காகவும் கர்த்தருக்குச் செலுத்துகிறார்கள் (1நாளா 29:20,21).

இஸ்ரவேல் சபையார் எல்லோரும் தாவீதோடு சேர்ந்துகொண்டு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் தேவனாகிய கர்த்தரை ஸ்தோத்தரித்து தலைகுனிந்து நிற்கிறார்கள். தலைகுனிந்து நிற்பது, கர்த்தருக்கு கீழ்ப்படிவதற்கு அடையாளம். அவர்கள் தலைகுனிந்து நின்றாலும், அவர்களுடைய ஆத்துமாக்கள் கர்த்தருக்கு நேராக உயர்த்தப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் தலைகுனிந்து கர்த்தரை பணிந்துகொள்ளும்போது, ராஜாவாகிய தாவீதையும் பணிந்துகொள்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏராளமான ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்களுக்கு இத்தனை திரளான ஆசீர்வாதங்கள் கிடைப்பதற்கு, தாவீது ராஜாவே கர்த்தருடைய கரத்திலே கருவியாகப் பயன்படுகிறார். தங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்க தாவீதும் காரணமாயிருக்கிறார் என்பதை இஸ்ரவேல் சபையார் நினைவுகூர்ந்து, அவரையும் பணிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் சபையார் மறுநாளிலே கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். அவர்கள் அன்றையதினம் மிகுந்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு முன்பாகப் போஜனபானம்பண்ணுகிறார்கள்.

அன்றையதினம் இஸ்ரவேல் சபையார், தாவீதின் குமாரனாகிய சாலொமோனை இரண்டாம்விசை ராஜாவாக்கி, கர்த்தருக்கு முன்பாக அவரை அதிபதியாக அபிஷேகம் பண்ணுகிறார்கள் (1நாளா 29:22).

இஸ்ரவேல் ஜனத்தார் சாலொமோனை ஏற்கெனவே ராஜாவாக அபிஷேகம்பண்ணியிருக்கிறார்கள். இது முதலாவது ராஜாபிஷேகம். இந்த அபிஷேகம் அவசரத்தில் நடைபெற்றது. அதோனியா தாவீதுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். இந்தக் கலகத்திற்கும் குழப்பத்திற்கும் மத்தியிலே, இஸ்ரவேல் ஜனத்தார் சாலொமோனை அவசரம் அவசரமாக அபிஷேகம்பண்ணினார்கள்.

சாலொமோனை ராஜாவாக அபிஷேகம்பண்ணின, அந்த ராஜாபிஷேக வைபவத்தை, மறுபடியும் நடத்தவேண்டுமென்று இஸ்ரவேல் சபையார் விரும்புகிறார்கள். இதன் பிரகாரமாக இஸ்ரவேல் சபையார் எல்லோரும் சாலொமோனை இரண்டாம் விசை ராஜாவாக்கி, கர்த்தருக்கு முன்பாக, அவரை இஸ்ரவேலின் அதிபதியாக அபிஷேகம்பண்ணுகிறார்கள். அப்போது சாதோக்கை ஆசாரியனாகவும் அபிஷேகம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்ய ராஜாவும் தேவைப்படுகிறார். பிரதான ஆசாரியரும் தேவைப்படுகிறார்.

சாலொமோனின் ராஜ்யபாரம் 1நாளா 29:23-25

1நாளா 29:23. அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்.

1நாளா 29:24. சகல பிரபுக்களும் பராக்கிரமசாலிகளும் தாவீது ராஜாவினுடைய சகல குமாரருங்கூட ராஜாவாகிய சாலொமோனுக்கு அடங்கியிருந்தார்கள்.

1நாளா 29:25. இஸ்ரவேலர் எல்லாரும் காணக் கர்த்தர் சாலொமோனை மிகவும் பெரியவனாக்கி, அவனுக்கு முன்னே இஸ்ரவேலில் ராஜாவான ஒருவனுக்கும் இல்லாதிருந்த ராஜரிக மகத்துவத்தை அவனுக்குக் கட்டளையிட்டார்.

சாலொமோன் இரண்டுமுறை ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார். முதன் முறையாக இஸ்ரவேலில் ஒருசிலருக்கு முன்பாக அபிஷேகம் பண்ணப்பட்டார். (1இராஜா 1) இரண்டாம் முறையாகச் சகல இஸ்ரவேலுக்கு முன்பாக ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருக்கிறார். சாலொமோன் இரண்டாம் விசை ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பின்பு, அவர் ராஜாவின் முழு அதிகாரத்தையும் பெற்றுக் கொள்கிறார். (1நாளா 29:23-24).

இஸ்ரவேலுடைய சிங்காசனம் "கர்த்தருடைய சிங்காசனம்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தர் தாமே எல்லா தேசங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார். எல்லா ராஜாக்களும் கர்த்தருக்கு கீழே ஆளுகை செய்கிறார்கள். கர்த்தர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். அதே கர்த்தர் தம்முடைய விசேஷித்த கிருபையினாலே இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருக்கிறார்.

"அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள்" (1சாமு 12:12).

சாலொமோனுடைய ராஜ்யம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்துவின் ராஜ்யமே கர்த்தருடைய சிங்காசனம். சாலொமோன் பாக்கியசாலியாயிருக்கிறார். இஸ்ரவேல் தேசம் செழித்திருக்கிறது. இஸ்ரவேலர் எல்லாரும் சாலொமோனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் இருதயங்களை ஆளுகை செய்கிறார். ஆகையினால் இஸ்ரவேலர் எல்லோரும் சாலொமோனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். சகல பிரபுக்களும் பராக்கிரமசாலிகளும் தாவீது ராஜாவினுடைய சகல குமாரருங்கூட ராஜாவாகிய சாலொமோனுக்கு அடங்கியிருக்கிறார்கள் (1நாளா 29:24).

தாவீது தன் குமாரனாகிய சாலொமோனைவிட நல்லவர். ஆனாலும் தாவீது இஸ்ரவேலின் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொண்டபோது, அவருக்கு பல பிரச்சனைகள் உண்டாயிற்று. தாவீது மிகுந்த கஷ்டங்களுக்கும், போராட்டங்களுக்கும் மத்தியிலே, இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாவானார். தாவீது இஸ்ரவேலுக்கு ராஜாவாவதற்கு பல தடைகள் உண்டாயிற்று. மிகுந்த காலதாமதமும் உண்டாயிற்று. தாவீது தனக்கு முன்பாக இருந்த எல்லா தடைகளையும் கடந்து, ஒவ்வொரு அடியாக முன்னேறி, இஸ்ரவேலின் சிங்காசனத்திலே போய் அமர்ந்தார்.

சாலொமோனுடைய விசுவாசத்தைவிட தாவீதின் விசுவாசம் பெரியது. கர்த்தர் தாவீதின் விசுவாசத்தை பல சந்தர்ப்பங்களில் சோதித்தறிந்து, உறுதிபண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேலர் எல்லாரும் சாலொமோனுக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். அவர்கள் தாங்களாகவே சாலொமோனுக்கு தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்து, அவருக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். சாலொமோனை இரண்டாம் விசை ராஜாவாக்கி, அவரை இஸ்ரவேல் தேசத்திற்கு அதிபதியாக அபிஷேகம்பண்ணும்போது, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், சாலொமோனுக்கு கீழ்ப்படிவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். அவர்கள் ராஜாவுக்கு முன்பாக தங்களுடைய கீழ்ப்படிதலையும், உண்மையையும், ஆணையிட்டு உறுதிபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலர் எல்லாரும் காணக் கர்த்தர் சாலொமோனை மிகவும் பெரியவனாக்குகிறார். சாலொமோனுக்கு முன்னே இஸ்ரவேலில் ராஜாவான ஒருவனுக்கும் இல்லாதிருந்த ராஜரிக மகத்துவத்தை கர்த்தர் சாலொமோனுக்குக் கட்டளையிடுகிறார் (1நாளா 29:25).

கர்த்தர் சாலொமோனுக்கு ராஜரிக மகத்துவத்தை கட்டளையிடுகிறார். இக்காலத்தில் இஸ்ரவேல் மத்தியில் மிகப்பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாயிற்று. இதன் மூலமாகக் கர்த்தர் மிகப்பெரிய ஆசீர்வாதங்களை இஸ்ரவேல் புத்திரருக்குக் கட்டளையிடுகிறார். (1நாளா 29:17,21-22).

சாலொமோனுக்கு முன்னால் இருந்த இஸ்ரவேலின் ராஜாக்களோ, இஸ்ரவேலின் நியாயாதிபதிகளோ, சாலொமோனைப்போல ராஜரீக மகத்துவத்தோடு இல்லை. கர்த்தரோ சாலொமோனை விசேஷமாய் ஆசீர்வதித்திருக்கிறார். மிகவும் விசேஷமான ராஜரீக மகத்துவத்தை கர்த்தர் சாலொமோனுக்கு கட்டளையிடுகிறார்.

தாவீதின் நடபடிகள்
1நாளா 29:26-30

1நாளா 29:26. இவ்விதமாய் ஈசாயின் குமாரனாகிய தாவீது இஸ்ரவேல் அனைத்துக்கும் ராஜாவாயிருந்தான்.

1நாளா 29:27. அவன் இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பதுவருஷம்; எப்ரோனிலே ஏழு வருஷமும், எருசலேமிலே முப்பத்து மூன்று வருஷமும் ராஜாவாயிருந்தான்.

1நாளா 29:28. அவன் தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுமுள்ளவனாய், நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தபின், அவன் குமாரனாகிய சாலொமோன் அவன் ஸ்தானத்திலே அரசாண்டான்.

1நாளா 29:29. தாவீது ராஜாவினுடைய ஆதியோடந்தமான நடபடிகளும், அவன் அரசாண்ட விபரமும், அவனுடைய வல்லமையும், அவனுக்கும் இஸ்ரவேலுக்கும், அந்தந்த தேசங்களின் ராஜ்யங்கள் அனைத்துக்கும் நடந்த காலசம்பவங்களும்,

1நாளா 29:30. ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலின் பிரபந்தத்திலும், தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிரபந்தத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தின் பிரபந்தத்திலும் எழுதியிருக்கிறது.

தாவீது வயது முதிர்ந்து விர்த்தாப்பியராயிருக்கிறார். அவர் மரிக்கும் காலம் சமீபமாயிருக்கிறது. இஸ்ரவேலின் சரித்திர ஆசிரியர்கள் தாவீதின் நடபடிகளை இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார்கள்.

இவ்விதமாய் ஈசாயின் குமாரனாகிய தாவீது இஸ்ரவேல் அனைத்துக்கும் ராஜாவாயிருந்தார். தாவீது இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பதுவருஷம்; எப்ரோனிலே ஏழு வருஷமும், எருசலேமிலே முப்பத்து மூன்று வருஷமும் ராஜாவாயிருந்தார் (1நாளா 29:26,27).

தாவீதின் மரணத்தைப்பற்றியும், இஸ்ரவேலின் சரித்திர ஆசிரியர்கள் இந்த வசனப்பகுதியில் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். தாவீது தீர்க்காயுசும் ஐசுவரியமும் மகிமையுமுள்ளவனாய், நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தார். அதன்பின்பு, தாவீதின் குமாரனாகிய சாலொமோன் அவருடைய ஸ்தானத்திலே அரசாட்சி செய்கிறார் (1நாளா 29:28).

தாவீது தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் கனமுள்ளவராயிருக்கிறார். தாவீது தன்னுடைய வாலிப நாட்களிலிருந்தே பல யுத்தங்களை நடத்தியிருக்கிறார். தாவீதின் ஜீவிய சரித்திரத்தின் பெரும்பகுதி யுத்தங்களோடு தொடர்புடையது. யுத்தத்திலே மரண ஆபத்துக்கள் அதிகம். ஆனாலும் கர்த்தர் தாவீதின் ஜீவனை இதுவரையிலும் பாதுகாத்து வந்திருக்கிறார். கர்த்தர் தாவீதுக்கு தீர்க்காயுசையும், முதிர்வயதையும் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார்.

தாவீது நல்ல முதிர்வயதிலே சமாதானத்தோடு மரித்துப்போகிறார். அவருடைய மரணப் படுக்கை மகிமையுள்ளதாயிருக்கிறது.

தாவீது ராஜாவினுடைய ஆதியோடந்தமான நடபடிகளும், அவர் அரசாண்ட விபரமும், அவருடைய வல்லமையும், அவருக்கும் இஸ்ரவேலுக்கும், அந்தந்த தேசங்களின் ராஜ்யங்கள் அனைத்துக்கும் நடந்த காலசம்பவங்களும், ஞானதிருஷ்டிக்காரனாகிய சாமுவேலின் பிரபந்தத்திலும், தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிரபந்தத்திலும், ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தின் பிரபந்தத்திலும் எழுதியிருக்கிறது (1நாளா 29:29,30).

"சாமுவேலின் பிரபந்தம்" என்பது சாமுவேலின் மூல ஆவணங்கள் ஆகும். 1சாமுவேல் புஸ்தகத்தின் ஒரு பகுதியாக இந்த ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 1சாமு 1-24 ஆகிய அதிகாரங்களைச் சாமுவேல் தன் கைப்பட எழுதியிருக்க வேண்டும்.

"நாத்தானின் பிரபந்தம்" என்பது 1சாமுவேல், 2சாமுவேல் ஆகிய இரண்டு புஸ்தகங்களிலும் எழுதப்பட்டிருக்கிற நாத்தானின் பிரபந்தமாகும். இந்தப் பிரபந்தம் இவ்விரண்டு புஸ்தகங்களிலும் ஒரு பகுதியாக இடம் பெற்றிருக்கிறது. இதுதவிர, நாத்தானின் பிரபந்தம் என்று எந்த நூலும் யாருடைய கையிலும் இல்லை.

"காத்தின் பிரபந்தம்" என்பது 1சாமுவேல், 2சாமுவேல் ஆகிய இரண்டு புஸ்தகங்களிலும் ஒரு பகுதியாக இடம் பெற்றிருக்கிறது. இதுபோலவே தாவீது, நாத்தான், காத் ஆகியோர் எழுதிய சில நிகழ்ச்சிகள் 1சாமு 25-2சாமு 24 ஆகிய அதிகாரங்களில் இடம் பெற்றிருக்கவேண்டும். இதுதவிர, காத்தின் பிரபந்தம் என்று எந்த நூலும் யாருடைய கையிலும் இல்லை.